கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

ஜீவநதி

275/=

ஆடி
2014

70

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

7ஆவது ஆண்டு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHI COLOURS

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...

மதி கலர்ஸ்

திருமண அழைப்பிதழ் காட்சியறை

WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.P: 021 2229285, 077 7222259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நதியினுள்ளே...

கட்டுரைகள்

பேராசிரியர் சபா.ஜெயராசா
கெகிறாவ ஸுலைஹா
இ.சு.முரளிதரன்
ஈழக்கவி
க.நவம்
பேராசிரியர் செ.யோகராசா
ந.ரவீந்திரன்
அ.யேசுராசா
சி.ரமேஷ்
த.கலாமணி
பேராயிரவர்
சாரல்நாடன்
கருணாகரன்
பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ்
லெ.முருகபூபதி

சிறுகதைகள்

கே.ஆர்.டேவிட்
வி.ஜீவகுமாரன்
மூதூர் மொகமட் ராபி

நேர்காணல்

இ.பத்மநாப ஐயர்

உள் ஓவியங்கள்

கருணாகரன்
நன்றி – இணையம்

அட்டைப்பட ஓவியம்

பிக்காசோ

கவிதைகள்

மீரா சிவகாமி
த.ஜெயசீலன்
சமரபாகு சீனா.உதயகுமார்
தீபச்செல்வன்
வே.ஐ.வரதராஜன்
க.முரளீதரன்
வெற்றி.துஷ்யந்தன்
சோலைக்கிளி
ந.பாக்கியநாதன்
கல்வயல் வே.குமாரசாமி
மேமன்கவி
வடஅல்வை க.சின்னராஜன்
தென்பொலிகையூர் குமாரதீபன்
யாத்ரிகன்
க.சட்டநாதன்
மதுஷா மாதங்கி
புலோலியூர் வேல்நந்தன்

நூல் மதிப்பீடுகள்

B.N.நளீரா
அபூர்வன்
ஈ.குமரன்
த.கலாமணி
அ.பௌநந்தி
மு.அநாதரட்சகன்

குறுநாவல்

ஆனந்தி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி

2014 ஆடி இதழ் - 70

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்

துணை ஆசிரியர்கள்
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

பதிப்பாசிரியர்
கலாநிதி த.கலாமணி

தொடர்புகளுக்கு :
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

ஆலோசகர் குழு:
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

தொலைபேசி : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

வங்கித் தொடர்புகள்
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.
- ஆசிரியர் -

ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1200/=
வெளிநாடு - $ 50U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
K .Bharaneetharan,
Kalaiaham ,
Alvai North west, Alvai.
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

ஜீவநதி
(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

ஜீவநதியின் 7 ஆவது ஆண்டு மலர்

"ஜீவநதி"யின் ஏழாவது ஆண்டுமலரில் வாசகர்களோடு மனந்திறந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். ஜீவநதியின் தொடர்ச்சியான வருகைக்கு எழுத்தாளர்களும் வாசகர்களும் காட்டிவரும் உற்சாகத்திற்கு என்றென்றும் என் நன்றிகள்.

ஜீவநதியின் இந்த ஆண்டுமலர் மிகக்குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு, உரிய வேளையில் வெளிவருவதற்கு எழுத்தாளர்கள், தந்த ஊக்கமே காரணம். "ஆனை வருகிறது ஆனை வருகிறது" எனப் பெரும் எடுப்பில் அறிவிப்புச் செய்து கட்டியம் கூறாமல், குறுகிய காலத்தில் விடுக்கப்பட்ட கைபேசிச் குறுஞ்செய்திகளுக்கும் அழைப்புக்களுக்கும் மதிப்புக் கொடுத்து தமது படைப்புக்களை எழுத்தாளர்கள் அனுப்பி வைத்தார்கள்.

இந்த இதழிலிருந்து ஜீவநதியின் அளவில்(size) மாற்றம் செய்யப்படு கின்றது. அத்தோடு தனிப்பிரதியின் விலையும் - இன்றைய விலையேற்றம் காரணமாக அடுத்த இதழிலிருந்து ரூ.100/- ஆக மாற்றப்படவுள்ளது. என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். தனிமனித முயற்சியாலும் உந்து சக்தியாலும் உழைப் பினாலும் வெளிவரும் சஞ்சிகை என்ற அளவில் அச்சுச்செலவு, விநியோகச்செலவு என்பவற்றைத் தனியாளாக எதிர்கொண்டு ஈடுகொடுத்து, தொடர்ச்சியாக ஜீவநதியை வெளிக்கொணர்வதில் நான் எதிர்கொள்ளும் பல சிரமங்களை வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

ஜீவநதி, வியாபார நோக்குடனோ அல்லது தனிமனித/சுய புகழ்பாடும் நோக்குடனோ வெளிவரும் சஞ்சிகை அன்று. ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தன்னாலான ஒரு சிறு பங்களிப்பையேனும் வழங்க முடியும் என்ற நம்பிக்கையுடன் வெளிவரும் சஞ்சிகை இது. இதுவரை தொடர்ச்சியாக, இடையறாது எழுபது இதழ்கள் வெளிவந்துள்ள போதிலும் சில விமர்சகர்கள் ஜீவநதியை இன்னும் கண்டு கொள்ளவே இல்லை. இன்னும் சிலர் காழ்ப்புணர்வுடன் திட்டமிட்ட வகையில் விமர்சனங்களை மேற்கொண்டு வருகிறார்கள். இவை எவற்றையும் கண்டு ஜீவநதி தளர்நதுவிடப் போவதில்லை. முடிந்தவரை, தொடர்ந்து ஜீவநதியை வெளிக் கொணர்வேன் என்று இவ்வேளையில் உறுதிமொழி அளிக்கின்றேன்.

ஜீவநதியில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு மூவர் தமது பங்களிப்பைச் செய்து வருகின்றார்கள் என்பதை இவ்வேளையில் நான் குறிப்பிட்டாக வேண்டும். அவ்வகையில் மூத்த எழுத்தாளர் அ.யேசுராசா அவர்கள் பல மாற்றங்களை உண்டு பண்ணும் வகையில் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். இலக்கியத்துறையிலான தமது நீண்ட கால அநுபவங்களை அவர் என்னுடன் பகிர்ந்து கொள்ளும் போது நான் புத்துயிர்ப்புப் பெறுகிறேன். இன்னொருவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரான அ.பௌநந்தி அவர்கள். ஜீவநதியின் வெளியீட்டு வேலைகள் எந்நிலையிலுள்ளன என்பதை எப்போதும் வினாவி, உற்சாகமளித்து, ஜீவநதியில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அடிக்கடி என்னோடு சேர்ந்து சிந்திப்பார். மூன்றாமவர் கவிஞர் இ.சு.முரளி தரன் அவர்கள். இவரது தொடர்பின் காரணமாக பல விடயங்களை அண்மைக்காலங் களில் நான் அறிந்து கொள்ள முடிந்தது. வடிவமைப்பு, ஆக்கத்தெரிவு போன்றவை பற்றியெல்லாம் அடிக்கடி என்னோடு இவர் கலந்துரையாடி வருவதோடு, மாற்றங் களை ஏற்படுத்துவதிலும் முனைப்பாக நின்று எனக்கு உதவி வருகின்றார். ஜீவநதியின் வளர்ச்சி பாதையில் இம்மூவரினதும் பங்களிப்புகளை இங்கு குறிப்பிடுவதும் அவர்களுக்கு மரியாதை, நன்றி செலுத்துவதும் என்னுடைய கடமையாகும்.

ஜீவநதி எப்போதும் அதன் பாதையில் தெளிவாகவே உள்ளது. சொந்த இலாபங்களுக்காக சுயபுகழ்பாடுவதற்கோ, குழு ரீதியான ஓரங்கட்டலுக்கோ ஜீவநதி இடங்கொடாது. இலக்கியத்தின் மீது கொண்ட விசுவாசம் காரணமாக, இலக்கியத்தின் மீது நாட்டம் கொண்ட அனைவரையும் ஒன்றிணைக்கும் பாலமாகவே ஜீவநதி என்றும் விளங்கும். இவ்வேளையில் வாசகர்களாகிய உங்களுக்கு நான் விடுக்கும் வேண்டு கோள் ஒன்று உள்ளது. இலக்கிய நூல்களினதும் சஞ்சிகை களினதும் கொள்வனவுக்கும் விநியோகத்துக்கும் வாய்ப்புகள் இருந்தும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களின் அசட்டையினால் இவ்வாய்ப்புகளின் வாயில்கள் அடைபட்டுள்ள நிலையில், வாசகர்களாகிய நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஜீவநதியை அறிமுகம் செய்து உதவவேண்டுமென நன்றியோடு கேட்டுக் கொள்கின்றேன்.

- க.பரணீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா.ஜெயராசா

மேலாதிக்கத்தின் வடிவங்களாகும் செவ்வியற்கலை இலக்கியங்கள்

நாட்டார் கதைகள், நாட்டார் தொன்மங்கள், நம்பிக்கைகள் என்பவற்றில் இருந்து தான் காவியங்களும் செவ்வியற் கலைகளும் தோற்றம் பெறுகின்றன.

தொல்சீர் அல்லது செவ்வியல்(Classical) நிலையை எய்திய இலக்கியங்களும் கலைவடிவங்களும் சமூக மேலாதிக்கத்தைக் கட்டிக் காக்கும் வடிவங்களாக இருந்து வருதல் காலநகர்ச்சியிலே கண்டுகொள்ளப்பட்ட ஓர் அவதானிப்பு.

சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்திய வீரர்களின் நீண்ட புனைவுகளே காவிய வடிவத்தைப் பெற்றன. அவை செவ்வியல் வடிவை எய்தும்பொழுது வரன்முறையான மொழிக்கட்டுக்கோப்பும் மேலோர் மொழிக்குரிய செம்மைப்பாடும் அவற்றில் உள்ளடக்கப்பட்டன.

அதேவேளை "சமூக மேலாதிக்கத்தை நிறுவுதல்" என்ற செயற்பாட்டிற்கு நாட்டார் கலை இலக்கியங்களிலே இடமளிக்கப்படுவதில்லை. மேலாதிக்கத்தை நிறுவும் கருவியாகச் செயற்படும் காவியங்களிலே அதிமானிடப்பண்புகள் வலியுறுத்தப்படும். ஏதோ ஒரு நிலையில் அந்த அதிமானிடப்பண்பு வெளிக்கிளம்பும். வீரர்களும் சமூகத்தின் மேலடுக்கைச் சார்ந்தவர்களாகவே இருப்பர்.

நாட்டார் கலைகளிலும் நாட்டார் இலக்கியங்களிலும் இடம்பெறும் வீரர்கள் சமூக அடுக்கமைவின் அடிநிலைகளைச் சார்ந்தோராகவே இருப்பர். செவ்வியலை எய்திய பெரும்காவியங்கள் நாட்டார் வழக்கை எய்தும் நிலை மாற்றங்களும் கலை வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. அவ்வாறு நிலை மாற்றத்தை அடையும் பொழுது சமூகத்தின் அடித்தளத்தினரது கண்ணோட்டத்துக்கு அமையவே புனைவுகள் மாற்றி அமைக்கப்படும். இது "வர்க்க நிலை புனைவு மாற்றம்" என்று குறிப்பிடப்படும். "இராவணேசன்", "கோவலன் கதை" முதலிய நாட்டார் வடிவங்களிலே அவ்வகைப்புனைவு மாற்றங்களைக் காணலாம்.

செவ்வியல் இலக்கியங்களில் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பாடுகளுக்கும்(Actions) நாட்டார் கலை இலக்கியங்களில் இடம்பெறும் வினைப்பாடுகளுக்கு மிடையே வேறுபாடுகளைக் காணமுடியும். செவ்வியல் இலக்கியங்களிலும் கலைகளிலும் இடம்பெறும் வினைப்பாடுகளில் வரன்முறையான கல்வி அறிவுடன் பெறப்பட்ட தருக்கம் அல்லது அளவை முறைகள் மேலோங்கியிருக்கும். அதேவேளை நாட்டார், கலை இலக்கியங்களில் இடம்பெறும் வினைப்பாட்டுக்குரிய அளவை முறைகள் வாழ்க்கை வழி எழுந்த பட்டறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கும். பல்வேறு எடுத்துக் காட்டுக்களால் மேற்கூறிய கருத்தை விளக்கலாம். சிலப்பதிகாரச் செவ்விலக்கியத்தில் கோவலன் மாதவி வயப்பட்ட நிகழ்ச்சியானது ஊழ்வினை என்ற நியம அறிவின் வழியாக எழுந்த தருக்கத்தை அடிப்படை யாகக் கொண்டது. கோவலன் நாட்டார் கதையிலும் கூத்திலும் அது "கழுத்தில் விழுந்த மாலையை கழட்ட முடியவில்லை" என்ற அனுபவ வெளிப்பாடாக காட்டப்படுகின்றது.

சமூக அடுக்கின் இயல்பைப் பராமரித்து மேலா திக்கத்தை நீளச்செய்யும் கலை இலக்கியங்களின் மொழிநடை சாதாரண பேச்சு வழக்கை விட்டு நீங்கிய நிலையில் வரன் முறையில் இலக்கண வழுவற்ற அமைப்பியலைக் கொண்டிருக்கும். செவ்வியல் இலக்கிய மொழி பற்றிப் பேசிய சி.எஸ்.லூயிஸ் அவர்கள் காப்பிய மொழிநடை பற்றி பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார். "காப்பியம் சாதாரண பேச்சு வழக்கில் பயன்படாத சொற்களையும் தொன்மைச் சிறப்பு மிக்க சொற்களையும் கொண்டிருத்தல் வேண்டும்" (Pradise lost முன்னுரையில்) அதேவேளை நாட்டார் கதை களிலும் பாடல்களிலும் பேச்சு மொழியே முதன்மை கொண்டிருக்கும். "மேலோர் மொழி வழக்கு" அதிகாரம் மற்றும் மேலாதிக்கத்துடன் இணைந்தது. கல்வி நிலையில் பொது மக்களைப் பிரித்து வைக்கும் செயற்பாடு அவற்றில் முன்னெடுக்கப்பட்டிருக்கும்.

நாட்டார் கதைகள், நாட்டார் தொன்மங்கள், நம்பிக்கைகள் என்பவற்றில் இருந்து தான் காவியங் களும் செவ்வியற் கலைகளும் தோற்றம் பெறுகின்றன. வீர வழிபாடு தொன்மையான குலக்குழுக்களின் வழிபாடாக அமைந்தது. அதன் நீள்முக வளர்ச்சியை அடியொற்றி, காவியங்கள் உருப்பெற்றன. அந்த நீட்சியின் போது சமூக மேலாதிக்கத்தின் இலக்குகளும் தழுவலும் முன்னெடுக்கப்பட்டன.

வீரர்களை முதன்மையாகக் கொண்ட நாட்டார் காவியங்கள் (Folk epil) மற்றும் நெடும் பாடல்களில் வீரர்களின் தியாகங்கள் சாமானியர்களின் நலன்களோடு தொடர்பு கொண்டவையாய் அமையும். அதேவேளை வரன்முறைப்பட எழுத்திலமைந்த காவியங்களில் இடம்பெறும் வீரர்களின் சாகாசங்களும் தியாகங்களும் அரசு என்றஅதிகார அமைப்பின் நிலை நிறுத்தலோடு தொடர்பு கொண்டிருக்கும் சிலப்பதி காரத்தில் பாண்டிய மன்னன் மேற்கொண்ட உயிர்த் தியாகம் அரசு என்ற ஆதிக்க நிறுவனத்தின் மீது மக்களின் நம்பிக்கையை வலுப்பெற செய்தலோடு இணைந்துள்ளது.

செவ்வியல் இலக்கியங்களில் மட்டுமன்றி செவ்வியல் நிலையை அடைந்த இசை, நடனம் முதலிய வற்றிலும் சமூகத்தின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்து தல் முனைப்படைந்து வலிமை பெற்றிருத்தலைக் காண முடியும். இதனை மேலும் விளங்கிக் கொள்வதற்கு தொன்மங்கள் பற்றிய பகுப்பாய்வு முதற்கண் துணை செய்யும்.

சமூகத்தின் மேலாதிக்கம் மிக்கோரிடத்து காணப்படும் தொன்மங்கள்(Myths), நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவற்றுக்கும் சமூக அடித்தளத்தில் வாழ்வோரிடத்துக் காணப்படும் அந்த வடிவங்களுக்கு மிடையே வேறுபாடுகள் உண்டு. உயர்ந்தோர் தொன்மங் களிலே தெய்வீகப் பண்புகள் மிகுந்து காணப்படும். ஏனையோர் தொன்மங்களில் உலகியல் பண்புகள் மிகுந்து காணப்படும்.

பரத நாட்டியத்தில் உயர்ந்தோருக்குரிய தொன் மங்களே ஆடற்பொருளாக எடுத்தாளப்படுவதைக் காணலாம். வைதீக வழிபாட்டுக்குரிய தெய்வங்களே அங்கு முன்னுரிமை பெறும். அதேவேளை நாட்டுக் கூத்துக்களிலும், நாட்டுப்புறத்தெய்வங்களும் கதை களும் முன்னுரிமை பெற்றிருக்கும். நாட்டுக்கூத்துக்கள் ஏட்டிலே பிரதி வடிவைப் பெறும்போது வைதீக வழிபாட்டிற்குரிய தெய்வங்களும் உள்ளெடுக்கப்பட்டன. பிற்காலத்தில் வளர்ச்சிநிலையில் அந்த தோற்றப்பாடு நிகழ்ந்தது. கர்நாடக சங்கீதம் செவ்வியநிலையை எய்திய கலை வடிவம். அதன் பாடுபொருள் உயர்ந்தோர் தொன்மங்களையும் வைதீக வழிபாட்டுத் தொன்மங் களையும்உள்ளடக்கி காணப்படுகின்றது.

சமூக வரலாற்றிலும் கலை வரலாற்றிலும் அறிவின் உற்பத்தி, மற்றும் கலைகளின் உற்பத்தி ஆகியவை ஏற்றத்தாழ்வுகள் உள்ள சமூக அமைப்பை நியாப்படுத்தும் வகையிலும் கட்டிக் காக்கும் வழியிலுமே நிகழ்ந்து வந்துள்ளன. அறிவின் வழியாகவே உண்மை என்பது தொடர்பான காட்சி உருவாக்கப்படுகின்றது மேலும் நீதி தொடர்பான நியாயப்பாடுகளும் கட்டி யெழுப்பப்படுகின்றன.

அறிவும் மேலோங்கியோரின் கலைகளும் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் கருத்துக்களுக்கு சமூக மரியாதையைக் கற்றுத் தருகின்றன. தாழ்ந்தோரின் கலைகளையும் கருத்துக்களையும் தள்ளி ஒதுக்கி விடுகின்றன. எடுத்துக்காட்டாக உயர் நிலையான கர்நாடக சங்கீதக் கச்சேரியில் நாட்டார் பாடலைப் பாடுதல் ஏற்கப்படுவதில்லை. அவ்வாறு பாடுதல் உயர் நிலையான சங்கீதத்தை அசுத்தப்படுத்தி விடும் என்ற அறிவுக் கட்டமைப்பு உயர்ந்தோரால் உருவாக்கப் பட்டுள்ளது.

அறிவுக்கும் செவ்வியற்கலை இலக்கியங் களுக்கும் கிடைக்கப் பெறும் சமூக அங்கீகாரம் அதிகாரத்தை சமூகத்தில் நிலைநிறுத்துவதற்குரிய ஏற்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் அதிகார வலுவை நிலைநிறுத்து வதற்கு பயன்படுத்தப்படும் பிறிதோர் அறிவுக் கட்டமைப்பாக "தூய அழகியல் வாதம்" முன்னெடுக்கப் பட்டுள்ளது. நடப்பு வாழ்க்கையின் முகிழ்ப்பு, தூய அழகியல் வாதத்தில் நிராகரிக்கப்படுகின்றது. நடப்பு வாழ்க்கையுடன் ஒட்டாத அருவமான (abstract) பதிவுகளே தூய அழகியல் வாதத்தில் வலியுறுத்தப்படு கின்றது.

சமூக மேலாதிக்கம், ஒடுக்குமுறை, அதிகாரத் தின் வடிவங்கள் பற்றிய திறனாய்வுகள் மார்க்சியச் சிந்தனைகளிலே முகிழ்த்து எழுந்தன. அதிகாரத்தின் நுண்ணிய வடிவங்களையும், சமூக நிறுவனங்களிலே அவை கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ள கோலங்களை யும் மிசேல் பூக்கோ மிக விரிவாக விளக்கியுள்ளார்.

அதிகாரம் என்பது மனித உடல் உழைப்பையும் உள உழைப்பையும் சுரண்டலுக்கு உள்ளாக்குவதன் வாயிலாக வடிவமைக்கப்படுகின்றது. அதேவேளை தனிநபர் உளவியல்(Individual psychology) அதிகாரம் என்பது பிறப்பின் இயல்போடும் தனிமனித உணர்வு களோடும் கலந்து நிற்கும் ஓர் இயல்பு என விளக்கு கின்றது. தனி மனித இயல்பு சமூகத்தளத்தில் இருந்தும் சமூக இயல்பிலிருந்தும் சமூக உறவுகளில் இருந்தும் மேலெழுவதாக மார்க்சியம் குறிப்பிடுகின்றது. இவ்வாறாக தனி மனித இலட்சிய வாதமும் மார்க்சியமும் மோதிக் கொள்கின்றன.

அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்குரிய அறிவு, அதற்கு எதிரான அறிவு என்பவற்றைப் வேறுபிரித் தறிதல் முக்கியமான ஒரு செயற்பாடாக மேலெழு கின்றது. அவ்வாறே அதிகாரத்தை வலியுறுத்தி நிற்கும் கலை இலக்கியங்களையும் மறுதலித்து நிற்கும் கலை இலக்கியங்களையும் வேறுபடுத்திக்காணும் தேவையும் மேலெழுகின்றது.

இந்திய அறிவு உற்பத்தியில் மேற்கொள்ளப் பட்ட வருணப்பாடும், செவ்வியல் இலக்கியங்களில் வலியுறுத்தப்படும் வர்ணப்பாகுபாடும் அதிகாரத்தைக் கட்டிக் காக்கும் வடிவங்களாகின்றன. அதற்கு மாறு பாடாகத் தோற்றம் பெற்று வரும் கலை இலக்கியங்கள் நிலைநிறுத்தப்பட்ட அதிகாரக் கட்டமைப்புக்கு அறைகூவல் விடுக்கின்றன. தலித் இலக்கியம் அதனை மேலும் முன்னோக்கி நகர்த்துகின்றது.

அறிவும் அதிகாரமும் பற்றிய ஆய்வை முன்னெடுத்த பூக்கோ "அறிவுக் குவியங்கள்" (epitemes) என்ற கருத்து வடிவத்தை முன் வைத்துள்ளார். வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டங்களிலும் அந்தக் காலகட்டங்களின் இயல்புக்கேற்றவாறு அறிவுக் குவியங்கள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. அவை மேலாதிக்க வலுவுடன் தொடர்புடையவை.

அதனை மேலும் விளக்குவதற்கு மையம் (centre) அகன்ற விளிம்பு அல்லது ஓரம் (peri phery) என்ற கருத்து வடிவங்களை முன்வைத்துள்ளார். ஒவ்வொரு மையமும் அதிகாரத்தை நிலைநிறுத்தும் அறிவை உருவாக்கிய வண்ணமிருக்கும். ஓரங்கட்டப்பட வேண்டிய அறிவை அது ஓரங்களுக்கு தள்ளிவிடும். இது கலை ஆக்கங்களுக்கும் பொருந்தும். செவ்வியல் இலக்கியங்களும், கலைகளும் மையத்திலிருந்து அதிகாரக் கட்டமைப்பை நிலை நிறுத்துகின்றன. அதே வேளை நாட்டார்கலைகளை அவை தரமற்றவை என்று ஓரங்களுக்குத் தள்ளிவிடும் நிலை இடம்பெற்று வந்துள்ளது.

மேலாதிக்கம், அறிவு, அதிகாரம், கலை இலக்கி யங்கள், ஆகியவற்றுக்கிடையே நேர்த்தொடர்புகள் இருத்தலைக் கண்டுகொள்ள முடிகின்றது. அதே வேளை அதிகாரத்தை உள்ளடக்கிய கலை இலக்கியங்கள் அந்த மேலாதிக்கத்தை வெளித்தோன்ற விடாது அழகியற் கூற்றுக்களுடன் மறைத்து விடுகின்றன. மேலாதிக்கத்தைச் செலுத்துவோர் பாதுகாக்கப்படுகின்றனர். மேலாதிக்கத்துக்கு உள்ளாவோர் ஏமாற்றப்படுகின்றனர்.



-மீரா சிவகாமி

மாய ஆட்டம்

நடுநிசியில்
மீண்டும்
ஓர் 'மயான காண்டம்"
அதர்மச்சுடலை
பேய்கள் கூடியிருந்தனர்.
புதிய பிணங்களும்
எழும்பியிருந்தன...
அந்திகார குருதிப்பானம்
வழங்கப்பட்டது
அவரவர் தகுதிக்கேற்ப...!
குருட்டுப் பேய்கள்
இரவல் கண் கொண்டு
இல்லாததைத்தேடின...!
நடுநிசியில்
சொறிநாய்கள்
உளைச்சத்தம்...
அழைப்புக்கேட்டு
பச்சோந்திகளும்
சேர்ந்து கொண்டது
ஆனால்
இருள் தின்னப்பட்டுக்
கொண்டிருந்தது.
மாய ஆட்டம் நிறுத்தப்படும்
சொற்ப நேரத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் வாழ்தல்

யார் யாரோ இருந்தார்கள் அன்று... ஆனால்
யாரெவரும் இல்லையின்று! தாம்தான் என்று
யார்யாரிங்கிருக்கிறார்கள்? நாளை நன்றாய்
யார்யாரிங்கிருப்பார்கள்? முழுதும் உண்மை
யாரிதனைப் புரிந்தார்கள்? கோடி பேர்கள்
வருவதுவும் போவதுமாய்... இருக்கிறார்கள்!
சீறி... ஏதோ பேசி... சட்டம் நூறியற்றி
சிறந்துயர்ந்தோர் கடைசியிலே என்னானார்கள்?

கோடானு கோடிபேரின் எண்ணம்... அன்னார்
கொட்டி முழங்கிவிட்ட கருத்துச் சொற்கள்...
பாடிவைத்த பாட்டுக்கள் எழுத்து எல்லாம்
பாடையேறிப் போனதெங்கே? அவர்கள் போட்ட
வேடங்கள் சட்டங்கள் தொலைந்த தெங்கே?
நினைவில் நிற்குதா அன்னார் பெயர்கள்... எங்கே?
நூற்றாண்டின் முன் வாழ்ந்து சுவடே இன்றி
நூர்ந்தார்கள் கோடிகோடி பேர்கள்... எங்கே?

காலமெனும் காற்றடிப்பில் கலைந்து போகும்
கருஞ்சாம்பற் துகள்களைப்போல் மனிதர் போவார்!
வாழுகையில் எத்தனையோ அனுபவித் தாண்டு
வரலாற்றில் வெற்றிடங்களோடு மாய்வார்!
ஓரிரண்டு நாள் உறவின் நினைவில் வாழ்ந்து
உழுத்திந்த மண்மறக்கத் தொலைவார்! யார்தான்
தேறினார்கள்? காலத்தை கடந்து வாழும்
தேவர் ஒருசில மனிதர் நிலைத்தும் வாழ்வார்!

மனிதரின் பேர் மறையாமல் வாழ்வதற்கு
மகத்தான வரம்பெற்று நிலைப்பதற்கு
நனவினிதும் கனவினிலும் நினைவு கூர்ந்து
நானிலமும் தொழுவதற்கு மனிதர் என்ற
குணம் நூறு சதவீதம் கொண்டு தர்மக்
கொள்கைவழி நின்று காலக்கடன்நீ தீர்த்தால்
நிணம் சதை தோல் இரத்தம் எலும்பிவை சிதைந்தும்
நீ வாழ்வாய் வரலாற்றில்... இயற்கை வாழ்த்தும்!

த.ஜெயசீலனின் இரு கவிதைகள்

உன்னை உணர்

உன்பேரை நீயறிவாய்.
உனைப் பெற்று வளர்த்தெடுத்த
உன்னப்பன் பேரைஉன் முதலெழுத்தால் நீயறிவாய்.
உன்பாட்டன் பேரை
ஒரு வேளை நீயறிவாய்.
உன் பூட்டன் பேரை உண்மையாயா நீயறிவாய்?
உன் பூட்டன் பேரை உறுதிசெய்தா சொல்வாய்?
உன் பூட்டன்
அவனின் பூட்டன் அவன் பூட்டன்
என்றுனது மூதாதையரில் எவரை நீயறிவாய்?
அன்னாரின்...
நாலைந்து தலைமுறைக்குப் பின்னவரின்...
உண்மை, பேர், உருவம்
அவர்சிறப்பு, அவர்களது
எண்ணங்கள், சிந்தனைகள்,
எவை எவை எவ்வாறறிவாய்?
அன்னவர்கள் இல்லாமல்
அவரின் தொடரோட்டம்
ஒன்று வராமல் நீ உதித்தாயா?
இருள் உறையும்
உன்கடந்த காலத்தை உணர்ந்தாயா?
தான்தோன்றி
ஒன்றாய்ச் சுயமாய் நீ பூத்தாயா?
இவைபற்றி
ஒன்றும் அறியாமல் உன் மூதாதையரின்
விந்தினது மூலத்தை விளங்காமல்
பாயிரமாய்
உன்பின்னால் உள்ள ஓரிரு நூற்றாண்டின்
சின்ன வரலாற்றை தெரியாமல்
இந்நிலத்தின்
தொன்மையை பரம்பரைத் தொடர்ச்சியைக்
காத்தருளும்
தன்மை பெருமையை தரிசியாமல்
எல்லாமும்
நன்றாய் அறிந்தவன் நீ என்கிறாய்!
உனைப்பார்த்து
உன்காலடியின் மண் நகைக்கும் உன்பூர்வீகம்
தன்னை நின் தலைமுறையின் உயிர்மூச்சை
எலும்புகளை
அன்னாரின் காற்சுவட்டை அஸ்திகளைப்
பற்றியெல்லாம்
நன்கறிந்த மண் உனது
பெருமை எண்ணி மிக நகைக்கும்!
உன்னை உணர..உந்தன் மண்ணையுணர்.. அது உதவும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலும் இலக்கியமும் கைகுலுக்கிக் கொள்கின்றன.... கென்னடியின் பதவியேற்பு வைபவத்தில் கவிஞர் ரொபர்ட் ஃப்ரொஸ்ட்

கெகிறாவ ஸுலைஹா



மருத்துவ விஷேட கற்கை ஒன்றிற்காக புலமைப்பரிசில் பெற்று சுவீடன் உப்சாலாப் பல்கலைக்கழகம் போகையில் எனது இளைய தம்பி முஹம்மது இன்டிகாஃப் தான் வாசித்துவிட்டு தன்னோடு வைத்திருந்த சில ஆங்கில நூல்களை என் வசம் தந்து போயிருந்தான். அதிலே அடிக்கடி என் இலக்கிய வாசிப்புக்குத் தீனி போட்ட ஒரு புத்தகம் 'A Magic Place- Readers for the Schoolroom- 8'. இந்நூலை Suchismita Raha கல்கத்தா சென். தோமஸ் கல்லூரியின் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் மற்றும் Anil Wilson டெல்லி பல்கலைக்கழக சென்.ஸ்டீபன்ஸ் கல்லூரி அதிபர் ஆகியோர் தொகுத்து வழங்கியிருக்கிறார்கள். இதனை ஹைதராபாத் Orient Longman Pvt. Ltd 2004 ல் வெளியிட்டிருக்கிறது. அதிலே இருபத்திரண்டாம் அம்சமாக ஒரு கட்டுரை "அமெரிக்கக் குடியரசுத் தலைவராக கென்னடியவர்கள் பதவியேற்பு செய்கிற வைபவத்தில் அந்தக் கவிஞன்..." இக்கட்டுரையை வாசித்தபோது அது குறித்த என் நயத்தலை என் தமிழ் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள மனம் விரும்பிற்று. அது இப்படி நீளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்று ஜனவரி 1961. அது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியவர்களது பதவியேற்பு நாள். தேசம் சுதந்திரம் பெற்று பல நூறு அகவைகள் கழிந்து விட்டாலும் வணிகமும், கைத் தொழிலும் போலவே கவிதையும் பெருமதிப் பினுற்குரிய அம்சமே என்பதனை ஜனங்கள் அறிந்து வைத்திராத அன்றைய காலகட்டத்தே, அது மாதிரியான ஒரு முக்கிய நிகழ்வுக்கு முதல் தடவையாக அழைக்கப் பட்டிருந்தார் ஒரு கவிஞர். அவர் எண்பத் தைந்து வயதான ரொபர்ட் லீ ஃப்ரொஸ்ட்.

அது மிகக் குளிரானதொரு நாள். கூடவே பலத்த காற்றும் வீசிக் கொண்டிருந்தது. அந்த மாபெரும் கவிஞனை மக்கள் சபைக்கு அறிமுகம் செய்து வைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த முக்கிய அறி விப்பாளர் மக்கள் முன் மேடையில் தோன்றுகிறார். அமெரிக்காவின் தேசிய கவி ரொபர்ட் ஃப்ரொஸ்ட் எனத் தொடங்கி அவர் பெற்றிருந்த கௌரவங்கள் பற்றிப் பட்டியற் படுத்திச் செல்கிறார். கவிதைக்காக நான்கு தடவைகள் புலிட்சர் விருது, போலவே கல்லூரிகளிலும் பல் கலைக்கழகங்களிலும் நாற்பதுக் கும் மேற்பட்டபட்டமளிப்புகள், கௌரவிப்புகள் பற்றியெல்லாம் உள்ளடக்கப்பட்ட நீண்ட பட்டியல் அது.

அவரது அறிமுகப்படுத்தல் முற்றுப்பெற்று ரொபர்ட் ஃப்ரொஸ்ட் பேச எழுகிறார். நீண்ட உடை, பார மான மேலங்கி ஆடை. மேடையேறி யவர் சற்று நிமிர்ந்து மக்கள் கூட்டத்தைப் பார்த்துக் கொள் கிறார். நரை தவழும் அவரது தலை மயிர் குளிர்காலக் காற்றில் அசைந்து கொண்டிருக்கிறது. தனது கையிற் கிடக்கிற பக்கங் களை காற்று வீசுதலுக்கு ஈடு கொடுத்து வாசிப்பதில் அவருக்கு பெருத்த இடர்பாடு இருக்கிறது.

"வெளிச்சம் இங்கே போது மானதாகயில்லை..." அவர் தனக்குள் முணுமுணுத்துக் கொள்கிறார். அது போன்றதொரு மாபெரும் விழாவில் அப்படியொரு விடயத்துக்கு வாய்ப்பேயில்லை யாகையால் அவரது கூற்று விகடமா யும் தோன்றுகிறது. பிரகாசிக்கும் சூரியவொளியில் வெண்பனியும் ஏற்படுத்திய கூசுகை, போலவே பலத்த காற்று எல்லாமும் அவரது வாசிப்பை அசாத்தியமாக்கி வைத்திருக்கின்றன.

ஆயினும், தடைகளை மீறி அவர் வாசிக்க ஆரம்பிக்கிறார். பலத்த காற்று பாய்ந்தோடி வந்து, அவர் பேசப் புரட்டி வைத்திருந்த பக்கத்தை நிலத்தில் திடீரென்று புரட்டிப்போட்டுப் போய் விடுகிறது. யாரோ அதைப் பொறுக்கியெடுத்து

மறுபடியும் அவர் வசம் கொடுக் கிறார்கள். "தங்களுக்கு நன்றி" அவர் சொல்லிய படி அதைப் பெற்றுக் கொள்கிறார். வயதின் முதுமையினால் நடுங்குகின்ற விரல்களில் அதை ஏந்தியவர், அது மாதிரியான ஒரு வரலாற்று நிகழ் விற்கு கவிதையைக் கொணர எண்ணிய புதுச் சிந்தனையுடைய அரச உத்தியோகத்தர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்குமுகமாக அவர் இயற்றியிருந்த அடிகளை வாசிக்கத் தொடங்குகிறார்.

1958 இல் காங்கிரஸில் ஒரு முக்கிய பதவியில் திரு. கென்னடிய வர்கள் அமர்த்தப்பட்டிருந்தபோது களில் ரொபர்ட் ஃப்ரொஸ்ட் பற்றி பேரபிமானம் கொண்டிருந்தார்கள். பின்னாளில் செனட்டராகயிருந்த திரு.கென்னடி பல வருஷங்களாக இவ்விதமே ஃப்ரொஸ்ட்டின் எழுத்து களினால் ஆகர்ஷிக்கப்பட்டு வந்திருக்கிறார். அவரது ரசிகனாக இருந்தபோதுகளில் கென்னடி தன் நீண்ட அரசியல் மாநாடுகள் முடிவுறும் வேளைகளில் தன் அரசியற் பொறுப்புகளையெல்லாம் மறந்த நிலையில் ஃப்ரொஸ்ட்டின் கவிதையின் பக்கம் கவனம் திருப்புவதுண்டாம். ரொபர்ட் ஃப்ரொஸ்ட் அவர்கள் எழுதி செனட்டர் அவர்களுக்கு ரொம்பப் பிடித்த கவிதைகளில் ஒன்று 'Stopping by Woods on a Snowy Evening'

பனி சிந்தும் மாலையில் தோப்பின் மருங்கிலே...

Robert Frost

யாருக்குச் சொந்தமான தோப்பு இது?
சிலவேளை அவரது இல்லம்
கிராமத்திலிருக்கிறதோ என்னவோ?
சிந்துகின்ற பனியில்
மூடிக்கிடக்கும் இத்தோப்பினை
நின்று ரசித்து நான் பார்ப்பதை
அவர் அறிய வாய்ப்பில்லை.

என் சின்னக் குதிரைக்கு
இது வியப்பை அளித்திருக்கக்கூடும்,
வருடத்தின் இருட்டிப்போனதொரு
மாலைப்பொழுதில்
பனியுறை ஏரிக்கும் தோப்புக்குமிடையில்
பண்ணை நிலமேதுமின்றி
நிறுத்தப்படிருத்தலின் காரணம்
அதற்குப் புரியவில்லை.

"தவறேதும் நடந்து விட்டதோ"
எனக் கேட்கிற பாணியில்
அது தன் மணியை ஆட்டுகிறது.
காற்றின் மெல்லிய ஒலியும்,
பனித்துகள்களின் விசிறலும் தவிர
ஆங்கே சப்தங்களேதுமில்லை.

ஓ! இந்தத் தோப்பு எத்தனை அழகு,
என்ன ரம்யம், எந்தளவு ஆழம், ஆயினும்
நிறைவேற்றப்பட்டாக வேண்டிய
வாக்குறுதிகள்நிறைய உள்ளன.
இன்னும் துயிலுக்கு முன்னம் போக
வேண்டிய தூரமென பல மைல்கள்
பாக்கியிருக்கின்றன.
பல மைல்கள் பாக்கியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியேற்பு வைபவத்துக்கான ஆயத்தங்கள் திட்டமிடப்பட்டுக் கொண்டிருந்த வேளை ரொபர்ட் லீ ஃப்ரொஸ்ட் அவர்களையும் அழைப்பில் உள்ளெடுக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மசசூசெட் சிற்கு கவிஞரது இல்லம் நோக்கி ஒரு தந்தி மூல அழைப்பிதழ் அனுப்பப்படுகிறது. அவரும் தந்தி மூலமே அதற்கு இப்படி பதில் அனுப்பியிருந்தார். "ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக தாங்கள் இவ்வயதில் தகுதி பெறுவதுபோலவே, என் வயதும் என்வரைக்கும் அப்படியொரு மாபெரும் நிகழ்விற்கு வருகை தருவதை மகிழ்ச்சியோடு ஏற்கிறது. அது சிலவேளை ஒரு கடினமேயாயினும், அந்த அழைப்பிதழை நான் ஏற்கிறேன். ஏனென்றால் கவிதை என் வாழ்வில் வெகு முக்கியமான அம்சம் என நான் கருதுகிறேன்."

முதலில் அவர் பதவியேற்பு வைபவத்துக்காக ஒரு கவிதை எழுதுவதாகவே இருந்தது. இதுபோன்ற விஷேட நிகழ்வுகளுக்கு கவிதை எழுதுவது என்பது தன் நடைமுறையில் இல்லையெனக் கூறி ஃப்ரொஸ்ட் அதை மறுத்திருந்தார். பின்னர் திரு.கென்னடி அவர்கள் அவரை பல வருஷங்களுக்கு முன்னம் எழுதியிருந்த "The Gift Outright" ஐ வாசிக்குமாறு வேண்டியிருந்தார். 1929இல் மக்கள் அனுபவிக்கத் தொடங்கியிருந்த பொருளாதார நெருக்கடிகளையும், பாதிப்புகளையும் பற்றி நீண்ட காலத்தின் பின் 1942 இல் ஃப்ரொஸ்ட் எழுதியிருந்த அக்கவிதை பற்றி ஒரு முக்கியமான விமர்சகர் தம் தேசத்துக்கு அர்ப்பணம் செய்யத்தக்க உன்னத தேசப்பற்றுக் கவிதைகளில் ஒன்றெனத் தான் காண்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஞாபகித்துப் பார்த்து அதன் வாசகங்களை சொல்ல முடிந்திருக்குமானால் அல்லது தெளிவாகப் பார்க்க முடிகிற நிலை இருந்திருக்குமானால், ஃப்ரொஸ்ட் அதைத் தாராளமாகச் செய்திருக்க முடியும். காற்றுத் தட்டிப் போட்டாலும் எல்லா இடர் களையும் மீறி அவர் தொடரவும் செய்தார் ஆயினும், தனது தள்ளாடும் முதுமையின் சுமையை அவர் அறிந்து கொள்ள முடிந்த முக்கிய தருணங்களில் இதுவும் ஒன்றாகவேயிருந்தது.

அவர் தொடர்ந்தார். திடீரென்று நிறுத்தினார். பொறுமையற்றுப் போயிற்று கூடவே, குழப்பமாயும் இருந்தது. "இங்கே எனக்கு அறவே வெளிச்சம் போத வில்லை." மறுபடியும் முணுமுணுப்பு. ஜனக்கூட்டத் துக்கும் அவர் சொன்னது கேட்டது. அவர்கள் அதை ஒப்புக் கொண்டது போலத் தலையசைத்தார்கள். ஒரு அலுவலர் அவர் புறத்தாய் நின்று நிழல்தர முயன்றார். எந்தச் சைக்கினையும் உதவினாற்போலில்லை.

அம்முதிய கவிஞர் தன் கரத்தே பிடித்திருந்த பக்கங்களை பார்வையாளர்களது கண்கள் பார்க்கு மாறு திருப்பிக் காட்டினார். "இவை...." அவர்களைப் பார்த்து அவர் சொன்னார். "வாசிப்பதற்கு என்னிடத்தே இல்லாத ஒரு கவிதைக்கு இவை ஒரு அறிமுகமாக மாத்திரமே இருந்தன..."

திடீரென்று அவரது இயல்புகள் மாறத் தொடங்கின. பக்கங்களைப் பார்த்தேதான் வாசிக்க வேண்டும் என்கிற கவலைகள் எதுவும் இப்போது அவரிடத்தே கிடையாது. அவரது இதயமும், உணர்வும் நிச்சயித்துக்கொண்டன.

நிமிர்ந்து கொண்டார். மறுபடியும் இளமையின் கம்பீரம். சந்தேகங்கள், ஐயப்பாடுகள், நடுக்கங்கள் அப்பால் நீங்கிப் போன உறுதியும், ஆழமும், தெளிவும்

மிகைத்த வீரத்தொனியில் "The Gift Outright" வாசகங் களைச் வாசிக்கத் தொடங்கினார். அவர் பெரும் உறுதியோடு சொல்லி ஓய்ந்து தன் இருக்கைக்கு அமைதியாய்த் திரும்புகையில், அந்தக் குளிர் வெண் பனிக் காற்றோடு கலந்து எங்கனும் வியாபிக்க வாரம்பித்தன ஜனத்திரளின் குதூகலக் கூக்குரல்கள்."

யாரிந்த ரொபர்ட் லீ ;ப்ரொஸ்ட்...?

Robert Lee Frost கலிபோர்னியாவின் சென் பிரான்ஸிஸ்கோவில் 1874ம் ஆண்டு மார்ச் 26 இல் பிறந்த அமெரிக்காவின் அற்புதக் கவிஞராவார். நியூ இங்கிலாந்தவரான தந்தை வில்லியம் பிரஸ்காட்டுக்கும், ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கவிஞையான தாய் இஸபெல்லா மூடில் இற்கும் ஃப்ரொஸ்ட் மகனாகப் பிறந்தபோது, ரொபர்ட் பர்ன்ஸ் என்கிற ஸ்கொட் தேச உன்னதக் கவிஞரின் நினைவாக ரொபர்ட் என்ற பெயர் வைக்கத் தாய் பிரியப்பட, தந்தையோ ஜெனரல் லீயின் நினைவாக அப்பெயரை வைக்கத் தவிக்க இருவருமாய் ஒரு சமாதான நிலைக்கு வந்து ரொபர்ட் லீ ஃப்ரொஸ்ட் எனப் பெயர் வைத்தனர்.

நாளிதழ்களை விற்பதைத் தொழிலாகக் கொண்டி ருந்த தந்தை என்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கையில் ஃப்ரொஸ்ட்டுக்கு வயது பதினொன்று. ஃப்ரொஸ்ட் நரம்புத்தளர்ச்சி நோயினால் பாதிக்கப் பட்டிருப்பதாக தாய்க்கு கூறப்பட்டபோது, தந்தைக்கு நேர்ந்த கதி மகனுக்கும் வந்துற்றதேயென எண்ணிக் கலங்கினாராம் தாய்.

நியூ இங்கிலாந்தவரான தந்தை இறக்கையில் அவரது பூதவுடல் நியூ இங்கிலாந்திலேயே அடக்கம் செய்யப்பட வேண்டுமெனப் பிரியப்பட்டிருந்தமையால் குடும்பம் சகிதம் அங்கு சென்று போதிய பணமின்மை யால் திரும்பிவர முடியா நிலையேற்பட, தாய் மற்றும் இளைய தங்கையுடன் நியூ ஹம்சியர் ஸெய்லம் பிரதேசத்தே வாழ வேண்டியதாயிற்று. தாய் இலக்கணப் பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றியதில் கிடைத்த வருமானம் குடும்பத்தை நிர்வகிக்க உதவிற்று. அதே பள்ளிக்கு தன்னிரு குழந்தைகளையும் கூட்டிச் சென்று கற்பித்தார் தாயார். அடிப்படையான விடயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பள்ளியில் படிக்கவில்லையாயினும், சிறந்த அறிவுடன் மிளிர தாய் கற்பித்தவை பெரிதும் உதவிற்று. ஆரம்பத்தில் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டாத ஃப்ரொஸ்ட், பின்பு ஆர்வத்தோடு கற்றார். உயர் நிலைப்பள்ளி நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று ஒரு ஆண்டிலேயே வகுப்பின் முதல் மாணவராய்த் தேறினார்.

ஆயினும் அந்நிய தேசத்தில் வசிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. மசசூசெட்ஸ்லிற்குத் திரும்பி வந்து உயர்கல்வியைக் கற்றபடியே ஆலைகளில் பணி புரிந்தார். பத்திரிகை நிருபராகப் பொழுதுகள் பல கழிந்தன. அவ்வப்போது சப்பாத்துத் தைக்கும் வேலைகளில் ஈடுபட்டார். கூடவே கவிதைகளும் எழுதினார். முதல் கவிதை 'My Butterfly' "என் வண்ணத்துப்பூச்சி", "த இன்டிபென்டன்ட்" நியூயோர்க் நாளிதழில் வெளியாகையில் அவரது வயது பதினாறு. ஒன்றாகப் பள்ளியில் படித்த எலினர் வெய்ட்டை ரொம்பவும் நேசித்தார். கல்விக்கு இருவரும் முதலிடம் தரலாம் என்கிற அபிப்பிராயத்தில் எலினர் முதலில் மறுத்தார். தன்னை அவர் திருமணம் செய்து கொள்ள மாட்டாரோ எனத் துயருற்ற ஃப்ரொஸ்ட், கவிதைகளால் அவரை ஈர்க்க எண்ணி நிறைய எழுதினார். அச்சான கவிதைகளை எலினருக்குப் பரிசாகத் தந்தார். குடும்பத்தின் கட்டுப்பாட்டை மீறி இப்போது மணக்க முடியாதென எலினர் கூற ஏற்பட்ட மனத்துயரில் வேறு பிரதிகள் இல்லையென இருந்த பல கவிதைகளைக் கிழித்தெறிந்தார் ஃப்ரொஸ்ட். 1895 இல் இருவரும் மணம் புரிந்தனர். நான்கு குழந்தைகள். அவ்வப்போது நோயுற்றுத் தேறினார்.



நான் ஒரு இயற்கை கவிஞன் கிடையாது.
என் கவிதைகளில்
எப்போதும் ஒரு நபர் இருப்பான்



32ம் வயதில் நியுமோனியா சாகும் நிலைக்கு அவரைக் கொண்டு சென்றது. வைத்தியர்களே வியக்கிற மாதிரி உயிர் பிழைத்தார். நியூ இங்கிலாந்தில் ஒரு பண்ணை வாங்கி அமைதியாக வாழ்ந்தார். வெட்கச் சுபாவம் மிகைத்த அவர் ஒதுங்கி வாழ நினைத்தாலுமே புகழ் அவரைத் தேடி ஓடி வந்தது. கல்விக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள் அவரைத் தேடி வந்தன. ஓய்வு கிடைக்கையில் உளவியற் கல்வியை நியூ ஹம்சியர் அரசப் பள்ளியில் கற்பித்தார்.

முதல் குழந்தை கொலரா நோய் கண்டு இறந்து விட, அன்புத் தாய் புற்று நோய் கண்டு வைத்திய சாலையில் மடிந்து விட, போதாத வருவாய்ப் பிரச்சினையும் அவரைத் துரத்தித் துரத்தி அடிக்கத் தற்கொலையைத் தீர்வென நம்பி நாடினார் அவர்.

பத்து வருடங்களின் பின் தாத்தாவின் கோழிப் பண்ணை ஃப்ரொஸ்ட்டுக்கு சொந்தமாகும் வண்ணம் எழுதப்பட்டிருந்த தாத்தாவின் உயில் மீள நம்பிக் கையைத் தூவிப் போயிற்று. "ஹே" என்கிற காய்ச்சல் வாட்ட கோழிப் பண்ணையையும் கைவிட்டு ஒதுங்க வேண்டியதாயிற்று. அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து இவரது இலக்கிய வாழ்வில் புது மாற்றம் கொண்டு வந்தது.

கவிதையே தொழிலாயிற்று ஃப்ரொஸ்ட்டுக்கு. 1913இல் அவரது 'A Boy's Will' 1914 இல் 'North of Boston' இரண்டும் வெளியாயிற்று. ஒரே நேரத்தில் நான்கைந்து பதிப்புகள் கண்டன அவரது நூல்கள். அதிகம் விற்பனையாகும் புத்தகத்தின் ஆசிரியர் எனவும் அவர் போற்றப்பட்டார்..

பிறந்தகத்து ஏக்கங்களால் உந்தப்பட்டு மீண்டும் அமெரிக்கா வந்தார். வருவாய்க்காக ஒரு விவசாயப் பண்ணையை வாங்கினார். பொஸ்டன் வாழ் இலக்கிய ஆர்வலர்களோடு உரையாடினார். இலக்கியத் திறனாய் வாளர்கள், இலக்கிய நண்பர்கள் பாராட்டினர். நியூ இங்கிலாந்தில் பல விரிவுரைகள் நிகழ்த்தினார். ஆமஸ்ட் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார். சகோதரி ஜெனி மூளைக்கோளாறு கண்டு இறக்க துவண்டே போனார் ஃப்ரொஸ்ட்.

மிஷிகன் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகக் கவி என்கிற அந்தஸ்த்தைத் தந்து, 5000 அமெரிக்க டொலர் வரை ஊதியமாகவும் வழங்கி கௌரவித்தது. அமெரிக்காவின் சிறந்த இலக்கியப் பரிசுகள் கிடைத்தன.

நற்றுணை மனைவி புற்றுநோய் கண்டு இறந்து விட, கூடவே நியுமோனியா, மற்றும் நரம்புத்தளர்ச்சி என்பனவும் வாட்ட கல்லூரிப் பணியிலிருந்து விலகி மகன், மருமகளுடன் ஒரு பண்ணையில் தங்கினார்.

நாற்பது வருஷங்களுக்கு முன்னம் பணிபுரிந்த ஹார்வார்ட் பள்ளி மீண்டும் ஆசிரியப்பணிக்கு அழைத்தது. எமர்ஷன் கவிதை ஆய்வுப்பதவியில் மூன்றாண்டுகள் பணியாற்றினார். எல்லையற்ற கீர்த்திகள். நான்கு முறை புலிட்சர் விருது. அமெரிக்க மக்களவையின் பாராட்டு. 87ம் வயதில் அமெரிக்க ரஷ்ய பண்பாட்டுக்குழு பரிமாற்ற நிகழ்வில் அமெரிக்கா சார்பாக பங்குபற்றித் திரும்புகையில் நலம் குன்றி 1963 ஜனவரி 09 இறந்தார்.

திரும்பத் திரும்ப அவர் சொன்னார். "நான் ஒரு இயற்கைக் கவிஞன் கிடையாது. என் கவிதைகளில் எப்போதும் ஒரு நபர் இருப்பான்." மனித உளவியலைச் சொல்லின அவரது கவிதைகள். கிராமத்தின் அழகு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயியின் வாழ்வு, இயற்கையான உலகு என்பன பின்னணியாக எடுத்தாளப்பட்டாலும், மனித உளவியலை அன்றாட வாழ்வோடு பின்னியிணைத்து அவை பேசுவது காணலாம்.

நேயமே இயற்கையாய் பரிணமித்து நிற்கக் கண்டார் அவர்.

"அன்பைப் பெற்றிருக்கிறது இவ்வகிலம்
குன்றுகளிலும் அதன் தொடர்ச்சிகளிலும்
வியாபித்துக் கிடக்கிறது இந்த அன்பு. போலவே,
இயற்கை சிந்தும் பனியிலும்,
மணலிலும், பூங்கொத்துகளிலும்
அன்பு தன் அடையாளத் தடங்களை பதித்திருக்கிறது.
இயந்திரமெனச் சுழலும் உலகை தழுவி நிற்கிறது அன்பு.
அது மகிழ்ச்சி நிரம்பியது; முற்றிலும் சுதந்திரமானது.
அடிமைப்பட்டதன்று. ஆகாயம் பூமியெல்லாம்
கடந்து நிற்பது அன்பு இறையில்லத்திலிருந்து வருவது அது...."

என்கிறார் ஃப்ரொஸ்ட்.

கவிதை பற்றி அவர் இப்படிச் சொல்கிறார். "கவிதை கவலை தருவது கிடையாது. அது

முதிரிலைகள் விழுந்தாகிவிட்டன.
அழுகுதலாகிற பழங்கள்
கோடையில் அழுகவும் ஆரம்பித்தாயிற்று.
அனைத்தும் அழிவுறக் கூடியவையே.
எங்கெங்கிலும் அடர் புழுதிப் படலங்கள்
நிரம்பியிருக்கின்றன.

"பயிர்களை எதிர்கொண்டு..." கவிதையிலே மழை கொணரும் பேரபாயங்களைப் பாடுகிறார். அது நன்மையையும் நாடுகிறது. சிலபோது அபாயங்களையும் கொணர்ந்து விடுகிறது.

மழையை நாடி நிற்கிறோம் நாம்.
அது பெய்து நம்மை வளப்படுத்துகிறதா?
நமதான வேண்டுதல்களை
அது அனுதாபம் கொண்டு பார்க்கிறதா?
சிலபோது நம் எதிர்பார்ப்புக்கும் மேலே பெய்து
மூழ்கடித்து விடுகிறது
நிலங்களையும் கூடவே நம் வேண்டுதல்களையும்....

ஒரு மரம் அறுக்கும் தொழில் நிலையத்தில் பசியோடு வேலை செய்யும் ஒரு சிறுவனது பரிதாப



கவிஞனையே தன்னோடு அழைத்துச் செல்கிறது. அதனை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம். படிக்கலாம். அது மனதைச் செழுமையாக வைத்திருக்கிறது. காலம் மாறினாலும் கவிதை தனக்குள் வைத்திருக்கும் சிறப்பை இழப்பதில்லை."

"நாம் அழுவதால் மகிழ்ச்சி பயனற்றதாகின்றது.
போர்களால் தேசங்கள் பயனற்றதாகின்றன."

என்று போர்களைச் சாடுகிறார் கவிஞர்.

பாடும் பறவையின் பாடல் அழிபவைகளைப் பற்றியதாக இருப்பதாகக் காண்கிறார் கவிஞர். அழியக் கூடிய மானிட வாழ்க்கையையும், பொருட்களையும் கூறி, புதிய பொருளை அப்பறவை நாடி நிற்பதாகக் காண்கிறார்.

அங்கொரு பாடும் பறவையிருக்கிறது.
அனைவரும் அதன் பாடலை செவிமடுப்பர்.
கோடைகாலத்தின் இடைப்பருவத்தில்
மரங்கள் மீதமர்ந்து அது பாடும்.
அது அடர் மரங்களின் வழியே எதிரொலிக்கும்.
இந்த இலைக்கு பருவமாகிறது
மலர்கள் வருகிற தருணங்களை எதிர்கொண்டு.
கோடைகாலம் முடிவடையப் போகிறது.

இறப்பைச் சுட்டி நிற்கும் இவரது "வெளியே.... வெளியே...." கவிதை இவரது மனிதநேயத்திற்கு ஈடிணையற்ற சான்று.

"....இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறான் அச்சிறுவன்.
சகோதரி அவனுக்காய் உணவு கொணர்கிறாள்.
"தயார்" என்கிறாள். உணவின் மீதான ஆசையில்
கவனக்குறைவால் தன் கையை
மரம் அறுக்கும் ஆலைக்குள் செலுத்தி விடுகிறான்.
துண்டிக்கப்படுகின்றது அவன் கை.
வைத்தியர்கள் போராடிப்பார்க்கிறார்கள்.
அதிக இரத்தப்பெருக்கால் பசியோடேயே இறக்கிறான் அப்பையன்.
ஒரு குடும்பம்
தனக்காய் உழைத்துத் தரும் ஒருவனை
இழந்து வாடுகிறது....."

ஒரு கதை சொல்லும் பாணியில் அமைந்த இந்த அழகான கவிதை தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படும் சிறார்கள் பற்றிய கவனத்தை ஈர்க்கிறது. கவிதையை அவர் நிறைவு செய்கிறார் இப்படி:-

"அரவை ஆலை அதிபரைப்போலவே
இயந்திரம் மீண்டும் இயல்பாய்த் தன் வேலையைத்
தொடங்கிற்று...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் டி மி ல் லை

கே.ஆர்.டேவிட்

சந்திரவோடு வந்த இரண்டு பெண் பொலிசாரும் தலைகுனிந்து நிற்கின்றனர். அவர்களது காக்கி உடுப்புக்குள் இருப்பது பெண்மை தானே... அவர்களும் ஒரு தாய்க்குப் பிள்ளைகள் தானே!

ஓவியம் - பிக்காசோ

பூபதி இறந்து இன்று மூன்றாம் நாள். இன்று பிற்பகல் நாலுமணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் அவளது உடல் தகனம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

பூபதியின் ஒரேயொரு மகளான சந்திராவின் இறுதித் தரிசனத்திற்காகவே பூபதியின் உடல் காத்துக்கிடக்கின்றது. வீட்டு முற்றத்தில் கட்டப்பட்டிருக்கும் ஒரு படங்கு. அந்தப் படங்கின் நிழலில் போடப் பட்டிருக்கும் சில கதிரைகள். ஒரு வெற்றி லைப்பெட்டி... பூபதியின் செத்தவீட்டு ஏற்பாடுகள் இவ்வளவுதான்... கடந்த இரண்டு நாட்களும் பூபதியின் ஒரே மகன் கீர்த்தியும், கீர்த்தியின் நண்பன் மணியம் சில அயலவர்களும் மட்டுந்தான் பூபதியின் உடலைச் சுற்றி நின்றனர். ஆனால் இப்போது... முற்றம் கொள்ளாத சனம்...

பூபதிக்கு இரத்தப்புற்றுநோய் கண்டு ஏறத்தாழ மூன்று மாதங்கள் வரை, தலைமயிரெல்லாம் உதிர்ந்து வெண்தலை யாகி, உடல் தசை உலர்ந்து வெளுறி எலும்பும் தோலுமாகி அவலப்பட்ட போதெல்லாம் எட்டிப்பார்க்காதவர் களெல்லாம் இப்போது வந்து நிற்கின்றனர்...

"சந்திராவை இண்டைக்கு மூன்று மணிக்கு கொண்டு வாறாங்களாம்" இந்தச் செய்திதான் இவ்வளவு சனத்தையும் வரவழைத்திருக்கின்றது...!

தினசரி வீடு வீடாகச் சென்று வாய் பார்த்து ஊர்ப் புதினங்களைக் கதைப்பவர்களை கிராமப்புறத்தில் "புதினம் பொறுக் கியள்" என்று கூறுவார்கள். அப்படியென்றால் இப்போது இங்கு வந்திருப்பவர்கள் எல்லோரும் புதினம் பொறுக்கியளா...?

ஏழு வருங்களுக்குப்பிறகு வருகிறாள்... அதுவும் பொலிஸ் பாதுகாப்போடு வருகிறாள்... தாயைப் பார்த்து எப்படித்துடிக்கப் போகிறாள்... என்பன போன்ற புதினங்களைப் பொறுக்குவதற்கு தானா இவர்கள் வந்திருக்கிறார்கள்...?

பூபதியின் ஒரேயொரு மகள் தான் சந்திரா.

ஏழு வருடங்களுக்கு முன்பு கொழும்பில பொலிசாரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்யப்பட்டு வெலிக்டைச் சிறைச் சாலைக்கு அனுப்பப் பட்டவள்... சட்டத்தால் மறக்கப் பட்டு இன்னமும் சிறைச்சாலைக் குள்தான் இருக்கின்றாள். ஆண்டவ னாலும், அரசினாலும் மறக்கப் பட்ட ஆயிரக் கணக்கானவர்களில் சந்திராவும் ஒருத்தி!

"சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருப்பவர்களை விசாரணை செய், அல்லது விடுதலை செய்" என்று தேசியப் பேரவையில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர் களின் வாய்ப்பாடுகள் பத்திரிகை களில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகும்போது பூபதி பூரித்துப் போவாள். அந்தப் பத்திரிகையைக் கையிலெடுத்துக்கொண்டு அயல் வீடுகளுக்கு செல்வாள். "தம்பி கீர்த்தி, சந்திரா வந்தவுடன் உடனை அவளுக்கொரு கலியாணத்தைக் கட் டி வைச் சிட வேணும் ... அவளின்ரை மடியிலை ஒரு புள்ளை கிடந்துதெண்டால் அவள் தான் பட்ட துன்பமெல்லாத்தையும் மறந் திடுவாள்" பூபதி இப்படி கீர்த்தி யிடம் கூறுவாள்.

ஏழு வருடங்கள் ஓரே வாய்ப் பாட்டைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போனதாலோ என்னவோ பூபதி இப்போதெல்லாம் இப்படி பேசுவதில்லை.

சந்திரா பிடிபட்ட காலத் தில் வெலிக்கடைக்குச் சென்று வரும் பூபதி "மழையிலை நனைஞ்ச கோழிக்குஞ்சு போலை என்ரை புள்ளை குறாவிப்போய் இருக் கிறாள், என்னாலை பாக்க முடியாமல் கிடக்கு" என்று தலை யிலை அடிச்சு ஒப்பாரி வைப்பாள்.

ஆறுமாதங்களுக் கொரு தடவை எப்பாடுபட்டேனும் கொஞ்சக் காசைச் சேர்த்துக் கொண்டு பூபதி வெலிக்கடைக்கு புறப்பட்டு விடுவாள். சந்திராவை பத்துமாதங்கள் சுமந்த கருப்பை அனுபவத்தை அவளால் மட்டுந் தான் உணர முடியும். "தாய்மை" என்ற ஒப்பற்ற அனுபவம் அது!

மூன்றாம், நான்காம்முறை பூபதி வெலிக்கடைக்குச் சென்று வந்தபோது ஓரளவு மனத்திருப்தி யோடு வந்தாள். "சந்திரா இப்ப துணிஞ்சிட்டாள்... தூள்பறக்கச் சிங்களம் கதைக்கிறாள்..." என்று ஏதோ மனத் திருப் தியோடு கூறினாள்.

பூபதிக்கு இப்படியொரு நோய் வருமெண்டு யாருமே எதிர் பார்க்கவில்லை. ஏனென்றால் அவள் சோம்பேறித்தனமாக இருந்த வளல்ல, உடலை வருத்தி உழைத்து வாழ்ந்தவள்.

பூபதிக்கு ஆரம்பத்தில் சாதாரண காய்ச்சல்தான் இருந்தது. இரண்டு கிழமை வரையில் பனடோலைப் போட்டுச் சமாளித் தாள். காய்ச்சல் தொடர்ந்து கொண்டே இருந்தது. அதன் பின்பு பெரியாஸ்பத்திரிக்குப் போனாள். பெரியாஸ்பத்திரியிலும் இரண்டு கிழமைகள் மருந்து கொடுத்தனர். அதற்கும் காய்ச்சல் குறையவில்லை. அதன் பின்பு பிறைவேற்றாக இயங்கு கின்ற ஒரு மருத்துவமனைக்குச் சென்றாள். அங்கு அவளது இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. அங்கு தான் இரத்தப்புற்றுநோய் என்பது கண்டு பிடிக்கப்பட்டது,

"இந்த நோய்க்கான வைத்திய வசதிகள் எங்களிட்டை இல்லை. இந்தநோயை மாற்றக் கூடிய வசதிகள் கொழும்பிலை நிறைய இருக்கு... நிச்சயமாகக் குணப்படுத் தலாம், கொழும்புக்குக் கொண்டு போங்கோ..." அந்த டாக்டர் ஆலோசனை கூறி அனுப்பினார்.

கீர்த்தி கொழும்பிலுள்ள ஒரு நண்பனோடு தொடர்பு கொண்டு தாயின் மருத்துவநிலை பற்றிக்கூறி அதுபற்றிய விபரங்களை ஆராய்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டான். கொழும்பி லுள்ள நண்பன் மிகவிரைவாகப் பதில் அனுப்பியிருந்தான்.

பூபதியின் உடலிலுள்ள இரத்தம் முழுமையாக வெளி யேற்றப்பட்டு புதிய இரத்தம் செலுத்த வேண்டும். அதேவேளை இரத்தக் குழாய்களிலுள்ள புற்று நோய்க் கிருமிகளை அழிப்பதற்கான மருந்து ஏற்ற வேண்டும். இந்த வைத்தியம் ஒரு மாதகாலம் வரை நீடிக்கும்... அதற்கு மேலும் நீடிக்கலாம்... இருபத்தைந்து லட்சமாவது தேவைப்படும்... அதுதவிர நோயாளியை அனுமதிக்கும்போது குறைந்தது ஐந்து லட்சமாவது கட்ட வேண்டும். இப்படியொரு செய்தியை கீர்த்தியின் நண்பன் அனுப்பியிருந்தான்.

கீர்த்தி அதிர்ந்து போனான்... இருபத்தைந்து லட்சம்... தகப்பன் இல்லை... தங்கை வெலிக்கடைச் சிறையில்... தாய்க்குப் புற்றுநோய்... கீர்த்தி வேதனையில் அவிந்து போனான்.

கோவணத்தோடு படுத் திருப்பவனால் இழுத்துப் போர்க்க முடியுமா?

மரணத்தை நோக்கிய தாயின் பயணத்தில் மரணத்திடம் தாயை ஒப்படைக்கத் தாயோடு பயணிப்பதைவிட கீர்த்தியால் வேறெதையும் செய்ய முடிய வில்லை..!

கீர்த்தி யாழ்ப்பாணம் பெரி யாஸ்பத்திரியில் தாயைச் சேர்த்து விட்டான்.

நேற்றைக்கு முதல்நாள் இரவு பூபதி இறந்து விட்டாள்.

சகோதரியின் வருகைக்காக அவன் காத்திருக்கிறான்.

கன்னாதிட்டி சந்தி - நான்கு பகுதிகளை நோக்கிய வீதிகளின் சந்திப்பு முனை. நாற்சந்தி. இச்சந்தி யிலிருந்து பெருமாள் கோவிலடிப் பக்கம் நடந்தால் வானளாவி நிற்கும் மருதமரங்களையும், மிகப் பிரபல மான அந்த ரியூட்டறியையும் தாண்டி இடது பக்கத்தில் ஒரு கல்லு றோட்டு, அந்த றோட்டில் சிறிது தூரத்தில் றோட்டைக் குறுக் கறுத்துச் செல்லும் ஒரு தண்ணி வாய்க்கால், இந்த வாய்க்காலை மருவி ஒரு சைக்கிள் மட்டும் செல்லக்கூடியதொரு கையொழுங்கை, இந்த ஒழுங் கையில் இடது பக்கமாக அமைந்துள்ள மூன்றாவது வீடு, அது தான் பூபதியின் வீடு.

ஆனந்த பூபதி - இதுதான் பூபதியின் முழுப்பெயர். கஷ்டம் இவைகளால் ஆனந்தம் மறைந்து விட, பூபதி மட்டும் மிஞ்சியிருந்தது. பூபதியின் கணவன் செல்லத்துரை கறுவலாக இருந்தாலும் தென்னங் குருத்தை அரித்து வீழ்த்துகின்ற இராட்சத வண்டில் காணப்படு கின்றதொரு கவர்ச்சி அவனிட முண்டு. இவர்களுக்கு முதற் குழந்தை யாக சத்தியகீர்த்தி பிறந்தான். இவன் பிறந்த மூன்றாவது வருஷம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரவதனா பிறந்தாள். செல்லத் துரை கடுமையான உழைப்பாளி. பூபதி சிக்கனமான செலவுக்காரி அதனால் இவர்களின் குடும்பம் செல்வமாக இல்லாவிட்டாலும், பஞ்சமில் லாமல் நகர்ந்து கொண்டிருந்தது.

ஆனால் இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலம் மரணங்கள் மலிந்த யுத்தகாலம். தழிழீழப் போராளிகள் இராணுவமுகாம் களைத் தேடியழித்த காலம்!

கொட்டடிச் சந்தியில் விமானக்குண்டுக்கு இலக்காகி ஒரு தொகுதி மக்கள் உடல் சிதறிப் பலி யானார்கள். உடல் சிதறிப் பலியான வர்களின் பட்டியலில் செல்லத் துரையின் பெயரும் உள்ளடங்கி யிருந்தது...!

பூபதியின் குடும்பம் முது கெலும்பை இழந்த நாக்கிளிப்புழு வானது... பூபதி கடையப்பம் செய்து கொடுக்க ஆரம்பித்தாள், கீர்த்தி ஒரு தச்சுத் தொழிலகத்துக்கு வேலைக்குப் போனான், சந்திரா தையல் பழகப்போனாள்.

சந்திரா தையல் வேலை பழகுகின்ற கடையில் சந்திராவுக்கு முதல்தையல் பழகிய ரஞ்சிதம் என்றொருத்தி இரண்டு வருஷங் களுக்கு முதல் சவுதிக்குப்போய் இப்போது திரும்பி வந்திருந்தாள்.

மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை காப்பு, கழுத்து நிறைய நகை, கை நிறையக் காசு.... போறணைக் குள்ளி ருந்து எடுத்த சூடு மாறாத பொங்கிப் பூரித்த கேக்கைப் போல்... பூரித்திருந் தாள்...

"சந்திரா... சவுதியிலை இலங் கைத் தையலுக்கு நல்ல மதிப்பு... நான் ஒருகடை எடுத்து இன்னும் இரண்டு பேரைச் சேர்த்து நடத்திறன்... நல்ல வருமானம்.. நீ விரும் பினால் என்னோடை வா... எண்ரைவீட்டிலை தங்கலாம், என்ரை கடையிலை வேலை செய்யலாம்" ரஞ்சிதம் நல்ல மனத்தோடு தான் இப்படிக் கூறினாள்.

சந்திரா சவுதிக்குப் போக முடிவு செய்தாள். ரஞ்சிதாவே சந்திராவைக் கூட்டிக் கொண்டு பாஸ் போட் எடுப்பதற்காகக் கொழும் புக்கு வந்தாள். வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீதியிலுள்ள ஒரு லொட்ஜில் தங்கினர். அன்றிரவு பொலிசார் அந்த லொட்ஜைச் சற்றி வளைத்தனர்... சந்திரா கைது செய்யப்பட்டாள்!

சந்திராவிடம் எந்தப் பதிவு களும் இருக்கவில்லை, வாய் வல்லமையும் அவளுக்கில்லை... லொட்ஜ் முதலாளி ஐம்பதினாயிரம் இருந்தால் சமாளிக்கலாம் என்றான்... சந்திராவுக்கு அழமட்டுந் தான் தெரிந்தது!

ரஞ்சிதம் தான் சவுதியால் வந்த பாஸ்போட்டைக் காட்டி சமாளித்துக் கொண்டாள்.

மறுநாள் சந்திராவை கல் கிசை நீதிமன்றில் வெளிப்படுத் தினர்... நீதிமன்றம் சந்திராவை வெலிக்கடைச் சிறைச்சாலைக் கனுப்பியது...!

சவுதிக்குச் செல்லும் மகிழ் வோடு புன்னகைத்தபடி கொழும் புக்கு வந்த சந்திராவின் உடலிலிருந்த சில பவுண் நகைகளோடு ரஞ்சிதம் ஊருக்குத்திரும்பினாள்.!

நாட்கள், மாதங்களாகி மாதங்கள் வருஷங்களாகி... ஏழு வருஷங்கள்... விசாரணையுமில்லை, வழக்குமில்லை... காலம் நகர்ந்து கொண்டிருந்தது... அவளின் வாழ்க்கை சிறைக்குள் கரைந்து கொண்டிருந்தது...! இப்போது சந்திரா புதிய புதிய அனுபவங்களை உள்வாங்கி புதியதொரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாள்...!

புதிய அனுபவங்களைப் பெற்ற அந்தச் சந்திரா... ஏழு வருடங் களின் பின் தன்னைப் பெற்றவளின் உயிரற்ற உடலைப்பார்க்க வரப் போகிறாள்...!

இப்போது மூன்று மணி வெலிக்கடைச் சிறையி லிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குச் சந்திராவை கொண்டுவந்து விட்டார்கள். என்ற செய்தியை சந்திராவை அழைத்து வருவதற்கான முழு ஏற்பாடுகளை யும் செய்த வழக்கறிஞர் சில நிமிடங் களுக்கு முன்னதாகத்தான் கீர்த்திக்கு செய்தி அனுப்பி யிருந்தார்.

"யாழ்ப்பாணத்துக்கு சந்தி ராவைக் கொண்டு வந்திட்டாங் களாம்" இந்தச் செய்தி அங்கு நின்றவர்கள் மத்தியில் முணுமுணுக் கப்படுகின்றது.

நேரம் நகர்ந்து கொண்டி ருக்கின்றது. கீர்த்தி வீட்டுப் படலை யடியில் சந்திராவின் வருகையை எதிர் பார்த்து நிற்கிறான். கீர்த்திக் கருகில் அவனது நண்பன் மணியம் நிற்கிறான்.

அவர்கள் நிற்கின்ற படலையை அண்மித்து ஒரு செவ் விழைத்தென்னங்கன்று... சந்திரா கொழும்புக்குப் போவதற்குச் சில தினங்களுக்கு முதல், தையல் பழகு கின்ற இடத்தில் யாரோ கொடுத் தார்கள் என்று கொண்டு வந்து... கீர்த்தியைக் கொண்டு கிடங்கு வெட்டுவித்து அவளே நாட்டாள். அந்தச் செவ்விழைக் கன்றுக்கும் "செவ்விழை என்றொரு இனம் இருந்தது... ஆனால் அந்த இனம் அந்தச் செவ்விழைக்கன்றின் சுதந்திர மான வளர்ச்சிக்குத் தடை யாக இருக்கவில்லை ஆனால் சந்தி ராவுக்கு...? அவளுக்கு மட்டுமா...?

"பொலிஸ்காரர் வாறாங் களாம்" அங்கு நின்ற மக்களிடம் ஒரு பரபரப்பு... கீர்த்தியின் செவிப்பறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் அந்தப் பரபரப்பு அதிர்வை ஏற்படுத்துகின்றது!

கீர்த்தி நின்றபடியே தலையை நீட்டி ஒழுங்கையைப் பார்க்கிறான். முன்னால் ஒரு பொலிஸ் அதிகாரியைத் தொடர்ந்து சில பொலிஸ்காரர்கள் வருகின்றனர்...

"சத்தியகீர்த்தி" ஒரு தமிழ்ப் பொலிஸ்காரன் விசாரிக்கிறான். சந்திராவைக் கொண்டு வருவதற்கான விண்ணப்பத்தை சத்திய கீர்த்தியே செய்திருந்தான். அதனால் தான் அவர்கள் சத்தியகீர்த்தியை விசாரிக்கின்றனர். கீர்த்தி பொலிசாருக்கு முன்னால் போய் நிற்கிறான்.

"நீதான் சத்திய கீர்த்தியா?" அந்தப் பொலிஸ்காரன் கேட்கிறான்.

"ஓம்... சேர்... நான் தான் சத்தியகீர்த்தி" கீர்த்தி மிகவும் பணிவோடு கூறுகிறான்.

"ஐ.சியைக் கொண்டு வா" கீர்த்தி மிகவும் பணிவோடு ஐ.சியை எடுத்து வந்து கொடுக்கிறான். கீர்த்தியையும் கூட்டிக்கொண்டு பூபதியின் பிணம் கிடந்த இடத்தை நோக்கி செல்கின்றனர். பூபதியின் பிணத்தைச் சூழநின்றவர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டு, கீர்த்தியும் ஒரு பொலிஸ்காரனும் மட்டும் அந்த இடத்தில் நிற்க, றோட்டுக்கரையில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்பை நோக்கிச் செல்கின்றனர்.

சில நிமிடங்களில்... இரண்டு பெண் பொலிசாரின் பாதுகாப்பில் சந்திரா அழைத்து வரப்படுகிறாள்.

ஏழு வருடங்களுக்கு முன்பு... பாஸ்போட் எடுப்பதற்காக சந்திரா கொழும்புக்குப் புறப்பட்ட போது... பூபதி மகிழ்ச்சியில் காவிப்பற்கள் தெரிய வாய்நிறையச் சிரித்து... கையசைத்து விடை கொடுத்த லட்சுமிகரமான அந்த முகம்... அந்த முகந்தான் அவளது மனதில் பதிந்திருந்தது...

இப்போது... சவப் பெட்டிக்குள் பிணமாகக்கிடக்கின்ற பூபதியின் முகம்... சந்திரா விறைத்துப் போய்விட்டாள்....!

தலைமயிரெல்லாம் உதிர்ந்து வெண்தலையாகி... கண் முழியைச்சற்றியுள்ள தசை வற்றி குழி விழுந்து... வெளுறி... எலும்புகள் புடைத்து... காற்றுப் போன பலூனாகச் சுருங்கிக் கிடக்கிறாள்...

ஆனால் அவளது காவி படிந்த பற்கள் மட்டும் இன்னும் அப்படியே தான் இருந்தது...!

சந்திரா சிலையாக நிற்கின்றாள்... அவளது கண்களுக்குள் கண்ணீர் நிரம்பித் தளம்புகின்றது. கீர்த்தி விம்மி விம்மி அழுகிறான்...

கைகள் இரண்டையும் முழங்கையோடு மடித்து கைவிரல்களை விரித்து கைவிரல்கள் நடுங்க சகலதையும் இழந்து விட்டோம் என்ற அநாதரவான வேதனையில் சந்திரா விம்முகின்றாள்.

மரணத்தின் வலிநிறைந்த வேதனை!

"அம்மா... அம்மா... நான் சந்திரா வந்திருக்கிறன்... உங்கடை சந்திரா வந்திருக்கிறன்... உங்களை வழி அனுப்ப வந்திருக்கிறன்... நீங்கள் சுடலைக்குப் போங்கோ, நான் சிறைக்கு போறன்... இவன் அண்ணா எங்கையம்மா போவான்...? "சந்திரா வாய் விட்டழுகிறாள்... கீர்த்தி பெருங்குரலெழுப்பி அழுகிறான்!

சந்திராவோடு வந்த இரண்டு பெண் பொலிசாரும் தலை குனிந்து நிற்கின்றனர். அவர்களது காக்கி உடுப்புக்குள் இருப்பது பெண்மை தானே... அவர்களும் ஒரு தாய்க்குப் பிள்ளைகள் தானே!

"அப்பாவுக்குப் பால்வாக்க அப்பாவின்ரை உடலில்லை... உனக்குப் பால் வாக்க நான் பக்கத்திலை இல்லை ஏனம்மா இந்தக் கொடுமை...?" நின்று கொண்டிருந்த சந்திரா முழந்தாளிட்டு அமர்ந்து பிரேதப்பெட்டியின் விளிம்பில் நெற்றியை பதித்து அழுகிறாள்.

முழந்தாளிட்டு அமர்ந்திருந்த சந்திரா எழும்பி கீர்த்தியின் பக்கம் திரும்புகிறாள்... ஒரே கருப்பைக்குள் கருத்தரித்து பூமியைத் தழுவிய இரு உயிர்கள்...

"அண்ணை" வேதனைப் பாளிக்குள்ளிருந்து கிளம்பிய குரல்...!

"சந்திரா என்னைத் தனிய விட்டிட்டுப் போகாதை... நான் செத்துப் போயிடுவன்" கீர்த்தி குரல் வைத்துக் கத்துகிறான். கீர்த்தியை மணியம் தேற்றுகிறான்.

ஒரு கைதிக்கு வழங்கப் படும் நேரம் முடிந்திருக்க வேண்டும்.. பெண் பொலிசார் இருவரும் சந்திராவின் கைகளைப் பிடித்து புறப்படத் தயாராகுகின்றனர்...

"சந்திரா எனக்கேதாவது சொல்லிப்போட்டுப் போ" கீர்த்தி யாசிக்கிறான்!

"நான் என்னத்தைச் சொல்ல... பிறந்த வீட்டிலையும் ஒண்டுமில்லை... வாழ்ந்த நாட்டிலையும் ஒண்டுமில்லை..." சந்திரா கூறுகிறாள். சந்திராவை பொலிசார் அழைத்துச் செல்கின்றனர்.

கீர்த்தியும், மணியமும் சந்திராவைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

"பிறந்த வீட்டிலையும் ஒண்டுமில்லை...வாழ்ந்த நாட்டிலையும் ஒண்டுமில்லை..."

சந்திரா கூறிய வாக்கியங்கள் அர்ஜூன பாணங்களாய் சூழ நின்றவர்களின் இதயங்களில் குத்தி நிற்கின்றன...! •

ஓவியம் - விகாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலாதியான கதை சொல்லி "அன்ரன் செக்கோவ்"

உன்னதமான அனுபவத் தொற்றலை நிகழ்த்தும் சாத்தியங்களை உள்ளடக்கிய வடிவமாகச் சிறுகதையினை மாற்றியமைத்த முதற் கதை சொல்லியாக அன்ரன் செக்கோவ் சிலாகிக்கப்படுகிறார். தொன்மைமிகு ரஷ்யாவின் தினசரி வாழ்வின் தேறிய பெறுமானங்களைச் சிறுகதையிலே பதிவு செய்த செக்கோவ், துன்பியலையும் கொண்டாட்டத்திற்குரிய கலையாக மாற்ற முயன்றார். பிரசார நெருடலற்ற கதைக்கட்டுமானத்தால் புனைவு வெளியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தினார். கடைநிலை மக்களது வாழ்வின் ஆதாரம் மற்றும் ஆதாரமின்மையை அங்கதந் தோய்ந்த எளிமையான மொழியில் வெளிப்படுத்தினார். செல்வந்தர்களின் பகட்டு வாழ்வையும், அடித்தட்டு மக்களது அடிமை ஊழிய உணர்வையும் கேலிக்குள்ளாக்கினார். சிறுகதைகள் குறித்த கருத்தாடலில் புறந்தள்ள முடியாத ஆளுமையாக உருவெடுத்தார்.

ரஷ்யாவிலுள்ள தகான்ரான் என்னுமிடத்தில் 29 ஜனவரி 1860 இல் பலசரக்குக்கடை உரிமையாளருக்கு மகனாகப் பிறந்த செக்கோவ் தந்தையார் செலுத்த வேண்டிய கடனுக்காக இளவயதிலேயே அடைமானம் வைக்கப்பட்டார். மூன்றாண்டுகள் கிராமத்தில் அடிமைச் சேவகம் புரிந்து விடுதலை பெற்று கல்வியில் ஆர்வங்காட்டத் தொடங்கினார். நிதியுதவியூடாக மருத்துவக் கல்வி பயின்று வைத்தியரானார். ஏழை மக்களுக்காக மருத்துவமனை கட்டி இலவச சேவையினை வழங்கினார். லிடியா, ஒல்கா போன்ற நடிகைகளோடு செக்கோவ் கொண்டிருந்த காதல், இலக்கிய உலகில் சுவாரஸ்யம் மிகுந்தது. டால்ஸ்டாய், கார்க்கி ஆகிய ஆளுமைகளோடும் நெருங்கிய நட்புப் பூண்டிருந்த வேளையில், காச நோயின் பாதிப்பால் 1904 ஜூலை 15 இல் (வயது 44) இயற்கை எய்தினார்.

The seagull, uncle vanga, Three Sisters, The cherry orchard என்னும் நான்கு நாடகங்களையும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளினையும் குறுங்காலத்தில் எழுதிக் குவித்தார். மிகமிகச் சாதாரண மையக் கருவினைக் கூட நுண்ணிழை மிகுந்த கவித்துவத் தேட்டத்தால் அசாதாரணமான கதையாக மாற்றிவிடும் ஆற்றல் மிகுந்தவர். இவர் எழுதிய புத்திரசோகம், பந்தயம், பச்சோந்தி, நாய்க் கார சீமாட்டி, வான்கா, எழுது வினைஞரின் மரணம் போன்ற சிறுகதைகள் வாசிப்பின் சாத்தியங்களை வேறோர் தளத்திற்கு நகர்த்திச் செல்லும் வீரியங் கொண்டவை.

வெண்பனிதூவும் அந்தி நேர வருணனையோடு "புத்திரசோகம்" சிறுகதை ஆரம்பிக்கின்றது. மகனை இழந்த துக்கத்தினை யாருக்காவது சொல்லிவிட ஏங்கும் வயோதிபக் குதிரை வண்டிக்காரன், மனிதர்கள் செவி சாய்க்க மறுப்பதால் தன் சோகத்தை எல்லாம் குதிரையிடமே கொட்டித் தீர்த்து விடுவதை அக்கதையிலே "செக்கோவ்" வெகு அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார்.

முடிவிலி அர்த்தம் சுமக்கும் மனித இயல்புகளை பந்தயம் சிறுகதையில் உணர்த்துகிறார். மனித வாழ்வின் சட்டகத்தினை சிதறடிக்கும் கூட்சுமத்தை தன்னுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.கு.முரளிதரன்

பொதிந்ததாக "பந்தயம்" சிறுகதை அமைந்துள்ளது. சதுரங்க ஆட்டத்தின் நுட்பத்தோடு கதை வளர்த் தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. தொழிலதிபரின் விருந்தொன்றில் மரண தண்டனையா? ஆயுள் தண்டனையா? கொடூரமானதென்ற விவாதம் கிளம்ப, இளம் வழக்கறிஞர் ஒருவர் ஆயுள் தண்டனைக்கு ஆதரவாகக் கருத்துரைக்கிறார். இளம் வழக்கறிஞர் பதினைந்து வருடங்கள் ஆயுள் தண்டனையை அனுபவிக்க முடிந்தால் "இரண்டு மில்லியன் ரூபிள்" தருவதாக கோடீஸ்வரர் ஒருவர் பந்தயம் கட்டுகிறார். ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது. கோடீஸ்வரரின் வீட்டின் ஒதுக்குப்புற அறை ஒன்றில் வழக்கறிஞர் சிறை வைக்கப்படுகிறார். அவருக்கு இசைக்கருவிகள், மதுவகைகள், நூல்கள் என்பன வழங்கப்படுகின்றன. காலம் சுழல்கிறது. கோடீஸ்வரர் வணிகத்தில் நட்டமடைந்து கடனாளியாகிறார்.. பந்தயத் தொகையை வழங்க நிதியற்ற சூழலில் வழக்கறிஞரைக் கொல்லத் திட்டமிட்டு சிறை வைக்கப்பட்டுள்ள அறைக்குள் நுழைகிறார். வழக்கறிஞர் உறங்கிக் கொண்டிருக்கிறார். மேசை மீது கோடீஸ்வரரின் முகவரியிடப்பட்ட கடிதமொன்று கிடக்கிறது. எடுத்து வாசிக்கிறார்.

"கடந்த பதினைந்து வருடங்களாக
நூல்களின் வழியே உலக வாழ்வின்
அற்புதங்களை உணர்ந்து கொண்டேன்.
காடுகளில் வேட்டையாடினேன். மலை
களைக் கடந்தேன். மின்னலோடும்
மேகங்களோடும் உரையாடினேன்.
வானம், கடல். வயல்,நதி அனைத்தையும்
தரிசித்தேன்.....
.....
நீங்கள் தவறான பாதையைத் தேர்ந்து
எடுத்துள்ளீர்கள். அழகை மறந்து
அசிங்கங்களையே ஆராதிக்கிறீர்கள்.
இத்தகைய அவல வாழ்வுக்கு எதிர்ப்புத்
தெரிவித்து, ஒரு காலத்தில் நான்
சொர்க்கமாகக் கருதிய இரண்டு மில்லியன்
ரூபிளை நிராகரித்து ஒப்பந்த நேரத்திற்கு
சற்று முன்னரே வெளியேறுகிறேன்"

என்று கடிதம் கட்டவிழ்க்கும் கலாதீதம் செக்கோவ் என்ற ஆளுமையின் இந்திரஜாலத் தொடுகையாக (magic Touch) வாசகனில் சுவறுகிறது.

அரச ஊழியர்களின் நடத்தையினை அங்கதத்துள்ளாக்குவதாக "பச்சோந்தி" சிறுகதை அமைந்துள்ளது. தெருவிலே ஒருவனை நாய் கடித்துவிட்டதாக அறிந்த பொலிஸ் கொன்ஸ்ரபிள் நாயின் உரிமையாளரைத் தண்டிக்க வேண்டுமெனக் குமுறுகிறார். அந்த நாய் உயரதிகாரியுடையதாகவோ, அவரின் சகோதரர் உடையதாகவோ? இருக்கலாம் என்று கூட்டத்திலிருந்து ஒருவர் ஐயம் தெரிவிக்க, கொன்ஸ்ரபிள் கடிபட்ட வனை கோபிக்கிறார். அதிகார மேலாண்மைக்கு ஏற்ப நிறந் திரியும் அற்பமான மனித மனநிலையை மேலோட்டமாகக் குறிப்பிட்டாலும் கதையின் அடி நீரோட்டம் பன்முக அதிர்வுகளை கொண்டமைந் துள்ளது.

இருபிள்ளைகளின் தந்தையான நடுத்தர வயது ஆணுக்கும், திருமண பெண்ணுக்கும் இடையிலான அநாம உறவினை "நாய்க்கார சீமாட்டி" சிறுகதை விபரிக்கின்றது. விடுமுறைக்காலத்தில் நாயோடு சுற்றித் திரியும் அன்னாவும், நகைச்சுவைப் பேச்சால் அவளைத் தன்வசப்படுத்தும் டிமிற்ரியும் காலங்கடந்தாலும் நினைவுள் மீளும் ஆற்றல் மிகு கதாபாத்திரங்களாகும். திருமண ஒப்பந்தத்தின் வழியே கட்டியெழுப்பப்படும் உறவின் சூன்யம், மாற்று மகிழ்நெறியை நோக்கி நகர்த் தும் யதார்த்தத்தை கதையிலே பதிவு செய்துள்ளார். "நாய்க்கார சீமாட்டி கதைதான் நான் படித்த மிகச் சிறப்பான காதல் கதை" என்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்!

உள்ளே உறைந்திருக்கும் விழிநீரை இமைகளின் ஓரத்திற்கு கொண்டுவரும் வீரியத்தோடு "வான்கா" சிறுகதை எழுதப்பட்டுள்ளது. குழந்தை ஊழியத்தின் கொடுமைகளை தாத்தாவுக்கு கடிதமாக எழுதுகின்ற "வான்கா" என்ற சிறுவனை நடுவணாகக் கொண்டு நகர்கிறது. தாத்தாவின் முகவரியை எழுதினால் தான் கடிதம் போய்ச் சேரும் என்ற புரிதல் இன்றி தபாற் பெட்டியில் போட்டு விட்டு "வான்கா" உறங்கும்போது, நாம் தூக்கத்தைத் தொலைத்து விடுகிறோம். கடிதத்தில் இடம் பெறுகின்ற வரிகளில் ஏக்கத்தின் வாசனை தேங்கியுள்ளது.

"நான் பெரியவனானதும் உன்னைக்
கருத்துடன் கவனித்துக் கொள்வேன்
யாரும் உன்னைத் துன்புறுத்த
விட மாட்டேன். நீ இறந்த பின்
உன்னுடைய ஆத்மாவுக்காகப்
பிரார்த்திப்பேன். என் அம்மாவுக்குப்
பிரார்த்திப்பதைப்போல..."

"வான்கா"வின் துயரத்தில் ஒவ்வொரு வாசகனும் பங்கெடுக்கிறான். உலகில் பொது மொழிகளில் துயரமும் ஒன்றல்லாவா...?

கூழைக்கும்பிடு போடுகின்ற அரச ஊழியர்களின் நடத்தையினை "எழுதுவினைஞரின் மரணம்" கதையானது எளிய முறையில் விளக்குகிறது. நாடகம் ஒன்றினைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற எழுது வினைஞர் திடீரென்று தும்முகிறார். போக்குவரத்து அமைச்சகத்தின் நிர்வாகி ஒருவர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதைக் கவனிக்கிறார். அவரிடம் எழுது வினைஞர் தொடர் மன்னிப்புக் கேட்கும் அற்பத்தனமான செயலடுக்காகவே கதை நகர்கிறது. இறுதியில் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளைச்சலுக்குள்ளாகும் எழுதுவினைஞர் வீட்டிலிருந்த ஆசனமொன்றில் அரச சீருடையோடு அமர்ந்தவாறே மரணமடைகிறார். இயல்போடு இருத்தலற்ற சமூகத்தின் மீது செக்கோவ் கொள்ளும் கோபம் கதையிலே எள்ளலாகப் பதிவாகியுள்ளது.

ஜீவகாருண்யம் செக்கோவின் பிறிதொரு அடையாளமாகும். தினுசு தினுசான நாய்களை அவரது கதைகளில் காணலாம். விநோத உயிரிகளை வளர்ப்பதிலும் ப்ரியங் கொண்டிருந்தார். இலங்கைக்கு வந்தபோது பயணத்தின் நினைவுப் பரிசாக கீரிப் பிள்ளை ஒன்றைப் பெற்றுச் சென்றார். "செக்கோவ்" மரணமடைந்த போது அவரது உடல் மொஸ்கோ தொடருந்து நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டது. அப்போது ஜப்பானுக்கும் ரஷ்யாவிற்குமிடையே போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. போரிலே "ஜெனரல்" தர அதிகாரி ஒருவர் கொல்லப்பட அவரது உடலும் தொடருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. பிரேதப் பேழைகள் குறித்த தவறான புரிதலால் செக்கோவின் உடலுக்கு இராணுவ மரியாதை வழங்கப்பட்டது. "மரணத்திற்கும் பின்பும் அங்கதம் செக்கோவை விட்டு அகலவில்லை" என்று கார்க்கி இந்நிகழ்வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எள்ளலின் நகுநயத்தை இறுதி ஊர்வலத்திலும் பதிவு செய்த மேதையின் சிறுகதை களில் பதுங்கியுள்ள நுண் முடிச்சுகளை அவிழ்த்து —பரவசங்கொள்வோம்.

சூரியப்பழம்

அவளிடம் வந்து போன
அழகிய கனவுகள் பற்றி
சொல்லவேண்டுமா?

அத்தனையும் அதிசயமான நினைவுகள்
இதமான மனம் போலவும்
இயல்பான முகம் போலவும்
மிக நல்ல அழகாகவே...!

சில கணங்களுக்குள்
தான் ஏமாந்து விட்டதாகவும்
தான் தனிமைப்பட்டு விட்டதாகவும்
உணர்கிறாள்
நெருப்பு நெஞ்சு கனத்தபடியே...!

பரந்து விரிந்த கடலின் மென்
நீலங்களை
முகர்ந்து முத்தமிட்டபடி
சுவைத்துக் குளிர்ந்தபடி
தோடம்பழ நிற பெரிய பந்தொன்று
மெதுமெதுவாய் விழுந்து
ஆழியில் தாழ்ந்து போவது கண்டுற்ற ஆவலோடு
தாய் மடி தேடி ஓடிப் போனாள்
துள்ளி ஓடும் கன்றுக்குட்டி போல...!

"அக்கா...! அக்கா...! இங்கே ஓடிவா
கடலில் தாழ்ந்து போகும்
பெரிய தோடம்பழ நிற அழகைப் பார்
அதை
விரைவா எடுத்து நீயும் எனக்குத்தா" என்றாள்

மறுநாள்
மறுகடலால்
எழுந்து வந்த
சிவந்தபழம் பார்த்து குதூகலித்தாள்
இன்றும் இனிய சோதரியை அழைத்தாள்

அழகாய் உருண்டு திரண்டிருந்த
சிவந்தபழம் பார்த்த சோதரி
தங்கை கன்னம் பார்த்தாள்

சிவந்து கொழுத்த
தங்கையின் கன்னங்களும்
சூரியப்பழமும்
ஒன்று என்று சொல்லி வியந்தாள்...!

—சமரபாகு சீனா. உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.ஜீவகுமாரன்

ஒருநாள் மகளிடமே சொன்னேன், "அப்பா போன பிறகு உந்த கல்வெட்டு அது இது எல்லாம் செய்ய வேண்டாம்... ஆனால் நான் இருக்கும் பொழுது தினசரி ஒரு நிமிடம் என்னை சுகம் விசாரி" என்று!

பிணங்கள்

என்னதான் ஒதுங்கி ஒதுங்கி இருந்தாலும், வீட்டின் வாசலில் வந்து, "அண்ணை ஒருக்கா கதவைத் திறவுங்கோ... உங்களாலைதான் இது முடியும்... உங்களை விட்டால் மனம் வைச்சு கெட்டித் தனமாய் இதைச் செய்ய எங்களுக்கு யார் இருக்கினம்" என நட்புகள் கொண்டுவரும் பிரச்சினைகள் கதவைத் தட்டும் பொழுது என்ன செய்ய முடியும்?

கொஞ்சக் காலமாக எதுவுமே எனக்குப் பிடிப்பதில்லை.

முள்ளிவாய்க்காலுடன் ஆயுதங்கள் மௌன மாகி விட, அங்கேயுள்ள மக்கள் பற்றி எந்தப் பிரக்ஞை யும் இன்றி, ஆண்டுக்கு ஒரு முறை தொலைக்காட்சி களில் வாசிக்கப்படும் கண்ணீர்க் கவிதைகள்... வீர முழக்கங்கள்.... நாள் முழுக்க சோக இசைகள்... கருத்தாடு களங்கள்... இடைவேளையின் பொழுது கோச்சடையானின் விளம்பரங்கள்.... இது எதுவுமே எனக்குப் பிடிப்பதில்லை.

கணனித் திரையின் அளவினாலும்... வைத்திருக்கும் காரின் வகையறாக்களினாலும்... ஒரு விழாக்கு கட்டிய சேலையை இன்னோர் விழாக்கு கட்டமாட்டோம் என அடம் பிடிக்கும் எங்கள் இன இளம் மனைவிமாரின் போக்குகளாலும்... ஆண்டுக் கொருமுறை தங்கத்தின் எடைஏறும் தாலிக்கொடி களாலும்...புலம் பெயர்நாடுகளுக்கு என்று ஒரு சைவசமயக் கோட்பாட்டை நாமே வகுத்துக் கொண்டு கோயில் திருவிழாவின் சிறப்பு என்பது படைக்கும் பணிகாரங்களின் எண்ணிக்கைகளால் கணிக்கப்படும் நிலைகளாலும்...இந்த வாழ்வின் போக்குகள் எதுவுமே எனக்குப் பிடிப்பதில்லை.

எல்லோர் கையிலும் அடிமட்டம்.

அங்குலங்களிலும் மில்லி மீற்றரில் அளப்பதற் கான அடிமட்டம்.

தங்கச் சங்கிலி அணிந்திருந்தால் இலங்கைப் பவுணோ... சவுதிப் பவுணோ என உரசிப் பார்ப்பதில் அடிமட்டம்.

பிள்ளை நல்லாய் படிக்கின்றான் என்னும் முதல் எவ்வளவு சம்பளம் வரும் எனக் கேட்கும் அடிமட்டம்.

மகளுக்கு ஒரு வரன் வந்திருக்கு என்னும் முதல்

சீதனம் எவ்வளவு கொடுத்தீர்கள் எனக் கேட்கும் ஒரு அடிமட்டம்.

இதுகள் எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கி இருந்து சனி ஞாயிறுகளில் என் வீட்டுக்கு வரும் பேத்தியின் உள்ளங்கையில் கீரை கடைந்து விளையாட... வீட்டுக் வெளியே ரியூலிப்பின் பூச்செடி களினிடையே படர்ந்திருக்கும் களைகளை, மண் கையில் பட பிடிங்கிக் கொண்டு இருக்க ... குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா என எம். எஸ். சுப்புலக்சுமின் பாடலைக் கேட்டபடியே சமையல் செய்வதில்... பின்னேரத்தில் மின்சாரக் கம்பிகளில் ஒன்றாக வந்து அமர்ந்து விட்டு சிறு அரவம் கேட்டாலும்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகவே எழுந்து பறக்கும் பறவைகளின் அழகைக் காண்பதில்தான் எனக்கு இப்போ பிரியம்.

இந்த நாட்டுக்கு 30 வயதில் வந்து அடுத்த 35 வருடமும் முதல் ஆறுமாதம் மணிக்கூட்டுக் கம்பியை முன்னே ஒரு மணிநேரம் விட்டபடியும், பின் ஆறுமாதம் அதனைப் பின்னே ஓட விட்ட படியும் தொடர்ந்து ஓடியாயிற்று.

இன்றுவரை களைக்கவே இல்லை.

ஆனாலும் வருமானம் போதும் என்றாகி விட்டது. இன்னமும் 2 வருடத்தில்தான் பென்சன். ஆனாலும் 2 ஆண்டுகள் முந்தியே அதனைப் பெற்றுக் கொண்டு விட்டேன்.

பானுமதி இருந்திருந்தால் அடுத்த 2 வருடமும் வேலை செய்துதான் இருப்பேன்.

அவள் போன பிறகு, "அப்பா எழும்புங்கோ.. எத்தனை தரம் அலாரம் அடிச்சிட்டுது...எழும்ப முடியாட்டி ஏன் அலாரம் வைச்சு என்ரை நித்திரையையும் குழப்புறீங்கள்..." என செல்லமாக என்னைத் கடிந்தபடி காலைத் தேத்தண்ணீரும் பாணும் பட்டரும் தயார் செய்து தந்து, பின் மதிய சாப்பாடும் கட்டித் தர இப்போ யார் இருக்கின்றார்கள்?

ஒரு நாள் அலாரம் அடித்த போது வழமை போல் நான் எழும்பாது இருந்தேன். அவளும் எழும்பாது இருந்தாள். தொட்டுப் பார்த்தேன். உடம்பு குளிர்ந்திருந்தது.

என் வாழ்க்கையில் கண்ணீர் கசிந்த முதல் நாள் அது.

பின்பென்ன... இறுதிக் கிரியைகள்... எட்டுச் செலவு... அந்தியட்டி... ஆட்டத் திவசம் என என் வாழ்வும் நானும் என இந்த நாலு சுவர்களுக்குள் முடங்கி விட்டது.

சிலவேளைகளில் மகள் மாலையில் தொலை பேசியில் சுகம் விசாரிப்பாள்.

பேத்தியைக் கொண்டு வந்து என்னுடன் விட்டு விட்டு சனி, ஞாயிறுகளில் மருமகனுடன் கடைதெருவுக்கு போவாள்.

அந்த இரண்டு நாள் எப்போ வரும் என்ற நினைவுடனேயே என் அடுத்த ஐந்து நாட்களும் கழியும்.

அந்த நாட்களில் மனதுள் ஒரு பயம் தோன்றும்.

பானு மாதிரி நானும் ஒருநாள் படுக்கையில் போய் விட்டால், நான் இறந்து விட்டேன் என்று யார் என்னைக் கண்டு கொள்வார்கள்?

தனி மனிதர்கள் தனிப் பிணமாய் தனியே தூங்குவது இந்த நாட்டில் அடிக்கடி நடக்கும் ஒன்று தான்.

பிணவாடை அடிக்கும் பொழுதுதான் மரணச் சான்றிதழ் எழுதப்படும்.

பானுமதி இறந்த அடுத்த ஆண்டு ஒரு சம்பவம் நடந்தது.

எனது வேலையிடத்து நண்பன். டெனிஷ் காரன். எறிக் லாஸ். லாஸ் என்றே அவனை... இல்லையில்லை... அவரை அழைப்பேன். மனைவி பிள்ளைகளைப் பிரிந்து தனியே வாழ்ந்தவர். பின்னேரத்தில் அவர் என்னிடம் வருவார். அல்லது நான் அவரிடம் செல்வேன்.

நல்ல வெயில் என்றால் அணைக்கட்டில் அமர்ந்து மீன் பிடிப்போம்.

செஸ் விளையாடுவோம்.

அரசியல் பேசுவோம்.

பானுமதியின் ஆட்டத்திவசத்தை அவளின் ஊரில் போய் செய்ய ஆசைப்பட்டேன். அது அவளின் ஆத்மாக்கு பிடிக்கும் என என் மனம் சொல்லிற்று.

லாஸ்க்கு பயணம் சொல்லி விட்டு மகளுடனும் பேத்தியுடனும் மருமகனுடனும் அந்த ஆண்டு இலங்கைக்குப் போனேன்.

வரும்போது தனக்கு வெண் தந்தத்தால் செய்யப்பட்ட ஒன்றன் பின் ஒன்றாய்ச் செல்லும் ஐந்து யானைச்சிலைகள் வாங்கிவரச் சொல்லி விட்டார்.

தலைகருகிய தென்னைகள்... முறிகண்டியில் தரித்து நில்லாத புதிய பஸ் பாதைகள்... தமிழ் தெரியாத கொழும்பு யாழ் பஸ் சாரதிகள்... அவர்கள் நிறுத்தும் சாப்பாட்டுக் கடைகள்... உரிமை கோரப்படாத சடலங்கள்... எங்கள் ஊர் கனவுக் கன்னியாக இருந்த புனிதா ரீச்சர் ஆள் அடையாளமே தெரியாமல் மாறியிருந்த சோக நிகழ்வுகள் எக்ஸ்செற்றா... எக்ஸ்செற்றா என ஒரு பக்கமும்... கிணற்றில் தண்ணி அள்ளிக் குளிப்பு... சேட்டுப் போடாமல் கோவிலுக்குப் போகும் சுகம்... சாரத்துடன் சந்தைக்குப் போய் உடன் கீறிய பலாப்பலத்தின் மணம் மாறாமல் அதனை வேண்டி வந்து கையில் எண்ணை பூசி பேத்திக்கு சுளை சுளையாக பிரித்துக் கொடுக்கும் ஆனந்தம்... இரவில் ஒரு நாய் ஊளையிட ஊர்நாய்கள் எல்லாமே ஊளை யிடும் பழைய நினைவுகளை ஆட்டோக்கிராவ்களாக வாசிக்கும் சுகங்கள்... என இன்னோர் பக்கமும் என எங்கள் இலங்கைப் பயணம் மூன்று கிழமை கழிய மீண்டும் டென்மார்க் வந்தேன் - லாஸின் குட்டி யானைச் சிலைகளுடன்.

லாஸிற்கு பிடித்தமான துருவக்கரடி பியரை வேண்டி குளிர்சாதனப் பெட்டியினுள் வைத்து விட்டு பின்னேரம் என் வீட்டிற்கு வருமாறு அழைக்க தொலைபேசியை அழுத்தினேன்.

மறுமுனையில் பதில் இல்லை.

தோட்டத்தினுள் நிற்கலாம் என்ற ஐயப்பாட்டில் கைத் தொலைபேசியை அழுத்தினேன்.

அதற்கும் பதில் இல்லை.

எந்த எதிர்மறையான எண்ணங்களும் இல்லாமல் நேரே லாஸ் வீட்டிற்குப் போனேன்.

கதவு பூட்டப்பட்டு இருந்தது.

அவரின் செல்லப் பூனை அமைதியில்லாமல் தோட்டத்தில் உலாவிக் கொண்டு இருந்தது.

கதவைத் தட்டினேன்.

பதில் இல்லை.

ஒரு துர்நாற்றம் வந்தது.

எனக்கு எல்லாமே புரிந்து விட்டது.

பொலிசுக்கும் ஆஸ்பத்திரிக்கும் தகவல் கொடுத்த பொழுது அவர் இறந்து குறைந்தது ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் ஆகியிருக்க வேண்டும் என பிரேத பரிசோதனை அறிக்கை சொன்னது.

பானுமதி போன பின்பு மீண்டும் நான் தனித்தது போல உணர்ந்த நாள் அது.

லாஸ் இறந்த நாலாம் மாதம் அவரின் வக்கீலிடம் இருந்து எனக்கொரு கடிதம் வந்திருந்தது.

லாஸின் சொத்துகளில் மூன்றில் ஒரு பங்கு எனக்கு எழுதப்பட்டிருந்தது.

ஒரு பகுதி அவரிடம் இருந்து விவாகரத்துப் பெற்றுச் சென்ற மனைவிக்கு. மறு பகுதி அவரின் இரண்டு பிள்ளைகளுக்கும். அடுத்த பகுதி எனக்கு.

நான் விரும்பும் வகையில், அவர் பெயர் சொல்லாமலேயே கஷ்டப்படுகின்ற மக்களுக்கு உதவி செய்யச் சொல்லியிருந்தது.

இலங்கை நாணய மதிப்பீட்டின்படி 96 இலட்சத்து 88 ஆயிரத்து 32 ரூபாய்கள்.

கைநிறையப் பூ வேண்டிக் கொண்டு போய் லாஸின் சவக்காலையில் வைத்து அன்று முழுக்க அழுது கொண்டே இருந்தேன்.

அடுத்தநாளே பானுமதியின் ஒரேயொரு முத்துச்சங்கிலியை மட்டும் பேத்திக்கு எடுத்து வைத்து விட்டு மிகுதி அனைத்து நகைகளையும் பணமாக்கி லாஸின் காசுடன் இணைத்துக் கொண்டேன். கிட்டத்தட்ட அது இரண்டு மடங்காகியது.

லாஸின் மரணமும் அதன் பின்னான அவரின் உயிலும் என்னில் இத்தனை பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என நான் எண்ணியிருக்கவே இல்லை.

இப்போதும் என் மேசைமீது லாஸிற்காக வேண்டி வந்த அந்த ஐந்து யானைகளும் வரிசையாக போய்க் கொண்டு இருக்கும். அதன் மேல் அவர் கம்பீரமாய் அமர்ந்திருந்து என்னை வழிகாட்டுவது போலத் தெரியும்.

அதேவேளை நானும் ஒரு தனிப்பிணமாக லாஸ் போல ஆகி விடக்கூடாது என என் மனத்தினுள் நினைத்துக் கொள்வேன்.

ஒரு நாள் மகளிடமே சொன்னேன், "அப்பா போனபிறகு உந்த கல்வெட்டு அது இது எல்லாம் செய்ய வேண்டாம்... ஆனால் நான் இருக்கும் பொழுது தினசரி ஒரு நிமிடம் என்னை சுகம் விசாரி" என்று.

"ஏனப்பா.... நீங்கள் என்னை அழைத்து கதைக்கலாம் தானே?"

"தினமும் வேலைப்பிரச்சினைகளை வீட்டுக்கு தூக்கி கொண்டு வந்து தலையிடிப்படுற உனக்கும் மருமகனுக்கும் நானும் தலையிடி கொடுக்க விரும் பேல்லை... வேலைக்கு போய்விட்டு வந்து விட்டு கொம்மாவிலை நானே சிலவேளை எரிஞ்சு விழுந் திருக்கிறன். அதனால் நீ ஓய்வாக இருக்கும் பொழுது நீயாக என்னை அழை! பிள்ளையை நான் குழப்பேல்லை என்ற திருப்தியும் எனக்கு இருக்கும். என்ரை பிள்ளை என்னிலை அக்கறையாய் இருக்கு என்ற சந்தோசமும் எனக்கு இருக்கும்"

"அப்பா... அப்பா..."

***



லாஸின் மரணம் என்னுள் பல மாற்றங்களை தந்து நல்ல பல காரியங்களை செய்ய வழி காட்டி னாலும் அவரின் பிரிவு ஏதோ வகையில் வெறுமையை கொடுத்து விட நான் சமுதாயத்தில் இருந்து அதிகமாக ஒதுங்கி ஒதுங்கிப் போவது போல நானே உணரத் தொடங்கினேன்.

முந்தி என்றால் கோயில்கள்... சங்க கூட்டங்கள் என்று பொது விடயத்தில் நானும் பங்கு பற்றி எனது தொழில் சார்ந்த அனுபவம் தந்த அறிவை வைத்து பலருக்கு உதவி செய்வேன்.

கேள்வியின் விடையும் செல்லும் வழியும் தெரிந்தவர்கள் கூட என்னிடம் ஒரு தடவை தங்கள் மனத்திருப்திக்காக ஆலோசனை பெற்றுவிட்டுச் செல்வார்கள்.

சிலர் பதிலுக்கு நன்றி சொல்வார்கள்.

சிலரை அதற்குப் பிறகு காண்பதேயில்லை.

சிலர் நாடு மாறியிருப்பார்கள்.

பின்பு சந்திக்கும் பொழுது, "அண்ணை அவசரத்திலை போனதாலை உங்களுக்கு சொல்லாமல் போய்விட்டம்" என மனம் அறிந்த ஒரு பொய்யை மழுப்பல் சிரிப்புடன் சொல்வார்கள்.

நானும் மௌனமாக அதனை ஏற்றுக் கொள்வேன்.

நானும் எதையுமே சட்டை பண்ணாமல் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் எல்லோருக்கும் உதவி செய்து கொண்டு போய்க் கொண்டு இருப்பேன்.

பானுமதி இருந்த பொழுது ஊர்நாட்டாமை என்றும் விதானையார் என்றும் பகிடி பண்ணுவாள்.

பல பொது விடயங்களில் அட்டவணைப் படுத்தப்படாத சில நிகழ்ச்சி நிரல்களும் நடைமுறைப் படுத்தலும் இருந்தபோதுதான் ஐந்து வருடத்துக்கு ஒருமுறை மட்டும் வராத பல அரசியல்களும்... யாப்பில் இல்லாத சட்ட திட்டங்களும் எங்கள் சமுதாயத்தினுள் மலிந்து இருக்கிறது என்று புரியத் தொடங்கியது.

இந்தப் புரிதல் எனக்கு வந்த பொழுது பல விடயங்களில் இருந்து விலகத் தொடங்கினேன்.

கேள்விகளுக்கு பதில் மௌனம் அல்லது புன்சிரிப்பு என்ற பொழுது பேர்லின் சுவரில் தலையைக் கொண்டு போய் மோதுவதில் பலன் இல்லை எனப் புரிந்து கொண்டேன்.

"அண்ணை" என்ற முகத்துதிக்கும் "அறிவுரை சொல்ல வந்திட்டார்" என்ற முதுகுதுதிக்கும் அதிக இடைவெளி இல்லை என பல சந்தர்ப்பங்கள் எனக்கு புரிய வைத்தது.

அப்போது எதுவுமே வேண்டாம் என சமுதாயத்தில் இருந்து ஒதுங்கிய பொழுதுதான் சிவனேசனின் மரணம் வந்து என் வீட்டுக் கதவைத் தட்டியது.

***

சிவனேசன். வயது 45. இருபது வருடங்களுக்கு முதல் டென்மார்க்கிற்கு வரும் பொழுது வயது 25.

யாரோ ஒரு தாய் - தகப்பன் ஆண்பிள்ளை பிறந்த சந்தோசத்தில் கூரைதட்டிப் பிறந்த பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும்.

ஆனால் உடல்வளர்ந்தளவுக்கு அவரின் மனம் வளர்ந்திருக்கவில்லை. அல்லது மனத்தினுள் சூதுவாது குடி கொண்டிருக்கவில்லை.

அரச சட்டத்தின்படி அவருக்கு பண உதவி கள் என்றாலும் சரி மற்ற எந்த உதவிகள் என்றாலும் அதிகமாகவே கிடைத்தது.

அதனால் அவரைச் சுற்றி நண்பர்களும் அதிகம்.

இளைஞர்கள் எல்லோருக்கும் சனி, ஞாயிறு தங்குமடம் அவர் வீடுதான்.

வெள்ளி இரவில் டிஸ்கோ ரெக்குக்கு செல்வதில் தொடங்கும் திருவிழா ஞாயிறு மாலை வரை அல்லது திங்கள் காலைவரை தொடரும்.

சாப்பாடு... தண்ணிவெண்ணி.. நீலப் படங்கள்...

எல்லோரின் இழுவைக்கும் சிவனேசனும் சேர்ந்து இழுபடுவார். பல சந்தர்ப்பங்களில் அவரின் மணிப்பேர்சும் சேர்ந்து இழுபடும்.

பின்பு அவரின் வட்டத்தில் இருந்த ஒவ்வொரு வருக்கும் ஊரில் இருந்து கல்யாணம் பேசிப் பெண்கள் வர ஒவ்வொருவராய் கழன்று அவரவர் தம் தம் மனைவி பிள்ளைகள் குடும்பத்துடன் சமூகநீதி கதைத்து வெள்ளிக் கிழமைகளில் கோயில்களுக்குப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

சிலர் கோயில் அறங்காவல்சபையின் இன்றைய பிரதான உறுப்பினர்கள்.

மாற்றம் ஏற்படுவதில் தப்பே இல்லை.

ஆனால் எல்லோரும் சிவனேசனை மறந்தே விட்டார்கள். நண்பர்கள் குடும்பமாகக் கூடும் போது அவர் அழைக்கப்படுவதில்லை.

"இது பமிலி விழா"

"அந்த ஆளுக்கு எங்கடை மனிசிமாரோடை ஒரே அலட்டுறது என்றால் ஒரு புளுகம்."

"தனிய இருக்கிற ஆள் எந்த டெனிஷ்காரி யோடை போய் என்ன வருத்தத்தைக் கொண்டு வறாரோ" என சின்ன சின்ன அடிமட்டத்தால் ஆளுக்கால் கோடு போடு போட்ட பொழுது அவர் விளையாட்டு மைதானத்துக்கு வெளியேதான் நிற்க வேண்டி வந்தது.

எப்போதாவது நானும் பானுமதியும் கடை தெருவால் சாமான்கள் வேண்டிவரும் போது சந்தித்தால் அதிகநேரம் நின்று கதைப்பார்.

சிலவேளை, "உங்கடை பகுதியிலை நல்ல பொம்பிளைப் பிள்ளையள் யாரும் இருந்தால் பாருங்கோ" என்பார்.

நானும் பானுமதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வோம்.

"ஆம்" என்ற பொய்யான தலையாட்டலுடன் விடை பெற்றுக் கொள்வோம்.

பின்பு அவரை மறந்து விடுவோம்.

அப்படித்தான் காணும் போது கதைப்பதும் பின்பு மறந்து போகும் உறவாயே அவர் உறவு இருந்தது.

ஒரு வருடம் போய் இருக்கும்!

வீட்டுவாசலில் கல்யாணப் பத்திரிகையுடன் வந்து நின்றார்.

அவரின் கண்கள் சிரித்தது.

இலங்கையில் இருந்து அடுத்த வெள்ளி பெண் வருவதாயும் அதற்கடுத்த சனி திருமணமும் என அழைப்பிதழை நீட்டினார்.

வீட்டுக்குள் வரச்சொல்லி தேநீர் கொடுத்து நானும் பானுமதியும் ஆசீர்வதித்தோம்.

பானுமதி என்னை உள்ளே அழைத்து கதைத்து விட்டு அவர் புறப்படும் பொழுது எனது ஒரு புதுச் சேட்டையும் அவளது ஒரு புதுச்சேலையையும் அன்பளிப்பாகக் கொடுத்தாள்.

அவர் மிகவும் அகமகிழ்ந்தார்.

"அவான்ரை நிறத்துக்கு இந்தச் சேலை நல்ல எடுப்பாய் இருக்கும்", சொல்லிக் கொண்டே படியில் இறங்கிப் போனது இப்போதும் என் கண்களுக்குள் நிறைந்து இருக்கின்றது.

அடுத்த வெள்ளி அதிகாலை கையில் பூங்கொத்துடன் போய் விமான நிலையத்தில் காத்து நின்றிருக்கின்றார்.

பெண் வரவில்லை.

இலங்கையில் இருந்து அவரின் உறவினர்கள் பெண் விமானத்தில் ஏறினார் என உறுதிப்படுத்தினார்கள்.

பின்புதான் தெரிந்தது.

பெண் ஜேர்மனியில் ரான்சிற்றில் வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அங்கு ஒழுங்கு செய்யப்பட்ட ஒருவருடன் சென்று விட்டார் என்று.

அதேவருடம் கழுத்தில் தாலியுடனும் காலில் மெட்டியுடனும் அந்தப் பெண்ணை யாரோ ஜேர்மன் ஹம் அம்மன் கோயிலில் கண்டார்களாம்.

சிவனேசனின் டென்மார்க் பதிவு இந்த நாடகத் துக்கு துணைபோயிருக்கு.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னால் அவரையோ அதனை நடத்தி வைத்த நபரையோ நான் காணவே யில்லை.

வீடுதேடிப் போய் துக்கம்(?) விசாரிக்கும் அளவுக்கும் நான் போகவில்லை.

பின்பு பானுமதியும் போய்விட நானும் என் வாழ்க்கையும் என்றாகி விட்டது.

***

இன்று அவர் லாஸ் போல தனது வீட்டினுள் இறந்து போயிருக்கின்றாராம்.

வெளிநாட்டில் உள்ள எல்லாச் சகோதரங்களும் குழறி அழுகிறார்களாம் அவரின் இறுதிக் கிரியை சிறப்பாகச் செய்ய வேண்டுமாம்.

ஆனால் டென்மார்க்கில் ஒருவரின் பொறுப்பில் தான் அனைத்தும் நடக்க வேண்டும். அதுதான் டென்மார்க்கின் சட்டம்.

அல்லது அனாதை போல் இறந்தவரை யாரும் பார்க்க டென்மார்க் அனுமதியாது. அனாதைப் பிணம் என அடக்கம் செய்து விடும்.

யாரால் நான் பரிந்துரைக்கப்பட்டேனோ தெரியாது. ஆனால் என் கழுத்தில் மணியைப் பூட்டி விட்டார்கள்.

வெள்ளி மாலை சந்தித்து திங்கள் காலை வரை அவருடன் விழித்திருக்கும் நட்புப் பாராட்டும் அவரின் நண்பர்கள் பட்டாளம் யாரையும் நான் காணவில்லை.

திருமணம் நிச்சயித்து அவரை வாழ்நாள் எல்லாம் பிரமச்சாரியாக வாழ வைத்த அந்தப் பெருந்தகையையும் காணவில்லை.

சிவனேசனின் அலுவல்களை நான் கவனித்துக் கொண்டு இருந்தேன்.

சவக்காலை ஒழுங்கு... ஐயர் ஒழுங்கு... ஓதுவார் ஒழுங்கு... எங்கு எரிப்பது ... யாருக்கு சாம்பல் அனுப்புவது... என்ன நிறப் பெட்டியுள் அவரைக் கிடத்துவது... என்ன நிறப் பூக்களால் பெட்டியை அலங்கரிப்பது... அனைத்தும் அவரின் பிறநாடுகளில் வசித்திருந்த சகோதரங்களுடன் தொலைபேசியில் கதைத்தபடியே நான் செய்து கொண்டிருந்தேன்.

நேற்றுத்தான் சவ அடக்கம்!
எங்கள் நகரமே கூடியிருந்தது.
ஆளுக்கால் கண்ணீர் அஞ்சலிகள்.
"பழுத்த தோலும்
உளுத்த நரம்பும்
இழுத்துக் கட்டிய கூடடா?"
ஓதுவார்கள் உச்சஸ்தாயியில் பாட அனைவரின் கண்களாலும் கண்ணீர் ஓடியது.

பின்பு சுண்ணம் இடித்தல்... வாய்க்கரிசி போடல்... கொள்ளி வைத்தல் என அனைத்தும் நிறைவேற வெளிநாட்டில் இருந்து வந்த அவரின் சகோதரங்கள் அனைவரும் அவரின் பெட்டியைக் கைத்தாங்கலாகக் கொண்டு சென்று வானில் வைக்க அது மெல்ல ஊரத் தொடங்கியது.

உரும்பிராயில் முகவுரை எழுதப்பட்ட சிவனேசன் என்ற ஒரு அப்பாவியின் சிறுகதை எந்தப் பெரிய திருப்பங் களும் இன்றி... கிளைக்கதைகள் இன்றி டென்மார்க்கில் முடிவுரை எழுதப் பெற்று முடிந்தாயிற்று.

***

அடுத்த நாள் அவரது சகோதரர்களும் சவக்கிரியை செய்த அதிகாரியும் நானும் சவக்கிரியை செய்த நிறுவன அலுவலகத்தில் சந்திப்பது என்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மரணவீட்டுக்கணக்கு வழக்கு எதுவுமே பாக்கி இன்றி மரணசடங்கு அதிகாரிக்கு செலுத்தப்பட்டது.

அனைவருமே எனக்கு நன்றி சொன்னார்கள்.

சிவனேசனின் அனைத்து உடமைகளும் சகோதரர்களிடம் கையளிக்கப்பட்டது.

மரணச்சடங்கில் கலந்து கொள்ள முடியா திருந்த அவரின் மூத்த சகோதரியிடம் தொலைபேசி யில் அவர்கள் தொடர்பு கொண்டு அவரின் பொருட் களை என்ன செய்வது என்று கேட்டார்கள்.

எல்லாத்தையும் சவக்காலை அதிகாரியிடமே கொடுத்து அதனையும் எரித்து விடும்படி சொல்லப் பட்டது.

சவக்காலை அதிகாரியும் ஒத்துக் கொண்டார்.

அதனுள் பானுமதி கொடுத்த எனது புதிய சேட்டும் அவளது புதிய சேலையும் இருந்தது.

எனக்கு கண்கள் கலங்கின.

மீண்டும் எனக்கும் சவக்காலை அதிகாரிக்கும் அவர்கள் நன்றி சொல்லி விட்டு கதிரைகளில் இருந்து எழும் சமயம் இலண்டனில் இருந்து மீண்டும் தொலைபேசி அழைப்பு வந்தது.

"தம்பியன் ஒரு பவ்ண் சங்கிலி போட்டிருந் தவன். அதை மட்டும் அவன்ரை ஞாபகமாய் எனக்கு அனுப்பி விடுங்கோ"

சவக்காலை அதிகாரி கொடுத்த பொருட்களில் அது இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் என்னையும் சவக்காலை அதிகாரியையும் பார்த்த பார்வையில் நான் குறுகி நின்றேன்.

என்னதான் ஒதுங்கி ஒதுங்கி இருந்தாலும் வீட்டின் வாசலில் வந்து பிரச்சனைகள் கதவைத் தட்டும் பொழுது என்ன செய்ய முடியும்.

கொஞ்சக் காலமாக எதுவுமே எனக்குப் பிடிப்பதில்லை.

ஆண்டுக்கொருமுறை தொலைக்காட்சிகளில் வாசிக்கப்படும் கண்ணீர்க் கவிதைகள்... வீர முழக்கங்கள்.... நாள் முழுக்க சோக இசைகள்... கருத்தாடு களங்கள்... இடைவேளையின் பொழுது கோச்சடையானின் விளம்பரங்கள்.... இது எதுவுமே எனக்குப் பிடிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபச்செல்வனின் 2 கவிதைகள்

சிறுமியைத் தேடும் காகம்

ஆழ் கடலிடியில் அமிழ்த்தப்பட்ட
காற்று நிரம்பிய பலூனைப் போலொரு
இருதயத்தோடிருக்கும் சிறுமி
தன் குரல்களை தானே நசிக்கிறாள்

பறிக்கப்படாத உண்ணிப் பழங்களை
உண்ணும் வண்டுகள் உனைத் தேடுகின்றன
நாவற் தடிகளால் அடித்து
வகுப்பெடுக்கும் செடிகள் வாடிப்போயிருக்கின்றன

குழந்தைகள் காணாமல் போகுமொரு தேசத்தில்
இனி என்னதான் இருக்கும்?

எனது தேசத்தின் குரலாயிருந்த சிறுமியே!
முன்பு குழந்தைகளுக்குச் சவப்பெட்டிகள்
விற்கப்பட்ட நகரில்
இப்போது சிறைச்சாலைகள் திறக்கையில்
எப்படி உனக்கு ரிப்பன்கள் வாங்கித் தருவேன்?

அண்ணாவுக்காக அழுதது குற்றமெனவும்
அவனைத் தேடியது தண்டனைக்குரியதெனவும்
உன்னையும் கடத்துகையில்
நீயும் காணாமல் போகிறாய்
காணாமல் போய்விட்டன பள்ளிக்கூடக் கதிரைகளும்

அண்ணாவோடு ஓடிப் பிடித்து விளையாடவும்
அம்மாவின் உணவுகளை தட்டிப் பறித்து உண்ணவும்
வளர்க்கப்பட்ட கனவுகள்
அனுமதிக்கப்படாத தேசத்தில்
உனக்கொரு பந்து கொடுத்திருக்கிறார்கள்

சிறைவைக்கப்பட்ட அம்மாவைத் தேடி
நடு நிசிகளில் எழுந்து குந்தியிருந்து
அழுமுன் குரலை திருகிவிட
நள்ளிரவில் திக்கிட்டுக் கத்துகிறது ஊர்க்குருவி

உனைச் சுற்றி நிற்கும் படைகள்
பொம்மைகளே தம்மிடம் இருக்கின்றதெனச்
சொல்கையில்
உன்னை எப்படி விடுவிப்பதெனத்
துடிக்கிறது உன் பொம்மை

பனியுறைந்த வயல்களைக் கடந்து
பழங்களை வீழ்த்த வீரமரங்களுக்கு
தடியெரிந்து செல்லுகையில்
நீ கதை பேசிய காகமொன்று
தனியே கரைந்து இந்த நகரத்தை அதிரச்செய்கிறது.

நான் பேசுவேன்

எதுவும் நடக்கலாம் என்பதற்காய்
எதுவும் பேசப்படலாம்
பின்னர் எதுவும் நடக்கலாம்
கறுப்பை வெள்ளை நிறமென்று சொல்லக்கூடும்

துயர்க்காலத்தில் வசந்தம் பொழிகிறது என்று
சொல்லக்கூடும்
யாரோ தலைவன் எனவும்
யாரோ காவலன் எனவும்
ஆக்கிரமித்திருப்பவர்களை பாதுகாவலர்கள் எனவும்
சொல்ல
கொடுநரகத்தை சுவர்க்கம் எனவும் சொல்லவும்கூடும்

நாங்கள் சுகதந்திரமாக நடத்தப்படுகிறோம்
என்று கணந்தோறும் சொல்லவும் கூடும்
சொல்லிக் கொடுப்பனைகளை சொல்ல நேரிடுவதுடன்
காலத்திற்கு ஏற்பவும் சிலர் சொல்லவும் கூடும்

கவிஞர்கள் தலைமறைவாயிருக்கும் காலத்தை
ஒரு மகா உன்னத காலத்தில்
வசிக்கிறோமென்று சொல்லுகையில்
நீ என்ன உணர்வாய்?

கவிதைகள் எழுதப்படாத காலத்தில்
சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கும்
உனது செவி எப்படியானது?

நான் கண்டேன்
அவர்கள் ஒரு கவிஞனை
பத்துக் காசுக்காக விலைக்கு வாங்கினர்
அவர்களுக்காக சொற்களை
வளைத்துக்கொண்டிருக்கும்
அவன் கவிஞன் இல்லை என்றனர் சனங்கள்

சொற்களற்றுப் போயினர் எனது சனங்கள்
ஆனால்
நான் பேசுவேன்
எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோமென
ஏனெனில் நாம் முகங்களற்றுப் போக இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியனார்டோ டாவின்சி
பொற்காலத் தூரிகை

ஈழக்கவி



மறுமலர்ச்சி (Renaissance) இலட்சியத்தின் சார்பான பிரபஞ்சமனிதன் (Universal man) என்ற கருத்து லியனார்டோ டாவின்சி (Leonardo da vinci - 1452-1519) இன் கலைப்படைப்புக்களில் ஒளிர்ந்தது. டாவின்சியின் "விட்ருவிய மனிதன்" மறுமலர்ச்சிக் காலத்தின் கலை அறிவியல் ஆகியவற்றின் கலப்புக்கு ஒரு உதாரணம் ஆகும். ஏனெனில் அதற்கு முந்திய காலத்தை விட மறுமலர்ச்சி யுகம் புதிய மனித யுகத்தைப் பிரதிபலித்தது. இக்காலப்பகுதியில் மனிதனின் அறிவியல் தேடல்கள் மிகத்தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

பேட்ரண்ட் ரஸல் (Bertrand Russell; 1872 - 1970) குறிப்பிடுவது போல் மறுமலர்ச்சியின் சிறந்த சிருஷ்டிகள் அறத்தின் வரம்புக்கு வெளியே இருந்தன. அது மிகச்சிறந்த மனிதனை உற்பத்திச் செய்தது (It produced very great men). மறுமலர்ச்சி கலாசாரம் மத்திய சமய ஒடுக்கத்தில் இருந்து அறிவியல் மனிதனை விடுதலைச் செய்தது (A History of vestern Philosophy; 1945: 503). பிரபஞ்ச மனிதனின் தேடல்களில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியே மறுமலர்ச்சியை மலர்வித்தது. ஐரோப்பிய மறுமலர்ச்சியின் முதல் வித்து இத்தாலியிலேயே வெளிப்பட்டது. இதுபற்றி பிரெடெரிக் ஏங்கல்ஸ் "இயற்கையின் இயக்கவியல்" (1969: 37) நூலில் பின்வருமாறு எழுதுகின்றார்.

> பைஸான்திய சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் ரோமாபுரியின் இடிபாடுகளிடையே இருந்து தோண்டியெடுக்கப்பட்ட பண்டைய சிற்பங்களும் மேற்கு நாடுகளைத் திகைப்பிலாழ்த்தும் படியான ஒரு புதிய உலகத்தை, பண்டைய கிரேக்க உலகத்தை வெளிப்படுத்தின. அதனுடைய ஒளிபொங்கும் வடிவங்களின் முன்னே மத்திய காலத்தின் (Middle Ages) ஆவிக் கணங்கள் மறைந்தொழிந்தன. கலைகளின் மறுமலர்ச்சியில் கற்பனைக்கும் எட்டாத சிகரங்களை இத்தாலி எட்டிப்பிடித்தது. ஆதாரச் சிறப்பெய்திய பண்டைக் காலத்தின் பிரதிபிம்பம்போல் அது இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனவே, மறுமலர்ச்சி என்பது அதற்கேயுரிய அர்த்தத்தில் இத்தாலியிலேயே தோன்றியது. இத்தாலிய மறுமலர்ச்சியின் பொற்காலத்தை ஜியார்ஜியோ வாஸரி (Giorgio Vasari ; *1511 – 1574)* என்ற இத்தாலிய ஆய்வாளர் மூன்றாகப் பிரித்தார். அவையாவன,

முதல் பொற்காலம்:

ஜியேட்டாவும் பிஸானோவும் வாழ்ந்த காலம்.

இரண்டாம் காலம்:

டொடெல்லோ மசோக்கியோ வாழ்ந்த காலம்.

மூன்றாம் பொற்காலம்:

லியனார்டோ டாவின்சி, ரபேல், மைக்கேலேஞ்சலோ

ஆகியோர் வாழ்ந்த மூன்றாவது பொற்காலமே கலை முழுமை தன் சிகரத்தை அடைந்த காலமாகும்.

ரபேலும் மைக்கேலேஞ்சலோவும் தெய்வீக அருள் பெற்ற கலைஞர்கள்தான் என்று குறிப்பிடும் ஜியார்ஜியோ வாஸரி, இவர்களை இம்மண்ணில் காலூன்றி நின்ற நல்ல தொழில் கலைஞர்கள் என்றளவில் மட்டுமே ஏற்றுக்கொண்டார். ஆனால் லியனார்டோ டாவின்சியை அதைவிட உயர்நிலையில் வாஸரி "பிரசித்தி பெற்ற இத்தாலியக் கட்டிடக் கலைஞர்கள் ஓவியர்கள் சிற்பிகள்;(Lives of the Most Excellent Painters, Sculptors and Architects; Italin Language – *1568* ; Published in English - *1908)* என்னும் நூலில் மிகை உணர்வுடன் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

> சொர்க்கம் அடிக்கடி தன் அரிய பொக்கிஷங்களை மனிதர்கள் மீது பொழிவதுண்டு. அபரிதமான அழகை சில மனிதர்கள் மீது அள்ளி வழங்கியதுண்டு. சொர்க்கத்தின் பேரழகாய்ப் பரிணமித்தவன்தான் லியனார்டோ டாவின்சி. இது வெறும் புகழ்ச்சி இல்லை. டாவின்சியின் நெஞ்சுரமும் நிமிர்ந்த பார்வையும் பேரழகும் நம்மால் வர்ணிக்க இயலாது. அவன் எதைச் செய்தாலும் அது பேரழகாய் விளங்கியது. அதில் தெய்வீக மணம் கவிந்தது. லியனார்டோ தான் வாழுங்காலத்திலும் இறந்த பின்னும் பேரும் புகழும் அடைவான். இது உறுதி.

விமர்சகர் வாஸரி மட்டுமல்ல அவர் காலத்தில் வாழ்ந்த சிற்பிகள் ஓவியர்கள் அனைவருமே இப்படி ஆச்சரியம் கொள்ளும் விதத்தில்தான் லியனார்டோவை வர்ணிக்கத் தொடங்கினர் என்று "லியனார்டோ டாவின்சி" *(1991:6)* என்ற நூலில் "தேனுகா" குறிப்பிடுகின்றார். இத்தகைய வர்ணிப்புகள் அறிவியல் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டவை.

லியனார்டோ டாவின்சி பிரபஞ்சத்தை தர்க்கக் கண்கொண்டு பார்க்கப்புறப்பட்ட முதல் இத்தாலியக் கலைஞர். மெய்யியல், ஓவியம், சிற்பம், உயிரியல், கட்டிடக்கலை ஆகிய எல்லா பிரிவிலும் அவருடைய ஆளுமை பரந்து விரிந்திருந்தது. பிரெடெரிக் எங்கெல்ஸின் மொழியில் சொல்வதானால் லியனார்டோ டாவின்சி ஒரு மகத்தான ஓவியக் கலைஞன் மட்டுமல்ல அவன் கணிதவியல் இயந்திர அமைப்பு பொறியியல் ஆகிய துறைகளிலும் ஒரு மேதை; பௌதிகவியலின் பல்வேறு கிளைகளும் அவனுக்கு முக்கியமான கண்டு பிடிப்புக்களால் கடமைப் பட்டுள்ளன *(1969:38).*

லியனார்டோ டாவின்சியின் வாழ்க்கை வாஸரியின் "விட்டே" என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் விபரிக்கப்பட்டுள்ளது. லியனார்டோ இத்தாலியில் "வின்சி" என்னும் கிராமத்தில் *1452* ஆம் ஆண்டு ஏப்ரல் *15*ம் நாள் பிறந்தார். ஸெர் பியரோ தன் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்த பணிப்பெண் கேடரினாவுடன் ஏற்பட்ட தொடர்பில் பிறந்தவர் தான் லியனார்டோ டாவின்சி. ஸெர் பியரோ டாவின்சியை சட்டப்பூர்வ மகனாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஸெர் பியரோ தான் திருமணம் செய்து கொண்ட மூன்றாவது பெண்மூலம் பிறந்த பிள்ளைகளே சட்டப்பூர்வ பிள்ளைகளாயிருந்தனர்.

இவரது காலம் ஐரோப்பாவில் நவீன பெயரிடு முறை நடைமுறைக்குவர முன்பாகும். இதனால் இவரின் முழுப்பெயர் "லியனார்டோ டி செர் பியெரோ டா வின்சி" என்பதாகும். இது "வின்சியைச் சேர்ந்த பியரோவின் மகன் லியனார்டோ" என்ற பொருளுடையது. இவர் தன்னுடைய ஆக்கங்களில் "லியனார்டோ" அல்லது "நான் லியனார்டோ" (Io,Leonardo) என்றோதான் கையெழுத்திட்டார். இதனால் இவரது ஆக்கங்கள் பொதுவாக "டா வின்சிகள்" என்றில்லாமல் "லியொனார்டோக்கள்" என்றே குறிப்பிடப்படுகின்றன. இவர் ஒரு முறைதவறிப் பிறந்த பிள்ளை என்பதால் தந்தை பெயரை பயன்படுத்த விரும்பவில்லை என்று கருதப்படுகின்றது.

லியனார்டோவிற்கு ஐந்து வயதாகும் போது தாய் கேடரினா பண்ணையாளன் ஒருவனுடன் குடும்பம் நடத்தினாள். லியனார்டோ தன் தாத்தா வீட்டில் தன்னுடைய தந்தையுடனும் தந்தையின் மனைவி அல் பீரியாவுடனும் வசித்து வந்தார்.

*1493*ம் ஆண்டு தாய் கேட்டரினாவை அழைத்தார் லியனார்டோ. அவருடன் வாழ்ந்த தாய் இரண்டாண்டுகளில் இறந்து போனார். அவரின் இளமைக்கால வாழ்வு துயர் சூழ்ந்ததாகவும் சோதனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிக்கதாகவுமே அமைந்திருந்தது.

சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud), "Leonardo Davinci and A Memory of His child hood" (1910) என்ற முக்கியத்துவம் பெற்ற உளவியல் கட்டுரையில் டாவின்சியைப் பற்றியும் அவருடைய குழந்தைப்பருவ நினைவுகள் பற்றியும் பகுப்பாய்வு செய்துள்ளார்.

"நான் தொட்டிலில் இருந்த போது
பட்டம் ஒன்று அதன் வாயால்
எனது வாயை திறந்து
என் உதடுகளில் பலமுறை அடித்தது"

"1493ம் ஆண்டு ஜூலை 16ம் நாள்
கேட்டரினா வந்தாள்.
1504ம் ஆண்டு ஜூலை 9ம் திகதி
புதன்கிழமை 7 மணிக்கு ஸர்பியரோ இறந்தான்."

டாவின்சி பதிவு செய்திருந்த குழந்தைப்பருவ நினைவுகள் பற்றிய இதுபோன்ற குறிப்புகளை தன்னுடைய உளவியல் ஆய்வுக்கான முக்கிய ஆவணமாக பிராய்ட் பயன்படுத்தினார். சிறுவயதில் தாய் இல்லாத சூழலில் வளர்ந்ததால் லியனார்டோ விற்கு எதனையும் கூர்மையுடன் அணுகும் அறிவைத் தந்தது என்று சிக்மண்ட் பிராய்ட் குறிப்பிடுகின்றார் (இது பற்றி மேலும் அறிய பார்க்க, The Complete Psychological works of Sigmund Fread; v.xi; London; *1910*; P. *63-137).*

லியனார்டோவின் இளமைக்காலம் குடும்பப் பண்ணையிலேயே கழிந்தது. சுற்றியிருந்த கழனிகளையும் பாய்ந்தோடும் அருவிகளையும் சுதந்திரமாக அனுபவித்தார். இயற்கை காட்சிகளை அனுபவிப்பதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டினார். கூடுகளில் அடைக்கப்பட்டிருந்த பறவைகளைச் சந்தைகளில் விலைகொடுத்து வாங்கி, அப்பறவைகளை சுதந்திரமாக பறக்கவிட்டுப் பார்த்து மகிழ்ந்தார். மேலும் அப்பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதனை நுணுக்கமாக அவதானித்தார்.

டாவின்சி சிறுவனாக இருந்தபோது, "பிளாரன்ஸ்" நகரம் மனிதப் பண்பாட்டின் மையமாகத் திகழ்ந்தது. பிளாரன்சில் இருந்த "பொட்டிகா" எனும் கலைப் பட்டறைதான் அவருக்கு மெய்யியல், செய்முறை வழிகளிலும் வழிகாட்டியாய் அமைந்தது. இப்பட்டறையில் தான் டாவின்சி கலைக்கும் அறிவியலுக்குமான தர்க்கச் சிந்தனைகளை அறிந்துக் கொண்டார்.

பிளாரன்சின் கலைப்பட்டறையில் மிகவும் குறிப்பிடத்தக்கது வெர்ரோசியோ (Verrocchio) இன் "பொட்டிகா" பட்டறையாகும். வண்ணத்தையும் ஒளியையும் வேறு படுத்திக்காட்டும் முப்பரிமாணத் தோற்றம் கொண்ட புதுவிதமான ஓவியம் முகிழ்த்தெழுந்த காலம் இக்கலைப் பட்டறையின் காலம் எனலாம். 1469ம் ஆண்டு வெர்ரோசியோவின் மாணவராகச் சேர்ந்தார். வெர்ரோசியோ ஓவியரும் சிற்பியுமாவார். அவரிடம் டாவின்சி ஏழாண்டுகள் கற்றார். பொட்டிகா பட்டறையில் இருந்தபோது, "மாகியைத் தொழுதல்" எனும் அழகுமிகு தேவதை ஒன்றின் ஓவியத்தை டாவின்சி வரைந்தார். தன் மாணவனின் உயிர்துடிப்பான இவ்வோவியத்தைக் கண்ட வெர்ரோசியோ ஓவியம் வரைவதையே கைவிட்டு விட்டார். பிளாரன்சில் தங்கியிருந்த போது பொட்டிகா பட்டறையின் தேர்ந்த பொறியியலாளராகவும், சிறந்த கலைஞனாகவும் விளங்கினார்.

1482ம் ஆண்டில் பிளாரன்ஸ் நகரைவிட்டு மிலான் சென்றார். அங்கு டாவின்சி இலோடோவிகோ இஸ்பார்சா (Lodovico Sforza) என்பவரோடு இணைந்துக் கொண்டார். மிலானில் அவர் அரண்மனைப் படங்களை வரைந்தும், விழாக்காட்சிகளைக் கண்காணித்தும், பலவண்ண உடைகளுக்கு வடிவம் கொடுத்தும், போர்க்கருவிகளை அமைப்பதற்கு வழி காட்டியும், மாளிகையில் மைய வெப்பமூட்டும் சாதனத்தை உருவாக்கியும் தன் ஆற்றல்களை வெளிச்சப்படுத்தினார்

மிலானில் இருந்தபோது டாவின்சி "இறுதி இராவுணவு" (The last Supper) என்ற புகழ்மிக்க ஓவியத்தைத் தீட்டினார். இவ்வோவியத்தை இவர் மெல்ல மெல்ல ஈரமான சுவரில் வண்ணங்களில் வரைந்தார். இந்த ஓவியம் இயேசுவின் வாழ்க்கையில் நடந்தமுக்கியமான தொரு நிகழ்வைச் சித்திரமாகக் காட்டுகிறது. துறவியரின் உணவறையில் அமைந்த இந்த ஓவியம் இயேசு தம் சீடர்களோடு உணவருந்துவதைச் சித்திரிக்கிறது. தம் சீடர்களில் ஒருவர் எதிரிகளோடு சேர்ந்துக்கொண்டு தம்மை காட்டிக்கொடுக்கப் போகிறார் என்று இயேசு கூறியது எல்லோருக்குமே பேரதிர்ச்சியாக இருந்தது. அந்த அதிர்ச்சியில் ஒவ்வொரு சீடரின் உள்ளத்திலும் எத்தகைய உணர்வுகள் எழுந்தன என்பதை லியனார்டோ சித்திரிக்கிறார். ஒரு சுவரில் வரையப்பட்ட ஓவியமாயினும் அது முப்பரிமாணம் கொண்ட வீட்டு அறைபோலப் பார்வையளிக்கிறது. இந்த ஓவியப்படைப்பு அனுபவ கருத்துருவாக்கப் பண்பைப் பெற்றிருக்கிறது. ஏனைய படைப்புக்களுடன் ஒப்பிடுகையில் லியனார்டோவின் கலைமேதமையின் சிகரமாகவும், பூரணத்துவம் பெற்ற படைப்பாகவும் அது காணப்படுகிறது. ஓவியத்தின் மையமான கிறிஸ்து நாதரின் உருவமைப்பும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போஸ்தலர்களது நுண்ணிய மனவுணர்வுகளும் தெளிவாக உணர்த்தப்படும் வகையில் சித்திரிக்கப் பட்டுள்ளது. இவ்வோவியம் மிகவும் சிதைந்த நிலையிலும் தலைசிறந்ததெனக் கருதப்படுகின்றது.

உலகியல் உண்மைகளின் முழுமதிப்பைத் தேட முனைந்தார் டாவின்சி. அதீத மாயப்புராணங் களில் அவர் நம்பிக்கை காட்டவில்லை. இதனால் அவருடைய ஓவியங்கள் உலகியல் சார்ந்த பொன்னொளித் தூரிகைகளாக பிரகாசித்தன. "மனித ஆளுமையின் பன்முகத்தான வளர்ச்சியே லியனார் டோவின் இலட்சியமாகயிருந்தது. அதனைப் பிரதி பலிப்பதே "பூரண மனிதன்" என்ற கருத்தாகும். ஓவியத்தின் முதன்மையை இயற்கை பற்றிய ஆய்வில் வற்புறுத்தும் லியனார் டோ "ஆழமான பார்வை" மூலம் புறஉலகின் நிறைப்பண்புகளை வெளிக்கொண்டு வருவதே ஓவியத்தின் நோக்கமென்கிறார். இங்கு "ஆழமான பார் வை" என்பது இறையியலாளர் கூறும் பௌதீகவதீத நிலைப்பாடல்ல. மாறாக உலகியல் சார் நோக்கே முதன்மைப்படுத்தப்படுகிறது; (பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா: 20ம் நூற்றாண்டுக்கான ஓவியக் கொள்கைகள்: 1994:69).

பாறைகளில் கன்னி, கன்னியும் புனித அன்னியும் முதலான ஓவியங்கள் டாவின்சியின் சிறந்த கலைப் படைப்புக்களாகும். "லிட்டா மடோனா" எனும் ஓவியத்தை பின்னாட்களில் இரண்டாம் ஜார் மன்னர் அலெக்சாண்டர் வாங்கி தன் பொக்கிஷமாகக் காத்தார். டாவின்சி வரைந்த "மோனாலிஸா", "லெடா" போன்ற ஓவியங்கள் அவருக்கு பெரும்புகழைச் சேர்த்தன. இவை மானுட வடிவங்களைத் தீட்டுவதில் மரபை மீறிய பாங்கினையும் மனித நேயத்தின் மீது டாவின்சி கொண்ட பேரழகினையும் காட்டுகின்ற ஓவியங்களாகும்.

19ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை மிகப் பிரபல்யம் அடைந்துவரும் "மோனாலிஸா" ஓவியத்திற்கு கிடைத்த புகழுரைகள் போல் உலகில் வேறு எந்த ஓவியமும் பெற்றதில்லை. இத்தாலியில் இதன் மூல ஓவியம் களவு போனதாக அறிவிக்கப் பட்டபோது மக்கள் பீதி கொண்டலைந்தனர். எதையும் மறுதலிக்கும் வக்கிர மனம் படைத்தவர்களும் இவ்வோ வியத்தைப் புகழத்தொடங்கினர். மோனாலிஸாவின் புன்னகையின் சூட்சுமம் குறித்து நூல்கள் நூற்றுக் கணக்கில் வரத்தொடங்கின. "வால்டர் பேட்டர்" பின்வருமாறு எழுதினார்.

"மோனாலிஸா மாயங்களை வென்று
சாகாவரம் பெற்ற நங்கை.
அவள் அருகிலுள்ள பாறையினை விடவும்
அவள் நீண்டநாட்கள் வாழ்வாள்."

சர்ரியலிஸ்டுகள் (Surrealist) இவ்வோவியத்தின் தாக்கத்திற்கு உள்ளானார்கள். இவ்வோவியத்தில் காணப்படும் மரபெதிர்ப்பு சர்ரியலிஸ்டுகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பௌல் ஆண்டர்சன் என்பவர் மோனாலிஸா ஓவியத்தினால் உணர்வு பெற்று "ஒளி" என்னும் அறிவியல் நாவல் எழுதினார்.

மோனாலிஸாவின் புன்னகை பற்றிய புதிர்கள் பல வந்த வண்ணம் உள்ளன. ஓவிய உலகில் பல புதிய மாற்றங்களை இது தோற்று வித்தது. உலகத்தில் எளிமைக்கு இவ்வோவியத்தை முன்னுதாரணமாகச் சொல்லலாம். ஏகாந்த வெளியின் கால மற்ற தன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டுவது போல் தோன்றியது இவ்வோவியம்.

டாவின்சி பௌதீக அதீதத்திற்கு எதிரான தத்து வங்களைப் பரப்புவதில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். அதனால் மனிதனைப் பற்றியும், மனிதனோடு இயற்கைக்கு உள்ள ஈர்ப்பு பற்றியும் தன் ஓவியத்தில் சூட்சுமமாக தன் கருத்துக்களை வெளிப்படுத்த விரும்பினார். மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு பற்றிய மாய வாதத்தில் அவர் நம்பிக்கை கொள்ள வில்லை. மாறாக ஆக்கும் சக்தியிலும், அழிக்கும் சக்தி யிலும் மனிதன் இயற்கையின் பிரதிநிதி என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். இக்காலங்களில்" வரைந்ததுதான் "லெடா" எனும் நிர்வாண நங்கையின் ஓவியமாகும்.

இவ்வோவியத்தில் "லெடா" எனும் மங்கை அன்னப்பறவை ஒன்றை அணைத்துக் கொண்டுள் ளாள். லெடாவின் காலடியில் இரண்டு முட்டைகள் உடைந்து கிடக்கின்றன. உடைந்த இரண்டு முட்டைகளிலிருந்து ஹெலன், கிளைடேம்னஸ்ரா, கேஸ்டர், போலக்ஸ் ஆகிய நான்கு குழந்தைகள் வெளிப் படுகின்றன. லெடாவையும் அன்னத்தையும் அழகிய தாவரங்கள் சூழ்ந்துள்ளன. தாவர இனங்களும், மனித இனமும் இவ்வோவியத்தில் உயிர்த்தெழுவது போல் தோன்றும். பின்புல காட்சி களாக மலை, ஆறு, நிலம் காட்சி தருகின்றது. மரபு வழியி லிருந்து மாறிய புதுவிதமான கருத்தமைவுக் குறியீட்டு ஓவியமாய் "லெடா" விளங்கியது.

இதன் சூட்சுமத்தை அறிந்தவர்கள் லியனார் டோவை ஒரு "மாந்திரிகவாதி" என்றே அழைத்தனர். இவ்வோவியம் அக்காலத்தில் வாழ்ந்த கலைஞர்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. "லெடா" ஓவியத்தில் மனதைப் பறிகொடுத்த ரபேல் அதன் பாதிப்பில் "கலிடாவின் வெற்றி" என்னும் பூச்சோவியம் ஒன்றைச் செய்தார்.

மனித உடலுறுப்புகள் பற்றிய டாவின்சியின் ஆய்வுகள் மிகமுக்கியமானவை. 15ம் நூற்றாண்டுக் கலைஞர்களைப் போல், உடலமைப்பின் புறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்தையே முதலில் நுட்பமாக ஆராய்ந்தார். பின்னர் உடலுறுப்புகளின் உள்தோற்றத்தின்பால் மிக்க ஆர்வம் கொண்டவராய், பிணங்களை அறுத்துப் பார்த்து உடலுறுப்புகள் எப்படி ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளன என்பதை ஆராய்வதில் கருத்தூன்றிச் செயற்பட்டார். இருதயத்தைப் பற்றிய இவருடைய ஆய்வுகள் மிகுந்த முற்போக்கானவை. இது பற்றி எம்.எஸ்.எம்.அனஸ் அவர்கள் "விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு" *(1996; 44,45)* என்ற நூலில் பின்வருமாறு விளக்குகின்றார்.

"ஓவியர் என்ற வகையில், உடற்கூற்றியல் அறிவை முக்கியமானதென அவர் மதித்தார். உடல்களை அறுவை செய்து மனித உடற்கூற்றியல் அமைப்புப் பற்றிய நுணுக்கங்களைக் கோட்டோவியங்களாக்கியதுடன் அவை பற்றிய குறிப்புக்களையும் வரைந்தார். பின்னர் உடற் கூற்றியலிலிருந்து உடலியலை ஆய்வு செய்வதில் ஈடுபட்டார். இருதயத் தசைகளை ஆய்வு செய்து அடைப்பிதழ்களின் (Valves) செயற்பாட்டினை கோட்டோவியங்களைக் கொண்டு விளக்கினார். ஹார்வேயின் இரத்தச் சுற்றோட்டம் அறிமுகமாவதற்கு முன்னரே இரத்தச் சுற்றோட்டத்தின் விதிகளை டாவின்சி அறிந்திருந்தார். இரத்த ஓட்டத்தை மலையிலிருந்து தண்ணீர் ஆற்றுக்கும் கடலுக்கும் சென்று பின்னர் கடலிலிருந்து ஆவியாகி மீண்டும் மலைகளில் மழையாகப் பெய்வதுடன் அவர் ஒப்பிட்டார்."

டாவின்சியின் கலைத்துவ வேலைகளிலும் பார்க்க அதிக கவர்ச்சி உடையனவாக இவரின் அறிவியல் மற்றும் பொறியியல் ஆய்வுகள் அமைகின்றன. டாவின்சியின் எழுத்துக்களும் கோட்டோவியங்களும் சுமார் *13000* பக்கங்களில் குறிப்புப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் *4000* பக்கங்களுக்கு மேற்பட்ட கைப்பிரதிகள் தற்போது ஆய்வுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் வார்த்தைகளாலும், விளக்கப் படங்களாலும் தான் உணர்ந்து அறிந்த பௌதிகச் சோதனைகள், பொறியியல் கருத்துக்கள், இயற்கைப் பற்றிய தனது கவனிப்புகள் போன்றவற்றை அவ்வப் போது குறித்து வைத்துள்ளார்.

லியனார்டோவின் குறிப்புப் புத்தகங்களைப் படித்தால் அதில் அவர் பல்வேறுபட்ட பொருட்களைப் பற்றி, வேறுயாரும் கூறாத செய்திகளை அறிவியல் நோக்கத்துடன் குறித்துள்ளதைக் காணலாம். தாம் விளக்க முற்பட்ட கோட்பாடுகளுக்கு இவர் மிக அழகானதும் திட்டவட்டமான வரைபடங்களை வரைந்து விளக்கிக் காட்டியுள்ளார். இயந்திரங்களைப் பற்றி இவர் எழுதிய வரைபடங்களை ஆராய்ந்த இருபதாம் நூற்றாண்டுப் பொறியியலாளர்கள், இக்காலப் பொருள்களுக்கேற்ற திட்டவட்டமான முன்மாதிரிகளைச் சரியானபடி உருவாக்கியுள்ளார் என்று கூறியுள்ளனர்.

கடிகாரம் கண்டுபிடிக்கப்படாத அந்த நாளில் அலாரம் பற்றி சிந்தித்தார். தாயின் கருப்பையில் குழந்தை எப்படி இருக்கின்றது என்று கூட இவரின் கற்பனை விசாரணை செய்தது. பிறகு ஒளி அலைகளைப் பற்றி ஆய்வு செய்தார். கமராவிற்கான அடிப்படைத் தத்துவத்தை வழங்கியதே இவரின் ஆராய்ச்சிதான். ஓவியத்தில் ஒளியையும் நிழலையும் ஒன்று சேரக் கொண்டுவந்த முதல் ஓவியர். ஒளியையும் நிழலையும் இவர் கவனிக்க ஆரம்பித்தபோது கண்களைப்பற்றி ஆராய முற்பட்டார்.





இன்றைய ஹெலிகாப்டர் போலவே ஒரு கருவியை வரைந்து அதற்கு ஆகாய துளைப்பான் என்று பெயரிட்டார் டாவின்சி. பறக்கும் கருவிகள் மட்டுமல்லாது, இன்றைய டாங்கிகள் போன்ற போர்க்கருவி, எல்லாத் திசையிலும் சுடும் இயந்திரத் துப்பாக்கி எனப் பல்வேறு பொறியியல் அதிசயங்களை *15*ம் நூற்றாண்டிலேயே தந்துவிட்டுப் போனார் அவர். வெறும் ஏட்டளவில் மட்டுமே நின்று போன டாவின்சியின் பொறியியல் கண்டு பிடிப்புகளை சமீபத்தில் பி.பி.சி தொலைக்காட்சியினர் நிஜமாக வடிவமைத்துப் பார்த்தார்கள். அவை அனைத்திலும் ஏதோ ஒரு பொறியியல் குறைபாடு இருக்க, அதை மட்டும் நிவர்த்தி செய்தபோது அக்கருவிகள் நன்றாகவே இயங்கின.

டாவின்சியின் குறிப்புப் புத்தகங்களைப் படிப்பது கடினம். ஏனெனில் இவர் அதனைத் தலைகீழாகவும், இடப்புறமிருந்து வலப்புறமாவும் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்ணாடியில் பார்த்துத்தான் படிக்க வேண்டும். இதைக் கண்ணாடி எழுத்து முறை (Mirror Writing) என அழைப்பர். தம் கருத்துக்களை ஒருவரும் திருடக் கூடாது என்னும் காரணத்துக்காக வாழ்நாள் முழுவதும் கண்ணாடி விம்ப எழுத்துக்களையே பயன்படுத்திவந்தார். லியனார்டோவின் கைப்பிரதி களில் உள்ள குறிப்புக்களும் கோட்டோவியங்களும் அவரது பன்முகத் திறன்களைப் பறைசாற்றுகின்றன.

ஆயினும், அவரது குறிப்பேடுகள் அவரின் திறமைக்கும் தற் சிந்தனைக்கும் சான்றாக அமைந்தபோதிலும் அவை அறிவியல் வளர்ச்சியில் பெரும்தாக்கமெதனையும் ஏற்படுத் தவில்லை. காரணம் அவருடைய அந்த கண்டுபிடிப்புகளின் மாதிரி களை அவர் உருவாக்கவில்லை. அவருடைய சிந்தனைகள் மிகவும் தேர்ச்சித்திறன் வாய்ந்தனவாக இருந்த போதிலும், அந்தக் கண்டு பிடிப்புகள் நடைமுறையில் செயற் பட்டிருக்கவில்லை. ஒரு விமானம் அல்லது நீர்மூழ்கி பற்றிய ஒரு கருத்தைச் சிந்திப்பது ஒன்று. நடை முறையில் செயற்படக்கூடிய அதன் மாதிரியைத் துல்லியமாக வடி வமைத்து உருவாக்கம் செய்வது மற்றொன்று. உண்மையில், இந்த இரண்டாவது மிகக் கடினமானது. அற் புதமான கருத்துகளைச் சிந்தித்து விட்டு, அவற்றின் நடைமுறை மாதிரிகளை உருவாக்கத் தவறியவர்களைப் பெரிய புத்தமைப்பாளர் களாகக் கருதமுடியாது. மாறாக, தாம் சிந்தித்தவற்றை நடைமுறையில் உருவாக்கிக் காட்டுவதற்கும் உள்ளபடிக்கு இயங்கக் கூடியவற்றை தயாரிப்பதில் எதிர்ப்படும் இன்னல்களைச் சமாளிப்ப தற்கும் ஏற்ற இயந்திரவியல் மனப்போக்கும் பொறுமை யும் உடையவர்களைத்தான் உயரிய புத்தமைப்பாளர் களாக ஏற்க முடியும். தாமஸ் எடிசன், ஜெம்ஸ் வாட், ரைட் சகோதரர்கள் இத்தகையவர்கள். டாவின்சி இவ்வாறு செய்யவில்லை.





டாவின்சியின் கண்டுபிடிப்புகளை நடை முறைப்படுத்த தேவையான விபரங்கள் அனைத்தும் அவருடைய குறிப்பேடுகளில் புதைந்திருந்தன. ஆனால் அவை அவர் இறந்து பலநூற்றாண்டுகள் வரையில் வெளியிடப்படவில்லை. அவை வெளிக்கொணரப்பட்ட போது அவரது கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக அமைந்தவைகள் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப் பட்டிருந்தன. அதனால் அவர் ஒரு விஞ்ஞானியாக செல்வாக்குப் பெறவில்லை.

அறிவியல் சம்பந்தமான இவரது அணுகு முறை அவதானிப்பு சார்ந்தது. விபரிப்பதன் மூலமும், அவற்றை மிக நுணுக்கமான விபரங்களுடன் வெளிப்படுத்துவதன் மூலமுமே தோற்றப்பாடுகளை விளங்கிக்கொள்ள முயன்றார். சோதனைகளுக்கும், கோட்பாட்டு விளக்கங்களுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தனது வாழ்நாள் முழுவதும் எல்லா வற்றுக்குமான விபரமான வரைபடங்களைக் கொண்ட ஒரு கலைக்களஞ்சியமொன்றை உருவாக்கத் திட்ட மிட்டு வந்தார். டாவின்சி மாபெரும் திட்டங்களைத் தொடங்குவார். ஆனால் அவற்றை முடிக்க மாட்டார். ஒரு முறை புளொரன்சில், "அங்கிரியாரிப் போர்" என்ற தலைப்பில் பொது மியூரல் ஒன்றைச் செய்வதற்காக இவர் அமர்த்தப்பட்டார். இதற்கு நேரெதிர்ச் சுவரில், மைக்கேலேஞ்சலோ ஓவியம் வரைவதாக இருந்தது. புதுவிதமான, சிறப்பான ஆரம்ப ஆய்வுப்படங்களை வரைந்த பின்னர் அவர் நகரிலிருந்து வெளியேறி விட்டார். இப்படித்தான் அவரது திட்டங்கள் முடிவுக்கு வராமலேயே முடங்கிப்போயின. பிற்கால ஓவியக் கலை வளர்ச்சியில் அவர் பிக்காசோ, மைக்கே லேஞ்சலோவை விடக் குறைந்த அளவு செல்வாக்கைப் பெறக் காரணம், அவருடைய முடி வடைந்த ஓவியங்கள் மிகக் குறைந்த அளவில் உள்ளமையாகும்.

ஒழுங்குமுறைக்குட்படுத்தப்ப ட்ட கலாரசனைக் கோட்பாடொன்று லியனார்டோ டாவின்சியினால் விருத்தி செய்யப்பட்டதா என்ற வினா விற்கு முரண்பாடாக அபிப்பிராயங் களை கலை வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். மெய்யியல் கலாரசனைக் கருத்துக் களை உள்ளடக்கிய தத்துவார்த்த கோட்பாடொன்று அவரிடமிருக்கவில்லை என்பது உண்மையே. எனினும் கலாரசனையை பரந்ததொரு கருத்தில் கலைகள் பற்றியதும், வாழ்க்கை பற்றியதுமான சிந்தனைகளின் தொகுப்பாக ஏற்பின், அக்கருத்தில் லியனார்டோவின் கருத்துக்களை ஓர் கலைக் கொள்கையாகவே கருத வேண்டும். (1994).

லியனார்டோ டாவின்சி ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, இசை, அறிவியல், கணிதம், பொறியியல், தாவரவியல், உயிரியல், வானவியல் முதலிய பல்வேறு துறைகளிலும் வியக்கத்தக்க மேதையாக பிரகாசித் துள்ளார் என்பதில் ஐயமில்லை. எனவேதான் அவரே, ஒரு நிபுணன். புதுவிதமான போர்க் கருவிகளைக் கண்டுபிடித்தவன். ஒரு கட்டிடக் கலைஞன். சிறந்த சிற்பி. மாபெரும் ஓவியன். நீரியல், பொறியியல் வல்லுநன். சலவைக் கல்லாலும், வெண்கலத்தாலும் சிலை வடிக்கும் சிற்பி.

இவ்வாறெல்லாம் தன் கடிதங்களில் தன்னைத் தானே புகழ்ந்து எழுதிக் கொள்வார். ஆனால் இவை வெறும் வெற்றுப் புகழ்ச்சிகள் போல தெரிந்தாலும், அத்தகைய தகுதிவாதங்கள் அவரிடம் நிறைந்திருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

நன்னூற் சூத்திரமொன்று பின்வருமாறு சொல்கின்றது:

"தம்மைப் புகழ்தலும் தகும்
புலவோர்க்கே"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருகோணமலையிலிருந்து புறப்பட்டு கண்டி நகருக்கு நான் வந்துசேர்ந்த போது இரவு 9.40 ஆகிவிட்டிருந்தது. பழைய சுப்பர்மார்கட் அருகிலே பஸ்ஸை விட்டு இறங்கியதும் பனிக்குளிர் காதுமடலைத் தாக்கியது. புகையிரத நிலையத்தைத்தாண்டி குட்செட் பஸ்தரிப்பு வரை நடந்து வந்து "இதோ புறப்படப் போகின்றேன்" என்று உறுமிக்கொண்டிருந்த வட்டதெனிய பஸ்ஸினுள் ஏறி அமர்ந்தேன்.

நான் பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயிலும் முதலாமாண்டு மாணவன். கடந்த வாரம் மூத்த நானாவிடமிருந்து உடனடியாக வீட்டுக்கு வந்து சேரும்படிஅவசரத் தந்திஒன்று வந்திருந்தது. ஆஸ்துமா நோயாளியான உம்மாவுக்குத்தான் ஏதாவது ஆகிவிட்டதோ என்று பதறியடித்து பஸ்ஸைப்பிடித்து வீட்டுக்குப் போய் இறங்கினால் உம்மா வாசலிலே சிரித்துக்கொண்டு நின்றா. அவசரத் தந்திக்குரிய காரணத்தை அறிந்ததும் எனக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. எனக்கு வந்திருந்த திருமணப்பேச்சுவார்த்தை ஒன்றைப்பேசி முடிப்பதற்காகத்தான் வரச்சொல்லியிருந்தார்களாம்.

மூதூர் மொகமட் ராபி

ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு நான் வரும் வரையில் திருமணப் பேச்சையே எடுக்கக்கூடாது என்று நான் கண்டிப்பாக கூறிவைத்திருந்தும் இந்த உம்மாவும் நானாவும் இப்படிப்படுத்துகின்றார்களே என்ற கோபத்தில் அடுத்த பஸ்ஸைப் பிடித்து கல்லூரி விடுதிக்குத் திரும்பி வந்துவிடத்தான் நினைத்தேன். ஆனால், "தம்பி நீ அந்தப் புள்ளைய வந்து ஒருதரம் பாரு. புடிச்சிருந்தா நீ சொல்ற மாதிரி படிப்பை எல்லாம் முடிச்ச பொறவு செய்யலாம்..இல்லாட்டி வுடு" என்று நானா கேட்டுக்கொண்டதால் பெண் பார்க்கும் சடங்கிற்கு ஒப்புக்காக போய்வந்தேன். அத்தோடு ஊரிலே வேறு சில முக்கியமான அலுவல் களும் இருந்த காரணத்தால் லீவை நான்கு நாட்கள் நீடித்து இன்று பிற்பகலில்தான் கல்லூரிக்குப் புறப் பட்டேன்.

"என்னடா இது? ரெண்டு நாளா நானும் பாக்கிறன்.. நீ சரியா ஒண்ணுமே சொல்லாம ஒன்ட பாட்டுக்கு கண்டிக்கு வெளிக்கிடுறா.. இப்ப அவங்

நீதானா நிஜம்தானா?

களுக்கு நானும் பெரிய நானாவும் என்ன பதில் சொல்றது..?" என்று உம்மாதான் ஆரம்பித்தா.

"சரி, இப்ப சொல்றேன். எனக்குப் புடிக்கல போதுமா?"

"அப்ப அங்க வச்சு புடிச்சிருக்கான்டு நானா கேக்க தலையாட்டினியாமே.. என்ன வெளையாடுறியா நீ?"

"நா புடிக்கலண்டு சொன்னது நம்ம நானா செஞ்ச வேலையை. இன்னும் ஆறுமாசத்தில கலியாணம் வைக்கலாமா என்று அவங்க கேட்ட உடனேயே இவரு தன்ட பாட்டுக்கு ஓமென்றாரு. அவ்வளவு அவசரமிருந்தா நானாவையே கட்டிக்கச் சொல்லுங்க எக்ஸ்ட்ராவா. இந்தாருக்க நம்ம பவ்சியா மதினிக்கிட்ட அடிவாங்கட்டும்.. ஹஹ்ஹா!" சொல்லும்போதே கோபத்திலும் சிரிப்பு வந்தது எனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! இதையெல்லாம் நானா வெளியே போக முந்தி அவருக்கிட்டே சொல்றதுதானே..மச்சான்? நாஞ் சொல்றனே மாமி..இவருஒங்கட கடைசி மகன் இருக்காரே.. அங்க கண்டியில யாரையோ விரும்பிக் கிட்டிருக்காரு போல.."

"அப்பிடி யாரும் இருந்தா பரவாயில்லை சொல்லண்டா.. அதையாவதுகட்டித்தாறோம்...வேற என்ன செய்யிறது பவ்சியா..? ஒங்க மாமாக்கிட்டய நானும் போய் கபுறடியில அடங்க முந்தி இவனுக்கு ஒரு.."

"சரி, ஆரம்பிச்சிட்டீங்களா?" என்றவாறு தோள்பையைத் துாக்கிக்கொண்டு வாசலுக்கு வந்தேன். "அப்ப நா ஒண்ணு செய்யிறன். ரெண்டு வருசம் கழிச்சு ட்ரெயினிங் முடிச்சிட்டு வாற நேரம் கண்டிலருந்து ஒண்டைக் கூட்டிக்கிட்டு வாறேன். கட்டித்தாங்க..! கட்டை கவுண் போடுற சிங்களப் பொட்டை யென்டாலும் பரவாயில்லியாம்மா?"

"அடி செருப்பால!"

அந்த வழித்தடத்தில் செல்லும் கடைசி பஸ் என்பதால் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆடைத்தொழிற் சாலை வேலைவிட்டுத் திரும்பி வரும் அழகான இளம் பெண்கள் பலர் எனது இருக்கைக்கு அருகிலே நின்ற படி தங்களுக்குள் கலகலவென சிங்களத்தில் சிரித்துப் பேசிக்கொண்டு வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ஏனோ என் கல்லூரித்தோழி இரோமியின் நினைவு வந்தது.

இரோமி எங்கள் க்ரூப்-ஜே வகுப்பில் என்னோடு மிகவும் நேசமாகப் பழகும் சிங்களப் பெண். அவளையும் அவள் அவ்வப்போது பேசும் கொஞ்சு தமிழையும் எனக்கு மிகவும் பிடிக்கும். கல்லூரியின் பெண்கள் விடுதியிலேதான் அவள் தங்கியிருக்கிறாள். எங்கள் 1999/2000 கல்வியாண்டு பெண்களிலே பேரழகி யாரென்று கேட்டால் எல்லோரும் அவளைத் தான் காண்பிப்பார்கள். எவரையும் கொள்ளை கொள்ளும் அழகிய தோற்றமும் நிறமும் கனிவான குணமும் கொண்ட இரோமியை மனதுக்குள் ரசிக்காதவர்கள் என்று யாருமே இருக்க மாட்டார்கள். ஆனால் அத்தனை அழகாய் அவளைப் படைத்த இறைவன் தன் அழகிலே அவளுக்கு கர்வம் எதுவும் வந்துவிடக்கூடாது என்று நினைத்தானோ என்னவோ சிறு குறை ஒன்றையும் கொடுத்துவிட்டான். ஆம், இரோமி பிறப்பிலேயே இடது பாதத்தில் சிறிது ஊனமுள்ளவள். அவள் நடக்கும்போது உற்றுக் கவனித்தால் மட்டும் லேசாக விந்தி நடப்பது தெரியும்.

ஆசிரியர் பயிற்சி முடியும் வரையில் திருமணம் வேண்டாம் என்று நான் வீட்டில் கூறிய தற்கு இரோமியும் ஒரு முக்கியமான காரணம். இரோமியை கண்டதிலிருந்து வேறு எந்தப் பெண் களும் என்னை பெரிதாக கவர்ந்ததே கிடையாது. அவளது அழகிலும் குணத்திலும் மயங்கி நான் அவளை ஒருதலையாக காதலித்திருந்துக்கொண்டிருந்த ஒரு காலமும் இருந்தது. ஆனால் இரோமி இப்போது வேறு ஒருவனின் காதலி என்றால் உங்களுக்கு ஆச்சரிய மாக இருக்கக் கூடும். தவிர, அவர்களது காதலை ஒன்றுசேர்த்து வைத்தவனும் நான்தான் என்றால் நீங்கள் நம்பவே மாட்டீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

நான் நினைத்திருந்தால் அவளை எனது காதலி யாக்கிக் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு நிறையவே இருந்தது. ஆனால் நான் ஒரு முஸ்லீம் பையனாக இருந்த காரணத்தால் என்னை அவள் ஏற்றுக் கொள் வாளா என்ற சந்தேகத்தில் என் காதலை அவளிடம் தெரிவிக்காமலே இருந்துவிட்டேன். ஆனால் இரோமி ஒரு பரந்த சிந்தனையுள்ள பெண் என்பதை பிற்பாடு அவளோடு ஒரு நல்ல நண்பனாக நெருங்கிப்பழகிய காலத்தில்தான் நான் தெரிந்து கொண்டேன். அப்போது கூட என் காதலை அவளிடம் நான் கூறியிருந்திருக்க முடியும். ஆயினும் அதற்கிடையில் இருவருக்குமிடையே இயல்பாக வளர்ந்திருந்த நட்பை காதலாக அறிவிப்பதற்குரிய துணிச்சல் இல்லாமலே இருந்துவிட்டேன் பாவி.

மலராமலே உதிர்ந்துவிடும் மொட்டுகளாய் எனது காதலும் மௌனச் சமாதியானது. ஆனால் அந்தக் கதையெல்லாம் எனக்கும் என் அறைத்தோழன் ஹபீலுக்கும் மட்டும்தான் தெரியும். வருவது வரட்டும் என்று காதலை தயங்காமல் சொல்லிவிடும்படி ஹபீல் கூட எத்தனையோ தடவை என்னை வற்புறுத்தி யிருக்கின்றான். இருந்தும் தூய்மையான நட்புக்கு துரோகமிழைப்பதாக இரோமி நினைத்து விடுவாளே என்று தயங்கித் தயங்கியே பேசாமல் இருந்து விட்டேன். ஆனால் காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை அல்லவா?

இரோமியை விமலசேன எனும் எங்களுடைய சீனியர்களில் ஒருவனும் ஒருதலையாக காதலித்தான். ஆனால் என்னைப்போலன்றி அவன் தன் காதலை நேரடியாக அவளிடம் தெரிவித்து விட்டிருந்தான். ஆனால் இரோமி அவனுடைய காதலை முதலிலே ஏற்றுக்கொள்ளவில்லை. அழகுக்காக விரும்புபவர்கள் பின்பு திருமணம் என்று வரும்போது தனது கால் ஊனத்தை பெரிதுபடுத்தி பின்வாங்கி விடுவார்கள் என்று ஆண்கள் மீது அவளுக்கு ஒரு பொதுவான அவநம்பிக்கை இருந்ததுதான் அதற்குக் காரணம். ஆனால் விமல், தான் அப்படிப்பட்டவன் அல்ல என்று அவளை நம்பவைப்பதற்காக பின்னால் விடாமல் அலைந்தான். அதற்காக பல தடவை அவளிடம் திட்டுக்கூட வாங்கிக்கட்டியிருக்கிறான். ஆனாலும் அவளை விடாமல் துரத்திக் கொண்டேயிருந்தான்.

ஒருகட்டத்தில் இரோமிக்கு மிகவும் பிடித்த மான வகுப்புத்தோழன் நான் என்பதை எப்படியோ அறிந்து என்னிடம் வந்து நின்றான் விமல். தனது உண்மையான காதலை இரோமி வீணாகச் சந்தேகப் படுகிறாள் என்று என்னிடம் புலம்பியவன் தன் காதலை இரோமியிடம் எடுத்துக்கூறும்படி என்னை வற்புறுத்தினான். யாரை நான் காதலித்தேனோ அவளிடமே என்னை தூதனுப்பும் விமல் மீது எனக்கு சிறிது பொறாமை இருந்தாலும் கூட அவன் பழகுவதற்கு நல்லவனாகவும் என்னைவிட இரோமிக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவனாகவும் தோன்றியதால் அதுபற்றி அவளிடம் பேசுவதாக ஒப்புக்கொண்டேன்.

noolaham.org | aavanaham.org

ஆனால் என் உற்ற நண்பனாகிய ஹபீல் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தான். இதையெல்லாம் நான் செய்வதற்கு காரணம் இரோமிக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டும் என்பதுதான் என்பதை நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவன் சமாதனமாகவேயில்லை. நான் செய்யப்போவதை அசட்டுத் தியாகம், காதல் தற்கொலை என்றெல்லாம் கேலிசெய்தான். ஒரு கட்டத்தில் ஹபீலுக்கு என்மீது கோபமே வந்து விட்டது. இனிமேல் இரோமியைப் பற்றித் தன்னிடம் எதுவும் பேசக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

இரோமியிடம் விமலை ஏற்றுக்கொள்வது பற்றிப் பேசினேன். அதுமட்டுமல்ல அவளுக்காக விமலின் ஊருக்கே சென்று அவனுடைய குடும்ப பின்னணியைக்கூட அறிந்து வந்தேன். விமல் நல்ல கௌரவமான வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் அவனை நம்பலாம் என்றும் இரோமிக்கு எடுத்துக்கூறினேன். ஆனாலும் அவள் விமலின் காதலைப் பற்றி முடிவு செய்வதற்கு தனக்கு சிறிது காலம் தேவை என்று கூறிவிட்டாள். பின்னர் காலப் போக்கில் விமலின் காதலுக்கு இரோமி பச்சைக்கொடி காட்டிவிட அவர்களிருவரும் இணைபிரியாக் காதலர் களாகி விட்டனர்.

விமல்-இரோமி ஜோடியை சேர்த்து வைத்ததிலே எனக்கு பெரும்பங்கு இருந்ததால் நான் அவர்கள் இருவருக்கும் விசேடமான நலன்விரும்பி ஆகிப்போனேன். கடந்த ஆறேழு மாதமாக அவர்களது காதல் ஊடலும் கூடலுமாய் நன்றாவே போய்க் கொண்டிருந்தது. இதற்கிடையில் விமல் உட்பட சீனியர் மாணவர்கள் தங்களது பயிற்சிக்காலம் முடிவடைந்து அவரவர் ஊரிலுள்ள பாடசாலைக்கு திரும்பிச் செல்லும் காலம் வந்தது. ஊருக்குப் போனதும் தனது பெற்றோரிடம் பேசி இரோமியை திருமணம் புரிவதாக உறுதியளித்துவிட்டு சென்று விட்டான் விமல்.

இரோமியை நான் இழந்து விட்டாலும் ஒரு சிநேகிதனாக அவளுக்கு நல்லதொரு குடும்பத்தில் வாழ்க்கை வசதியான அமையவிருப்பதை நினைத்து சந்தோசமாகவே உணர்ந்தேன். இரோமியை நேசிக்கும் வகுப்புத்தோழர்கள் அனைவருக்கும் என்னைப் போலவே மகிழ்ச்சிதான். ஆனால் இறைவனுக்கு அடுத்தபடியாக என்னுடைய விடயம் எல்லா வற்றையும் அறிந்தவனாகிய நண்பன் ஹபீல் மட்டும் இன்னும் என்னை ஒரு முட்டாள் என்று திட்டிக் கொண்டேயிருந்தான். இரோமியை நான் விமலுக்கு விட்டுக்கொடுத்ததிலே அவ்வளவு வருத்தம் அவனுக்கு.

"பெனிதெனிய ஹந்திய பகிண்ட!"

கண்டக்டரின் குரல்கேட்டு எழுந்து அவசர அவசரமாக பஸ்ஸை விட்டு இறங்கினேன். நான் மட்டுமே ஒற்றை ஆளாக இறங்கியிருந்ததை பஸ் கடந்து சென்ற பின்பு அந்த இடமே வெறிச்சோடிய போதுதான் தெரிந்தது. சந்தியில் வீதி ஓரமாக நின்றிருந்த பெரிய நிழல்வாகை விருட்சத்தின் கீழ் பழைய பஸ்வண்டிகள் சில நிறுத்தப்பட்டிருந்தன. வீதியில் ஆட்கள் நடமாட்டமே இருக்கவில்லை. கடைகள் எல்லாம் மூடியிருக்க தெருவிளக்குகள் அழுது வடிந்து கொண்டிருந்தன. அந்தப் பிரதேசம் முழுவதை யும் புகைமூட்டம்போல பனிபடர்ந்திருந்தது.

இரவுநேரப் பயணிகள் ரயில்வண்டி ஒன்று நீளமாய் கூவியபடி பாலத்தைக் கடந்து சென்றது. குளிருக்கு இதமாக சுருண்டு படுத்திருந்த தெருநாய்கள் கண்களைப் பாதி திறந்து ஒருதடவை லேசாக உறுமி விட்டு மீண்டும் தூக்கத்தைத் தொடர்ந்தன. குளிரில் விரல்கள் விறைப்பது போலிருக்கவே கைகளிரண்டை யும் காற்சட்டைப் பைகளுக்குள் நுழைத்துக்கொண்டு நடந்தேன். லக்கி ஐயாவின் சில்லறைக்கடையைத் தாண்டியதும் எங்கள் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்

கல்லூரி வளாகத்தின் பிரதான வாயில் காவற்கூடத்தின் டியூப்லைட் வெளிச்சம் தெரிந்தது.

பிரதான வாயிலை நான் அடைந்தபோது வீதிக்குக் குறுக்காக உயரத்தில் வெண்ணிறத் துணியா லான பேனர் ஒன்று புதிதாகக்கட்டப்பட்டு காற்றுக்கு படபடத்து ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அதில் கறுப்பு மையால் சிங்கள மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. சிங்கள மொழியை பேசிச் சமாளிக்கத் தெரிந்தளவுக்கு வாசிக்கத் தெரியாத காரணத்தால் அது என்னவென்று எனக்கு சரியாகப் புரியவில்லை. வாயில் கதவுகள் லேசாய்த் திறந்து கிடக்க காவற்கூடத்தினுள் இருந்த எங்கள் இரவுநேரக் காவலாளியான பெரேரா ஐயா கையில் டோர்ச் லைட்டுடன் குறட்டைவிட்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய விழிப்புணர்வை நினைத்து லேசாய் சிரிப்பு வந்தாலும் நித்திரையைக் குழப்பாமல் பூனைபோல் அந்த இடத்தைத் தாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வந்தேன்.

அங்கிருந்து ஏறத்தாழ அறுபது மீற்றர் உயரமான குன்றின்மேல் இருக்கும் எங்கள் ஆசிரியர் கலாசாலையின் ஆண்கள் விடுதி ஒரு கிலோமீற்றர் தூரம் இருக்கும். வளைந்து வளைந்து செல்லும் ஆளரவமற்ற மரங்களடர்ந்த சரிவான வீதியில் தன்னந் தனியாக ஏறிச்செல்வதை நினைத்ததும் சிறிது ஆயாசம் ஏற்பட்டது. யாராவது பேச்சுத் துணைக்கு கூட வந்திருந்தால் ஏறிச்செல்லும் களைப்புத் தெரியவராது. விடுதியில் தங்கியிருக்கும் நாட்களில் நானும் ஹபீலும் ஏனைய விடுதி நண்பர்களும் ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு தடவையாவது பெனிதெனிய சந்திக்கு வந்து செல்வோம். அப்போது நாங்கள் வெகு சாதாரணமாக இறங்கி ஏறும் தூரம்தான் அது. சக நண்பர்களுடன் சிரித்துப்பேசி அரட்டையடித்தபடி ஏறி இறங்கும்போது எதுவுமே பெரிதாகத் தோன்றுவ தில்லை. இப்படி யாருமே இல்லாத நேரத்தில் தனியாக நடக்கும்போதுதான் தூரமே தோற்றுகின்றது.

வழியெல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. மேலே உயரத்தில் இருக்கும் கல்லூரி நூலகத்தின் அருகேயிருந்த கம்பத்தில் மட்டும் ஒரு மெர்க்கூரி விளக்கு போனால் போகிறது என்று சோகையாய் அழுதுவடிந்து கொண்டிருந்தது. அதன் மெல்லிய வெளிச்சம் போதாது என்றாலும் பழகிய பாதை என்பதால் தடுமாற்றமின்றி நடந்தேன். வழமையாக ஊரிலிருந்து வந்தால் எப்படியும் இரவு பத்து மணிக்கு முன்பே நான் விடுதிக்கு வந்து சேர்ந்து விடுவேன். ஆனால் இன்று வழமையைவிட நிறையவே பிந்தி விட்டேன் போலிருக்கின்றது. கைக்கடிகாரம் இரவு பதினொன்று இருபத்தியிரண்டில் ஒளிர்ந்தது.

கல்லூரி வளாகத்தினுள் வழமையாய் ஒளிரும் தெருவிளக்குகள் அன்று ஏன் எரியவில்லை என்று ஆச்சரியமாக இருந்தது. வழியெங்கும் பட்டர்ப்ரூட் பூக்களின் மெல்லிய வாசனை காற்றில் மிதந்துவர மேல்நோக்கிச் செல்லும் சரிவான பாதையில் மெது வாக ஏறினேன். தொலைக்கல்வி நிலையச் சுற்று வட்டத்தை அடைந்து பெண்கள் விடுதிப்பக்கமாக வளைந்து செல்லும் பாதையில் திரும்பியபோது அங்கிருந்த மாமரத்தின் கீழ் சிமென்ட் பெஞ்சில் ஓர் உருவம் தனியாக இருளில் அமர்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன்.

"யார் இந்த நேரத்தில்" என்று யோசித்தவாறு நின்று உற்றுப்பார்த்தேன். மாமரத்தின் பின்னால் இருந்த விரிவுரைக் கூடத்தினுள் பரவியிருந்த மெல்லிய வெளிச்சத்தினால் அந்த உருவத்தின் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆயினும் அதன் மீது விழுந்த வெளிச்ச விளிம்புகளின் வளைவுகளிலிருந்து அந்த உருவம் ஒரு பெண் என்பது மட்டும் நன்றாகத் தெரிந்தது. அவள் எங்கள் ஆசிரிய கலாசாலையின் சீருடையான வெண்ணிற சேலை அணிந்திருந்தாள்.

"Hey, who is that?" என்றேன் சற்று அதட்ட லாக. ஆனால் அந்தப் பெண்ணிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. "Who're you.. what are you doing there?" என்று கேட்டவாறு என்னுடைய ஷோல்டர் பேக்கினுள் வைத்திருந்த டோர்ச் லைட்டை தேடினேன். ஆனால் அது அவசரத்திற்கு கையில் அகப்படவில்லை. அதற்குள் அவள் சட்டென்று எழுந்து நின்றாள். ஒரு காலை லேசாய் விந்தியவாறு என்னை நோக்கி மெல்ல இரண்டடி நடந்து வந்தாள்.

ஓ! அப்படியானால் இது.. இது இரோமி அல்லவா?

"Hey, is that you? my god!" என்று சந்தோசம் கலந்த ஆச்சரியத்தில் கூவினேன்.

"Eromi what a surprise.. wait..wait I'll come there!" என்றவாறு அவளை நெருங்கினேன். நான் வருவது தெரிந்ததும் மீண்டும் சீமெந்து பெஞ்சில் போய் மௌனமாக அமர்ந்து விட்டாள் அவள். நான் என்னுடைய ஷோல்டர் பேக்கை கீழே இறக்கி வைத்து விட்டு அவளருகே அமர்ந்தேன். அவள் வழமையாக பயன்படுத்தும் மெல்லிய மல்லிகைப்பூ சென்ட் வாசனை கமழ்ந்தது. அவள் வழமைக்கு மாறாக எதுவுமே பேசாது தலையைக் குனிந்தபடி இருந்ததால் ஏதோ தப்பு என்று உள்ளுரத் தோன்றியது எனக்கு.

"Eromi are you allright?"

அவள் பேசவில்லை. ஆனால் சிறிது நேரத்தில் அவளிடமிருந்து மெல்லிதான விசும்பல் ஒலி எழுந்தது. உடனே நான் அதிர்ந்து, "Hey what's this..? what happened you?" என்று அவளின் தோளைத் தொட்டு லேசாய் உலுக்கினேன். அவளின் உடல் ஐஸ்கட்டிபோல சில்லென்று இருந்தது.

"What's wrong with you, Eromi?"

"Nothing Rahu!" என்று சிறிது நிமிர்ந்தவளின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. சட்டென நான் எதிர் பாராத விதமாக என் மடிமீது முகம் புதைத்து விம்மி விம்மி அழத்தொடங்கினாள். எனக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. இப்படிக் குமுறி அழும் அளவுக்கு இரோமிக்கு என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். அதேவேளை இப்படித் தனியாக இருட்டிலே நாங்கள் இருவரும் இருப்பதை யாராவது பார்த்தால் என்னாகும் என்ற பயமும் வந்துவிட்டது எனக்கு.

விமலும் இரோமியும் சிறந்த காதல் ஜோடியாக உலாவினாலும் அவர்கள் இருவருக்குமிடையே அடிக்கடி சிறு ஊடல்கள் ஏற்படுவதுண்டு. காதலர் களுக்கிடையில் அதெல்லாம் சகஜம்தானே. விமல் அதுபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளமாட்டான். ஆனால் இரோமி அப்படியல்ல. தாமரைமலர் போன்ற அழகிய முகம் வாடிப்போய் இருப்பதை வைத்தே கண்டுபிடித்து விடலாம். அப்படியான வேளையில் அவளுடைய நெருங்கிய தோழிகளால் கூட அவளைச் சாந்தப்படுத்த முடிவதில்லை.

சிலவேளையில் திடீரென என்னிடம் வந்து, "Rahu let's go somewhere out" என்று எங்காவது வெளியில் சென்று வர என்னை உரிமையோடு அழைப் பாள். இருவரும் பேராதனை ரயில் நிலையம் அல்லது பொறியியல்பீட பாலம் வரையில் நடந்து செல்வ துண்டு. போகும் வழியில் தன் மனதிலிருக்கும் எல்லா வற்றையும் ஒன்றுவிடாமல் இங்லீஷில் படபடவென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையோடு என்னிடம் கொட்டித் தீர்ப்பாள் இரோமி. திரும்பி வரும் வழியில் நான் இரோமிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டு வருவேன். பிறகு இரண்டொரு நாட்களில் காதலர்கள் இருவரும் மீண்டும் ராசியாகி விடுவார்கள். அப்போது இருவரையும் நான் கேலி செய்து கலாய்ப்பேன். இவையெல்லாம் வழமையாக நடைபெறும் காட்சிகள்தான்.

அப்படி ஒன்றுதான் இதுவும் என்றுதான் நான் முதலில் நினைத்தேன். ஆனால் அவள் இப்படி நடுநிசியில் தனியே இருட்டில் வந்து இருந்ததையும் ஓவென்று குமுறி அழுவதையும் பார்த்தால் இது வெறும் ஊடல் மட்டுமல்ல என்று எனக்குத் தோன்றியது. அவள் அழுது முடிக்கும்வரை காத்திருந்தேன். விரல்களால் அவளது தலையை வாஞ்சையுடன் கோதிவிட்டேன். அவளது உடலைப்போலவே தலையும் சில்லென்று இருந்தது. ஏன் இரோமி இப்படி ஐஸ்கட்டிபோல குளிர்ந்துபோய் இருக்கிறாள் என்பதுதான் எனக்கு புரியவில்லை. ஒருவேளை வெகுநேரம் இந்த பனிக் குளிரில் இருந்ததினால் இருக்குமா.. அதற்காக இப்படியா குளிர்வது?

"Eromi please control yourself ya!" என்று அவளைத் தொட்டு உலுக்கி நிமிர்த்தினேன். எனது கைக்குட்டையால் அவளது கண்களைத் துடைத்து விட்டேன். அந்த நடுநிசி இருட்டிலும் பால்நிலவாய் ஜொலித்த அவளது அழகு முகம் என்னை ஒரு கணம் தடுமாறச் செய்தது. "படுபாவி விமல். இப்படி ஒரு அழகு தேவதையை அழவிடுகிறானே.. ரசனையில்லாத மடையன்" என்று நினைத்துக் கொண்டேன்.

"Please stop crying.. listen to me Ero.. please tell me what made you weeping like this much?"

" Rahu don't you know..? that Raskal got married his cousin last week and gone to Australia!" என்று படபட வென்று சொல்லிவிட்டு என் தோளிலே சாய்ந்து மறுபடியும் அழுதாள். நான் ஒருகணம் அதிர்ந்து போனேன்.

" Who? your Vimal? I don't believe it... are you sure Ero?" என்று கேட்டேன் நம்ப முடியாமல்.

"Yes Rahu! He's a coward; He needs just a pretty girl like me only to enjoy but not to marry.."

அடப்பாவி விமல் உனக்கு எப்பிடிடா இப்படி ஒரு துரோகம் செய்ய மனம் வந்தது. இவளை ஏமாற்றி விட்டு ஊருக்குப் போய் இன்னொருத்தியை கட்டுவதற்காகவா இத்தனை நாளும் சுற்றித் திரிந்தாய்? சே! இந்தப் பூ மாதிரிப் பெண்ணைப் போய் ஏமாற்ற உனக்கு எப்படிடா.. ராஸ்கல். எனக்கு அவனைத் தேடிப்போய் கொல்லும் கோபம் உண்டானது. முதலில் இவளை எப்படித் தேற்றுவது என்றே புரியவில்லை.

அவள் வெகுநேரம் அழுதபடியே இருந்தாள். சிறிதுநேரம் அழுவதும் பின்பு அப்படியே என் மார்பில் சாய்ந்து தூங்குவதுமாக இருந்தாள். " that bloody cheat spoiled my name and future... who'll marry me here after?" என்று அழுதாள். பின்பு சட்டென நிமிர்ந்து, "Will you marry me Rahu?" என்றெல்லாம் அசட்டுத்தனமாய் கேட்டுப் பித்துப்பிடித்தவள் போல என்னை இறுக்கமாக அணைத்துக்கொண்டு விட்டாள். அதன் பின்பு ஒரு குழந்தையைப்போல வெகுநேரம் வரை தேம்பித் தேம்பி அழுது கொண்டேயிருந்தாள் இரோமி.

அவளது நிலைமையை நினைத்து எனக்குப் பெரும் கவலையாக இருந்தது. ஏமாற்றத்தில் கலங்கிப் போயிருப்பவளுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்று அந்த நெருக்கத்தை நான் அனுமதித்தேன். ஆனால் அந்த அழகு தேவதையின் நெருக்கம் என்னைத்தான் திணறடிக்க ஆரம்பித்தது. சோகத்தில் என்னை கட்டியணைத்தபடி இருக்கும் அவளை மெல்ல விலக்கி லேடீஸ் ஹொஸ்டலுக்கு கூட்டிச்சென்று விடலாம் என்று நான் நினைத்தாலும் என்னையறியாமலே எனது கைகள் அவளை மார்போடு ஆரத்தழுவிக்கொண்டன. வேறு யாரோ எனது உடலிலே புகுந்து என்னை இயக்குவதுபோல உணர்ந்தேன். சுயகட்டுப்பாட்டை மீறி எல்லாம் நிகழ.. நடப்பதெல்லாம் கனவு போலவும் நிஜம் போலவும் குழப்பமாகத் தோன்றியது. கண்ணீர் வழிந்தோடிய அவளது கன்னங்களை என் கன்னத்தோடு இழைத்துக் கொண்டேன்.

"Rahu don't let me alone please!" என்று அவள் மயக்கத்தில் முணுமுணுத்தாள். " I can't bear up.. Rahu I can't" என்று அவள் கண்களைத் திறக்காமலே கிசுகிசுத்தாள். அவளது இதழ்கள் என் முகத்தில் அழுந்தின. அதற்குமேல் என்னால் தாள முடியவில்லை. அவளை என் மார்போடு சாய்த்துக்கொண்டு சிமெண்ட் பெஞ்சில் மல்லாந்து அவளது மெல்லியஅதரங்களில் முத்தமிட்டு...

"மல்லீ..! ரகுமான் மல்லீ!"

என்று யாரோ கிணற்றுக்குரலில் என்னைக் கூப்பிட்டார்கள். கண்விழித்துப் பார்த்தபோது வானம் லேசாய் வெளுத்து பறவைகளின் சங்கீதம் அந்த இடத்தையே நிறைத்திருக்க காவலாளி பெரேரா ஐயாவின் முகம் வெகுஅருகிலே தலைகீழாய்த் தெரிந்தது.

"ரகுமான் மல்லி, எய் மெதன நிதாகன இன்னே.. ஹொஸ்டல்ட யன்னெத்த"

முதலில் எனக்கு ஏதுவுமே புரியவில்லை. பொழுது மெல்லப் புலர்ந்து கொண்டிருக்க நான் சிமெண்ட் பெஞ்சில் மல்லாந்து படுத்திருப்பது புரிந்தது. பிறகுதான் சட்டென ஞாபகம் வந்து எழுந்து உட்கார்ந்தேன். பனிக்குளிரில் பற்கள் கிட்டியது.

"இரோமி எங்கே..?" என்று சுற்றிலும் தேடினேன். அவளைக் காணவில்லை. அவளது மல்லிகைப்பூ சென்ட் வாசனை இன்னும் என்னில் மீதமிருந்தது. "எப்போது நான் தூங்கினேன்.. இரோமி எப்போது எழுந்து ஹொஸ்டலுக்குப் போனாள்?" என்று எல்லாமே ஒரே குழப்பமாகி தலையைச்சுற்றுவது போலிருக்கவே தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

"மெனாவாத மல்லி பலன்னே.. சனீப நெத்த? ஆங் மென்ன ஒயாகே பேக்.. கவத கமே இன்தலா ஆவே" என்று கீழே விழுந்து கிடந்த என்னுடைய ட்ரவலிங் பேக்கை எடுத்து தூசுதட்டித் தந்தவர் பிரதான வாயிலில் வாகனமொன்று ஹோன் அடிக்கவே என்னை ஒருமாதிரி பார்த்துவிட்டு இறங்கிப்போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். அவர் சென்றதும் மெல்ல எழுந்து நின்று கலைந்திருந்த உடைகளைச் சரி செய்து கொண்டேன். இரோமியின் மல்லிகைப்பூ வாசமும் என்கூடவே வந்தது. இருள்பிரியாத மரங்களடர்ந்த சாலையில் விடுதியை நோக்கி தட்டுத்தடுமாறி நடக்கத் தொடங்கினேன். பசி உயிரை வாட்ட இரவு நடந்த தெல்லாம் ஒரு கனவுபோல தெளிவில்லாமல் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தது.

"இரோமி ஏன் என்னை எழுப்பவில்லை? ஓ! நான் களைத்துப்போய் தூங்கியதைப் பார்த்து எழுப்ப மனமின்றித்தான் சொல்லாமலே லேடீஸ் ஹொஸ்ட லுக்குப் போயிருப்பாள் போல. நல்லவேளை நைட் வோட்சர் பெரேரா ஐயா வர முதலே போய்விட்டாள்.. இல்லையென்றால் இரண்டுபேரும் அநியாயத்துக்கு மாட்டியிருப்போம்" என்று யோசித்தவாறு லேடீஸ் ஹொஸ்டலை தாண்டி நடந்து வந்து கொண்டிருந்தேன்.

அப்போது பின்னால் ஒரு முச்சக்கர வண்டி யொன்று இரைந்து கொண்டு வந்து என்னருகிலே நின்றது. "டேய் ரகுமான், என்னடா நீ போன கிழமை ஒருவருக்கிட்டயும் சொல்லாம திடீரென்டு ஊருக்குப் போயிட்ட? ஊர்லருந்து இப்பதான் வாறியா?" என்றவாறு இறங்கியவன் வேறுயாருமில்லை. அறை நண்பன் ஹபீல்தான்.

"அதுசரி, நீ எங்கருந்துடா விடியக்காலையில வாறா ஹபீல்? நீ இந்த டைம்ல வரமாட்டியே"

"இல்ல மச்சான் ஊர்ல இருந்து நேத்து கொழும்புக்கு ஒரு வேலையா போனேண்டா.. அதை முடிச்சிட்டு அப்பிடியே அங்கிருந்து நைட் ட்ரெயின்லேறி வந்தேன். அதுசரி, நீ ஊருக்குப் போனா வழமையா சனிக்கிழமை இரவுதான வாறா நீ..? இதென்ன இண்டைக்கு இந்த நேரத்தில வாறாய்.. ஓ! நைட் பஸ்ல வந்தியா?" என்று ஆட்டோவுக்கு காசைக்கொடுத்து அனுப்பியவாறு கேட்டான்.

"ம்.. அதெல்லாம் இருக்கட்டும்டா ஹபீல், அதென்னடா அவன் ராஸ்கல் விமல் இப்பிடிச் செய்திட்டான். பைத்தியமாடா அவனுக்கு?"

"பாத்தியாடா..மாடு? நான் சொன்னதை கேட்காம பெரிசா விமலுக்கு தியாகம் பண்ணீயே.. இதுக்குத்தாண்டா நான் அப்பவே சொன்னேன்.. அவன் விமல் ஆள் சரியில்லடா? அவன் நம்ம இரோமிக்கு செய்த பாவம் அவனைச் சும்மா விடாதுடா.."

" ஓம்டா.. நாந்தான்டா பிழை செய்திட்டேன்.. பாவம் மச்சான் இரோமி. இனி என்னடா செய்வாள்? அதால நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்டா.. இண்டைக்கே நம்ம இரோமிக்கிட்ட பேசி இனி நானே அவளை.." என்று நான் கூறி முடிக்கவில்லை. உடனே நெருப்பை மிதித்தவன் போல சட்டென நின்று என்னைத் திரும்பிப் பார்த்தான் ஹபீல்.

"டேய்! என்னடா பேசுறா நீ..? உனக்கு இரோமிட விசயமே தெரியாதா?"

"என்னடா விசயம்?" என்றேன் புரியாமல்.

"டேய், நம்ம இரோமி போன புதன் கிழமை நஞ்சு குடிச்சிட்டாள்றா..! நம்ம ட்ரெயினிங் கொலீஜ் ஆஸ்பத்திரிலதாண்டா கிடந்திச்சு.. உனக்குத் தெரியாதா..?"

"என்னடா சொல்றா.. நீ?" என்று பதறிப்போய் அவன் நெஞ்சுச் சட்டையைக் கொத்தாகப் பிடித்து உலுக்கினேன் நான்.

அவன் சட்டென்று ஆவேசம் வந்தவனாய் என்னுடைய கையைப் பிடித்து அருகிலிருந்த லேடீஸ் ஹொஸ்டல் வாசலை நோக்கி தர தரவென்று இழுத்துக்கொண்டு சென்று "இதை வாசிச்சுப் பார்றா!" என்றான்.

அவன் காண்பித்த இடத்தில் இரவு நான் பிரதான வாயிலில் பார்த்தது போன்ற ஒரு பேனர் கட்டப்பட்டு இருக்க அதிலே "கடந்த வாரம் அகால மரணமடைந்த எங்கள் இனிய நண்பி இரோமி பிரியதர்ஷினிக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்! - 1999/2000 கல்வியாண்டு மாணவ மாணவிகள்" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

•

அதிர்வுகள்

அதிர்வுகளால் வாழ்வின்
அத்திபாரங்கள் தகர்கின்றன.
அதிர்வுமானியாலும்
அளக்க முடியாத
அதிர்வுகள் –
நாடி நரம்புகளில்
விரவிக் கிடக்கின்றன.

கெல்லி எறியப்பட்ட
வாழ்வின் துணுக்குகளில்
ஒட்டியிருக்கும் அதிர்வுகளால் –
சமனிலை தவறிப்போகின்றது.

சுருகாகிக் கிடக்கும்
மனம் கூடக்
காற்றில் பறக்க
எத்தனிக்கின்றது.

நீள்கின்ற பார்வையில்,
துரத்தி வருகின்ற
அதிர்வுகளை
எதிர்கொள்ளவியலாது
வாழ்வு அந்தரிக்கின்றது
நிலங்களும் கூடத்தான்...

– வே.ஜ.வரதராஜன்

noolaham.org | aavanaham.org

ஈழக்கவியின் "இரவின் மழையில்" ஒரு இரசனைக்குறிப்பு

B.N. நளீரா



இரவின் மழையில்

(கவிதைத்தொகுதி)

ஆசிரியர்	– ஈழக்கவி
வெளியீடு	– ஜீவநதி
பக்கம்	– 120
விலை	– 250/–

கவிதை அது ஆத்மாவின் குழந்தை என்றும் கவிதை உணர்வுகளின் மொழி என்றும் கூறுகின்ற ஈழக்கவியின் 52 கவிதைகள் "இரவின் மழையில்" என்னும் மகுடத்தில் தொகுப்பாகியுள்ளது. இந்நூலினை "ஜீவநதி" அழகான அட்டைப் படத்துடன் 120 பக்கங்களைக் கொண்டதாக வெளியிட்டுள்ளது. பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் "நவாஷ் கவிதைகள்" என்று ஆழமான ஒரு அணிந்துரையை வழங்கியுள்ளார். "நானும் என் கவிதையும்" என்ற தலைப்பில் தன்னுடைய கவி வாழ்வியல் பற்றிய வரலாற்றுச் சுய சரிதையை ஆறு பக்கங்களில் ஈழக்கவி எழுதியுள்ளார்.

இரவின் மழையில் மிக அருமையான கவித்துவ உணர்வுகள் பிரகாசம் கொள்ளும் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் நின்று கவனிக்கத்தக்க அரசியல் கவிதைகளும் காணப்படுகின்றன. இக்கவிதைகளில் சிறப்பான சொற்சேர்க்கைகளும் ஆழம்பொதிந்த செறிவான கருத்துக்களும் இரசனையூட்டும் வரிகளும் நூல் முழுதும் விரவிக்கிடக்கின்றன.

"ஈழக்கவியின் கவிதைகள் ஈழத்து இலக்கிய உலகில் தனித்துவமானவை. இவரது கவிதைகள் கனதியாகவும் கவிதை மரபை விட்டு விலகாதவையாகவும் காணப்படுவது சிறப்பு. மெய்யியல் பட்டதாரியான இவர் அழகியலை விரும்புவர் என்பதை இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் பறைசாற்றுகின்றன. இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் பேசப்படும் கருப்பொருட்கள் பலவாக இருக்கின்றன; அனைத்துமே மிகச்சிறப்பாக ஈழக்கவியால் அனுபவித்து எழுதப்பட்ட கவிதைகளாகதென்படுகின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் இந்நூலாசிரியரின் படைப்பாக்க ஆளுமையையும் அநுபவ அறிகைத் திரளமைப்பையும் அறிந்துகொள்வார்கள்."

என்று பதிப்புரையில் க.பரணீதரன் சொல்லியுள்ள கருத்துக்களோடு நாமும் உடன்படுகின்றோம். காரணம் இத்தொகுப்பில் இருக்கின்ற கவிதைகள் இதனை நிரூபிக்கின்றன.

ஈழக்கவி மெய்யியல் துறையைச்சார்ந்து பல்கலைக்கழக கற்கையை மேற் கொண்டதால் அழகியல் கோட்பாடுகளிலும் அதிக ஈடுபாட்டினை காட்டிவருகிறார் . இவரது அழகியல் பற்றிய ஆய்வுகள் இதற்கு ஆதாரமாக அமைகின்றன. "ஜீவநதி" ஆசிரியர் சொல்வது போல் "இவர் அழகியலை விரும்புபவர் என்பதை இத் தொகுப்பில் உள்ள கவிதைகள் பறைசாற்றுகின்றன". பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ் தன்னுடைய அணிந்துரையில் பின்வருமாறு கூறுகின்றார் . "நவாஷ் கவிதையை அழகியல் நுட்பத்தினூடாக கொண்டு செல்லும் வேட்கை உள்ளவர் என்பதை இத்தொகுதி மூலம் நிறுவியுள்ளார் . பண்பாட்டை அழகுபடுத்தும் பண்புகளை ஆங்காங்கே குறித்துச் செல்லும் ஆர் வம் நவாஷின் கவிதைகளை அழகுபடுத்துகின்றன". ஈழக்கவியின் கவிதை மொழி எப்பவும் அழகியலோடுதான் இயங்குகின்றது. உதாரணத்திற்கு பின்வரும் வரிகளை குறித்துக்காட்டலாம்.

1. வெள்ளை அறையென பேர் போன அறையில்
படுகொலைப் பாடல்கள் ஒலிக்க
பலஸ்தீன் இரத்தத்தை மதுரசமென பருகியவாறு
மகா சீமானும் கேடுகெட்ட நாயும்
இரா முழுதும் புணர்ந்தார்கள் **(கேடுகெட்ட நாய் பற்றி : 07)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முல்லை மலை உச்சியில்
நரபலிக்காக குழந்தைகளை
கூரிய கத்திகளால் வெட்ட வெட்ட
பீரிட்டுப்பாயும் இரத்த வெள்ளம் போல
சூரிய செந்நாயின் வாயினின்று
கனல் மாரி வழிகின்றது

(இருத்தலும் இறத்தலும் : 9)

3. நான் வியர் வையில் மழையானேன்
என் கூட்டில்
சூரியன் மலைக்குள்
இரத்தம் கக்கியவாறு பதுங்கியது

(இரங்கலுடன் காத்திருத்தல் : 81)

4. உவர் நீரும் நன்னீரும் பிரிந்திருக்கின்ற
அந்த அதிசய இடத்திலே
நான் மறைத்து வைத்திருந்த
என் உணர் வுகளின் கற்கலான குகையை
அவதானித்தவள்
ஒரு கணம் அதிர்ந்து நின்றாள்
அவளின் மொத்த அழகையும் அதற்குள் பார்த்து

(நீ ஒளி மேல் ஒளி : 96)

இத்தொகுப்பின் முதல் இருகவிதைகளும் தாய் தந்தை பற்றியதாக அமைந்துள்ளது. "உம்மாவின் பாதத்தடியில்" என்ற முதல் கவிதை தாயின் உணர்வு களையும் யாதார்த்த இருப்பினையும் பண்பாட்டினை யும் உயிர்ப்புடன் படம்பிடித்துக் காட்டுகின்றது. கவிதையை வாசிக்கின்ற போது காட்சிகள் மனத் திரையில் குறும்படமாகின்றது. பின்வரும் வரிகளை வாசித்தால் இது நிரூபணமாகும்.

விடுமுறை நாட்களில்
ஆற்றுக்கு அழைத்துப்போய்
உடுதுணி கழுவி
ஊத்தை தேய்த்து தேய்த்து
உம்மா எம்மை குளிப்பாட்டும்
நுட்பம் பார்த்து உமாஓயா ஆறும்
குளிர்ந்து போயிருக்கும்.

சங்ககாலத்து கவிதைகளைப் போல ஈழக்கவி யின் கவிதைகளும் காட்சிகளையும் நேரடிப் பண்புகளை யும் முதன்மைப்படுத்துகின்றன.

"வாப்பா ஒரு கவிதை" தந்தையின் குணநலன் களை வித்தியாசமான ஒரு கோணத்தில் சுட்டுகின்றது. தந்தையின் அமைதித்தன்மைகளே இக்கவிதையின் பாடுபொருளாகும். கீழ்வரும் கவிப்பகுதி இதற்கு எடுத்துக்காட்டாகும்.

"குழந்தையொன்று பேசுகின்ற
முதல் சொல்லைப் போல்
ஒப்பனையற்ற சொற்களே
அந்த கவிதை"

ஈழக்கவியின் கற்பனைத்திறனும் சொல்லாட்சி யும் பார்வை தீட்சண்யமும் அவரை தனியான ஒரு இடத்தில் வைக்கின்றன. அவர் பயன்படுத்துகின்ற உவமைகள் தனித்துவமானவை. அத்துடன் அவை புதிய உணர்வுகளை தோற்றுவிப்பன. "ஆண்டாளின் வானவில் கனவுகள்" என்ற கவிதையை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். திருமணம் ஆகாமல் வயது போன பெண் ஒருத்தியின் அவலத்தையும் அவஸ்தையையும் கூறுவதாக இக்கவிதை அமைந் துள்ளது. கவிதைக்குள் படமாகும் ஆரம்ப காட்சிகளில் விரக உணர்வுகள் படிமமாகின்றன.

அப்பா மைனா குஞ்சுகள் காணாமல்
அம்மாவின் இறகுகளின்
அடிப்பாகத்தில் முத்தமிடும்
மருதநில வயலில் நெற்கதிர்கள்
நிறைமாத கர்ப்பிணியாய் மெல்ல அசையும்

கலவியின் உச்ச அவஸ்தையில்
பெட்டைபூனையொன்று காற்றுகிழிய கத்தும்

வயதுக்குவந்த பெண் ஒருத்தி
தான் முதன்முதலாய்
களவியலில் உணர்ந்தவைகளை
மனசுக்குள் நினைத்து நினைத்து
மருட்கை கொள்வது போல
வானம் வானவில்லாய்
வர்ண உணர் ச்சிகளைச் சொரியும்

என்று விரகதாபத்தை காட்சிபடுத்திய பின்னர்,

ஜன்னல் கம்பிகளை இறுக்கிப்பிடித்தவாறு
கனத்த பெருமூச்சுடன்
ஆண்டாள் பொதுக்கிணற்றடியை
வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்

என்று சொல்லுகின்ற போது அந்தப்பெண்ணின் "பெருமூச்சு" எம்மையும் சுடுகின்றது.

வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் சமூகத்தின் கொடூரத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

நிச்சயமாக அவர்கள்
நேற்று தன்னை பெண்பார்க்க
வந்துபோன சங்கதிகளையும்
தன் பள்ளித்தோழியின் ரெண்டாவது பெண்
பூப்படைந்த விடயத்தையும்
கலாநிதி பேராசிரியர்கள் போல
ஒப்பியல் ஆய்வு செய்து கொண்டிருப்பார்கள்
என்பது மட்டுமல்ல

தன்னுடைய நேர்காணலையும்
தங்கள் ஆய்வுக்கு முக்கிய ஆதாரமாக
பயன்படுத்த துடித்துக் கொண்டிருப்பார்கள்
என்பதும் அவளது அனுபவம்

இந்த கவிதையில் காட்சிகளும் உணர்வுகளும் தன்போக்கில் வார்த்தைகளுக்குள் கருக்கொள்ளும் இயல்பான நிகழ்வை நன்கு உணரமுடிகின்றது. அவை வெறும் புதிய சொல்லாகவோ சொற்சேர்க்கையாகவோ நின்று விடாமல் கவிதையை சுயமாக நகர்த்தி செல்கின்றன. ஈழக்கவியின் கவிதைகள் அனைத்தும் அத்தகையன.

ஈழக்கவியின் கவிதைகளில் படிமங்களின் ஆட்சி அதீதமானது. இவரது காதல் கவிதைகளில் இதனை அதிகமாகவே அனுபவிக்கலாம். காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் அனுபவத்துக்கூடாவே பேசப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். இரவின் மழையில், பிரிதலும் இரங்கலும், காதலும் கத்தரிக்காயும் மண்ணாங்கட்டியும், பிரிய காதலி, காதலும் தொலைவும், சூரியனில் எழுதுதல், இரங்கலுடன் காத்திருத்தல், ஆப்பிள்பூவாய் பூத்த கடல், நீ ஒளி மேல் ஒளி என்பன இத்தொகுப்பில் உள்ள காதல் கவிதைகளாகும். இக்கவிதைகள் ஒவ் வொன்றும் எமக்குள் வித்தியாசமான உணர்வுகளைத் தொற்றவைக்கின்றன. இத்தொகுப்பின் இறுதிக் கவிதையாக இருக்கின்ற "நீ ஒளி மேல் ஒளி" என்ற கவிதையே எனக்கு மிகவும் பிடித்த கவிதையாகும்.

"இரவு நேரத்தில்
மாணிக்க ஒளியில் உணவு தேடும் நாகம் போல
உன் ஒளியில்
என் இருத்தலுக்கான தேடல்"

இது போன்ற உள்ளத்தை தொடும் வரிகள் அற்புத மானவை.

"பொதுவாக இலங்கைச் சூழலில் யுத்த கவிதைகள் இருக்கின்றன. ஆனால் அரசியல் கவிதைகள் பலம் வாயந்தனவாக இல்லை. பயமும் ஏன் நேர்மையீனமே இதற்குக் காரணமாக இருக்கலாம். பத்திரிகைகளும் பிரசுரிக்கப் பயப்படலாம். ஆனால் கவிஞனுக்கும் பல வழிகள் உள்ளன. பயத்திற்கு மத்தியில் மாறுவேடம் தாங்கி உணர்ச்சியூட்டிய உலகப் படைப்புக்கள் காவியங்கள் பல உள்ளன. கவிஞனுக் குள்ள பெரிய வாய்ப்பு அது" என்று அணிந்துரையில் கூறுகின்ற பேராசிரியர் அனஸ் அவர்கள், இத்தொகுப் பில் உள்ள "நீர் இல்லா ஊர்" கவிதை பற்றி விரிவாக பேசியுள்ளார்.

"எதிர்ப்புக்களைச் சம்பாதிக்காதவாறு உண்மை கூறும் உத்தியிலிருந்து இக்கவிதை ஆரம்பமா கின்றது. சொல்லத்தயங்கும் மக்களின் உணர்வுகளை வெளியே கொண்டுவர கலைஞனுக்கும் ஒரு பொறுப் புள்ளது.

நான் போன போது
அவன் ஊரைத் தின்று
தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தான்

என்ற தொடக்க வரிகளிலேயே சொல்லவேண்டியவை சொல்லப்பட்டாயிற்று. இளங்கவிஞர்கள் கவனிக்க வேண்டிய கலை நுட்பமாக இதைக் கொள்ள வேண்டும்".

மேலும் இந்த கவிதையை பேராசிரியர் ஹொப்சின் "லெவியாதன்" உடன் ஒப்பிட்டு பேசி யிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று தமிழில் வித்தியாசமான அணுகுமுறையில் அரசியல் கவிதை எழுதுபவராக ஈழக்கவி இருக்கிறார். காறலை நக்கும் வெட்கம் கெட்டவர்கள், தண்ணி காட்டும் தலைவர் கள், கண்ணீரில் வெடிக்கும் வாக்குறுதிகள், சிம்மா சனக்காரர்களின் ஆட்டம், நாசமாய்ப்போதல், தொழுகள்ளர்களின் முதலைக் கண்ணீர் , துப்பாக்கி விழுங்கிய நரிகள், காகம் சுட்ட தேர்தல் பணியாரம், பாராளுமன்ற பாம்புகள், படிக்கும் தூக்கும் நாய்கள் முதலான தலைப்புக் கவிதைகளில் அரசியல் அட்டுழியங்கள் தாக்கப்பூர்வமான மொழியிலும் அதிரும் படிமங்களுக் கூடாகவும் புதிய அணுகுமுறையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் கவிதைகளில் அவர் மின்சாரம் பாய்ச்சும் ஒரு மொழியை கையாளு கின்றார். இதற்கு சிறந்த உதாரணமாக பின்வரும் கவிதைப் பகுதிகளைக் காட்டலாம்.

சேறு பூசிப் பூசியே
பொய் பேசிப் பேசியே
தாகித்துப் போன தலைவர்
தாகம் தீர்க்க ஆரம்பித்திருக்கிறார்
அடுத்த தேர்தல் வரும் வரையில்
(நீர் இல்லா ஊர் : 06)

வெட்கம் கெட்டவர்கள்
வீட்டுக்கு வந்தார்கள் ஓட்டுக் கேட்டு
(காறலை நக்கும் வெட்கம் கெட்டவர் கள் : 64)

தண்ணி காட்டும்
தலைவரின் போஷ்டரொன்றின் மீது
தெருநாயொன்று காலை தூக்கியவாறு
சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தது
(தண்ணி காட்டும் தலைவர்கள் : 68)

அவளழுத கண்ணீரில்
இருபதிலிருந்து அறுபது வரை
அவளிடம் "ஓட்டு" வாங்கிய
அத்தனை அரசியல்வாதிகளினதும்
வாக்குறுதிகள் வெடித்துச் சிதறின...
ஊரே பொய்யால் நாறத்தொடங்கியது
(கண்ணீரில் வெடிக்கும் வாக்குறுதிகள் : 69)

நாலு பேருக்கு தீமை செய்கின்றவர்கள்
ஆறேழு காரில் வந்து கொண்டிருந்தார்கள்
(நாசமாய்போதல் : 72)

மக்களின்
உணர்வுகளையும்
உரிமைகளையும்
உயிர்களையும்
பாராளுமன்றத்தில்
குழிதோண்டி புதைத்த பயத்தினால்
பாராளுமன்ற உறுப்பினர்
இம்முறை ஊருக்கு வரும்போது
துப்பாக்கி விழுங்கிய நரிகளை
கூட்டி வந்தார்
(துப்பாக்கி விழுங்கிய நரிகள் : 75)

பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்கள்
ஆவேசமாய் விவாதித்தல் போல
நாய்கள் பயங்கரமாய் ஊளையிட்டு
ஊரையே அதிரச் செய்தன
(படிக்கும் தூக்கும் நாய்கள் : 93)

ஈழக்கவியின் யுத்தம் பற்றிய கவிதைகள் யுத்தத்தின் அவலத்தை எடுத்துக்காட்டுகின்றன.

காயப்பட்ட புல்வெளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இளம் பெண்ணின்
அத்தனை படிமங்களும்
உடைந்து நொறுங்கின
பத்து துப்பாக்கிகள்
இரத்தம் படிந்த காற்சட்டையை
உடுத்தவாறு வெளியாகின

(ஊழியும் புல்வெளியும் : 62)

என்ற வரிகள் மட்டுமன்றி இத்தொகுப்பிலுள்ள யுத்தம் பற்றிய கவிதைகள் அனைத்திலுமே அந்த கொடுமை கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஈழக்கவி கவிதைகளின் இன்னொரு சிறப் பம்சம் பழந்தமிழ் கவிதைகளின் வரிகளை தன்னுடைய கவிகளில் பிரக்ஞைபூர்வமாக கையாண்டிருப்பதாகும். "காலை" (20) என்ற கவிதை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

"இரவின் மழையில்" தொகுப்பு ஈழக்கவியின் பன்முகத்தன்மையுடைய கோணங்களை கவித்துவ உணர்வுகளுடன் சித்திரிக்கின்றது. வித்தியாசமாக வெளிப்பட்டிருக்கும் இக்கவிதைகள் வடிவநேர்த்தி யிலும் சிறந்து விளங்குகின்றன. இத்தொகுப்பை பார்த்த உடன் என்முகநூலில் எழுதிய குறிப்புகளுடன் இந்த இரசனைக்குறிப்பை நிறைவு செய்கின்றேன்.

"மழைக்குமிழிகளின் மொழியில் எழுதப்பட்ட ஈழக்கவியின் "இரவின் மழையில்" கவிதை தொகுப்பு இன்று என் கரம் கிட்டியது; அளவில்லாத ஆனந்தம் எனக்கு! கவிஞர் அவர்கள் இந்நூலை கச்சிதமாக வெளியிடுவதற்கு அரும் பாடுபட்டார் ; அதை நான் 2010 இல் இருந்தே நன்கறிவேன். அவரின் உழைப்பும் நூல் சிறப்பாக அமைய வேண்டும் என்ற ஆசையும் வீண் போகவில்லை. அவரின் உள்ளத்தைப் போலவே கவிதை தொகுப்பும் மிக மிக அருமையாக உள்ளது. முதல் கவிதை "உம்மாவின் பாதத்தடியில்" தொடக்கம் கடைசிக் கவிதையாய் அமைந்துள்ள "நீ ஒளி மேல் ஒளி" வரையான அத்தனை கவிதைகளும் மிகவும் அற்புதமாய் அமைந்துள்ளன. வாசகர் களுக்கு நல்லதொரு விருந்து படைத்த ஈழக்கவிக்கு என் உள்ளார்ந்த நல் வாழ்த்துக்கள். உங்கள் வாழ்வு சிறப்பாக அமையட்டும். உங்கள் ஆற்றல்கள் மென்மேலும் வெளிப்பட்டு இலக்கிய உலகிற்கு ஒளி சேர்க்கட்டும். வாழ்த்துக்கள் எம்கவியே..."

•

அங்காடிப் பொம்மைகள்

அர்த்தமற்ற பொழுதுகள் அனாவசியப் பேச்சுகளால்
அற்பமாகப் போக்கப்படுகின்றன.
எனினும் ஆள் அரவமற்ற சந்துகளும் அனாமதேய
அழைப்புக்களும்
சொற்பமாகவே நோக்கப்படும்

சிபாரிசு - பட்டம் மற்றும் கண்டனம் - களியாட்டம்
இரட்டைப் பிறவிகளாகத் தோன்றும்
எனினும் காதல் தற்கொலையும் காம அரங்கேற்றமும்
கிழமைக்கொன்று உசிதம்.

அவலைகளின் கற்பு சர்வ சாதாரணமாய்
அந்தகாரமாக்கப்படும்
எனினும் அந்நியச் செலவாணி வீதமும் சாராய
விலையேற்றமும் மட்டுமே
சென்ற கூட்ட அறிக்கையின் ஏகமனதான
தீர்மானமாக இருக்கும்.

தொலைவில் நடப்பவை கண்களுக்கு
புலனாகாவிடில்
நடக்கவே இல்லையே என்பது எளிது.
எனினும் அருகில் நடப்பவை குருடர்களுக்கு
புலனாவது சற்று கடினம் தான்.

உடுத்தியிருப்பது சிவப்பாயினும் பச்சையாயினும்
நீலமாயினும்
கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கும்
அரசியல் அங்காடிப் பொம்மைகள்...

– க.முரளீதரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுத்து என்பது தவம்

அண்மையில் கனடா, ஸ்காபரோ நகரில் நண்பர் ஒருவரது நூல்வெளியீடு நடந்தது. நானும் போயிருந்தேன். இருக்க இடமில்லா தளவுக்கு மண்டபம் நிறைந்த சனம். பார்த்து வியந்துபோனேன்!

இன்னொரு நண்பரின் நூல்வெளியீட்டு நிகழ்வின்போது, ரொறன்ரோவிலுள்ள அத்தனை தமிழ்க் கல்விமான்களும் கனவான்களும் பெரும்பாலும் பட்டுவேட்டி சால்வை சகிதம், பேச்சாளர்களாய் அரங்கில் வீற்றிருந்தனர். வரவேற் புரை, வாழ்த்துரை, அறிமுகவுரை, ஆசியுரை, பாராட்டுரை, நயவுரை, சிறப்புரை, ஆய்வுரை, விமர்சன வுரை என அவர்கள் வழங்கிய அனைத்து உரைகளாலும் அந்த நண்பர் நெக்குருகி நெகிழ்ந்து போனார்.

வேறொரு வெளியீட்டு வைபவத்தில் வாசிப்பு நெடியே வீசாத வியாபார - வர்த்தகர் பட்டாளம் ஒன்று, நீண்ட வரிசையில் நின்று, டொலர் நோட்டுக்கள் சொருகி ஒட்டிய என்வலப்புகளைப் பட்டால் மூடிய தாம்பாளத்தில் பவ்வியமாய் வைத்துப் புதுப் புத்தகத்தை வாங்கிப் போயினர்.

"எண்ணற்ற விருதுகளையும் பரிசுகளையும் பெற்ற ஒப்பற்ற நூல்" என்ற புகழாரத்துடன் பிறிதொரு வெளியீட்டு விழாவை நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்கள் கூடிநின்று, பூமாலைகள், பூச்செண்டுகள், பாராட்டுப் பட்டயங்கள், ஃபிரேம் போட்ட வாழ்த்து மடல்கள் இத்தியாதிகளுடன் இனிதே கொண்டாடிச் சென்றனர்.

மற்றொரு நூலறிமுகக் கூட்டதின்போது, காத்திரமான விமர்சனங்களால் அந்த எழுத்தாள நண்பரைக் காப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கிஞ்சித்துமின்றி, குருவியின் தலையில் குண்டுப் பனங்காயைத் தூக்கி வைத்தாற் போன்று, பாராட்டிப் பாராட்டியே அவரது இலக்கிய ஆயுளைக் அற்பமாய்க் குறைத்து மகிழ்வித்தனர், தாராள சிந்தைமிக்க தமிழ்ப் பேச்சாளப் பெருமக்கள்!

எண்ணி, ஆகப் பதினாறுபேர் மட்டுமே வந்திருந்த நூல்வெளியீடு ஒன்றுக்கும் ஒருமுறை போயிருந்தேன். "இது ஒன்றும் "பணச் சடங்கு" அல்ல - கண்டது கடியதுகள் வந்துபோக. உண்மையைச் சொல்லப் போனால், இது செவ்விலக்கியக்காரருக்கு மட்டுமேயான, சீரியஸான - சீரிய நூல்வெளியீடு" எனத் தமது "மீசையைத் தடவியபடி" சிலாகித்துச் சொன்னார்கள். சிலிர்த்துப் போனேன், நான்!

இப்படியாக, வருடா வருடம் நான் கண்டும் கலந்தும் வரும் ஏராளமான நூல் வெளியீடுகளின் போதெல்லாம் எனது மனதில் எப்போதும் எதேச்சையாக ஒரு கேள்வி தலைதூக்கும்.

இவையனைத்துமே இந்த எழுத்தாளர்களது எழுத்துக்களுக்கான அங்கீகாரங்கள்தானா? உண்மை எழுத்துக்களுக்கான அடையாளங்கள் தானா?

ஒருசில விதிவிலக்குகளைப் புறம் தள்ளிப் பொதுப்படையாகச் சொன்னால் "இல்லை" என்பதே விடையாகத் தேறும். இவை பெரும்பாலும் வெறும் முகஸ்துதி பாடுதலும் முதுகு சொறிதலும் - சடங்குகளும் சம்பிரதாயங்களும் மட்டுமே!

அவ்வாறாயின் அநேகமான எழுத்தாளர்கள் இந்நாட்களில் ஏன் எழுதுகிறார்கள்? என்ற அடுத்த கேள்வி இயல்பாகவே மேலெழுந்து மிதக்கும்.

எழுத்துப் பணியின் நல்ல நோக்கங்களுக்கு மேலாக, எழுதுவ—

க. நவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுடாகத் தம்மை ஓர் அறிவாளி என அடையாளப்படுத்தி, சமூகத்தில் புகழையும் மதிப்பையும் கௌரவத்தையும் பிரபலத்தை யும் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்ற "வான் கோழிச் சிறகு விரிப்பாட்ட விருப்பு" பொதுவாக எங்களில் பலரது சிந்தையுள் ஒரு வியாதியாக இந்நாட்களில் பரவி விரவிக் கிடக்கின்றது.

மேலும், "எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆவல் ஒரு வகையான தன்னகங்காரத்துடன் சம்பந்தப் பட்டது. வெறும் சாதாரண தலையாட்டிப் பொம்மை களில் இருந்து வேறுபடுத்தி, தன்னை ஒரு பொம்ம லாட்டக்காரனாக ஊருக்கும் உலகுக்கும் காட்டுவதே எழுத்தாளனின் நோக்கமாகும்."

இவ்வாறு கோபோ அபே என்ற பெயர்கொண்ட யப்பானிய முன்னணி எழுத்தாளர் ஒருமுறை கூறிய கூற்றை எண்பிக்கும் வகையில், எங்களை நாங்களே எழுத்துலக ஜாம்பவான்களாக எண்ணிக்கொண்டு, எங்கள் ஒளிவட்டம் சூழ் தலைகளில் இறுமாப்பைச் சுமையாகச் சுமந்து திரிகின்றோம்.

இணையத்தின் வழியாக வந்துகிடைக்கும் அனுக்கிரகங்களையும் ஆசீர்வாதங்களையும் ஒருபுறம் சுளுவாகப் பயன்படுத்திக்கொண்டு, மறுபுறம் சுயம்பு வாய் வந்துதித்த படைப்புலகப் பிரம்மாக்கள் எனப் பாவனைபண்ணி வருகின்றோம் மேடைகளிலும், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், இணையத் தளங்களிலும், சமூக ஊடாட்ட ஊடகங்களிலும் ஏவலாட்களையும் அடியாட்களைப் பணிக்கமர்த்தித் துதிபாட வகைசெய்து, துய்த்து மகிழ்கின்றோம்.

பாவம், உண்மையெது, போலியெது என்ற சங்கதி தெரியாச் சனங்களைக்கூட்டி வைத்து, பச்சைப் புழுகு மூட்டைகளுக்கெல்லாம் புனுகுபூசி அவிழ்த்துக் கொட்டிப் பாராயணம் பண்ணிக் கொண்டிருக் கின்றோம்.

ஆரோக்கியமான சமூகம் ஒன்றை நிர்மாணிப் பதில் ஆர்வம் காண்பிக்கும் நல்லிதயங்களை அல்லாடவைக்கும், சமகால இலக்கியப் பாசாங்கு களினதும் பித்தலாட்டங்களினதும் இரத்தமும் சதையுமான ஒருசில உதாரணங்களே, இவை.

இவற்றைப் பார்க்கும்போது, "எனக்கு வர்த்தக உலகம் பற்றித் தெரியும். அரசியல் உலகம் பற்றியும் தெரியும். இலக்கிய உலகம் பற்றி நன்கு தெரியும். இந்த மூன்று உலகங்களிலும் இலக்கிய உலகம்தான் ரொம்பக் கேடுகெட்ட உலகம்" என்று மறைந்த எழுத் தாளர் சுந்தர ராமசாமி ஒருமுறை சொல்லி அலுத்துக் கொண்டதற்கு இவையும் ஒரு வகையில் காரணங் களாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்று கின்றது.

மேற்கூறியவாறான அற்ப ஆதாயங்களைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், நல்ல நோக்கங் களுடன் எழுதப்படும் - நல்ல எழுத்துக்களும் நம்மவர் மத்தியில் நிறையவே உள்ளன. அவ்வகை எழுத்துக் களைப் பகுத்தும் வகுத்தும் இனங்கண்டு, ஒவ்வா வகை எழுத்துக்களைப் புறந்தள்ளவேண்டிய கட்டாய தேவையொன்று எமக்குண்டு.

எழுத்து என்பது எண்ணங்களையும் உணர்வுகளையும் புதினங்களையும் செய்திகளையும் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாகும். எழுதும் பணியில் வல்லவர்கள் எல்லோரும் எழுத்தாளர்கள்தான்.

ஆயினும் ஆக்க இலக்கியங்கள் எழுதுவோரை மட்டும் எழுத்தாளர்கள் எனச் சுட்டும் பாரம்பரியம் தமிழ்ச் சூழலில் பரவலாகக் காணப்படுகின்றது. உண்மையில், கட்டுரை, கதை, கவிதை, நாவல், நாடகம், பத்தி, திறனாய்வு, விளம்பரம், ஊடக உள்ளடக்கம் போன்ற அனைத்து எழுத்துக்களை எழுதுவோரும் உலகப் பொதுப்பரப்பில் எழுத்தாளர்கள் என்றே கணிக்கப்படு கின்றனர்.

இவ்வெழுத்தாளர்களுள் வணிக எழுத்தாளர் கள், மக்கள் பய்ன்பாட்டு எழுத்தாளர்கள் என்ற வகை பிரிப்பு மிக நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது.

இவ்விரு வகையினருள் வணிக எழுத்தாளர் களது எழுத்துக்கள் பெரும்பாலும் பணத்தையும் புகழையும் நோக்கங்களாகக் கொண்டு எழுதப்படுபவை சமூக முக்கியத்துவம் பற்றிய கரிசனையோ, அக்கறையோ அற்ற எழுத்துக்கள்.

இவை மலினமான சுவாரஷ்யத்தை அடிப் படையாகக் கொண்டவை. அதீத கற்பனா வாதத்தினை யும் இயல்பற்ற, செயற்கையான உத்தி முறைகளையும் கையாண்டு எழுதப்படுபவை.

இதில் வேடிக்கை என்னவென்றால், மிகையான கற்பனைகள் கலந்த, யதார்த்தமற்ற கனவுக் கொந்தளிப்புகளால் ஆகர்ஷிக்கப்படும் அடிநிலை வாசக அப்பாவிகளே எமது சமூகத்தில் ஏராளமாகக் காணப்படுகின்றனர்.

வாழ்வியல் நிதர்சனங்களை அடியோடு நிராகரித்து நிற்கும் பகட்டும் படாடோபமும் - பொய்மையும் போலிமையும்தான் காலாகாலமாக மானுடத்தைக் கவர்ந்திழுத்துவிடுகின்றன என்பது கவலை தரும் விடயம்!

அதனால்தான் ஒரு பட்டுக்கோட்டை பிரபா கருக்கும் ஒரு பாலகுமாரனுக்கும் கிடைக்கும் பெருந் தொகையான வாசகர் படையணி, ஒரு அசோக மித்திரனுக்கோ அல்லது ஒரு பிரபஞ்சனுக்கோ கிட்டாது போய்விடுகின்றது!

இனி, மக்கள் சமூகத்திற்குப் பயன்தரவல்ல நல்ல எழுத்துக்கள் எனப்படுபவை யாவை?

"நல்லனவற்றை, நல்லபடி சொல்லும் எழுத்துக் களே நல்ல எழுத்துக்கள்." இது ஒரு சாதாரணனும் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் எளிய வரைவிலக்கணம். இதில் தொக்கி நிற்கும் இரண்டு முக்கிய விடயங்கள் மிகுந்த கவனிப்புக்குரியன.

ஒரு நல்ல எழுத்தின் முத்திரைகளான உள்ளடக்கம், உருவம் ஆகிய இரண்டு அம்சங்களும் இதில் வலியுறுத்தப்படுகின்றன. ஒன்றுக்கொன்று சமரசம் செய்ய முடியாதவாறான சமமான முக்கியத்தைக் கொண்டவை, இவை.

ஆழமான உள்ளடக்கமற்ற உருவ அழகு, பிணத்துக்குச் சூடிய ஆடை அணிகலன்களை ஒத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று அழகியலைப் புறக்கணித்த ஆழமான உள்ளடக்கம் அழகொழிந்த மூளியின் முகத்தை ஒத்தது.

இந்த வேறுபாடுகளின் அடிப்படையிலேயே மிக நீண்ட காலத்திற்கு முன்னர் இலக்கியப் படைப் பாளிகள் "கலை கலைக்காகவே" என்றும் "கலை மக்களுக்காகவே" என்றும் இருவேறு துருவங்களாகப் பிரிந்துநின்று குடுமிப்பிடிச் சண்டையில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த நூற்றாண்டின் பிற்பாதியில் ஈழத்தில் முற்போக்கு நற்போக்குக் குழுவினர் எதிரும் புதிருமாய்க் கன்னை பிரித்து நின்று, முஷ்டி உயர்த்திக் கோஷமிட்டமைக்கும், "முட்டையெறிந்து" கோபம் தணித்தமைக்கும் இக்கோட்பாட்டு முரண்பாடும் ஒரு வகையில் காரணம் எனலாம்.

ஆனால் இன்றைய எழுத்துலகம் இவ்விரு அம்சங்களினதும் சமனான முக்கியத்துவத்தைச் சரிவர உணர்ந்துகொண்டுள்ளது என்றே கூற வேண்டும். கலைநயமும் கனதியான கருப்பொருளமை தியும் ஒரு நல்ல கலைப் படைப்பின் இரு கண்களாக இந்நாட்களில் கருதப்படுகின்றன.

ஒரு கணம், ஒரேயொரு கணம் - சிந்தனையைச் சீண்டினால் வாய்விட்டுச் சிரிக்கத் தூண்டினால் மகிழ்ச்சியில் மனம் மிதக்கத் துணை போனால் - வார்த்தையின்றி மௌனிக்க வழிவகுத்தால் இதயத் துடிப்பைத் துரிதப்படுத்தினால் துளி கண்ணீரை வரவழைத்தால் அமைதியான மனதில் அதிர்வை ஏற்படுத்தினால் ஆழ்மன வலியை அதிகரிக்கச் செய்தால், அதுவே ஒரு நல்ல எழுத்தின் அடையாளம்!

ஒரு நல்ல எழுத்தானது வாழ்க்கையின் நுட்பங் களையும் மனவுணர்வுகளின் ஆழ அகலங்களையும் மிகுந்த அவதானத்துடன் தேர்ந்தெடுத்த வார்த்தை களூடாகவும், நேர்த்தியான உத்திமுறைகளூடாகவும், கலைநயம் குன்றாமல் வெளிப்படுத்துகின்றது.

அழகியல் அச்சாணியில் சுற்றிச் சுழன்று நின்று, வாசகர் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. அதற்கும் மேலாக, தீட்ஷண்ய தரிசனத்துடன் வாழ்வின் புதுப்புது அனுபவங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்துகொள்கின்றது. உண்மையை உண்மையாகச் சொல்கின்றது.

அது அடிப்படை மனிதாபிமானமும் சத்தியமும் இலட்சிய வேட்கையும் கொண்டதாக அமைகின்றது. மானுட விடுதலையை அவாவுகின்றது. மனித மனங்களில் நம்பிக்கையை விதைக்கின்றது. தார்மீக உணர்வின் வெளிப்பாடாக வந்தமைகின்றது.

இவற்றைச் சாதிக்கவல்ல எழுத்துக்களைப் படைப்பதற்கு பரந்த அறிவு வேண்டும் அனுபவ முதிர்ச்சி வேண்டும் தெளிந்த சிந்தனை வேண்டும் வாழ்வியலின் நுண்ணிய கூறுகளைக் கூர்ந்து அவதானிக்கும் திறன் வேண்டும் ஆழமான வாசிப்பு வேண்டும் அடிப்படை மொழியியல் தேர்ச்சி வேண்டும்.

இவை இல்லாமையின் வறுமை, அறிவுப் பானையை வெறுமையாகவே வைத்திருக்கும். அகப் படுவதற்கு ஏதுமற்ற நிலையில், பாவம் அகப்பைதான் என்ன செய்யும்? தேடி வைத்திருந்தால்தானே அள்ளித் தெளிக்க முடியும்!

எழுத்து என்பது "சாப்பாடு சமைப்பது" போன்றதொரு சாமானிய சங்கதியல்ல. அது ஐம்புலன் களையும் ஒருமுகப்படுத்தி, அர்ப்பணிப்போடு ஆற்றப்படும் ஓர் உன்னத ஆக்கப் பணி! அதனால்தான் ஈழத்தமிழின் தற்கால எழுத்தூழியத் தலைமகன் எஸ்போ அவர்கள், எழுதிவரும், எழுதவரும் எல்லோரது செவிப் பறைகளிலும் ஓங்கி ஒலிக்கச் சொல்கின்றார்

"எழுத்து என்பது தவம்!"

ஏறுமா இந்த வாஸ்தவம், எங்கள் செவிப் புலன்களுக்கு?

•

தாகம் அடங்காத காலம்

பழுப்பேறிய காகிதங்களில்
உட்கார்ந்து கொண்டு
காலத்திற்கும் எழுத்திற்குமான
அவரவர்களின்
இடைவெளிகளைப் பார்த்து
முறைத்துக் கொண்டிருந்தன
சொற்கள்.

ஆளரவமற்ற வெளிகளில்
ஆட்காட்டிகளின் அலறல்களை
புரிந்து கொள்ள முடியாது
அலைந்துழலத் தொடங்கிற்று
துயரக்காற்று.

சிதைந்த நிலத்தில்
புதைந்த இடமறியாத
உருவங்களால் மாறிப்போன
விதைப்பு வெளிகளை தேடி
அங்குமிங்குமாய்த் திரிகிறது
ஒற்றைப்பாடல்.

அமானுஷ்யம் நிறை
அந்தகார இருள்வெளியில்
படர்ந்து கொண்டிருக்கின்றது
விடுதலை பெறமுடியாத
உயிர் மூச்சு.

சொற்களால் உயிரூட்ட முடியாத
மயான வெளியின்
அலறல்கள் அங்குமிங்குமாய்
ஆடிக் கொண்டிருக்கின்றன
ஊசல்களாய்.

மௌனங்கள் மாத்திரம்
விகாரமாய் எழுந்து நிற்கும்
சலனங்கள் நிறைந்த வெளி
துயரக்காற்றை என்றோ
நித்தியமாக்கியிருக்கின்றது.

ஊழிக்காலத்தின் கோரத்திற்கு
பின்னரும்
கனன்று கொண்டிருந்தன
நிலமற்றுப் போனவனின்
அக்கினிப் பெருமூச்சு.

பெருமூச்சுக்களின் மொழிகளை
புரிந்து கொள்ளமுடியாத - இந்த
கலிகாலம் மாத்திரம்
என்றோ ஒருநாள்
வரலாற்றை எழுதும்போது
பெயரிட்டுக் கொள்ளும்
இந்த நிகழ்வெளி
"தாகம் அடங்காத காலம்" என்று!

-வெற்றி துஷ்யந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் மதிப்பீடு

ஈழத்தில் சினிமா சார்ந்த கனதியான நூல்களின் வருகையானது பாலையாய் நீளும் தருணத்தில் திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம் என்ற அ.யேசுராசாவின் தொகுதியின் வருகை மிகமுக்கியமான விடயமென்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்காதென நம்பலாம்.



அ.யேசுராசாவின்

திரையும் அரங்கும் : கலைவெளியில் ஒரு பயணம்

– அபூர்வன்

சூழ்ந்து, நாடகம் என்பனவற்றின் நீட்சியான சினிமாவானது, வெகுமக்களை இலகுவாக ஈர்க்கும் வீரியமான ஊடகமாகும். சினிமாவின் பன்மொழிப்பரப்பில் படைப்பின் சாத்தியங்கள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன. நகரும் படிமங்களில் உன்னத பரிசோதனைகளை நிகழ்த்தி அலாதியான அனுபவத்தொற்றலை உருவாக்கி அதிசயிக்க வைக்கிறார்கள். எனினும் தமிழ்ச் சூழலில் வாய்ப்பாட்டுப்பாங்கான செல்நெறியினை விட்டுவிடுதலையடையும் எத்தனங்கள் மிகமிக அரிதாவே உள்ளன. வணிக ஆதாயத்தை முதன்மைப்படுத்தி சினிமாமொழியைப் பலவீனப்படுத்தி இனப்பெருமிதத்தைக் கொச்சைப்படுத்துகிறார்கள். திரள் மக்கள் இதழ்களின் விமர்சனம் என்ற கானல் விம்பத்தில் பொதுப்புத்தி கேலிக்குள்ளாக்கப்படுகின்றது. சிற்றிதழ்களில் ஆங்காங்கே ஆக்கபூர்வமான கருத்துக்கள் பதிவாகின்ற போதிலும் வரையறுக்கப்பட்ட குழுமத்தோடு முடங்கிவிடுதல் தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடுகளில் ஒன்றாகி விட்டது.

ஈழத்து சூழலில் நுண்தரிசனத்தோடு சினிமா சார்ந்த விமர்சனங்களை எழுதுவோர் அருகியே உள்ளனர். அதிமனித வழிபாடுகளைக் கட்டியெழுப்பி, "கட்டவுட்" கலாசாரத்திற்கு உறுதுணையாகும் ஊடக நாகரிகத்தின் விளைச்சலை ஈழத்திலும் காண முடிகிறது. இத்தகைய அபத்தச் சூழலில் கே.எஸ்.சிவகுமாரன். அ.யேசுராசா, உமாவரதராசன், கேதாரநாதன், குப்பிளான் ஐ.சண்முகன், ரஞ்சகுமார் போன்ற சிலர் காத்திரமான விமர்சனங்களை எழுதிவருவது ஆறுதலளிக்கிறது. ஈழத்தில் சினிமா சார்ந்த கனதியான நூல்களின் வருகையானது பாலையாய் நீளும் தருணத்தில் "திரையும் அரங்கும்: கலை வெளியில் ஒரு பயணம்" என்ற அ.யேசுராசாவின் தொகுதியின் வருகை மிக முக்கியமான விடயமென்பதில் மாற்றுக் கருத்து இருக்காதென நம்பலாம். தமிழியலும் காலச்சுவடு பதிப்பகமும் இணைந்து நிகழ்த்தியிருக்கும் விதந்துரைக்கத்தக்க முயற்சி! அலை, கவிதை, தெரிதல் போன்ற சிற்றிதழ்களும், "மரணத்துள் வாழ்வோம்" முதலான தொகுப்பு முயற்சிகளும், தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும், அறியப்படாதவர்கள் நினைவாக போன்ற புனைவு முயற்சிகளும் அ.யேசுராசா என்கின்ற இலக்கிய ஆளுமையின் குறிகாட்டிகளாக அமைந்துள்ளன.

பகுதி I திரை – பகுதி 2 அரங்கு என்றவாறாக நூல் இரு பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. தரமான உலக சினிமா குறித்த சிலாகிப்புக்களும், தமிழின் வணிக முயற்சிகள் பற்றிய முகஞ்சுழிப்புகளும், சிங்கள சினிமாவில் நிகழ்ந்து வரும் மாற்றங்களும், நல்ல திரைப்பட ரசனை குறித்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல்களும், சினிமா ஆளுமைகள் பற்றிய விதந்துரைப்புகளும் உள்ளடங்கிய பெட்டகமாக "திரை" அமைந்துள்ளது. "தமிழ்த்திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்" என்ற கட்டுரையானது செழுமையான தகவல்களை உள்ளடக்கியுள்ளது. திராவிட அரசியல் சினிமாவை ஆதாயமாக்கியமையும், சினிமா ஈழத்து அரசியலை ஆதாயமாக்கியமையும் நுண்ணிய விமர்சனமாக உட்பொதிந்துள்ளமை சிறப்பான அம்சமாகும். பாலுமகேந்திரா குறித்த செய்தியில் "வீடு" திரைப்படம் இடம்பெறாமை சிலருக்கு ஏமாற்றமளிக்கலாம். மேலும் சிங்கிதம் சீனிவாசராவ் படைப்புகளுள் தவறுதலாக "குருதிப்புனல்" திரைப்படமும் உள்ளடங்கி விட்டது. அத்திரைப்படம் பி.சி.ஸ்ரீராம் இயக்கத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

"தமிழ்த்திரைப்படங்களில் போராட்ட சூழலின் வெளிப்பாடு" என்ற கட்டுரையானது எண்ணற்ற ஆய்வுகளுக்கு தொடக்கப்புள்ளியாகும். ஈழத்தின் துன்பியலை வணிகமாக்கிய சினிமா குறித்தும், கால்கோள் நிலைப்பட்ட ஈழத்துத் திரைப்பட முயற்சிகள் பற்றியும் விரிவாக விளக்குகிறது. குறும்படங்களை முன்வைத்து விதந்துரைக்கத்தக்க பதிவுகளை நிகழ்த்தியுள்ளது. நூலாசிரியர் குறிப்பிடுவதைப் போன்று "கன்னத்தில் முத்தமிட்டால்" திரைப்படத்தில் "எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக" என்ற சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை இடம் பெறுவதில் பலருக்கும் உடன்பாடு கிடையாது. எனினும் கவிதை பயன்படுத்தப்பட்ட நோக்கம் குறித்த புரிதலில் மாறுபாடு உண்டு. எழுத்தாளர் இந்திரா(மாதவன்) தன்னை அடையாளப்படுத்தவே போராளிகளிடம் அக்கவிதையை எடுத்தாள்வதாக நான் புரிந்து கொண்டேன். எனது புரிதலின் அடிப்படையில் போராளிகளின் இலக்கிய அறிவு பற்றிய மிகைப்படுத்தலாகவே அக்காட்சி அமைகின்றது. "நாளை நமதே" சினிமாவில் நிகழும் கேலிக் கூத்தின் மாற்றுவடிவமாகவும் நோக்கலாம். ஈழத்துப்படைப்பு முயற்சிகளில் இயக்குநர் ஞானரதன் குறித்து வெளியிடும் கருத்துக்கள் சாஸ்வதமானவை. ஞானரதனின் தனித்துவத்தினை ஏனையோரிடம் காண முடியாமற் போனமை துரதிஷ்டவசமானது. சில்வஸ்ரார் ஸ்ரோலன், சுவாஸ்நோக்கர் என்போரின் படங்களில் "தலைமை" கொண்டிருந்த தெவிட்டாத ஈர்ப்பு தனிப்பட்ட ரசனை சார்ந்தது. "ஈழத்து சினிமாவில் ஆங்கிலப் பாணியிலான காட்சியமைப்புகள் தனிநபர் ரசனையோடான சமரசத்தால் உருவானவை" என்னும் தமிழகத்து விமர்சனங்களில் ஓரளவும் உண்மையும் உண்டு. இதனாலேயே தான் குறும்படங்கள் ஓரளவு தனித்தன்மையோடும் வேறு நிறத்தோடும் மிளிர்ந்துள்ளன.

யாழ்.திரைப்பட வட்டத்தின் செயற்பாடுகளை உரியமுறையிலே பதிவு செய்துள்ளார். "ஸ்கிறிப்நெற்" அமைப்பின் குறும்படங்கள் குறித்த விமர்சனமும் நேர்மையோடு நிகழ்த்தப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியது. மாற்றுமொழித்திரைப்பட ஆளுமைகள் மீதான தீராக்காதலையும் சுவைபடச்

ஆய்வியல் நிறைஞராகப் பட்டம் பெற்றவர்கள் கூட வழுவான சொற்பிரயோகத்தோடும், எழுவாய் பயனிலை இயைபின்றியும் தமிழைப் பழிப்பிற்கு இடமாக்கும் இன்றைய சூழலில் அ.யேசுராசாவின் மொழியாட்சி துருப்பிடிக்காத தூய்மையோடு தென்படுகிறது.

சொல்லியுள்ளார். ரே(வங்காளம்), ஜோண் ஆபிரகாம்(மலையாளம்), அடூர் கோபால கிருஷ்ணன்(மலையாளம்), றோல்வ் புஷ் (ஜேர்மன்), காலெட் சித்திக்(குவைத்), சார்லி சப்பிளின் போன்ற மேதமைகளின் வசீகரமான தருணங்களை நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். திரைப்பட விழாக்களின் அனுபவங்களை சுவாரஸ்யம் குலையாத மொழி நடையில் வெளிப்படுத்துவதும் விதந்துரைக்கத்தக்கது. பிறவி, உப்பு, நதிக்கரையினிலே போன்ற திரைப்படிமங்கள் மீது கட்டியெழுப்பப்பட்ட கருத்துக்கள் போலித்தனமற்ற பார்வையோடு திகழ்கின்றன. "செம்மீன்" மலையாள சினிமா பற்றிய மிகை மதிப்பீட்டினைப் புறந்தள்ளுவதும், "ஆட்டோ கிராப்" குறித்து ஈழத்து விமர்சகர்கள் சிலாகித்த கருத்துக்களை தலைகீழாகப் புரட்டிப்போடுவதும் அவதானத்திற்குரியது. தமிழ் சினிமாவின் மைய நீரோட்டத்திலிருந்து விலகிய சிங்கள சினிமாவினை கவனக் குவிப்பு மிகுந்த வகையான தளமொன்றில் வைத்து நோக்கும் பாங்கு பாராட்டப்பட வேண்டியது.

அரங்கு சார்ந்த பதிவுகளை கொண்டமைந்தாக இரண்டாம் பகுதி காணப்படுகின்றது. ஒரு பாவை வீடு, மண்சுமந்த மேனியர், யுகதர்மம், நாற்காலிக்காரர், இருட்டினில் குருட்டாட்டம், முகமில்லா மனிதர்கள் போன்ற ஆற்றுகை குறித்த செறிந்த கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கை அவைக்காற்றுகை கழகம், நாடகஅரங்கக் கல்லூரி என்பனவற்றின் செயற்பாடுகளை கனதியறிந்து ஆவணப்படுத்துகிறார்.

ஆய்வியல் நிறைஞராகப் பட்டம் பெற்றவர்கள் கூட வழுவான சொற்பிரயோகத்தோடும், எழுவாய் பயனிலை இயைபின்றியும் தமிழைப் பழிப்பிற்கு இடமாக்கும் இன்றைய சூழலில் அ.யேசுராசாவின் மொழியாட்சி துருப்பிடிக்காத தூய்மையோடு தென்படுகிறது. இலக்கணச் செம்மைமிகு சொற்களும், "வழுவமைதியை" இரந்து நிற்காத வாக்கிய இயைபுகளும் இத்தொகுதிக்கு தனித்தன்மையை நல்கியுள்ளன. ஒட்டுமொத்தத்தில் "திரையும் அரங்கும்: கலை வெளியில் ஒரு பயணம்" என்னும் இந்நூல் நகரும் படிமங்களை நயக்க விரும்புவோர்க்கு வரப்பிரசாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

குரல் எறும்பு

என் தாயை இன்று சந்தித்தேன்
முற்றிப்
பழுத்து விழுந்து
நிலத்தில் கிடந்த தேங்காயை

நான் விளைந்த
பெருங்கடலை நோக்கியபோது

நீரெல்லாம் வற்றி
உப்புக் குறைந்து
கரைகள் வரள
ஒரு தென்னையும் வளராமல்
ஒரு பிடி மண்மட்டும் கிடப்பதைப்போல்
தெரிகிறதே
வாழ்க்கையா

பார்வையில்
நல்ல மங்கல்
என் குரலைவைத்தே அடையாளம் காணும்
கெட்டித்தனம் மட்டும் இருக்கிறது
நானும் இப்போது
குரல் மழுங்கிப்போன ஒரு
மரங்கொத்தி
பழைய கல்லில் கத்தி தீட்டுகின்ற சத்தம்
இல்லை

களிமண் கட்டியை
பறவை கொத்தினால்
உண்டாகும் ஒலிதான்

இப்படியும் சொல்லலாம்

மழை ஓய்ந்த பிறகு
மரத்தின் இலையில் குடியிருந்த துளிகள்
வெயில் தம்மைக் குடித்தாலும் குடிக்குமென்று
நடுங்கி
நிலத்தில் கிடந்த கடதாசியில்
கால் நீட்டி
உட்காரும்போது
கையேந்திய காகிதம் நெட்டி முறிக்கும் சத்தம்

எதுவாக இருந்தாலும்
என் தாய்க்கு
நான் யாரென்று காட்டிற்று
என் குரல் எறும்பு

–சோலைக்கிளி

noolaham.org | aavanaham.org

பேராசியர் செ.யோகராசா

இன்றைய பின்நவீனத்துவ நோக்கிலான நவீன சிந்தனைகளும் வாய்மொழிப் பாடல்கள் ஆய்விலேற்பட்ட புதிய பார்வைகளும் வாய்மொழி மரபிலே உருவான - அண்மைக்காலம் வரை கவனத்திற்குட்படாத - புலவர் பரம்பரையினருள் ஒரு சாராரை முக்கியப்படுத்துகின்றன.

ஈழத்து நவீன கவிதை உருவாக்கத்தில் வாய்மொழிப் பாடலின் செல்வாக்கு

இன்றைய பின்நவீனத்துவ நோக்கிலான நவீன சிந்தனைகளும் வாய்மொழிப் பாடல்கள் ஆய்விலேற்பட்ட புதிய பார்வைகளும் வாய்மொழி மரபிலே உருவான - அண்மைக்காலம் வரை கவனத்திற்குட்படாத - புலவர் பரம்பரையினருள் ஒரு சாராரை முக்கியப்படுத்துகின்றன. இவர்கள் பாடிவந்துள்ள பாடல்கள் நவீன கவிதைக் குரிய பண்புகள் பலவற்றை உதாரணமாக, சமூகச்சார்பு, அரசியற்சார்பு, பொதுமக்கள் நலன், ஆதிக்க எதிர்ப்பு, எளிமை முதலியன - பெற்றுள்ளன. இத்தகைய ஆரோக்கியமான இன்றைய ஆய்வுச் சூழலில் ஈழத்து நவீன கவிதையின் தோற்றம்பற்றி மறு மதிப்பீடு செய்வது அவசியமாகின்றது. அதுவே இவ் ஆய்வின் நோக்கமாகின்றது.

ஆய்வின் நோக்கம் :

ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றம் ஏறத்தாழ 20ஆம் நூற்றாண்டில் நாற்பது களின் நடுப்பகுதியில் இடம்பெற்றதாகவே இன்றுவரையான ஈழத்து ஆய்வாளர்கள் யாவரும் குறிப்பிட்டு வந்துள்ளனர். இவ்விதத்தில் மஹாகவி, நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி முதலானோர் ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளாகவும் கருதப்பட்டு வருகின்றனர். எனினும்,

2. வாய்மொழிப் பாடல் வகைகள்:

2.1 தொடர்ந்து செல்வதற்கிடையில் வாய் மொழிப் பாடல் வகைகள் பற்றிய முக்கிய மான சில விடயங்களை எடுத்துரைப்பது அவசியமாகின்றது. நுண்ஆய்வின்போது, வாய்மொழிப் பாடல்கள் இருவகைப்படுத்த முடிகின்றது. அவையாவன :-

அ. ஏற்கனவே அறியப்பட்டுள்ள வாய் மொழிப்பாடல்கள் :-

i) இயற்றியவர் யாவரென்று அறியப்படா தவை : உதாரணம் :- தாலாட்டு, ஒப்பாரி
ii) கூட்டு முயற்சியால் எழுந்தவை
iii) உணர்ச்சியை முதன்மைபடுத்துபவை
iv) வரையறைக்குட்பட்ட பொருள்மரபு உடையவை : உதாரணம் :- பிறப்புத் தொடக்கம் (தாலாட்டு) இறப்பு வரையாக (ஒப்பாரி) வாழ்வின் ஒவ்வொரு கட்டங் களுடனும் தொடர்புபட்ட முக்கியமான விடயங்கள் பற்றி எழுந்தவை
v) படிப்பறிவு குன்றியோரால் இயற்றப் பட்டவை

ஆ) இப்போது இனம்காணப்பட்டுள்ள வாய் மொழிப் பாடல்கள்,
i) இயற்றியவர் யாவரென்று அறியப்பட்டவை
ii) தனி ஒருவர் முயற்சியால் எழுந்தவை
iii) உணர்ச்சியை விட பிரச்சினைகளை முதன்மைப்படுத்துபவை
iv) பல்வேறு விடயங்கள் சார்ந்தவை

2.2 மேற்கூறிய இரண்டாவது வகையான வாய்மொழிப் பாடல்களுக்கான பெயர் குறித்து ஆய்வாளர்களிடையே ஒருமித்த அபிப்பிராயம் ஏற்படவில்லை. பலவகைப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன. உதாரணம்:-

i) அரைவாய் மொழிப்பாடல்கள் (Semi oral)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) குஜிலிப்பாடல்கள்
iii) எழுத்து வகைப்பட்ட வாய்மொழிப் பாடல்கள்
iv) முச்சந்தி இலக்கியம்

3. நவீன கவிதைக்குரிய பண்புகள்

3.1 எவ்வாறு அழைப்பது பொருத்தமானது என்பதனை இவ்வேளை ஆராய்வதற்கு அவகாச மில்லையாதலின் இப்பாடல் வகையின் முக்கியத்துவம் குறித்து அதாவது நவீன கவிதைக்குரிய பண்புகள் என முன்னர் குறிப்பிட்டவற்றுள் சில பண்புகளை இவ்வகைப் பாடல்களில் இனங்காண முடிவது பற்றி அவதானிப்பதே இவ்வேளை அவசியமாகின்றது.

4. உள்ளடக்கம்

4.1 அரசியற்சார்பு

4.1.1 இவ்வகை வாய்மொழிப் பாடல் மரபினரான சம்மாந்துறைப் புலவர் முகம்மது தம்பி ஹாஜியார் இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையிலே பின்வருமாறு பாடுகின்றார்.

சுதந்திரப்பா

இன்னும் என்ன செய்யப்போறாங்கோ
சுதந்திரம் தனை என்ன முறையில் நடத்தப்
போறாங்கோ. (இன்)

வட்டமேசை கூடியாச்சு
வந்தே மாதரம் பாடியாச்சு
இஸ்டமுடன் இலங்கை நகர்க்கு
சுதந்திரமும் கிடைத்துப்போச்சு (இன்)

தேசாதிபதி சேர் என்றி மூராம்
சேனநாயகா பிரதமராம்
ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரி
என்னும் பண்டாரநாயகாவும் கூடி
(இன்னும் என்ன செய்யப் போறாங்கோ)

உத்தியோகம் தனில் உள்நாட்டு மந்திரி
உற்றகுணத்திலாகவும் கூடி
நற்றவராம் திருமந்திரி ஜயா
நல்லவரும் கூடி எங்களிலங்கையை
(இன்னுமென்ன செய்யப்போறாங்கோ)

சிங்கக் கொடியேற்ற சேனநாயகா
எண்ணம் அதை செய்யாமல் தடுக்க
ஜீ. ஜீ. பொன்னம்பலம் எண்ணம்
இந்த விசயத்தில் கவுஞ்சலில் குழப்பம்
இப்படி இருந்தால் என்னமா நடக்கும் (இனி)

சிங்கக் கொடிதனை சேர்ந்து
ஆமோதித்தார்
சின்னலெப்பை எனும் காத்தான்குடிப் பற்றார்
மங்காத இஸ்லாத்தின் மகிமையை
எடுத்தார் மாபெரும் சிங்கத்துக்கே கயிர்பிடித்தார். (இனி)

மேற்கூறிய பாடலின் எள்ளற்தொனியும் மொழிப் பிரயோகமும் ("வந்தே மாதரம்") தொலை நோக்கும் ஒரு புறமிருக்க, இப்பாடல் எழுந்த காலத்தில் நவீன கவிதையுலகினுள் பிரவேசித்த ஈழத்து நவீன கவிஞ ரெவரும் சமகால அரசியலைப் பாடுபொருளாக்கவே இல்லை என்பதே கவனிக்கத்தக்கது.

4.1.2 எண்பதுகள் கால மலையக அரசியல் நிலை பற்றி அண்மையிலே காலமான வட்டகொட கபாலி செல்வன் பின்வருமாறு பாடியுள்ளார்:-

மாரி மாரி வரும் அரசாங்கமே தினம்
மக்கள் வயிற்றலடிப்பது பெரும்பாலமே

ஆட்சி முடியிலே அழகா பேசுறீங்க
ஆட்சிக்கு எரிந்துவிட்டால்
அடிவயித்தில அடிக்கிறீங்க நீங்க

சாயிரப் பக்கம் சாயிரவனெல்லாம்
பொழைச்சிக்கிறான் -எந்த
நாளும் உழைச்சி கொடுக்கிறவன்
திண்டாடுறான்.

பூமாலை போடவனெல்லாம்
பொரணி பேசுறான்.கைய தட்டி
விட்டவனெல்லாம் கசந்து போயிட்டான்
மேடையிலே பேசுவது ஒன்னு பிறகு

சட்டம் போட்டு தீட்டுவது ஒன்னு
நீதி நேர்மையெல்லாம்
எங்கே வச்சீங்க
நிம்மதியா எங்களை நீங்க வாழவிடுங்க

அஞ்சு வருசம் கழிஞ்ச பின்பு ஓட்டுக்கு
நீங்க வாறீங்களே எங்களது வீட்டுக்கு
ஓட்டு பிச்சை கேட்டு எங்களை கும்பிட்டு
வெண்டுக்கிட்டு போறீங்களோ
பார்லிமென்டு உள்ளுக்கு.

4.1.3 தொண்ணூறுகள் கால இயக்கச் செயற்பாடுகள் பற்றி இறக்காமம் மீரா உம்மா பாடிய பாடலின் ஒரு பகுதி பின்வருமாறு :-

பொல்லாத புலிகள் ராணுவங்கள் ஆயுதம்
புச்சாக்கி வைத்து விடுங்கள்
பெரிய நெருப்பை நூருங்கள்
உங்கள் பொறுமை நிறைந்திட்ட
பொதுமக்கள் யாவருக்கும்
பெரும் வெற்றி வாங்கித் தாருங்கள்
புலிகளை பொதுமக்கள் ஆக்கி வையுங்கள்

noolaham.org | aavanaham.org

4.2 சமூகச் சார்பு

4.2.1 மலையக மக்களது பிரச்சனைகளுள் தலையாயது லயத்து வாழ்க்கையில் காணப்படுகின்ற பேரவல நிலை. இது பற்றி வி.எஸ். கோவிந்தசாமி தேவர் பாடிய பின்வரும் பாடற்பகுதி கவனத்தை ஈர்ப்பது :-

பத்தடிக் காம்பரா வீட்டிலே மக்கள்
படுங்கஷ்டம் பாருங்க பாட்டிலே

தாயும் தகப்பனும் அதுக்குள்ளே மேஜர்
ஆகிய தலைப் பெண்ணும் அதுக்குள்ளே

மாமனும் மாமியும் அதுக்குள்ளே சொந்த
மருமகனும் மருகளுமே அதுக்குள்ளே

அக்காளும் தம்பியும் அதுக்குள்ளே பெரிய
அண்ணன் பொண்டாட்டியுமதுக்குள்ளே

விருந்தாடி வந்தவர் அதுக்குள்ளே - இனும்
வீரப்பன் குடும்பமும் அதுக்குள்ளே

சடங்குகள் ஆவதும் அதுக்குள்ளே பச்ச
குடிசைகள் அமைப்பதும் அதுக்குள்ளே

குழந்தைகள் பெறுவதும் அதுக்குள்ளே சதா
கொஞ்சி மகிழ்வதும் அதுக்குள்ளே

மண்டுகள் வைப்பதும் அதுக்குள்ளே மாடன்
மருளாகிக்குதிப்பதும் அதுக்குள்ளே

சங்கம் பேசுவதும் அதுக்குள்ளே நாமள்
சாமி கும்பிடுவதும் அதுக்குள்ளே

செஞ்சேவல் வெண்கோழி அதுக்குள்ளே பூனை
செம்பாரை நாய்க்குட்டி அதுக்குள்ளே

விம்மலும் பொருமலும் அதுக்குள்ளே சதா
விசனப்பட்டிருப்பதும் அதுக்குள்ளே

தும்மலும் துரத்தலும் அதுக்குள்ளே எச்சி
தாம்பூலம் குவளையும் அதுக்குள்ளே

முதலாளிமார்களின் சதியப்பா வேறே
கெதியில்லை நம் தலைவிதியப்பா

மலையக மக்களது வாழ்வியல் கொடுமையை மேற்கூறிய கவிஞன் போன்று நவீன கவிஞர்கள் (சிறுகதை எழுத்தாளர்கள் கூட) எவரும் இன்று வரை சித்திரித்திருக்கவில்லை என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

4.2.2 மலையக மக்களது முக்கியமான மற்றொரு பிரச்சினை குடிபாவனையாகும். இதுபற்றி பதுளை கே.கே.எஸ்.ஜில் இவ்வாறு பாடுகின்றார் :-

பெண்:
என்னா சொன்னாலும் செவியில் ஏறலியே சாராயத்தை
முன்னும் பின்னும் யோசியாமல் மூன்று வேளை நீ குடிக்க
நான் சொல்லுவதைக் கேளு சீச்சி நமக்கு பிள்ளைகள் ஏழு.

ஆண்:
அடிபிள்ளை இருந்தாலென்ன
கள்ளியைப்போல் முளிக்க வேண்டாம்
வெள்ளி வெளுக்க முன்னே வேலைக்கு
நான் போய் விடுவேன்
மிரண்டிப் பேசாதே உன்னை விரட்டி
அடிப்பேன் அங்கு

பெண்:
அடப்பிள்ளைக்கிட்டத்துணியுமில்லை
அள்ளித்திங்க சோறுமில்லை
கள்ளனைப்போல் முளிக்காதேடா
கடன்தந்தவங்க கேக்கும் போது
உனக்கு வந்தகேடு நீ எடுப்பதே திருவோடு

ஆண்:
ஓடு எடுத்தாலென்ன ஊரூராபோனாலென்ன
கேடுகெட்டு அலைந்தாலென்ன கெட்டவேச
ஓடிப்போவேன்
ஒன்னால் என்ன ஆகும் ஒங்கப்ப பணமா போகும்

பெண்:
அப்பன் ஆயா என்று சொல்லி அவர்கள் பேச்சி பேச வேண்டாம்
தப்பாமலுனக்கு இப்ப சனியன் வந்து ஆட்டுமடா
சீரலிஞ்சமாடா என் சீட்டுக்காசைத்தாடா

ஆண்:
அடி ஈட்டுக் கடையில போயி
எடுத்து வந்த நகைகளுக்கு
ஒங்கமாட்டன் காசு கொடுப்பான்
பத்திரம் இனிபேசாமல்போ
பாலுக்காசு எங்க பவரைக்காட்டாத இங்க.

4.2.3 மலையகப் பெண் தொழிலாளர்களது குடும்பப் பளுவும் வேலைப்பளுவும் அவர்கள் தவிர வேறெவராலும் எளிதில் உணரப்பட முடியாதன. அவைபற்றி எடுத் துரைக்க முற்பட்டுள்ளார் வி.எஸ்.கோவிந்தசாமி தேவர் அவரி பற்றி நெடுமுகம் பாடலொன்றின் நடுப்பகுதி :-

வீறு கொண்ட கண்டாக்கு
விரட்டிவிடுவாரென்று
விடியுமுன்னே கூடையுடன்
பிரட்டுக் களஞ்சென்று

சோறுகதி உண்ணாமல்
தோகைமயில் நல்லாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருசுருப்பாத் தானெழும்பி
துண்டு வாங்கச் செல்வாள்

மாறு கொண்ட கங்காணி
கணக்குப்பிள்ளை அய்யா
மணிக்கணக்கை பார்த்ததுவும்
விரட்டுவதும் பொய்யா

தேறுதலோ சொல்லிடவோ
ஆளொருவரில்லை
சீறு கிறர்துர்ப் பேச்சை
நாள் தோறுந்தொல்லை

ஆக்கிருந்த சோறுகறி
அவசரமா உண்டு
அஞ்சாறு புள்ள குட்டி
கட்டி முத்தமிடுவாள்

கைக்குழந்தைதான் தூக்கி
கக்கம திலிடுக்கி
கம்பளியைத் தான் மடித்து
பம்புத் தட்டை பிடித்து

முக்காடு தலையிட்டுக்
கூடை தலைமாட்டி
மூத்தபிள்ளை நச்சரிக்க
முதுகில் ரண்டுபோட்டு

மலையேறி கொழுந்தெடுக்க
மங்கை புறப்பட்டாள்.

4.2.4 சில வருடங்களுக்கு முற்பட்ட ஏறாவூர் நகரத்தின் அலங்கோல நிலை கண்டு மனம் நொந்து பிரலாபிக்கின்றார், எல்.கே.முஹியதீன் பிச்சைப் புலவர்.

ஏர்வளம் மிஞ்சிய ஏறாவூர்ப் பட்டினம்
எப்போதுயருங்கா அண்ணாச்சி
சீர்பெறும் என்றுநாம் எண்ணினோம் - எண்ணங்கள்
சேற்றுள் விழுந்த கதையாச்சு

முந்தியிருந்த தலைவரெல்லோருமே
மோசக்காரர்களாம் அண்ணாச்சி
பிந்தியே வந்த இளசுகள் - பேசிப்
பிடித்த பொறுப்புக்கள் என்னாச்சு

கூட்டுறவுக்குள்ளே குந்திக்கொண்டு சிலர்
கொள்ளையடிப்பாங்கள் அண்ணாச்சி
போட்டபடிக்கல் நிறைய நிறுத்தால்
பொருட்கள் குறைவதும் என்னாச்சு

மாரிபொழிந்து மழை தண்ணிர் கட்டினால்
மார்கட்டுள் செல்ல இயலாது

ஊறிய சேற்றில் உடுப்பும்
புதைந்திடில்
ஊத்தையைப் போக்கிடச் சோப்பேது...

4.2.5 மட்டக்களப்பு பிரதேசம் கோயில்கள் மலிந்த பிரதேசம். இங்குள்ள கோயில் நிர்வாக முறை வித்தியாசமானது, குறைபாடுகளும் மிகுந்தது. ஆயினும் அது பற்றி நவீன படைப்பாளிகள் எவரும் கண்டு கொள்வதில்லை. இவ் வாய்மொழிப்புலவர்கள் அத்தகையவரல்லர். தாண்டவவேலன் நீண்ட காலத்திற்கு முன்பே அதுபற்றி எதிர்ப்புக்குரல் எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"கடவுளின் பெயரைச் சொல்லி
களியாட்டந்தான் புரியும் கனவான் பல்லோர்
வழிதவறி வரம்பேறி வம்புக்குள்
வாழ்வு தன்னை தள்ளிவிட்டார்
பெரியவர்கள் எனச் சொல்லிப்
பேயாட்டம் ஆடுகின்ற பித்தர் கூட்டம்
நெறிப்பட்ட நிலைகொண்டு நிம்மதியாய்
மக்கள் குலம் வாழச் செய்வார்"

4.2.6 பெண்கள் குயரம் :-

பெண்கள் இதுவரைகாலமும் "சொல்லாத சேதிகள்" சொல்வதற்கு நவீன கவிதை மட்டுமன்றி அதற்கு முன்பே இவ்வகை மொழிப்பாடல்களையும் பயன்படுத்தி வந்துள்ளனர். தனது குடும்ப அவலம் பற்றி ஓரளவு படித்த பெண் ணொருத்தி பாடிய பாடலின் ஒரு பகுதி பின்வருமாறமைகின்றது.

நன்றி மறந்தார்
நகமிருக்கச் சதையெடுத்தார்
கழுத்திலையும் கத்தி வைத்தார் - இனி ஓர்
காலமும் தான் பேச்சிருக்கோ

மலடி எண்டு சொல்லி
வசை பேசிப் போட்டாரு

படைத்த றகுமான் மாமி என்னைப்
பதராக்கிப் போட்டாராக்கும்

உருகும் மெழுகானேன்
உள்ளம் மெழுகக் கொம்பானேன்
கடுகு நிறமானேன்-மதினி இந்தக்
கவலை வந்த நாள் தொடுத்து

பட்டமரம் பழம் தரும்
பறவை இறகு தரும்
சந்திரனும் சாலமுரைக்கும் - என்ற
தன்மைகளைக் கேட்டவுடன்

கடலை மையாக்கி
கானகத்தை தாளாக்கி
எழுதி முடித்தாலும்
என் கவலை தீராது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவலையுடன் பாடினேன்-என்ற
கண்ணால் நீர் ஓடியதால்
தொப்பி நனைஞ்சிருக்கு அதைக்
கூர்மையுடன் பார் மதினி

மற்றொரு பெண் தனக்கு மணம் பேசப்பட்ட ஆடவனைப் பற்றி பின்வருமாறு ஏளனம் செய்தாள்:

"என் செல்ல லாத்தாண்டீ
எனக்கு இந்தச்
சோகையன் வேணாம்டீ
காக்கொதரிசியில
கஞ்சி நிறுக்கிறான்
காறாத்தல் சீனியில
மிச்சம் பிடிக்கிறான்
என் செல்ல லத்தாண்டீ
எனக்கு இந்தச்
சோகையன் வேணாம்டீ
எண்ணெய் தலையில
மண் அள்ளிப் போடுர்றான்
ஏறிப்படுக்கிற கட்டிலப் பிக்கிறான்
சுங்கான் கருவாட்ட
சுட்டுச் சப்புறான்....

5. வடிவம்:

மேற்கூறியவாறான உள்ளடக்க முக்கியத்துவம் ஒருபுறமிருக்க இவற்றின் வடிவ முக்கியத்துவமும் கவனத்திற்குரியதாகின்றது. இவ்வகைப்பாடல்களின் இசைப் பண்பு பற்றி எடுத்துரைக்க வேண்டியது அவசியமன்று. இதுதவிர, இவ்வகைப் பாடல்கள் பலவும் "பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு"களைக் கொண்டுள்ளன.

உதாரணம் :- "சொல்லட்டுமா சொல்லட்டுமா என்ற மெட்டு
"பூ மாலையில்" என்ற மெட்டு
"மணப்பாரை மாடு கட்டி" என்ற இசை
"என்னை யாரென" மெட்டு பாலும் பழமும் திரை
"பராசக்தியில் "ஆரியக்கூத்தாடினாலும்" என்ற மெட்டு

இவை காரணமாக "இரண்டொரு வருஷத்து நூற்பழக்கம் உள்ள" வரையும் எளிதாகக் கவர்ந்து விடுந்தன்மை வாய்ந்தன.

6. அளிக்கை முறை

இவ்வகைப்பாடல்கள் இதுவரை கூறியவாறு "பொருள் புதிது" "வடிவம் புதிது" "சுவை புதிது" என்பன மட்டுமன்று. இவ்வடிப்படைகளில் மட்டும் நவீன கவிதையுடன் இணங்கிப் போகின்றன என்பது மட்டுமன்று. இவற்றை விட இவ்வகைப்பாடல்களின் தனித்துவம் எனத்தக்கதும் நவீன கவிதை மரபிலே வெளிப்படாததுமான முக்கியமா அம்சம் இவ்வகைப்பாடல்கள் அளிக்கை செய்யப்பட்ட முறை பற்றியதாகும். அதாவது இவ்வகைப்பாடல்களுள் கணிசமானவை பொதுமக்களுள் ஒருவரான புலவரொருவரால் பொதுமக்களை நோக்கி பொதுமக்கள் பெருமளவு கூடுமிடமான சந்தை, சந்தி திருவிழா, பஸ் நிலையம், பாலம் முதலான இடங்களில் பாடப்பட்டு வந்துள்ளன என்பதே இவ்வேளை விதந்துரைக்கப்பட வேண்டிய விடயமாகின்றது.

7. முடிவுரை :

மேற்கூறியவாறு நோக்கும்போது இவ்வகைப் பாடல் மரபு வலுவானது, வளமானது என்பது புலப்படுகின்றது. காலனித்துவ ஆட்சி மாற்றங்களும் மேலைத்தேய நவீன சிந்தனைகளும் மட்டுமே நவீன ஈழத்து நவீன கவிதையின் தோற்றத்திற்கு வழிவகுத்தன என்பது மட்டுமன்று. தொடர்ந்து வந்த இவ்வகை வாய்மொழி பாடற் கவிதைப் பாரம்பரியத்தின் எச்ச சொச்சமாகவுள்ள இவ்வகைக் கவிஞர்களும் அதற்கு வழி வகுத்துள்ளார்கள் என்பதே இங்கு வற்புறுத்தப்பட வேண்டியதாகின்றது. ●

கருவறை

என் கருவறையில்
மென்மையான உயிர் பூவாய்
நீயிருந்த போதிலும்
மிருதுவான இதழ்களின் பாதமென்
நெஞ்சு நிறைந்த நினைவுகளாய்
நெஞ்சைக் கிளறுகின்றன.



என் குருதிக் கொடியில்
உயிர்பெற்ற முதல் உதிரப் பூவே
உயிரொழுகி உதிர்த்த
என் வயிற்றில் – உன்
உயிர் உணரச் செய்தாயே

நீ உயிர் பெறும் – என்
உயிர் போகும் வலி மறைய
அழ முடியாத மனவெளியிலே
நானடைந்த ஆனந்த
துயர் யாரறிவார்

நான் வடித்த
சிற்றன்னவாசல் சிலையழகே
மார்போடு உனையணைத்த
மென்னுணர்வும்
தோளோடு துயில்கின்ற
நினைவுகளும்
நெஞ்சிருக்கும் வரை
என்னுள் சிலிர்க்கின்றன.

–ந.பாக்கியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறு முன்குறிப்பு

மகாபாரதக் கதையென்றதும் குருஷேத்திரப் போர் தான் நினைவுக்கு வரும். தீமைகளை விதைக்கும் தீயவர்களால் வழிநடாத்தப்படும் தர்மத்துக்கு மாறான அக்கொடிய யுத்தம் அது விட்டுச் சென்ற காலடித்தடங்கள் இன்றைய சாதாரண நடைமுறை வாழ்விலும் பிரதிபலிப்பதைக் கண்கூடாகவே காணநேர்ந்த துர்பலனாகவே இக் கதையின் கரு எனக்குள் கண்திறந்து கொண்டது. இருண்ட அடுப்பினுள்ளேயே புதைந்து போகும் கண்ணீர் சுவடுகள் தெறித்த ஆணாதிக்க சமூகத்தின் காலடியிலேயே புழுவாகவே வாழ்ந்து மடிந்து போகும் அபலைப் பெண்களின் சோக வரலாறுகளின் கறைபடிந்த செல்லரித்த வாழ்க்கைப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கவே இந்தக்கதை ஒரு சான்று முகம். இதற்கு ஒரு விமோசனம் தேடுகிற மாதிரியே. இக் கதையின் விடியல் முகமும் இதைச் சரிவர வாசிப்பவர் புரிந்து கொள்ள வேண்டு மென்பதே என் விருப்பமும் கூட.

குருஷேத்திரம்

அங்கம் 1

வாழ்க்கை பற்றி அறிவுபூர்வமான பிரக்ஞை ஏதுமின்றி விழிப்புநிலை பெறாத மழலைப்பருவத்துக் குழந்தையினது போன்ற நிர்மலமான வெள்ளை உள்ளம் கொண்ட சாராதா அப்போது கிணற்றடிக்கு வந்து தனிமையில் நின்று கொண்டிருந்தாள்.

முகையவிழாத பன்னிரண்டு வயதுப் பராயத்தில் தான் சாமத்தியப்பட்டு விட்டதாக அம்மா வாய்ப்பிரகடனமாக அறிவித்த செய்தியை உள்ளார்ந்த சிலிர்ப்புடன் கிரகித்து ஏற்றுக்கொள்ள இயலாதவளாய் அவள் மனம் பேதலித்துப் பலவீனப்பட்டுப் போயிருந்தாள்.

சராசரிப் பெண்களைப் பொறுத்தவரை அந்தச் சாமத்திய நிகழ்வும் அதையொட்டிய சடங்குகளும் இயல்பாக அவர்களைப் புல்லரிக்க வைத்துத் தேரிலேற்றி விடுகின்ற ஓர் உன்னத வாழ்க்கை வரம் போலப்பட்டாலும் அவளுக்கென்னவோ வாழ்க்கையில் தான் எதிர்கொள்ளப் போகின்ற ஒட்டு மொத்தச் சவால்களின் மூலக்கூறாகவே அது அவளை மிகவும் எரிச்சல் கொள்ள வைத்தது. ஓர் ஆணின் கையில் இரையாக வந்து விழக்கூடிய தயார்படுத்தலின் உச்சகட்ட விளைவாகவே அதைக்கருத நேர்ந்ததால் அவளுக்குண்டான பின்னடைவு குறித்து யாருமே அவ்விடத்தில் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவளுக்கு முன்னதாகவே இரண்டு அக்காமார் கல்யாணக்கனவுகளோடு காத்திரு க்கும் கனவு முகங்கள் அவர்களுக்கு இப்போது இவளும் தங்கள் வழிக்கு வந்து விட்டதாக ஒரு குதூகலிப்புச் சந்தோசம் அவர் களுக்கெல் லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைச் சூழ நின்று வேடிக்கை பார்க்கவும் அவர்கள் தவறவில்லை. சாராதவுக்கு அவர்களை நிமிர்ந்து பார்க்கவே கூச்சமாக இருந்தது. அவர்கள் அறியப் பிரகடனமாகி இருக்கிற தன்னுடைய இந்த இழப்பின் நிமித்தம் முகத்தில் அறைந்து கொண்டு ஓவென்று கதறியழ வேண்டும் போல் அவளுக்கு நெஞ்சு பிளந்து ரணமாகி விட்டிருந்தது. அம்மாவைத் தான் காணோம். அவள் மாமிக்கு அழைப்பு விடுப்பதற்காகப் போனவள்தான் இன்னும் வந்து சேரவில்லை அவள் கண்டு இதைப் பற்றிச்சொல்லியிருக்காவிட்டால் சாரதா அதை ஒரு கெட்டகனவாக மறந்து மூடி மறைக்கவே முயற்சித்திருப்பாள்.

மாலையில் பள்ளிவிட்டு வந்ததும் அவள் உடல் அசதியோடு புத்தகப்பையை மேசைமீது இறக்கி வைத்து விட்டு ஒன்றுக்கு நிற்பதற்காகக் கோடிப்பக்க மாகப் படியேறிப் போன போது எப்படியோ அம்மாவின் கண்களில் அது பட்டுவிட்டது. அவளுடைய உள் பாவாடையின் பின்புறமாக இரத்தக்கறை பரவியிருப் பதைப் பார்த்து அவள் சமீபமாக நெருங்கி வந்து கேட்டாள்

"அதென்னடி பாவடையிலை?"

"தெரியலையே"

"நீ சாமத்தியப்பட்டு விட்டாய்"

"அப்படியென்றால் என்ன?"சாமர்த்தியம் தான் சாமத்தியமாக மாறியதோ? எதற்குச் சாமர்த்தியம் வேண்டும்? ஒரு புருஷன் காலில் விழுந்து அடிமை விலங்கைப் பூட்டிக்கொண்டு வாழ்க்கையைக் கழுவாய் சுமக்கவா இந்த அசாதாரண சாமர்த்திய நடைமுறைக் கோலம். அப்பப்பா! என்னவொரு பெரிய கொடுமை. பெண் என்பவள் இப்படி அடிமைப்பட்டுச் சிலுவையில் தொங்கவா அவளுக்கு இந்த வாழ்க்கை வரம்.

சாரதாவுக்கு நெஞ்சு குலுங்கி, அழுகை முட்டியது. அவள் சோகம் கவிந்த கண்களோடு வெறுமனே வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வழிவிட்ட வானம் இன்னும் அவளை வா என்று அழைக்கிறது. அதற்குக் கீழே கண்களுக்குள் களைகட்டி நிற்கும் உயிர்வார்ப்பான அவளுடைய அந்தச் சின்னஞ்சிறு கிராமம். இன்றுவரை அதுதான் அவளுடைய உலகம். அங்கெல்லாம் கால்போனபடி சுயாதீனமாகச் சுற்றி திரிந்தவள் தான் அவள் அப்போது கூட இந்தச் சமூகம், கொள்ளிக்கண் மனிதர்கள் அவளை விட்டு வைக்கவில்லையே. குறிப்பாக மாமிதான் அவள் மீது எறிகணை எறிபவள். பனைவடலி ஒற்றை யடிப்பாதையூடாக அவள் அம்பலவாணர் வீட்டிற்கு ஆனந்த விகடன் படிக்கப் போகும் போது ஜன்னல்வழி பார்த்து மாமி வக்கணையாகப் பேசும் குரல் காற்றில் அலை பாய்ந்து அவளைத் துரத்திக் கொண்டு வரும் சமயம் அதை ஜீரணிக்கத் திராணியற்று அவள் நிலையழிந்து நின்று கொண்டிருப்பாள்.

"ஏய் சாரு உங்கை எங்கே போறாய்? வீட்டிலை இருந்து வேலை பழக வேண்டாமே நீ பொம்பிளைப் பிள்ளையல்லே!"

"நான் ஆணாக இருந்திருந்தால் மாமி ஏன் இவ்வாறெல்லாம் கேட்கப் போகிறாள்? ஆணாகப் பிறக்காமல் விட்டது நான் செய்த பாவம். பெண்ணகப் பிறந்து தொலைத்தது அதைவிடப் பெரிய பாவம்; சீ நான் பிறந்திருக்கக் கூடாது."

வேலிக்கு வெளியே மாமி புடைசூழ அம்மா ஆரவாரமாக வந்து கெண்டிருந்தாள். அவள் கையில் ஏதோ ஏந்தியபடி வந்தாள். என்னவாக இருக்கும்? சாரதா அரையில் கட்டக் கட்டாடி கொண்டுவந்த புடைவைதான் அது.

"இனியாவது இலட்சணமாக இரு" என்றாள் மாமி. இதுவரை நான் எப்படி இருந்தேன் என்று கேட்கத் தோன்றியது சாரதாவுக்கு. காற்றில் பறந்த என் இறக்கை கள் பொய்யா என்று கேட்க நினைத்தாள். அப்படி யென்றாள் எதெல்லாம் மெய்? இவர்கள் என்ன சரித்திரம் சொல்கிறார்கள் கற்பைப் பற்றி வேறு கதையாய் அளக் கிறார்களே. அவள் ஒரு ரிஷி பத்தினி போல இருக்க வேண்டுமா? கற்பு என்னும் கிரீடம் அவள் தலையில் சுமக்க வேண்டுமா? நல்ல கதை. புருஷர்களுக்கோ ஒன்றுமே வேண்டாம். அரச பீடம் உயர்ந்த சிம்மாசனம் அதில் ஏறி ஆளப்பிறந்தவர்களின் காலடி மண்ணைத் தின்னும் புழுக்களைப் போலப் பாவம் இந்தப் பெண்கள். சாரதாவுக்கு எல்லாம் வெறுத்துப் போய் கண் முன்னே உலகம் மீதான உணர்வு.எதுவும் பிடிக்கவில்லை. நிழலும் கரித்தது.

அம்மா இதில் எந்த மனக்குறையும் இல்லாமல் சாரதாவுக்கான சடங்குகளை கூட்டுச் சேர்ந்து செய்யத் தயாராகிக் கொண்டிருந்தாள். குப்பை மீது அவளை இருத்தி தோய வார்த்தார்கள். இது முதலாவது தண்ணிர் வார்ப்பு. இரண்டாவதாக ஒரு சடங்கு இருக்கிறது. அன்றைக்குச் சாரதாவுக்குப் பட்டுப் புடைவை எல்லாம் கட்டித் தலை சீவிச் சிங்காரித்து நகைகள் போட்டு அலங்காரங்கள் கண்ணைப் பறிக்கும். அதற்கும் அம்மாவுக்கு வக்கில்லை. சித்தியின் இரவல் பட்டுப் புடைவைகளும் நகைகளும் தான் அம்மாவிடம் இப்போதைக்கு வெறும் தாலி மாத்திரம் தான் இருக்கிறது. சாரதாவின் அப்பா ஏழை உபாத்தியாராக இருப்பதால் அண்ணனின் படிப்புச் செலவுக்காக அம்மாவின் நகைகள் கரைந்து போயின. அக்காமாரின் சடங்குகளும் இந்த வழியில்தான் நடந்தேறின. மூன்றாவதாக அவர்களுக்குப் பின்னால் சாரதாவும் வயதுக்கு வந்து வாழ்க்கைக்காகத் தயாராகிவிட்ட நிலை.

சாரதாவுக்கு அந்த வாழ்க்கை வேண்டாம் என்றிருந்தது. அப்படி ஒரு வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு விட்டில் பூச்சிகளாகச் செத்து மடிந்த அவலைப் பெண் களின் கதைகள் அவள் அறியாதது அல்ல. அதிலிருந்து மீட்சி பெற்றுத் தான் சுதந்திரமாக இருக்க வேண்டும் என அவள் விரும்பினாள். கல்யாணமானால் அது வெறும் பகற்கனவு தான். அம்மா தலைதுவட்டி உச்சி வகிட்டில் பவுடர் தேய்த்து சலவை செய்த சாதாரண நூற் புடைவையை இடுப்பில் கட்டிய போது இந்த அறையை விட்டு ஓடிவிடலமா எனத் தோன்றியது. அவளுள் சோகம் கலந்த மௌனம் கனத்தது.

மாமி இன்னும் போகவில்லை வெளிவராந்தவில் அமர்ந்து அப்பாவுக்கு ஏதோ மந்திரம் ஓதிக் கொண்டிருந் தாள். அவளுக்குப் பிள்ளைகள் கிடையாது. கணவன் ஆசிரியராக இருக்கிறார். அவர் போன பிறகு மதியம் வரை அவள் பொழுது சாரதா வீட்டிலேயே கழியும். வேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனமாக வாழ்க்கையின் நடைமுறை பிசகாத சித்தாந்தங்கள் குறித்து உரத்த குரலில் வாய் ஓயாமல் பேசிக் கொண் டேயிருப் பாள். அம் மாவுக் கு வழிகாட்டுகிற ஒரு மந்திரி போல அவள். அவளுக்குக் கனத்த தொண்டை.

சாரதா அவள் குரல் வராதவாறு அறை ஜன்னலையும்,கதவையும் இழுத்து மூடிவிட்டுப் படுக்கப் போனபோது அம்மா கையில் குவளையுடன் அவளை அழைத்த குரல் கேட்டது.

"என்னம்மா...?"

"இந்தா கத்தரிக்காய் சாறும், நல்லெண்ணை யும் கலந்து கொண்டு வந்திருக்கிறன் குடிச்சிட்டுப் பிறகு சாப்பிடலாம்"

"எதுக்கம்மா இதெல்லாம்"

"அப்பதான் வயிறு பலக்கும். சுகமாகப் பிள்ளை பெற முடியும்"

சாரதாவுக்கு இப்பொழுதே வயிற்றைக் குமட்டியது. பெண்ணாகப் பிறந்து விட்டால் எவ்வளவு சோதனைகள். அம்மாவே அதற்கு உதாரணம். அவள் நிம்மதியாக மூச்சுவிட்டு அவ்ள் பார்த்ததில்லை. யந்திர கதியான ஒரு வாழ்க்கை அப்பாவுக்கு அடிமைப்பட்டு அவள் என்ன சுகத்தைக் கண்டாள்.மாமி வேறு எந்நேரமும் கரித்துக் கொட்டியபடி அம்மா ஒரு வாயில்லாப் பூச்சி. கத்தரிக்காய் சாறை எப்படியோ மென்று விழுங்கிவிட்டுச் சாரதா கேட்டாள்.

"என்னம்மா யோசிக்கிறியள்"?

"நாளைக்கு அண்ணை வாறதாகத்தந்தி வந்திருக்கு".

"நான் கூட்டிவர ஸ்ரேஷன் வரை போகட்டே?"

"சீ! நீ இனி அங்கெல்லாம் போகக்கூடாது"

"ஏனம்மா?.."

" ஒரு முறை சொன்னால் விளங்க வேணும் நீ இப்ப குழந்தையில்லை"

அதைக்கேட்டவாறே சாரதா மௌனமாக இருந்தாள். அவளுடைய உலகம் அந்த இருண்ட கூட்டிற்குள்ளேயே சுருங்கிவிட்டதாய் உணர்ந்தாள். உச்சி குளிர்ந்த புல்லரித்துப் போன சந்தோஷ நாட்களைக் கொண்ட அவளுடைய அந்த பால்ய வயது சகாப்தம் இனித்திரும்பி வராதென்பதை அவள் பெரும் மனக்கவலையுடன் நினைவு கூர்ந்தாள்.

முன்பெல்லாம் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற அண்ணன் வரும்போதெல்லாம் அவனைக்கூட்டிவர அவள் ஸ்டேசனுக்கே போய் விடுவாள். அப்பவெல்லாம் ரயில் இருந்தது. செந்தூரன் அண்ணனென்றால் அவளுக்கு உயிர். ஒரே ஒரு அண்ணன் தான். அவனுக்குக் கீழே மூன்று பெண்கள். அவர்களைச் சுமக்கின்ற பெரும் பொறுப்பு அவனுக்கு. மூத்த அக்கா பவானி. கல்யாண வயதில் இருக் கின்றாள். செந்தூரன் படிப்பு முடிந்தால் தான் அவளுடைய கல்யாணத்தை நிறைவேற்றலாமென்று அப்பா சொல்லிக்கொண்டிருக்கிறார். அடுத்தவள் சுபாஷினி. அவளுக்குக் கீழே தான் இந்தச் சாரதா. அவள் அக்கினித் குண்டத்திலே பிரகாசிக்கும் நெருப்பு மாதிரி. அவளுடைய வாழ்க்கைச் சத்தியம் அத்துணை புனிதமானது.

அங்கம் 2

சாரு! என்று கனவுப்பிரக்ஞையாய் முன்னால் ஒரு குரல் கேட்டது. அவளைச் சுருக்கமாக எல்லோரும் அப்படித்தான் அழைக்கிறார்கள். இரவு பச்சரிசிப் பால் புக்கை சாப்பிட்டுவிட்டுப் படுத்தவள்தான் எப்படித் தன்னை மறந்து இவ்வளவு நேரம் தூங்கினாளோ தெரியாது. கண்ணை விழித்த போது வெய்யில் சுள்ளென்று முகத்தில் அறைந்தது.

முன்னால் செந்தூரன் மெய்மறந்து அவளையே பார்த்தபடி சிரித்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அவனுடைய கண்களில் அமானுஷ்யகளை தெரிந்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்பதால் ஒரு விரிவுரையாளனாகவும் வரச் சந்தர்ப்பமுண்டு. அப்பாவினுடைய கனவு அது. அதன் பிறகு என்ன. அவர்கள் வீட்டில் தேர் ஓடும்.

அவன் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துச் சாரதா புல்லரித்துப் போய் எழுந்து அமர்ந்தவாறே கேட்டாள்.

"என்னண்ணை.....?"

"இப்ப உனக்குச் சந்தோஷம் தானே" அவன் கண்கள் ஒளிரக் கேட்டான்.

"யார் சொன்னது? இதில் சந்தோசப்பட என்ன இருக்கிறது? நான் இதுவரை காலமும் துள்ளித் திரிந்த சுதந்திரத்தையே இழந்து விட்டதாய் உண்கிறேன். லஷ்மி கதை வாசிப்பதற்காக நான் அம்பலவாணன் வீட்டிற்கு ஆனந்தவிகடன் வாசிக்க எவ்வளவு மகிழ்ச்சியோடு போய் வருவேன் தெரியுமா? இப்ப இந்த மகிழ்ச்சி யில்லாமல் என்ரை சிறகை விதி வெட்டிவிட்டதாய் நான் உண்கிறன்"

"இல்லை சாரு.இனித்தான் உனக்காக ஒரு பொற்காலம் காத்திருக்கு" என்றான் அவன். மனவருத்தம் மாறாமல் கவலையோடு கேட்டாள்.அவள்

"எதண்ணை எனக்குப் பொற்காலம்.....?"

"நான் உனது கல்யாணத்தைப் பற்றிச் சொல்ல வந்தேன் ஒரு பெண்ணுக்குக் கல்யாணமென்றாலே வாழ்க்கை களைகட்டும். நீ பார்த்ததில்லை....?"

அவள் இதயம் கனத்து மௌனமாக இருந்தாள். என்ன சொல்கிறான் இவன்? பெண்களுக்கு வாழ்க்கை களை கட்டியிருப்பதாய் நான் உணர்கிறேனா? இல்லையே. அவர்களின் உயிரின் ஒளி, வாழ்க்கை என்ற சமுத்திரத்தில் அகப்பட்டு,ச் சூழ்ந்து பெருகி வழியும் அலைகளினால் அடிபட்டுக் கரை ஒதுங்கி அணைந்து போவதையே நான் சாட்சி பூர்வமாகக் கண்டு மனம் வெறுத்துப் போன,எனக்கா இப்படி ஒரு வேதபாடம்.?!

அவள் திடுக்கிட்டு விழித்துப் பிரக்ஞை வந்தவளாய் கூறினாள்.

"என்னால் அப்படி நினைக்க முடியேலை. வாழ்க்கை என்னை விட்டுத் தூரப் போய்க் கொண்டிருக்கு"

"இல்லை சாரு, எதற்காகவும் வாழ்க்கையை வெறுக்கக் கூடாது .உனக்காக வருங்காலத்தில் ஒரு தேவபுருஷன் வந்தால். உன்னைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் போது நீ எப்படியெல்லாம் உச்சி குளிர்ந்து போவாய்".

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திடுமென்று அவள் கேட்டாள்

"இந்த கணக்குப் பிழைக்காது என்று என்ன நிச்சயம்?"

"நீ ஏன்", அப்படி யோசிக்கிறாய்,?"

"போங்களண்ணா, என்ரை கதை இப்ப எதுக்கு?" இரண்டு பேர் எனக்கு முன்னாலை காத்துக்கொண்டிருக்கினம். முதலில் அவர்களுக்கான கதவு திறக்கட்டும். இப்ப எனக்குப் பசிக்குது. விசுக்கோத்து தாங்கோ என்றாள். அவள் குழந்தைத் தனம் மறாமல்

இதை கேட்டுக் கொண்டு உள்ளே வந்த அம்மா சொன்னாள்

"குழந்தையின் ஆசையைப் பார் .அதெல்லாம் இப்ப உனக்குக் கூடாது, இந்தா இதைக் குடி"

"என்னம்மா....?"

"நல்லெண்ணை விட்டுக் கத்தரிக்காய் சாறு கொண்டு வந்திருக்கிறன். முட்டை இதை விடத் திறம், ஆனால் நாங்கள் சைவமல்லே".

செந்தூரன் மௌனமாய் அதைக் கேட்டுக் கொண்டிருந்தான். சாரதா மௌனமாய் அந்தக் கசப்பை மென்று விழுங்குவது தெரிந்தது .அவன் கைகளால் ஸ்பரிசித்து அவள் தலையைத் தடவினான். அவள் புல்லரித்துப் போய் மெய்மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.அன்பின் ஆழம்,கறைகள் விட்டுப் போன ஓர் உயிர்க் கோடாய் அவன் கண்களில் பிரகாசிப்பதாய் அவளுக்கு உணர்வு தட்டிற்று. வெளிப் படையாக அந்த அன்பின் பிரகாசமே தங்கள் குடும்ப ஊற்றாய் ஓடிக்கொண்டிருப்பது போல் அவள் உணர்ந் தாள். கடைசி வரை இது மாறது என்று தோன்றியது.

அம்மா போய் வெகுநேரமாகி விட்டது. இரண்டாவது அக்கா கல்லூரிக்குப் போவதற்காகத் தலைசீவிக் கொண்டிருந்தாள். அவள் பேர் சுபாசினி. சுபா என்று கூப்பிடுகிறார்கள். அவளுடன் பவானி அக்காவும் அம்மாவுக்கு உதவிசெய்த கையோடு கல்லூரிக்குப் போவதற்குத் தயாராகி விட்டிருந்தாள். இருவரும் இராமநாதன் கல்லூரிக்கே போகிறார்கள். அவர்களை அழைத்துச் செல்ல. நேசையாவின் கார் வரும். சுபாவுக்குப் படிப்பில் நாட்டமில்லை. அழகுதான் அவளின் முக்கிய இலக்கு. முகம் பளபளக்கத் தயிர் பூசுவது முதுற்கொண்டு எவ்வளவோ செய்வாள். தான் பெரிய அழகி என்ற நினைப்பு அவளுக்கு. கொஞ்சம் அழகுதான். பளீரென்ற வெள்ளை நிறம். சுருண்ட கேசம். எவ்வளவு இழுத்தாலும் படியாமல் முன் நெற்றியில் சுருள்களாக விழுந்துகிடக்கும். கார் வந்து வாசலில் நிலை கொண்ட பின்னர் தான், அவள் ஒப்பனை அலங்காரம் முடிந்து, அவசரமாகப் புறப்பட்டுப் போவது ஜன்னலின் ஊடாகத் தெரிந்தது. சாரதா அதையே கனவுப் பிரக்ஞையாய் பார்த்துக் கொண்டிருந்தாள். இனி அவள் கதையும் இதுதான். அப்பா கிராமத்துப் பள்ளிக்கூடத்துக்கு அவளைப் போக விடமாட்டார்.அக்காமார் மாதிரிப் பெரிய கல்லூரிப் பிரவேசம் தான். நேசையாவின் காரில்,அவள் ஊர்வலம் போக வேண்டும். அந்தக்காலமென்ற படியால் சொற்ப வாடகைதான். ஐம்பது ரூபா வாடகைதான் ஓர் ஆளுக்கு.

செந்தூரன் அறையைவிட்டுப் போன பின் மீண்டும் அம்மாவின் நிழல் தெரிந்தது. கையில் பத்தியச்சாப்பாடோடு வந்திருந்தாள்.அதைவிடச் சீரக உருண்டை வேறு. வேப்பிலைக் கொழுந்து சேர்த்து அரைத்தது. அதை விழுங்கின பிறகுதான் சாப்பா டெல்லாம். அவள் ஜன்னல் வழியாகக் கண்கள் ஒளிமங்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.அடுக்களை வாசலில் அப்பாவின் நிழல் தெரிந்தது. அவர் சாப்பிட்டு விட்டுக் கை கழுவிக் கொண்டிருந்தார். மல்லாகம் பள்ளிக்கூடத்தில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இருந்து இளைப்பாறியவர் அவர். குட்டையான உடல் வாகு. மாநிறத்தை விடச் சற்று நிறம் கூட.சுமாரான வெள்ளை நிறம். அறிவுக்களை பரந்த விசாலித்த முகம்.அவர் வாழ்க்கை பற்றிய பூரண அறிவோடு வியாக்கியானம் செய்வதைக் கேட்டுக் கொண்டிருக் கலாம். அம்மா அதைக் கேட்டு உம் கொட்டுவது அவளது வாழ்வின் இருண்ட சுவடுகளையே பிரதிபலிப்பது போல் ஓர் அவலக்குறியீடாகக் கனதியற்றுக் கேட்கும். இதெல்லாம் ஒன்றுசேரமுடியாத வாழ்வின் எதிர்மறை யான நிழல்கள். அம்மாவும் அப்பாவும் இரு துருவங்கள் மாதிரி. அதுவும் அம்மாவுக்கு அப்பா சொந்த மச்சான் முறை. அவர்களாலேயே நிரப்ப முடியாமல் போன வாழ்க்கையின் வெற்றிடம் ஓர் அந்நியமனிதன் உறவினால் குறைகளின்றிச் சரிப்பட்டு வருமா? புரியவில்லை. வாழ்வு புரியாத புதிர் போலப்பட்டது.

அங்கம் 3

சாரதாவின் பூப்புனித நீராட்டு விழா அன்று தான் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. அதைப்பெரிய அளவில் ஊர்கூட்டி ஆரவாரமாகச் செய்வதற்கு அப்பா குக நாதனிடம் வசதியிருக்கவில்லை. செந்தூரனின் படிப்புச் செலவு வேறு கையைக் கடிக்கிறது. அதற்கும் தாரளமாகக் காசு அனுப்பமுடியாத நிலைமை தான். அவரின் மூத்ததம்பி சிவநாதன் ரயில்வேயில் கிளார்க் காக இருக்கிறார். கொழும்பிலே தன் மனைவியோடு வாடகை வீட்டில் இருந்தார். அவருக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால் செந்தூரன் அவர்கள் வீட்டிலேயே தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். அதுமட்டுமல்ல அவனின் படிப்புச்செலவும் சிவநாதன் தலைமீதுதான். அவரை அப்பாவே சிறுவயதில் வளர்த்து ஆளாக்கி விட்டதால் அதற்கு நன்றிக்கடனாகச் செந்தூரனைப் படிக்க வைக்க வேண்டிய பெரும் பொறுப்பை அவரே அப்பாவின் கட்டளைக் கிணங்க ஏற்று வழிநடத்தி வருகிறார்.

ஆசையப்பா என்று அவரை அழைப்பார்கள். ஆசையம்மா கொஞ்சம் ஒரு மாதிரி. செந்தூரன் மீது உள்ளூர வெறுப்பிருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாதவாறு பாசாங்காக மனதைத் தொடாத அவள் நடத்தைகள் குறித்துச் செந்தூரன் மனதில் சிறு நெருடல் இருந்தாலும் வெளிப்படையாக இதுபற்றி அவன் பேசுவதில்லை. அதற்குக் காரணம் அவனுடைய படிப்புக் கனவு ...கலைப்பிரிவில் தமிழைச் சிறப்புப்பாடமாகப் படித்துவருபவன். இந்த வருடத்தோடு அதுவும் நிறைவுபெறுகிறது. அதில் விசேடசித்தி எய்தினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடுதான் காரம் கூடாதல்லே"என்றாள் அம்மா.

அவள் கேட்டாள்

"இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி நான் பட்டினி கிடக்க வேணும்?"

"என்ன இப்படிச் சலித்துக் கொள்கிறாய். இப்பவே இப்படியென்றால் கல்யாணமாகிப் பிள்ளைகள் பெறும் போது நீ எப்படித் தாங்கப் போறாய்?அதுக்கு கொஞ்சம் உனக்குப் பலம் வேணாமா?"என்றாள் சித்திகாரமாக.

சாரதா மேற்கொண்டு எதுவும் பேச விரும்பாமல் மனம் கனத்து மௌனமாய் இருந்தாள்.தேர்ச்சில்லிலே அகப்பட்டு நசிந்து போகிற மாதிரி எவ்வளவு பெரிய வாழ்க்கைச் சுமை பெண்களுக்கு. இதிலிருந்து விடுபட அல்லது சுதந்திரமாக இருக்க என்னவழி என்று பிடி படாத மயக்கமாய் இருந்தது. அவள் எதிலும் ஓட்டாமல் துருவத்தில் விலகி நின்ற போது மறுபடியும் வாசலில் ஒளிக்கீற்றாய் செந்தூரனின் முகம் தெரிந்தது. அவளுக்கு அவன் தான் எல்லாம். அபரிதமான அவனது அன்பின் அணைப்பில் சுகம் கண்டவள் அவள். இப்போது நேர் தரிசனமாக அவனைக்கண்ட போது அழுகை முட்டியது. அவன் கேட்டான்.

"என்ன சாரு? அழுகிறாயா? நீ அழவே கூடாது. உனக்கு இறக்கை முளைச்சிருக்கு. நீ ஒரு தேவதை மாதிரியாகிவிட்டாய்.எதற்கு இந்த அழுகை எல்லாம்.? கண்களைத் துடைத்துக் கொள். காலம் இப்பதான் உனக்கு வழிவிட்டிருக்கு. இன்றைக்கு நான் பயணம் போறன். நீ சமர்த்தாக இரு. நீ இனிக் கிராமத்துச் சின்னப் பள்ளிக் கூடத்துக்குப் போக வேண்டாம். இராமநாதன் கல்லூரிக்கு அக்காவோடை போகலாம்."என்றான் குரலில் மகிழ்ச்சி பொங்க.

சாரதா தலை ஆட்டினாள்.அவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. ஒருவர் முகத்தைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போலிருந்தது. நிச்சலனமாக இருந்த அறைக்கு வெளியே அலைபாயும் குரல்கள் கேட்டன. பவானியக்காவும், சுபாவக்காவுமாகச் சேர்ந்து கூடிக்களித்துப் பேசிக்கொண்டிருப்பதை ஜீரணிக்க முடியாமல் அவள் தனிமையில் அடைபட்டுவிட்ட வெறுமை யுடன் நிலைகுலைந்து போய் நின்று கொண்டிருந்தாள். அறையை விட்டுச் சித்தி கழன்றுபோய் வெகு நேரமாகி விட்டிருந்தது.

அங்கம் 4

இப்போதெல்லாம் சாரதா கல்லூரிக்கு அக்காமார் மாதிரியே தினமும் போய் வருகிறாள். அந்தத் தடங்கள் அவளுக்குப் புதியவை. கிராமத்துப் பள்ளிக்கூடத்துக்கே நடைபவனியாக அவள் போய் வந்த காலம் அவளுக்கு ஒரு பொற்காலம். இனிச் சுதந்திரமான அந்த நடைப்பயணமில்லை. உடம்பைச் சுற்றி மூடிமறைக்க அரைத்தாவணி வேறு அவள் போடவேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தப்பன்னிரண்டு வயது இளப்பிராயத்திலே அவளுக்கு அந்தச்சிலுவை.

ஆறாம் வகுப்பில் கால்வைத்த போது ஒரு புதிய சகாப்தம் தொடங்கி விட்ட மாதிரி இருந்தது. வகுப்பு டீச்சர் விஜயலட்சுமியக்கா. அங்கெல்லாம் டீச்சரை அக்கா என்றுதான் அழைக்கிறார்கள். விஜயலட்சுமியக்கா நல்ல வெள்ளை நிறம். களையான முகம். கண்கள் ஒளிவிட்டுச் சிரிக்கும் போது கறையெரிந்து போகும்.

சாரதாவை அவர் மனதார ஏற்றுக் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் அவளின் தமிழ்ப் புலமை. சரளமாக அவள் தமிழ் எழுதுவாள். கட்டுரைகள் சுயசிந்தனைத் தெளிவோடு அபூர்வமாக இருக்கும். சிறு வயதிலிருந்தே வாசிப்புத் திறனிருந்ததால்தான் இந்தச்சிறப்பு அவளிடம். விஜயலட்சுமியக்கா அவள் எழுதும் கட்டுரைகளை வகுப்பு மாணவர்களறியப் பிரகடனப்படுத்தி வாசித்துக் காட்டிய சந்தர்ப்பங்களுமுண்டு. அவளுக்கு அப்போது மனம் கொள்ளாத பெருமிதமாக விருக்கும். எனினும் ஒரு மனக்குறை. முன்பு போல் ஆனந்த விகடன் வாசிக்க முடியாமல் போன குறை, நெஞ்சை அரித்தது. லஷ்மியின் நாவல்களென்றால் அவளுக்கு உயிர். அடுத்த வீடு தொடர்கதை பாதியிலே நின்று போன மன வருத்தம் அவளுக்கு. அது மட்டுமல்ல மனம் கொள்ளாத பரவசமூட்டும் அவளது அந்த அழகிய கிராமத்தின் சுவடுகளே விட்டுப் போனமாதிரித்தான். தினமும் கல்லூரிக்குக் காரிலேயே போய்வருவது சலிப்பாக இருந்தது. வீட்டிற்கு வந்தால் சிறைதான். அப்பா கிடுகு வேலிக்கப்பால் எங்குமே அவளைப் போக விடுவதில்லை. திருமண மானால்தான் இந்த விலங்கு உடையுமென்று எல்லோரும் காத்திருக்கிறார்கள். பவானி அக்கா கூட அந்த வழிதான். அவள் கல்யாணவயதில் கனவு களோடு காத்திருக்கும் இளமை மனம் அவளுக்கு. எஸ்எஸ்ஸி மட்டும் படித்துப் பாஸ் பண்ணிவிட்டு மேலே படிப்பைத் தொடர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாமல் வீட்டுச் சிறைக்குள்ளேயே இப்போது அவள். அம்மாவுக்கு உதவியாக அடுக்களைக்குள் அவளின் தடங்கள். அது ஒற்றைநிழலில், துருவேறிக் கொண்டிப்பதாகச் சாரதாவுக்குப் பிரமை மூளும். இதை யெல்லாம் பார்த்தவாறு படிப்புலகில் சஞ்சரிக்க அவளால் முடிவதில்லை. தமிழ் ஒன்றே மூச்சு விட்டுப் போகாத வளமான நினைவுகளுடன் நன்றாக எழுத வந்தது. மற்றப்பாடங்கள் மண்டைக்குள் ஏறவில்லை. விஜயலட்சுமியக்காவே பலதடவைகள் சொல்லி யிருக்கிறார்.

"சாரதா! நீர் தமிழ் மட்டும் செய்தால் போதாது மற்றப்பாடங்களிலும் கவனம் எடுக்க வேணும்"

எங்கே முடிந்தது.சாரதாவால். தமிழ் படித்த போதுதான் தேவசஞ்சாரமாக இருக்கும். கணிதபாடம் என்றால் சுத்தமாகப் பிடிக்காது. மிகக் குறைவான புள்ளியே கிடைத்தன. இருந்தாலும் எப்படியோ ஒவ்வொரு வகுப்பிலும் தேறி எஸ்எஸ்ஸி வரை வந்து விட்டாள். சரியாக நான்கு வருடங்கள் எப்படி ஓடின தென்றே தெரியவில்லை. அழகான பருவம் அவளுக்கு. படிப்பு ஏறாவிட்டாலும் கண்களுக்குள் காட்சிமயமாக உலகம் பிடிபடுகிற வயது. எனினும் உள்நெருடலாக அதில் மயக்கமிருந்தது. வாழ்க்கை பற்றி எதிர்மறையான எவ்வளவோ எண்ண அலைகள். பவானி அக்காவினுடைய கல்யாணசமயம். செந்தூரன் படிப்பு முடிந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளனாக இருந்தாலும் விடுமுறை நாட்களில் வீட்டிற்கு வரும் போது வீடுகளைகட்டும். அவனுக்கும் கல்யாண வயதுதான்.

தங்கைமார் இருவரினதும் கல்யாணம் ஒப்பேறியபின் தான் தனது கல்யாணமென்று, சொல்லிக் கொண்டிருக்கிறான். பவானியின் கல்யாணத்துக்காக இப்போது விடுமுறையில் வந்து நிற்கிறான். அவன் வருகையில் சாரதாவுக்கு ஒரே கொண்டாட்டமாக இருந்தது. கல்யாணத்தன்று கட்டுவதற்குச் சரிகை இழைத்த புதுப்பாவாடை சட்டை, தாவணி வேறு அப்பா வாங்கிக் கொடுத்திருந்தார். கடன்பட்டுத்தான் இந்த ஆடம்பரச் செலவு.

பவானியக்காவுக்கு உள்ளூர் மணமகன்தான். தூரத்து உறவும் கூட. பெயர் பார்த்தீபன். கச்சேரியில் கிளார்க்காக இருக்கிறான். அவனுக்கு நிறைய ஆண் சகோதரர்கள். வாட்டசாட்டமான கம்பீர அழகு அவனுடையது. வசீகரமான வட்டக்கண்களைக் கொண்ட முகத்தில் உதடுகளுக்கு மேலே அழகான மீசை. அவனுக்கு ஒரு தனிக்களையைக் கொடுத்தது அவர்களுடைய கல்யாணம் மிக விமரிசையாக நடந் தேறியது. வில்லுப்பந்தல் போட்டுப் பெரிய அளவில் அலங்காரமணப்பந்தல் கண்ணைப் பறித்தது. அதற்கே ஏகப்பட்ட செலவு. வீடு முழுக்க வெள்ளை கட்டித் தூண்களில் மலர்க்கொத்துக்கள் செருகி வீடே தேவலோகம் போலக் காட்சி தந்தது. பலகார வாசனை மூக்கைத் துளைத்தது. ஒரு கிழமைவரை உறவுப் பட்டாளத்திற்கு அம்மா விருந்து படைத்தது, சாரதா வுக்கு என்னவோ போலிருந்தது. அவள் தனியாக நின்று கொண்டிருந்தாள் அவள் கண்முன்னாலேயே அக்கா கல்யாணத் தேர் ஏறிப்போனது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பகல் முழுக்கப் பூட்டிய அறைக்குள் புதுமணமக்களினுடைய சல்லாபக் களிப்பு அலைகள் காலடியில் பாய்வதாகச் சாரதா பிரமை கொண்டாள். இந்தத் தெளிந்து ஓடும் பரவச அலை களிடையே மனம் வேறுபட்டுத் தன்னிச்சையாக நின்று கொண்டிருந்தாள். வீட்டில் கல்யாணக்களை இன்னும் மாறவில்லை. செந்தூரன் குரல் கேட்டது.

"என்ன சாரு பார்க்கிறாய்.? நீயும் ஒருநாள் இப்படித்தானே" என்றான் அவன் சுயாதீனமாக.

"போங்களண்ணா. இந்த வெளிச்சத்துக்குப் பின்னாலே வெறிச்சோடியிருக்கிற வாழ்க்கையின் முகம் பிடிபட்டபின் எனக்கு ஒன்றையுமே யோசிக்க வரேலை. நான் இப்படியே இருந்திட்டுப் போறனே"

" நீ ஏன் எதிர்மறையாக வாழ்க்கையைப் பார்க்க வேணும்?.உனக்கு என்ன மனக்குறை? எதுக்காக நீ இப்படியெல்லாம் யோசிக்கவேணும்? தனியாக ஒரு பெண் வாழ இயலுமா?"

"இயலுமண்ணா. மனதிலே வைராக்கிய மிருந்தால் துறவியாக இருக்க என்னதடை?".

அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவளுக்கென்ன தெரியும் சின்னப் பெண் என்று யோசனை ஓடியது. உணர்ச்சிகளையடக்கியாள்வதற்கு நீ என்ன தபஸ் வினியா என்று கேட்கத் தோன்றியது. ஆனால் கேட்க மனம் வரவில்லை. போகப் போகச் சரியாகிவிடுமென்று நினைத்தான்.அவளோ தன் வட்டத்துக்குள்ளேயே நின்று கொண்டிருந்தாள். இன்னும் படிப்பு முடிய வில்லை. சுபாவக்காவுடன் தனியாகக் கல்லூரி போய் வருவது சங்கடமாக இருந்தது. அவளுடைய உலகம் வேறு. அவளுக்குப் படிப்பு ஏறவில்லை. அழகு ஒன்றுதான் கதியென்று இருந்தாள். அவளின் அலங்கார ஒப்பனைக்காக அண்ணன் வாங்கித் தந்த அலங்காரப் பொருட்கள் நிலைக்கண்ணாடி மேசையில் நிரம்பி வழிந்தன. சாரதா அவற்றை மனதால் கூடத் தீண்டவில்லை. உடல்வழி அழகு வெறும் மாயம் என்று பட்டது. மனம் சுத்தமாக இருந்தால் போதுமென்று நம்பினாள். அன்பு நிறைவான ஒரு வாழ்க்கையே அவளுக்குப் பெரிய அளவில் தேவையாக இருந்தது.

அங்கம் 5

பார்த்தீபனோடு ஒரு புது வாழ்க்கையைத் தொடங்குவதற்காக மனம் நிறைந்த எதிர்காலக் கனவுகளோடு, பவானி அவர்களையெல்லாம் விட்டுப் பிரிந்து கொழும்புக்குப் போனபின் சாரதா அப்பிரிவின் துயரத்தினால் மிகவும் வாடிப் போயிருந்தாள். பவானியை விட எட்டு வயது இளையவள் அவள். அக்கா இருக்கும் வரை ஒரு குறையும் தெரியவில்லை அவளையும் சுபாவையும் சாப்பிட வைத்துப் பால் குடிக்க வைப்பதற் காக இரவில் அக்கா எவ்வளவு கதைகளெல்லாம் சொல்லியிருப்பாள். இனி அவளுக்கென்று ஒரு வாழ்க்கை அமைந்தபின் அவர்களின் உடல்சார்ந்த நலன்கள் பற்றி, அவள் ஏன் கவலைப்படப் போகிறாள்?

அவளுக்கென்று குழந்தைகள் பிறக்கும் குடும்பம் வேறு களத்திலே விரியும். அந்தக் குறுகிய வட்டத்தினுள்ளே அவள் சங்கமமாகிப் போவாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்த்திபன் குணவிசேஷங்கள் கொண்ட ஒரு அன்பு நிறைவான நல்ல மனிதனாதலால் அக்காவைப் பொறுத்தவரை எந்த நெருடல்களுமில்லாத சிறந்த வாழ்க்கை யோகம் அவளுக்கு. சுபாவக்காவுக்கும் இதே வழியில் ஒரு நல்ல புருஷன் அமையவேண்டுமென்று, சாரதா விரும்பினாள். அவளுடைய கனவுகள் அத்தகையது. வருங்காலத்தில் கணவனுடன் கைகோர்த்து ஜோடி சேர்ந்து உலாவுவதும் பூட்டிய அறைக்குள் கிடந்து சல்லாபித்து மகிழ்வதுமே வாழ்க்கையென்று நம்பிக் கொண்டிருக்கிற மகா பேதை அவள். உணர்வு பூர்வமாக அறிவு வெளிச்சம் கொண்டு வாழ்க்கை பற்றிச் சிந்திக்கத் தெரியாதவள். ஒன்பதாம் வகுப்புடனேயே அவளின் கல்லூரி வாழ்வும் முடிந்து போனது. எல்லையற்ற கனவு மிதப்பில் அந்த மேலோட்டமான அழகு பரவசத்தில் வாழ்க்கையின் எதிர்மறையான நினைவுகள் அவளுக்கு வருவதேயில்லை.

அம்மாவுக்கு உதவி செய்கிற நேரங்கள் தவிர்ந்த மிகுதி நேரங்களில் அவளின் பொழுது அழகு பார்ப்பதிலேயே கழிந்தது. அழகை மட்டுமே ஆராதிக்கின்ற அவளின் உள்ளம். அதை நல்லபடி உயிர் கொடுத்து வாழ்விக்க ஒரு தேவபுருஷன் வானத்திலிருந்து இறங்கி வருவானென்று அவள் நிறைய நம்பிக்கையோடு காத்திருக்கிறாள். சாரதாவிடம் அத்தகைய கனவுகள் இருக்கவில்லை. எனினும் வாழ்க்கையின் நலன்களைப் பாடுகின்ற கவிதை ஊற்றான மனம் அவளுக்கு. அந்த மனத்துடனேயே அவளின் கல்லூரிப் பயணமும் முடிவுற்றது. அப்பாவின் தோள் சுமக்க முடியாத இரு சுமைகள் இப்போது அவருக்கு. அவளையும் சுபாவையும் கரைசேர்க்க வேண்டுமே என்ற கவலை அவருக்கு.

அது கரையென்று நம்பினாலும் நடுக்கடலிலே மூச்சுத் திணறிச் சாக வேண்டிய நிலைமையே பெண்களுக்குண்டான தலைவிதி என்று யாரோ சாரதாவின் நெஞ்சில் ஓங்கி அறைந்தார்கள். அது வேறொன்றுமில்லை. அவளுக்கு பரிச்சயப்பட்ட கொடூர வாழ்க்கையின் அவலங்களையே கேட்டுப் பழகிப் போன அவளின் உள்ளூரச்சிதையாத புனித ஆத்மாவின் குரல் தான் அது.

அவள் எண்ணியவாறே நடந்தது. சுபாவின் உயிர் புரையோடிச் செத்து விடுவதற்குப் பொய்யின் கறை குடித்த ஒரு திருமண உறவு. அவளுடைய கல்யாணம் ஒரு விபத்துப் போல் சடுதியில் நடந்தேறியது. மணமகன் பாபுவிற்கும் அவளுக்கும் சமவயது. அவன் நாலைந்து புடைவைக் கடைகளுக்கு முதலாளியாக இருக்கிற பெரும் புள்ளி. பணக்கார வர்க்கத்தின் மேல் போக்கான நடத்தைக் கோளாறுகள் கொண்டவன். சுபாவை அவன் பெண்ணாகவே மதிப்பதில்லை. தன் உடற்தேவைகளுக்கு மட்டுமே அவள் என்பது அவன் கணிப்பு. இரவில் மட்டுமே சுபாவின் உறவை நாடி வீட்டிற்கு வந்து போகின்றான். தனியாகக் குடித்தனம் வைத்தபோதும் அவனின் போக்கு சுபாவைப் பலிகொள்வதாகவே இருந்தது.

அந்நிலையில் அடுத்தடுத்து நான்கு பிள்ளைகள் வேறு. அதிலும் பொறுப்புள்ளவனாக அவன் நடந்து கொள்ளவில்லை. அவனால் புண்பட்டுப்

போன இந்த வாழ்வின் ரணங்கள் காலப்போக்கில் மாறிவிடுமென்று சாரதா நம்பினாள். அதை மாற்றுவதற்குச் சுபாவினால் அப்பா அம்மா பட்ட காயம் போகத் தனக்கு ஒரு தேவபுருஷன் வருவானென்று அவள் அந்த நம்பிக்கையோடு காத்திருக்கிறாள். ஒருவேளை மாறாகத் தனது விதியின் ஒரு குரூர பாவக் கணக்காக அது முடிந்துவிட்டால் என்ன செய்வது என்று கவலை வேறு வந்தது. சீ! அப்படி ஒன்றும் நடக்காதென்று தன்னையே தேற்றிக் கொண்டாள்.

இந்தக்கற்பனைத் தேர் ஓட்டத்தின் நடுவே வாழ்க்கை நதி, ஏதோ விடுபட்டுப் போன காரணங்களுக்காகத் தேங்கிக்கிடப்பதாக உணர்வு தட்டிற்று. செந்தூரண்ணாவும் இன்னும் கல்யாண வேள்வி காணவில்லை. அவளின் கல்யாண வேள்வி முடியட்டுமென்றே அவனுடைய இந்தக் காத்திருப்பு யுகம். அவன் கண்ணுக்கு முன்னால் தணலில் எரிந்து போகின்ற சுபாவின் வாழ்க்கை நிழல். உயிர்வற்றிப்போன வெறும் நடைப் பிணமாய் இப்போது அவள். எனினும் வேதசாரமான வாழ்க்கையை விட முடியாமல் அவள் காலில் பூட்டிய அடிமை விலங்கு. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நடைமுறைச் சித்தாந்தத்தின் துருப்பிடித்துப் புதையுண்டு போன அவளின் வாழ்க்கைச் சந்தோஷங்களுக்கு எதிர்மறையாக மாறியே தீருவேன் என்ற பிடிவாதத்தோடு துருவத்தில் நிலைகொண்டு பறக்கத் துடிக்கின்ற சாரதாவின் கால்கள். இந்தக் கால்கள் நிலத்திலல்ல வானத்திலேயே சிறகு முளைத்துப் பறந்தால் அப்பா அம்மா மனதில் இப்போதிருக்கிற வடுப்பட்ட காயங்கள் ஆறிவிடுமென்றல்லவா அவள் நம்பினாள். சுபாவுக்குப்பதிலாக இருட்டில் ஊனமுற்றுப் போகாமல் வாழ்க்கை வேள்வி கண்திறப்பதற்கான அந்த ஆயத்தநாள் விரைவில் வந்தது. அவள்அக்கரையில் காத்துக் கொண்டிருந்தாள். அன்பு நிறைவான ஒரு வாழ்க்கை வருமென்று நம்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகப் பிரகடனமாக உறவுகள் சூழ்ந் திருக்கப் பெரியதொரு சத்திய வேள்வி போல் சாரதா வினுடைய கல்யாணம் ஜாம் ஜாமென்று மிக விமரிசை யாக நடந்தேறியது. புரோக்கர் மூலமாக வந்த கல்யாணம்தான் அது. வந்தேறு குடிகளான ஒரு குடும்பத்திலிருந்து அவளைப் பெண்கேட்டு வந்தார்கள். மணமகன் நடேசன். கொழும்புக் கச்சேரியில் கிளார்க் காக இருக்கிறான். அவன் தகப்பன் கந்தசாமிக்குப் பூர்வீகம், வேலணை. தாய் காரைநகரென்றும் ,அவர் களுக்குப் எட்டுப் பிள்ளைகளென்றும் பேசிக் கொண்டார்கள். கந்தசாமி சுருட்டுத் தொழில் செய்பவர். அதுவும் ஒழுங்கில்லை. குடித்துவிட்டுத் தினமும் வீட்டிலே சண்டை போடுவார். வீட்டின் தலைமகன் நடேசன். அப்பெரிய குடும்பத்தைக் கட்டிக்காக்கின்ற பெரும் பொறுப்பை உறுதியான கடமைஉணர்வோடு சுமப்பவன்.

வாழ்க்கையின் வறுமைச் சுவடுகளைப் போக்கவே அவனுடைய இந்தக்கல்யாணம் சாரதா வீட்டார் கொடுக்கின்ற சீதனத்துக்காக ஒரு நிர்ப்பந்தத் தின் பேரில் நடந்தேறியது.

இதொன்றும் அறியாத சாரதா தனக்கு வந்து வாய்த்தவன் சகல நற்குணங்களும் நிரம்பிய ஒரு யோக புருஷனே என்று கருதிச் சுபாவக்காவின் திருமண உறவினால் கறைபட்டுக் கருகிப்போன உயிர்த்துவம் இழந்து, வரண்டு கிடக்கும் பாலைவனமாகி விட்ட தங்களின் வாழ்க்கை அவனின் புனிதமான காலடிபட்டு உயிர்பெறுமென்று அவள் மிக ஆவலோடு காத்திருந்த வேளை என்ன காரணத்தினாலோ நடேசன் திடீரென்று மாற்றலாகித் தங்கள் குடும்பத்தில் ஒருவனாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சமயம், அவர்களுக்குக் கல்யாணமான புதிது. விதி வசத்தால் அங்கு அவர்கள் வீட்டில் வந்து வாழ வேண்டிய சூழ்நிலை அவளுக்கு.

தாய், தகப்பன், சகோதர உறவுகளின் ஒரு நேர்கோடு உயர்சித்திரம் தான் நடேசனென்றாலும் சாரதாவைப் பொறுத்தவரை அவன் உறவு பற்றிய சங்கதிகள் நிழலாகத்திரிந்து போன வெறும் ஜடக் கூட்டிலேயே சஞ்சரிப்பதாய் அவள் அவனோடு பழகிய சில நாட்களிலேயே ஒரு கானல் செய்தியாய் மனதை வந்து குழப்பிற்று. அதை ஜீரணிக்கவே அவளுக்கு வெகுநாட்கள் பிடித்தன. உயிரைப் பங்கமுற வைக்கும், அன்பு மேலிடாத அல்லது அடியோடு அகன்று விட்ட அவனின் எதிர்மறையனான நடத்தைக் கோளாறுகள் குறித்துப் பின் வாங்கலான ஒரு சலிப்போடு தனக்குள்ளே வெந்து மாய்ந்தாள். அவளைச் சரி பாதியாக ஏற்றுக் கொள்ள முடியாமல் போன மன ஊனம் அவனுடையது. எந்த நேரமும் அக்குடும்பத்தில் ஒருவனாகவே தன்னைக் கொள்ள நேர்ந்த அந்தச் சந்தர்ப்பங்கள் மிகவும் கொடூரமானவை. அவளின் உள்ளார்ந்த நெருக்கத்துடன் கூடிய உறவு,அவனுள் கிளர்ச்சியை ஏற்படுத்த முடியாமல் போன வெறும் கசப்புச் சங்கதியாகவே இருந்தது.

அன்பு வழியில் அவளை நெருங்கி வர முடியாமல் போன உண்மை இருப்புக்கு பாதகம் செய்ய நேர்ந்த, அவனது இந்த மாறுபட்ட நடத்தை கோளாறு கள் நடுவே சிக்கி அவள் துரும்பாக வேறு இளைத்து விட்டிருந்தாள். ஒவ்வொரு கணமும் அவளை வஞ்சம் தீர்த்துப் பழிவாங்கவே அவனுடைய திசைமாறிய மூர்க்க குணங்கள், காத்துக் கிடப்பதாய் அவளுக்கு உணர்வு தட்டும். சுபாவக்காவின் திருமண உறவினால் ஏற்பட்ட பாவக்கறை போக்க வந்த யோக புருஷனென்று, அவனை நம்பி ஏமாந்து போன தனது விதியின் பாவக் கணக்கை எண்ணி அவள் மிகவும் கவலையுடன் தனக்குள் அழுது தீர்ப்பாள் அந்தக் கண்ணீர் நதி வற்றாத கண்களுடன் அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கும்.

எனினும் அக்குடும்பத்தில் ஒருத்தியாக, அவ் வீட்டில் அவளை யாருமே கண்டு கொள்வதில்லை. முன்பென்றால் அவளுடைய இருப்பு வேறு, உணர்வு களால் பங்கமுற்றுப் போகாத மாசற்ற குணநலங் களைக் கொண்ட ஒரு நற்குடும்பத்தின் உயிர் மங்காத ஒளிவிளக்காய் இருந்தவள் அவள். வாழ்க்கையின் உயிர்க் கோட்பாடான சத்தியம் ஒன்றைத் தவிர வேறு எதையுமே அறியாத அவளுக்கு ஊனஇருட்டினிடையே உயிர் போன மாதிரி இப்படியொரு இடறல்.

உயிராலே, உணர்வுகளாலே பங்கமுற்று வேறொரு கதியில் இயங்கிக் கொண்டிருந்த அவனுக்கு உடற்பசி எடுக்கும் போது மட்டுமே அவளின் உடல் தேவையாக இருந்தது. அதற்கு வளைந்து போக நேர்ந்த, இல்லற சாஸ்திர உண்மைகள் கவசம் போட்டுத் தன்னைக் காப்பாற்றி வருவதை, அவள் உணரத் தவறவில்லை. படுக்கையில் புரளும் போது அவனைக் கேட்டாள் ஒரு சமயம். "குடும்ப உறவின் ஸ்திரத்தன்மை குறையாமல் இருக்க இது மட்டும் போதுமா?"

அவன் அப்போது களிப்பின் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். உச்சக்கட்டத் தொடுகை யில், அதிலும் கூட அவன் தனிமையாக நிற்பது போன்ற ஒரு பிரமை. வெறும் பிரமை தான். மாயச்சுழற்சியின் அணுப்பிரமன் அவன். எப்படியாவது அவன் இருந்து விட்டுப் போகட்டும்". உடலளவு அனுபவத்தில் மூழ்கி னாலே பரவசமென்றுபடுகிறது எனக்கு. அது போதும். இவள் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கு என்ன.?"

அவன் இறுமாப்போடு காரியம் முடிந்த கையோடு வைராக்கியம் குலையாமல் அவளைப் புறத்தள்ளிவிட்டுப் போகக் கிளம்பிய போது அவளுக்கு எரிச்சல் மூண்டது. குரல் சினந்து கேட்டாள் அவள்

"இது மட்டும் போதுமென்று நினைக்கிறியளே"

அவன் சீறினான்

"உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. பிடிக்குதோ இல்லையே.என் இஷ்டம் இப்படித்தான் இருப்பன்"

அவள் கேட்டாள்

"என்னைப் பிடிக்கேலை என்றால் எதுக்காக என்னைக் கல்யாணம் செய்தனீங்கள்?"

"எல்லாம் என்ரை தலைவிதி. நான் இப்படித் தான் இருப்பன். இரவிலே கூடிக்களிக்கத்தான் நீ. எனக்கென்ன வந்தது இஷ்டமென்றால் இரு. இல்லா விட்டால் போ"

இதைக்கூறிவிட்டு அறையை விட்டு அவன் துரிதமாக வெளியேறிய பின் அவள் தனக்கே உரித்தான துருவமறை பொருள் உண்மைகளுடன் உயிர் மரத்துப் போய் நிழலில் ஒடுங்கிக்கிடந்தாள். சுபாவக்காவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த அடிகளை விட இது மோசமென்று நம்பினாள். அவனுக்கென்ன சொல்லி விட்டுப் போய் விட்டான். அன்பின் சாரம் விட்டுப் போன அவனின் தொனி காற்றில் இன்னும் அலைகிறது. ஏன்இந்த வாழ்க்கை என்று கேள்வி எழுந்தது.தாலியும், கூறையும் பார்த்து, என்னைத் தேரில் ஏற்றிப் போக ஒரு தேவ புருஷன் வருவானென்று எவ்வளவு நம்பியிருந்தேன். மாறாக என்னைச் சிலுவையில் அறைய ஒரு யூதன் போல் அவனின் வெளிப்பாடுகள். குற்றம் இழைக்காமலே தண்டிக்கப்பட்டு வரும் நான். இவரது உடல் மட்டுமே சார்ந்த விபரீத ஆசைகளின் பலனாய், மேலும் நான் கழுவாய் சுமக்க நேரிடும். எனக்குக் குழந்தைகள் பிறக்கும். ஒரு பொறுப்பற்ற தகப்பனுக்குப் பிறக்க நேர்ந்த பாவம், இவர்களுக்கு "இந்த உறவைத் துண்டித்துவிட்டு இதையெல்லாம் மீறி ஓடமுடியாமல் விட்டு விலகவும் முடியாமல், நான் ஏன் இவ்வாறு சிறைப்பட்டிருக்கிறேன்?".

அவளின் தெய்வாம்சமான உயரிய குணநலன் களை உள்ளபடி கண்டுகொள்ளத்தவறிய அவர் களுடைய குணநலன்கள் திரிபுபட்ட மாறான நடத்தைக் கோளாறுகளை எதிர்கொண்டு சமாளிப்பதே அவளைப் புறம்தள்ளி இருளில் வேகவைத்தது. அந்த இருளின் ஊனத்தை சுமக்க நேர்ந்த நிலையில்தான் முதன்முறை யாக அவளின் கருவறை கண் திறந்து கொண்டது. அவள் விரும்பாமலே அவளுக்கு அது நேர்ந் திருக்கிறது. அவளோடு மனப்பூர்வமாக ஒன்றுபட முடியாமல் துருவத் தின் மறைபொருளாக நிற்கும் அவள் கணவனுடனான அந்த உறவின் வெளிப்பாடு. அவன் விந்துவைச் சுமக்க நேர்ந்த பாவத்தையே எண்ணி, மனம் கலங்கியவாறு அவள் உறைந்து போயிருந்த நேரத்தில்தான் அண்ணன் செந்தூரன் அவளின் சுகம் கண்டறிய ஒருமுறை வீட்டிற்கு வந்திருந்தான். இதற்கு முன் அவன் முகத்தைப் பார்த்து ஒரு யுகமாகின்றது.

செல்லரித்துப் போன ஒரு காலக் கணக்கு அது. கந்தசாமியின் படுமோசமான அடாவடித் தனத்தால் கல்யாணத்திற்குப் பிறகு அவளுக்குப் பிறந்த வீட்டுத் தொடர்பே அடியோடு விட்டுப் போனது. அப்பா அம்மா வருவது கூட அபூர்வமாகத் தான் நிகழும். அதுவும் அம்மாவைக் கண்டால் சுத்தமாக இவர்களுக்குப் பிடிக்காது. கண்டவுடன் வேண்டாத விருந்தாளியைக் கண்ட மாதிரி கரி அடுக்களைக்குப் பின்னால் கோடியில் மறைந்து நின்று ஏதோ இரகசியம் குசுகுசுப்பதை அவள் தீராத மனவருத்தத்துடனேயே எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது. ஏன் இப்படி ஒட்டாமல் போனதென்று புரியவில்லை.

அங்கம் 6

அவளைப் பொறுத்தவரை கந்தசாமி வீடும் மனிதர்களும் இருண்ட குகைக்குள் வாழ்கின்ற காட்டுமிருகங்கள் மாதிரி. மனிதத்தன்மையின் சுவடுகளே அறியாதஅவர்களை வேறு எப்படி நினைவு கூர்வதென்று அவளுக்குப் பிடிபட மறுத்தது. இந்நிலை யில் அவர்களோடு ஒன்றுபட்டுக் கலக்க முடியாமல்



மறுதுருவமாய் பிரிந்து வாழும் அவளுக்கு அம்மாவைத் திடீரென்று காண நேர்ந்தால் நடை இடறும், அம்மா அவள் மீதுள்ள பாசத்தால் தனியாகவே பஸ்ஸில் பயணம் செய்து அவர்கள் வீட்டிற்கு வரும் போதெல்லாம் அவள் ஏன் வந்தாள் என்று ஆகிவிடும், அவளுக்கல்ல அந்தப்புறம்போக்கு மனிதர்களுக்குத் தான். அவர்களின் அந்தக் குறுகிய வட்டத்தினுள் அகப்படாத அப்பா ஒரு தனிமனிதர். பண்பட்ட ஆசிரிய திலகமாய் துலங்கியவர்.

அந்த ஒளிக்கீற்றைச் சுமந்தவாறே அவரின் இருப்புக்கள், வாழ்வின் கறைகள் விட்டுப்போன பிரகாசக்களையுடன் அதை எதிர்கொள்வதில் கூடப் பின் நிற்கும் நடேசன் உட்பட அந்த வீட்டு மனிதர்கள் குறித்து அவள் கவலைப்படாத நாட்களே கிடையாது. இதை அறிந்துதானோ, என்னவே,அப்பா அங்கு வந்து போவதையே அடியோடு குறைத்துக் கொண்டு விட்ட போதிலும் அம்மாவால் அப்படி இருக்க முடிவதில்லை. அவளுடைய எல்லையற்ற பாசம் அத்தகையது. சாரதாவின் முகம் பார்க்காமல், அவளால் இருக்க முடிவ தில்லை. அவளை என்ன செய்வதென்று புரியாத நிலை யிலேயே ஒருநாள் அபூர்வமாகச் செந்தூரன் வந்து சேர்ந் தான். சாரதாவின் உண்மை நிலையறிய, முதன்முறை யாக வந்திருக்கிறான்.சாரதா எது செய்தாலும் அங்கு எடுபடுவதில்லை. எப்படியும் அவளிடம் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே அவர்கள் குறியாக இருந்தார்கள். இதற்கு நடேசன் விதிவிலக் கல்ல. செந்தூரன் முதன் முறையாக அங்கு வந்த போது அவனும் வீட்டில்தான் இருந்தான். செந்தூரனுக்கு முகம் கொடுக்க விரும்பாமல் அந்தச் சிறிய வீட்டின் பின்வாசல் வழியாகப் போய் அவன் தெருவில் மறைந்து போய்க் கொண்டிருப்பதை எதிர்கொள்ள முடியாமல் சாரதா முகம் கறுத்து, முன் வராந்தாவில் உறைந்து போய் நிற்பதை எதிர்கொண்டவாறே செந்தூரன் உள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியேறிவரும் போது மௌனம் கனத்தது. அவனைக் கண்டதும் கந்த சாமியும் சடாரென்று சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போய் விட்டார். அவன் முன்னிலைக்கு வர முடியாமல் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்ற நிழற் கோலங்களாய் மனிதர்கள். இதையெல்லாம் ஜீரணித்து உள்ளூரச் சுவாலை விட்டெரியும் அக்கினிக் குழம்பாய்க் கொதித்தவாறே சாரதா அவனை மனம் திறந்து வரவேற்கக் கூட நா எழாமல் தடுமாறி நின்று கொண்டிருந்தாள். வயிற்றின் சுமை வேறு அவளுக்கு. அவன் அவ்வாறு அவளைக் கண்டு இருக்கையில் அமர்ந்தவாறே கவலை கொண்டு கேட்டான்.

"என்ன சாரதா? நான் இதை எதிர்பார்க்கேலை. இது நீயா என்று கூடச்சந்தேகமாக இருக்கு. என்ன இப்படி இளைச்சுப்போனாய்?"

தான் வாழ்க்கையின் பாரதூரமான சவால் களை எதிர்கொள்ளமுடியாமல் கைவிலங்கு இறுகித் தோற்றுப் போய்விட்டதை, வாய்ப் பிரகடனமாக எப்படி அவனோடு மனம்திறந்து பேசுவதென்று புரியாமல், அவள் தலை கவிழ்ந்து மௌனம் கனத்துப் போய் நின்றிருந்தாள் அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அவள் உணர்ச்சிவசப்பட்டுத் தன்னை மறந்து உரத்த குர லெடுத்து அழுவதைக் கேட்டவாறே, அவன் உறைந்து போய் அமர்ந்திருந்தான். அக்குடும்பத்தில் நடேச னென்ற தனிமனிதனுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்த அவளுடைய அந்த மனம் சரிந்து போன விபரீத விளைவுகள் குறித்து அவன் உள்ளூர உருகிக் கண்கள் கலங்கியவாறே நிறைய யோசித்து மனம் வருந்திக் கொண்டிருந்த போது, இடையில் குறுக்கிட்டு ஆவேசமாக அவள் கேட்டாள்.

"அண்ணா! நான் ஆரம்பத்திலிருந்தே இந்தக் கல்யாணத்தை மட்டுமல்ல. ஏனைய அவலைப் பெண்களின் கல்யாண உறவுகள் குறித்தும், எதிர் மறையான நினைவுகளைக் கொண்டிருந்தது இதுக்குத் தான். அதையும் மறந்து, இப்படி ஒரு தப்பான மனிதனின் உறவு விலங்கை நான் கழுத்தில் மாட்டிக்கொள்ள நேர்ந்தது. என்னைச்சரி செய்யவல்ல அதையும் தாண்டி ஒரு முக்கியகாரணமிருக்கு. என் கண் முன்னாலேயே சுபாவக்காவின் கல்யாண வாழ்க்கை கறைபட்டுத் தீப்பற்றி எரியுதே. இந்தப்பாவக் கறையைப் போக்க ஒரு புண்ணிய புருஷனின் காலடிச் சுவடுகளை எதிர்பார்த்துத் தான் எனக்கு இந்தக் கல்யாண உறவு சரிப்பட்டு வந்தது. நான் கனவு கண்ட மாதிரி இங்கு எதுவும் நடக்கேலையே, இவருக்கு நான் ஒரு வேண்டாத விருந்தாளியாக மட்டுமல்ல ஒரு பகையாளி கணக்கில் நான், இந்த நிலையில் ஒட்டாத உறவின் நிமித்தம் அருவருக்கத்தக்க உடல் உறவின் குரூர வெளிப்பாடாக, எனக்குள் குழந்தை வேறு. இதை எப்படியண்ணா நான் தாங்குவேன்".

அவள் கண்களிலிருந்து பெருகியோடும் கண்ணீர் நதியை ஆறாத மனத்துயரத்துடன் பார்த்த வாறே சூனிய இருப்பாக உறைந்து போய் நின்று கொண்டிருக்கும் அவளை எதிர்கொள்ளத் திராணியற்று, அவன் பேச்சிழந்த மௌனத்துடன் அந்த வீட்டையே வெறித்துப் பார்த்தபடி சிலையென அமர்ந்திருந்தான். அந்த வீட்டு மனிதர்களின் குண விசேஷங்கள் குன்றிய மனக்கறுப்புப் போலவே, அந்த வீடும் நித்திய இருள் சாக்கடைக்குள் புதைந்து கிடப்பதாய் அவனுக்கு உணர்வு தட்டிற்று. ஆணாதிக்க சமூகத்தின் அடிமைச் சாதனம் எழுதப்பட்டு விதியின் ஒரு பாவக் கணக்காய் வருந்தியழுதே,வாழ்நாளைத்தீர்த்துக் கொள்ளும் பேதைப் பெண்களின் வரிசையில் இப்போது இவளும் என்று நினைக்கும் போது அவனே தன்னை மறந்து வாய்விட்டு அழுது விடுவான் போலிருந்தது. மறைந்து நின்று வேடிக்கை பார்க்கின்ற, அங்குள்ள மனிதர்களுக்கு அதுவே தீனியாக அமையவும் கூடும் எனக்கருதித் தன்னைத் தேற்றியவாறே அவளை நிமிர்ந்து பார்த்து உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டான் அவன்.

"சாரு! எனக்கு என்ன சொல்லுறதென்று புரியேலை.இப்ப இந்த நிலையில் விட்டு விலக முடியாமல் கற்பு என்ற முட்கிரீடம் உனக்கு. இதை நீ சுமந்து தானாக வேண்டுமென்றால் யாரால் என்ன செய்ய முடியும்,? சொல்லு சாரு"

"அண்ணா! சுபாவக்காவின் வாழ்க்கையில் அவளை மட்டும் குறி வைத்துத்தான் அந்தப்பயணம். இங்கேயோ அபத்தமான, சுற்றி வரும் இந்த உறவுச் சில்லினுள் அகப்பட்டு, என் தலைமட்டுமல்ல என் உறவு சார்ந்த மனிதர்களையும் அது காவு கொள்வதை நினைத்துத்தான் இந்த உறவை அறுத்துக்கொண்டு விட்டுவிடுதலையாவதையே, என் மனம் விரும்பு தண்ணா." என்று கூறிவிட்டு அவள் அழுகையைத் தொடர்ந்தாள். அவன் தாங்க முடியாத மனவருத்தத் தோடு, அவளைக் கூர்ந்துபார்த்தவாறே கேட்டான்.

"சாரு! நீ நடேசனைப் பிரிந்து தனியாக வந்து விட்டால், எல்லாம் சரிப்பட்டு வருமா? பிறகு உன்ரை வாழ்க்கையே முடிந்த மாதிரித்தானே. நீ ஒரு வாழாவெட்டியென்று இந்தச் சமூகம் உன்னைப் பழிக்குமே. இதுக்கு நீ சம்மதமோ?"

"அண்ணா, ஏற்கனவே அதாவது எனக்கு இப்படியொரு விபரீத உறவு ஏற்படுவதற்கு முன்பே நமது பெண்களின் கல்யாணங்கள் குறித்து நான் கொண்டி ருந்த அவநம்பிக்கை எதிர்மறையான எண்ண அலைகள் இவற்றை மெய்யாக்கவே இப்ப இந்த என்னுடைய கல்யாண வாழ்க்கையும் அதனால் உண்டான உறவுகளும் என்னைப்பல வழிகளிலும் பங்கமுற வைத்து, வேரோடு பிடுங்கியெறியவே என்னை இப்படி யொரு பலிபீடத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டிருக்கு. நான் களங்கமற்ற நிரபராதியாக இருந்தும், என்னைக் கருவறுத்துக் கழுவிலேற்றவே. இவர் ஒவ்வொரு கணமும் துடித்துக்கொண்டிக்கிறார். சுபாவக்கா பாவம். எத்தனையோ கனவுகளுடன் அவள் வாழப்போனாளே அவளையும் தீக்குளிக்க வைத்துத் தோலுரித்துவிட்டு, இனிப்பேச என்ன இருக்கு? அவளோடு மட்டும் தான் இந்த முரண்பாடான யுத்தம் அவள் கணவருக்கு. அதில் ஏற்பட்ட ரணங்கள் போகத் தான், நான் இந்தக் கல்யாணத்துக்கே சம்மதிக்க நேர்ந்தது. ஆனால் எனக்கு நேர்ந்ததோ அதைவிடக் கொடுமை நீங்கள்தான் பார்க்கிறியளே. என்னோடு மட்டும் இந்தக்கறை போகேலை. என்னைச் சார்ந்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறவு மனிதர்களையும் இவர்கள் விட்டு வைக்கேலையே. உயிரின் கொடியே அறுந்து ஒரேயடியாய் விழுக்காடு கண்டமாதிரி நானாகி விட்டிருக்கிறன். பிறந்த வீட்டுத் தொடர்பே, எனக்கு அடியோடு விட்டுப் போச்சு. இப்படி ஒரு குருஷேத்திரப் போருக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. நான் பட்ட துயரம் ரணகளம் கொண்ட ஒரு சோகவரலாறு. இந்த இலட்சணத்தில் அவரின் ஒட்டாத உறவைப் பிரதிபலிக்க எனக்குள் குழந்தை வேறு. மனதாலோ உணர்வுகளாலோ நான் அவரோடு வாழ்ந்தேயில்லை. உடம்பிலே தழும்படி பட்டது தான் மிச்சம். இதை இதன் போக்கிலேயே விடலாமா? ஒரு மனிதனை மனித குணங்களோடு ஏற்றுக்கொள்ள நேர்ந்திருந்தால் நான் இப்படி உருக்குலைந்து போயிருக்கமாட்டன். பதிலாக வக்கிரபுத்தி கொண்ட, அன்பற்ற ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்? இதை நியாயப்படுத்தி இப்படியே நான் அம்புப்படுக்கையிலே கிடந்து சாகவேண்டியதுதானா? இதுக்கு ஒரு விமோசனம்தான் இப்ப எனக்குத் தேவைப்படுகுது"

"சாரு! நீ என்ன சொல்கிறாய்? இதுதான் உன்ரை முடிவா? எத்தனை கனவுகளோடு அப்பா அம்மா உன்னைத் தாரை வார்த்துக் கொடுத்திருப்பினம். நீ இப்படி வெறும் மனுஷியாய், அறுத்துக் கொண்டு திரும்பி வாறதை அவர்களால் தாங்க முடியுமா?"

"அண்ணா! மற்றவர்களுடைய திருப்திக்காகவோ சந்தோஷங்களுக்காகவோ என்னை விட்டுக் கொடுத்து இவரின் கொடுமைகளுக்குப் பலியாகி நான் இப்படி அழிஞ்சு போறதையே தர்மமென்று நீங்கள் சொல்ல வாறியளே? இந்தத் தர்மத்துக்கு உடன்பட்டுக் கற்பு என்ற கௌரவத்துக்காக என்னைப்போல, இந்தச்சமூகத்தில் எத்தனை அபலைப் பெண்கள் பலியாகியிருப்பினம். தாலி கட்டிய புருஷன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும் சரி. அவன் இளகாத கல்லாகவே இருந்துவிட்டுப் போகட்டும். அவனோடு முட்டி மோதிச் செல்லரித்துப் போய், காலம் முழுக்கக் கண்ணீர் நதி குளித்துக் கொண்டு வாழ்ந்து முடிப்பதே பெரிய கற்பின் சாதனை மாதிரி, இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஓர் ஆணின் காலடியில் அவள் புழுவாகவே இருந்து மரித்துப் போவதையே, பெருமை என்று கருத என்னால் முடியேலை இதற்காக இந்தச் சாஸ்திர விதியை உடைத்தெறியவும் நான் தயங்கமாட்டேன். "பொல்லாத சாஸ்திரவிதி".

இதை அவள் சொல்லி முடித்து விட்டுத் தேம்பித் தேம்பி அழ நேர்ந்ததை, அவன் கனத்த துயரத்துடன் எதிர்கொள்ள நேர்ந்தது. நடேசனுடனான அவளுடைய உறவு முறிந்து போனதற்கு அவளின் விதி எழுதிய பாவக்கணக்கு மட்டுமல்ல காரணம். அதற்கு மேலாக ஓர் உண்மை, அவன் நெஞ்சை உறைய வைத்தது. மேலான குணங்களைக் கொண்ட பண்பட்ட வாழ்க்கையின் உத்தம குணாதிசயங்களையே பிரதிபலிக்கும் ஒரு துருவ சோதி மாதிரி அவள். ஒட்டுமொத்தப் பாவங்களின் சாக்கடை போன்றே, குட்டை குழம்பிக் கிடக்கும் ஒரே குடும்பத்தில் தலையெடுக்க நேர்ந்த நடேசன் இப்படிப் பட்ட

தாலி கட்டிய புருஷன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும் சரி. அவன் இளகாத கல்லாகவே இருந்துவிட்டுப் போகட்டும். அவனோடு முட்டி மோதிச் செல்லரித்துப் போய், காலம் முழுக்கக் கண்ணீர் நதி குளித்துக் கொண்டு வாழ்ந்து முடிப்பதே பெரிய கற்பின் சாதனை மாதிரி. இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஓர் ஆணின் காலடியில் அவள் புழுவாகவே இருந்து மரித்துப் போவதையே, பெருமை என்று கருத என்னால் முடியேலை இதற்காக இந்தச் சாஸ்திர விதியை உடைத்தெறியவும் நான் தயங்கமாட்டேன். "பொல்லாத சாஸ்திரவிதி".

இவளுக்கு, மறு துருவம் போன்றே, மனதாலே பெருமையிழந்து நின்ற அவனை மணம் முடிக்க நேர்ந்த பாவம் மட்டும் தான் இவளுக்கு. அந்த பாவக்கறையைப் போக்க, அவனைத் தலை முழுகநேர்ந்த அவசியம் இவளுக்கு.அதன் பொருட்டு இந்த விலகலும் சரணாகதி மறுப்புக்களும் இவளால் மனம் துணிந்து ஏற்றுக்கொள்ள நேர்ந்த இவளின் இந்தப் புனிதமான உயிரின் மறுபிரசவத்திற்கு முன்னால், சமூகத்தால் அங்கீகரிக்க முடிந்த ஓர் ஆணுக்காக அடிமை விலங்கு பூட்டிக்கொள்ளும் கற்பு என்ற சாஸ்திர விதியும் அதன் தாற்பரியக் கோட்பாடுகளான சத்திய உண்மைகளும் தலைகுனிந்து நிற்க நேர்ந்ததை, ஊர் அறியப் பிரகடனமாகப் போகிற, அவளுடைய உயிர் பங்கமுறாத நிதர்சன வெற்றியாகவே, அவனால் உணரமுடிந்தது.

மூட்டை முடிச்சுகளுடன் அவனுடன் புறப்படவே தயாராகிப் புறப்பட்டு வந்திருக்கிற அவளைக் கைவாகு கொடுத்து அணைத்த வண்ணம் அவன் வாசலைத் தாண்டிப் புறப்படும் போது, ஏற்கனவே அங்கு வந்து சேர்ந்த நடேசனும் அவனது உறவு மனிதர்களும் அவள் அப்படிச்சொல்லாமலே, புறப்பட்டுப் போவதைப் பின்னாலிருந்து, ஓடிவந்து தடுப்பதற்குக் கூட மனம் வராமல் கோடியில் மறைந்து நின்றவாறே அதை வேடிக்கை பார்ப்பதை அவன் மிகவும் கசப்புடனேயே எதிர்கொள்ள நேர்ந்தது. ஒழியட்டும் சனியனென்று நடேசனுக்குத் தோன்றியிருக்கும். அவளை மனப்பூர்வமாக நேசிக்க முடியாமல் போன அவனுடைய கறைபட்ட மனம் அப்படித்தான் நினைத்திருக்கும்.

துரதிஷ்டவசமாகப் பொய்யின் கறைபட்டுப் புரையோடிப்போன தனது அர்த்தமற்ற திருமண வாழ்க்கையைத் துச்சமென உதறித்தள்ளி விட்டுப் போக நேர்ந்த பெருமிதக்களை மாறாமல் சாரதா விடிவு காணத்துடிக்கும் ஒரு புதிய சகாப்த யுகத்தைநாடிக் கால் இடறாமல், வெற்றி நடைபோட்டுக் கொண்டிருப்பதாய் அவனுக்கு உணர்வு தட்டிற்று. அவளுடைய அந்தப் பிரவேசமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமூகம் சார்ந்த ஒழுக்க விழுமியங்களுக்கு மாறான ஒரு புரட்சிகரமான உயரிய கொள்கைப் பிரகடனமாக வெளிச்சம் போட்டுக் காட்ட நேர்ந்த உறுதி குலையாத துணிச்சல் மிக்க அவளுடைய அந்த உயிர் தீர்க்கமான மனோபலம் குறித்து அவன் தனக்குள்ளே கொண்டிருந்த சந்தோஷத்தையே வெளிக்காட்டிப் பிரதிபலிப்பதைப் போல் அவன் முகம் ஒளிக்களை கொண்டு மின்னிற்று. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரி இ. இராஜேஸ்கண்ணனின்

"இலக்கியத்தில் சமூகம் பார்வைகளும் பதிவுகளும்"

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்



வெளியீடு - ஜீவநதி

பக்கம் - 120

விலை - 250/-

வதிரி இ.இராஜேஸ்கண்ணன் படைப்பாளர், ஆய்வாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர் எனப் பல தளங்களிலும் தனது ஆளுமையைப் பதிவுசெய்த ஒருவர். தனது ஆக்க இலக்கியப் படைப்புக்களாலும் ஆராய்ச்சி நூல்களாலும் எழுத்துலகுக்கு ஏலவே நன்கு பரிச்சயமானவர். அவரது "இலக்கியத்தில் சமூகம் பார்வைகளும் பதிவுகளும்" என்னும் நூல் மிக அண்மையில் "ஜீவநதி" 34 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. நூலாசிரியரால் அவ்வப்போது எழுதப்பட்ட பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளதைக் காணலாம். சமூகவியல் ஆய்வுப்புலத்தினையும் இலக்கியப் படைப்புல கினையும் இணைத்து நோக்கும் விதத்தில் இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இராஜேஸ்கண்ணன் சமூகவியல் ஆய்வாளனாகவும் அதேநேரத்தில் அனுபவம் மிக்க படைப்பாளனாகவும் விளங்குவதால் அவரது இலக்கியத்தில் சமூகம் பற்றிய பார்வையானது இக் கட்டுரைகளில் கனதியும் காத்திரமும் பொருந்திய தாக விளங்குகின்றது.

இலக்கியத்தினை சமூகத்துடன் பொருத்தி நோக்குவதும் இலக்கியத்தில் சமூகச் சிந்தனையினை வலியுறுத்துவதுமான போக்கு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்கள் தொட்டே மேலைத்தேயத்தில் வளரத் தொடங்கியிருந்தது. இலக்கியத்தினை இலக்கியத்திற்காக அதன் அழகியல் பண்புகளுக்காக மட்டும் கவனத்தில் கொள்கின்ற அல்லது ஆராய்கின்ற பார்வைக்கு முற்றிலும் எதிரான தளத்தில் சமூகவியல் நோக்கிலான இலக்கியப் பார்வைகள் முன்னிறுத்தப் பட்டன. "படைப்பாளன் சமூகத்தின் ஓர் அங்கமாக இருப்பதால் அவனால் சமூகத்தினை விடுத்துச் சிந்திப்பதோ செயற்படுவதோ முடிவதில்லை இதனால் சமூகம் தவிர்க்க முடியாமல் அவனது படைப்பில் பிரதிபலிக்கப்படுகின்றது." என்ற கருத்துநிலையினை வலியுறுத்துவனவாய் சமூகவியல் இலக்கிய ஆய்வுகள் அமைந்தன. மார்க்சிய கருத்துக்களின் அறிமுகம் மற்றும் அவற்றின் செல்வாக்கு என்பன சமூகவியல் அணுகுமுறைக்கு மேலும் ஊட்டமும் உயிரோட்டமும் அளித்தன. காலப்போக்கில் மார்க்சிய அழகியல் பற்றித் தனித்துச் சிந்தித்தும் ஆராய்ந்தும் நிறைய எழுதப்பட்டு வந்தன. தமிழ்ச் சூழலைப் பொறுத்தமட்டில் அறுபதுகள் முதற்கொண்டு இலக்கியங்களைச் சமூகத்துடன் பொருத்தி நோக்குகின்ற பார்வை வளரத்தொடங்கி யிருந்தது. தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த அறிஞர்கள் பலர் இதில் ஆர்வம் காட்டி வந்தனர்.

இராஜேஸ்கண்ணன் சமூகவியல் கோட்பாடு களை முறையாகக் கற்றவர் முறையாகக் கற்பித்து வருபவர் என்ற விதத்தில் அவரிடம் சமூகவியற் பார்வை யென்பது இரத்தமும் சதையுமாகப் பிணைந்துள்ளது. அதனைவிடப் பல ஆண்டுகளாக இலக்கியத்தினை படித்தும் சுவைத்தும் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டும் இலக்கிய உலகுடன் நிறைந்த பரிச்சயத் தினையும் இவர் பெற்றுள்ளார். இவை அவர் இலக்கியத்தில் சமூகம் குறித்ததான ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான பலமான பின்னணியினை ஏற்படுத்தித் தந்துள்ளன. "கலையின் சமூகவியல் சில சிந்தனா கூடங்களின் வழியான தேடல்" எனும் தலைப்பிலமைந்த முதற் கட்டுரை கலை இலக்கியங்கள் குறித்ததான ஆய்வுகளுக்கான சமூகவியல் சிந்தனைப் புலன்களை அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளது. புலனறிவாத சமூகவியல், அர்த்தமளித்தல் சமூகவியல், விமர்சன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல், பின்நவீனத்துவ சமூகவியல் முதலான சிந்தனா கூடங்கள் கனதியான இலக்கிய ஆய்வுக்கு இட்டுச் செல்லும் வழிமுறை குறித்து சுருக்கமாகவும் தெளிவாகவும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். கலை, இலக்கியங்களை சமூக விஞ்ஞானக் கண் கொண்டு ஆராய விழைவோர்க்குச் சிறந்ததோர் அறிமுகத்தினை இக்கட்டுரை தந்திருப்பதுடன் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஏனைய ஒன்பது கட்டுரைகளுக்குள்ளும் நுழைவதற்குரிய திறவு கோலாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. இத்தொகுதியிலுள்ள முதற்கட்டுரை தவிர்ந்த ஏனைய ஒன்பது கட்டுரைகளையும்

(i) படைப்புக்களையும் படைப்பாளர்களையும் சமூகவியற் கண்ணோட்டத்தில் ஆராய்வன

(ii) படைப்பாக்க நுட்பங்கள் மற்றும் இலக்கிய வடிவங்கள் பற்றிய கருத்தோட்டங்களை முன்வைப்பன

(iii) ஒப்பீட்டு நோக்கில் படைப்பாளுமைகளை அவற்றுக்கிடையிலான விலகல்களை மதிப்பிடுவன

என மூன்று தளங்களில் பகுத்து நோக்க முடியும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப்படை, பாவலர் துரையப்பாபிள்ளையின் படைப்புக்கள், ஜெயகாந்தனின் யுகசந்தி, புதுமைப்பித்தனின் சாபவிமோசனம், திருக்குறள் என்பன தொடர்பாக எழுதப்பட்ட ஐந்து கட்டுரைகளும் முதற் பிரிவில் அடங்கவல்லன. இவற்றுள் காதலியாற்றுப் படை, திருக்குறள், பாவலரின் படைப்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கட்டுரைகள் நேரடியாக இலக்கியத்திற்கும் சமூகத்துக்குமிடையிலான அத்யந்த தொடர்பினை சமூகவியல் நோக்கில் ஆராய்வன. இராஜேஸ்கண்ணனின் இலக்கியம் பற்றிய புரிதலுக்கும், ஆய்வுத் திறனும் முத்தாய்ப்பாக எடுத்துக் கூறத்தக்கன. "யுகசந்தி", "சாபவிமோசனம்" குறித்த கட்டுரைகள் படைப்பாளுமை பற்றிய உசாவலாகவும் மதிப்பீடாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

"கைகூ" கவிதைகள் மற்றும் "கவிதை மொழி" பற்றிய கட்டுரைகள் தனித்துவமானவை. அவரது "ஈழத்து கவிதைத் தடத்தில் கைகூ கவிதைகள்" எனும் கட்டுரை தமிழ்ச் சூழலுக்குள் "கைகூ" கவிதையின் அறிமுகம் பரம்பல் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டத்தினையும் "கைகூ" கவிதைகளின் வாழ்நிலை அனுபவங்கள், கற்பனைத் திறன்கள், படிமச் செதுக்கல்கள், சொற்செட்டு என்பனவற்றினையும் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. குறிப்பாக ஈழத்து "கைகூ" கவிதைகளினை அனுபவங்களை கருத்திற் கொண்டு நூலாசிரியர் இக்கட்டுரையை எழுதியுள்ளார். நீண்ட விவாதங்களுக்கு இட்டுச்செல்வதும் தொடர்ந்தும் ஆய்வுகளுக்கு உட்பட்டு வருகின்றதான கவிதைமொழி பற்றிய கட்டுரை உணர்வுத்தளம், கருத்தியல்தளம் என்பனவற்றினை கவிதைமொழியுடன் இணைத்து ஆய்வுசெய்யும் நோக்கில் அமைந்துள்ளது. கவிதைமொழி, உணர்வுத் தளம், கருத்தியல் தளம் என்பவற்றுக்கிடையிலான எல்லைகளையும் படைப்பாக்கத்தின் போது அவற்றின் எல்லைக்கோடுகள் அழிந்து இயைபுபடுந் திறனையும் தெளிவுபடுத்துவதாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இராஜேஸ்கண்ணன் சமூகவியல் கோட்பாடுகளை முறையாகக் கற்றவர் முறையாகக் கற்பித்து வருபவர் என்ற விதத்தில் அவரிடம் சமூகவியற் பார்வையென்பது இரத்தமும் சதையுமாகப் பிணைந்துள்ளது.

செந்நெறி இலக்கியங்கள் அடையாளப்படுத்தும் ஒளவையையும் தற்காலப் பெண்ணியப் படைப்பாளிகளையும் ஒப்பிட்டு நோக்கும் விதத்தில் எழுதப்பட்ட கட்டுரையும் ஒளவையார் பாரதி முருகையன் மூவரதும் "ஆத்திசூடி"களை ஒப்பிட்டு எழுதப்பட்ட கட்டுரையும் மூன்றாவது வகைசார்ந்த அவரது கட்டுரைகளுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சமூகவியல் ஆய்வுக் கோட்பாடுகளுள் மிக முக்கியமானதாகக் கருதப்படும் "வரலாற்றுப் பொருள்முதலிய"த்தின் (Historical Materialism) அடிப்படையில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. வரலாற்றோட்டத்தில் கருத்துநிலைகளில் வளர்ச்சியும் மாற்றங்களும் நிகழ்ந்து வந்ததை மிகத் துலாம்பரமாக கட்டுரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

இக் கட்டுரைகள் மிக எளிமையாக எல்லோரும் விளங்கத்தக்க வகையில் எழுதப்பட்டுள்ளன. புலமையை வெளிப்படுத்தும் நோக்கிலான சொற்சதுரங்க வேலைகளில் ஆசிரியர் ஈடுபடவில்லை. தனது சொந்தக் கருத்துகளை நேரடியாக ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் முன்வைக்கின்றார். இக் கட்டுரைகள் தர்க்க ரீதியான விவாதங்களுடன் நகர்வதை அவற்றை வாசிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். சமூகவியற் கோட்பாடுகளும் கொள்கைகளும் அவருள் நன்கு ஊறி வெளிவந்துள்ளதை அவதானிக்க முடியும். புலமையை செயற்கையாக வெளிப்படுத்தும் நோக்கில் சமூகவியற் கோட்பாடுகளை வலிந்து திணிக்கும் போக்கு அவரிடம் காணப்படவில்லை. இது அவரது கட்டுரைகளின் பலமாக அமைவதைக் குறிப்பிட்டேயாதல் வேண்டும். ஆழ்ந்த இலக்கியப் பயிற்சி, நீண்ட இலக்கிய அனுபவம், ஆய்வு முறையியல் குறித்த தெளிவு என்பன இக்கட்டுரைகளினூடே மிளிர்வதை மறுக்க முடியாது. கருத்துக்களை வெளியிடுவதிலுள்ள தெளிவு, இலாவகம், ஆற்றொழுக்கு என்பன பாராட்டப்பட வேண்டியவை.

ஆக, இ. இராஜேஸ்கண்ணனின் இக் கட்டுரைத் தொகுதி அவரது படைப்பாளுமை மற்றும் ஆய்வியல் நுட்பத்திற்கு மிகச் சிறந்ததொரு உரைகல்லாக விளங்குவதைக் காணலாம். சமூகவியல் நோக்கில் இலக்கியங்களை ஆராயவிழைவோருக்கு குறிப்பாக மாணவர் சமுதாயத்திற்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் பெரும் பயன்தருவதாக இது அமையும் என்பதில் வியப்பில்லை. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெணியானின் "குடிமைகள்" ஒரு குடும்பத்தின் கதையில் மாற்றமடையும் சமூகம்

ந.இரவீந்திரன்

"தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்" என்ற நூலை 2012 இல் வெளியிட்டுள்ள "ஜீவநதி வெளியீடு" ஒரு வருடத்தின் பின்னர் தெணியானின் "குடிமைகள்" நாவலை வழங்கியுள்ளது. ஐம்பது வருட எழுத்துலக பயணத்தை மேற் கொண்ட தெணியான் பற்றிய ஆழமான பார்வை விமர்சகர்களால் இன்னும் முன்வைக்கப்படவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய ஜீவநதி வெளியீட்டகம், ஆழமான பார்வை மேற்கிளம்ப "குடிமைகள்" நாவல் உறுதுணை யாக அமையும் என்ற நம்பிக்கையையும் வெளி யிட்டுள்ளது.

தமிழ்ச் சமூகத்தின் பொதுப்புத்தி மட்டத்தில் கவனங்கொள்ளத்தக்க விமர்சன அதிர்வை இந்த நாவல் ஏற்படுத்தும் எனக் கருத இடமில்லை என்பதைக் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அவதானிக்க முடிந்தது. இந்த நாவல் பற்றிய உரையொன்றை தமிழ்ச்சங்கத்தில் ஏப்ரல் 4ம்திகதி மேற்கொண்ட போது தலைமை தாங்கிய கே.சண்முகலிங்கம் "பேசாப் பொருளாக விடப்பட்டுள்ள துறைசாதி; எவரும் பேசத்துணியாத சாதிகுறித்து பேச முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது தான்" என்று வியப்பை வெளிப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் சாதி பற்றிப் பேச விரும்புவதில்லை, அவசியம் வருகிறபோது "அந்தப்பக்கம்", "அந்தச் சமூகம்" என்றே குறிப்பிடுவர் என எண்பதாம் ஆண்டு ஆய்வுக் கருத்து ஒன்றை முன்னிறுத்திய விளக்கத்தையும் கூறினார் சண்முகலிங்கம்.



அறுபதுகளில் யாழ்ப்பாணத்தில் முனைப் படைந்த சாதியத்தகர்ப்புப் போராட்டம் ஊர்வீதிப் பெயர்களின் சாதியடையாளங்களை முடிந்தவரை ஒழித்துக்கட்டி சாதிமனோபாவம் என்பதே அவமானத் துக்குரியது என்ற பொதுப்புத்தியை ஏற்படுத்தியிருந்தது. "சாதி உணர்வுடன் வாழ்பவன் பாதித் தமிழன்" என்ற கவிதை முழக்கங்கள் வீதிதோறும் ஒலித்து ஒடுக்கப்பட்ட கிராமங்கள் பல ஆளுமையுடன் எழுச்சி கொண்ட காலம் அறுபதாம் ஆண்டுகள். இவ்வாறு தமிழ்த் தேசியத்தில் சம பங்கு பெறும் ஆற்றலைத் தமது சொந்தப் போராட்டங்கள் வாயிலாக அவர்கள் வந்தடைந்த நிலை யில் மார்க்சியத் தேடலுடனான தமிழ்த்தேசியத்தை முன்னெடுத்த இளைஞர் இயக்கங்கள் இயங்கிய காலமாய் எண்பதுகளின் தொடக்கம் இருந்தது.

பின்னாலே தனியொரு சர்வாதிகாரம் தமிழ்த் தேசியத்தை குத்தகைக்கு எடுத்தபோதும் அவர்களாலும் சாதிப் பேச்சுச் சட்டத்தால் தடுக்கப்பட்டது. அது போலியானது. முன்னர் இயங்கும் மக்களின் போர்க் குணம் அனைத்துத் தளங்களிலும் சாதிபேதத்தைத் தகர்க்கும் முனைப்பில் முன்னேறி வந்தது போன்றதல்ல இந்தத் தடைச்சட்ட சூழல். இதற்குள் பேசாமலாக்கப் பட்டது சாதிவெறியர்களின் உணர்வையல்ல, வெறும் வெளிப்பேச்சையே. மாறாக, சாதித் தகர்ப்புப் போர்க் குரல் மட்டுமன்றி விடுதலை உணர்வுகளும் அப்போது மௌனமாக்கப்பட்டன - முடக்கப்பட்டன.

யுத்தகாலத்தில் சாதித்தகர்ப்பு நாவலொன்றை எழுத இயலாது போன சூழல் பற்றி என்னுரையில் தெணியான் எழுதியுள்ளார். "கூர்மையான சமூகப் பார்வையுடன் பரந்து பட்ட சமூக விபரிப்புச் சித்திரமாக நாவல்களை எழுதத் தகுந்த ஒரு சூழல் கடந்த காலத்தில் இல்லாமற் போனமையே இந்த இடைவெளிக்குரிய காரணம். சாதியம் பற்றி பேசுவது, எழுதுவது விரும்பத்த காத ஒன்றாக அப்போது கருதப்பட்டது. சாதியக் கொடுமைகளுக்கு எதிரான எழுச்சி மேலெழாதவாறு அடக்கி வைக்கப்பட்டது."(ப.VI) என குடிமைகள்

noolaham.org | aavanaham.org

நாவலின் என்னுரை வாசகம் முன் வைக்கும் உணர்வுநிலை கவனிப்புக்குரியது. எண்பதுகளின் முற்கூறில் சாதியத்தகர்ப்பு நாவல்களை வீரியத்துடன் எழுதிய டானியல் தனது பணியைத் தொடர்வார் என எதிர்பார்த்தது தெணியானிடம். இவர் இந்த இடை வெளியைக் கடந்து இப்போது எழுதத் தொடங்கிய போது நிலைமை என்ன?

மேலே குறிப்பிட்ட தமிழ்ச்சங்க உரை நிறை வானதைத் தொடர்ந்து கருத்துரைக் களம் இடம் பெற்றது. ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முந்திய சாதியொடுக்குமுறைதானே நாவலில் காட்டப் பட்டுள்ளது, இப்போது அப்படியெல்லாம் இல்லை என்ற குரல்கள் ஒரு பக்கம் இருந்தபோது, இப்படிச் சாதி பற்றிப் பேசுவதால் சாதி வருகிறது - இனிமேல் இது போன்ற உரைகளுக்கு தமிழ்ச்சங்கத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்ற "தமிழ்த்தேசியச் சட்டமும்" முழங்கப்பட்டது. ஒழிந்தது சாதி!

சாதி இழிவுகளும், ஒடுக்குதலும் இருக்குமிடங் களில் பாதிக்கப்படுகிறவர்கள் மௌனித்து அடங்கிப் போய்விட்டால், அதுபற்றி எங்கும் மூச்சுவிடாமல் இருந் தால் சாதிப்பிரச்சினையே வராது தானே! இவர்கள் மட்டும் பேரினவாத ஒடுக்கல்பற்றி உலகமெல்லாம் ஊதிப் பெரிதாக்கி கதைகள் கட்டிக்கொண்டு இருந்தால் அவற்றின் உண்மை நிலவரங்களை எவரும் பேசக்கூடாது. சாதியொடுக்கலைச் செய்கிற நீங்கள் பேரினவாத ஒடுக்கலை ஏற்கவேண்டியது தான் என்று சொல்ல வரவில்லை; பேரினவாதப் புறக்கணிப்புகளும் இயல்புநிலையும் மிகைப்படுத்தலில்லாமல் உலக அரங்கில் முன்வைக்கப்படவுள்ள நியாயப்பாட்டின் அளவில் சாதியிழிவுகளும் புறக்கணிப்புகளும் ஒடுக்கல் களும் பேசப்பட வேண்டும். அனைத்து ஒடுக்குமுறை களுக்கும் எதிரான விடுதலை மார்க்கம் கண்டறியப் படுவதற்காக எமது சமூக இருப்பும் இயங்காற்றலும் மாற்றுவிசைகளும் வெளிக்கொணரப்பட்டாக வேண்டும். அதற்கு உதவுவதாய்க் "குடிமைகள்" நாவல் அமைந்துள்ளது.

I

நாவலுக்குள் போவதற்கு முன்னதாக இன்றைய நிதர்சனம் குறித்துக் காண்பது அவசியமான தாகிறது. தமிழ்த்தேசியப் போராட்டம் தனது துப்பாக்கி மௌனித்துவிட்டதாகப் பிரகடனப்படுத்திய போது பேரினவாதத் துப்பாக்கி ஓங்கியடித்து பௌத்த-சிங்கள மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டது. முன்னதாக மாவிலாறில் யுத்தத்தை தமிழ்த்தேசியத் துப்பாக்கி வலிந்து வரவேற்றபோது "சமாதானம் தொடரப்பட வேண்டும்" என்று எழாத புலம்பெயர்ந்த மற்றும் தமிழகத் தமிழ்த் தேசிக் குரல்கள் காலங்கடந்து ஈனசுரத்தில் முள்ளிவாய்க்கால் அவலத்தைத் தடுப்பதற்காக எழுந்தன. இன்றும் இங்கே என்ன அவசியம் உள்ளது என்ற புரிதல் இன்றியே கால-இடப்பொருத்தமற்ற குரல்களை அவர்கள் எழுப்பிய வாறுள்ளனர்.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட வர லாற்றை மீட்டிப்பார்த்து தோல்விக்கான காரணங் களை சுயவிமர்சன ரீதியில் அலச விருப்பமற்றவர் களாயே பலரும் உள்ளனர். சாதனைகளை எமக்குரிய தாக்கித் தவறுகளின் காரணங்களைப் பிறர்தலைமேல் கட்டிவிட எத்தனிக்கும் அவதியே அதிகம் வெளிப்படு கிறது. மறுபக்கம் தனது மேலாதிக்கத்தை ஏனைய தேசிய இனங்கள் மேல் உறுதிப்படுத்திய பௌத்த சிங்களத் தேசியம் தனது சுயாதிபத்தியத்தை இந்திய மேலாதிக் கத்திடம் இழந்துள்ளது. இந்தியாவின் புதிய பிரதமர் மாகாணசபையை முடக்கும் பேரினவாத அபிலாசையை அங்கீகரிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் பதவிப் பிரமாணத் துக்கு பறந்தோடிய ஜனாதிபதி 13 நடை முறைப்படுத்தப் படும், இருந்த போதிலும் பொலிஸ் அதிகாரம் வழங்க இயலாது என்று கூறிய படி வந்தார். என்ன நடந்ததோ, சில வெட்டுக்குத்துக்களோடு அதையும் தந்து தொலைக் கிறோம் எனச் சொல்ல நேர்ந்துள்ளது. தமிழ்த்தேசியர் கள் தம்மை ஒடுக்குபவர் மேலேயுள்ள பெரியண்ணனால் குட்டுப்படுவது கண்டு குதூகலிக்கிறார்கள்.

யுத்தத்தை நிறைவாக்கிய கையோடு ஜனாதிபதி சொல்லியிருந்தார் "இதனை நடாத்தி முடித்தது இந்தியா: அவர்கள் எதைச் செய்யச் சொல்கிறார்களோ அதை நான் செய்தாக வேண்டும்" என்று. தொடர்ந்து ஒரு வருடத்தில் இந்தியா சென்று 16 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வந்தார். பழைய அரசு நாட்டை கபளீகரம் செய்ததற்கு அப்பால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பெரிதாக எந்த நெருக்குதலையும் கொடுக்க வில்லை. எப்போதும் ஒப்பந்தத்தை மீறும் வாய்ப்புள்ள பௌத்த-சிங்களப் பேரினவாதிகளைத் தண்டிக்க அந்தப் பத்திரங்களின் வாசகங்களை மட்டும் ஆதாரமாக்கியபடி தனது படைகளைக் கொண்டு வந்து இறக்குவதைவிட இனப்பிரச்சினையின் சாட்டையும் வாய்ப்பாக்குவதற்கு இந்தியா விரும்புகிறது. அதேவேளை மாகாணசபைக் குரிய 13வது திருத்தச்சட்டத்தை அமுலாக்கும்படி மட்டும் வலியுறுத்தினார். புதிய பிரதமர் தனது மாநிலத்தில் சிறுதேசிய இனத்தவரை இனக்கலவரங்களால் ஒடுக்கியவர் என்ற வகையில் 13 இல்கழித்தல் அல்லது மாற்றாக வீசியெறிதல் சாத்தியமாகும் என்ற எதிர்பார்ப்பு எமது பேரினவாதிகளிடம் இருந்தது. அவர்களும் மேலேயுள்ள பரம்பொருளுக்கு ஆட்பட்டுத்தான் ஆக வேண்டும். "இந்தியர்களை நம்ப முடியாது; எல்லாரும் ஒரே மாதிரித்தான்".

ஏகாதிபத்திய மேலாதிக்கங்களாக பிரித்தானியா -அமெரிக்கா போன்ற வல்லரசுகளிலிருந்த இந்தியாவின் ஒடுக்குமுறை வேறுபட்டது. அவர்களுக்கு ஓரிரு நூற்றாண்டுகளின் அனுபவம் மட்டுமே "சமூக வர்க்கமாக" தேசங்களை ஒடுக்குவதில் பெறத்தக்கதாக வரலாறு வாய்த்தது. இந்தியாவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தேசங்களின் முன்வடிவமான சாதிகளை ஒடுக்கிச் சுரண்டிய அனுபவம் உண்டு. இன்று சாதி எங்கே இருக்கிறது என்று கேட்கிற கனவான்கள் சாதியச் சமூக வாய்ப்புகளைச் சுவைத்துக் கொழுப்பவர் கள்; இன்னும் சாதிய இழிவுகளுக்கும் புறக்கணிப்பு களுக்கும் உள்ளாகும் சமூகவர்க்கங்களின் இருப்பு அவர்களுக்குத் தெரியாது. இதுதான் சாதியச் சுரண்டலின் வலு. இதை இரண்டாயிரம் ஆண்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட அனுபவப் பாத்தியதையோடு ஆதிக்க சாதிகள் கொண்டிருக்கின்றனர். அதன் தலைமைக் கேந்திரமான இந்திய அரசு இலங்கையின் இறைமை தன்னால் பறிக்கப்பட்டதை இலங்கையர் (மட்டுமல்ல தமிழகத் தேசியப் பற்றாளர்களும்) உணர்ந்து கொள்ளாத வகையில் தனது மேலாதிக்க செயற் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது. "இலங்கை சுதந்திரம் சுயாதிபத்தியமும் உள்ள நாடில்லையா?", "இப்போது சாதி எங்கே இருக்கிறது?" இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.

இத்தகைய சமூக வர்க்க வடிவமான சாதிமுறை தகர்க்கப்படுவதற்கான போராட்டம் இலங்கையின் முதல் தேசிய விழிப்புணர்விலிருந்து தொடர்பறாமல் முன்னெடுக்கப்பட்டு வந்தது. தேசிய இயக்கம் இந்தியாவில் மக்கள் மயப்பட்ட இருபதாம் ஆண்டுகளில் தேசிய விடுதலை-சமூக விடுதலை இலட்சியங்கள் பிளவுபட்டு இருந்தன. திலகர் போன்ற தீவிர தேசிய வாதிகள் சமூக விடுதலையை இரண்டாம் பட்சமாக கருத, சாதி எதிர்ப்பு, பெண்விடுதலை என சமூக சீர்திருத்தங்கள் பேசியவர்கள் தேசியவிடுதலை தொடர்பில் மிதவாதிகளாக இருந்து ஏகாதிபத்தியத்திடம் முறையிட்டு விண்ணப்பிப்பதோடு திருப்தி கொண்டனர்.

பாரதியிடம் மட்டுமே விடுதலை பிளவுபடாதது என்கிற வகைப்பட்ட முழுமையான மக்கள் விடுதலைக்கான(அரசியல்-சமூக-பொருளாதாரத் துறைகள் அனைத்திலுமான விடுதலைக்) கருத்தியல் காணப்பட்டது. அதனைக் கையேற்று செயற்பட்ட வாலிப கொங்கிரஸ் தேசிய விடுதலையுடன் சாதியொழிப்பு உணர்வுகளையும் பரவலாக்கினர். தொடர்ந்து இயங்கிய தர்மகுல சிங்கம், கார்த்திகேசன், பொன் கந்தையா, சண்முகதாசன், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம் போன்ற கொம்யூனிஸ்டுகளும் சாதியத்துக்கெதிராக பன்முகப்படுத்தப்பட்ட இயக்கங்களை முன்னெடுத்தனர். மார்க்சிய அணியோடு சாதித்தகர்ப்பு போராட்டத்தை சமூக - பண்பாட்டு - இலக்கியத்தடங்களில் முன்னெடுத்த எம்.சி.சுப்பிரமணியம், டானியல், எஸ்.ரி.என்.நாகரத்தினம், டொமினிக் ஜீவா என்ற ஆளுமைகள் மேற்கிளம்பி வந்தனர். இன்று மேற்படி தலைமைச்சக்திகளை பிளவுபடுத்தி அவர்களில் எவரையாவது முதன்மைப் படுத்தும் போக்கு மேலோங்கியிருந்த போதிலும் அன்றைய மக்கள் எழுச்சிக் காலத்தில் அவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இணைந்து இயங்கியிருக்கிறார்கள்.

அவர்களுக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் நிலவின என்பது உண்மையே. அத்தகைய கருத்துநிலை சார்ந்து ஒன்றை அழுத்தி வலியுறுத்து வதன் காரணமாயே இன்று ஏதோவொரு ஆளுமையைச் சாதித்தகர்ப்பு போராட்டத்தின் பிதாமகனாகக் கொண்டாடும் பிரிவினைகள் வலுத்துள்ளது. அன்றைய காலத்தில் (சாதித் தகர்ப்பு போராட்டம் முனைப்புறத்தொடங்கிய நாற்பதுகள் முதல் தீவிரம் பெற்ற அறுபதுகளின் இறுதிவரை என "அன்றைய காலத்தை வரையறுக்கலாம்) சாதிமுறைக்கெதிரான மக்கள் இயக்கங்கள் தீவிர செயற்பாட்டுக்குரியதாக இருந்தது. அந்தச் செயற்களத்தில் பல்வேறு கருத்துத்தளங்களுக்குரியவர்களும் தத்தமக்குரிய வடிவங்களில் மக்களை அணிதிரட்டி இயக்கியுள்ளார்கள். அத்தகைய பல்வேறுபட்ட போராட்டங் களின்பேறாகவே சாதிபார்ப்பது இழிவான மனப்பாங்கு என்ற உணர்வுநிலை மேற்கிளர்ந்து வரஇயலுமாயிற்று. இந்த மாற்றத்துக்கான தொடக்கநிலையில் எமது சமூகம் எப்படியிருந்தது? இன்று எந்த வடிவில் சாதி இயங்குகிறது? எனக்காண இயலாமல் சாதியே இல்லையென்பவர்களின் கண்களைத்திறக்க இன்றைய சமூக இருப்பைக்காட்டும் படைப்புகள் அவசியமே; அதேயளவிற்கு இன்றைய வளர்ச்சியை எட்ட வழிகோலிய மாற்றத்தின் விதை எப்படி செயற்பட்டது என்பதைக்காண்பதும் அவசியமானது. மேற்படி அரசியல் நிலவரங்கள் சமூக உணர்வுநிலைகளை முழுமையாக அறியக்காட்டுவதில்லை; படைப்பொன்று அதனை மிகச் சிறப்பாக காட்ட இயலும். டானியல், டொமினிக் ஜீவா போன்ற முதல் தலைமுறைப்படைப்பாளிகளுடன் சேர்ந்து இயங்கி இரண்டாம் தலைமுறைப்படைப்பாளியான தெணியான் இந்த சமூக மாற்ற இயங்காற்றல் செயற்பட்டவாறினை ஒரு குடும்பத்தின் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ்த்தேசியம் அர்த்தமுள்ள விடுதலைக்குரலாக



மார்க்சிய அணியோடு சாதித்தகர்ப்பு போராட்டத்தை சமூக – பண்பாட்டு – இலக்கியத்தடங்களில் முன்னெடுத்த எம்.சி.சுப்பிரமணியம், டானியல், எஸ்.ரி.என்.நாகரத்தினம், டொமினிக் ஜீவா என்ற ஆளுமைகள் மேற்கிளம்பி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயின் இப்பேசுவோர்களைக் கண்டு கொள்ளாது இருக்கும் தந்திரத்தை விட்டொழித்து இந்நாவலைப்பரந்த வாசிப்பிற்கும் விவாதங்களுக்கும் உட்படுத்துவது அவசியமாகும்.

இந்தநாவல் வெளிப்படுத்தும் அடிப்படை அம்சம் சாதியத் தகர்ப்பு இயக்கச் செல்நெறி முனைப்புடன் இருந்த மூன்று தசாப்தங்களிலும் (நாற்பதாம் ஆண்டுகள் முதல் அறுபதாம் ஆண்டுகள் வரை) உயிர்ப்புடன் செயற்பட்ட ஒன்றாகும். சாதியொடுக்கலிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டம் ஒடுக்கப்படுகின்றவர்களால் மட்டும் முன்னெடுக்கப்படுவதில்லை; ஒடுக்கும் சாதியின் புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப்படுத்திக் கொண்டு இயங்குவதாகும். பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய போது சிங்கள மக்களை ஒட்டு மொத்தமாக எதிரிகளாக்கிக் கொண்ட தமிழ்த் தேசியத் தலைமைகள் தவறிழைத்திருந்தனர். சிங்கள மக்களின் இறைமையும் பேரினவாதிகளால் இந்தியாவிடம் காவுகொடுக்கப்பட்டுள்ளது. அவர்களையும் ஒடுக்கும் இந்திய மேலாதிக்கத்தை முறியடித்து இலங்கையின் இறைமையை மீட்பதோடு எமது சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுக்க வேண்டுமாயின் இந்தியாவை ஒட்டுமொத்த எதிரியாகக் கணிக்கும் தவறை இழைக்காதிருக்க வேண்டும். இந்திய மேலாதிக்க சக்தி எதிரி; இந்தியாவினுள் விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் சுரண்டப்படுகிற சக்திகள் அனைத்தோடும் ஐக்கியப்பட்டவாறே தான் எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த அம்சங்கள் உழைக்கும் மக்கள் வாழ்க்கைப் போக்கின் ஊடாக எப்படிக் கண்டறியத்தக்கதாகும்? "குடிமைகள்" நாவல் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை காட்டுவதன் வாயிலாக இதனை வெளிக்கொணர்கிறது.

II

ஆசாரமான நல்ல சைவனாகிய புத்திரசிகாமணி கடல் மேல் சென்று மீன்பிடித்தொழில் செய்து பிள்ளைகளைக் கரைசேர்த்து உயர்த்தி வைத்தவர். இவர் மரணமடைந்தபோது முற்போக்குணர்வு கொண்ட இவரது பேரன்களில் சிலர் சாதிமுறை சாராத மரணச்சடங்கை நடாத்த எண்ணுகின்றனர். "மாற்றமொன்று தங்கள் வீட்டுக்குள் இருந்து உருவாகத் தகுந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தீர்மானித்தார்கள்."

கரையார் சாதியைச் சேர்ந்த இவர்கள் சமூகத் தலைமையில் வெள்ளாளருடன் சமதையாக இருக்கும் ஆற்றலுள்ளவர்கள். ஆயினும் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட சனத் தொகையை உடைய பெரும்பான்மையுடன் சைவசித்தாந்தத்தைத் தமக்கானதாய்க் கொண்டு பிராமணரைவிடவும் மேலாதிக்கம்மிக்க சாதிமான்கள் எனக்காட்டும் வெள்ளாளரின் அதிகாரம் கொடிகட்டிப்பறந்ததை முறியடிக்க இயலவில்லை.

வெள்ளாளர், பிராமணர்கள் மட்டுமே சிவனைப் பிரதிஷ்டை செய்ய முடியும் என்ற விதியை உடைத்து சிவன்கோயிலை அமைத்துத் தமது நிலைப்பாடு வெள்ளாளரில் தாழ்ந்ததில்லை எனக்காட்டும் கரையார் சமூகத்தவர்கள் அந்த சைவசித்தாந்திகளின் சாதிய வாழ்முறையை அப்படியே கொண்டிருப்பதில்லை. குறிப்பாக, வெள்ளாளக் குடும்பங்கள் தமக்கேயுரியதாகக் கொண்டிருக்கும் குடிமைகள் போல் இவர்களுக்கு இல்லை. இவர்கள் வேறு கிராமத்திலிருந்து வருவிக்க வேண்டும்.

இப்போது செய்ய முனையும் மாற்றத்தை வெள்ளாளர்களின் குடிமையான முத்தனின் உதவியோடு செய்ய ஏற்பாடு; புத்திரசிகமணியின் பேரன்கள் பல சாதிகளையும் சேர்ந்த இளைஞர்களுடன் சமூக மாற்றத்துக்காக இயங்கி வருகின்றவர்கள் என்பதால் இந்த முயற்சியில் இறங்குகின்றனர். அந்த இளைஞர்கள் தன்னைத் தேடிவந்து உதவி கோரிய போது முத்தனால் மறுக்க இயலாதது மட்டுமன்றி, குடிமைத்தொழிலைத் தகர்க்க விரும்பும் தனது சொந்த உணர்வில் மேலும் உத்வேகம் பெறுகிறான். வந்தவர்களில் தான் குடிமையாக உள்ள வெள்ளாளக் குடும்ப இளைஞன் பற்றி முதலில் தயக்கம் இருந்த போதிலும், சாதிமுறை தகர்க்க திடமனதோடு பேராடும் அவர்களது இலட்சியத்துடன் இணைகிறான் முத்தன்.

"முத்தனுக்கு இப்பொழுது தன்னை நினைத்துப் பார்க்க வியப்பாக இருக்கின்றது. தனக்கு இப்படி ஒரு நண்பர்கள் கூட்டம் எப்படி வந்தது என... தன்னையே கேட்டுக் கொள்கிறான். தனித்து நின்றால் மனத் தைரியத்துடன் ஒருபோதும் தன்னால் நிமிர்ந்து நிற்க முடியாது என்பதை உணருகின்றான். நாலுபேர் துணையாக இருக்கும்போது துணிச்சல் தானாக வந்துவிடுகிறது. நான் இப்போது தனியாள் அல்ல... என்று எண்ணும் போது முத்தனுக்குப் பெருமையாக இருக்கிறது. அந்தப் பெருமையோ: நிமிர்ந்து வீடு வந்து சேருகின்றான். ஆனாலும் மனதில் ஒரே யோசனையாத் தான் இருக்கிறது" என்பது "குடிமைகள்" நாவலின் ஓர் உச்சக்கட்டம்.(ப.130)

குடிமைமுறையை விட்டொழித்து முத்தன் குடும்பம் கொழும்புக்குச் செல்லும் போது அவனது புரட்சிச்சகாக்களால் அவன் வாழ்ந்த குடிசை தீயிட்டு எரிக்கப்பட்டது; "குடிமைத் தொழில் செய்யும் குடிமகன் ஒருவன் வாழுவதற்கு இனி அந்தக் குடிசை அங்கு வேண்டியதில்லைத்தான்!"(ப.192). பல வேறு சாதிகளைச் சேர்ந்த முற்போக்கு சக்திகள் சமூக மாற்றத்துக்காக பேராடியதை புத்திரசிகாமணி குடும்பத்தின் கதையூடாக இந்நாவல் காட்டவில்லை. இங்கு மாற்றத்தின் ஒரு பிரதான கூறு என்பதாலேயே அக்குடும்பக்கதை முன்வைக்கப்பட்டது. முத்தனின் குடும்பத்தின் கதையே நாவல் காட்டும் சமூக மாற்ற வெளிப்பாட்டுக்குரியதாக உள்ளது.

முற்றிலும் வெள்ளாளர்களுக்குத் தொண்டூழியம் செய்து அவர்களையே அனைத்துக்கும் சார்ந்திருக்கும் வகையில் சம்பளம் இன்றி தருகிற அரிசி, மரக்கறிகளில் தங்கி வாழ்வதை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் சலூன் அமைப்பது அடிப்படையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்களின் வீட்டுக்கு சென்று சேவகம் செய்வதல்ல, கடையில் வந்து காசு கொடுத்துத் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்பதை சலூன் சாத்தியமாக்கியது.

இது ஏதோ தானாக நடந்த மாற்றமல்ல. இதற் காக மேற்கொள்ள வேண்டியிருந்த போராட்டங்கள் அவற்றில் முன்னின்றவர்கள் சாதிவெறியர்களிட மிருந்து பெற்ற அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், கொலை பாதகங்கள், சொத்துழிப்புகள் கொஞ்ச நஞ்ச மல்ல. முத்தன் குடும்பத்தின் கதை அவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது.

தனது தம்பி மணியன் படிக்க வேண்டும் என விரும்பும் முத்தனின் கனவு சாதிவெறிப் பாடசாலை முறையில் நிராசையான போது, குடிமைத் தொழிலி லிருந்தானாயினும் அவனை விடுவிக்க வேண்டுமெனக் கருதி பதுளையில் சலூனுக்கு அனுப்புகிறான் முத்தன். பதுளை சலூன் கடை முதலாளி இவர்களுடைய மாமனாக இருந்த போதிலும் அவரிடம் வர்க்கச் சுரண்டல் முனைப்புற்றிருந்ததேயல்லாமல் சாதி யிழிவை ஒழிக்கும் சமூக உணர்வு இருக்கவில்லை. கொழும்பில் வேலை செய்யும் முற்போக்குணர்வுள்ள ஒருவர் வாயிலாக கொழும்பு சலூனுக்கு செல்லும் மணியன் ஊரில் மோதல்களைச் சந்தித்த அண்ணன் முத்தன் குடும்பத்தை தன்னுடன் அழைத்துக் கொண்டான்.

ஊரில் முத்தன் வெள்ளாளர்களுடன் முரண் படுவது மாற்றுத்திறனாளிகளான சகோதரர்கள் கரையார் மத்தியில் தொழில் செய்தல், இறுதியில் முற்போக்கு வாலிபர்கள் உதவியோடு சலூன் அமைத்தல் என்பவற்றால் கூர்மைப்படுத்தப்படுகின்றது. கையில் காசு கண்டு குடியிருந்த காணி-வீட்டை விலைக்கு வாங்க எத்தனித்த போது மறுப்பையே சந்தித்தான்; குடிமைத் தொழில் செய்கிற வரை இருக்க இயலுமேயல்லாமல் சொந்தமாக்க இயலாத நிலை.

பல போராட்டங்கள் விட்டுக்கொடுக்க மறுத்து சொந்தக்காலில் நிற்கும் முனைப்புடன் சலூன். இவற்றால் பல மாற்றம் ஏற்பட்டுள்ளமை நிதர்சனம். ஆயினும் சாதியம் தகர்ந்துவிட்டதா? "மயானம் நோக்கிப் பிரேதத்தைக் கொண்டு செல்லும்போது சலவைத் தொழிலாளி வீதியில் நிலபாவாடை விரிக்கும் நடைமுறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. சலூன்களும், லோன்றிகளும் குடிமைத் தொண்டினை ஒழித்துக்கட்டி விடவில்லை. புகையிலைக் கன்று களுக்கு கோவணத்துடன் நின்று நீர் பாய்ச்சும் ஆதிக்க சாதிக்காரனை இன்று காண முடியாது. அந்த மாற்றம் போன்றது தான் சலூன்கள், லோன்றிகள் என்பவற்றின் தோற்றம் இவைகளால் சாதிய சமூகத்தின் அடிவேரை அறுப்பதற்கு முடியவில்லை. ஆதிக்க சாதியினரின் குடும்பங்களில் நிகழும் மரணம், திருமணம், பூப்பு நீராட்ட போன்ற நிகழ்வுகளில் குடிமை முறைகள் இன்றும் வலு இறுக்கமாகப் பேணப்பட்டு வருகின்றன" எனத் தெணியான் தனது என்னுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிப்புக்குரியது.

III

நிலவுடைமை அமைப்பில் குடிமை முறையாக நிலவிய கொடூரம் முதலாளித்துவ ஜனநாயகம் வழங்கவுள்ள சுதந்திரத்துக்காகப் போராடி ஒழித்துக் கட்டப்பட்டு சலூன், லோன்றி என்பன ஏற்பட்ட போதிலும் நவீன சமூக நியதிக்கு ஏற்பவும் தன்னைத் தகவமைக்க வல்லதாக சாதியம் அமைந்துள்ளது. சாதிமுறை நிலவுடைமை அமைப்புக்குரியது, முதலாளித்துவத்தில் செய்யும் தொழில் சாதியடிப்படையில் இல்லாமல் அனைவர்க்கும் கல்வியில் சமவாய்ப்பு ஏற்பட்டு எவரும் எந்தத் தொழிலையும் பெறலாம். என்றாகிறபோத சாதி யொழிந்துவிடும் என்கருதப்பட்டதுண்டு. எந்தத்தொழில் மேற்கொள்ளினும் பிறப்பால் வந்தமைந்த சாதி இறப்பு வரை நீடிக்கவே செய்கிறது. வைசியனுக்குரிய வர்த்தகத்தை மேற்கொள்ளும் பிராமணர் பூணூலுடன் தான்; முத்திபேறளிக்க அவர் வந்து மந்திரம் ஓதத் தடையில்லை. அது போலத்தான் குடிமைமுறை நீங்கினாலும் நிலப்பாவாடை விரிப்பதும் பிரேதத்துக்கு அதற்குரிய சாதியினர் வந்து சவரம் செய்யவேண்டும் என்பதும் நீடிக்கிறது.

நாவலில் உயர்சாதி முற்போக்கு வாலிபர்கள் வந்து முத்தனிடம் சவரக்கத்தியை வாங்கிச் சென்று தாமே சவரம் செய்யும் மாற்றத்தைக் காட்டும் நாவலாசிரியர், இன்றும் சாதிபேணும் முறையாக அது நிலவுவதை என்னுரையில் கூறி அரை நூற்றாண்டுக்கு முந்திய வாழ்முறையை ஏன் காட்ட வேண்டும்? இன்று நிதர்சனத்தில் ஜனநாயகப் பண்போடு செய்யப்படுவதாக உள்ள இந்த சாதியிழிவு அரைநூற்றாண்டின் முந்திய எத்தகைய மிருகத்தனமான உணர்வின் நீடிப்பு என்பதை இன்றைய தலைமுறை உணர்வதற்கு அந்த வாழ்க்கைக் கோலம் இன்று நாவலாக்கப்படும் அவசியமுள்ளது. அதற்குள் இன்றைய வேறுபட்ட வடிவமும் சாதியிழிவே எனக்காட்ட முனைந்தால் நாவலின் கட்டுக் கோப்புப் பாதிக்கப்பட்டிருக்கும்.

இனியொரு நாவல் எழுத முடியுமோ தெரியாது என்ற சந்தேகத்தில் "பஞ்சமர்" நாவலில் சாதியொழிப்புப் போராட்ட சம்பவங்கள் அனைத்தையும் சொல்லி விட்டேன் என்று டானியில் பேட்டியொன்றில் கூறியிருந்தார். செய்திகளின் குவியலாகி "பஞ்சமர்" நாவல் கட்டுக் கோப்பை இழந்து விட்டது என்று அன்று குற்ற விமரிசனம் செய்யப்பட்ட போதிலும், இன்று அத்தகைய வடிவப் புதுமைகளும் ஏற்புடையதே என ஏற்கப்பட்டு அந்த நாவல் தமிழிலக்கியச் செல்நெறியின் ஒரு மாற்றக்கண்ணியெனக் கொண்டாடப்படுகிறது. இன்றைய இலக்கிய நிதர்சனங்களை உள்வாங்கி நாவலமைப்புக்குரிய வடிவம் சிதையாமல் "குடிமைகள்" வாழ்வை வெளிப்படுத்துவது டானியல் அடிமைகளாக நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த சாதிகளின் வாழ்வைக் காட்டிய தொடர்ச்சியே ஆகும். இன்றும் டானியல் நாவல்கள் அழகியல் அற்றுப் பிரசாரம் செய்கிறது என்பவர்கள் உள்ளனர்- அவர்களாலும் குற்றம் சொல்ல இயலாத வடிவ நேர்த்தியுடன் தெணியான் தனது படைப்பைத் தந்துள்ளார்.

இரண்டொரு வருடங்களின் முன் சலூன் வந்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அக்கால மாற்றநிலைகளை எழுத எண்ணியிருக் கிறேன் என்று டொமினிக் ஜீவா சொல்லக் கேட்டிருக் கிறேன். மலேசியா வரை சென்ற சலூன் கடைக்காரர் பற்றிக் கூறினர். இங்கு நாவல் பதுளை, கொழும்புடன் அமைதி கொண்டிருக்கிறது; அடுத்த வளர்ச்சி இந்த நாவல் கட்டமைப்புக்கு அவசியமில்லை. தெரிந்த எல்லா வற்றையும் ஒரே நாவலில் கொட்ட சமூகமாற்ற இலக்கியவாதிகளுக்கு இப்போது அவதியொன்றும் இல்லை. டானியல் எழுதிய காலத்தில் அவரது உள்ளடக்கமும் வடிவமும் ஏற்கப்படவில்லை; மிகுந்த சிரமங்களுடனேயே வெளியிட இயலுமாயிற்று. அவரது மறைவின் ஒரு தசாப்தம் கடந்த நிலையில் அந்தப் பஞ்சமர் நூல்வரிசை தலித் இலக்கிய முன்னோடிப் படைப்பாக்கங்கள் என்று தமிழகத்தில் கொண்டாடப் பட்டது.

பொதுப்புத்தியில் "குடிமைகள்" மௌனத்தின் வாயிலாக இருட்டடிப்புச் செய்யப்படுவதை சமூக மாற்ற சக்திகள் அனுமதிக்க இயலாது. மக்கள் மத்தியிலான வாசிப்பு வடிவங்கள் இனங்காணப்பட்டு இது பரவலாக்கப்படுவது அவசியமானதாகும்.

இந்த நாவல் மீது மாற்று விமர்சனங்கள் வர இயலாது என்பதற்கில்லை. எதுவும் விமர்சனக் கண்ணோடு ஏற்கப்பட வேண்டும். நூற்றுக்கு நூறு ஏற்புடையது என்று எந்தவொரு படைப்பையும் கொண்டாடுவது அல்லது நிராகரிப்பது ஆரோக்கிய மற்ற சூழலின் வெளிப்பாடாகும். இந்த நாவலின் விமர்சனங்களையும் முன்வைத்தவாறே இதனை மக்களிடம் எடுத்துச் செல்லவியலும்.

ஒரு அம்சத்தை மட்டும் இங்கு சுட்டிக்காட்டும் அவசியமுள்ளதாகக் கருதுகிறேன். ஆரம்பத்தில் பல்வேறு கருத்துத் தளங்கள் சாதியொழிப்பு இயக்கங் களை முன்னெடுத்தது பற்றிக் கூறியிருந்தேன். அவற்றில் எம்.சி.சுப்பிரமணியத்தின் தலைமையிலான "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" உடனேயே தெணி யானின் இயங்காற்றலும் ஏற்பும் இருந்தது. எஸ்.ரி.என்.நாகரட்னம் தலைமையில் (டானியல் அமைப்பாளராக இருந்த, அனைத்து சாதியினரையும் உப்தலைவர்களாயும் செயற்குழு உறுப்பினர்களாயும் கொண்டிருந்த) "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்" வழிமுறைகளில் தெணியானுக்கு உடன்பாடில்லை.

சாதி வெறியர்கள் ஆயுதம் கொண்டு ஒடுக்க முனையும் போது எதிர்த்தாக்குதல் தொடுக்கும் ஆயுதப் போராட்ட வழிமுறையைத் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" முன்னெடுத்தது. அது அரங்குக்கு வரும் அறுபதுகளின் பின்னரைப்பகுதிக்கு முந்தியது இந்நாவலின் கதைக்களம் என்ற போதிலும் அதன் கருத்துக்களம் சார்ந்த சிந்தனை அப்போதே இருந்தது தான். ஆயுதம் மூலமான விமர்சனம் ஆதிக்க சமூகத்துக்கு எதிராக முன்னெடுக்கும் அந்தக் கருத்துத் தளம் முன்னரும் இயங்கிய வடிவத்தில் நாவல் கட்டமைக்கப்பட்டிருப்பின் முத்தன் குடியிருந்த அந்த நிலம் தனக்கே சொந்தம் எனப் போராடி வென்றெடுப்பதாக நாவல் அமைந்திருக்கும். தனது கருத்து நிலைக்குள் வடிவப்படுத்தியபோது தெணியான் யதார்த்தத்தின் இன்னொரு கூர்மையான பக்கத்தைக் காட்டத்தவறி விடுகிறார் என்பதை மட்டும் இங்கு சொல்வது போதுமானது.

இவற்றுக்கு அப்பால் இன்று சமூக மாற்றுசக்தி களுக்கு அவசியப்படும் ஒரு படைப்பை தந்துள்ளமைக் காக எமது நன்றியைத் தெரிவிப்பது அவசியமானது. எதுவும் தாமாக நடப்பதில்லை; முழுமையான சமத்துவ சமூகமே சாதிமுறையை முழுதாக ஒழித்துக்கட்டும்: சாதி என்பது எம்மிடமுள்ள ஒரு இழிவான நடத்தை என்பதை ஏற்க வேண்டுமே அல்லாமல் அதைப்பற்றிப் பேசாதிருந்து புனிதர்கள் ஆகிவிடலாம் எனக் கருதுவோமாயின் சமூக அவலங்கள் பலவும் தொடர இடமளித்தவர்கள் ஆவோம். சுயவிமர்சன மனப் பாங்கோடு எமது தவறுகளை அறிந்து திருத்தியவாறு சமூக மாற்றத்துக்காக போராடுவோம்! •

வீடும் ஒளி வெளியும்

கருங்கோழியாய்
ஊர்க் கொட்டுக்காகங்கள்
கண் பெருத்து கால் நீண்டு
நகம் கூர்ந்து சொண்டு – அலகு
நுனி பெருத்து
கூர்ந்து உடம்பு ஊதி
கருமை மிகக் கூர்ந்து
ஊர் எங்கும்
பூனை விடு மிச்சம் பொறுக்கும்
வினைகளையும் – காண்
அவ்வன்னம் – காக்கை
தினையும் துழுவி எடுக்கும் கரையும்
பல சொல்லி அன்றோ!
கரப்பை(த்) திறந்து விட்டாய்
கையோடை
இட்ட முட்டைகளையும் எடுத்தாய்
கொக்கரிக்க
அடை என்று
இரைப் பெட்டியில் உதைஞ்சு
சிறகை முறிச்சாய்
உன் தோட்டம் கிளறிச்சு தென்று
இரகசியமாய் ஆட் சேர்த்து
தட்டு மறிச்சுப் பிடித்தாய்
குஞ்சுகளையும் உழக்கி
விறாத்து பருவம் முதல்
வெடி வால் முளைச்சதையும்
என்ன செய்தாய்
எல்லாம் பரிநிர்வாணம்
அடைஞ்சனவோ!
சரணங்கச்சாமி இன்றோ!
பாம்புக்கரண்டியால்
தீர்த்தம் விடுகின்றீர்
ஐயரே!

கல்வயல் வே.குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் மதிப்பீடு

அந்தனிஜீவாவின் "தலைநகரில் தமிழ்நாடக அரங்கு"



தமிழ்நாடகமேடை வரலாறு குறிப்பாக இலங்கைத் தமிழ் நாடக அரங்கு பற்றிய வரலாறு முழுமையாக இன்னமும் எழுதப்படவில்லை என்ற ஆதங்கம் நாடக வரலாற்று ஆய்வாளர்களிடையே இருந்து வருவது பலரும் அறிந்ததே. இலங்கைத்தமிழ்நாடக அரங்கு வளர்ச்சி பற்றி எழுத முனைந்தோரும் கூட வரலாறு எழுதுமுறைமையில் நிறைந்த பயிற்சி யின்றி, அகவயத்தன்மை மிகுந்த சுய அறிக்கைகளிலிருந்து தமிழ் நாடக அரங்கின் வரலாற்றைத் தொகுக்க முனைந்தனர் என்ற விமர்சனமும் அவ்வப்போது எழுந்துள்ளது.

குறிப்பான ஒரு பிரதேசத்தின் நாடக அரங்கின் வரலாற்றை எழுதும்போது அப்பிரதேசம் வாழ் மக்களின் சமூக அசைவியக்கத்தையும் உணர்ந்து கொள்ளலாம். ஆனாலும், கிராமியக்கலைகளின்மீது படித்த வர்க்கத்தினரின் அக்கறையின்மையும் கிராமியக்கலைகள் செவ்வியற் கலை வடிவங்களல்ல என்ற எண்ணப்பாங்கும் பிரதேச நாடக அரங்கின் வரலாறுகளைக்கூட முறையாகப் பதிவு செய்ய முடியாமற் போனமைக்குக் காரணமாயின. கிராமியக் கலைஞர்கள் ஆற்றுகையாளர்களாகவே இருந்து வந்தமையும் நகரமயமாக்கற் சூழலின் தாக்கத்தால் பாரம்பரியக் கலை வடிவங்களை முறையாகக் கையளிக்க முடியாமற் போனமையும் கூட கிராமியக் கலை வரலாறு குறிப்பாகத் தமிழ் நாடக அரங்கின் வரலாறு முறையாக எழுதப்பட முடியாமற்போனமையை நியாயப் படுத்துவன.

ஓரினத்தன்மை கொண்ட அல்லது ஒரு படித்தான (Homogeneous) பிரதேசமொன்றின் தமிழ் நாடக அரங்க வரலாற்றை எழுதுவதே சிக்கலாகியுள்ள சூழ்நிலையில், பல்லினத்தன்மை வாய்ந்த, மாறுபட்ட கலாசாரங்கள் சங்கமிக்கும் சூழலில் விளங்கும் தலைநகரிலான தமிழ்நாடக அரங்கின் வரலாற்றை எழுதுவதென்பது இலேசான ஒரு பணியன்று. இப்பின்னணியிலேயே மூத்த எழுத்தாளர் அந்தனிஜீவா எழுதிய "தலைநகரில் தமிழ் நாடக அரங்கு" என்ற நூல் கவனத்தைப் பெறுகின்றது.

மூத்த எழுத்தாளர் அந்தனிஜீவா நாடறிந்த ஓர் இலக்கியவாதி. கட்டுரை, சிறுகதை, நாடகம் என்ற பல்வேறு இலக்கிய வகைமைகளிலும் பரிச்சயம் மிக்கவர். கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர். தேசிய பத்திரிகைகளில் பத்தி எழுத்துக்களின் மூலம் இலக்கிய உலகு பற்றிய பல்வேறு தகவல்களையும் வழங்கி வருபவர். ஈழத்து இலக்கியங்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்வதில் ஓர் இணைப்புப் பாலமாகவும் அந்தனி ஜீவா அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கும் இலக்கியகாரர்களுக்கும் ஊக்கம் அளித்துவரும் இவரின் பணிபு அனைவராலும் நன்கு மதிக்கப்படுவ தாகும்.

"தலைநகரில் தமிழ்நாடக அரங்கு" எனும் நூலானது, வீரகேசரி நாளிதழில் சனிக்கிழமை தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் "சங்கமம்" எனும் பகுதியில் எழுதப் பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். நூற்றியாறு பக்கங்களில் முப்பத்தொரு கட்டுரைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. 1880 முதல் இன்றுவரை தலைநகரில்

ஒளிப்படம்- யாத்திகன்

த.கலாமணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடக ஆற்றுகை செய்த நாடகக் குழுக்கள், மன்றங்கள், நாடகக் கலைஞர்கள், நெறியாளர்கள், நாடகத் தயாரிப்பாளர்கள், பற்றிய பல்வேறு சுவையான தகவல்களை இந்நூல் பதிவு செய்கின்றது.

1880 இல் இலங்கைக்கு வந்த பம்பாயைச் சேர்ந்த எல்பின்ஸ்டன் நாடகக் கம்பனியாரின் வருகையும் பார்ஸி இசை நாடக வடிவ அறிமுகமே தலை நகரின் நாடக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியதாகக் கூறும் நூலாசிரியர், அக்கால சிங்கள நாடக முயற்சிகளிலும் பார்ஸி நாடக வடிவத்தின் தாக்கம் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். தமிழ்நாடகத் தலைமைப் பேராசான் சங்கரதாஸ் சுவாமிகள், தமிழ் நாடக தந்தை எனப்போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் ஆகிய இருவருமே இன்றைய நவீன நாடகத்திற்கு வழி சமைத்தவர்கள் என நூலாசிரியர் குறிப்பிடுவது இங்கு கவனத்திற்குரியது.

தலைநகரான கொழும்பில் பம்மல்சம்பந்த முதலியார் அவர்கள் மேடையேற்றிய நாடகங்களே, கலைஅரசு சொர்ணலிங்கம், தலைநகரின் தமிழ் நாடக முன்னோடி இராஜேந்திரன் மாஸ்டர் ஆகியோர், வசன நாடகங்களாக அமைந்த நவீன நாடகங்களில் ஈடுபாடு கொள்ளக் காரணமாகியது எனக் குறிப்பிடும் நூலாசிரியர், பம்மல்சம்பந்த முதலியாரின் "சுகுண விலாச சபை"யின் பாணியிலே, "இலங்கை சுபேத விலாஸ சபா" என்ற நாடக மன்றத்தை கலைஅரசு சொர்ணலிங்கம் நிறுவினார் எனவும் கூறுகிறார். மேலும், "ராஜபார்ட்" கிட்டப்பா, "ஸ்திரிபார்ட்" சுந்தராம்பாள், வேலுநாயகர், "அவ்வை" டி.கே.சண்முகம், டி.கே.பகவதி, கே.ஆர்.ராமசாமி, சகஸ்ரநாமம், பிரண்ட் ராமசாமி, கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், சீ.என்.அண்ணாத் துரை, கலைஞர் மு.கருணாநிதி, ஆசைத் தம்பி, சிற்றரசு, சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர், நாவலர் ஏ. இளஞ்செழியன், எம்.ஆர். ராதா, ஆர்.எஸ்.மனோகர் என ஒரு நீண்ட பட்டியலில் அடங்கும் தமிழகத்து நாடகக் கலைஞர்கள் பற்றியும் நாடகத் தயாரிப்பாளர்கள் பற்றியும், நாடக எழுத்தாளர்கள் பற்றியும் பல தகவல்களை ஆதரங்களோடு நூலாசிரியர் தந்துள்ளார்.

தலைநகரின் நாடக முதல்வரான இராஜேந்திரன் அவர்களுடனேயே கொழும்பு மேடை நாடகத்தின் வரலாறு தொடங்குகிறது எனக் குறிப்பிடும் அந்தனி ஜீவா அவர்கள், இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் முதன்முதலில் பெண்களை நாடகங்களில் நடிக்க வைத்த பெருமையும் "நாடகத் தந்தை இராஜேந்திரன் மாஸ்டரையே சாரும் என நிறுவுகிறார். இலங்கை வானொலி புகழ் சானா, நடிகவேள் லடீஸ்வீரமணி, நாடக நெறியாளர் சுஹைர் ஹமீட், சாத்தான்குளம் அப்துல் ஜப்பார், விசாலாட்சி ஹமீத், கே.பாலச்சந்திரன், எம்.எம்.மக்கீன், எம்.எச்.பௌசுல் அமீர், ஜோர்ச் சந்திரசேகரன், கலைஞர் பி.எஸ்.கிருஷ்ணகுமார், கலைஞர் கலைச்செல்வன், கே.எம்.வாசகர், வரணி யூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை, நெறியாளர் றொபர்ட், கலைஞர் ஹுசைன் பாருக், எம்.ஏ.அப்பாஸ், நடிகை ஹெலன் குமாரி, நடிகர் ஹிலேரியன் பெர்னாண்டோ, நெறியாளர் கே.செல்வராசா, பூந்தான் ஜோசப், நடிகமணி வி.வி வைரமுத்து ஆகிய நாடகக் கலைஞர்களினதும் நெறியாளர்களினதும் பெருமைகளைக் கூறும் வகையில் தனித்தனிக் கட்டுரைகளை எழுதி, தலைநகரில் தமிழ் நாடக வளர்ச்சிக்கு இவர்களின் பங்கு பற்றியும் இந்நூல் மூலம் சற்று விபரமாகவே வரலாற்றுப் பதிவுகளை மேற்கொண்டிருக்கிறார் அந்தனி ஜீவா.

இவற்றோடு, தலைநகரில் இயங்கிய நாடக மன்றங்கள், நாடக அரங்கில் பெண்கள், பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கங்களின் பங்களிப்பு, கலைக்கழக தமிழ்நாடகக்குழு, நானும் எனது நாடகங்களும் ஆகிய தலைப்புகளில் எழுதிய கட்டுரைகளும் கூட பல பயனுள்ள தகவல்களைத் தருகின்றன. "நானாடகம்" நூலை வெளியிட்ட பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் நாடகங்கள் அனைத்தும் கொழும்பில் மேடையேற்றப்பட்டன என நிறுவும் அந்தனிஜீவா அவர்கள், அந்நாடகங்களின் முக்கியத்துவத்தையும் பதிவு செய்கிறார். பிரான்சிஸ் கிங்ஸ்பரி, சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, மாவை நித்தியானந்தன், கே.பாலேந்திரா, அ.தாஸீஸியஸ் போன்றோரின் பங்களிப்புகளையும் கூட பதிவு செய்திருக்கும் இந்நூல் வரலாற்று ஆவண நூலுக்குரிய பல தகவல்களைக் கொண்டுள்ளது என்பது இந்நூலுக்குரிய சிறப்பு ஆகும்.

தலைநகரில் தமிழ்நாடக அரங்கின் வரலாற்றைப் பதிவு செய்யும் முதலாவது நூல் என்ற வகையிலும் பல தகவல்களைத் திரட்டித்தரும் நூல் என்ற வகையிலும் நாடக நெறியாளர் ஒருவரால் எழுதப் பட்ட நூல் என்ற வகையிலும் இந்நூல் சிறப்புப் பெறுகின்ற தெனினும், இந்நூல் இன்னும் சற்று விரிவாக, சமூக விமரிசனப் பார்வையோடு கூடியதாக எழுதப்பட்டிருந்தால், மேலும் இதன் "கனதி" அதிகரித்திருக்குமே என்ற ஆதங்கம் எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. ஆனால், "சங்கமம்" பகுதியில் வரையறைகளுக்குட்பட்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல் என்ற வகையில் அமைதிகொள்ள முடிகின்றது.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகளின் புதைக்குழிகளிலிருந்து....

1
பெயர்த்தெடுக்கப்பட்ட
கலை காட்சிப் பொருளாக்கப்பட்டு
ஆதித்தன்மை அபகரிப்பு.

பின்னோக்கி பாயும்
நதிகள் சாத்தியமில்லை.
எல்லா பாய்ச்சல்களும்
முன்னோக்கியே.

விழிக்கும் திசையை
விழுங்கும் விசை
அழுத்தப்படுகிறது
சகல போருக்கான
முன் அறிவிப்பாக.

அழிவுக்கான கோர
கரத்தின் எத்தனிப்பு-
சுழியோடி
சுழியோடியே...

சகல அதன் அவதாரங்களிலும்
மறக்கப்பட்டு விடும் விடயம்-
அதன் அழிவுக்கான
கடைசி அத்தியாயம்
எழுதப் போவது
ஆதிகளின் ஆவிகளான
விழிக்கும் திசைகள் தான் என்று!

2
மேற்கிலிருந்து வீசும்
காற்றில்
எப்பொழுதுமே
மாறாத பாசிச நாற்றம்.

விறைத்த ஆண்-மைய குறிகளாய்
உயர்ந்து நிற்கும்
பின் நவீனத்துவ கட்டிடங்கள் கீழே-
ஆதி விதைகளின்
புதைக்குழிகள்.

குருதியின் சமநிறம்
மறக்கப்பட்ட-மறைக்கப்பட்ட
நிறபேத தோல்களின்
போர்கள்.

3
கடிவாளங்கள்
சாட்டைகளாக மாறும்
யுகம் தொடங்கி விட்டது.

மேமன்கவி

noolaham.org | aavanaham.org

நினைவுக் குறிப்புகள் – 2

அ. யேசுராசா

1975 ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய விழா, காலியில் நடைபெற்றது. இவ்விழாவில் நூல்களுக்குரிய விருது பெறுபவர்களான கே. டானியல், அருள் சுப்பிரமணியம், நான் ஆகிய மூவரும் கொழும்பில் சந்தித்து, தொடர்வண்டி மூலம் அங்கு சென்றிருந்தோம். எனது சிறுகதைத் தொகுதியான 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' நூலுக்கும், டானியலின் 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' நூலுக்கும் சிறுகதைக்கான பரிசு பகிர்ந்து வழங்கப்பட்டது. சாகித்திய மண்டலத் தமிழ்க் குழுவில் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, சண்முகம் சிவலிங்கம் மற்றும் சிலர் இடம்பெற்றிருந்தபோதும், ஒருவருமே அங்கு வரவில்லை!

கருத்தரங்குகள், புத்தகக் கண் காட்சி என்பன அங்கு நடைபெற்றிருந்த போதும், ஒன்றிலுமே தமிழுக்கு இடம் வழங்கப்படவில்லை. ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ கலந்து கொண்ட அந்த விழாவில், ஒரு தமிழ்ச் சொற்பொழிவுகூட இடம்பெறவில்லை. விருதுபெற்றவர்களை ஒலிபெருக்கியில் அழைப்பதுகூட சிங்களமொழியில் மட்டும்தான் இருந்தது; அதனாலேயே, முதலில் டானியலின் பெயர் அறிவிக்கப் பட்டபோது, அவர் அதை அறியாம லிருந்தார்; நான் அவருக்கு எடுத்துச் சொன்னதன் பின்னரே, அவர் மேடைக்குச் சென்றார்!

அ. யேசுராசா

நிகழ்ச்சி முடிந்து அங்கே நின்றபோது ஒருவர் வந்து, "தம்பி அதைத் தாங்க...." என்று எனது சான்றிதழைக் கேட்டார். நானும் கொடுத்தேன். ஓர் அறைக்குள் கூட்டிச் சென்றவர் என்னைக் கதிரையில் அமருமாறு சொல்லிவிட்டு, சான்றிதழில் எழுதத் தொடங்கினார். அவர் தந்தபின் சான்றிதழைப் பார்த்தேன்; அதில் கோணலான எழுத்தில் எனது பெயரும் புத்தகத்தின் பெயரும் தமிழில் எழுதப் பட்டிருந்தன. முதலில் சிங்களத்தில் மட்டும்தான் எழுதப்பட்டிருந்தது!

அவர்தான் கே.ஜி. அமரதாச என்பது பின்னர் தெரிந்தது. தமிழ் தெரிந்த சிங்களவர்; கலாசாரத் திணைக்களத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளராக இருந்தவர்; முற்போக்கு எழுத்தாளர் களுடன் தொடர்புள்ளவர். அந்த மனிதரின் நல்லெண்ணத்தை மதிக்கத்தான் வேண்டும்; ஆயினும், சாகித்திய மண்டலம் தமிழுக்கு உரிய இடத்தை நிறுவனரீதியாக அல்லவா வழங்கவேண்டும்? தமிழ்க் குழுவில் உள்ளவர்கள் அசட்டையாக இருந்ததையும் என்னவென்று சொல்வது? இதன் காரணமாக 'அலை' இதழின் முதலாவது இதழில் (கார்த்திகை 1975), 'காலி சாஹித்திய விழாவும் தமிழும்' என்னும் பெயரில் ஒரு தலையங்கத்தை எழுதினோம். அதில் பின்வரும் பந்தியும் உள்ளது.

"பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ் களும் தனிச் சிங்களத்திலேயே அச்சிடப்பட்டுள்ளன. அமரதாச என்ற நல்ல மனிதரின் நல்லெண்ணத்தினால் ஐந்து ஆறு வரிகள் தமிழில் கையினால் எழுதப்பட்டுள்ளன. அவரின் நல்லெண்ணத்திற்கு 'அலை' நன்றி தெரிவிக்கின்ற அதே நேரம், எந்தவொரு தனி மனிதரதும் நல்லெண்ணத்தில் தங்கி நிற்காமலேயே, தமிழில் அச்சிடப்பட்ட சான்றிதழ்களைப் பெற தமிழ்ப் படைப்பாளிகளுக்கு உள்ள உரிமையை, சாஹித்திய மண்டலம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் விரும்பு கிறது. இவ்வாறு உணர்த்துவதில் சாஹித்திய மண்டலத் தமிழ்க் குழுவினருக்கும் பெரும் பொறுப்புண்டு."

2

கைலாசபதி அவர்களுடன் எக்காலத்திலும் எனக்கு அதிக தொடர்பு இருக்கவில்லை. க.பொ.த.(உ/த) வகுப்பில் படிக்கும்போது, கொஞ்சம் ஆழமான வாசகனாக மாறத் தொடங்கினேன். தினகரன், வீரகேசரி போன்றவற்றின் ஞாயிறு இதழ்களிலும், சுதந்திரன் இதழிலும் வரும் இலக்கியம், வரலாறு, அரசியல் பற்றிய கட்டுரைகளைத் தவறாது வாசிக்கத் தொடங்கினேன். அக்காலத்தில் கைலாசபதியின் எழுத்துக்களில், குறிப்பாக பழந்தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரைகளில் ஈடுபாடு ஏற்பட்டது. வெறுமனே பழைய கவிதைகளைப் பார்க்காது அவை எழுந்த சமூகச் சூழல், பொருளாதாரம், அரசியல் நிலைமை என்பவற்றின் பின்னணி களையும் இணைத்து ஆராய்வதாக அவை அமையும். அவரது 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழி பாடும்' நூலும் என்னைக் கவர்ந்தது. தாமரை, ஆராய்ச்சி போன்ற சிற்றிதழ்களில் வந்த நா.வானமா மலையின் கட்டுரைகளும் அவரது நூல்களும் இவ்வாறே என்னைக் கவர்ந்தன. இங்கு ஒன்றைக் கூற வேண்டும், அவர்கள் சொல்லும் கருத்துக்கள் வித்தியாசமாய் இருந்தமை கவர்ச்சியைத் தந்தது; மற்றும்படிக்கு அவற்றைச் சொந்த மாக மதிப்பிடுவதற்கான - அவற்றுடனான - பரிச்சயமோ அறிவோ எனக்கு இருக்கவில்லை. ஆனால், கைலாசபதி நவீன இலக்கியம் பற்றி எழுதியவை அவ்வளவு ஈடுபாட்டைத் தரவில்லை; ஏனெனில், அவர் எடுத்துக்கொண்ட பலநூல்களை நான் வாசித்து எனது சொந்த அபிப்பிராயத்தை உருவாக்கியபோது, அவரின் கருத்துக்கள் பலவற்றுடன் உடன்பட முடியவில்லை. உதாரணமாக புதுக்கவிதை, சோஷலிச யதார்த்தவாதம் போன்றவை பற்றிய கருத்துக் களையும், அவர் முக்கியத்துவம் கொடுத்த எழுத்தாளர் களின் படைப்புகள் பலவற்றையும் ஏற்கமுடியவில்லை.



க.கைலாசபதி

1969 அளவில், முதன்முதலாக கைலாச பதியைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. அப்போது நான், கொழும்பு பிரதம தபாற் கந்தோரில் (G.P.O.) கடமை யாற்றிக்கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் - ஊரில் உள்ள ஒரு மன்றத்தின் நான்காவது ஆண்டு நிறைவை ஒட்டி - 'நெய்தல்' என்ற மலரை வெளியிடும் முயற்சியில் மு. புஷ்பராஜன் ஈடுபட்டிருந்தார்; நான் பலரின் ஆக்கங்களைச் சேகரித்து அவருக்குக் கொடுத்தேன். அந்த மலரில் கைலாசபதியின் கட்டுரை ஒன்றையும் சேர்க்க விரும்பி, எனது நண்பரும் அவரின் மாணவனு மான குப்பிழான் ஐ.சண்முகனுடன், வெள்ளவத்தை யிலுள்ள கைலாசபதியின் வீட்டுக்குச் சென்றேன். சண்முகனைக் கைலாசபதிக்கு நன்கு தெரியும். சண்முகன் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி, வந்த நோக்கத்தையும் தெரிவித்தார். என்னை அறிமுகப் படுத்தும்போது, "புதுக்கவிதையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்" என்றும் சொன்னார். அப்போது கைலாச பதியின் முகத்தில் மெல்லிய சிரிப்பு இழையோடிய ஞாபகம். தா.இராமலிங்கத்தின் 'காணிக்கை', 'புது மெய்க் கவிதைகள்' போன்ற தொகுதிகள் வந்திருந் தாலும், அக்காலத்தில் இலங்கையில் புதுக்கவிதை பரவலாக ஏற்கப்படவில்லை; எதிர்ப்புநிலையே காணப் பட்டது. உள்ளடக்கம் மட்டுமல்ல, வடிவமும் பிற்போக் கானது என்றே கைலாசபதி போன்றோரால் கூறப் பட்டது. சண்முகன், மாவை நித்தியானந்தன் போன்ற நண்பர்களும் மரபுக் கவிதைகள்தான் எழுதினார்கள்.

'எழுத்து' சிற்றிதழில் முதன்முறையாக புதுக்கவிதை பற்றி அறிந்தேன். புதுக்கவிதையை நியாயப் படுத்தியும் மரபுமுறைக் கவிதைகளின் பலவீனங்கள் பற்றியும் அதில் வெளியான கட்டுரைகள் ஈர்ப்பினை ஏற் படுத்தின; ஆயினும், வெளியிடப்பட்ட கவிதைகள் மனதைத் தொடவில்லை. பின்னர் இராமலிங்கத்தின் கவிதைகள் முன்னுதாரணமானவை எனக் கண்டேன். "புதுக்கவிதையை ஏன் ஏற்றுக்கொள்கிறீர்?" எனக் கைலாச பதி கேட்டார். எனது அன்றைய புரிதலை அவருக்குச் சொன்னேன். பிறகு, "சேர், புதுக்கவிதை பிற்போக்கு வடிவம் என்று சொல்லப்படுகிறது.... ஒரு வடிவம் தன்னளவில் எப்படிப் பிற்போக்கானதாகும்? உள்ளடக்கத்தைத்தானே முற்போக்கானதா பிற்போக்கானதா என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிடமுடியும். பிற்போக்கான உள்ளடக்கத்தைக் கொண்ட சிறுகதைகள், நாவல்கள், மரபுமுறைக் கவிதைகள் உள்ளபோதும் இவற்றைப் பிற்போக்கான வடிவங்கள் என்று சொல்வதில்லையே...!" என்று கேட்டு, புதுக்கவிதையிலும் முற்போக்கான உள்ளடக்கங்களை வெளிப்படுத்தலாம்தானே என்றும் சொன்னேன். சிறிது நேரம் அவர் ஒன்றும் சொல்லவில்லை; ஆனால் பிறகு, "நீங்கள் கூறுவதுபோல் முற்போக்கான உள்ளடக்கங்களைப் பலர் எழுதும்போது, புதுக் கவிதையை ஏற்றுக்கொள்ளலாம்" என்று சொன்னார்.

அந்தக்காலத்தில் தனக்கு வேறு வேலைகள் இருப்பதால், கட்டுரை தருவது சிரமம் என்றும் சொன்னார்; எமக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவரிடம் விடைபெற்றுத் திரும்பினோம். எனவே, நெய்தலில் கைலாசபதியின் கட்டுரை இடம்பெறாது போய்விட்டது!

**

1970 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நீர்வை பொன்னையனின் 'உதயம்' சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு நிகழ்வு, கொழும்பிலுள்ள நாராயணகுரு மண்டபத்தில் நடைபெற்றது; அக்கூட்டத்துக்கு நானும் சென்றிருந்தேன்.

'கோட்டை' தொடருந்து நிலையத்துக்கு முன்னுள்ள ராஜேஸ்வரி பவானில் செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் விற்கும் பகுதியும் இருந்தது. ஜெய காந்தனை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்திருந்த 'ஞானரதம்' முதலாம் இதழை அங்கு வாங்கிகொண்டு தான், அக்கூட்டத்துக்குப் போனேன். மண்டபத்தில் கொஞ்சப் பேர்தான் அமர்ந்திருந்தனர்; கூட்டம் தொடங்கவில்லை. ஞானரதம் இதழைப் பிரித்து வாசித்தபடி இருந்தேன். சற்று நேரத்தில் ஒருவர் அந்த இதழைத் தருமாறு கேட்டார்; திரும்பிப் பார்த்தபோது, அவ்வாறு கேட்டவர் கைலாசபதி என்பதை அறிந்தேன்; அவரிடம் இதழைக் கொடுத்தேன். அவர் அதன் பக்கங்களைப் புரட்டிப்பார்த்தார். கூட்டம்தொடங்கவே அதனை என்னிடம் தந்துவிட்டு மேடைக்குச் சென்று விட்டார். பின்னர் அவர் பேசும்போது இடையில், தான் சற்று முன்னர் ஞானரதம் இதழில் வாசித்ததாக ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். அந்த விடயம் இதுதான்: கவிஞர் எஸ்.வைதீஸ்வரன் 'மை – லாய் வீதி' என்ற கவிதையை எழுதியிருந்தார். அதில் அக்கிராமத் தில் நிகழ்த்தப்பட்ட அவலங்களை விபரித்துவிட்டு, "....திரு.மனிதா! / தெருவில் சாவோலம் / மிக நெருங்கி ஒலிக்கிறது./ ஓடு.../ இருட்டுக்கு, காட்டுக்கு,/ மூலைக்கு, வானுக்கு/ எங்காகிலும் ஓடு/ உலகத்தை விட்டு!" என்று முடித்திருந்தார். எதிர்த்துப் போராடச் சொல்லாமல் ஒதுங்கி ஓடச் சொல்கிறார் என்ற மாதிரிக் குறிப்பிட்டு, கைலாசபதி கண்டனம் தெரிவித்தார். ஆனால், கவிதைக்குக் கீழே வைதீஸ்வரனின் பின்வரும் குறிப்பும் உள்ளது: **"அமெரிக்கர்கள் வியட்நாம் மைலாய் கிராமத்தில் புரிந்த அட்டூழியங்களைக் கேட்கும்போது, மனிதனுடைய அரக்கத் தனம், உலக முழுவதையும் அழித்துச் சாம்பலாக்கும்வரை ஒழியாது என்று பயப்படுகிறேன். அந்தப் பயத்திலிருந்து பிறந்தது நீங்கள் படித்த கவிதை."**

எனக்கு இன்னொரு சம்பவமும் நினைவுக்கு வருகிறது. எழுத்தாளர் லா.ச.ராவிடம், அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த வியட்நாம் யுத்தம் உங்களைப் பாதித்ததா என்று கேட்கப்பட்டபோது அவர், 'அது தன்னைப் பாதிக்கவில்லை' என்று குறிப்பிட்டார்! 'அப்படியானால் உங்களைப் பாதித்தது எது' என்று கேட்கப்பட்டபோது, 'அன்று காலை எதிர்வீட்டில் ஒரு பெண் முழுகிவிட்டுத் தலையைத் துவட்டி, தனது கூந்தலைத் திருகி முடிந்தாள்; அது தன்னைப் பாதித்தது' என்று சொல்லியிருந்தார்!. கொடூரக் குண்டுவீச்சுக்களினால் – நேப்பாம் எறி குண்டுகள் உட்பட – வியட்நாமும் மக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்; மாபெரும் மனித அவலம் அங்கு நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இந்தக்கொடூரம் அவரைப் பாதிக்கவில்லை; ஆனால், ஒரு பெண் கூந்தலைத் திருகி முடிவதுதான் அவரைப் பாதிக்கிறதாம்! லா.ச.ராவின் கருத்து அபத்தமானது! தனிய, அந்தப் பெண்ணின் செயல் தன்னைப் பாதித்தது என்று அவர் சொல்லியிருந்தால் பிரச்சினை ஒன்றுமில்லை; ஆனால், வியட்நாம் நிகழ்வுகளை அதனுடன் இணைத்துத் தன்னைப் பாதிக்கவில்லை என்று கூறியதே, இங்கு எரிச்சலைத் தருகிறது!

***

1976 அல்லது 1977 இல் ஒரு நாள்.... சுண்டிக்குளி அஞ்சலகத்தில், முத்திரைக் கருமபீடத்தில் கடமையிலிருந்தேன்; சிறு எண்ணிக்கையிலானோர் கருமபீடத்தின் முன் நின்றனர். திடீரென வாசலருகில் கைலாசபதியைக் கண்டேன். வாசலில் நின்றபடியே அங்குமிங்கும் அவர் பார்த்தார்; என்னையும் கண்டிருக்க வேண்டும். சிறிது தயக்கத்துடன் அங்கேயே நின்றார். நான் கதிரையிலிருந்து எழும்பி அவரை நோக்கி, "சேர்... யாரைப் பார்க்கிறீங்க?" என்று கேட்டேன். சிறிது முன்னால் வந்தபடி, "கொஞ்சம் ஸ்ராம்ப்ஸ் தேவை" என்றார். "என்ன முத்திரை?" என்று கேட்டு, பணத்தைப் பெற்று முத்திரைகளைக் கொடுத்தேன்; "தாங்க்ஸ்" என்று கூறிச் சென்றார். உடனே மற்றவர்களைச் சமாளிப்பதற்காக, "இவர்தான் கலாநிதி கைலாசபதி... யூனிவசிற்றி பிறெசிடென்ற் ..." என்று கூறியும் வைத்தேன்!

3

1966 ஆவணியில், டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' முதலிதழ் வெளிவந்தது; அப்போது அதன்விலை 30 சதம். முதலாவது இதழிலிருந்து மல்லிகையை வாங்கினேன்; 1980 வரையான இதழ்களைக் கட்டியும் வைத்திருக்கிறேன்; ஏனையவை உதிரிகளாகவுள்ளன. யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோதும் டொமினிக் ஜீவாவுடன் பழக்கமில்லை; வேலை காரணமாக 1967 ஆரம்பத்தில் கொழும்புக்கு வந்துவிட்டேன். பிரதம தபாற் கந்தோரில், பொதிகள் பிரிவில் வேலை பார்த்தேன்; அக்கட்டடத்தின் ஒரு பகுதியிலுள்ள காசுக் கணக்கீட்டுக் கிளையில், க.பேரம்பலம் (நெல்லை க.பேரன்) எழுதுவினைஞராகக் கடமை பார்த்தார். மல்லிகைக்கான சொந்தச் சாதனங்கள் வாங்குவதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக 'மணிக்கரங்கள்' நீட்டும்படி, மல்லிகையில் ஜீவா எழுதிவந்தார்; இலக்கியத்துக்காகப் பிச்சை எடுக்கவும் தயாராய் இருப்பதாகவும் வெளிப்படுத்தினார். 1969 இன் நடுப்பகுதியளவில், மல்லிகைக்காகப் பேரன் பணம் திரட்டினார்; என்னிடம் கேட்டபோது நான் மறுத்து விட்டேன். ஓர் அமைப்புக்கு அல்லது ஒரு குழுவுக்கு உதவலாம்; ஒரு தனி மனிதன் சொத்தைச் சேர்ப்பதற்கு உதவத் தேவையில்லையென அந்த நேரம் கருதினேன். நெல்லை க. பேரன் சிலரிடம் பணம் திரட்டினார்; சிலர் ஐந்து ரூபாவையும் சிலர் மூன்று ரூபாவையும் அவரது அலுவலகத்திலுள்ள ஈ.ஜி.அப்புஹாமி என்ற சிற்றாழியர் ஒரு ரூபாவையும் கொடுத்தனர். பேரன் மொத்தப் பணத்துடன், 'தொழிலாளி' பத்திரிகை பிரசுரிக்காது விட்ட தனது சிறுகதையொன்றையும் மல்லிகைக்கு அனுப்பினார்; 'மூங்கில்காடு' என்ற அக்கதை, அடுத்து வந்த மல்லிகை இதழில் (ஆவணி 1969) வெளிவந்தது. மேலும், 'மல்லிகை ஒன்று மணிக்கரங்கள் பலநூறு' என்ற தலைப்பில் அதே இதழில் ஜீவா எழுதிய கட்டுரையில், ".... **இதைத் தவிர கொழும்பு தலைமை அஞ்சலகக் காசுக் கணக்கீட்டுக் கிளையைச் சேர்ந்த ஈ.ஜி. அப்புஹாமி என்ற சிங்களச் சகோதரனும் தனது அன்பளிப்பாக ஒரு சிறிய தொகையை தந்து உதவி செய்துள்ளார். தேசிய இனங்களின் உண்மையான ஒற்றுமைக்கு இலக்கியமும் தனது பங்கைச் செய்யலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிசெய்த அந்தச் சிங்கள நண்பருக்கு சகல தமிழ் இலக்கிய நண்பர்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.**" என்ற குறிப்பும் உள்ளது! இது, வழமைபோல் ஜீவாவின் மிகைக்கூற்றுகளில் ஒன்றுதான்!

தனி மனிதனின் சொத்தைப் பெருக்க உதவத் தேவையில்லை என்பதனுடன் ஒதுங்குவது சரியா என்ற கேள்வி, என்னுள் எழுந்தது; ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஏதோ விதத்தில் உதவவேண்டிய கடமை எனக்கும் உண்டுதானே என்றும் எண்ணினேன். எனவே, ஐந்து சந்தாக்களைச் சேர்த்து அனுப்ப முடிவெடுத்தேன். எனது நண்பரிடையே இலகுவாக ஐந்தைச் சேர்க்க முடிந்தது; மேலும் சேர்க்கலாமென முனைந்தேன். எனது அலுவலகத்தில் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாகக் கதைப்பவரே அதிகம். அவர்களுக்கு இலக்கிய ஈடுபாடு இல்லையென்றாலும், ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக அமையும் மல்லிகை போன்ற இதழ்களுக்கு உதவ வேண்டியது கடமையென்றும், பண்பாட்டு வளர்ச்சிக்கு இத்தகைய முயற்சிகள் அவசியம் என்பதையும் வற்புறுத்தினேன். தவிர, சந்தாவான ஐந்து ரூபாவை இலவசமாகக் கேட்கவில்லை எனவும், பன்னிரண்டு இதழ்கள் அவர்களது வீடு நோக்கித் தபாலில் வருமெனவும் சொன்னேன். எனது 'வற்புறுத்தலைத் தாங்காமல்' பலர் சம்மதித்தனர். எல்லாமாக இருபது பேரைச் சேர்த்து, நூறு ரூபாவுக்குரிய காசுக் கட்டளையை (காசுக்கட்டளைத் தரகுக் கூலி என்னுடையது) ஜீவாவுக்கு அனுப்பிவைத்தேன். சில நாள்களில், காசுக்கட்டளை கிடைத்ததெனவும் 'மல்லிகைக்கு நீங்கள் காட்டும் ஆதரவுக்கு நன்றி!' எனவும் தெரிவித்து டொமினிக் ஜீவா அனுப்பிய அஞ்சலட்டை, எனக்குக் கிடைத்தது!

டொமினிக் ஜீவா

**

நான் அனுப்பிய 'பெருமிதம்' கவிதையும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடத்திய தமிழ் விழாவைப் பற்றிய, 'கொழும்பில் முத்தமிழ் விழா' என்ற கட்டுரையும், 1969 புரட்டாதி மல்லிகையில் வெளி வந்தன. ஒரு கிழமையின் பின்னர் ஒருநாள், நான் கடமை பார்த்த உள்நாட்டுப் பொதிகள் அலுவலகத்துக்கு ஜீவாவும் இன்னொருவரும் வந்தனர்; மற்றவர் இரா. சந்திரசேகர சர்மா எனப் பின்னர் அறிந்தேன். "யாரைத் தேடுகிறீர்கள்?" எனக்கேட்டேன். "யேசுராசாவைச் சந்திக்க வேண்டும்..." என்று சொல்ல, "அவர் நான்தான்" என்று சொல்லி, சிற்றுண்டிச்சாலைக்குக் கூட்டிச் சென்றேன்.

சந்தா சேர்த்து அனுப்பியமைக்கு நன்றி கூறி, என்னைப்பற்றி ஜீவா விசாரித்தார்; குருநகர் எனது ஊரென்றபோது ஆச்சரியப்பட்டார்; அங்கு தனக்குப் பலரைத் தெரியுமென்றும் சொன்னார். நான், எனது கட்டுரையில் சில பகுதிகள் வெட்டப்பட்டிருப்பதை அவருக்குச் சொன்னேன். குறிப்பாக எஸ். பொன்னுத்துரையின் உரையில் வரும் செ.கணேசலிங்கன், வ.அ. இராசரத்தினம், எஸ்.பொன்னுத்துரை ஆகிய பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன; 'கறுப்பும் சிவப்பும்' என்ற நாடகத்தின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டும் பகுதிகளும் நீக்கப்பட்டிருந்தன. "நீங்கள் இளம்பிள்ளைகள்... உங்களுக்கு இது விளங்காது..." என்று ஜீவா சொன்னார்; "அப்படி என்றால் அக்கட்டுரையைப் போடாமல் விட்டிருக்கலாம்" எனச் சொன்னேன். ஜீவாவின் அந்தச் செயலும் விளக்கமும் ஏமாற்றம் தந்தன. தொடர்ந்து எனது கவிதையொன்றும், சிறுகதைகள் இரண்டும், கட்டுரைகள் மூன்றும் மல்லிகையில் வெளிவந்தன.

***

எழுபதாம் ஆண்டளவில், மல்லிகைப்பந்தல்மூலம், எமது 'கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்'தைச் சேர்ந்த பத்துப்பேரினதும், மு.கனகராசன் முதலிய இன்னும் சிலரதும் சிறுகதைகளைச் சேர்த்துப் புத்தகம் போட ஜீவா விரும்பினார். ஆனால், ஒவ்வொருவரும் இருபத்தைந்து ரூபா தருவதுடன் (அந்த நாள்களில் பொதுவாக ஒரு புத்தகத்தின் விலை இரண்டரை ரூபா), இருபத்தைந்து பிரதிகளை விற்றுத் தரவேண்டுமென்றும் சிலர்மூலம் தெரிவித்தார். அப்படியானால், "மல்லிகைப் பந்தலும் கொழும்பு கலை இலக்கிய நண்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகமும் இணைந்து வெளியிடும் புத்தகம்" என்ற குறிப்பைப் போடவேண்டும் என்று, நானும் சாந்தனும் வற்புறுத்தினோம்; ஜீவா உடன்படாததால் அப்புத்தகம் பின்னர் வெளிவர வில்லை. அதன் பிறகு, நான் அனுப்பிய ஆக்கம் எதனையும் மல்லிகையில் அவர் வெளியிடவுமில்லை!; பிறகு, மல்லிகையுடன் எனக்குத் தொடர்பேதும் இருக்கவுமில்லை.

எஸ்.பொன்னுத்துரையுடன் நெருக்கமாயிருந்த சாந்தன், 1972 இலிருந்து ஜீவாவோடு நெருக்கமானார்; அதனால், ஒவ்வொரு மாதமும அவரது சிறுகதையொன்று மல்லிகையில் வெளியானது. 1977 கார்த்திகை மல்லிகை இதழில், 'ஒரு நிலைப்பாடும், சில இலக்கியகாரரும்' என்ற சாந்தனின் நீண்ட கட்டுரை ஒன்று வந்திருந்தது (தற்போதைய ச.இராகவனின் ஆக்கங்களுக்கு முன்னோடி ஆக்கமென்றும் இதைச் சொல்லலாம்!); அதில் எழுத்தாளர் பலர் (பெயர் குறிப்பிடப்படாமல்!) கேலியாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தனர்; அவர்களில் நானும் ஒருவன். பல தவறுகளும் திரிப்புகளும் அக்கட்டுரையில் உள்ளன. ".... இவ்வாறான கட்டுரையை மல்லிகை வெளியிட்டுள்ளது; பதில் எழுதினால் ஜீவா போடுவாரா?" என, அக்காலத்தில் மல்லிகைக்கு பெரிதும் உதவிவந்த ஏ.ஜே. கனகரத்தினாவிடம் கேட்டேன். அவர், "கட்டாயம் போடத்தானே வேணும்... எழுதி என்னட்டத் தாங்க" என்று சொன்னார். எனவே, நானொரு நீண்ட பதிலை எழுதி அவரிடம் கொடுத்தேன். சில நாள்களின் பின்னர், "ஜீவா உம்முடன் கதைக்கவேணுமாம்" என ஏ.ஜே.சொல்ல, ஒரு நாளைக் குறிப்பிட்டு, வேலை முடிந்ததும் (அப்போது நான் சுண்டிக்குழி அஞ்சலகத்தில் வேலை பார்த்தேன்) மாலை வருவதாகச் சொல்லும்படி அவரிடம் கூறினேன். அவ்வாறு குறிப்பிட்ட நாளில், ராஜா திரை அரங்கின் பக்கத்து ஒழுங்கையிலுள்ள மல்லிகை அலுவலகத்துக்குச் சென்றேன். என்னைக் கண்டும் ஏதோ வேலைசெய்வது போல் ஜீவா இருந்தார். சிறிது நேரத்தின்பின் எனது பக்கம் திரும்பி, வந்து கதைத்தார். நான் ஏ.ஜே. சொன்னதைக்கூறி, என்ன விடயம் என்று கேட்டேன். அவர், சாந்தனிடம் விபரமெல்லாம் கேட்டு, ஒரு மாதத்தின் பின்னரே அக்கட்டுரையைப் பிரசுரித்ததாயும், எனது கட்டுரை பலரின் பெயர்களை வெளிப்படையாகக் கூறுகிறது என்றும் குறையாகச் சொன்னார். "பெயரைக் குறிப்பிடாமல் சாந்தன் பொய்களையும திரிபுகளையும் கூறுகிறார்; நான் பெயர்களைக் குறிப்பிடுவதன்மூலம், உண்மை எது பொய் எது என்பதை யாரும் பரிசீலிக்கும் வாய்ப்பைத் தருகிறேன்" என்றேன். நீங்கள் அலைக்கு முக்கியம் கொடுக்கிறீர்கள் என்றார்; "தேவையான இடங்களில்தான் அலைபற்றி வருகிறது" எனச் சொன்னேன். பிறகு, கட்டுரை நீளம் கூடிவிட்டது என்றார்; "சாந்தனின் கட்டுரை நீளமானது - அதில் சொல்லப்பட்டவற்றுக்கு விளக்கம் தரும்போது, கட்டுரை மேலும் நீளமாவது தவிர்க்க இயலாதது" என்றும் சொன்னேன். ஒரு முடிவினையும் சொல்லாது, தான் 'பார்ட்டி ஒவ்வீசுக்கு' போகவேணுமென்று அவர் சொன்னபோது, "நீங்க பார்ட்டி ஒவ்வீசுக்குப் போங்க... ஆனால், எனது கட்டுரையை வெளியிடுகிறீர்களா இல்லையா என்பதைச் சொல்லிவிட்டுப் போங்க." என்றேன்; அவர் ஒன்றும் சொல்லவில்லை. எனவே, "முடிவாகச் சொல்லுங்க. நீங்கள் போடவில்லை என்றால் நாங்கள் 'அலை'யில் வெளியிடுவோம்" என்றேன். உடனே அவர், "அப்ப அதில போடுங்க" என்றார். நான் திரும்பி வந்துவிட்டேன்! அலையின் பதினொராம் பன்னிரண்டாம் இதழ்களில், சாந்தனுக்கான அந்தப் பதிற் கட்டுரையை வெளியிட்டோம்.

4

"மு.பொவும் நீங்களும் ஒன்றாய்த்தானே இருந்தீர்கள்; இப்போது என்ன பிரச்சினை உங்களுக்கு....?" என்று நண்பர் சிலர் கேட்கின்றனர். "உண்மையில் எனக்கு அவருடன் பிரச்சினை எதுவுமில்லை; அவருக்குத்தான் என்னுடன் ஏதோ பிரச்சினை" என்பதுதான், இதற்கான பதிலாகும்! தொடர்ந்து சில நினைவுகள். 'காலம்' இதழில் (மார்கழி 2010) வெளியான 'முரண்பட்டும் உடன்பட்டும் - மு.பொ. தொடர்பாக...' என்ற எனது கட்டுரையில், எனது நிலைப்பாடு தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. அவரது திறமை, செயற்பாடுகள் மீதான எனது மதிப்புணர்வைச் சொல்வதோடு, அவருடன் முரண்பட்டு வரும் விடயங்களையும் சமநிலை உணர்வுடன் அதில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால், அதே இதழில் வெளியான தனது நேர்காணலில் மு.பொ., என்னை Intellectual Honesty அற்றவனென்றும், "... பிறகு நமக்கிடையே (எனக்கும் அவருக்கும்) கருத்துமோதல் ஏற்பட்டதும் எனது படைப்புகள் எல்லாமே (எனக்கு) பிடிக்காமல் போயின". என்றும்சொல்கிறார். இரண்டையும் வாசித்த எழுத்தாளர் பொ.கருணாகரமூர்த்தி எனக்கு எழுதிய மின்னஞ்சலில், "உங்கள் கட்டுரையைப் படித்த பின் மு.பொ. வெட்கப்பட்டிருப்பார்" என்று குறிப்பிட்டார். ஆனால், அவ்வாறு மு.பொ. வெட்கப்படவில்லை என்பதையே, 'மகுடம்' இதழில் பின்பு அவர் எழுதியிருப்பவை நிரூபிக்கின்றன!

1975 இன் தொடக்கத்தில் நடைபெற்ற எனது சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வுக்கு, மு.பொவே தலைமைதாங்கினார்; பின்னர் எமது அலை இதழில் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதினார்; 1988 இன் இறுதியில் 'திசை' வாரப் பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டதும், தனது துணை ஆசிரியராக இருக்கும் படி (தனது கருத்துநிலையுடன் உடன்பாடும் உறவு தொடர்பில் என்னைவிடவும் தன்னுடன் நெருக்கமும் கொண்டிருந்த - சு.வில்வரத்தினம், இ.ஜீவகாருண்ணியன், மு.புஷ்பராஜன் ஆகியோரைத் தவிர்த்து விட்டு!) எனது வீடு தேடிவந்து என்னை அழைத்தார்; சுமார் ஒன்றரை ஆண்டுகள் நானும் அவருக்குத் துணையாசிரியராகப் பலவிதங்களில் 'துணை' புரிந்தேன்! எனது 'தெரிதல்' இதழிலும் எழுதினார். 2010 ஆம் ஆண்டின் கார்த்திகை மாதம்வரை, அவர் என்னுடன் நல்லுறவையே பேணினார்! எனது எழுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பாராட்டியே எழுதினார்.

"நான் அண்மையில் படித்த ஈழத்துப் புதுக்கவிதைகளில் "சங்கம் புழைக்கும் மயகோவ்ஸ்க்கிக்கும்" என்ற யேசுராசாவின் கவிதையே என் நினைவில் நிற்பதாகவும், நாம் தேடிநிற்கும் புதுயுகத்துக்குரிய ஒத்தோடலை மறுத்த, அதே நேரத்தில் வாழ்க்கையின் உண்மையைக் காணவேண்டும் என்ற வீரத்தையும் கொண்டுள்ளதாகவும் அமைந்துள்ளது. அக்கவிதைக்குரிய தனித் தன்மையைப் படிப்பவர் எவருமே புரிந்து கொள்வர். யேசுராசாவின் "தொலைவும் இருப்பும்" அவாவி நிற்கும் வாழ்க்கையின் பூரண ஆமோதிப்பை இச்சிறுகவிதையே நிறைவு செய்வதாய் அமைந்துள்ளது. யேசுராசாவின் "தொலைவும் இருப்பும்" என்ற சிறு கதைத்தொகுதிகூட ஈழத்தில் வெளிவந்த படைப்புகளில் இல்லாத, புதுயுகத்துக் குரிய தேடலை அதிகமாகக் கொண்டுள்ளது என்றே கூறவேண்டும்." ('அலை' ஆடி - ஆவணி 1976). மேலே உள்ளது சிறு உதாரணம்.



2006 ஆம் ஆண்டளவில், மு.தளையசிங்கத் தின் ஆக்கங்களின் முழுத் தொகுப்பு நூலுக்காக அவர் தேடிகொண்டிருந்த - 'பூரணி' முதலிதழில் (ஆடி - புரட்டாதி 1972) வெளியான - 'உலகப் பரிணாமப் பிரச்சனைகளும் நமது புதிய கல்வித்திட்டமும்' என்னும் கட்டுரையினைத் தேடிப்பெற்று (16 பக்கம்) ஒளிநகல் பிரதியைத் அனுப்பி உதவினேன்; நூலில் அதுபற்றி ஒரு வரியுமில்லை.

'கவிதையில் துடிக்கும் காலம்' என்ற அவரது கவிதைத் தொகுப்பு, 2009 கார்த்திகையில் வெளிவந்தது; 2010 ஆம் ஆண்டு அதற்குச் சாகித்தியமண்டலப் பரிசும் கிடைத்தது. ஜனாதிபதியின் அலரிமாளிகையில் நடைபெற்ற விழாவில், ரூபா ஐம்பத்தைந்தாயிரம் ரூபா பரிசையும், விருதையும் மு.பொ. நேரில் சென்று பெருமையுடன் பெற்றார்! அவ்வாண்டு கார்த்திகை மாதம் சொந்த அலுவலாகக் கொழும்பு சென்ற நான், கேதார நாதனுடன் சேர்ந்துசென்று அவரைச் சந்தித்தேன். தமிழ்த் தேசியத்துக்கும் இயக்கத்துக்கும் ஆதரவாக, ஆக்ரோஷமாக எழுதியும் பேசியும் வந்தவர் அவர்; அப்படியான ஒருவர் எவ்வாறு அந்தப் பரிசை வாங்கியிருக்கலாம்? - அதுவும், சென்ற ஆண்டு நடைபெற்ற மாபெரும் இனஅழிப்புக்குப் பிறகு! - என்று, நான் கேட்டேன்; கேதாரநாதனும் என்னை ஆமோதித்துக் கதைத்தார். இருவரதும் கதைகள் அவருக்குச் சங்கடத்தைத் தந்தன. சமாளிப்புக்காகக் குதர்க்கமாகக் கதைத்தார்; இத்தனைக்கும் நாங்கள் அமைதியாக, வழமை போல் அவருக்கு மரியாதை கொடுத்தே கதைத்தோம். கருத்து முதல்வாத ஆன்மிகவாதியான அவர், 'பொருளுக்கு' முன்னால் (பரிசும் விருதும்) ஆடிப்போன பரிதாப நிலைமை! 1982 இல் மு.நித்தியானந்தனும் நிர்மலாவும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதை முன்வைத்து, சாகித்திய மண்டலப் பரிசுகளைப் புறக்கணிக்க வேண்டுமென்ற சில இலக்கிய அமைப்புகளின் முன்னெடுப்பை, இதே மு.பொன்னம்பலமும் ஆதரித்தார்; இன்று முள்ளி வாய்க்கால் பயங்கரத்தின் பின், அதே பொன்னம்பலம் தான் "பரிசு"(கெட்டு) வாங்குகிறார்! அவர், தான் நிர்வாணமாக நிற்பதாக உணர்கிறாரோ என்னவோ! அதன் பிறகுதான் எல்லாமே மாறத் தொடங்குகிறது; காலம், மகுடம் ஆகிய இதழ்களில் என்னை இழிவுபடுத்தும் குறிப்புகளைத் தெரிவிக்கத் தொடங்கினார்! ".... என்மீது இருந்த **பகைமையால்** யேசுராசா அவரைத் தூக்கிப் பிடித்ததும்", ".... இவ்வாறு யேசுராசா **ஒவ்வொரு காலகட்டத்திலும் எனக்கு எதிராக இயங்கியது** பெருங்கதையாக நீளும்." என்று 'மகுடம்' இதழில் (ஜூலை - செப். 2013) எழுதுகிறார். இவர் கூறுவதுபோன்ற "பகைமைகொண்ட சதிகாரன்" நானென்றால், காலம் இதழ்க் கட்டுரையில் (2010), இவரை எப்படி நான் பாராட்டியிருக்க முடியும் என்ற கேள்விக்கான பதிலை, புத்தியுள்ள வாசகரிடமே விட்டு விடுகிறேன்! **"இந்த "விரல் கூப்பும்" பருவத்திலிருந்து யேசுராசா இன்னும் விடுபடவில்லை** என்பது இதன்மூலம் தெளிவு." என்பது, ஜன. - மார்ச் 2013 'மகுடம்' இதழிலுள்ள மு.பொவின் இன்னுமொரு "திருவாசகம்." அப்படியானால், விரல் கூப்பும் பருவத்திலிருந்த யேசுராசாவைத்தான் 1988 இல், 'திசை'யில் தனக்குத் துணையாசிரியராக இருக்கும்படி வீடு தேடிச் சென்று அழைத்தாரா? ஒருவரை இழிவுபடுத்தவேண்டும் என்பதற்காக, எந்தளவு கீழான நிலைக்கு ஓர் "ஆன்மிகவாதி" தாழ்ந்து போயிருக்கிறார் என்பது, வேடிக்கை யாய்த்தான் இருக்கிறது!


மு.பொன்னம்பலம்

(அழுத்தம் என்னால் இடப்பட்டது.)

23.06.2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்படம் -யாத்திகன்

சி.ரமேஷ்

1980 களின் பின் ஈழத்து சிறுசஞ்சிகைகளில் நவீன தமிழ்கவிதை

ஈழத்து நவீன இலக்கியத்தின் தோற்றத்திலும் அதன் வளர்ச்சியிலும் ஒவ்வொரு காலகட்டத்தின் புதிய இலக்கியச் செல்நெறியின் உருவாக்கத்திலும் சிறுசஞ்சிகையின் பங்கு இன்றியமையாதது. ஈழத்து சிறுசஞ்சிகைகள் குறிப்பாக நவீன கவிதை வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளன. அரசியல் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த சூழலில் சமகாலப் பிரச்சினைகளைப் பூடகமாகவும் நேரடியாகவும் கூறுவதற்கு புனைகதைகளை விட கவிதைகள் சிறந்த ஊடகமாகக் காணப்பட்டமையால் ஈழத்துச் சிறுசஞ்சிகைகள் அநுபவப் பங்காளியான நவீன கவிதைகளை கருத்து வெளிப்பாட்டு ஊடகமாகவும் உள்வாங்கிக்கொண்டன. ஈழத்துச் சிறுசஞ்சிகையில் காலத்தின் நிகழ்பதிவாக வெளிவந்த இக்கவிதைகள் சமூகநோக்கு கொண்டவையாகவும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் தார்மீகக் குரலாகவும் ஒலித்தன.

1980களுக்குப்பின் ஈழத்தின் நவீன கவிதை வளர்ச்சிக்கு பல்வேறு சஞ்சிகைகள் காத்திரமான பங்களிப்பைச் செய்தாலும் இவ்வாய்வில் குறிப்பிட்டதொரு காலகட்டத்தில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய "அலை", "புதுசு", "சமர்", "வெளிச்சம்", "திசை", முதலான சஞ்சிகைகளும் "கவிதை", "யாத்ரா", "நிலம்" "கவிதேசம்" முதலான கவிதைக்கான சஞ்சிகைகளும் "வியூகம்", "களம்", "முனைப்பு", "வயல்", "பூவரசு", "படி", "தடம்" முதலான கிழக்கு மாகாண சஞ்சிகைகளும் "சரிநிகர்", "மூன்றாவது மனிதன்", "நிகரி" முதலான மேல் மாகாண சஞ்சிகைகளும் "குன்றின் குரல்", "தீர்த்தக்கரை", "நந்தலாலா", "கொழுந்து" முதலான மலையக சஞ்சிகைகளும் இக்கட்டுரையில் எடுத்தாளப் படுகின்றன. இதில் "மூன்றாவது மனிதன்" ஆரம்ப கால இதழ்கள், கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளி வந்தாலும் பின்னைய அனைத்து இதழ்களும் கொழும்பில் இருந்தே வெளிவந்தன. ஆகவே மூன்றாவது மனிதனை கொழும்பிலிருந்து வெளிவந்த இதழ் எனக் கொள்வதில் தவறில்லை. கொழும்பி லிருந்து மூன்றாவது மனிதன் வெளிவந்த போதிலும் அவற்றில் இருந்து வெளிவந்த பெரும்பாலான ஆக்கங்கள் வடகிழக்கு மாகாணத்தைப் பிரதிபலித்தே வெளிவந்தன. "அலை" காலப்பகுதியில் டானியல் அன்ரனியை ஆசிரியராகக் கொண்டு "சமர்" என்னும் சஞ்சிகையும் வெளிவந்தது.அச்சிறு சஞ்சிகையே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதேசமயம் 1990களில் பிரான்சில் இருந்து தமிழ் இலக்கிய வட்டத்தாலும் "சமர்" என்னும் இதழ் வெளிக்கொணரப் பட்டது. அரசியல் தத்துவார்த்த உட்புலத்தை அடிப்படையாகக் கொண்டு வெறிவந்த இவ்விதழ் ஆய்வுக்கு உட்படுத்தப் படவில்லை.

தவிர, பிரவாகம், தூண்டி, அம்பலம், பயில்நிலம், செங்கதிர், ஜீவநதி முதலான ஈழத்துச் சஞ்சிகைகள் பலவும் விரிவஞ்சி தவிர்க்கப்படுகின்றன. அத்துடன் இக்காலப் பகுதியில் வெளிவந்த "பரிணாமம்", "பனிமலர்", "அம்மா", "சுவடுகள்", "புன்னகைதேசம்", முதலான புலம்பெயர் சஞ்சிகைகள் பலவும் ஏலவே குறிப்பிட்டது போலவே விரிவஞ்சி தவிர்க்கப்படுகின்றன.

ஈழத்தில் வெளிவந்த சிறுசஞ் சிகைகளுள் "அலை" ஒன்றரை தசாப்தகாலம் வெளிவந்து தமிழிலக் கியத்துக்கு மிகச்சிறந்த இலக்கியப் பங்களிப்பை ஆற்றியுள்ளது. 1975 கார்த்திகை முதல் 1990 வைகாசி வரை முப்பத்தைந்து இதழ்களைப் பிரசவித்த இச் சஞ்சிகை சிறுகதை, மொழிபெயர்ப்பு, கட்டுரைகளைப் போன்று கவிதைகளுக்கும் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. 1980களுக்குப் பின் வெளிவந்த இருபத்திமூன்று இதழ்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் வெளிவந்துள்ளன. ச.ரவீந்திரன், சண்முகம்சிவலிங்கம், சி.சிவசேரம், தா.இராமலிங்கம், எச்செம்.பாறுக், ஊர்வசி, மு.புஷ்பராஜன், சு.வில்வரத்தினம், வ.ஐ.ச.ஜெயபாலன், மைத்ரேயி, கீதப்பிரியன், நிலாந்தன், நவாலியூர் நடேசன், ஜெயசீலன், இளவாலை விஜேந்திரன், சேரன், மு.பொன்னம்பலம், சாரல்நாடன் முதலியோரின் ஈழத்துக்கவிதைகளும் சுகுமாரன், ஆத்மநாம், மணி, முதலியோரின் தமிழகத்துக் கவிதைகளும் இடம் பெறுகின்றன. அலையில் அ.யேசுராசா "ரவீந்திரன்", "அமுத சாகரன்" என்னும் பெயரில் எழுதியதைப் போல எம்.ஏ.நுஃமான், தா.இராமலிங்கம், சேரன், நிலாந்தன் முதலியோர் முறையே "சுந்தரன்", "ரகுபதிதாஸ்", "கவியரசன்", "நிதர்சன்", என்னும் பெயர்களிலும் எழுதினர். இச்சஞ்சிகையில் வ.ஐ.ச.ஜெயபாலன், சு.வில்வரத்தினம் முதலியோர் நெடுங்கவிதை முயற்சியிலும் ஈடுபட்டனர். சொற்செட்டும், செறிவிறுக்கமும் கொண்ட நவீன கவிதைகளை கலை நேர்த்தியுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகப்படுத்திய அலை, கவிதைகளை வரலாற்றுக் காலப்பதிவுடன் தொடர்புபடுத்தியும் வெளியிட்டது. மரபுக்கவிதையில் இருந்து முற்றிலும் வேறுபட்ட கவிதையாக இக்கவிதைகள் காணப்பட்டாலும் வெளிவந்த கவிதைகளிடத்தில் ஒத்திசைவு காணப்பட்டன.

1980களுக்குப்பின் நவீன கவிதை குறித்து அலையில் வெளிவந்த கட்டுரைகளாக சிவசேகரத்தின் "புதிய போத்தலில் சாக்கடைநீர்", பூரணச்சந்திரனின் "அக்கரைகாற்று ஜப்பானிய (ஹைக்கூ) கவிதைகள்", நுஃமானின் "ஆசியநாடுகளில் விடுதலைப் போராட்டமும் கவிதையும்" முதலானவற்றைக் கூறலாம். ஒப்பீட்டளவில் கட்டுரைகளை விட கவிதைகள் குறித்தான விமர்சனங்களே அதிகளவில் அலையில் இடம் பெற்றன. இக்காலப்பகுதியில் வெளிவந்த மரணத்துள் வாழ்வோம்", "ஆகாசம் நீலநிறம்", "யமன்", "அறியப்படாதவர் நினைவாக", "அகங்களும் முகங்களும்", "எட்டாவது நரகம்" முதலான தொகுப்புகளுக்கு முறையே கங்கா யமுனா, சேரன், மயிலங்கூடலூர் பி.நடராசன், மு.பொன்னம்பலம், செ.யோகராசா, சு.வில்வரத்தினம் முதலானோரால் எழுதப்பட்ட மதிப்பீடுகள் நவீன கவிதை குறித்தான ஆழமான விமரிசனங்களாகவும் அமைந்தன.

அலையைப் போன்று இக்காலப்பகுதில் நவீன கவிதைகளைத் தாங்கி வெளிவந்த இதழாக "புதுசு" சஞ்சிகையைக் கூறலாம். அலையில் எழுதிய சண்முகம் சிவலிங்கம், தா.இராமலிங்கம், எச்செம். பாறுக், ஊர்வசி, சுந்தரன், கவியரசன், இளவாலை விஜேந்திரன், மு.புஷ்பராஜன், சு.வில்வரத்தினம், வ.ஐ.ச.ஜெயபாலன் முதலானோர் புதுசுவிலும் எழுதினார்கள். இவர்கள் தவிர்ந்த உமாவரதராஜன், ஹம்ச்வனி, மீரா, ரஞ்சகுமார், ஒளவை, துஷ்யந்தன், பாலசூரியன், நா.சபேசன், அ.ரவி, நா.சபேசன், சி.நிர்மலவாசன், தர்மபாலசிங்கம், தா.திருநாவுக்கரசு முதலானோரின் கவிதைகளும் இவ்விதழில் வெளிவந்தன. நூல் மதிப்பீடுகள் என்ற வகையில் புதுவை இரத்தினதுரையின் "இரத்த புஷ்பங்கள்" தொகுப்புக்கு நுஃமான் எழுதிய மதிப்பீடு முக்கியமானது. இவ்மதிப்பீடு அக்காலப்பகுதியில் ஏற்படுத்திய தாக்கம் இரண்டாயிரத்துக்குப் பின்னரும் தொடர்ந்தது எனலாம். எளிய சொல்லாட்சியுடன் கூடிய கருத்தாளமும் கவித்துவமும் மிக்க கவிதைகளைப் பிரசவித்த இதழ் என்னும் வகையிலும் நிகழ்கால வாழ்வியலை அநுபவ வாயிலாக வெளிப்படுத்திய இதழ் என்னும் வகையிலும் "புதுசு" ஈழத்தில் எழுந்த முக்கியமான சஞ்சிகையாகும்.

ஈழத்து நவீன இலக்கியங்களின் இதழாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட "சமர்", கவிதை, கட்டுரை, சிறுகதை, மொழிபெயர்ப்பு என பல்வேறு தளங்களில் இயங்கியது. இவ்விதழில் வெளிவந்த கவிதைகள் சமூக வாழ்வியலைப் பேசின. சமவுடமைக் கருத்துகளுக் கூடாக அடிமட்ட மக்களின் வாழ்வாதார நிலையை வெளிப்படுத்தி நின்றன. சாருமதி, கவியரசன், அ.ரவி, த.ஆனந்தமயில், நல்லைஅமிழ்தன், அன்புநெஞ்சன், முதலானோரும் கவிதைகளும் இத்தடத்திலேயே இயங்கின. அலையைப் போன்று சேரன் இவ்விதழிலும் கவியரசன் என்னும் புனைபெயரில் கவிதைகளை எழுதினார்.

ஈழத்தமிழர் வாழ்வும் இலக்கியமும் அரசியல் மயப்படுத்தப்பட்ட சூழலில் பேரினவாத ஒடுக்கு முறைக்கெதிரான போரையும், போரியல் வாழ்வையும் வெளிப்படுத்திய சஞ்சிகையே "வெளிச்சம்" ஆகும். தமிழரின் பாரம்பரிய வாழ்வியல் புலத்துக்கூடாக விடுதலைப்புலிகளின் தீவிரவாதப் போராட்டத்தையும் போராட்டத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட தமிழ் தேசியத்தையும் முன்னெடுத்த இவ்விதழ் நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியிலும் தன்னை இணைத்துள்ளது. போர்க்களம், பற்றிய புதிய அனுபவங்களை, போருக்குள் சிதைவுண்டு அல்லல்பட்டு நொந்து நொடிந்து வாழும் மக்களின் வாழ்வியலை அவற்றுக் கூடாக எழும் புதிய சிந்தனைகளை கவிதைகளுக்கூடாக வெளிப்படுத்திய இதழ் வெளிச்சம் ஆகும். தமிழ் மக்களின் ஆழவேரூன்றிய விடுதலை வேட்கையை, அர்ப்பணிப்பும் தியாகமும் வீரமும் நிறைந்த தமிழர் வாழ்வியலை "மாலிகா" என்னும் பெயரில் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் வெளிப்படுத்தி நின்றன. உணர்ச்சி செறிவுமிக்க இக்கவிதைகள் தான் வாழ்ந்த காலச்சூழலை யதார்த்தபூர்வமாகக் காட்சிப்படுத்தி நின்றன. நவீன கவிதைக்கு அதிகளவு பங்களிப்பைச் செய்த வெளிச்சம் 1994 இதழை கவிதைக் கான சிறப்பிதழாகவும் பிரசவித்தது.

தீர்க்க தரிசனமிக்க விடுதலைக்கான முன்னகர்வுகளையும் சமகால போராட்ட அனுபவங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா.இராமலிங்கம், கருணாகரன், காசிஆனந்தன், சி.அமுதசாகரன், செ.பொ.சிவனேசு, சபா.ஜெயராசா, இயல்வாணன், கல்வயல் குமாரசாமி, இத்தாவில் க.சிவராசா, வளநாடன், இ.யதார்த்தன், ஜெ.கி.ஜெயசீலன், யோகரத்தினம் யோகி, பொன்.காந்தன், பொன்.கணேசமூர்த்தி, வேலணையூர் சுரேஷ், மலர்ச்செல்வன், சித்தாந்தன், தானா விஷ்ணு, நாக சிவசிதம்பரம், இளந்திரையன், பவித்ரன், த.ஜெயசீலன், சு.முருகானந்தன், விவேக், மயன், தூயவன், பரணி, ஸ்ரீபிரசாந்தன், என்.சண்முகலிங்கன், தொண்டையூர் துவாரகன், வேல்.லவன், வவுனியாதிலீபன், சி.செழியன், பழஞ்சோற்றுப் பாவலன், ந.அன்பழகன், இளைய அப்துல்லாஹ், கோகுலராகவன், யாத்திரீகன், சிதம்பரநாதன் ரமேஷ், அநாமிகன், அமரதாஸ், சந்திரபோஸ் சுதாகர், கி.பி.அரவிந்தன், கை.சரவணன், அறிவுக்குமரன், ஞாபகன், கோ.றுஷாங்கன், யுகசேனன், தமிழ்மாறன், வெள்ளை, வானதி, நாமகள், உதயலட்சுமி, கஸ்தூரி, மன்னார் ரூபி மார்க்கிரட், லோஜினி, கனகாம்பிகை, தூயவள், பிரேமினி சுந்தரலிங்கம், தமிழவள், அடேல் ஆன், ஆதிலட்சுமி சிவகுமார், இராஜி சண்முகநாதன், சகுந்தலா அருணகிரிநாதன், கி.சிவஞானம், மா.மயிலன், கோளாவிலூர் கிங்ஸ்லி, தமிழ்க்குமரன், சுதாமதி, ராபிகா, செல்வா, கதிர்காமநாதன், சு.அரசண்ணா, அடம்பனூர் செ.திருமாறன், சிதம்பரப்பிள்ளை, நா.பாஸ்கரன், குட்டி, இ.யனார்த்தன், விக்ரமன், ந.கிருஷ்ணசிங்கம், வாமகாந்த், வைரமுத்து சுந்த ரேசன், நல்லை அமுதன், முத்து விஜயராகவன், வேண்நிலா, இராஜபிரதீபன், வி.குணபால, ஜெயா, யோ.எமிழி, நம்பியாரூரன், பாவரசன், சுயோ, முருகனடியான், இத்தாவில் க.நடராசா, மாவேலன், சசிவர்ணன், துன்னாலை செல்வம், ஞாலவன், பாட்டக்குயில், சொ.சி.கலைக்கதிர், ந.தகையன், அ.அமுதன், சோதியா, யாழ்சுதா, கோபால்நாதன், அ.அன்ரனி, சாந்தி முஹியித்தீன், நெடுந்தீவு மகேஸ், தே.ஐமாயன், தமிழ்மாறன், சந்திரா கௌஷிதகி, ஆத்மரிஷி முதலான கவிஞர்கள் பலர் எழுதினர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்பு பெற்ற சூழலில் மக்களின் வாழ்வியல் இருப்பை முருகையன், ச.வே.பஞ்சாட்சரம், வீ.பரந்தாமன், மு.வே.யோ.வாஞ்சிநாதன், சோ.பத்மநாதன், தில்லைச் சிவன், வளவைவாணன் முதலியோரும் மரபுக்கவிதைக் கூடாகவும் பாடினர்.முருகையன்,ச.வே.பஞ்சாட்சரம் முதலானோர் யாப்பை முறித்துக் கவிதை பாடினாலும் அவர்களின் கவிதைகளில் யாப்போசைப் பண்பு நிறைந்து காணப்பட்டது.

வெளிச்சம் பங்குனி-1993 இதழ் தொடக்கம் ஆனி-1993 வரை தொடர்கட்டுரையாக வெளிவந்த சொக்கனின் "எண்பதுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் போக்கு", வரலாற்றுப் பின்னணியில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளை முன் வைத்து ஆராய்கிறது. உள்ளடக்கரீதியாக போரியலையும், சமூக ஊழலையும் ஆன்மிகவாழ்வையும் பேசும் இக்கட்டுரை இசைப்பாடல்களையும் ஆய்வின் நிமித்தம் உள்ளடக்கிக் கொள்கிறது.

வெளிச்சம், கவிதைத் தொகுப்புக்களின் விமர்சனங்களையும் உள்வாங்கி வெளிவந்தது. "தூயவளின் "நிமிர்வு", "இலக்குத் தெரிகிறது" தொகுப்புக்களுக்கு "யோ.எழிலி", மதிப்பீடுகளை எழுதியது போல் "பேராசிரியர் சண்முகதாஸ்", "செம்பியன் செல்வன்" முதலானோர் முறையே புதுவையின் "நினைவழியா நாட்கள்", "காலம் எழுதிய வரிகள்" முதலான தொகுப்புகளுக்கு மதிப்பீடுகளையும் எழுதியிருந்தனர். தமிழீழ மண்ணின் போராட்ட வரலாற்றையும், போராட்டச்சூழலில் வாழும் பல்வேறு மாந்தர்களின் மன உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி நின்ற வெளிச்சம் கவிதைகள், மண்ணின் விடுதலையை நேசித்த ஆன்மாக்களின் உணர்வின் ஊற்றாகவும் பேரினவாதத்துக்கு எதிரான எதிர்ப்பின் குரலாகவும் திகழ்கிறது.

14.01.1989 இலிருந்து 25.05.1990 வரை யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈறா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட "திசை"ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் குரலாக ஒலித்தது. அறுபத்தொன்பது இதழ்களைத் தாங்கி வெளிவந்த இவ்விதழ், ஈழ தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார சூழலை வெளிப்படுத்தி நின்றது. இச்சஞ்சிகையில் நா.முரளிதரன், சு.வில்வரத்தினம், மைதிலி அருளையா, கந்தையா காந்தரூபி, வளவை வளவன், மு.இ.அ.ஜபார், சண்முகன், பிரேமஸகீ, துவிஜன், கார்த்திகா, உமாவரதராஜன், சோலைக்கிளி, கந்தையா ஸ்ரீகணேசன், நற்பிட்டிமுனை பளீல், மு.புஸ்பராஜன், ஈழக்கவி, அசோக், எஸ்.ஜி.கணேசவேல், நெடுந்தீவு மகேஷ், எஸ்.எச்.ரபீக், யதார்த்தன், சகுந்தலை, பங்கஜன், சி.சிவரமணி, சி.இராமதாசன், வெ.மனோ, நல்லூர்தாஸ், முதலானோர் எழுதினர்.

20.10.1989 தொடக்கம் திசையில் அறிமுகப் படுத்தப்பட்ட "இளவட்டம்", என்னும் பகுதி ஈழத்துக் கவிஞர்கள் பலரை தமிழிலக்கியத்துக்கு அறிமுகம் செய்தது. ஜேம்ஸ், டானியல் ஜீவா, துளசி ம.பாபு, திருநாவு விஜயன், கமலினி, எஸ்.என்.பாஸ்கரன், நீலாவணையூர் அல்ஜ், சபா.புஷ்பநாதன், தமிழ்நேசன், இரஞ்சி இராசநாயகம், துர்வாசன் முதலானோர் இப்பகுதியினூடாக அறிமுகமா யினர். "திசை கவிதைத் தொகுப்புக்கான விமரிசனங்களையும் முன் வைத்தது. சு.முரளிதரனின் "கூடைக்குள் தேசம்" "துருவச் சுவடுகள் "முதலான தொகுப்புக்கு மான விமரிசனங்களும் திசையில் வெளிவந்துள்ளன.



நடராஜன் சங்கர்ராமன் எழுதி "புதுயுகம்" இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்யப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கம்பியூட்டர் கவிதைகள்" என்னும் கட்டுரை திசையில் வெளிவந்த கவிதை தொடர்பான கட்டுரை களுள் முக்கியமானது. "உணர்ச்சி களின் தூண்டுதலற்று தன்னுள் சேகரமான வார்த்தைக் கொத்து களிலிருந்து தேவையானதை எடுத்து இலக்கண கோட்பாட்டின் துணையுடன் வாக்கி யங்களை அமைத்து எழுதப்படும் கவிதைகள் கம்பியூட்டர் கவிதைகள்" என்பார். ஹசன் ஸரூர் எழுதி அ.யேசு ராசாவால் மொழி பெயர்க்கப்பட்டு திசையில் வெளிவந்த "எனது கடப் பாடு சுதந்திரத்துக்கும் நேர்மைக்கும் தான் உலகக் கவிதைத் திருவிழா", என்னும் கட்டுரை ஆங்கில இலக்கியங்களின் வழி நவீன கவிதையை அணுகு கிறது. சமூக செயற்பாடு கொண்ட யதார்த்த வாழ்வியல் போக்குகளை வெளிப்படுத்தும் நவீன கவிதைகளை மென் னுணர்வுத்தளத்தில் பிரசுரித்த இதழாகத் திசையைக் கொள்ளலாம்.

1980களில் யாழ்ப்பாணத்தில் இருந்து காலாண்டு இதழாக வெளிவந்த சஞ்சிகைகளில் ஒன்றே "மாற்று" ஆகும். ஈழப்போராட்டம் கூர்மை பெற்ற சூழலில் இச்சஞ்சிகை அதிகார வர்க்கத்துக் கெதிரான கவிதைகளையும் ஒடுக்குமுறைக்கெதிரான கவிதைகளையும் பிரசுரித்தது. இவ்விதழில் யாழினி, மலையன்பன், மைத்ரேயி, கல்லூரான், செழியன், மாறன், வைரமுத்து, றகுராம், கவிராஜன், ஈழபுத்ரி, லோகன், தா.இராமலிங்கம், மௌரியன், புதுவை இரத்தினதுரை, ராஜி, வித்யா, ராஜ்தேவ், கே.எம்.ரவி, கெஜ-தர்மா, எஸ்.அருளானந்தம், நெல்லை மகேஸ்வரி, முதலானோர் எழுதினர். பொருளாழமிக்க உணர்ச்சி செறிவுமிக்க காத்திரமான கவிதைகளைப் பிரசுரித்த இதழ் என்னும் வகையில் இவ்விதழ் முக்கிய மானது.

கவிதைத் தொகுப்புக்களுக்கான விமர்சனங் களையும் இச்சஞ்சிகை முன்வைத்தது. மாற்று சஞ்சிகையில் தொடர்ச்சியாக இடம்பெறும் சஞ்சீவன் பக்கங்கள் அக்காலப்பகுதியில் வெளிவந்த அ.யேசு ராசாவின் "அறியப்படாதவர் நினைவாக", "பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்", கணபதி கணேசனின் "சூரியனைத் தொலைத்தவர்கள்", முதலான தொகுப்பு களுக்கு காட்டமான விமர் சனத்தை முன் வைத்தது. சேரனின் "யமன்" தொகுப்புக்கும் ஆழமான விமர்சனமொன்று கவி ராஜனால் எழுதப்பட்டது. இவ்விமரி சனம் ஈழத்துக் கவிதை இயங்கியலில் சேரனின் இடத்தையும் இருப்பையும் ஆராய்கிறது. தமிழகச் சஞ்சிகை களைப் போன்று அற்ப ஆயுளிலே தம்மை முடித்துக் கொண்ட இதழாக "மாற்று" காணப்பட்ட போதிலும் போராட்டச் சூழலில் தனிமனித அநுபவங்களையும் மக்களின் வாழ்வியலையும் கவிதைக்கூடாக நுட்பமாக வெளிப்படுத்திய இதழ் என்னும் வகையில் இவ்விதழ் முதன்மைமிக்கது.

1955 இல் வெளிவந்த தேன்மொழியைத் தொடர்ந்து "நோக்கு", "கவிஞன்", "பொன்மடல்", "நவ யுகம்", "அக்னி" முதலான கவிதைக்கான சஞ்சிகைகள் 1980 வரை ஈழத்தில் வெளிவந்தன. 1980களுக்குப்பின் 2007வரை ஈழத்தில் வெளிவந்த கவிதைக்கான சஞ்சிகை களாகக் "கவிதை", "நிலம்", "யாத்ரா" முதலான வற்றைக் கூறலாம். இச்சஞ்சிகைகள் நவீனகவிதைக் கான வெளியீட்டுக் களமாக செயற்பட்டதுடன் கவிதை பற்றிய ஆக்கபூர்வமான விமரிசனங்களையும் முன் வைத்தது. அவ்வகையில் 1990களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த கவிதைக்கான சஞ்சிகையாக "கவிதை"யைக் கூறலாம்.

காலத்தின் தேவை அறிந்து இளம்கவிஞர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் வகையில் வெளிவந்த இதழ்களில் முக்கியமானது "கவிதை" ஆகும். அ.யேசுராசாவை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த இவ்விதழ், குடாநாட்டு,வன்னி மக்களின் உணர்வு வீச்சும் கலை நேர்த்தியும் கொண்ட கவிதைகளை ஈழத்திலக்கியத்துக்கு அறிமுகப்படுத்தியது. எஸ்.உமாஜிப்ரான், நல்லூர்தாஸ், இயல்வாணன், காவலூர்ரவி, செ.பொ.சிவனேசு, ஞா.கெனத், பவித் திரன், சத்தியபாலன், இளந்திரையன், த.ஜெயசீலன், ஆதிலட்சுமி சிவகுமார், யானைப்பாகன், மைதிலி அருளையா, கவியமுதன், கருணாகரன், துணைவியூர் கேசவன், புதியவன், மு.விஜயராகவன், புலேந்தி திலீப்காந்த், காவதூர் ரவி, கற்பகன், செ.சாயிப்பிரியன், இணுவில் சிவகுமாரன், ஜித்து மீசாலையூர் கமலா, நாக.சிவசிதம்பரம், ஜேவியர் ஹெராட், கு.மணிமேகலை, சந்திரா தனபாலசிங்கம், ஆபுத்திரன், நல்லூர் தாஸ், கு.சுபேஸ்கரன், சி.இரத்னேஸ்வரி, இ.யனார்த்தன், தி.நீதிராஜா, பு.ஜே.ரஜீவன், கனகர்மகன், நத்திரா, கற்பகன், புனிதன், மு.விஜயராகவன், முல்லை அமுதன், இரஞ்சி இராஜநாயகம், சாரங்கன், வே.செல்வச்சந்திரன், சோ.மதீசன், ஞா.கௌத், ஆதிரை, கி.குருபரன், ச.நித்தியராம் நாராயணன், தி.உதயசூரியன், றுக்ஷன், கந்தையா ஸ்ரீகணேசன், பா.மகாலிங்கசிவம், யு.ஸ்ரனிஸ்ஜெலீபன், சு.சுரன், வேலணையூர் சுரேஷ், முருகையன், தி.உதயசூரியன், கல்வயல் வே.குமாரசாமி, செல்வமனோகரி, காரை சுந்தரம்பிள்ளை, சத்துருக்கன், தெல்லியூர் ஜெயபாரதி, மயன்-2, பரந்தனுரான், கருணைரவி, நாமகள், நெடுந்தீவு மகேஸ், அல்லையூர் தர்மினி, சங்கர், நா.பாஸ்கரன், நடராஜா கிருஷ்ணகுமார், உமாகாந்தி, அமிழ்தினி, கு.சிறிகணேஷ், தமிழவன், கமலரூபன், சந்திரா தனபாலசிங்கம், வான்மேகம், க.முருகதாஸ், க.வாமக்காந்த், பொன்னிலா, காரை. எம்.பி.அரு ளானந்தன், தேவதாசன் எழில்மங்கை, சி.சதாசிவம், கு.மணிமேகலை, எஸ்.சாந்தன், அபர்ணாசிவா, தயா லோகதாசன், வே.பத்மனேஸ், தி.ஜனகன், தி.ரஜீவன், தே.கு.சயிலா, இணுவையூர் பிரகாஷ், நெடுந்தீவு மன் ரேசா, த.அருண் மொழிவர்மன், ஜெயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான் முதலான கவிஞர்களின் கவிதைகளுடன் நீலாவணனின் பிரசுரிக்கப்படாத "என்பதற்காய் எழுது கிறேன்" கவிதையையும் உள்ளடக்கியதாக "கவிதை" இதழ் வெளிவந்தது. சூரி, ரூபன் என்னும் புனை பெயரிலும் அ.யேசுராசாவின் கவிதைகளும் இவ்விதழில் வெளிவந்தன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆபுத்திரன் முதலா னோரின் கவிதைகளையும் உள்ளடக்கிய தாக இச்சஞ்சிகை வெளிவந்தது. அதேசமயம் கவிதை இதழில் நன்கு இனம் காணப்பட்ட கனதியான கவிதைகளும் மீள்பிரசுரம் செய்யப்பட்டன. அந்த வகையில் தமிழ்நாட்டுக் கவிஞர் பழனிபாரதியின் "கண்ணில் தெரியுது வானம்" மீள்பிரசுரம் செய்யப்பட்ட கவிதையாகும். கவிதைகளைப் போல இவ்விதழில் ப.ஸ்ரீஸ்கந்தனின் "கவிதையின் கவிதைகள்" என்னும் கட்டுரையும் "காணிக்கை" தொகுதியிலுள்ள மு.தளையசிங்கத்தின் முன்னுரையும் மீள் பிரசுரிக்கப் பட்டது. படைப்புக்களுக்கப்பால் இளம் ஆளுமைகளின் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணரும் வகையில் நேர்காணல்களும் இடம் பெற்றன. கருணா கரன், மைதிலி அருளையா, சி.சிவதாஸ், செ.பொ.சிவ னேசு, நாக.சிவசிதம்பரம், ஜெ.கி.ஜெயசீலன், த.ஜெயசீலன், வவுனியா திலீபன், முதலானோரின் நேர்காணல்களும் இடம்பெற்றன.

கவிதாளுமைகள் குறித்தும் அவர்தம் படைப்புக்கள் குறித்தும் கட்டுரைகளும் வெளி யாகின. அவ்வகையில் வளவை வளனின் மஹாகவி என்றொரு மகாகவி, செம்பியன் செல்வனின் "ஒற்றையடிப்பாதை", "முருகையனின் "நெகிழ்வும் எழிலும் ததும்பப் பாடிய நீலாவணன்", "நோக்கு என்றொரு முயல்வு", தா.இராமலிங்கத்தின் "கவிதை பற்றி சில குறிப்புக் கள்", கல்வயல் வே.குமாரசாமியின் "முருகையனின் பன்முக ஆளுமைக்குள் கவிதையின் கூர்மை", ஜெ.கி.ஜெயசீலனின் பாட்டாளிப் பெருங்கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்", வளவை வளவனின் "அங்கதச்சுவைக் கவிதை அன்றும் இன்றும்" போன்ற கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கவிதையை உருவம், உள்ளடக்கம் சார்ந்து அணுகும் தொடர் கட்டுரையாக சோ.பத்மநாதனின் "கவிதைக் கலை" காணப்படுகிறது

"தேறல்" என்னும் பகுதி நல்ல கவிதைகளை இனம் கண்டு அறிமுகப்படுத்தியது. இப்பகுதியில் மஹாகவியின் "தேரும் திங்களும்", புதுவை இரத்தின துரையின் "தாயகத்தைக் காதல் செய்", சண்முகம் சிவலிங்கத்தின் "ஆக்காண்டி", நீலாவணனின் "உறவு!", முருகையனின் வேலியும் காவலும்" முதலான கவிதைகள் இடம்பெற்றன

"கவிதை" இதழில் கவிதைத் தொகுப்புக்கான மதிப்புரைகளும் இடம்பெற்றன. அல்லை. ஆறுமுகத் தின் "பக்க வாத்தியங்கள் இல்லாத பாட்டுக்கச்சேரி", "காலம் எழுதிய வரிகள்" முதலான தொகுப்புக்கான மதிப்பீடுகளும் இடம்பெற்றன.

கவிதையை முதன்மைப்படுத்தி கவிதைக்கான சிற்றிதழாக வெளிவந்த "யாத்ரா", பத்தொன்பது இதழ்கள் வெளிவந்தநிலையில் தன் இலக்கியப் பணியை இடைநிறுத்திக் கொண்டது. 2010க்குப் பின்னர் அரசியல், சிறுகதை, பெண்ணியம் எனப் பன்முகம் கொண்ட சிறு சஞ்சிகையாக தன்னை உருமாற்றிக் கொண்டது. முஸ்லிம், தமிழ் படைப் பிலக்கிய ஆளுமை களின் ஆக்கங் களை அதிகளவில் உள்வாங்கி வெளி வந்த இச்சஞ்சிகை மூத்த கவிஞர் களின் கவிதைகளைத் தமிழிலக்கி யத்துக்கு அறிமுகப்படுத்தியதுடன் மரபுக்கூடாக நவீன கவிதையை இணைக்கும் பாலமாகவும் அமைந்தது. மொழிபெயர்ப்பு களுக் கூடாக மேற்குலக, கீழைத்தேய முஸ்லிம் கவிஞர் களின் ஆக்க இலக்கிய முயற்சிகளை வெளிப்படுத்தி நின்ற இச்சிறுசஞ்சிகை இளம் முஸ்லிம் கவிஞர்களின் எழுத்துருக்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது.

இப்னுஅஸுமத், ஏ.ஜி.எம்.ஸதக்கா, வாழைச் சேனை அமர், எஸ்.எச்.நிஃமத், முல்லா, கிண்ணியா அமீர் அலி, ஆர்.எம்.நௌஷாத், பயணி, நவமுனி, மு.மித்ராஜ், அன்புடீன், எம்.அஸ்மிஸாலி, அபூ முஜீப், வெளிமடை ரபீக், வ.சிவப்பிரகாஷ், பரீத், ஜீவன், அன்பு முகையதீன், உவைஸ்கனி, எஸ்.நளீம், நிந்ததாசன், அனார், சோலைக்கிளி, ஓட்டமாவடி அறபாத், ஓட்ட மாவடி இஸ்மாயில், ஏ.எஸ்.எம்.நவாஸ், நாச்சியாதீவு பர்வின், மு.பொன்னம்பலம், எஸ்.நளீம், அஷ்ரஃப் சிஹாப்தீன், அஸ்மிஸாலிஹ், கே.முனாஸ், கலா விஸ்வ நாதன், எஸ்.பிரபா, முர்ஷிதீன், பஹீமா ஜகான், கிண்ணியா ஹிதாயத், ஓடையூரான், ஏ.எச். எம்.ஜிஃப்ரி, இப்னு ஜிப்ரி, சி.சிவசேகரம், மேமன்கவி, மரினா இல்யாஸ் ஷாமி, மருதமுனை விஜிலி, ஜிப்ரான், வாழை இப்னுஹஸன், எஸ்.எம்.எம்.றாபிக், றுஸ்தா, மாவை வரோதயன், ஏ.ஏ.அமீர்அலி, த.ஜெயசீலன், எம்.எம்.எம். நகீபு, அ.மு.அப்துல் கஹ்ஹார், என்.ஏ.தீரன், உஸ்மான் மரிக்கார், ஏ.எச்.எம்.ஜிப்ரி, முல்லைமுஸ்ரிபா, ஜெளஸி, ஷகிலா ராஜா, கல்லூரான், ஏ.எம்.எம்.அலி. மீராவோடை சியாத், ஜே.எம்.ஜெஸார், யாசீன் சாலிஹ், கே.எப்.மதீனா, ஆதிலட்சுமி சிவகுமார், ஏ.எம்.எம். ஜாபிர், காத்தான்குடி பௌஸ், சாஜிதா நிஜாப், றோஷன், திக்கவயல் தர்மு, வாகரைவாணன், அக்கரை மாணிக்கம், மருதமைந்தன், ஏ.எம்.எம்.நஸீர், எம்.எம்.எம். நகீபு, இப்னு கையாம், சிங்கல்பாடி பா.சம்பத்குமார், லரீனா ஏ. ஹக், றிஸ்வியூ முஹம்மத் நபீல், ஜ.ஜமீல் ஹஸன், ஆயிஷா ஸமீரா, எம்.எச்.எம். புஷாரி, எம்.எல்.எம்.அன்ஸார், எம்.ஷயாம், சியாஸ் முஸாதிக், எம்.நவாஸ்செளபி, தி.திருக்குமாரன், கரடிக்குளம் ஜெயாபாரதிப்ரியா, உஸ்மான் மரிக்கார், கனமூலை பாரீஸ், யாழவள், ரோஷான் ஏ.ஜிப்ரி, பிரேமினி சபாரத்தினம், இரா.தனிக் கொடி, மருதூர்கனி, பாலைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எம்.ஜிப்ரி, குறிஞ்சி இளந்தென்றல், புதுவை ரா.ரஜினி, மு.பஷீர், கமலினி சிவநாதன், எஸ். பாஸ்கரன், ஹர்மிலா ஏ.ஹீம், தவ சஜிதரன், கே.றொபர்ட், சேரன், பொத்துவில் பைசால், அலெக்ஸ் பரந்தாமன், இளைய அப்துல்லாஹ், ஜின்னாஹ், மஹாகவி, அஸ்மின் உதுமாலெப்பை, க.கலைமகள், கெகிறாவ சஹானா, செ.குணரத்தினம் முதலானோர் எழுதினர். இவர்களுடன் ஹெச்.ஜி.ரசூல், மா.காளிதாஸ், எஸ்.வைதேகி, நெப்போலியன் முதலான தமிழகக் கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெற்றன.

அலையைப் போல யாத்ராவிலும் தமிழக, ஈழத்துக்கவிதைகள் மீள்பிரசுரம் செய்யப்பட்டன. அவ்வகையில் ஷண்முக சுப்பையா, அண்ணல், பாவலர் பஸீல் காரியப்பர், சு.வில்வரத்தினம், எம்.சி.எம்.ஸுபைர், பச்சியப்பன், எம்.எச்.எம். அஷ்ரஃப், எம்.ஏ.நுஃமான், அப்துல்காதர்லெப்பை, சுகன், புரட்சிக்கமால், சின்னக்குட்டிப்புலவர், நா.முத்துக்குமார், காசி ஆனந்தன், ப.கல்பனா, நீலாவணன், வேதாந்தி, பீர்முகமது, கே.அய்யப்பன், முதலானோரின் கவிதைகளும் இவ்வகையில் மீள்பிரசுரம் செய்யப்பட்டன.

யாத்ராவில் கவிதைகள் குறித்து வெளிவந்த கட்டுரைகளாக "கவிதை", "குறும்பா", "புதுக்கவிதையில் இஸ்லாமியப் புராணவியல் mythology படிமப் பிரயோகம்", "ஒலிநயமும் திறனாய்வுக் கொள்கைகளும்", "நூற்றாண்டு காணும் கவிஞன்", "சுபத்திரன் கவிதைகள்", "தமிழக வாசகனின் பார்வையில் இரு கவிதை நூல்கள்", "குறிஞ்சித் தென்னவன் ஓர் அறிமுகக் குறிப்பு", "தூறல்", "ஒரு யுகத்தின் தலைவனான கவிஞன் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் ஒரு விசிறியின் வாக்குமூலம்", "சுதந்திரம்", "தமிழ்க் கவிதை நேற்றும் இன்றும் இனியும்", "நமது இலக்கிய உலகம் சில அவதானங்கள்", "கவிதைத் திறனாய்வு", "சின்னச் சின்னச் சிங்களக் கவிதைகள்", "வாடாத பூக்கள்", "மறக்கமுடியாத மக்கள் பாடகன்", "பெண் மொழி", "புலவர்மணியின் கவிதையியல் நோக்கு", "கவிதை வன் முறையில் கையாளப்படும் ஆயுதங்கள்", "நவீன கவிதையில் இஸ்லாமிய அடையாளங்கள்", "சாதாரண பொதுமகனை பொருட்படுத்தாத போக்கால் கவிதை உலகம் இருண்டு வருகிறது", "இஸ்ஸாமியத் தமிழிலக்கியத்தின் தோற்றுவாய் மருதமுனை", "வகவம் சில நினைவுகள்", "சாண் ஏறி முழம் சறுக்கிய கவிதைகள்", "அவர்களும் கவிஞர்களுக்குப் பயப்படுகிறார்கள்", "காக்கி உடையில் ஒரு கவிஞன்", "ஃபைஸ் அஹமத் ஃபைஸ் ஓர் அறிமுகம்",

"எம்.ஏ.நுஃமானின் "நிலம் எனும் நல்லாள் பாரம்பரிய விவசாய சமூகம் பற்றிய வெளிப் பாடு", "தோப்பெனத் துலங்கிய தனி மரம்", "நஸ்ருல் இஸ்லாம் வங்க இசையின் வானம்பாடி", "வேட்டைக்குப்பின்னும் வடபுலத்துக் கவிதைகளும்", "சபிக்கப்பட்ட கவிஞன் கூர்ல் போதலயர்", "சோதி மிகு நவகவிதை", "ஜவாத் மரைக்கார்", "மடிந்து விழுந்த வெள்ளி", "உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு", "கவிஞர் சு.வி.யின் கவித்துவ ஆளுமையும் அதன் காரணங்களும்", "ஏவி.எம்.ஜாபர்தீன் சமநிலைச் சமுதாய விடிவெள்ளி", "தென்கிழக்கு முஸ்லிம் தேசத் தாரின் தூதுக் கவிகளில் காகம்", "இஸ்லாமியதமிழ் இலக்கியம்", போன்ற வற்றைக் கூறலாம்.

யாத்ரா . இதழில் "வெளிச்சம் விழும் இடம்" என்னும் தலைப்பில் இப்னு கையாம், அஷ்ரஃப் சிஹாப்தீன், எம்.எஸ்.எம்.ஜின்னா, தீரன், அ.கௌரி தாசன், ஏ.எல்.எம்.அஸ்வர், மெய்யன் நட்ராஜ் முதலானோர் முறையே இப்னு அஸுமத், தீரன், என்.நஜ்முல் ஹுஸைன், அக்கரை மாணிக்கம், ஏ.எம்.எம்.அலி, காத்தான்குடி பௌஸ், கிண்ணியா அமீர் அலி, முதலானோர் பற்றிய குறிப்புக்களை எழுதியிருந்தனர். கலையன்பன் ரபீக் முதலானோரின் குறிப்புக்களும் இப்பகுதியில் இடம்பெற்றது. அத்துடன் "வெளிச்சம் விழும் இடம் கவிஞர்களின் உள்ளக் கிடக்கைகளை மனம் திறந்து வெளிப்படுத்தும் இடமாகவும் அமைந்தது. இதில் வீ.ஏ.ஜுனைத் முதலான கவிஞர்கள் இலக்கியம் தொடர்பான தம் கடந்த கால மனப்பதிவுகளை வெளி படுத்த இக்களம் வழி சமைத்துக் கொடுத்தது. பாவலர் பஸீல் காரியப்பர் போன்றோருடன் தான் கொண்டிருந்த தொடர்பை விளக்கும் முகமாக அஷ்ரஃப் சிஹாப்தீனால் தொடங்கப்பட்ட பகுதியே "எனது நட்சத்திரங்கள்" ஆகும். கன்னி முயற்சியுடன் இது நின்று போனது.

மற்றும் "இந்திரா பார்த்தசாரதியின் ஹைக்கூ", எம்.கே.எம்.ஷகீப்பின் "ஒரு முன்னணிப் படையின் இறுதிப்போராளி", ச.ஸ்ரீகாந்தாவின் "காசிஆனந்தன் கவிதைகள் ஒரு நோக்கு", அப்துல் ரகுமானின் "நிலாவை அணைக்க முடியுமா?", "அக்கினி வீணை", முதலான கட்டுரைகள் மீள்பிரசுரம் செய்யப்பட்ட கட்டுரைகளாகும். இவை தவிர "மகாகவி அல்லாமா இக்பால்", "கவிதைகள் தீர்க்கதரிசிகளின் அரசியல்", "பஸ்தூன்களின் போர்க்காலப் பாடல்கள்", "துரத்தப்பட்ட கவிஞன்", சிறைப்பட்ட கவிதைகள்", "ஆகா கூஹித் அலி", "நிமாயூஷிஜும் பாரசீகக் கவிதையும்", அனுர.கே.எதிரிசூரியா, "கவிதை எனது வேதம்", "மக்கள் கவிதைகளும் அவர்தம் வாழ்வும்", "பேட்டர்ஸனும் எலியட் விருதும்", "பொரஸ்ட் - தோமஸ்", "மஹ்மூத் தர்வேஷ் ஊர் நீக்கப்பட்ட பலஸ்தீனக்கவிஞன்", "மெஹ்தி அஹ்வான் சேல்ஸ்", "தவ்ஃபீக் ரஃபாத் பாக்கிஸ்தானின் சிரேஷ்ட ஆங்கிலக் கவிஞர்", "கவிதை மதிப்பீடு", "அறபுக் கவிதை ஆன்மாவினுள் ஒரு துரிதப் பார்வை", முதலான கட்டுரைகள் மொழி பெயர்ப்புக் கட்டுரைகளாகவும் வெளிவந்தன. சொற்பொழிவுகளையும், நினைவுப் பேருரை களும் உள்வாங்கி யாத்ரா வெளிவந்தது. அவ்வகையில் கவிஞர் இன்குலாப்பின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"யாத்திராவை விமர்சிக்கிறார்", சிதம்பரப்பிள்ளை சிவகுமாரின் "தெற்கில் மறைந்த சூரியன்", "யாத்ரா இதழ்களினூடான யாத்திரை", இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் முதலான நினைவுப் பேருரைகள் வெளிவந்தன.

ஆழமான பார்வைக்கூடாக ஈழத்துக்கவிதை களை நோக்கும் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரன் பக்கங்கள் நவீன கவிதையை உருவ, உள்ளடக்கங் களுக்கூடாக ஆராய்கிறது.மற்றும் யாத்திராவில் கடைசிச் சொட்டு உசிரில், "ஹெச்.ஜி.ரசூலின் மைலாஞ்சி", "எழுதாத உன் கவிதை", "பூவரசம்பூ", "தீன்குறள்", "உயிர்த்தெழல்", "இருத்தலுக்கான அழைப்பு", "காற்று சுமந்து வரும் கனவுகள்", "நீ வரும் காலைப்பொழுது", "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்", "ஓவியம் வரையாத தூரிகை", "அழகான இருட்டு", "பண்டார வன்னியன்", "தூண்டில் இரைகள்", "திருநபி காவியம்", "பூமிக்கடியில் வானம்", "ஆயிரத்தோராவது வேதனையின் காலை", "எலும்புக் கூட்டின் வாக்குமூலம்" முதலான தொகுப்புகளின் மதிப்பீடுகளும் இடம்பெற்றுள்ளன.

யாத்ராவில் இடம்பெற்ற "சங்கப்பலகை" என்னும் பகுதி ஈழத்துக் கவிஞர்களான "அண்ணல்", அப்துல்காதர்லெப்பை, புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன், முகம்மது காஸிம் புலவர் முதலானோரை அறிமுகம் செய்தது. ஆரம்ப கால முஸ்லிம் கவிஞர்கள் குறித்தான வரலாற்றுத் தகவல்களை வழங்கும் இப்பகுதி அவர்களின் படைப்பிலக்கிய முயற்சிகளையும் இரத்தினச் சுருக்கமாக ஆராய்கிறது.

காத்திரமான நேர்காணலுக்கூடாக மூத்த கவிதா இலக்கிய ஆளுமைகளையும் அவர்களின் படைப்பிலக்கிய முயற்சிகளையும் அறிமுகம் செய்த பகுதி யாத்ராவில் இடம்பெற்ற "நேர்முகம்" ஆகும். அவ்வகையில் அன்பு ஜவஹர்ஷா, பாவலர் பஸீல் காரியப்பர், எம்.சி.எம்.ஸுபைர், பண்ணாமத்துக் கவிராஜர்,அல்.அஸுமத், மு.சடாட்சரன், திக்குவல்லை கமால், அன்பு முகையதீன், மருதமைந்தன், தாஸிம் அகமது, ஜின்னாஹ் ஷரிபுத்தீன், மருதூர்கனி முதலா னோரின் நேர்காணல்கள் எழுந்தன. கவிஞர்களை நேர்காணலுக்கூடாக விரிவாக அறிமுகம் செய்த யாத்ரா ஈழத்தில் இடம்பெற்ற கவிதை குறித்தான கலை இலக்கி நிகழ்வுகளை "தகவல்பெட்டி" என்னும் பகுதிக்கூடாகவும் வழங்கியது.

தமிழ்க்கவிதைகளுக்கான சிறுசஞ்சிகையாகத் தொடங்கப் பெற்ற இவ்விதழ் தன்நோக்குக்கு ஏற்ப செயற்பட்டது. ஈழத்துத், தமிழகக் கவிஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த இவ்விதழ் உலகத்து மொழியில் உள்ள மிகச் சிறந்த கவிஞர்களின் கவிதைகளையும் தமிழுக்கு அறிமுகம் செய்தது. கவிதைகளுக்கான சஞ்சிகையாக வெளிவந்த யாத்ரா தன் இருபதாவது இதழைத் தொடர்ந்து சமூகக், கலை இலக்கியச் சஞ்சிகையாக வெளிவந்தது.

சந்திரபோஸ் சுதாகரை ஆசிரியராகக் கொண்டு ஆக்கபூர்வமான இலக்கியப் பிரக்ஞையை ஏற்படுத்தும் நோக்கில் கவிதைக்கான இதழாக வெளிவந்த சஞ்சிகையே "நிலம்" ஆகும். 1999 ஜனவரியில் இருந்து வெளிவந்த இவ்விதழ் 2001 நவம்பர் வெளிவந்த மூன்றாவது இதழுடன் தன் ஆயுளை முடித்துக் கொண்டது. கவிதை எழுதும் ஆற்றலுடைய இளைஞர் களை இனம் கண்டு அவர்களின் தரமான படைப்புக்களை வெளிக் கொணர்ந்த நிலம் ஈழத்தின் ஆளமை மிக்க மூத்த கவிஞர்களுக்கும் களம் அமைத்துக்கொடுத்தது.

நவீன கவிதைகளை உள் வாங்கி வெளிவந்த இவ்விதழில் கருணாகரன், சித்தாந்தன், மயிலை தர்மராஜா, முல்லைக்கமல், ஞாபகன், தமிழ்மாறன், அமரதாஸ், பெருமாள்கணேசன், த.டே.கிஸ்காட், இளங்குயில், பொன்.ரிஷாகாந்தன், த,டே.கிஸ்காட், சாதுரியன், அநாமிகன், தெரயு, மயூரருபன், திருநகரூர் ஜெகா, வளவை வளவன் கருணைரவி, கனகரவி, துளசிதாசன், கந்தையாஸ்ரீகணேசன், மயிலை தர்மராஜா, கைசரவணன், பு.சிந்துஜன், பிரமிள், அலைக்ஸ் பரந்தாமன், பிரவீன், ஹேமந், கி.சிவஞானம், நா.விச்வ நாதன், யாத்திரீகன், யாழ்வீரன், எஸ்.உமாஜிப்ரான், ஆவரங்கால்சுதன், த.ஜெயசீலன், கலாப்/பர்ஹதி, திசை வீரசிங்கம், பாலைநகர்ஜிப்ரி, எஸ்.போஸ், அனார், ஆத்மரிஷி, மீனா அருணாசலம், முதலான பலர் இவ்விதழில் எழுதினர். "உண்மை சார்ந்த உரையாடல்" என்னும் தலைப்பின் கீழ் காலச்சுவடில் வெளியான "ஆற்றூர் ரவிவர்மாவின்" பேட்டியை மீள்பிரசுரம் செய்த இவ்விதழ் "வெள்ளொளி யும் வாசமுமாய்" என்னும் தலைப்பில் கவிஞர் உமாஜிப்ரானையும், "முதன்மை பெறும் பிரச்சினை களின் கவிதை" என்னும் தலைப்பில் சோ.பத்மநாதனை யும் பேட்டி கண்டு வெளிப்படுத்தியது. நிலம் இதழில் கவிதை குறித்து வெளிவந்த கட்டுரைகளில் ஆழமும் தேடலும் நிறைந்த விரிவான கட்டுரைகளாக சு.ஜெயச் சந்திரனின் "பேசாப் பொருட்களைப் பேசிய ஈழத்துக் கவிஞர்கள்", கந்தையா ஸ்ரீகணேசனின் "வன்னிக் கவிதைகள் மீதான ஒரு பார்வை" முதலான வற்றைக் கூறலாம். நிலம் காலத்தின் புன்னகை, இந்த மழை ஓயாதே, சொல்லில் எழுதிய வாழ்வு முதலான கவிதைத் தொகுப்புக்களுக்கும் ஆழமான விமரிசனங் களையும் முன்வைத்தது. கைதுகளும் சித்திர வதைகளும் மனிதப்படு கொலை களும் அதிகமாக விரவிக் கிடந்த சூழலில் அதனிருப்பை உணர்வு பூர்வ மாகவும் உளச்சுத்தியோடு வெளிப் படுத்திய இதழ் "நிலம்" எனலாம்.

யாத்திராவைப் போன்று கவிதைக்கான இருதிங்கள் சிற்றே டாக வெளிப்பட்ட "தவிர" நாட்டில் ஏற்பட்ட அசமந்த நிலையைத் தொடர்ந்து தன் இலக்கியப்பணியைத் தற்காலிகமாக இடைநிறுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது "தவிர", 2011 இற்குப்பின் பன்முக இலக்கியத்துகான சிற்றி தழாக பரிணமித்தது. கவிதைக்கான இரு இதழ்களைப் பிரசவித்த "தவிர" கவிதைகளுடன், கவிதை தொடர் பான கட்டுரைகளையும் கவிதைக் கான நயப்புரைகளையும் பிரசுரித்தது. சத்தியபாலன் "பிரியசகி" என்னும் பெயரில் கவிதை தேடும் பயணங்கள் என்னும் தலைப்பில் அஸ்வகோஸ் கிளர்த்தும் உள்ளுணர்வு பற்றியும் றஷ்மியின் கவிதைமொழி பற்றியும் எழுதிய நயப்புரைகள் நவீன கவிதையில் பரீட்சியம் கொள்வ தற்கும் ரசிப்பதற்கும் உதவுகிறது. சு.க.சிந்துதாசனின் ஓரிடம், கு.றஜீபனின் "வலிகளைத்தாங்கி" முதலான தொகுப்புக்களுக்கு முறையே ஷார்ங்கின், சாதுளன் ஆகியோர் எழுதிய விமர்சனக் குறிப்புக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டி யவை. எஸ்.போஸ், யாத்திரீகன், செல்வ மனோகரி, ஆத்மரிஷி, த.மலர்ச்செல்வன், நா.ஜனனி, ஜோனி மதுரநாயகம், கோகுலராகவன், சித்தாந்தன், கருணாகரன், கருணைரவி முதலானோரின் கலை நுணுக்கம் கொண்ட நேர்த்திமிக்க கவிதைகளையும் பிரசவித்தது. தவிர கவிதைக்கான மீள்பிரசுரங்களை செய்தது போல பூரணச்சந்திரனின் அக்கரைக்காற்று ஜப்பானிய ஹைக்கூ கட்டுரையை அலையிலிருந்து எடுத்து மீள் பிரசுரமும் செய்தது. வெளிவந்த இரு இதழ்களும் கவிதைக்கான காத்திரமான இலக்கியப் பணியை முன்னெடுத்தது.

கவிஞர் திக்கவயல் தர்முவை ஆசிரியராகக் கொண்டு கிழக்கிலங்கையில் இருந்து கவிதைக்கான இதழாக வெளிவந்த "கவிதேசம்" சொல்நயமிக்க யாப் போசைக் கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்த இதழாகும்.இதில் முத்துமீரான், கல்லடிக் கதிர்காமு, திக்வயல்தர்மு, தமிழ்வண்டு, கஜேந்திரன், கல்லூரன், காளமேகம், குயிலி, செ.குணரத்தினம், து.பிரபாஹர், எம்,ஏல்.ஜவ்பர் சாடிக், சு.சிசுபாலன், தினா.வானா, ஓட்ட மாவடி எம்.பீ.நளீம், தயானி ராசையா, இரா.அ.தென்றல் நிலவன், ஜெயன் பார்த்த சாரதி, நா.ஜெயபாலன், டிங்.டொங், யோ.வேணு சங்கர், கந்தர்வன், முதலான பலர் எழுதினர். முருகையன், கரவைக்கிழார், சுபத்திரன், காசி

ஆனந்தன் சர்மின் தாஜீடீன், யாழ்ப்பாணன், அநாமிகன், என்.ஏ.தீரன், எஸ்.அப்துல் சமத், பொன்மணி வைரமுத்து, மு.மேத்தா, முதலானோரின் கவிதைகளையும் இச்சஞ்சிகை மீள் பிரசுரமும் செய்துள்ளது. கவிதைகளைப் போல் கட்டுரைகளும் மீள்பிரசுரம் செய்யப் பட்டன. ஞானத்தில் ஏ.இக்பாலினால் எழுதப்பட்டு "இன்றைய இலங்கைத் தமிழ்க் கவிதையின் நவீன போக்கு கள்", பாஸ்கரத்தொண்டமானின் "கவிதை ஒரு கண்கட்டி வித்தை" முதலானவை மீள்பிரசுரம் செய்யப்பட்டன. இதழ் மூன்றில் எழுதப் பட்டவரின் பெயரின்றி பிரசுரிக்கப் பட்ட "ஒரு யுகாந்திர மனிதர்" என்னும் கட்டுரை ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை முன்வைத்து ஆராய கண்ண தாசனின் சினிமா பாடல்களின் இலக்கிய நயங்களை முன்வைத்து "கண்ணதாசனின் பார்வையிலே இதயம் கவர்ந்த இலக்கிய வரிகள்" என்னும் கட்டுரை ஆராய்கிறது. பழமையும் புதுமையும் கொண்டு வெளிவந்த கவிதைக் கான மலர் என்னும் வகையில் "கவித்தேசம்" முக்கிய மானது.

1990களில் ஈழத்தின் சமகால சமூக, அரசியல் போக்கைச் சித்திரிக்கும் ஆழமும் பொருட்செறிவும் கொண்ட கவிதைகளைத் தந்த இதழ்களில் "சரிநிகர்" முதன்மையானது. ஈழத்தில் மாற்றுக் கருத்துக்களை உள்வாங்கி எதிர்ப்பிலக்கியக் கவிதைகளை தந்த சரிநிகர், பூடகத்தன்மைமிக்க உள்முகக் கவிதை களையே அதிகம் பிரசவித்தது.உயிர் அச்சுறுத்தலும் அரசியல் நெருக்கடியும் மிகுந்த சூழலில் தமிழ், முஸ்லிம் கவிஞர்களுக்கு கவிதைக்கான களத்தை அமைத்துக் கொடுத்த சரிநிகர் சொல்நேர்த்தி மிக்க ப்ரக்ஞை பூர்வ மான கவிதை களைப் பிரசவித்தது. இவ்விதழில் ஈழத்தில் மூத்ததலைமுறைக் கவிஞர்களெனக் கருதப்படும் வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், சண்முகம் சிவலிங்கம், சி.சிவசேகரம், இளைவாலை விஜயேந் திரன், சு.வில்வரத்தினம், தாமரைத்தீவான், மு.பொ., கி.பி.அரவிந்தன், மு.புஷ்பராஜன், கல்லூரான், சடாட் சரம், சபா.சபேசன் முதலானோரும் எழுதினர். தான் தோன்றிக்கவிராஜர், எம்.ஏ.நுஃமான் முதலானோரின் கவிதைகளும் இச்சஞ்சிகையில் மீள்பிரசுரம் செய்யப் பட்டது. இவர்களுடன் இளைய தலைமுறைக்கவிஞர் களான யுதிஷ்ரா, சு.கலாமோகன், இந்திரன், தமயந்தி, அனிச்சா, பாவலன், மாதவன், ரி.எல்.ஜவ்பர்கான், கபிலர், இளையஅப்துல்லாஹ், பி.ரவிவர்மன், சோலைக் கிளி, வாழைமதி, ஒட்டமாவடி அறபாத் ஸஹ்வி, சீ.சாத்தனார், ஓளவை, எம்.எல்.எம். அன்சார், எஸ்.எச்.எம். கதிர், முகமட் அபார், நற்பிட்டிமுனை பளீஸ், ரபீக், ஏயெம்.றஸ்மி, றிஸ்வியூ முகம்மட், நபீல், பாலமோகன், எம்.பொஸர், ஏ.ஜீ.எம்.ஸதக்கா, ஈழ கணேஸ், காத்தான்குடி றஹீம், என்.ஆத்மா, இனியவன், ராகலைஞானா, செல்வமதீந்திரன், எம்.கே.எம்.ஷகிப், துவிதர்சன். கவிதாஞ்சலி, எம்.எஸ்.எம்.பாரிஸ், ஜபார், நட்சத்திரச் செவ்விந்தியன், மஜித், பாலமோகன், பெண்ணியா, கலா, முல்லைமுஸ்ரிபா, சிவ.வரதராஜன், பஹிமாஜகான், மலர்ச்செல்வன், மகாத்மா, செல்வ மனோகரி, ஆயிஷாபீவி, பனையடிப்பாடகன், அஸ்க கோஸ், கவிதாஞ்சன், சுல்பிகா, போஸ்நிஹாலே, எஸ்அம்பிகா, வாசுதேவன், சஞ்சுதன், பளைகோகுல ராகவன், பாலைநகர் ஏ.எச்.எம்.ஜிப்ரி, நிலா, அஷ்ரஃப் சிஹாப்தீன், அறபாத், சி.ஜெயசங்கர், சக்கரவர்த்தி, திருமாவளவன், ஜெபா, சக்கரவர்த்தி, மோகனா சிவானந்தகுரு, ஜிப்ரான், சசிமகரிஷி, முடிநாகன், அமுதன், அ.றஜீவன், நஜீபா, ந.சிகேதன், தரங்கிணி, தெ.புவனேந்திரன், சிசில் ராஜேந்திரா, மோகனா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எஸ்.றபாய்தீன், ச.ஜீவாகரன், ஆஷா, கலா, கமலினி, ஜெபா, சஸ்னி, அபுசாலிருமீரா, த.உமாகரன், சமீன் முஸ்தாம் அஹ்மத், றஞ்சனி, எஸ்.எம்.பாரீஸ், இளவரசு, ஏ.அஸீஸ் நிஸாருதீன், எம்.சிராஜ்மஷ்ஹூர், உஷ்மான் மரிக்கார், யாத்திரீகன்,ஸ்நேகன், அருண், முதலான பலர் சரிநகரில் கவிதைகளை எழுதினர். சித்திரிப்பு வழியாக தகவல்களை வழங்கி உணர்வுகளை ஓங்கச் செய்யும் இக்கவிதைகள் யதார்த்த வாழ்வியலுக் கூடாக முகம் கொள்பவை. ஈழப் போரின் குரூரச் சுவடுகளின் பதிவாக வெளிவந்த இக்கவிதைகள் தமிழர் வாழ்வின் அவலத்தையும் உயிர்ப்பையும் மாற்றத்தையும் பதிவு செய்கிறது. தமிழ்க் கவிதை முறைமையில் புதிய சொல்முறையால் தனித்துவமான கவிதைகளைப் பிரசுரித்த இதழ் இதுவெனலாம்.

ஈழத்துக் நவீனகவிதையை முறைமையான ஆய்வுக்குட்படுத்திய சஞ்சிகைகளுள் முக்கியமாதாக சரிநிகரைக் கொள்ளலாம். சரிநிகரில் கவிதை தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள் நவீன கவிதை தொடர்பாக உள்ளடக்கமுறைமையில் நிகழ்ந்த மாற்றத்தைச் சுட்டி நின்றது. இவ்வகையில் "1980களில் ஈழத்துப் பெண்கவிஞர்கள் பார்வையும்", "சு.வி.யின் காலத்துயரும் தமிழ்க் கவிதையும்", "சு.வி.யின் காலத்துயரும் மு.பொ.வின் கேள்விகளும் சில பதில் குறிப்புக்களும்", "1990களில் ஈழத்துக்கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?", "1990களில் ஈழத்துக் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? சோலைக் கிளியின் புதுமை என்ன", "1990களில் ஈழத்துக் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? கவிதை ஒரு தனி இலக்கியமா", "செங்கோல் ஸ்ரீ சிவப்பு + கோல் ஒரு மோசமான கவிதை", "இப்படி சொல்ல வேண்டி இருப்பதே துயரம்", "சோலைக்கிளியின் கவிதை பற்றிய விமர்சனம் சில தவறான புரிதல்களும் விளக்கங்களும்", "புதியதொரு மாயை செய்வோம்", "சித்திரவதை கவிதா சாட்சியம்",

சரிநிகர் ஈழத்துக்கவிதைத் தொகுப்புக்களின் புதிய வரவுகளையும் எடுத்தரைத்தது. அவ்வகையில் ஏ.எல்.காலீதீனின் "புயல் தொட்ட புஸ்பங்கள்", ஆனந்தனின் "ஆனந்தன் கவிதைகள்", சி.பற்குணத்தின் "நெஞ்சின் நெருடல்கள்", அஸ்வகோசின் "வனத்தின் அழைப்பு", கலைவாதியின் "ஓ பாலஸ்தீனமே", சு.மகேந்திரனின் "காலவெளி", ஸாலி இப்னு நபீலாவின் "முத்தத்தைத் தவிர", பெனியின் "நெருப்பு ஊர்வலங்கள்", மஜீத்தின் "ஏறுவெயில்" 17கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்த "இன்னும் நாங்கள்", குறிஞ்சிவாணன், தம்பிலுவில் ஜெயா, முல்லை வீரக்குட்டி முதலானோரின் கவிதை களை உள்ளடக்கி வெளிவந்த "இன்னும் விடிய வில்லை", ஆசிரியர் பயிற்சி கலாசாலையால் வெளி யிடப்பட்ட கூட்டுக்கவிதை தொகுப்பான "விருட்சப் பதியங்கள்" முதலான தொகுப்புக்களையும் அறிமுகம் செய்து வைத்தது.அத்துடன் ஆதிலட்சுமி சிவகுமார், தமிழவள், அம்புலி, வானதி, அலையிசை, சுதாமதி முதலான பெண் கவிஞர்களின் கவிதைகளுக்கூடாக "ஆனையிறவு"தொகுப்பையும் காட்சிப்படுத்தி நின்றது.

சரிநிகர் அவ்வப்போது உரு வான கவிதைத் தொகுப்புக்களுக்கும் ஆழமான விமரிசனங் களையும் முன்வைத்தது. 1996 ஒக்டோபர்.24-நவம்பர்.6 இதழில் வெளிவந்த சு.வி.யின் "ஏமாற்றம் தரும் கவிதைகள்" என்னும் கட்டுரையும் அதே ஆண்டு நவம்பர்.07-நவம்பர்.20 இதழில் வெளிவந்த "துயர் செறிந்த நடையழகும் அநுபவப்பகிர்தலும் கொண்டது நட்சத்திரன் செவ்விந்தி யனின் வசந்தம் 91" கட்டுரையும் 1994 காலப்பகுதியில் வெளிவந்த எட்டுக் கவிதைத் தொகுப்புக்களை முன் வைத்து ஆராய்கிறது.தாஸிம் அகமதுவின் சுழற்சிகள், எஸ்.எச்.நிஃமத்தின் பொன் விளை பூமி, நட்சத்திரன் செவ்விந்தியனின் வசந்தம் 91, அம்பி கவிதைகள், சிலோன் விஜேந்திரன் கவிதைகள், சபா.வசந்தனின் மண்ணின் நினைவுகள், சக்கர வர்த்தியின் யுத்த சந்நியாசம், அன்னலட்சுமி ராசதுரை யின் இருபக்கங்கள் முதலான தொகுப்புக்களின் பலம் பலவீனம் தொடர்பாக ஆராயும் இக்கட்டுரை அக்கவிதைகளின் மொழி யமைப்பு, வெளிப்பாட்டுமுறை தொடர்பாகவும் ஆராய் கிறது. அஷ்ஃரப் சிஹாப்தீனின் காணாமல் போனவர்கள், ஸதக்காவின் "போர்க்காலப் பாடல்கள்" முதலான தொகுப்புக் களுக்கு நில்ஷா எழுதிய அறிமுகக் குறிப்புக்கள் போர்க்கால அநுபவங் களுக்கூடாக ஈழத்து கவிதைகளின் வெளிப்பாட்டுத் தன்மையை எடுத்துரைக் கிறது. பெண் கவிஞர்களின் காதல் உணர்வைத் தாங்கி வெளிவந்த "உயிர்வெளி" தொகுப்புக்கு கவி எழுதிய குறிப்புக்கள் பெண்ணின் உள்ளத்தின் மென்னுணர்வு களை இயல்பாய் வெளிப்படுத்தி நிற்கிறது. இத்தடத்தில் பௌசரால் ஒளவையின் எல்லைக் கடத்தல் தொகுப்புக்கு எழுதப் பட்ட விமர்சனக் குறிப்புக்கள் ஒளவையின் கவிதை யோட்ட வெளிப்பாட்டு வெளியை மென்னுணர்வுத் தளத்தில் வெளிப்படுத்தி நிற்கிறது. கவிஞர் கருணா கரனின் உயிர்த்தெழுதல், தொகுப்புக்கு போஸ் எழுதிய விமரிசனம் பக்கச் சார்ப்பற்று இதய சுத்தியுடன் ஈழத்துத் தமிழிலக்கியப் புலத்தில் கருணாகரன் இடத்தையும் இருப்பையும் ஆராய் கிறது. கருணாகரனின் மேற்குறிப்பிட்ட தொகுப்புக்கு கனக சுரேந்திரனால் "ஒரு வழி மறிப்புக்கு எதிர்ப்பின் குரல்" என்னும் தலைப்பில் எழுதப்பட்ட விமரிசனம் கருணாகரனின் அநுபவ வெளிப்பாடு கவிதை யோட்டத்தில் கருத்தியல் சார்ந்து எவ்வாறு வெளிப் படுகிறது என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது. போஸ் சித்தாந்தனின் "காலத்தின் புன்னகைத் தொகுப்புக்கு எழுதிய பிறிதொரு விமர்சனமான "நிசப்த வெளியில் பூசிய நிறங்கள் பிழியப்படுகின்றன" சித்தாந்தனின் மொழிதலுக்கூடாக வெளிப்படும் கவிதையின் இருண்மை வெளியை வெளிப்படுத்தி நிற்கிறது. ஆத்மீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோக்கில் மு.பொ.வின் காலி லீலை நூலை முன்வைத்து அவரது கவிதைகளை அணுகும் "அவரை ஒரு அகல் விளக்காக்கி விட்ட அவரது தத்துவம்", என்னும் விக்னேஸ்வரனின் கட்டுரை மு.பொ.வின் கவிதைகளை காலகட்ட ரீதிக்குள் வகைப்படுத்தி அவரது கவிதைகளை நுண்ணாய்வு செய்கிறது. வெங்கட் சாமிநாதனின் பா.அகிலன் கவிதைகள் ஓர் அறிமுகம் என்னும் கட்டுரை ஈழத்தின் போர் காலச் சூழலில் அகிலனின் கவிதைகளை ஆய்வுக் குட்படுத்துகிறது.

போராட்டத்தில் நேரடி அநுபவங்களையும் அதன் புலம்பெயர்ந்து சென்றதன் பின் ஏற்பட்ட பிறிதொரு தேசத்தின் அநுபவங்களையும் ஆரம்பகால நவீனகவிதையில் வெளிப்படுத்தியவர்களுள் கி.பிஅரவிந்தன், தமயந்தி, அருந்ததி, சுகன், ரவி, இளவாலை விஜயேந்திரன் முக்கியமானவர்கள் ஆவார். இவர்களுள் ரவி, இளவாலை விஜ்யேந்திரன் முதலானோரின் கவிதைத் தொகுப்புக்கள் குறித்தான விமரிசனங்களை சரிநிகர் முன்வைத்தது. அவ்வகையில் ரவியின் "செட்டை கழற்றிய நாங்கள்" தொகுப்புக்கு யமுனா ராஜேந்திரன் எழுதிய "பிளவுண்ட மனங்களும் நாடோடிப் பாடல்களும்" என்னும் தொடர்கட்டுரை முக்கியமானது. இக்கட்டுரை மேலைத்தேய போரியல் கவிதைகளுடன் ஒப்பிட்டு ரவியின் கவிதைகளை ஆராய்கிறது. இதனைப் போன்று இளவாலை விஜயேந்திரனின் "நிறமற்றுப் போன கனவுகள்" தொகுப்புக்கு அபூசாலி எழுதிய விமரிசனமும் முக்கியமானது. அக்காலப்பகுதியில் வெளிவந்த முக்கியமான கவிதைத் தொகுப்புக்களுக்கு சரிநிகரால் முன்வைக்கப்பட்ட விமரிசனங்கள் இற்றைவரை முக்கிய விமரிசனங்களாகவே உள்ளன.

மேலைத்தேய கவிஞர்களையும் கவிதைகளையும் சரிநிகர் அறிமுகப்படுத்தியது. மொழிபெயர்ப்பினூடாக மேலைத்தேய நவீன கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய சரிநிகர் கட்டுரை வாயிலாக ஆங்கில கவிதை இலக்கியங்களை மொழிபெயர்ப்பினூடாக தமிழுக்கு அறிமுகப் படுத்தியது.

அவ்வகையில் முக்கிய கட்டுரையாக 2000-ஏப்ரல்27, மே11, காலப்பகுதில் தொடர் கட்டுரையாக வெளிவந்த யமுனா ராஜேந்திரனின் "சித்திரவதை கவிதா சாட்சியம்", பூகோதி தியாஸ், தீ ஸாரீஸ், கிம் ஸீ ஹா, ஸிட்னி சிபோ ஸெபானியா, அல்ஜீரியா பெண்கவி லைலா ஜபாலி முதலானவரை அறிமுகம் செய்தது. சரிநிகர் 1995 ஜனவரி எஸ்.மணி வண்ணனால் எழுதப்பட்ட "கலா மோகனின் பிரெஞ்சுக் கவிதைகள் புகலிட இலக்கியத்தின் புதிய பரிணாமம்" தமிழனால் பிரெஞ்சு வழி முதல்முதல் எழுதப்பட்ட கவிதைத் தொகுப்பை உள்ளடக்கம் சார்ந்த அறிமுகம் செய்கிறது. 2000.மே.25 இதழில் மு.பொ. எழுதி வெளிவந்த "சீனத்துக் கவிதைகள்" என்னும் கட்டுரை ஆழமான முறையில் சீனத்துக் கவிதைகளை தமிழுக்கு ஆழமான முறையில் அறிமுகம் செய்கிறது. எம்.கே.எம்.ஷாகிப்பின் "நாளை இன்னொரு நாடு" என்னும் மொழிபெயர்ப்பு நூல் பற்றிய விபரங்களையும் சரிநிகர் காட்சிப்படுத்தியது. இவ்வகையில் மொழிபெயர்ப்புத்துறையிலும் சரிநிகர் தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்தது எனலாம்.

1990களில் முஸ்லிம் தமிழ் உறவுநிலை சீர்குலைந்த நிலையில் கலைஞர்களின் மௌனத்தை உடைத்து இனங்களுக்கிடையில் பரஸ்பர ஐக்கியத்தை வளர்த்து இலக்கியவாயிலாக தமிழ் முஸ்லிம் உறவு நிலையைப் பலப்படுத்தும் வகையிலும் தோன்றிய சஞ்சிகையே "மூன்றாவது மனிதன்" ஆகும். படுகொலைகளாலும், முரண்பாடுகளாலும், துயரங்களாலும் நிறைந்த அநுபவவெளியைக் காட்சிப்படுத்தும் "மூன்றாவது மனிதன்" கவிதைகள் கருத்துச் சுதந்திரத்துக்கோ, மாற்றுக் கருத்துக்கோ இடமில்லாத சூழலில் போர் முனைப்பும், தேசிய விடுதலை சம்பந்தமான பிரச்சினைகளையும் அதன் தீவிரங்களையும் தர்க்கரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் அணுகியது.

நவீனயுகத்தின் முகத்துடனும் அதன் அடையாளத்துடனும் வெளிவந்த மூன்றாவது மனிதன் சரிநிகருக்குப்பின் ஈழத்தில் இறுக்கமும் செறிவுமிக்க நவீன கவிதைக்கான இயங்கியலைச் சாத்தியமாக்கியது. சமகாலப் பிரச்சினைகளையும் அதன் வலிகளையும் கவிதைகளுக்கூடாகப் பதிவு செய்த மூன்றாவது மனிதனில் ஈழத்தின் மூத்த கவிஞர்களான இக்பால், சேரன், சு.வில்வரத்தினம், சிவசேகரம், மேமன்கவி, சோலைக்கிளி, வாசுதேவன், பாறுக், கல்லூரான், மு.சடாட்சரன், அஸ்வகோஸ், அஸ்ரஃப் சிஹாப்டீன், அமுதமொழியான், ஹம்சத்வனி, உவைஸ்கனி, மஜித், சிவா.வரதராஜன், முல்லை முஸ்ரிபா, கருணாகரன், மு.பஷிர், திருமாவளவன், ஓட்டமாவடிஅறபாத், மு.பொன்னம்பலம், எஸ்.பி.கார்த்திகா, கி.ஜெயசங்கர், ஆழியாள், இப்னுஅஸிமத், முதலானவர்களுடன் தானா.விஷ்ணு, றஷ்மி, எம்.கே.எம்.ஷகீப், எம்.பௌசர், அ.றஜீசன், மு.மு.மு.பாஸீல், மனோ, எஸ்.போஸ், சித்தாந்தன், கே.முனாஸ், கருங்கொடியூர் கவிராயர், ஆகர்ஷியா, ஆண்டி, மஜித், தேவ அபிரா, எம்.வை.சிஹானாஹ், அறபாத், பஹிமாஜஹான், அகிலன், எஸ்.உமாஜிப்ரான், றஞ்சனி, கை.சரவணன், அமரதாஸ், ஏ.எம்.குர்ஷித், அனார்,பைசால், த.அகிலன், எஸ்.ஆறுமுகம், கலா, இளங்கோ, ஆழியாள், முல்லைக்கமல், என்.ஆத்மா, தவசஜிதரன், எம்.ஜி.சித்திறபீக்கா, ஜமீல், ஆமிரபாலி, இளைய அப்துல்லா, தில்லை, றிஸ்வியூ நபீல், நவாஸ்செளபி, யசோதர, மாக்ஸ் பிரபாகர், தியாகசேகரன், பெண்ணியா, கருணைரவி, பாலைநகர் ஜிப்ரி, துர்கா, ஒலுவில் அமுதன், எஸ். ஆறுமுகம், சடகோபன், பிரதீபா, அநுவை நாகராஜன், சத்தியபாலன், மாரி மகேந்திரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே.தினகரன், மு.கருணாகரன் திசேரா, அநாமிகன் போன்ற இளைய கவிஞர்களும் எழுதினர்.

ஏனைய சஞ்சிகைகளைப் போன்று மூன்றாவது மனிதன் அக்காலத்தில் வெளிவந்த கவிதைத் தொகுப்புக்கள் குறித்தான விமரிசனங்களையும் வெளியிட்டது. இவ்வகையில் ஜபாரின் "தரப்பட்ட அவகாசம்", "காலிலீலையில் மு.பொ.வின் கவிதைகள்", "அலறியின் பூமிக்கடியில் வானம்", "அஸ்வ கோஸின் வனத்தின் அழைப்பு கவிதைக்குள் ஒரு பார்வை", பைசாலின் "ஆயிரத்தோராவது வேதனையின் காலை", விடுதலை பெற்ற உணர்வுகளைக் கோரும் "சஜிதரனின் ஒளியின் மழலைகள்", "அகிலனின் பதுங்குகுழி நாட்கள்" ஒளவையின் "எல்லைக்கடத்தல்., "வ.ஐ.ச.ஜெயபாலன் "கவிதைகள் பெருந்தொகை", முதலான தொகுப்புக் களுக்கு காத்திரமான விமரிசனங்கள் நட்சத்திர செவ்விந்தியனாலும், மதுபாசினியாலும், பஹிமாஜஹா னாலும் சிவசேகரத்தாலும் முன்வைக்கப்பட்டது. சு.முரளிதரனின் "தீவகத்து ஊமைகள்", வ.ஐ.ச.ஜெய பாலனின் "உயிர்த்தெழுகிற கவிதை", றஷ்மியின் "காவு கொள்ளப்பட்ட வாழ்வு முதலாய கவிதைகள்", அஸாருதீனின் "பதக்கடச்சாக்கு", சோ.பா.வின் "நினைவுச்சுவடுகள்", சேரனின் "மீண்டும் கடலுக்கு", நவஜோதி யோகரட்னத்தின் "எனக்குள் மட்டும் உதிக்கும் சூரியன்", திருமாவளவனின் "பனி வயல்உழவு", கி.பி.அரவிந்தனின் "கனவின் மீதி", மாவை.வரோதயனின் "இன்னமும் வாழ்வேன்" முதலான தொகுப்புக்களையும் இச்சஞ்சிகை அறிமுகம்செய்தது.

அரசியல், சமூகவியல், இலக்கியம் என்னும் பன்முக தளத்தில் இயங்கிய முக்கிய இதழ்களுள் ஒன்றாக "நிகரி" விளங்குகிறது. இவ்விதழ் பா.அகிலனின் "பதுங்கு குழி நாட்கள்", சோலைக்கிளியின் "மொழியில் பனி எழுதி", ஷல்மானுல் ஹரிஸின் "எழுது கோலும் என் வெள்ளைத் தாளும்", மு.பொ.வின் "பொறியில் அகப்பட்ட தேசம்", முதலான தொகுப்புகளுக்கு முறையே ஆழமான விமரிசனங்கள் சுருதி, ரவி, ஓட்டமாவடி அறபாத், எஸ்.கே.வி., முதலானோராலும் முன்வைக்கப் பட்டன. சி.ஜெயசங்கர், மஜித், கோ.நாதன், பஸ்ஸான் முகம்மத், செழியன், கு.றஜிபன், நாவாந்துறை டானியல் ஜீவா, சுவிஸ் ரவி, ஏ.ஜி.எம்.ஸதக்கா, சிவராகவன், வில்சன் சுதாகர், வாசுதேவன், அநாமிகன் முதலானோரின் கவிதைகளும் இவ்விதழில் இடம்பெற்றது. சரிநிகரைப் போன்று "எழுதாத உன் கவிதை" தொகுப்பில் இடம்பெற்ற கப்டன் ஞானமதி, அம்புலி, மலைமகள், கி.கிருபா, சூரியநிலா முதலானோரின் கவிதைகளை மீள்பிரசுரம் செய்தது.

கிழக்கிலங்கையில் இருந்து வெளிவந்த "வியூகம்", "வயல்", "பூவரசு", "படிகள்", "களம்", "இருப்பு", "தடம்", "கீற்று", முதலான சஞ்சிகைகளும் ஈழத்து நவீன கவிதைகளுக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்தன. உமாவரதராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த வியூகம், கருத்தாழம் மிக்க ஆழமான கவிதைகளைப் பிரசவித்த இதழ்களில் ஒன்றாகும். எம்.ஏ.நுஃமான், சோலைக்கிளி, எச்.எம்.பாறூக், மி.அ.நாசர், மருதந்தன், மு.மு.மு.பாசீல், மன்சூர். ஏ.காதிர், சு.வில்வரத்தினம், மௌ.சித்தாந்தன், நற்பிட்டிமுனை பளீல், சண்முகம் சிவலிங்கம், முதலான கவிஞர்களின் கவிதைகள் பல வற்றைத் தாங்கி இவ்விதழ் வெளிவந்தது. ஆளுமைமிக்க கிழக் கிலங்கை கவிஞர்கள் பெரும்பாலோனோரைத் தாங்கி வெளிவந்த சஞ்சிகை என்னும் வகையிலும் காலப்பதிவுகளை நினைவூட்டி வெளிவந்த சஞ்சிகை என்னும் வகையிலும் இச்சஞ்சிகை முதன்மையானது.



"சாருமதி", "வாசுதேவன்" முதலானோனோரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "பூவரசு" நவீன கவிதைக்கு காத்திரமான பங்களிப் பைச் செய்தது. இச்சஞ்சிகையில் சாருமதி, வாசுதேவன், சு.வில்வரத்தினம், என்.ஆத்மா, சோலைக்கிளி, ஜபார், அபிமன்யன், முதலானோர் எழுதினர். தனிமனித உணர்வுகளை, போருக்குள் சிக்குண்ட நிகழ்கால வாழ்வியல் நிலைகளை எடுத்துரைக்கும் இக்கவிதைகள் மறுக்கப்படும் உரிமைகளையும் அவ்வுரிமைக்கான போராட்டங்களையும் எடுத்துரைக்கிறது.

கிழக்கிலங்கை முஸ்லிம் கவிஞர்களுக்கு அதிகம் களம் அமைத்துக் கொடுத்த இதழாக "முனைப்பு" காணப்படுகிறது. புதுநகரான், செஹபா, கலைதாசன் ஹக்கீம், ச.மணிசேகரன், நிலூபா நூர்டீன், நீலாவணையூர் அல்ஜ், எஸ்.கருணாகரன், ஸ்வாமி, மு.மு.மு.பாசில், மருதூர்ரே முஹம்மது தமீம், கஜனி, மருதூர் கொத்தன், டீன்கபூர், எம்.ஏ.ஹசன், அறநிலா, அக்கரைப்பற்று எம்.ஐ.றியால், மி.அ.நாசர், வெலிமடை. றபீக், ஸஹ்ர ரஹ்னவாட், வஸீகரன், நீலா. தேவராஜன், சியா, அகஸ்டீன், ஸ்வாமி, வாசுதேவன், ஏ.கே. கலீலூர் றஹீம், இப்னுஅஸூமத், சோலைக்கிளி, முதலானோர்கள் இவ்வகையில் முக்கியமானவர்கள். பொருளாதார்த்தி, சிந்தனைச்செறிவு, படிம அழகு என விரியும் இக்கவிதைகள்,வாசகன் மனதில் படிப்பனுவத்தையும் ஆழமான மனவெழுச்சியையும் உருவாக்குகின்றன முஸ்லிம் கவிஞர்கள் பலருக்கு களம் அமைத்துக் கொடுத்த இச்சஞ்சிகை அக்கால கட்டத்தில் நிகழ்ந்த அறவுணர்வு, உயிர் அச்சுறுத்தல், மனிதப்படு கொலைகள், இனவன்முறைகளைப் பெரும்பான்மையாகப் பாடுகின்றது. பழைய தலைமுறையினரை இளைய தலைமுறையினருடன் இணைத்த இதழாகவும் படைப்பிலக்கிய ஆளுமை கொண்ட முஸ்லிம் கவிஞர்கள் பலரை ஈழத்திலக்கியத்துக்கு அறிமுகப் படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழாகவும் இது காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனைப்பிரதேசத்தில் இருந்து வெளிவந்த "கீற்று" சஞ்சிகையில் பாவலர் பஸீல் காரியப்பர், மலையன்பன், மதி, ஆர்.என்.லோகேந்திரலிங்கம், கல்லூரான், மருதூர்.ஏ.அக்பர், வீ.ஆனந்தன், ஊர்வசி, மேமன்கவி, சண்முகம் சிவலிங்கம், ஹம்சத்வனி போன்றவர்கள் எழுதினர். மென்னுணர்வுத் தளத்தில் இயங்கும் இக் கவிதைகள் கருத்துச் செறிவும் பொருளாளமுமிக்கவை. கிழக்கிலங்கை கவிஞர்களை அதிகம் பிரதிநிதித்துவப் படுத்திய சஞ்சிகையாக வெளிவந்த கீற்று நிகழ்கால வாழ்வைப் பின்னணியாகக் கொண்ட கவிதைகளை அதிகம் பிரசவித்தது.

தமிழ்த் தேசியப் போராட்டம் வலுப்பெற்ற சூழலில் மட்டக் களப்பில் இருந்து வெளிவந்த "படி" சொல்லாழமிக்க, எளிமையான, நேர்த்திமிக்க கவிதைகளைப் பிரசுரித்தது. ரீ. எல். ஜவ்பர்கான், சோலைக்கிளி, என்.ஆத்மா, நட்சத்திரன் செவ்விந்தியன், இனியவள் முதலான பலர், "படி" சஞ்சிகையில் எழுதினர். உணர்ச்சி செறிவுமிக்க இக்கவிதைகளில் பெரும்பாலானவை போரியல் வாழ்வையும் அவ்வாழ்வுக்குள் அகப்பட்டு துன்புற்று நொடியும் மனித வாழ்வையும் பேசுகிறது.

சோலைக்கிளி, எச்.எம். பாறுக் முதலானோரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "இருப்பு" இன்றைய சமூக, இலக்கிய போக்கின் முரண்பாடுகளையும் கொதிப்புக்களையும் அலசிக் கொள்வதற்கும் சுதந்திரமான முறையில் கருத்துக் களையும் படைப்புக்களையும் வாசகரிடையே பரிமாறிக் கொள்வதற்கு உருவாக்கப்பட்டது. சோலைக்கிளி, எச்எம். பாறுக் என்னும் தனியிலக்கிய ஆளுமைகளின் படைப்பிலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்த இச்சஞ்சிகை ஐந்தாவது இருப்புடன் தன் பணியை நிறுத்திக் கொண்டது. தனிமனித மனத்தில் எழும் உள்ளத் துடிப்பையும் அம்மனதோடு பின்னிப் பிணைந்த சமூக இருப்பையும் உணர்வுபூர்வமாகவும் கவித்துவமான வசனநடைக் கூடாகவும் பதிவு செய்த இவ்விதழ் இலக்கியத்துக்கான மொழிபெயர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டது. இச்சஞ்சிகையில் சோலைக்கிளி, எச்.எம்.பாறுக் முதலான கவிஞர்களுடன் நற்பிட்டிமுனை பளீல், நஜிமுதீன், றஷ்மி, முகமட் அபார், கல்லூரான், எஸ்நளீம், ஓட்டமாவடி றபாஹா, மருதமுனை ஹரீஷா, எம்.ஐ.சித்தி றபீகா, எ.சி.ஜெஸ்மின் நிஹாரா, முதலானவர்களும் எழுதினர்.

1990களில் யெம்.பௌஸரை ஆசிரியராகவும் கருங்கொடியூர் கவிராயர், யெச்.தாலிப் முதலானோரை உதவி ஆசிரியராகவும் கொண்டு அக்கரைப்பற்றில் இருந்து வெளிவந்த "தடம்" ஈழத்து இலக்கியத்துக்கு கணிசமான பங்களிப்பைச் செய்த இதழ்களில் ஒன்றாகும். வளமான இலக்கியத்தை வளர்க்கும் வண்ணமும் ஆரோக்கியமான இலக்கியச் சூழலை உருவாக்கும் முகமாகவும் வெளிவந்த இச்சஞ்சிகை காலத்தில் நின்று நிலைபெறக்கூடிய நல்ல படைப்புக்களைத் தந்த இதழாகும். இச்சஞ்சிகையில் ஈழக்கவி, லாவண்ணா லதீப், வெளிமடை ரபீக், மருதமுனை எம்.எச்.ஏ.கரீம், எம்.எஸ்.முனாப், அன்புடீன், யூ.எல்.முகமட் அபார், யெம்.பௌஸர், கருங்கொடியூர் கவிராயர், டீன் கபூர் போன்றோர் எழுதினர். மற்றும் இச்சஞ்சிகையில் கணையாழி இதழில் இருந்து சசீதரன் போன்றோரின் கவிதைகளும் மீள்பிரசுரம் செய்யப் பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்த "கொந்தளிப்பு", "கொழுந்து" முதலான சஞ்சிகைகள் மலையக மக்களின் நிகழ்கால இருப்பையும் அவர்கள் எதிர்நோக்கிய வாழ்வியல் இன்னல்களையும் பதிவு செய்த இதழ்களுள் முக்கியமானவையாகும். இச்சிறு சஞ்சிகையில் குறிஞ்சித் தென்னவன், கே.பொன்னன், கதிரேசன், கருணானந்தம், உ.நித்தியானந்தன், ஸ்ரீதேவப்பிரியா, பி.ச.சதீஸ், இராஜலஷ்மி, செ.பரமேஸ்வரி, எஸ்.ஸ்ரீதேவி, சண், தங்கம், குமார ராமநாதன், புறூக்சைட் எஸ்.அருணன், ஜெலஷ்மி தங்கவேல், வெளிமடை ரபீக், மாத்தளை வடிவேலன், எஸ். சந்திரசேகர், ச.மணிசேகரன், எம்.எஸ்.சந்திரசேகரன், முதலானோரும் எழுதினர். இதேயபோன்று கொழுந்து சஞ்சிகையில் சு.முரளிதரன், மல்லிகை சி.குமார், தாரா பாரதி, நித்தியா, கல்யாணி, பூநகர் கவிப்பிரியா, குமரகுருபரன், முதலானோர் எழுதினர்.

மலையகத்தில் இருந்து வெளிவந்த "குன்றின் குரல்" மக்களின் உணர்வுகளை கவிதையாகத் தாங்கி வெளிவந்த இதழ்களுள் முக்கியமானதாகும். இராகலை. டியநிலை ஆசிர், சுப்ராமைந்தன், வி.ஆர்.ஜே.மதிவாணன், குறிஞ்சித்தென்னவன், க.ப.லிங்கதாசன், செல்வி பாலரஞ்சனி சர்மா, இராகலை பன்னீர், மணிசேகரன், அக்குராணை இளைய அப்துல்லாஹ், லிந்துலை சி.சார்ள்ஸ் முதலானோரும் கவிதைகளை எழுதினர். இச்சஞ்சிகையில் கி.பி. அரவிந்தனின் "முகம் கொள்" கவிதைத் தொகுப்புக்கான விமர்சனங்களும் வெளிவந்துள்ளன.

எல்.சாந்திக்குமாரை ஆசிரியராகக் கொண்டு கண்டியிலிருந்து வெளிவந்த "தீர்த்தக்கரை" சமவுடமைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்தது. மலையகத்தின் நவீன கவிதைக்கு களம் அமைத்துக் கொடுத்து வெளிவந்த இவ்விதழில் கல்வயல் வே.குமாரசாமி, க.ஆதவன், முருகையன், மலையாள மோகன், சாருமதி, ரம்பொட எஸ். பரமேஸ், ஞ.விஜயலட்சுமி, த.பேரின்பம், மு.சீதாலட்சுமி முதலானோர் எழுதினார்.

மலையகத்தில் இருந்து கவித்துவமும் கலைத்துவமும் நிறைந்த காத்திரமான கவிதைகளைப் படைத்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதழ்களுள் முதன்மையான சஞ்சிகையாக "நந்தலாலா"வைக் கூறலாம். சி.வி. வேலுப்பிள்ளை, ஜேம்ஸ் விக்கர், வ.ஐ.ச.ஜெயபாலன், நட்சத்திர செவ்விந்தியன், சுபா, மதுரகவி, வாசுவேன், சுந்தரம், சு.முரளிதரன், பவானி, பிஷ்மா, மேமன் கவி முதலான கவிஞர்களின் கவிதைகள் நந்தலாலாவில் வெளிவந்தன. மார்ச் 5 - மே 5,2000 ஆண்டு இதழில் கவிஞர் சாருமதி பற்றிய நினைவுக் குறிப்புக்களை வெளியிட்ட நந்தலாலா அதே இதழில் சி.சிவசேகரத்தின் "வடலி" கவிதைத் தொகுப்புக்கான நினைவுக் குறிப்பையும் வெளியிட்டது. மலையகத்தி லிருந்து வெளிவந்த சஞ்சிகைகளுக்குள் நேர்த்தியான கவிதைகளைப் பிரசுரித்த இதழ் நந்தலாலா என்றால் அது மிகை யில்லை. மற்றும் இக்காலப்பகுதியில் வெளிவந்த தாகம், தோழி, விளக்கு, செந்தழல், நங்கை சுதந்திரப் பறவைகள், மருதாணி முதலான பெண் சஞ்சிகைகளும் ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சியில் அதிகப் பங்காற்றின. குறிப்பாக பெண்கள் கவிதையில் அதிகளவு ஆர்வம் காட்டவும் கவிதை முயற்சியில் ஈடுபடவும் இச்சஞ்சிகைகள் உழைத்தன.

ஈழத்து கவிஞர்களது நவீனகவிதை இலக்கி யத்துக்கும் காலம்தோறும் அதன் பன்முக வளர்ச்சிக் கும் சிறுசஞ்சிகைகள் ஆற்றிய பங்கு முக்கியத்துவ மானது. சமூகப் பிரக்ஞைமிக்க நவீனகவிதைகளைப் பிரசுரித்த இவ்விதழ்கள் பரந்த மட்டத்தில் இலக்கிய ஆர்வமிக்க துடிப்புள்ள இளம்கவிஞர்கள் நவீன கவிதை இலக்கியத்துக்குள் நுழைவதற்கும் செம்மையான, நுட்பமான கவிதைமொழி தமிழில் தோன்றுவதற்கும் சிறுசஞ்சிகைகள் களம் அமைத்துக் கொடுத்தன. •

மரணத்தொழிற்சாலை

மரணதொழிற்சாலை
ஒன்றில்
பிண உற்பத்திக்களுக்காய்
திருடியிருந்தார்கள்
எங்கள் நிர்வாணங்களை...

தொலை தூர
இரவொன்றின் கனவு
தேய்ந்தழிந்து போனது...

உலோகம் துப்பிய
எச்சியாலும்...
நிரப்பப்படாத பசியாலும்
எங்கள் மரணத்தை
நிகழ்த்தியிருந்தார்கள்

மரணத்தை உற்பத்தி
செய்யும் தொழிற்சாலையின்
மனிதர்கள்
வன்மத்தின் புன்னகையை
சிந்தியபடி
யாருமற்ற மயான
வெளியில் நடந்தார்கள்...
கொடூர மிருகமொன்றின்
கடவாய்களில்



வழியும் குருதியுடன்...
மரணங்கள்
தொடர்ந்தும் உற்பத்தி
செய்யப்படுகின்றன...
ஒவ்வொரு அகாலத்திலும்...

மரண உயிருடன்
அலைந்து கொண்டேயிருக்கிறது
உயிரின்றி பின்
தொடரும்
ஒரு நிழலைப்போல...

– யாத்ரிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்படம் -பாத்திமன்





த.கலாமணி

கவித்துவச் சொல்லாடலும் புனைவும் : இ.சு.முரளிதரனின் "கடவுளின் கைபேசி எண்" சிறுகதைத்தொகுதியை முன்னிறுத்தி...

கவிஞர் ஒருவரின் புனைவு எவ்வாறிருக்குமென்பதை அடையாளப்படுத்தும் சிறுகதைத் தொகுதியாக இ.சு.முரளிதரன் அவர்களின் 'கடவுளின் கைபேசி எண்' என்ற நூல் வெளிவந்துள்ளது.

அண்மைக் காலங்களில் இளந் தலைமுறையினருள் இ.சு.முரளிதரன் வாசகர்களிடையே மிகுந்த கவனத்தைப் பெற்றுவருபவர். தமது நான்கு கவிதைத்தொகுதிகளினூடாக, தமது இலக்கியப் பரிச்சயத்தையும் ஆளுமையையும் வெளிப் படுத்தியுள்ள இவர், சினிமா குறித்த தமது விமர்சனப் பார்வையையும் பதிவு செய்து வருகிறார். இதனிடையே , ஏறத்தாழ கடந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் எழுதிய சிறுகதைகளில் பன்னிரு சிறுகதைகளைத் தேர்ந்து , ஜீவநதி வெளியீடாக, **'கடவுளின் கை பேசி'** என்ற நூலாக இ.சு.முரளிதரன் தந்துள்ளார்.

இந்நூலிலுள்ள தமது சிறுகதைகளின் 'பேசு பொருளை' தெளிவாகவே என்னுரையில் இ.சு.முரளிதரன் குறிப்பிட்டுள்ளார். "வன்மத்தின் வாசனை சுவறிய நாட்களின் அனுபவங்களை இக்கதையில் வெளிப்படுத்த முனைந்துள்ளேன்" என அவர் குறிப்பிடுவதனை அவரின் சிறுகதைகள் நிதர்சனமாக்கியுள்ளன. அவர் குறிப்பிடும். இந்த அனுபவங்களை பேசு பொருளாக்கும்போது எழக்கூடிய சிக்கல்களே அவற்றைப் 'பேசாப் பொருளாக்கி' அச் சிறுகதைகளுக்கான வடிவங்களையும் தீர்மானித்திருக்கவேண்டும். இதனை, "கதைகளுக்கான வடிவங்களை அவ்வக் கதைகளே அழைத்து வந்தன" என்ற அவரின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியரி செ.யோகராசா அவர்கள், இந்நூலிலுள்ள சிறுகதைகளை பின் நவீனத்துவப்பாணி, தொன்மப்பயன்பாடு, யதார்த்த நோக்கு என்பன கொண்ட மூன்று வகைமைகளுள் அடக்கலாம் எனக்குறிப்பிடுகிறார். இம்மூன்று வகைமைகளுள் அடங்கும் சிறுகதைகளை அவ்வகைமைகளுக்குரிய கோட்பாட்டு அடிப்படைகளில் நோக்குதல் பொருத்தமானது.

சிறுகதை இலக்கியத்திற்கென அமைந்த மரபுகளின் அடியாக, சிறுகதை இலக்கணத்திற்கு அமைவாக எழுதப்பட்ட சிறுகதைகள் யதார்த்த நோக்குக்கொண்ட சிறுகதைகளாகும். இவை சிறுகச் சொல்லி உயர்பட்சத் தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட சம்பவத்தின் அடியாகத் தோன்றும் உணர்வு நிலையையோ அல்லது ஒரு குறித்த பாத்திரத்தின் மனோநிலை தொடர்பான அதன் இயக்கத்தையோ இலக்கிய உணர்வுடன் கலாபூர்வமாகச் சித்திரிப்பனவாக சிறுகதைகள் விளங்கவேண்டும், சிறுகதையின் அடிப்படை இலக்கணப்பிரகாரம், எந்நோக்கத்திற்காக ஒரு சிறுகதை எழுதப்படுகிறதோ அதன்பொருட்டே அக்கதையின் எல்லா விடயங்களும் அமைந்திருப்பதான ஒருமை விளைவை (unity of effect) ஏற்படுத்துவதாக இருப்பதோடு , அச்சிறுகதையை அடையாளப்படுத்தும் வகையில் தாக்க முழுமையைப் பிரதிபலிப்பதாக அச்சிறுகதையின் முடிப்பிலுள்ள திருப்பம் (twist) அமையவும் வேண்டும்,

சிறுகதை இலக்கணம் குறித்த புரிதலுடனேயே இந்நூலிலுள்ள யதார்த்த நோக்குச் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன எனலாம். இவ்வகையில், **டுள்ளா, வேண்டுதல், கழிவோயில்** ஆகிய சிறுகதைகள் ஒருமை விளைவை வெளிப்படுத்துகின்றன. டுள்ளா என்ற பாத்திரப் படைப்பின் சித்திரிப்பானது டுள்ளா மீது வாசகரைக் கழிவிரக்கம் கொள்ளச் செய்து, டுள்ளாவின் மகளுக்கு என்ன நடந்திருக்கும் என்று அறியும் ஆவலையும் தொற்றச்செய்துள்ளது. ஏத்தனையோ கேள்விகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டுள்ளாவின் மனசை மட்டுமல்ல வாசகரின் உள்ளத்தையும் அரித்துக் கொண்டிருக்கும் நிலையில், "டுள்ளான்ரை கேள்வியளுக்கு பதில் சொல்ல வேண்டிய தேவை இண்டைக்கு ஆருக்குமே இல்லை டுள்ளா செத்து ஆறு வருஷமாச்சு" என்று சிறுகதையை முடிப்பது, 'டுள்ளா' என்ற சிறுகதையின் நோக்கில் தாக்கமுழுமையைப் பிரதிபலிக்கும் திருப்பமாகவே அமைந்துவிடுகிறது. டுள்ளாவின் வாழ்க்கை இன்றைய சமூக யதார்த்தத்தின் ஒரு 'பதச்சோறு' என்பதை ஆழமாகவே இச்சிறுகதை வாசகர் மனங்களில் பதிக்கிறது. அதேவேளை, குண்டு வீசி உயிர்களைப் பறித்தெடுத்த அதே உலங்கு வானூர்த்தி , தீர்த்தத் திருவிழாவின்போது வானத்திலிருந்து முருகனுக்குப் பூச்சொரிவதற்குப் பயன்படுத்தப்படும் சமூக முரண் நிலையை 'வேண்டுதல்' என்ற சிறுகதை அழகாகச் சித்திரிக்கின்றது. காலத்துக்கேற்ற 'தாளம் பேடும்' தில்லையரின் உருவப்படத்துக்குக் கழிவோயில் ஊற்றப்பட்ட செய்தியைச் சித்திரிப்பதனூடாக எமது சமூகத்தின் இன்றைய நிலையை 'கழிவோயில்' என்ற சிறுகதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அடுத்து, தொன்மப்பயன்பாடு கொண்ட கதைகள் கவனத்தைப் பெறுகின்றன. இவ்வகையில் **துன்பியல் நாயகன், கவந்தம், கைமாற்றத்தகாத காசோலை, பகிர்வு** ஆகிய நான்கு சிறுகதைகளும் தொன்மக் கதைகளாக அல்லது தொன்மங்களைப் பயன்படுத்தும் கதைகளாக அமைந்துள்ளன. இக்கதைகள் தொன்மங்களுடன் நூலாசிரியருக்கு உள்ள பரிச்சயத்தைத்த தெளிவாகக் காட்டுகின்றன.

தொன்மம் என்பது ஓரினத்து மக்களிடையே வழங்கும் பழங்கதைகள் ஆகும். இலக்கியப் படைப்பாளர்கள் தாம் படைக்கும் மாந்தர்களின் சிக்கல்களைச் சித்திரிக்கவும் அச்சிக்கல் களுக்குத் தீர்வு வழங்கவும் தம் படைப்புகளில் தொன்மங்களைக் கையாளுகின்றனர் . மனித ஆளுமையின் தன்மையையும் அதன் அமைப்பையும் ஆராய்ந்த யுங் (Jung) எனும் உளவியலார் , தொன்மத்திற்கும் சிறப்பிடம் வழங்கியுள்ளார். ஒரு கவிஞன் தனது அனுபவத்தைப் பொருத்தமாக வெளிப்படுத்துவதற்கு தொன்மத்தை நாடுகிறான் என்பது யுங்கின் கருத்தாகும் தொன்மங்கள் தொடர்பாக "மூலப்படிவங்கள்" (Archetypes) என்ற பதத்தையும் யுங் அறிமுகம் செய்தார். ஓரினத்து மாந்தரின் கூட்டு நனவிலியில் (Collective unconscious) அவ்வினத்துப் பழங்கதைகள்(myths), பழக்க வழக்கங்கள் , நம்பிக்கைகள் போன்றவை படிந்துள்ளன என்றும் இவற்றை "மூலப் படிவங்கள்" என அழைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான மூலப்படிவங்கள் புதிய இலக்கியப் படைப்புகளுக்குக் கட்டமைப்பை வழங்கமுடியும்.அதே வேளை, குறித்த பாத்திரங்களின் உணர்ச்சிச் சுழிப்புக்களை, மனவுணர்வுகளை, சிக்கல்களைச் சித்திரிப்பதற்கான உத்தியாகவும் பயன்படுத்தப்பட முடியும். இந்திய மரபில் இராமாயணமும் மகாபாரதமும் மக்கள் நன்கு அறிந்த பழங்கதைகள். இதனால் தமது படைப்புக்களில் இத்தொன்மங்களை எழுத்தாளர் பலரும் எடுத்தாண்டுள்ளனர்.

மாந்தர் தம் சிக்கல்களைத் தொன்மங் களினூடாக படைப்பாளர்கள் விளக்க முற்படுகின்ற அதேவேளை, இன்னும் சில எழுத்தாளர்கள் தொன்மங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி புதிய விளக்கங்களைத் தரும்வகையில் மீள்படைப்பாக்கம் செய்கின்றனர். புதுமைப்பித்தனின் **"சாபவிமோசனம்"** , ரகுநாதனின் **"வென்றிலன் என்றபோதும்"**, தி.ஜான கிராமனின் **"இராவணன்"** போன்ற சிறுகதைகள் இவ்வகையின.

ஆனால், இ.சு.முரளிதரன் எழுதியுள்ள தொன்மப் பயன்பாட்டுச் சிறுகதைகள், மாந்தர் தம் சிக்கல்களை விளக்குவதற்குத் தொன்மங்களைப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தொன்மங்களின் நீட்சிகளாகவும் அமைகின்றன. தொன்மங்களில் காணப்படும் மௌன நிலைகளை உடைத்து வியாக்கி யானஞ் செய்யும் அதே வேளை, எமது நடப்பியல் வாழ்வை உரைத்துப் பார்க்கும் வகையில் இந்த நீட்சிகள் அமைந்து விடுவது இக்கதைகளுக்குப் புதிய பரிமாணத்தை வழங்குகின்றது. எமது நடப்பியல் வாழ்வின் யதார்த்தமும் அதன் அரசியலும் "பேசாப் பொருளாக" விளங்கும் நிலையில் இ.சு.முரளிதரன் தொன்மங்களினூடே அரசியல் விமர்சனம் செய்கிறார்.

இராம-இராவண யுத்தத்தின் பின்னரான கதையாக அமைவது துன்பியல் நாயகன் எனும் சிறுகதை. இச்சிறுகதையில் தொன்மக் கதை நீட்சியாக அமையும் சித்திரிப்பு இங்கு உள்ள நடப்பியல் நிலைமைகளைக் குறித்துச் சிந்திக்கச் செய்கிறது. இராமன், இராவணன், சீதை, சூர்ப்பனகை, மகரிஷிகள், இலக்குவன், வீடணன், அங்கதன் போன்ற மூலப் படிவங்கள் யாவும் எவருக்கான உருவகங்கள் என்று வாசக மனம் ஆராய்வில் ஈடுபடுகிறது. வாசகர்களின் ஆராய்வைத் தூண்டும் வகையில் சிறுகதை வரிகள் அமைந்து விடுவது இச்சிறுகதைக்கு மேலும் மெருகூட்டுகின்றது. "அரக்கர் குலத்தின் பலவீனங் களை **வீடணன்** பட்டியலிட்டுச் சமர்ப்பித்தான்", "சீதையை உரிமை கொள்ளும் தாகம் **சூர்ப்பனகை**யால் உருப்போடப்பட்டது", **"இலக்குவன்** மீது பிரமாஸ்திரத் தாக்குதல் நிகழ்ந்த காலத்து அயர்ந்து நெடிதுயிர்த்தான்" என்பன போன்ற வாசகங்கள் வாசகரின் ஆராய்வுக்கு உதவிக் குறிப்புகளாக (Hints) அமைகின்றன.

தொன்மச் சிறுகதைகளை எழுதுகின்ற வேளையிலும் சிறுகதை இலக்கணம் மீறப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் இ. சு. முரளிதரன் கவனம் செலுத்துபவராகவே உள்ளார். சிறுகதையில் கூறப்படும் விடயங்கள் யாவும் அக்கதையின் நோக்கத்தின் பொருட்டு **ஒருமை விளைவை** ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கதையின் முடிப்பிலுள்ள **திருப்பமும்** கவனிப்புக்குரியதாகின்றது. அவதாரபுருஷனாகச் சித்திரிக்கப்படும் இராமன் பற்றிய நூலாசிரியரின் மதிப்பீடு பின்வருமாறு அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துன்பியல் நாயகனிடமிருந்து மாரீச தந்திரத்தைக் கற்றுக் கொண்டோர் நகல் மான்களை உலா விட்டுள்ளனர். இராமன் கூடு கண்ட பூனை! மற்றொரு தடவை மயங்கப் போவதில்லை. பாவம் பாமர மாந்தர். மறுபடியும் மறுபடியும் பொய் மானுக்குப் பின்னால் பயணிக்கிறார்கள்"

இதே போலவே, **"கவந்தம்"** என்ற சிறுகதையும் தொன்மக் கதை நீட்சியாகவே சித்திரிக்கப்படுகின்றது. வைகை ஆறு பெருகியபோது அணை கட்ட வருமாறு விடுக்கும் அழைப்பில் தொடங்கும் கதை, அந்நிகழ்வின் காலகட்டத்தைத் தாண்டி மேலும் இரு காலகட்ட நிகழ்வுகளாக விரிகிறது. இச்சிறுகதையிலும் அரிமர்த்தனபாண்டியன், திருவாதவூரன், பரமன், புரவிக் கொள்வனவு, கழுத்து நஞ்சு, வரியாடை போன்ற மூலப் படிவங்கள் மறைபொருளுணர்த்தப் பயன்படு கின்றன. "மதுரைக் குடிகள்" மீட்பரான அரிமர்த்தன பாண்டியனைச் சாத்தானாகவும் கருதிக் கலங்கி மன முடக்கத்திற்கு உள்ளாகும் நிலை" நூலாசிரியரால் நியாயப்படுத்தப்படுகிறது. ஈற்றில் பேருந்தில் பயணித்த பிச்சாடனின் திருவோட்டினைக் "கிரிபத்தும் மஸ்கற்றும்" நிரப்பின எனக் கூறி, "அந்தத் திருவோட்டின் விளிம்பில் என்றோ விழுந்த பிட்டின் துகளொன்று ஒட்டியிருப்பது போன்ற பிரமை தோன்றியது" என எழுதிச் செல்லும் இறுதி வரி கடந்த காலத்தை நினைவில் மீட்டுகிறது.

முன்னைய சிறுகதைகள் போலன்றிப் "பகிர்வு" எனும் சிறுகதையில் இ.சு.முரளிதரன் சற்று வெளிப் பட்டு நிற்பதைக் காண முடிகிறது. மாங்கனிக் கதைக் கூடாக இலங்கை அரசியலை நூலாசிரியர் விமர்சனம் செய்கிறார். "இலங்கையும் மாம்பழ வடிவந்தானே, பூலோகத்தில் விழுந்த கனி இந்து சமுத்திரத்தில் தீவாக உருவாகியிருக்குமோ?" என வெளிப்படையாகவே வினா எழுப்பி, "என்ன இருந்தாலும் ஒருவரே அனுபவிக்க நினைக் கிறது சகோதரத்துவமில்லை. பகிர்ந்து கொடுக்கும் எண்ணம் ஏன் பரம்பொருளுக்கு வரவே யில்லை?" என்ற கேள்வியுடன் சிறுகதையை நிறைவு செய்கிறார்.



ஒளிப்படம் -யாத்ரிகன்

இ.சு.முரளிதரன்

இறுதியாக, **"புரிதல்கள் அனைத்தும் அவரவர்க்கே உரியன"** என்ற தமது கருத்தை நிலை நாட்ட, காமதேனுப் பசுவை உரிமம் கொள்ள விழையும் கதைசொல்லியின் அவா குறித்த சித்திரிப்பைக் **"கைமாற்றத்தகாத காசோலை"** என்ற சிறுகதையில் இ.சு.முரளிதரன் நிகழ்த்துகிறார். சிறுகதையின் தலைப்பின் பொருத்தப்பாடு கதை நிறைவில் திருப்தியைத் தருகிறது.

மொத்தத்தில், தொன்மங்களைப் பயன் படுத்தும் நூலாசிரியரின் ஆற்றலை நன்கு வெளிப் படுத்துவனவாகவே இந்நான்கு தொன்மப் பயன் பாட்டுக் கதைகளும் அமைந்துள்ளன. ஒரு சமூகம் தனது மூல உற்பவம் பற்றிய புனைவுகளுடன் தொன்மங் களுடனேயே தொடங்குவது. ஒவ்வொரு சமூகத்தின் அறிதல் முறைகளையும் புலன் செயல் களையும் இந்தத் தொன்மங்களும் புனைவுகளுமே வடிவமைக்கின்றன. எனவே, சமூக உணர்வுகளையும் மாற்றங்களையும் வெளிப்படுத்துவதற்கான உத்தியாகத் தொன்மங்களைப் பயன்படுத்த முடியும் என்பதையும் அது காலத்தின் தேவையுமாகும் என்பதையும் இ.சு.முரளிதரன் எழுதிய நான்கு கதைகளும் நன்கு புலப்படுத்துகின்றன. இத்தொன்மக் கதைகளில் காலமும் களனும் நீட்சி பெறுவது சிறப்பம்சமாகும்.

யதார்த்தச் சிறுகதைகள், தொன்மப் பயன் பாட்டுச் சிறுகதைகள் என்பவற்றோடு, பின் நவீனத்துவப் பாணிச் சிறுகதைகளையும் நூலாசிரியரால் எழுத முடியும் என்பதன் வெளிப்பாடாகவே இந்நூலிலுள்ள ஏனைய ஐந்து சிறுகதைகளும் அமைந்துள்ளன. இச்சிறுகதைகளின் போக்கை விளங்கிக் கொள்வதற்குப் பின் நவீனத்துவம் பற்றிய விளக்கம் அவசியமாகின்றது.

உலகியல் மாற்றங்களின் போக்கை ஒட்டிய தாகக் காலத்துக்குக் காலம் இலக்கியத்திலும் புதிய கருத்தியல்களும் வடிவ மாற்றங்களும் இடம்பெறுவது இயல்பானது. இதே போல, இவ்வகையான கருத்தியல் களின் செல்வாக்கு தமிழ் இலக்கியத் திலும் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது. யதார்த்தவாதம், நவீனத்துவம் என்ற வரிசையில் எழுபதுகளில் பின் நவீனத்துவம் அமெரிக்காவில் ஒரு புதிய கருத்தியலாகத் தோன்றியபோது, தொண்ணூறுகளில் தமிழ் நாட்டி லும் இக்கருத்தியலின் தாக்கம் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது.

பின் நவீனத்துவக் கருத்தியல் குறித்த விளக்கங்கள் ஒன்றுக் கொன்று முரணாக அமைந்த காரணத்தால், பின் நவீனத்துவத் துக்கான தெளிவான வரை யறையைத் தேடுவதில் சிரமங் களை எதிர்நோக்க வேண்டி யுள்ளது. பின் நவீனத்துவக் கருத்தியல் ஆதரவாளர்கள் அதனை நவீனத்துவத்தின் தொடர்ச்சி என்றும் நவீனத்துவத்தின் நிராகரிப்பு என்றும் நவீனத்துவத்தின் நீட்சி என்றும் நவீனத்துவத்தின் பின் நிகழ்வு என்றும் நவீனத்துவத்தின் மறுபிறப்பு என்றும் நவீனத்துவத்தின் அடுத்த கட்டம் என்றும் நவீனத்துவத்தின் இறப்பு என்றும் பலவாறாக எடுத்துரைத்தனர். எனினும், நவீனத்து வத்தின் தொடர்ச்சியாகவும் உச்சமாகவும் ஒரு சில கூறுகளின் நீட்சியாகவும் சிலவற்றின் மறுப்பாகவும் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனத்துவம் இன்று அடையாளம் காணப்படுகிறது.

பின் நவீனத்துவமானது அறிவு என்பது உண்மையைத் தேடும் முயற்சி என்பதை மறுத்து, அறிவு என்பது ஒரு சமூக நடைமுறை எனக் கொள்கிறது. இதனால் அறிவின் நிரந்தரத் தன்மை, சர்வவியாபகத் தன்மை போன்றவற்றை அது மறுதலிக்கின்றது. பின் நவீனத்துவக் கருத்தியலின் முன்னோடிகளாகக் குறிப்பிடப்படும் டெரிடா, ஃபூக்கோ, பார்த், லக்கான், தெலூஸ், கத்தாரி, லியோடார்ட், ஹசன், ஜேம்சன் ஆகியோரின் கருத்தியல்களே பின் நவீனத்துவச் சிந்தனைகளைக் கட்டமைத்தன. குறிப்பாக, **டெரிடாவின்** கட்டவிழ்ப்புச் சிந்தனையான **மையத்தைத் தகர்த்தல்**, அதிகாரவயப்பட்ட கருத்தாடலுக்கு எதிராக மாற்றுக் கருத்தாடல் ஒன்று அவசியம் என்பதை வலியுறுத்தும் **ஃபூக்கோவின் கருத்தாடல்** (Discourse), "பிரதியினூடாக மொழி தான் பேசுகிறதேயொழிய ஆசிரியன் அல்லன்" என்ற விளக்கத்தைத் தருவதாகப் **பார்த்** குறிப்பிடும் **"ஆசிரியனின் மரணம்"** ஆகிய கருத்தியல்களின் அடிப்படையிலான அறிதல் முறையே பின் நவீனத்துவ மாகும்.

மேலும், பின் நவீனத்துவம் பற்றிய அறிதலின் அடிப்படையில், சிதறுண்டு போதல் (Fragmentation), சிறுகுழுக்கள், விலகல், வேறுபாடு, பன்மைத் தன்மை, இசைவின்மை, இரு பொருள் தன்மை (Ambiguity), துண்டு துண்டான அடையாளங்கள், அதிகார ஆதாரங்களைக் (Authority) கேள்விக்குள்ளாக்குதல், மொத்தத்துவ முயற்சிகளை (Universality) மறுத்தல், மறைவான தாக்கங்கள் போன்றனவே பின் நவீனத் துவப் படைப்புகளின் கருப்பொருள்களாய் அமை கின்றன.

இதே வேளை, பின் நவீனத்துவம் தன்னை விளக்கும் வகையில் பயன்படுத்துகின்ற கலைச் சொற்கள் பற்றிய தெளிவு பின் நவீனத்துவப் படைப் பாளிகளுக்கு அவசியம். புனைவு அல்லது கற்பிதம், கட்டவிழ்ப்பு, பிரதி, குறிப்பான், குறி, குறிப்பீடு, கருத்தாடல், ஆசிரியனின் மரணம் போன்ற கலைச் சொற்கள் பின் நவீனத்துவக் கருத்தியல் சார்ந்தவை.

இவ்வாறான, பின் நவீனத்துவக் கருத்தியலின் அடிப்படையில் நோக்கும்போது, பின் நவீனத்துவப் படைப்புகள் என அடையாளப்படுத்தப்படும் தமிழ்ப் படைப்புகள் பொதுவாக மொழி மரபு, இலக்கிய மரபு, இலக்கண மரபு என்பவற்றைக் கவனத்திற் கொள்ளாத சொல்லாடல்களாகவே விளங்குகின்றன. பனுவல்கள் புழக்கமற்ற சொற்களை மிகுதியாகக் கொண்டு காணப்படுகின்றன. படிமங்களும் மாயக் காட்சிகளும் தர்க்கத்திற்கு ஒவ்வாத வர்ணனைகளும் கனவுக் காட்சிகளும் நிறைந்தனவாய்ப் பின் நவீனத்துவப் பனுவல்கள் அமையும்போது, சராசரி வாசகரால் இப்பனுவல்களுள் நுழைந்து, அவற்றின் பொருண்மை களைக் காண முடிவதில்லை. படைப்பாளியின் நோக்கில் அப்பனுவல்கள் பொருண்மை கொண்டவை யாக இருக்கலாம். ஆனால், அப்பொருண்மையைத் தேடியறியும் வழி தான் சராசரி வாசகனுக்குத் தெரிவதில்லை. கவித்துவச் சொல்லாடல் கொண்டு, தர்க்கமற்ற (illogic) புனைவாகப் பின் நவீனத்துவப் பனுவல்கள் படைக்கப்படும்போது, அப்பனுவல்கள் இருண்மை கொண்டனவாகவே சராசரி வாசகரால் உணரப்படுகின்றன. உடனடியாகச் செரிக்க முடியாத சொற்களாலும் தர்க்க நியாயமற்ற வர்ணனைகளாலும் பனுவல்கள் அமையும்போது வாசகரின் வாசிப்பு ஓட்டம் தடைப்படவும் செய்கிறது.

தமிழில் வெளிவந்த பின் நவீனத்துவப் படைப்புகள் என அடையாளப்படுத்தப்படும் பனுவல்கள் பற்றிய பொதுவான கருத்துகளுடன் இ. சு. முரளிதரன் எழுதிய ஐந்து பின் நவீனத்துவப் பாணிச் சிறுகதைகளையும் அணுகுவதே பொருத்தமானது. ஏனெனில், தமிழில் வெளிவந்த பின் நவீனத்துவப் பாணிப் பனுவல்கள் பற்றி மேலே சொல்லப்பட்ட பல கருத்துகள் இச்சிறுகதைகளுக்கும் பொருந்துகின்றன.

முதலாவதாக, பின் நவீனத்துவச் சிறுகதைகள் என அடையாளப்படுத்தப்படும் சிறுகதைகளில் காணப்படும் வடிவச் சிதைவு இ. சு. முரளிதரனின் பின் நவீனத்துவப் பாணிச் சிறுகதைகளிலும் காணப்படு கின்றது. இவ்வகையில் கைபேசிக் குறுஞ்செய்திகளைக் கொண்டு **"கடவுளின் கைபேசி எண்"** என்ற சிறுகதை அமைந்துள்ளது. கட்டுருவாக்கத் தத்துவத்தின் (Constructivism) அடிப்படையில் அமைந்த **"5E மாதிரிகை"** யிலான பாடக் குறிப்பு எழுதும் முறையில் **"பாடக் குறிப்பு"** என்ற சிறுகதை எழுதப்பட்டுள்ளது. இதே போல, **"சிறுத்தொண்டரின் சேவை நலன் பாராட்டு"** எனும் சிறுகதை வாழ்த்துச் செய்திகளுடன் கூடிய பாராட்டு விழா மலராக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பின் நவீனத்துவப் பனுவல்களில் பொதுவாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுவதான, புழக்கத்தி லில்லாத சொற்களும் மாயக் காட்சிகளும் தர்க்கத்திற்கு ஒவ்வாத வர்ணனைகளும்- இ.சு. முரளிதரனின் பின் நவீனத்துவப் பாணிச் சிறுகதைகளிலும் விரவிக் காணப்படுகின்றன.

"நத்தைகள் புருவங்களை உயர்த்தி உணர் கொம்புகளால் உழுது களஞ்சாச் செடிகளைப் பயிரிட்டன"

"பொத்தி வைத்த கைக்குள் சுவறிய இருளில் சிற்றொளி நிர்வாணமாக மலங்கழித்துக் கொண்டி ருந்தது"

"நடுகற்களின் அருகே படுத்திருந்த கரும்பூனை செரிமானச் சிக்கலைச் சீர்செய்யப் புல்லைத் தின்று தொன்மத் துறவியின் காலடியில் வாந்தி எடுத்தது"

இவை **"மீசை முறுக்கிய மின்மினிகள்"** என்ற சிறுகதையில் வரும் வர்ணனைகளாகும். **"மித்திர பேத நுட்பம்"**, **"சுகிர்லாபகாலத்து ஒற்றாடல்"**, **"செவியறிவுறு புறக்கணிவெண்கொற்றம்"** போன்றவை **"பாடக் குறிப்பு"** எனும் சிறுகதையில் இடம்பெறும் "புழக்கமற்ற" வார்த்தைப் பிரயோகங்களாகும். **"AB⁺ குருதியும் நீல நரியும்"** எனும் சிறுகதையின் பொருண்மையானது சராசரி வாசகருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடுமந்திரமாகவே உள்ளது. **"அதிகார நுண்ண ரசியலை அறிய வழிகாட்டும் உயர்கல்வி நிறுவன மொன்றின் மாணவனான இளமாறனால் தான் கொள்வனவு செய்யப்பட்டதென்பதால் வடை நரியின் வாய்க்கே வசமாக வேண்டுமென அண்டங் காக்கைகள் சங்கம் பிரார்த்தனை செய்திருந்தது"** என்பது போன்ற விவரணங்கள், புரியாத புதிர்களாகவே உள்ளன.

இவ்வாறான சிறுகதைகள் யாருக்காக எழுதப்படுகின்றன என்ற வினாவைப் பின் நவீனத்துவப் படைப்பாளர்கள் தமக்குள் எழுப்பிக் கொள்வது அவசியமாகும். இருண்மை நிறைந்த சொல்லாடல் களின் பொருண்மையை வாசகரால் எவ்வாறு விளங்கிக் கொள்ள முடியும்?

பின் நவீனத்துவச் சிந்தனையான **"ஆசிரியனின் மரணம்"** என்ற கருத்தியலை எடுத்துக் கொண்டால், "பிரதியினூடாக மொழி தான் பேசுகிறதே ஒழிய ஆசிரியன் அல்லன்" என்ற வாதத்தை, இருண்மை வாய்ந்த சொல்லாடலால், தேர்ந்த வாசகனிடத்தும் கூட எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

இக்கருத்துகளின் அடிப்படையில் பார்க்கும் போது, யதார்த்த வாதம், தொன்மம், பின் நவீனத் துவம் என்பன தொடர்பான தனது புரிதல்களை இ.சு. முரளிதரன் உரைத்துப் பார்த்திருக்கிறார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஒரே தொகுப்பு நூலில் இம்மூன்று வகைச் சிறுகதைகளையும் வழங்கிய அவரின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது. இத்துணிச்சல் ஒரு பரிசோதனை முயற்சி என்று கூடச் சொல்லலாம். இப்பரி சோதனை முயற்சியில் இ.சு.முரளிதரன் வெற்றி பெற்றுள்ளார் என்பதில் எவ்விதச் சந்தேகமு மில்லை. "வெய்யோனின் கதிர்கள் இருளைச் சலவை செய்து பரிபாலனம் நடத்திக் கொண்டி ருந்தன", "நுரைகழல் புனைந்த வைகை ஊழிக் கூத்தின் ஒத்திகையாய் ஆர்ப்பரித்தது", "கோபம்! நீதிகள் மறுக்கப்படுகின்றபோதெல்லாம் உணர்ச்சிகளின் முன்வரிசையில் உட்கார்ந்து விடுகிறது", "கண்கள் ஆயிரம் சூரியனைப் பதுக்கி வைத்ததைப் போலத் தென்பட்டன" என்பன போன்ற அணிகள் நூலாசிரியர் ஒரு கவிஞர் என்பதற்கான சான்றாதாரங்களாக உள்ளன.

நிறைவாக, இச்சிறுகதைத் தொகுதி யானது **"கவிஞர் ஒருவரின் புனைவு எவ்வாறிருக்கு மென்பதை அடையாளப்படுத்துகிறது"** என்ற ஆரம்பக் கருத்தை மீளுரைத்தல் அவசியமாகிறது. இந்நூலாசிரியரான இ.சு.முரளிதரன் தமது கவித்துவச் சொல்லாடல் ஆற்றலை உணர்ந்து, இருண்மை நீக்கி, பின் நவீனத்துவப் பாணிச் சிறுகதைகளிலும் அதனைப் பொருத்தமாய்ப் பயன்படுத்துவாரெனின், அச்சொல்லாடலுக்கு வாசகர் பொருண்மை தர முடிவதோடு இலக்கியமும் முழுமை பெறும். •

முரண் நகை

இயக்கம் நான் தான்
இயக்கி
யாரோ? எங்கிருந்தோ?

மனிதன் தான்
மனிதம்
எங்கோ? எப்படியோ?

யார்
வீழ்ந்தால் எனக்கென்ன?
வெற்றி வெற்றி வெற்றி
வெ(ற்)றி தான்
என் உயிர் மூச்சு.

முண்டங்களாய் துண்டங்களாய்
தசைப்பிண்டங்களாய்
சிதையச் சிதைய சிதைப்பேன்

சிதையச் சிதைய இருப்பு
இறக்க இறக்க உயிர்ப்பு

எங்கோ? யாருக்கோ?

ஏலம்

நீங்கள்
முட்டிக்கொள்ளும்
ஒவ்வொருவாரு தருணங்களிலும்
உடைவதென்னவோ
எங்களின் மண்டைகள் தான்.

கத்தும் போதும்
சுத்தி மாத்தி பேசும் போதும்
எத்தி தத்தி
சண்டையிடும் போதும்
நீங்கள் ஏலம் போடும்
எங்களுக்கான விருப்புக்கள்
உங்களுக்கான
இருப்புகளின் எத்தனங்களால்
பந்தாகி
ஓட்டை ஒடிசல்கள் பீடித்து
எங்கோ? ஓரமாய்!

தென்பொலிகை குமாரதீபனின்
2
கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பத்மநாப ஐயரின் நேர்காணல்

மின்அஞ்சல் மூலமான நேர்காணலை நிகழ்த்தியவர்
அ.யேசுராசா



பத்மநாப ஐயர் ஓர் எழுத்தாளரோ கவிஞரோ அல்லது இலக்கிய விமர்சகரோ அல்லர். ஆயினும், அறுபதுகளிலிருந்து இற்றைவரை, ஈழத்து இலக்கிய உலகில் அவரின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு மகத்தானது; 'மற்றவர்க்காய்ப் பட்ட துயர்' மதிக்கத்தக்கது! ஈழத்துப் படைப்பாளரையும் படைப்புகளையும் தமிழகத்தில் அறிமுகப்படுத்துவதோடு, அங்குள்ள தீவிரச் செயற்பாடுகொண்ட சிற்றிதழ்களையும் படைப்புகளையும் ஈழத்தில் கிடைக்கச் செய்வதிலும் பணியாற்றியிருக்கிறார். 'தமிழியல்' என்னும் அமைப்பின் மூலம் முக்கியமானவையும் முன்னோடியானவையுமான நூல்களைச் சிறந்த கட்டமைப்புடனும் வடிவநேர்த்தியுடனும் வெளிக்கொண்டு வருகிறார். அதைத் தவிர ஈழத்துக் கவிதைகள், சிறுகதைகள் என்பவற்றைத் துறைசார்ந்தவர்மூலம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து, பருவ இதழ்களிலும் நூல்வடிவிலும் வெளிவரச் செய்து, பிறமொழியினரின் பார்வைக்கு ஈழத்துப் படைப்புகளைக் கொண்டு சென்றிருக்கிறார். மேலும், ஈழத்திலுள்ள தனிநபர்கள், அமைப்புகளுக்கு அரிதான இலக்கிய - கலைப் படைப்புகள் கிடைக்க உதவியிருக்கிறார். இவரது அர்ப்பணிப்பு நிறைந்த இப்பணிக்காக, 'கனடிய தமிழ் இலக்கியத்தோட்டம்' என்னும் அமைப்பு, 2004ஆம் ஆண்டுக்குரிய 'இயல் விருதி'னை அளித்துக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

மின்னஞ்சல் மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் முதற் பகுதி, இங்கு தரப்படுகிறது; இறுதிப் பகுதி அடுத்த இதழில். - அ. யேசுராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வணக்கம். 1972இல் அல்லது 1973இல், பேராதனையி லிருந்து நானும் எனது அறை நண்பர் நா.முருகதாஸும், மாத்தளையில் - அல்வத்தைக்கு வந்து, முதன்முறையாக உங்களைச் சந்தித்தோம்; அது நினைவிருக்கிறதா?

நீங்கள் வந்தது மிக நன்றாக நினைவிருக்கிறது. ஆனால், உங்களுடன் கூட நண்பர் முருகதாஸ் வந்தது நினைவில் இல்லை.

1967ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் B.Sc பட்டம் பெற்ற பின் வேலையின்றி இருந்தேன். எனது தந்தையார் எனது சிறுவயது முதலே மலையகத்தில் உள்ள பண்டாரவளை நகரில் உள்ள சிவசுப்ரமணிய சுவாமி கோயிலில் அர்ச்சகராக இருந்தார். எனவே, பெற்றோருடன் பண்டாரவளையில் இருந்தேன். 1971ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டார நாயக்க ஆட்சியில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் ஒரு திட்டத்தின் Graduate(Graduate Training Scheme) கீழ் எனக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆரம்பத்தில் ஓரிரு மாதங்கள் பண்டாரவளை DRO அலுவலகத்தில் பயிற்சி என்ற பெயரில் சேர்த்திருந் தார்கள். பின்னர் என்னை யாழ்ப்பாணத்திற்கு

சிவசுப்ரமணிய சுவாமி கோயில்

மாற்றினார்கள். அங்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் காணிப் பகுதியில் சிலகாலமும், பின்னர் துணுக்காய் காணி ஆணையாளர் திணைக்களத்தின் பிரிவு அலுவலகத்திலும் பயிற்சி என சில மாதங்களைக் கழிக்க நேர்ந்தது. அந்த நாட்களில்தான் எனது திருமணமும் நடந்தது. சிறிது காலம் மனைவியுடன் துணுக்காயில் கழிந்தது. இறுதியாக 1972 ஜூலை மாதம் முதல் காணி ஆணையாளர் திணைக்களத்தின் பிரிவு அலுவலர்களுள் (Divisional Officer) ஒருவராக நியமனம் தரப்பட்டது. அதேவேளை கூட்டுறவுப் பண்ணைத் திட்டம் ஒன்றும் அமுலுக்கு வந்தது. மாத்தளைப் பகுதியில் உள்ள அல்வத்தை என்னும் இடத்தில் தொடங்கப்பட்ட ஒரு மாட்டுப் பண்ணை (Dairy Farm) ஒன்றுக்குப் பொறுப்பாக (Project Manager) Projectநியமனம் தந்து மாத்தளைக் கச்சேரிக்கு மாற்றம் செய்தனர். ஆரம்பத்தில் 40 வரையிலான சிங்கள இளைஞர்கள் அக் கூட்டுறவுப் பண்ணை உறுப்பினர்களாக இருந்தனர். பின்னர் சிலர் விலக, 25 வரையிலானார்கள். ஆரம்பத்தில் எனக்குச் சிங்களம் பேச வராது. அவர்களுக்கு ஆங்கிலம் வராது. பெரும்பாலோருக்குத் தமிழ் வராது. அதிர்ஷ்டவசமாக ஒரிருவருக்குச் சிறிது தமிழ் பேச முடியும். அதனால், நான் பிழைத்தேன். அப்பொழுதுதான் சிறிதுசிறிதாகச் சிங்களம் பேசத் தொடங்கிப் பின் ஓரளவு தேர்ச்சி கண்டேன். அங்கு பணி புரிந்தது முற்றிலும் மாறுபட்ட அநுபவம்.

மாத்தளையிலிருந்து சுமார் 6 மைல் தொலைவில் அல்வத்தை. அங்கு ஒரு பங்களாவையும் கொடுத்திருந் தார்கள். மனைவியுடன் தங்கி யிருந்தேன். அப்பொழுதான் ஒரு நாள் நீங்களும் நண்பர் முருக தாஸும் வந்தீர்கள். அஃக், கட தபற, கணையாழி போன்ற காத்திர மான சிறுசஞ்சிகைகளைத் தமிழ கத்திலிருந்து தருவித்துப் பலருக் கும் விநியோகம் செய்துவந்த காரணத்தால் ஏற்பட்ட தொடர் பினாலேயே நீங்கள் என்னைக் காண வந்தீர்கள் என நம்பு கிறேன். மாத்தளை சோமு, மாத் தளை வடிவேலன், மலரன்பன் போன்ற மலையகத்தின் குறிப் பிடத்தக்க எழுத்தாளர்களும் அறிமுகமாகி இருந்தனர். எனினும், அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு இருந்ததில்லை. அந்த வகையில் நீங்கள் வீடு தேடி வந்து சந்தித்ததில் மகிழ்ச்சியே. அன்று தொடங்கிய உங்கள் இருவருடனு மான நட்பு இன்று வரையும் நீடிப்பது என்பது மகிழ்ச்சிக்குரியதும் ஆச்சரிய மானதும்!

2. இலக்கியத்துறையோடு உங்களின் பரிச்சயம் எவ்வாறு ஏற்பட்டது?

மாணவப் பிராயம் முதலே இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு இருந்தது. அப்போது எனக்கு வாய்த்த நண்பர்களிற் பலரும் இலக்கிய ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள். அவர்களில் பாடசாலை நண்பரும், எனது வீட்டிலிருந்து 150 யார் தொலைவுக்குட்பட்ட தூரத்தில் வாழ்ந்தவருமான அ.கந்தசாமி குறிப்பிடப்பட வேண்டியவர். ஏறத்தாழத் தினமும் சந்தித்துக் கொள்வோம். பெருமளவு இலக்கியம் பற்றித்தான் பேசுவோம். இப்போது அவர் கனடாவில் வாழ்கிறார். என் மாமனார் ஒருவரும் பலவகை நூல்களையும் வாசிப்பவர். அவரின் பாதிப்பும் இருந்தது. சிறு வயதில் எழுத்தாளர் சொக்கன் அவர்களிடமும், மதுரகவி இ.நாகராஜன் அவர்களிடமும் வீட்டில் பாடம்படிக்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(tuition) நேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. இருவரும் எனது மாமனாரின் நண்பர்கள். அவர்களின் தாக்கமும் இருந்தது. கல்கண்டு, ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் என ஆரம்பித்து, தீவிர வாசிப்புக்குரிய தீபம், கணையாழி, கசடதபற, நடை, படிகள், பரிமாணம், யாத்ரா என்று என்னுடைய வாசிப்புத்தளம் விரிவடைந்தது. மௌனி, லா.ச.ரா, புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, தி. ஜானகி ராமன், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, அசோக மித்திரன் போன்றவர்களுடைய படைப்புகளையும், ஈழத்து எழுத்தாளர்கள் பலரது படைப்புகளையும், பிற மொழிப் படைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்பு களையும் வாசித்தேன். இப்படித்தான் எனது இலக்கியப் பரிச்சயம் ஏற்பட்டது. அப்போதே புத்தகங்களை வாங்கும் பழக்கமும் தொடங்கிவிட்டது. எனது அப்பா அனுப்பும் சிறிது பணத்தில் ஒரு பகுதி புத்தகங்களுக்கும் போய்விடும்!

3. ஈழத்து இலக்கிய நூல்களைத் தமிழ்நாட்டிலும், அங்குள்ள நல்ல நூல்கள், சிற்றிதழ்களை இங்கும் அறிமுகப்படுத்திய உங்கள் செயற்பாடுகளை விளக்குங்கள்....

நல்ல இலக்கியங்களை வாசிக்கும்போது, அவை என்னைப் போன்ற இலக்கிய ஈடுபாடு உள்ள

அசோகமித்திரன்

எனது இலக்கிய நண்பர் களுக்கும் பிறருக்கும் கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் மேலோங்கியது. இதனால், எனக்குக் கிடைக்கக்கூடிய சஞ்சிகைகள், நூல்களில் எப்போதும் பல பிரதிகளை வாங்கி வைத்திருப்பேன். அப்போது தமிழகத்தில் வெளி யாகும் பெரும்பாலான பிரபல மான சஞ்சிகைகள் எல்லாம் இலங்கையிலும் விற்பனைக்குக் கிடைக்கும். ஆனால், சிறு சஞ்சிகைகள் கிடைப்பதில்லை. குறிப்பாக, கி.கஸ்தூரி ரங்கனால் டில்லியில் 1965இல் தொடங்கப்பட்ட கணையாழி அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகள் வரை எமக்கு அறிமுகமாகவில்லை. தெரியவந்தபோது, கணையாழி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பல பிரதிகளைப் பெற்று நண்பர்களுக்கு அறிமுகம் செய்தேன். நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஒரு கட்டத்தில், மாதம் நூறு பிரதிகள் வரை தருவித்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது கண்டி, கொழும்பு என்று பல இடங்களுக்கும் விநியோகித்தேன். இதற்கான பணத்தை மத்திய வங்கியின் அநுமதி பெற்று, தபாற் கந்தோரி னூடாகக் காசுக்கட்டளையாக அனுப்பும் வசதி அப்போது இருந்தது. இதே காலப் பகுதியில் - 1965இல் - தீரர் சத்தியமூர்த்தியின் மகளான லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்தி, ஆண்டுச் சந்தா அடிப்படை யில் ஆண்டுக்கு ஆறு நூல்கள் என்ற திட்டத்தோடு சென்னையில் வாசகர் வட்டம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கினார். தரமான நூல்களைத் தரமான அச்சுப் பதிப்பில் வெளியிட வேண்டும் என்பது அவர்களின் இலக்காக இருந்தது. நான் சந்தாதாரர் ஆனதோடு, பலரையும் சந்தாதாரர் ஆக்கினேன். கையைச் சுட்டுக்கொண்டாலும் இந்த முயற்சிகளால்தான் கொழும்பில் ரஷ்யத் தூதரகத்தில் பணிபுரிந்த கு.ராஜகுலேந்திரன், மலையக எழுத்தாளர் தலாத்துஓய கே.கணேஷ், அ.யேசுராசா, பூரணி ஆசிரியர் குழுவில் இருந்த என்.கே.மகாலிங்கம், மற்றும் தெளிவத்தை ஜோசப், ஐ.சாந்தன், எம்.எல்.எம்.மன்சூர், போன்றோரும், பிற்காலத்தில் ஏ.ஜே.கனகரத்னா, மு. நித்தியானந்தன், எம்.ஏ.நுஃமான், க. பாலேந்திரா, மு. புஷ்பராஜன், க.சட்டநாதன், குப்பிழான் ஐ.சண்முகன், மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், சசி கிருஷ்ண மூர்த்தி, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், புதுசு ரவி, நா. சபேசன் போன்றவர்களின் தொடர்பைச் சம்பாதிக்க முடிந்தது.

இச்சந்தர்ப்பத்தில் வாசகர் வட்டம் பற்றியும் 'லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி' பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன். மார்ச் 2013, தென்றல் எனும் இதழில் வெளியான கட்டுரையிலிருந்து சில பகுதிகளைப் பாருங்கள்:

"லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி என்றால் தெரியாதவர்களுக்குக்கூட, 'வாசகர் வட்டம் லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்தி' என்று சொன்னால் உடனே ஞாபகத்துக்கு வந்துவிடும். அந்த அளவுக்கு 'வாசகர் வட்டம்' என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பல தரமான புத்தகங்களை வெளியிட்டு, தமிழ் நூல் வாசிப்பு வளர்ச்சிக்கு வளம் சேர்த்தவர் இவர். தீரர் சத்தியமூர்த்தி யின் மகளாவார். கல்கி, சுதேசமித்திரன், ஹிந்து என பிரபல இதழ்களில் கதை, கட்டுரைகள் எழுதியவர் இவர்.

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

நூலும் எழுதியிருக்கிறார். இவரது 'ஐந்தாவது சுதந்திரம்' என்ற கட்டுரைத் தொகுப்பை அக்காலத்தில் புகழ்பெற்ற பதிப்புத்துறை முன்னோடி சக்தி. வை.கோவிந்தன் வெளி யிட்டிருக்கிறார். இவரது கணவரும் மலையாளத்தில் இருந்து ஆங்கிலத்துக்கு கே.எம். பணிக்கரின் நூல்களை மொழிபெயர்த்துள்ளார். இந்தப் பின்னணியோடு, 1964-65களில் இருவரும் வாசகர் வட்டம்" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கினர்.

நல்ல எழுத்தாளர்களின் தரமான நூல்களை வெளியிட்டு வாசகர்களுக்கு நேரடியாகக் கொண்டு சேர்ப்பது இதன் நோக்கம். அதற்காக 'புக்வெஞ்சர் பப்ளிகேஷன்ஸ்' என்ற பதிப்பகத்தைத் துவக்கினர். சந்தாதாரர்களைச் சேர்த்து, வருடத்திற்கு 25 ரூபாய் கொடுப்பவர்களுக்குச் சலுகை விலையில் நூல்கள் வழங்கப்பட்டன. வாசகர் வட்டத்தின் முதல் வெளியீடு ராஜாஜி எழுதிய 'சோக்ரதர்: ஆத்ம சிந்தனைகள்' என்னும் நூல். அது 1965ல் வெளியானது. ராஜாஜியே அதை வெளியிட்டார்.

தரமான தாள், நேர்த்தியான அச்சு, உயர்தர பைண்டிங், முகப்போவியம், வடிவமைப்பு என எல்லா வற்றிலும் வாசகர் வட்ட நூல்கள் தனித்து விளங்கின. முதல் நூலில் கலாசாகரம் ராஜகோபாலின்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டோவியம் இடம்பெற்றது. அதையே வாசகர் வட்ட வெளியீடுகள் அனைத்திற்கும் பயன்படுத்தினார் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி. வாசகர் வட்ட நூல்களைத் தனித்து அடையாளங் காட்டின அவை. இலக்கிய வாசகர்களிடம், குறிப்பாக, இலங்கைத் தமிழரிடையே, அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. தொடர்ந்து புது நூல்களை வெளியிட்டார். 'புக் கிளப்' என்ற கருத்தைத் தமிழில் நனவாக்கிய முன்னோடி லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்திதான்."

இந்திய மொழிகளில் வெளியான சிறு கதைகள் சிலவற்றைத் தமிழாக்கம் செய்து மறு கதைகள் என்ற தலைப்பில் வாசகர் வட்டம் ஒரு தொகுதியை வெளியிட்டி ருந்தது. அதனைப் படித்தபோது ஏற்பட்ட உந்துதலால், ஈழத்துப் படைப்புகளைக் கொண்ட ஒரு தொகுதியை யும் கொண்டுவந்தால் என்ன என்று கேட்டு லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு கடிதம் எழுதினேன். இலங்கை, மலேசிய எழுத்துக்களைக் கொண்ட ஒரு தொகுதியை வெளியிடுவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருப்ப தாகவும், ஆக்கங்களை அனுப்பி உதவினால், தெரிவு செய்து பயன்படுத்தலாம் என்றும் அவர் பதில் எழுதி யிருந்தார். செ.யோகநாதன் உதவியுடன் பல ஆக்கங் களை அனுப்பி வைத்தேன். அதிக எண்ணிக்கையில் சிறுகதைகளையும் ஒரு சில கவிதைகளையும் கட்டுரை களையும் கொண்டு அக்கரை இலக்கியம் என்ற பெயரில் அந்தத் தொகுப்பு 1968 டிசம்பரில் வெளியானது. 468 பக்கங் களைக் கொண்டிருந்த அதில், முற்பாதி முழுவதும் எமது எழுத்தாளர்களின் ஆக்கங் களைக் கொண்டிருந்தது. இதுவே எனது தொடக்கப் புள்ளி என்று சொல்வேன்! உண்மையில், இந்த முதல் முயற்சி நான் எதிர்பார்த்ததுக்கும் மேலாக மன நிறைவைத் தந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

'க்ரியா' ராமகிருஷ்ணன்

மறுபக்கமாக, ஈழத்துப் படைப்புகள், படைப்பாளிகளின் அறிமுகம் இந்தியாவில் கிட்ட வேண்டும், பரவ வேண்டும் என்ற விருப்பம் மிகுந் திருந்தது. 'க்ரியா' ராமகிருஷ்ணன், எஸ்.வி.ராஜதுரை, சி.மோகன், சுந்தர ராமசாமி, பெங்களூரிலிருந்து வெளி யான படிகள் சஞ்சிகைக் குழுவினரான தமிழவன், G.சிவராமகிருஷ்ணன் (G.S.R.கிருஷ்ணன்), காவ்யா சண்முகசுந்தரம் போன்றோருடனும், கோவை ஞானி, சிற்பி பாலசுப்ரமணியம், புவியரசு, அன்னம் மீரா, நாகர்கோயில் வேதசகாயகுமார் இன்னும் பலருடனும் தொடர்புகள் இருந்த நிலைமையில் அவர்களுக்கு இயன்றளவு நூல்கள், சஞ்சிகைகளை தபாலில் அனுப்பு வதை வழமையாகக் கொண்டிருந்தேன். குறிப்பாக அலை, பூரணி, திசை, புதுசு, Lanka Guardian இன்னும் பிறவற்றையும் அனுப்பி வந்தேன். அந்த நாட்களில் Lanka Guardian விலை மூன்று ரூபாய். ஆனால், அப்போது தபால் செலவு மூன்றரை ரூபாய் என்பது இன்றும் ஞாபகம் உள்ளது. தமிழ்நாட்டில் ஏழெட்டுப் பேருக்கு மாதம் தோறும் தொடர்ந்து அனுப்பிவந்தேன். எஸ்.வி.ராஜதுரையிடம் Lanka Guardian ஒரு கால கட்டம் வரையிலான முழுத் தொகுப்புகளும் (complete bound volumes) இருந்தன என்பது குறிப்பிடத்தகது. அது போலவே, நான் அனுப்பிய பலவும், தற்போதும் சுந்தர ராமசாமி நூலகத்தில் பார்வைக்கு உள்ளன என்பது மகிழ்ச்சிக் குரியதாகும். அலை 1 - 12 இதழ்களின் மீள்பதிப்பு, ஓவியர் மாற்கு சிறப்பு வெளியீடான தேடலும் படைப்புலகமும் போன்றவை அங்கு கிடைக்கும்.

1980இல் நான் முதல்முதல் தலைமன்னார் வழியாக ராமானுஜன் கப்பலில் தமிழகம் சென்றபோது 4, 5 பெரிய பெட்டிகளில் ஈழத்துச் சஞ்சிகைகள், நூல்கள் என நிறையக் கொண்டு சென்றேன். மாத்தளையிலிருந்து ரயிலில் கண்டி வழியாக தலைமன்னார் சென்று அங்கிருந்து கப்பலில் ராமேஸ்வரம் சென்று, பின் ராமேஸ் வரத்திலிருந்து ரயிலில் மதுரை சென்றடைந்தேன். தனி யொருவனாக அவ்வளவு பெட்டிகளையும் கொண்டு செல்ல முடியாதென்று கருதி, அந்த ஒரு காரணத்தி னாலேயே எனது மச்சான் (மனைவியின் தம்பிகளில்) ஒருவரை அழைத்துச் சென்றேன் என்றால் யார்தான் நம்புவர்கள்! மதுரையை வந்தடைந்ததுடன் அவர் காரியம் முடிந்துவிட்டபடியால், அடுத்தடுத்த நாளே இலங்கை திரும்பிவிட்டார் என்றால் பாருங்கள்! பின்னர் திருச்சி, சென்னை, பெங்களூர், கோவை, பொள்ளாச்சி முதலிய நகரங் களுக்கெல்லாம் சென்று அந்த நகரங்களில் வாழும் எழுத்தாளர் களையும் பதிப்பாளர்களையும் சந்தித்துத் திரும்பினேன். எடுத்துச் சென்ற நூல்கள், சஞ்சிகைகளை பிரித்து முடிந்த தளவு எல்லா எழுத்தாளர் களுக்கும் கொடுத்தேன். அது காலப்போக்கில் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது என்று உறுதியாகக் கூறலாம்!

சுந்தர ராமசாமி

உதாரணத்திற்குக் கூறுவதானால்:

"அடுத்த சந்தோஷ அதிர்ச்சி இந்த வருட ஆரம்ப மாதங்களில் கிடைத்தது. அலை ஒருவருட பையின்ட் வால்யூம். ஒரே வாரத்தில் ஆணி அடித்து உட்கார்ந்து கொண்டு படித்தேன். ஆத்மார்த்தமான பதிப்பு. நிதானமும், நுட்பமும். பொறுப்பு. தன் நம்பிக்கைகளைத் தெளிவாக முன்வைக்கும் ஆற்றல். மாறுபட்ட கருத்து களை நேர்மையாக வெளிப்படுத்த முடியும் என்பதில் நம்பிக்கை. (நாங்கள் என்று இதைத் தெரிந்துகொள்ளப் போகிறோம் என்பது தெரியவில்லை.) என் நண்பர் கிருஷ்ணன் நம்பியின் மறைவைப் பற்றிய குறிப்பைப் படித்தபோது மனம் நெகிழ்ந்துபோனேன். நெகிழ்ந்தது கிருஷ்ணன் நம்பிக்காக மட்டுமல்ல; அலையின் கவன வட்டத்தின் நுட்பத்தை நினைத்தும்கூட!"

இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்ல; சுந்தர ராமசாமிதான்! 17.9.1980 அவர் எமக்கு (உங்களுக்கு அல்லது எனக்கு) எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தளையசிங்கம் பற்றியும் இவ்வாறனதொரு பதிவினைச் சுந்தர ராமசாமி எழுதியுள்ளார். கி. ராஜநாராயணன், சுந்தர ராமசாமி ஆகியோருக்கு மு. தளையசிங்கம் படைப்புகள்மேல் ஏற்பட்ட மதிப்பின் விளைவாகவே மு. தளையசிங்கத்தின் படைப்புகள் பலவும் (ஒரு தனி வீடு, புதுயுகம் பிறக்கிறது, போர்ப்பறை, மெய்யுள், கலைஞனின் தாகம்) 1985 அளவில், கோவையில் சமுதாயம் வெளியீடாக வெளிவந்தன.

'இலக்கு' கருத்தரங்கொன்றில் சுந்தர ராமசாமி வாசித்த 'தளையசிங்கத்தின் பிரபஞ்ச யதார்த்தம்' எனும் கட்டுரையின் முடிவில் அவர் கூறுவதாவது:

"இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்ததற்கான சாயல்களை இவரைப் போல் முழு வீச்சோடு வெளிப் படுத்திய ஆளுமைகள் நம்மிடையே வேறு உள்ளனவா? இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் இரண்டு பெயர்கள் கிடைக்கின்றன. ஒருவர் பாரதி; மற்றொருவர் புதுமைப் பித்தன். பாரதி தாழ்ந்துபோனமைக்குத் துக்கித்து மேலான ஒன்றை எழுப்ப முயன்றார். புதுமைப்பித்தன் தாழ்ந்துபோனதை வெட்ட வெளிச்சமாக்கினார். அந்த வரிசையில் மூன்றாவதாக வருபவர் தளையசிங்கம்.

பாரதியின் கருத்துலகத்தை விடவும் தளைய சிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது. மற்றொரு விதத்தில் சொன்னால் பாரதியின் சிந்தனையை, இவர் தம் காலத்திற்குக் கொண்டு வந்து, இடைக்காலச் சரித்திரத் திற்கும் எதிர்வினை தந்து, இடைவெளிகளை அடைத்து முழுமைப்படுத்த முயன்றார் என்று சொல்லலாம்."


கோவை ஞானி

4. தமிழகத்தின் முக்கிய ஆளுமை களான சுந்தர ராமசாமி, கோவை ஞானி, க்ரியா ராமகிருஷ்ணன், எஸ்.வி. ராஜதுரை முதலியவர்களுடனான உங்களது தொடர்புகள் பற்றி....

1980இல் நான் முதன்முதல் தலைமன்னார் வழியாக ராமானுஜன் கப்பலில் தமிழகம் சென்றேன். முதலில் மதுரை சென்று, பின் திருச்சி சென்று சென்னையை அடைந்தேன். மதுரை, திருச்சி நகரங் களிலும் சிலரைச் சந்தித்தபோதும் திட்டவட்டமாக யார்யாரைச் சந்தித்தேன் என்பது நினைவில் இல்லை. சென்னையில் க்ரியா ராமகிருஷ்ணனைச் சந்தித்த தோடு அவர் வீட்டிலேயே தங்கவும் செய்தேன். ஜெயாவுடன் வாழ்ந்த காலம் அது. "இவர் ஜெயா, We are living together" என்றார் ராமகிருஷ்ணன். மனைவி என்று சொல்ல வேண்டியதுதானே? என்ன இப்படிச் சொல் கிறாரே என்று தோன்றியது. சில காலம் பின்னர்தான் அதன் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டேன். அங்கிருக்கும் வரை என்னை மிகவும் அன்புடன் கவனித்துக்கொண்டனர் இருவரும். அடிக்கடி க்ரியா அலுவலகம் சென்றேன். க்ரியா நூல்களையும் பிற வெளியீடுகள் சிலவற்றையும் அங்கு காண முடிந்ததது. எழுத்தாளர்கள் திலீப்குமார், கோபி கிருஷ்ணன் இருவரும் அங்கு பணியில் இருந்தார்கள். கோபிகிருஷ்ணன் தட்டச்சுப் பணியாளராக (typist) இருந்தார். க்ரியா அலுவலகத்தில் ஒருநாள் ஒரு சந்திப் பினை ராமகிருஷ்ணன் ஒழுங்குசெய்திருந்தார். அதில் அசோகமித்திரன், மலர்மன்னன் இன்னும் சிலர் கலந்து கொண்டார்கள். எல்லோரும் நினைவில் இல்லை. எல்லோருடனும் உரையாடி மகிழ்ந்தேன். எஸ்.வி.ராஜ துரையும் கலந்துகொண்டாரோ என்பது நினைவில் இல்லை. ஆயினும், பின் அவர் வீட்டிற்கும் (K.K. நகர் என்று நினைவு), தியாகராய நகரில் அசோகமித்திரன் வீட்டிற்கும் சென்று அவர்களுடன் பல மணி நேரம் உரையாடி வந்தேன்.

தவிரவும் சென்னையில் உள்ள பல பதிப்பகங் களுக்கும் சென்று வந்தேன். பாரி நிலையம், நர்மதா பதிப்பகம் என்று ஒரு பெரிய பட்டியல் இடலாம். நர்மதா பதிப்பக உரிமையாளர் திரு ராமலிங்கம் அவர்களிடம் ஈழத்துப் படைப்புகள் சிலவற்றைப் பிரசுரித்து உதவும்படி கேட்டுக்கொண்டேன். அதன் விளைவாக மார்ச் 1981இல் கந்தையா நவரேந்திரன் அவர்களின் விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள் (J. கிருஷ்ணமூர்த்தி பற்றியது), டிசம்பர் 1981இல் கா. கைலாசநாத குருக்கள் அவர்களின் வடமொழி இலக்கிய வரலாறு ஆகிய இரு நூல்களின் மறுபதிப்புகளை அவர் வெளியிட்டார். இந்நூல்கள் தமிழ்நாட்டில் வெளி வந்தது அதுவே முதல் முறையாகும். மலையகத்தின் முக்கிய எழுத்தாளரான கே. கணேஷ் அவர்கள் மொழி பெயர்த்த லூசுன் சிறுகதைகள் தொகுப்பொன்று எஸ்.வி.ராஜ துரையின் தொடர்பில் போர்க்குரல் என்ற தலைப்பில் பொதுமை வெளியீடாக 1981இல் வெளி வந்ததும் குறிப் பிடத்தக்கது.

எஸ்.வி. ராஜதுரை

பின்னர், 1982 பங்குனி யில் அ. யேசுராசா, து. குல சிங்கம் இருவருடனும் சேர்ந்து தமிழகம் சென்றோம். கொழும்பிலிருந்து விமான மூலம் திருவனந்தபுரம் சென்றடைந்தோம். விமான நிலையத்திற்குச் சுந்தர ராமசாமி அவர்கள் வந்து எங்களை அவரது காரில் நாகர்கோயிலில் உள்ள அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரது வீட்டின் மாடியில் இரு அறைகள் உள்ளன. அங்கு நாங்கள் மூவரும் தங்கினோம். வீட்டில் சமையல் செய்யும் ஒருவரும் இருந்தார். சுந்தர ராமசாமியின் துணைவியாரும் சமையல் செய்பவரும் எம்மை கோப்பி, தேநீர், மூன்று வேளை சாப்பாடு என மிகவும் அன்புடனும் அக்கறையுடனும் கவனித்தார்கள். சாப்பாட்டின்போதும், மற்ற நேரங்களிலும் வீட்டின் ஏதாவது ஒரு இடத்தில் அல்லது மொட்டைமாடியில் அமர்ந்து தினமும் பல மணி நேரம் சுந்தர ராமசாமியுடன் உரையாடும் வாய்ப்புக் கிட்டியது. என்னளவில், நான் பேசுவதைவிட அவரும் நண்பர்களும் பேசுவதைக் கேட்பதே அதிகம். சுந்தர ராமசாமி பேசுவதைக் கேட்பது விளக்க முடியாத ஓர் அநுபவம் என்றே கூறலாம். பொருள்மிக்கதாகவும் சுவாரஸ்யமானதாகவும் இருக்கும். எவ்வளவு நேரமானாலும் கேட்டுக் கொண்டே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கலாம்!

ஒருநாள் மாலையில் நாகர்கோயில் பகுதியில் உள்ள எழுத்தாளர் சிலரும் இலக்கிய ஈடுபாடு கொண்டவர்களுமெனக் கணிசமானோர் எம்மைச் சந்திக்கவென மொட்டைமாடியில் கூடினர். பல்கலைக் கழகப் பேராசிரியர் வேதசகாயகுமார், அ.கா.பெருமாள், ஆங்கிலப் பேராசிரியர் பத்மநாபன், கி.அ.சச்சி தானந்தன் இன்னும் பலர் வருகை தந்திருந்தார்கள். ஈழத்துப் படைப்புகள், படைப்பாளிகள் பற்றியெல்லாம் ஆர்வமுடன் கேட்டனர். நாங்களும் முடிந்தளவு விபரங்களை எடுத்துச்சொன்னோம். தமிழக இலக்கியம் பற்றியும் பேசினோம். ஓர் இனிமையான சந்திப்பு.

ஒரு வாரம் வரை நாகர்கோயிலில் தங்கியிருந்த எங்களைப் பல இடங்களுக்கும் சுந்தர ராமசாமி அழைத்துச் சென்றார். கன்னியாகுமரி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கும் சென்றோம். கன்னியாகுமரியில் எழுத்தாளர் ஆ. மாதவனை அவரது கடையில் சந்தித்தோம். ஒரு பாத்திரக்கடை என நினைக்கிறேன்.

பின்னர் நாகர்கோயிலிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி, பாளையங்கோட்டை, கோவில்பட்டி, மதுரை, சிவகங்கை, திருச்சி எனப் பல நகரங்களுக்கும் சென்று இறுதியாகச் சென்னையை அடைந்தோம்.

கி.ராஜநாராயணன்

திருநெல்வேலியில் பேராசிரியர் சிவசுப்ரமணியம் (சிவசு) அவர்களைச் சந்தித்தோம். அவர் மார்க்சியப் பார்வை கொண்டவர். அவருடைய வீட்டில் ஒரு நாள் தங்கியதாகவும் நினைவு. அங்கிருந்து கோவில்பட்டி சென்று எழுத்தாளர் கி.ராஜ நாராயணனைச் சந்திக்க இடைசெவல் செல்வதாக இருந்தோம். நாம் கோவில் பட்டியை அடைந்தபோது எதிர்பாராத விதமாக எழுத்தாளர் கி.ராஜநாராயணனை அங்கு காண நேர்ந்தது. இடைச்செவல் செல்ல விரும்புவதாகக் கூறினோம். அங்கு பார்ப்பதற்கு எதுவும் இல்லை. எனவே, இங்கேயே நாம் சந்தித்துக் கொள்ள லாம் எனக் கூறி அங்குள்ள விடுதி ஒன்றில் அன்றிரவு நாங்கள் தங்க அவர் ஏற்பாடு செய்தார். மறுநாள் மீண்டும் அவர் வந்ததோடு வேறும் சில இளைஞர் களையும் அழைத்து வந்தார். ஜோதி விநாயகம், கௌரி சங்கர், மாரி, முருகன் ஆகியோரின் பெயர்கள் நினைவி லுள்ளன. அவர்களுடனான ஒரு நல்ல சந்திப்பாக அது அமைந்தது. ஈழத்து இலக்கியம், தமிழக இலக்கியம் எனப் பலதையும் பற்றி அளவளாவினோம்.

கி.ராஜநாராயணன் வட்டார மொழி இலக்கியத்தின் முன்னோடி; தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவர். ஊரூராகத் தேடியலைந்து நாட்டார் கதைகளை ஆவணப்படுத்தியவர். நாட்டார் வழக்கில் இயல்பாகவே இழையோடியிருந்த பாலியலையும், பாலியல் கதைகளையும் பதிவுசெய்தவர். தலைசிறந்த கதைசொல்லியான அவர் வட்டாரச் சொல்லகராதி ஒன்றினையும் தயாரித்தவர். கவிஞர் மீராவின் அன்னம் பதிப்பக வெளியீடாக அந்த கரிசல்காட்டு வட்டாரச் சொல்லகராதி வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

மழைக்குக்கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கா தவர் என்று சொல்லத்தக்க - பெரிய படிப்பற்ற - கி. ராஜ நாராயணன் அப்படியானதொரு வட்டாரச் சொல்லக ராதியைத் தயாரித்தது என்பது மிகவும் அசாதாரண செயலாகும். அதுமட்டுமல்லாமல், அவர் பின்னாளில் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்தில் ஒரு கௌரவப் பேராசிரியராகவும் நியமனம் பெற்றார் என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாகும். ஏ.ஜே.கனகரத்னா போன்ற - நம்மிடையே வாழ்ந்த ஓர் அறிஞரும் மேன்மைமிகு ஆன்மாவும் (great soul) ஒருவர், நமது பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரை யாளராக அல்லாது வெறும் போதனாசிரியராகவே (English Instructor) நியமனம் பெற்றார் என்பது யாவரும் அறிந்ததே.

மதுரையில் சி.மோகன், தமிழ்ப் பேராசிரியர் தி.சு.நடராசன், வைகை (சஞ்சிகை) குமாரசாமி ஆகியோரைச் சந்தித்தோம். தி.சு.நடராசன் வீடு சென்று அவரது வீட்டில் மதிய உணவு உண்டதும் நினைவில் வருகிறது.

கவிஞர் சிற்பி

சோவியத் சார்பு கொம்யூனிஸ்ட கட்சியின் அணுசரணையுடன் செயற்பட்ட கலை இலக்கியப் பெருமன்றத்துடன் நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோரின் வழிகாட்டுதலில் பல எழுத்தாளர்கள் இணைந்து செயற்பட்டனர். பொன்னீலன், பூமணி, போன்ற படைப் பாளிகளும் ஆ.சிவ ப்ரமணியன், தோத்தா திரி, தி.சு.நடராசன் போன்ற ஆய்வாளர்களும் இதில் முக்கியமானவர்கள்.; (எம்.ஏ.நுஃமான் எழுதிய மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்: ஒரு வரலாற்றுக் கணக்கெடுப்பு) இதில் குறிப்பிடப்படும் பேராசிரியர் நா.வானமாமலை "கல்விநிலைப் பின்புலமுள்ளவர்கள் தான் ஆராய்ச்சித்துறையில் ஈடுபட முடியும் என்ற தோற்றத்தை மாற்றி ஆர்வமும், ஈடுபாடும், உழைப்பும், நுட்பமும் கூடிவரும் யாரும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட வேண்டும்" என்ற எண்ணத்தில், 1967இல் 'நெல்லை ஆய்வுக்குழு' எனும் அமைப்பைத் தொடங்கியதோடு, 1969இல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை மட்டுமே தாங்கி வரும் ஆராய்ச்சி எனும் காலாண்டிதழைத் தொடங்கினார். இவற்றின் பங்கும் பணியும் மகத்தானவை. இவற்றின் பாதிப்பால் உருவான பலர் இன்றைக்குத் தமிழ் படைப்பிலக்கியத் துறையில், ஆராய்ச்சித் துறையில் முன்னணியில் உள்ளனர். அந்த ஆராய்ச்சி இதழை அக்காலத்தில் பெற்றுவந்த காரணத் தால், தி.சு.நடராசன் போன்றோர் அறிமுகமாகி இருந்த தனாலேயே அவ்வாறானவர்களையும் சந்திக்கும் எண்ணமும் தொடர்பும் கிட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.மோகன் அறிமுகமானதும் என்னளவில் பெரும் அதிர்ஷ்டமே! அவர் ஒரு (சிறுகதை, கவிதை) எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர், ஓவியம் பற்றிய விமர்சனம் எழுத வல்லவர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர். பின்னால் க்ரியாவில் பணி புரிந்தவர். 'வயல் பதிப்பகம்' மூலம் பல நூல்களை வெளியிட்டவர். சிறுசஞ்சிகைகளையும் வெளிக் கொண்டு வந்துள்ளர். சமீபத்தில் வெளியாகியுள்ள - நற்றிணைப் பதிப்பக வெளியீடான சி.மோகன் கட்டுரைகள் எனும் நூல் பற்றிய அப்பதிப்பகத்தின் குறிப்பு வருமாறு:

"கடந்த நாற்பது வருடங்களாக சி.மோகன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். இளம் வயதிலேயே உலகின் மகத்தான ஆக்கங்களைக் கற்றுத் தேர்ந்தவர் இவர். நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியிருக்கின்றபோதிலும், தான் மிகவும் சிறந்தவை எனக் கருதும் கட்டுரைகளை மட்டுமே இத்தொகுப்பில் சேர்த்திருக்கிறார். விமர்சகரான சி.மோகன், தன் விமர்சனத்தில் நட்பிற்கான சலுகையையோ, பகைமைக் கான விரோதத்தையோ ஒருபோதும் காட்டுவதில்லை. படைப்பின் தகுதிதான் இவரது விமர்சனத்திற்கான முதலும் இறுதியுமான அளவுகோல். அவ்வகையில் இவர் தமிழின் தலைசிறந்த விமர்சகர் ஆகிறார். தான் கற்றுத் தேர்ந்ததில் நூறில் ஒரு பங்கையே படைத் திருக்கும் சி.மோகனின் இக்கட்டுரைத் தொகுப்பை வாசிக்கும்போது வெளிப்படும் தீட்சண்யத்தையும் ஒரு மகத்தான மனம் ஓரிடத்தில் கூடத் தேங்கி விடாமல் இலக்கியத்தின் ஊடாக இடை யறாது பயணித்துக் கொண்டி ருப்பதையும் நாம் உணரலாம்."

சி.மோகன்

17.10.2012 ஜூனியர் விகடன் இதழில் சி.மோகன் கட்டுரைகள் நூல் பற்றிய அறிமுகத்தில் குறிப்பிடப்படுவதாவது:

"தமிழ்க் கலை உலகத்தின் ஏதாவது ஒரு திக்கு நோக்கி நடப்பவராக நீங்கள் இருந்தால், நிச்சயம் சி.மோகனைச் சந்தித்திருக்கலாம். அவரது, ஒரு படைப்பைச் செதுக்குவதில் சி.மோகனின் லாகவம் அனைவராலும் உணரப்பட்டது. அதனால்தான் நவீன எழுத்தில் மிகப்பெரிய சலனம் ஏற்படுத்திய தனது ஜே.ஜே. சில குறிப்புகள் நாவலை, சுந்தர ராமசாமி இவரை அழைத்து எடிட் செய்தார். அதேபோல, புத்தகங்கள் தயாரிப்பிலும் நவீன உத்திகளைப் பயன்படுத்தியவர் மோகன்."

சி.மோகனுடன் நெருக்கமான உறவு இருந்தது. அவர் உதவியால் சில நூல்களை வெளியிடவும் முடிந்தது.

ஹம்சத்வனியின் அக்கரைக்குப்போன அம்மாவுக்கு (31 கவிதைகளின் தொகுப்பு) (ஓகஸ்ட் 1985), கா. கைலாசநாத குருக்களின் இந்துப் பண்பாடு: சில சிந்தனைகள் (லேடி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு, 1985) (செப்ரெம்பர் 1986), அதிகம் அறியப்படாத கவிதாவின் யுகங்கள் கணக்கல்ல (பதின்மூன்று சிறுகதைகளின் தொகுப்பு, நவம்பர் 1986), சண்முகம் சிவலிங்கத்தின் முதல் கவிதைத் தொகுப்பான நீர் வளையங்கள் (54 கவிதைகளின் தொகுப்பு) (நவம்பர் 1988), சாந்தி சச்சிதானந்தத்தின் பெண்களின் சுவடுகளில் (மார்ச் 1989), மு.பொன்னம்பலத்தின் யதார்த்தமும் ஆத்மார்த்தமும் (பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு) (ஏப்ரில் 1991) ஆகிய 'தமிழியல்' வெளியீடுகள் நண்பர் சி.மோகன் உதவியுடன் சென்னையில் அச்சிடப்பட்டு வெளிவந்தவை ஆகும்.

இதில் வேடிக்கை என்னவெனில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னால் அமைந்திருந்த தோழர் மணியம் புத்தகக்கடையில் ஹம்சத்வனியின் அக்கரைக்குப் போன அம்மாவுக்கு என்ற நூலைக் கண்டு எடுத்துப் பார்த்தேன். உள்ளே 'தமிழியல்' என்று இருந்தது. எப்படி யென்று புரியவில்லை. சில நாட்கள் கழித்து நித்தி கூறியதன் பின்னர்தான் தெளிவு பிறந்தது. சென்னையில் நித்தியைச் சந்தித்த ஹம்சத்வனி அவருடைய கவிதை நூலை வெளியிட உதவி கோரியுள்ளார். அவரும் ஒத்துக்கொண்டு உதவியுள்ளார். ஏதாவது ஒரு வெளியீடு போடுவானேன்! அதுதான் நமது 'தமிழியல்' இருக் கிறதே, எனவே 'தமிழியல்' வெளியீடாகப் போட்டு விடுவோம் என்று முடிவு செய்து, 'தமிழியல்' வெளி யீடானது!

இதுபோலவே, சாந்தி சச்சிதானந்தம் நித்தியை அணுகியபோதும் இதுவே நடந்தது! பெண்களின் சுவடுகளில் 'தமிழியல்' வெளியீடாக வந்தது! நண்பர் யேசுராசாவின் தொலைவும் இருப்பும் ஏனைய கதை களும் சிறுகதைத் தொகுப்பின் இரண்டாவது பதிப்பு, டிசம்பர் 1989இல் பூரணி வெளியீடாக வரவும் சி.மோகன் உதவி யுள்ளார்.

அங்கிருந்து (மதுரையி லிருந்து) சிவகங்கை போய் அன்னம் - அகரம் பதிப்பகம் மீரா அவர்களைச் சந்தித்தோம். சந்தித்த வேளையில் மஹாகவியின் கவிதைகள், நுஹ்மானின் மழைநாட்கள் வரும், தா. இராமலிங்கம் அவர்களின் (புதுமெய்க் கவிதைகள், காணிக்கை தொகுப்புகளுக்குப் பின் அவர் எழுதிய - அலை, புதுசு போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்த) கவிதை களைக் கொடுத்து அவற்றை வெளியிட வேண்டினேன். அவரும் அவற்றுள் ஏதாவது (அவருக்குப் பிடித்த) இரண்டினை வெளியிடுவதாகக் கூறினார். சொன்ன படியே, அவர் மழைநாட்கள் வரும் (மே 1983), மஹாகவி கவிதைகள் (ஜூன் 1984) இரண்டினையும் வெளியிட்டார். தா. இராமலிங்கம் கவிதைகளை அவர் வெளியிடாத நிலையில், நானும் அவற்றைத் திரும்பப் பெறத் தவறிவிட்டேன். பின்னர் அதனை வெளியிட ஒழுங்கு செய்ய விரும்பியபோதும் கைவசம் என்னிடம் பிரதி இருக்கவில்லை. தா. இராமலிங்கம் அவர்களும் சற்றுத் துறவு மனோநிலையில் ஆர்வம் காட்டவில்லை என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர். கண்டியிருந்த ஜோன் டொயிலி என்ற ஆங்கிலேயன், தான் 1815க்கு முன்புவரை இலங்கை அரசாங்கத்தில் மொழிபெயர்ப்பாளனாக இருந்த காலம் வரையான நம்பத்தகுந்த ஆதாரங்களை எழுதி வைத்திருந்தார். நூறு வருடங்களாக தூசிகளோடு தூசியாக கிடந்த அந்த ஆதாரங்கள் தான் கொட்றிங்டனுக்கு 1917ல் நூல் எழுதுவதற்கு ஆதாரமாக அமைந் திருந்தன. ஜோன் டொயிலி மேற் கொண்டிருந்த ஒற்றர் வேலைகளை அதில் காணலாம்.

திருகோணமலை கச்சேரியில் இது போன்ற நடவடிக்கையின் போது, S.C.பெர்னாந்து மேற்கொண்டிருந்த போது, கச்சேரியில் இடமில்லாத காரணத்தால் பழைய டயறிகள் அழிக்கப்பட்ட சங்கதி வெளியானது.

1960ல் லியனார்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அதேசமயம் "சிலோன் ஒப்சேவர்" பத்திரிகையின் கலை விமர்சகராக பணியாற்றிக் கொண்டிருந்தவர் மேர்வின் டி சில்வா என்பவராவார். "காட்டில் ஒரு கிராமம்" நாவல் இலங்கை படைப்பிலக்கியத்தக்கு ஆற்றிய பங்களிப்பை மேர்வின் டி சில்வாவின் கட்டுரைகள் வெளிப்படுத்தின. காலனித்துவ டயறிகளுக்கு உரிய இடத்தையும் அவைகளில் சுட்டிக்காட்டியிருந்தார்.

லியனார்ட் ஃவுல்வ் இலங்கைக்கு வந்த போது அவருக்கென்று திட்டவட்டமான அரசியற்பார்வை எதுவும் இருந்ததாகக் கூற முடியாது. இங்கிலாந்துக்கு மீண்ட பின்பு லியனார்ட் ஃவுல்வ் தொழிற்கட்சியில், குறிப்பாக ஃபேபியின் கழகம் என அழைக்கப்பட்டதான தொழிற்கட்சிக்கு மிகவும் இடதுசார்பான அமைப்பில் செயலூக்கத்துடன் பங்கு பற்றியதைக் காண்கிறோம்.



முதலாம் உலகப் போரை அடுத்தே இலங்கைக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவர்களில் அவரும் ஒருவர். அதன்பின்னர் காலனிய விவகாரங்களில் தொழில் கட்சியின் ஆலோசகராக இருந்த சுதந்திர இலங்கையின் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வருபவரானார்.

சுவிட்சலாந்தின் கன்ரோன் சமஷ்டிமுறையை இலங்கைக்குச் சிபார்சு செய்து, தேயிலைத் தோட்டத்தில் வாழுகின்ற இந்தியத் தமிழர்களின் நலனைப் பேணும் விதத்தில் அவர்கட்காகத் தனியொரு கன்ரோனை பரிந்துரைத்த ஒரேயொருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார் என்பத கவனிக்கத்தக்கது.

அவரது காலத்தில் சேனை பயிர் செய்கையை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை. அரசாங்க ஊழியராக அவரும் அதையே தன் விருப்பத்துக்கு மாறாக செய்ய வேண்டி இருந்தது. 1960ல் இலங்கை வந்தபோது, இதன் நிமிர்த்தமே தான் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டி இருந்தது என்று கருத்து தெரிவித்தார்.

இலங்கையில் காணி சம்பந்தமாக ஆண்டாண்டு காலமாக கடைப்பிடிக்கப் பட்ட கொள்கைகளை- குறிப்பாக ஆங்கி லேய ஆட்சி காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களை அறிந்து கொள்ளும் ஆவணமாக இவரது எழுத்துக்கள் இருக்கின்றன. சிங்கள கிராமத்தவர், நாகரிகமில்லாத சமூகமாக வாழ்ந்ததை படிப்படியாக அவர்கள் பழக்க வழக்கங்கள் மாறி வந்ததையும் தம் வாழ்க்கை அனுபவத்துக் கூடாக அவதானித்து இந்நூலில் செம்மையாக ஆவணப் படுத்தியுள்ளார். அவர்களிடையே தம்மினத்தில் ஒருவரை இழிவுபடுத்த நினைக்கையில் "என்ன தமிழனைப்போல பேசுகிறாய்"(பக்.55) என்ற சொல்லுகிற பழக்கம் இருந்ததைக் கவனிக்கலாம். தமிழர்கள் கறுப்பு நிறத்தவர்கள்(பக்.88) என்று கூறுவதையும், கதிர்காம யாத்திரை மேற்கொள்கிற ஆண், பெண் இருபாலரும் தம்மேனியில் விபூதி அணிந்திருப்பதையும்(பக்.104) நூல் சித்திரிக்கிறது.

தமிழர்களின் கடவுளான கந்தன் மலை யுச்சியில் காட்டிலிருப்பவர். ஒருமுறை ஆற்றைக்கடந்த செல்லமுயன்ற தமிழர்களிடம் தன்னைத் தூக்கி சென்று ஆற்றின் மறுகரையில் விடச் சொன்னதாகவும், அவர்கள் அதைத்தட்டிக் கழித்துவிட்டதாகவும், அடுத்து வந்த சிங்களவர்களிடம் ஆற்றைக்கடக்க உதவிகேட்டு அவர்கள் அதைச் செய்ததாகவும், அன்றுமுதலே கந்தர் சிங்களவர் களின் கடவுள் ஆனார் என்றும், தமிழர் கடவுள் இந்து கோயிலில் புத்தமத சிங்கள கபுராலர்கள் இருப்பதற்கு இதுவே காரணம் என்றும் (பக்.106) ல் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகம் 1970 காலப்பகுதியில் பலாலி ஆசிரியப் பயிற்சிகலாசாலையில் மாணவர்களுக்கு துணைப்பாட நூலாக வைக்கப்பட்டிருந்தது.

இந்த நூலின் ஆசிரியரால் அரசியல், வரலாறு, சர்வதேச அரசியல் குறித்தெல்லாம் பத்துக்கு மேற்பட்ட நூல்கள் எழுதப்பட்டுள்ளன. விமர்சனம், கதை, நாடகம் என்றும் சில புத்தகங்களை இயற்றியுள்ளார். சுயசரிதை கூறும் ஐந்து புத்தகங்களை எழுதியுள்ளார். எனினும் அவருக்கு பேர் சொல்லும் அளவுக்கு அமைந்தது "காட்டில் ஒரு கிராமம்" தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தும் வாசிப்பும் வாழ்க்கையும்

கருணாகரன்



"எப்பொழுதும் எழுத்தைப்பற்றியும் வாசிப்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறீங்களே, இந்தக் காலத்தில் (2014 இல் அல்லது காட்சி ஊடகச் செல்வாக்கு பலமாகியிருக்கும் காலத்தில்) எழுத்துக்கும் வாசிப்புக்கும் என்ன மதிப்பிருக்கிறது? இப்பொழுது புத்தகம் வாசிப்பதை விட தொலைக் காட்சியில்தான் அநேகமானவர்கள் பொழுதைச் செலவழிக்கிறார்கள். இல்லையென்றால் இணையத் தில். வாசிப்பதை விட பார்ப்பது இலகுவானது. அடுத்த தாகக் கேட்பது. காட்சியில் மேலும் நெருக்கத்துக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. ஒரு கதையை வாசிக்கும்போது நமக்குக் கிடைக்கிற அனுபவத்தை விட, அதைக் காட்சியில் பார்க்கும்போது அந்தக் கதையின் களமும் காலமும் பாத்திரங்களும் அவர் களுடைய இயல்பும் இயக்கமும் நேரடியாக அனுபவ மாகின்றன. மேலும் இசையும் ஒளியும் இந்த அனுப வத்தை அதிகமாக்கி வலுவூட்டுகின்றன. இதைப்போல அறிவியலாக இருந்தாலும் சரி, புனைவாக இருந்தாலும் காட்சியில் காணும்போது நேரடியாகப் பங்கு கொள்ளும் அனுபவம் நமக்குக் கிட்டுகிறது. கேட்பது கூட அப்படித்தான்.

இப்படியிருக்கும்போது வாசிப்பிற்கு என்ன சிறப்புண்டு? இன்னும் சொல்லவேண்டுமென்றால், வாசிப்புக்குப் பிந்திய கண்டுபிடிப்பாக பிந்திய ஊடகமாக காட்சிப் புலன் ஊடகமே இருக்கிறது. ஆகவே பிந்திய ஊடகத்தில் வசதிகள் அதிகமிருக்கு. நவீனத்தன்மை கூடியிருக்கு. இதெல்லாம் காட்சிக்கு கட்புலனுக்கே அதிக ஈர்ப்பைக் கொடுக்கின்றன. எனவே நாங்கள் இயல்பாக எப்படி முந்திய ஊடகத்தைப் பெரிதாகக் கொண்டாடலாம்" என்றவாறு கேட்டு ஒரு நண்பர் மின்கடிதம் எழுதியிருந்தார்.

அவருடைய கேள்வி ஒன்றும் புதியதல்ல. அவர் சொல்வதை நாம் மறுக்க முடியாது. இந்த விசயமெல்லாம் நாம் ஏற்கனவே அறிந்ததுதான். இது ஒரு சவாலாக வாசிப்பின் மீது ஏற்பட்ட நெருக்கடியாக இன்று மாறியிருப்பதும் உண்மை. ஆனால், என்ன தான் பிந்திய ஊடகமாக, காட்சியின் வழி அதிக அனுபவச் சாத்தியங்களைக் கொண்டதாக இருந்தாலும் வாசிப்பிற்கு இருக்கின்ற பிரத்தியேக அனுபவம் தனியானது. அதிக சிறப்புமுள்ளது. அதை எதனாலும் குறைத்து விட முடியாது. பிம்பம், சலனம் என்பவற்றில் கிட்டும் அனுபவம் வேறு. வாசிப்பில் கிட்டுகின்ற அனுபவம் வேறு. சலனத்தில் அதன் வேகத்தோடு நமது மூளை இயங்கிக் கொண்டேயிருக்க வேண்டும். காட்சிகளின் மாற்றங்களோடு அவற்றின் போக்கோடு அது பயணித்துக்கொண்டிருக்க வேணும். அப்படிப் பயணிக்கும்போது ஏற்கனவே பார்த்த காட்சியை அனுபவமாக்கிக்கொள்வதற்கு அறிதலாக்கிக் கொள்வ தற்கு எடுக்க வேண்டிய அவகாசத்தை அடுத்து வரும் காட்சி குறுக்கி விடுகிறது. அடுத்த காட்சியை உள்வாங்க வேண்டிய அவசியம் ஒரு நெருக்கடியாக மாறிவிடுகிறது. காட்சி ஊடகங்களுக்குள்ள பிரதான சவால் இது. காட்சி ஊடகம் நவீனமாக இருந்தாலும், அதிக சாத்தியங் களைக் கொண்டிருந்தாலும் இந்தச் சவாலை அதனால் புறந்தள்ள முடியவில்லை.

ஆனால், வாசிப்பில் இந்த நெருக்கடியோ இடறுப்படுதலோ கிடையாது. வாசிப்பில் தாராளமாகச் சுதந்திரம் உண்டு. வாசிப்பின் வெளி அத்தனை நெகிழ்ச்சி யுடையது. வாசகர் எந்த இடத்திலும் தம்மை நிறுத்திக் கொண்டு தமக்குள் பெற்றுக்கொண்ட அதுவரையான அனுபவங்களைச் செரித்துக் கொள்ளலாம். மீள்பயணம் செய்து கொள்ள இயலும். மேலும் கற்பனையைப் பெருக்கியும் கொள்ள முடியும். புதிய சிந்தனையை ஏதோ ஒரு புள்ளியிலிருந்தோ கண்ணியிலிருந்தோ உண்டாக்கிக் கொள்ளலாம். தேவைக்கேற்ப தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகப்படுத்திக்கொள்ளவும் மெதுநிலைப்படுத்திக் கொள்ளவும் முடியும். இதனால்தான் வாசிப்பின் முக்கியமும் முதன்மையும் இன்னும் பெரிதாக வளர்ச்சி யடைந்த சமூகங்களில் கொண்டாடப்படுகிறது.

அறிவின் வேட்கையைத் தீவிரமாகக் கொள் கின்ற சமூகங்கள் வாசிப்பை தங்களின் பிரதானமான செயற்பாடாகக் கொள்கின்றன. வாசிப்பிற்கான இயக்கங்களும் அமைப்புகளும் முறைகளும் மேலும் மேலும் உண்டாகின்றன. பாடத்திட்டங்களிலும் பாடசாலைக் கல்வியிலும் வாசிப்பு முக்கியமான ஒரு செயற்பாடாக, தேவையாக கொள்ளப்படுகிறது. இளமையிலேயே வாசிப்புப்பழக்கத்தையும் வாசிப்பின் ருசியையும் தேவையையும் அறிமுகமாக்க வேண்டும் என்பது இங்கே உணரப்பட்டுள்ளது. மாணவப் பருவத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த வாசிப்பு பின்னர் தொடர்ந்து விரிவடைகிறது. இது பன்முகச் சிந்தனையை வளர்த்துச் செல்கிறது. பன்முகச் சிந்தனை வளர, வளர அறிவு விருத்தியுறுகிறது; பண்படுதல் நிகழ்கிறது. எனவே, வாசிப்பு பன்முகம் கொண்டதாக அமைய அமைய அறிதற்பரப்பும் அனுபவச் செழுமையும் மேலும் விரிவடைகிறது. இந்த அறிவுதான் வாழ்வின் சவால்களை எதிர்கொள்வதற்கு நம்மைத் தயார்ப்படுத்துகிறது. அனுபவம் வாழ்வை ஒழுங்குபடுத்துகிறது. இந்த இடத்தில் எழுத்தாளர் சந்தர ராமசாமி குறிப்பிட்ட ஒரு விடயத்தை நினைவு படுத்திக் கொள்ளலாம். "வாசகனுக்கும் புத்தகங் களுக்குமான உறவு வேறு எந்த ஊடகத்தாலும் முறிக்க இயலாத ஒன்று என்றே நம்புகிறேன். அறிவுடனும் கற்பனையுடனும் சிந்தனையுடனும் வாசகன் கொள்ளும் உறவு புத்தக வடிவத்தில்தான் மிக இயற்கையாக உருவாகிறது. புத்தகம் ஒன்றையே தன் முழுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சாதனமாக வாசகனால் கருத முடிகிறது. மேலும் புத்தகத்துடன் வாசகன் கொள்ளும் உறவு அந்தரங்கமானது. சுயமான காட்சிப் படிமங்களுடன் புத்தக வாசிப்பு சாத்திய மாவதால் - வாசகனுக்கும் ஒரு பங்கு, கற்பனை செய்துகொள்ளும் பங்கு உறுதியாவதில் - சுயதிருப்தி கூடுதலாக ஏற்படுகிறது. புத்தகங்களை வாசகர்கள் கைவிட்டுவிட மாட்டார்கள் என்ற நிலை நாகரிகத்தின் மீதும் எதிர்காலத்தின்மீதும் நாம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஆறுதல் அளிக்கிறது" என்று அவர் குறிப்பிடுவது மிகச் சரியானது.

நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். வாசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டின் வழியாகவும் நம்மையும் சமூகத்தையும் ஒழுங்கு படுத்தி முன்ன கர்த்திச் செல்கிறோம். எழுத்தும் வாசிப்பும் அறிவு சார்ந்த ஒரு செயல்பாடு. அறிவுசார்ந்த செயல்பாடுகள் தான் எப்பொழுதும் மனித சமூகத்தை ஈடேற்றிக் கொண்டிருக்கின்றன. மனித சமூகம் அறிவின் ஒளியில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது. அறிவு தான் ஏனைய விலங்கினங்களிலிருந்து மனித விலங்கை வேறுபடுத்தியது. எத்தனை வளர்ச்சியை எட்டினாலும் மனிதருடைய அறிவுப்பயணம் முடிந்து விடுவதில்லை. இது நியதி. பிரபஞ்ச விதி. அதாவது, காலந்தோறும் கணந்தோறும் பிரபஞ்சத்திலும் உலகிலும் சமூகத்திலும் நம் மனதிலும் வாழ்விலும் சவால்கள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. புதிய புதிய கோணங்களி லிருந்து இந்தச் சவால்கள் முளைத்துக் கொண்டிருக் கின்றன. ஒவ்வொரு சவாலையும் மனிதர்கள் முறியடிக்க முறியடிக்கப் புதுப் புதுச் சவால்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு சவாலும் நெருக்கடிகளை உண்டாக்கும் தீவிர சக்தி வாய்ந்தவை. புதிது புதிதாக முளைக்கும் சவால்களை முறியடித்தே போராடியே வாழவேண்டும். இது நியதி. பிரபஞ்ச விதி. எனவே, அறிவைப் பெருக்க வேண்டியது நியதி.

ஆகவே, "நாம் வாழும் காலத்தை மறுபரி சீலனை செய்வதும் சகல மனித வேற்றுமைகளுக்கும் எதிராகச் சிந்திப்பதும் நம் சிந்தனைகளையும் அறிவுகளையும் அனுபவங்களையும் சகமனிதனுடன் அவனது தேவையறிந்து ஆழமாகப் பரிமாறிக் கொள்வதும் மிக முக்கியமானவை" என்று சுந்தர ராமசாமி சொல்வதை இங்கே நாம் மேலும் கவனிக்கலாம்.

எனவே, தங்களைச் சுற்றிக் கயிற்றுப் பின்னலாக இறுக்கும் சவால்களை முறியடிக்க வேண்டும், விலக்கிக் கொள்ள வேண்டும் என்றால் அறிவை மேம்படுத்துவது அவசியமானது. அறிவை மேம்படுத்துவதன்மூலமே வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளலாம். மனித குலத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்ளலாம் என்று மனித மனம் கண்ட றிந்துள்ளது. என்பதால் அறிவு சதா தேவைப்படுகிறது. இதற்காக மனித மூளை இடையறாது தொழிற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்தப் பூமியில் மனித மூளை யின் உழைப்பே மிகப் பிரமாண்டமானது. இந்த உழைப் பின் விளைவுதான் அறிவு. அறிவுக்காக, அறிவைப் பெறுவதற் காகவே இந்த உழைப்பைச் செய்கிறது மூளை. இதற் கெல்லாம் தூண்டலை வழங்குகிறது வாசிப்பு.

வாசிப்பு என்பது பல வகையான அனுபவங் களையும் அறிவையும் திரட்டிப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பொறிமுறையாகும். இந்தப் பொறிமுறையின் மூலம் நமக்கு மட்டுமல்ல எதிர்காலச் சந்ததிக்கும் மனித குலத்துக்கும் நாம் அறிவைப் பரிசளிக்கிறோம். அறிவின் தொடர்ச்சியறுந்து படாமல் பாதுகாத்துக் கொள்கிறோம்.

எனவேதான் வாசிப்பை மேன்மையுடையது, அவசியமானது என்று சொல்கிறேன். இதனால்தான்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் வாசிப்புக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இனியும் கொடுக்கும். இதற்காகத்தான் பாட சாலைகளிலேயே நூலகங்களும் நூல்களும் நூலகர் களும் வாசிப்பு முறைமையும் உருவாக்கப்பட்டுள்ளது. சமூக நிலையிலும் வாசிப்பின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. வாசிப்பின் வழியாக அறிவுப் பெருக்கமும் மனப்பண்பும் உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று உலகம் தொடர்புறுதலின் வழியாக இணைக்கப்பட்டிருப்பதால் எதையும் எவரையும் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. இதற்கு வாசிப்பு உதவுகிறது. வாசிப்புத்தான் அவசியமானது.

ஆனால், இப்படியெல்லாம் இருந்தும் தமிழில் வாசிப்பின் நிலை மிகக் கீழிறங்கியே உள்ளது. நூலகங்கள் ஆட்களின்றி வெறிச்சோடிப்போயுள்ளன. வாசிக்கவும் அதைப்பற்றி உரையாடவும் கூடியதாக இருந்த சனசமூக நிலையங்களின் பக்கம் இப்பொழுது யாருமே போவதில்லை. ஒரு காலம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதற்காகக் கடுமையாகக் கோபமுற்ற மக்கள், அந்த நூலகத்தை இழந்ததை தங்கள் வாழ்வின் மீது நிகழ்த்தப்பட்ட பெரும் அநீதியென உணர்ந்து கொந்தளித்தவர்கள், இந்த எரிப்பு தங்களின் ஆன்மா மீது படிந்த ஆழமான வடு என்று கொண்டவர்கள் இப்பொழுது நூலகங்களைக் குறித்து கரிசனையற்று வருகிறார்கள். இது வெட்கத்துக்கும் துக்கத்துக்குமுரியது. மட்டுமல்ல, அடிப்படையில் முரணானதுமாகும். நூலக எரிப்பை கொடுமையாக உணர்ந்தவர்கள் இன்று நூலகங்களின் பக்கமே முகம் திருப்ப மறுப்பது என்பதன் அர்த்தம் என்ன?

இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

நூலக எரிப்பை அரசியலுக்காகப் பயன்படுத்திய அளவுக்கு அதை நம் பண்பாட்டோடு, இதயத்தோடு, ஆன்மாவோடு பிணைக்கவில்லை. இதன் விளைவே இன்று நம் நூலகங்களில் வெளவால்கள் பறக்கக் காரணம். நமது புத்தகங்கள் விற்க முடியாமல் பதிப்பாளர் வீடுகளில் தேங்குகின்றன. பதிப்பகங்கள் வளராமல் இருக்கின்றன. புத்தகப்பண்பாடும் வாசிப்புச் செயற்பாடும் உறைநிலைக்கு அல்லது போதாமை நிலைக்குப் போயிருக்கிறது. இந்த நிலைமை தமிழ்ச் சமூகத்தை மேலும் கீழ் நிலைக்கே கொண்டு சேர்க்கும். அறிவின் வேட்கையிலிருந்து விலகிச் செல்லும் சமூகங்கள் ஒரு போதும் மேல்நிலையைப் பெற முடியாது. மேல் நிலையைப் பெற முடியாத வாழ்க்கைக்கு என்றும் எங்கும் மதிப்பிருப்பதில்லை.

•

உதட்டு மொழிகள்

மொழிகள்கூட
இப்போது
நாடகமாடத்
தொடங்கிவிட்டன.
அவை
உதட்டில் உட்கார்ந்து
அழகிய வார்த்தைகளாய்
ஊர்வலம் போகின்றன...

உள்ளத்தில்
இருள் படிந்து
பொய்மைகள் குடியிருந்தாலும்
வார்த்தை ஜாலங்களில்
சுதந்திரப்பூங்காற்று
வசந்தமாய் வீசுகிறது.

எழுத்து உலகில்
அநாதை ஆகிவிட்ட
சொற்கள்
இப்போது
வல்லோனின் உதட்டில்
உறவாடி
அரசியல் அகராதிகளில்
அரங்கேற்றம் காண்கின்றன.



வட அல்வை சின்னராஜன்

இந்த உலகம்
குற்றவாளிகளின்
புகலிடம்.
ஒளிப்பதற்கு
வார்த்தைகள் கட்டிய
வைரக் கோட்டைகள்
இருக்கும் வரை
அவர்கள் என்றுமே
சுற்றவாளிகள் தான்.

துப்பாக்கிகளைச்
சுமந்து நிற்கும்
சர்வாதிகாரிகள் கூட
தோல்வியின் பின்னே
தம்மைப் பாதுகாக்க
உதட்டு மொழிகளையே
மந்திரங்களாக
உச்சாடனம்
பண்ணுகின்றார்கள்.

உலகில்
சமாதானம்
மலர வேண்டுமாயின்
உதட்டு மொழிகள் யாவும்
உள்ளத்து மொழிகளாய் மாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு, ஒரு கட்டத்தில் அவரிடமும் பிரதி இல்லாது போய்விட்டது என்று நினைக்கிறேன். தற்போது யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த க. அருந்தாகரன் அவர்கள், தா. இராமலிங்கம் அவர்களின் முழுமையான தொகுப்பினை (புதுமெய்க் கவிதைகள். காணிக்கை தொகுப்புகளுடன் பின்னர் வெளிவந்த கவிதை களையும் சேர்த்து) வெளியிடவிருப்பது அறிந்து, கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக எனது மனதில் நிலவிய குற்ற உணர்விலிருந்து விடுபட்டுள்ளேன் என்றே கூறலாம்!

திருச்சியில் பேராசிரியர் ஆல்பர்ட், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கே.பூரணச்சந்திரன், அம்ஷன்குமார், மானுடம் சஞ்சிகையின் ஆசிரியரான விஜயகுமார் எனும் இளைஞர் ஆகியோரைச் சந்திக்க முடிந்தது.

பின்னர் சென்னை சென்றோம். சென்னையில் க்ரியா ராமகிருஷ்ணன், அசோகமித்திரன், எஸ்.வி.ராஜ துரை, மலர்மன்னன், சா.கந்தசாமி எனப் பலரையும் சந்தித்து உரையாடி மகிழ்ந்தோம். ஒருசிலரை இரண்டு மூன்று தடவைகளும் சந்தித்து அளவளாவினோம். எடுத்துச்சென்ற நூல்கள், சஞ்சிகைகளில் அவரவர்கள் ஈடுபாட்டிற்கு ஏற்பக் கொடுத்தோம். பதிப்பகங்கள், புத்தகசாலைகள் எனப் பல இடங்களுக்கும் சென்று வந்தோம். ஆங்காங்கு சிலருடன் தொடர்புகளும் ஏற்படுத்திக் கொண்டோம்.

தற்போது கனடாவில் வாழும் என்.கே.மகாலிங்கம் அவர்களின் தியானம் (சிறுகதைகள் - பூரணி வெளியீடு, ஒக்ரோபர் 1982) நூலை க்ரியா ராம கிருஷ்ணன் உதவி யுடன் வெளியிட்டோம். அதற்கு அட்டை ஓவியம் வரைந்தவர் அச்சுதன் கூடலூர்.

அதேவேளை, எம்.ஏ. நுஃமானின் 21 கவிதைகளின் தொகுப்பான அழியா நிழல்கள் (ஒக்ரோபர் 1982), குப்பிழான் ஐ.சண் முகனின் சாதாரணங்களும் அசாதாரணங்களும் (சிறுகதைகள் - ஒக்ரோபர் 1983) ஆகிய இரு நூல்களையும் நர்மதா பதிப்பகம் வெளியிட்டு உதவியதும் குறிப்பிடத்தக்கது.

எஸ்.வி.ராஜதுரை சேரனின் இரண்டாவது சூரிய உதயம் (கவிதைகள்) நூலைப் பொதுமை வெளியீடாகக் 1983 ஜூனில் வெளிக்கொணர்ந்தார். அது வெளி வந்த தருணத்தில்தான் இலங்கையில் 1983 கலவரம் நிகழ்ந்தது. அதன் காரணமாக அந்நூல் வெளியீட்டு நிகழ்வின்போது பெருந்திரளான மக்கள் கூடினரென அறிந்தேன். அதனால், சேரன் பெரியளவு கவனத்திற்கு உரியவரானார். சேரனின் இன்றைய புகழுக்கு அது அத்திவாரம்போல் ஆனது எனலாம்!

பின்னர் பெங்களூர் சென்று படிகள் குழுவினரில் ஒருவரான பு. சிவராமகிருஷ்ணன் வீட்டில் 2, 3 நாட்கள் தங்கித் தமிழவன், காவ்யா பதிப்பகம் சண்முகசுந்தரம் ஆகியோரைச் சந்தித்தோம். பெங்களூர் நகரையும் சுற்றிவந்தோம். தமிழவன் பெருமளவில் ஈழ இலக்கியம் தொடர்பில் ஆர்வம் காட்டியமையும், படிகள் குழுவினர் தொடர்பினால் பின்னர் வெளிவந்த படிகள் இதழ்களில் ஈழத்துப் படைப்புகளும் அவை சார்ந்த பல கட்டுரைகளும் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கன.

காவ்யா பதிப்பகம் சண்முகசுந்தரம் தொடர் பினால் சி.சிவசேகரம் அவர்களின் நதிக்கரை மூங்கில் (29 கவிதைகளின் தொகுப்பு) காவ்யா வெளியீடாக டிசம்பர் 1983இல் வெளியானது.

பின்னர் கோவை சென்று சில தினங்கள் தங்கி கோவை ஞானி, சிற்பி பாலசுப்ரமணியம், சுகுமாரன், இரண்யன், குறிஞ்சி இன்னும் சிலரையும் சந்தித்து உரையாடினோம்.

இவ்வாறு சந்தித்த பலருடனும் தொடர்ந்த கடிதத் தொடர்பில் நாம் இருந்தததோடு அலை, திசை இன்னும் நூல்களை அவ்வபோது அனுப்பிக் கொண்டி ருந்தோம். அதனூடாக ஈழத்து இலக்கியம் தொடர்பான கவனத்தை அவர்கள் பெற நாம் வழி செய்தோ மெனலாம்.

1971இல் கோவையிலிருந்து வெளியீட்டை தொடங்கியது வானம்பாடி என்னும் கவிதை இதழ். புவியரசு, சிற்பி, மீரா, தமிழன்பன், ஞானி, சக்திக்கனல், மு.மேத்தா, அக்கினிபுத்திரன், அப்துல் ரகுமான், அபி, கலாப்ரியா, இன்குலாப், கல்யாண்ஜி போன்ற அக்காலகட்டத்தின் கவிஞர்கள் 'வானம்பாடி' இதழில் எழுதியுள்ளனர். ஞானி, சிற்பி பாலசுப்ரமணியம், புவியரசு ஆகியோருடைய தொடர்பின் விளைவாக டிசம்பர் 1982இல் வெளிவந்த வானம்பாடியின் 21ஆவது இதழ், ஈழத்துக் கவிதைச் சிறப்பிதழாக மலர்ந்தது. மஹாகவி, முருகையன், நீலாவணன், மு.பொன்னம்பலம், தா.இராமலிங்கம், சண்முகம் சிவலிங்கம், நுஃமான், யேசுராசா, சிவசேகரம், ஜெயபாலன், கவியரசன், புஷ்ப ராஜன், வில்வரத்தினம், உமாவரதராஜன், எச்.எம்.பாறூக், ஹம்சத்வனி, ஊர்வசி, ஆதவன், பாலசூரியன், நா.சபேசன் ஆகியோ ருடைய கவிதைகளும் சேரன், செ.யோகராசா ஆகிய இருவரதும் கட்டுரைகளும் இடம் பெற்றன. அதன் அட்டையில் கோ.கைலாச நாதனின் ஓவியம் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது! அவ்விதழில் ஆசிரியர் குறிப் பில்: "ஈழத்துக் கவிதைகளைத் தொகுத்து உருவாக்குவதற்கு கவிதைத் தெரிவுசெய்து உதவியவர்கள் எம்.ஏ.நுஃமான், அ.யேசுராசா, உ.சேரன் ஆகிய நண்பர்கள். ஓயாது தூண்டி உற்சாக மூட்டியவர் இ.பத்மநாபன்" எனக் குறித்துள்ளார்.

வானம்பாடியின் 22ஆவது இதழ் செப்ரெம்பர் 1983இல் வெளிவருகிறது. அதற்கு முன்பாக இலங்கை யில் 1983 இனக் கலவரம் நடந்து முடிகிறது. எனவே, அதைக் குறிக்கும் ஒரு இதழாகவே வெளியானது. மகாகவி பாரதியாரின் 'மிஞ்ச விடலாமோ?' கவிதை யுடன் தொடங்கி, நிர்மலாவின் மொழிபெயர்ப்பில் 'சபதம்' எனும் இத்தாலியக் கவிதை, சேரன் கவிதைகள் இரண்டு, ப.சிதம்பரநாதனின் "இலங்கை எரிகிறது" கவிதையும் தேனரசன், சிற்பி ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உங்களது 'தமிழியல்' நிறுவனத்தின் வெளியீட்டு முயற்சிகளிலான அனுபவங்கள் எத்தகையவை?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளராகவிருந்த கலாநிதி ரகுபதி அவர்கள் அவரது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வாக எழுதியது Early Settlements in Jaffna: An Archaeological Survey ஆகும். 1980களின் ஆரம்பம் தமிழ்த் தேசியப் போராட்டம் சூடு பிடிக்கத் தொடங்கிய காலகட்டம். ரகுபதியுடன் அறிமுகம் ஏற்பட்டிருந்த சூழலில் அந்நூல் பற்றி அறிந்தபோது, யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் தமிழர்தான் என்பதை உறுதிப்படுத்தும் ஓர் ஆய்வு என்பதாலும், பௌத்தம் இருந்தமைக்கான ஆதாரங்களைக் காட்டி, அது சிங்களவர் பிரதேசம் என சிங்கள அரசு கூற விரும்புவதைக் கண்டபோதும், ரகுபதியின் அந்த ஆய்வு நூலாக வருவது அவசியம் என நான் கருதினேன். அப்போது கோண்டாவிலில் ரகுபதி வசித்து வந்தார். அவரிடம் 3, 4 தடவைகள் சென்று அதனை நூலாகக் கொண்டுவர வேண்டும் எனும் என் எண்ணத்தைக் கூறிவந்தேன். "யோசிப்போம், யோசிப்போம்" என்று கூறிவந்தவர், இறுதியில் ஒருவாறாகச் சம்மதித்தார்.



அலை வெளியீடு உடன் எனக்குத் தொடர்பு இருந்தபோதும், அலை மார்க்சிய ஈடு பாட்டுடன் இயங்குவதாகும். எனவே, மார்க்சிய சிந்தனைக்குப் புறம்பான நூல்களை வெளியிடுவதில் சில சிரமங்கள் எழலாம் என ஓர் அச்சம் மனதில் இருந்தது. கா.கைலாசநாத குருக்களின் வடமொழி இலக்கிய வரலாறு போன்ற நூல் ஓர் உதாரணம். எனவே, சுயமான ஒரு வெளியீட்டின் மூலம் நூல்களைக் கொண்டுவரும் எண்ணம் சிலகாலமாக மனதில் இருந்தது. அது மட்டுமல்லாமல், பதிப்பகம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பாக ஒரு செயற்திட்டத்தினை க்ரியா ராமகிருஷ்ணனைக் கொண்டு தயாரித்ததும் நினைவில் நிற்கிறது. அது இப்போது கைவசம் இல்லை.

எனவே, ரகுபதியின் நூலை வெளியிடுவதானால் புதியதோர் பதிப்பக வெளியீடாகக் கொண்டுவரலாம் எனத் தோன்றியது. நண்பர்கள் அ.யேசுராசா, மு.நித்தியானந்தன், எம்.ஏ. நுஃமான், நா.சுப்ரமணியன், பொ.ரகுபதி, மயிலங்கூடலூர் பி.நடராசன் இன்னும் பிற நண்பர் களுடன் இணைந்து செயல்படுவதே நோக்கம். பதிப்பகப் பெயர் பற்றி ரகுபதியிடம் குறிப்பிட்டபோது, அவர்தான் தமிழியல் என்ற பெயரைப் பயன்படுத்தலாம் என்றார்.

ரகுபதியின் நூலைத் தமிழகத்தில் அச்சிடவே விரும்பினேன். எனவே, தமிழகம் செல்ல உத்தேசித்தேன். அவ்வேளை ரகுபதி, ஈழநாடு ஆசிரியர் ந.சபாரத்தினம் அவர்கள் ஈழநாடு பத்திரிகையில் எழுதிய பல ஆசிரியத் தலையங்கங்கள் தொகுக்கப் பட்டு நூலாக வெளிவருதல் அவசியம் என்றார். அப்படியானால், அவற்றைத் தொகுத்துத் தரும்படி அவரிடமே கேட்டேன். பின், அவரும் ஆசிரியரான மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்களும் இணைந்து தலையங்கங்களைத் தொகுத்துத் தந்தார்கள்.

ஆக, ஈழநாடு தலையங்கங்களின் தொகுப்பினையும் ரகுபதியின் நூலினையும் தமிழகத்தில் அச்சிடவென ரகுபதியையும் அழைத்துக்கொண்டு போக விரும்பினேன். ஆயினும், தமிழகம் செல்ல ஆகும் பயணச் செலவினை யோசித்தபோது சிரமம் எனப்பட்டது. நண்பர் சிவரஞ்சித் ஊடாகச் சிலரை அணுகியதில், அவர்களது படகில் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. மிகுந்த சிரமமானதொரு பயணமாக அது அமைந்தாலும், வாழ்கையில் நான் பெற்ற ஒரு மிகப் பெரிய அனுபவம் என்றே சொல்லலாம்!

மூன்று பெண் குழந்தைகளின் தந்தை ஸ்தானத்தில் இருந்த ஒருவன் இவ்வாறு படகில் தமிழகம் செல்வது, எவ்வாறான மனப் பாதிப்பினை அவன் மனைவிக்கு ஏற்படுத்தியிருக்கும் என்று இப்போதும் எண்ணிப் பார்ப்பதுண்டு!

பின்னர் சென்னை சென்று க்ரியா ராமகிருஷ்ணனுடன் தங்கி நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இறங்கினோம். அவ்வேளைதான், 1) க்ரியாவில் கணினி வழி நூல் தயாரிப்புத் தொடங்கி யிருந்தனர். 2) மட்டக்களப்புச் சிறை யுடைப்பின் பின் இலங்கையிலிருந்து வெளியேறி நண்பர் நித்தியானந்தனும் நிர்மலாவும் சென்னைக்குப் புலம் பெயர்ந்திருந்தனர்

க்ரியா ராமகிருஷ்ணன் ரகுபதியின் நூலை என்ன அளவில், எவ்வகை வடிவமைப்பில் வெளியிடலாம் என்பதற்கு 2, 3 மாதிரி வடிவங்களைச் செய்து தந்தார். எல்லோருமாகச் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தோம். பின் பல நாட்கள் தினமும் க்ரியா ராம கிருஷ்ணன், நித்தி, ரகுபதி மூவரும் (க்ரியா ராமகிருஷ்ணன் வீட்டில்) கூடியிருந்து அந்நூல் பிரதியினை வரி வரியாக வாசித்து மெருகூட்டினார்கள். Book Editingஇல் க்ரியா ராம கிருஷ்ணன் கைதேர்ந்தவர் என்பது யாவரும் அறிந்ததே. நான் பார்வையாளனாக இருந்து ரசித்தேன். கூடவே Book Editing பற்றிய அறிவினையும் ஓரளவேனும் பெற்றுக் கொண்டேன்! ந.சபாரத்தினம் அவர்களின் ஈழநாடு தலையங்கங்களின் தொகுப்பினை வெளி யிட கோவை சமுதாயம் பிரசுராலயம் கோவிந்தனிடம் வேண்டு கோளை விடுத்திருந்தேன். அவரும் ஒத்துக்கொண்டார். இதுபற்றி ரகுபதியிடமும் தெரிவித்துவிட்டு நான் ஓரிரு வாரங்களின் பின்னர் இலங்கை திரும்பிவிட்டேன். பின்னர் பல மாதங்களாகியும் நூல் எதுவும் வெளிவர வில்லை. தொலைபேசியில்ரகுபதியுடன்பேசியும்பார்த்தேன்.

இறுதியாக, மிகுந்த தாமதத்தின் பின், ந. சபாரத்தினம் அவர்களின் ஈழநாடு தலையங்கங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு 'ஊரடங்கு வாழ்வு' என்ற தலைப்பில் ஜூன் 1985இல் வெளியானது. ரகுபதிதான் அச்சிட்டு வெளியிட்டார். அதுவே, தமிழியலின் முதல் வெளியீடாகும்!

மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து, ஜூலை 1987இல் பொன்னம்பலம் ரகுபதியின் Early Settlements in Jaffna: An Archaeological Survey வெளிவந்தது. ஆனால், அது தமிழியல் வெளியீடாக அல்லாமல், ரகுபதியின் மனைவி திருமதி தில்லிமலர் ரகுபதி வெளியிட்டதாகப் பதிவாகியிருந்தது!

அத்துடன், 'Coming to the publication part of this research, a friend of mine, who wishes to remain anonymous, initiated the idea and prepared the groundwork' என்று Acknowledgements (நன்றியுரை என்று கூறலாமா?) பகுதியில் தெரிவித் துள்ளார். அது யாரோ தெரியவில்லை!! நண்பர் நித்தியானந்தன் பற்றியும் குறிப்பெதுவும் இல்லை! எவ்வாறாயினும், எனது விருப்பம் நிறைவேறியதில் மகிழ்ச்சியே!

1983 ஜூலை கலவரத்தினை அடுத்துக் கவிஞர்கள் பலரும் அதன் எதிர்வினையாகக் கவிதை களை எழுதினார்கள். அதற்கு முந்திய காலகட்டத்திலும் தமிழ்த் தேசிய எழுச்சி சார்ந்த கவிதைகள் சில எழுதப் பட்டிருந்தனதான். படைப்புலகில் சிறுகதை, நாவல் வடிவங்களைவிடவும்உடனடியாக வெளிப்பாடு காண்பது கவிதை வடிவமே! அந்தவகையில்தான் கவிதைகள் பல உருவாகின; தொடர்ந்தன. இந்நிலையில் அவ்வாறான அரசியல் கவிதைகளைத் தெரிவு செய்து ஒரு தொகுப் பினை வெளிக்கொணர நண்பர்கள் சிலர் விழைந்தோம். நண்பர்கள் அ.யேசுராசா, உ.சேரன், ஆசிரியர் மயிலங் கூடலூர் பி.நடராசன் ஆகியோருடன் இணைந்து கவிதைகளைத் தெரிவுசெய்து மரணத்துள் வாழ்வோம் என்ற தலைப்பில் கார்த்திகை 1985இல் பிரசுரித்தோம். 31 கவிஞர்களின் 82 கவிதைகள் இடம்பெற்றன. உ.சேரன் அதற்கான முன்னுரையை எழுதினார்.

'அலை' ஒன்பதாவது இதழில் (வைகாசி - ஆனி 1977) சண்முகம் சிவலிங்கத்தின் 'வெளியார் வருகை' கவிதை வெளியாகியுள்ளது. அதில் ஓரிடத்தில், "இனி மரணத்துள் வாழ்வோம்" என்ற வரி உள்ளது; இதிலிருந்தே 'மரணத்துள் வாழ்வோம்' எனும் பெயரை அந்த அரசியல் கவிதைத் தொகுப்புக்கான தலைப்பாக நாம் கொண்டோம்.

ஆயிரம் பிரதிகள் நல்ல பதிப்பாகவும், மேலும் இரண்டாயிரம் பிரதிகள் மலிவுப் பதிப்பாகவும் அச்சிட்டு வெளியிட்டோம். பெருமளவு எழுச்சி பெற்ற நிலையில் நண்பர்கள் பலரும் விநியோகம் செய்ததனால் பரவலாக மக்களைச் சென்றடைந்தது என்றே கூறலாம். பதினொராண்டின் பின்னர் மார்கழி 1996இல் அதன் மறுபதிப்பினை கோவையில் உள்ள விடியல் பதிப்பகம் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

இன்றளவும் ஈழத்துக் கவிதை பற்றிப் பேசுகை யில், பதினொரு ஈழத்துக் கவிஞர்கள். மரணத்துள் வாழ்வோம் ஆகிய இரு தொகுதிகளையும் பற்றிப் பேசாமல் விடமுடியாது என்றாகிவிட்டது என்பதே உண்மை! அந்தவகையில், அவ்விரு தொகுதிகள் வெளிவருவதில் என் பங்கும் உண்டு என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறைவும்!

1981இல் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர்தான் ஏ.ஜே.கனகரத்னா, மு.நித்தியானந்தன், எம்.ஏ.நுஃமான், க.பாலேந்திரா, மு.புஷ்பராஜன், க.சட்டநாதன், குப்பிழான் ஐ.சண்முகன், மு.பொன்னம் பலம், சு.வில்வரத்தினம், சசி கிருஷ்ணமூர்த்தி, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், புதுசு ரவி, நா. சபேசன் போன்றவர்களின் தொடர்பு முதன்முதலாகக் கிட்டுகிறது என நினைக்கிறேன். ஓவியர் மாற்கு அவர் களையும் அப்போதுதான் சந்திக்க முடிந்தது. அலையில் ஓவியங்களும் ஓவியம், சினிமா சார்ந்த கட்டுரைகளும் வெளிவந்து அவை பற்றிப் பரவலான அக்கறை வளரத் தொடங்கிய காலகட்டம் எனக் கருதுகிறேன். அதனால், எனக்கும் அவை பற்றிய ஈடுபாடு ஓரளவு பற்றிக் கொண்டது எனலாம்! போராட்டச் சூழலில் குறிப்பாக ஓவியம் பற்றிய பிரக்ஞையும் தொற்றிக்கொண்டதும் உண்மையே. தவிரவும் கணையாழியிலும் 1979/1980இல் மாதம்தோறும் ஓர் ஓவிய, சிற்ப கலைஞன் பற்றிய கட்டுரை தொடர்ந்து வந்தது. இனி, புதுயுகம் பிறக்கிறது போன்ற தமிழகச் சிறுசஞ்சிகைகளிலும், தமிழகத்தி லிருந்து வெளிவந்த நுண்கலை, UNESCO கூரியர் எனும் மாத இதழ் ஆகியவற்றிலும் ஓவியம் தொடர்பான கட்டுரைகள் வெளிவந்தன. 1980இல் தமிழகம் சென்று திரும்பிய வேளை க்ரியா ராமகிருஷ்ணனிடமிருந்து பெற்றுவந்த 'நவீன ஓவியம்: சில விளக்கங்கள்' எனும் 1979இல் பொள்ளாச்சியில் நடைபெற்ற ஓவியக் கண் காட்சி ஒன்றின்போது வெளியிடப்பட ஒரு சிறு பிரசுரத் தினை, அலை 15ஆவது (புரட்டாதி மார்கழி 1980) இதழில் மறுபிரசுரம் செய்திருந்தோம். இவற்றுடன் ஓவியர் மாற்குவுடன் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது. எல்லாமாக, அவரைச் சிறப்பிக்கும் - கௌரவிக்கும் நோக்கில் ஒரு சிறப்பு வெளியீடு கொண்டுவரும் எண்ணம் முளைவிட்டது.

யேசுராசா, நிலாந்தன், கனக. சுகுமார், பொன். பூலோகசிங்கம், ஆசிரியர் ஆ.சபாரத்தினம் ஆகியோருடைய உதவியுடன், 1987 ஆவணியில் தேடலும் படைப்புலகமும் எனும் நூலை வெளிக்கொணர முடிந்தது. ஓவியர் மாற்கு பற்றிய கட்டுரைகளுடன், அவரது ஓவியங்களும்; பிற ஈழத்து ஓவியர்கள் சிலர் பற்றிய குறிப்புகளுடன், இந்திய, மேற்குலக ஓவியர்கள் பற்றிய கட்டுரைகள், ஓவியங் களுடனும் அந்நூல் வெளிவந்தபோது ஈழத்திலும், தமிழகத்திலும் பலரதும் பாராட்டையும் பெற்றது. அந்நூலினை அழகுற வடிவமைத்துத் தந்தவர் கவிஞரும் ஓவியருமான நிலாந்தனாவார்! அன்றைய தினத்தில் அதனை அச்சிட ஆன செலவு ரூபாய் 45,000 ஆகும்!! கனக. சுகுமார், பொன். பூலோகசிங்கம், ஆசிரியர் சபாரத் தினம் ஆகியோருடைய உதவியினால் பலரிடமிருந்தும் நிதி உதவியினைப் பெறல் சாத்தியமாயிற்று! தவம் என்பவரின் 'ஓவ்செற்' தயாரிப்புடனும், தேவையான PLATES நண்பர் ரஞ்சகுமாரின் உதவியுடன், கொழும்பு பிரேமதாச நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு நண்பர் யேசுராசா எடுத்துவந்தும், யாழ்ப்பாணம் சித்ராலயா ஸ்ரூடியோவில் புளக்ஸ் தயாரிக்கப்பட்டும், நியூ ஈரா பப்ளிகேசன் லிமிட்டட் மற்றும் சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம் ஆகியவற்றில் அச்சிடப்பட்டும் நூல் முழுமையானது.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் கூத்துவழி நடனங்கள்

ஆதிமனிதனின் ஆனந்தமும் ஆட்டத்திலேதான் துவங்கியது. வேட்டையாடி வெற்றிபெற்ற விலங்கை வைத்துக்கொண்டு தன் கூட்டத்தினருடன் அதை எவ்வளவு போராட்டத்தின் மத்தியில் வெற்றி கொண்டோம் என எடுத்துரைத்து ஆடி மகிழும்(Narrative theatre) எடுத்துரைப்பு அரங்கு அன்றே வடிவம் பெற்று விட்டது.

நடைபெற்ற நிகழ்வை மகிழ்வுக்காகவும் திருப்திக்காகவும் மீள மீள ஆடி அரங்கேற்றிய போது ஒரு வித பயிற்சியும் அந்தப்பயிற்சியினால் மீண்டும் மீண்டும் வேட்டையாடுதலில் வெற்றிகள் குவிந்த போது எழுந்த நம்பிக்கையும் இந்த எடுத்துரைப்பு அரங்கை தொடர்ந்து தொழிற்பட வைத்தது. இதுவே ஒரு சடங்காக(ritual) மாறி வேட்டையாடுதலை ஒத்திகை பார்த்துவிட்டு செல்லுமாப்போல் ஆகியது. அந்த மீளமீள செய்யும் சடங்கும் நம்பிக்கையும் அந்த ஆடலில் கிடைத்த மகிழ்வும் எடுத்துரைப்பு அரங்கை வளர்த்தெடுத்தது என்றால் மிகையாகாது.

இவ்வாறான வேட்டையாடல் எடுத்துரைப்பு அரங்கில் ஆடிமகிழ்ந்த துள்ளி குதிப்பு - குத்து மிதிப்பு ஆட்டங்கள் மட்டும் தனிப்பயிற்சிகள் ஆகியபோது அவை கரணங்கள் ஆகின. ஒரு முழுவடிவ எடுத்துரைப்பு அரங்கின் பகுதிகள் ஆகின.

பின்னாளில் சமூகம் நகர்ந்து திரியும்(Nomadic life) வாழ்வியல் முறையில் இருந்து ஆற்றங்கரை விவசாயப் பண்பாட்டுக்கு முன்னகர்ந்தபோது இந்த ஆட்டங்களும் பாட்டுக்களும் நாட்டார் அரங்குகள் ஆகவும் நாட்டார் பாடல்கள் ஆகவும், மக்கள் அனுபவப்பகிர்வுகள் நாட்டுப்புறக்கதைகள் ஆகவும் பரிமாணம்பெற்றன.

நெருப்பின் கண்டு பிடிப்பும், சில்லுகளின் பயன்பாடும் மனித குலத்தின் வாழ்வில் பன்மடங்கு முன்னேற்றம் காண வைத்தது. மொழிப்பயன்பாடு சைகைமுறைகளிலிருந்தும், குறியீட்டு தகவல் பரிமாற்ற முறைமைகளிலிருந்தும் வளர்ச்சிபெற்று இலக்கிய மொழியும், அணிகளின் உபயோகமும் என ஓர் உயர்தரத் தினை அடையும் ஆட்டவடிவங்களும், மனித சாகசக் கதை கூறும் அரங்குகளும் பல்வகைத்தன்மை பெற்றன (Multi faceted theatre)

குழும அரசியல் வேற்று அரச இயல் ஆகி சக்கரவர்த்தி சாம்ராஜ்ய அரசுகளின் வரலாறுகள் ஆகி சமூக அமைப்பு சிக்கல்தன்மை அடையவும், வாழ்வியல் நம்பிக்கைகள் சமய நம்பிக்கைகள் ஆகி தத்துவ வடிவங்கள் பெறவும் மனித குல வரலாற்றின் பெறுமானம் பல்பரிமாணம் பெற்றது. கூடவே கலைகளின் வளர்ச்சியும் பல்வகைத்தன்மைகளை எட்டின.

இந்த வளர்ச்சிப்போக்கில் கலைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைத்தன்மை நாட்டுப்புறக் கூத்துக்களிலும் பிரதிபலிக்கத் துவங்கியது. வேத்தியல், பொதுவியல் என்ற பிரிவுகளும் சமூக அடுக்குகளின் கட்டுமானங்களில் தோன்றின. இந்த நிலைமையில் பரதமுனிவரின் பரதசாஸ்திரம் - நம்மவரின் தமிழ்நாட்டு சதிர் ஆட்டம் என்பன கண்டு கொண்ட இயைபு காரணமாக வரன்முறைக்குட்பட்ட நடனக் கோலங்கள் உருவாக்கம் பெற்றன. அவை பண்ணிசை வடிவுடனும் கர்நாடக சங்கீதமாக உருப்பெற்ற இசையில் கோபத்துடனும் இணைந்த புதிய கலாஇரசனையுடன் கூடிய அரங்குகளைப் படைத்தன. இதன் ஒரு பகுதி வரலாற்றை சிலப்பதிகாரம் எமக்குத்தருகிறது.

சமாந்தரமாக நாட்டாரியல் கலைகளும் கும்மி, கோலாட்டம், வசந்தன் ஆட்டம் என கரண வடிவிலும், கதைகூறும் எடுத்துரைப்பு அரங்குகள் கூத்து வடிவிலும் எம்மவர் வாழ்வில் தொடர்ந்து பிணைந்து கொண்டன. அவை ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து என சோழர் காலத்தில் உருமாற்றங் களும் பெற்றிருந்தன. ஒரு புறம் கடும் ஆட்டங்களும், ஆடல் தருக்களும் கொண்ட ஆட்டமுறைமைகளுடன் கூடிய அரங்குகளும், மறுபுறம் இலகுவான தாளக் கட்டுகளுடன் கூடிய ஆட்டக்கோலங்கள் கொண்ட அரங்குகளும் நம்மத்தியில் நிலைபெற்றன.

காலப்போக்கில் சில ஆட்டமுறைமைகள் சீனித்து போக எஞ்சிவை இன்றும் நம்மத்தியில் ஆடப்பட்டு வருகின்றன.

பிராந்திய ரீதியிலும் வளர்ச்சிபெற்ற வடிவங்கள் ஒருபுறம் மக்களின் அந்தஸ்து சார்ந்து வளர்ந்த வடிவங்கள் இன்னொருபுறம் என பல வகைத் தன்மை பெற்ற கூத்து வடிவங்கள் நம்மவர்களால் இந்தியாவிலும் ஈழத்திலும் ஆடப்பட்டு வருகின்றன. பரதநாட்டியம் பக்தி, சிருங்காரம் என மட்டுப்படுத்தப்பட்ட உணர்வுக் கோலங்களுடன் சம்பந்தப்பட்ட அரங்காக மிளிர்கின்ற நிலைமையில் எமது ஈழத்துக் கூத்து வடிவங்களில் காணப்படும் பல்வேறு உணர்வுகளுடன் கூடிய ஆட்டங்கள் எமக்கு ஒரு புதிய உலகைக் காட்டுகின்றன.

பேராசிரியர் வித்தியானந்தன் அந்த உலகை 1960 களில் கண்டு கொண்ட போதே இது எமது ஈழத்திற்கே உரிய அரங்க வடிவங்கள் என பேராசிரியர்கள் சிவத்தம்பி, கைலாசபதி போன்றோர் உறுதி செய்தனர். அறுபதுகளின் இறுதியிலும் எழுபதுகளிலும் உருவாகிய நாடகவியலாளர்களான தாசீசியஸ், மௌனகுரு, நா.சுந்தரலிங்கம், இளைபத்மநாதன், குழந்தை சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்றோர் நாடகப்படைப்புகளிலும் கூத்தின் ஆட்டங்களைப் பயன்படுத்தி ஈழத்தமிழ் அரங்கிற்கு ஒரு புதிய வீச்சை வழங்கினர்.

இதன்பின்னணியில் ஈழத்திற்கே உரிய தேசிய நாடகம் பற்றிம், தேசிய நடனங்கள் பற்றியும் கருத்துருவாக்கங்களும் விவாதங்களும் முன்னெடுக்கப்பட்டன. மௌனகுரு, தாசீசியஸ், இளைய பத்மநாதன் போன்றோர் கூத்து வடிவத்துள் புதிய உள்ளடக்கம் பாய்ச்சினர். தொடர்ந்தவர்கள் ஆட்டங்களை பாத்திர உருவாக்கத்துக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் பயன்படுத்தினர். ஆட்டங்களை மட்டும் தனியாக எடுத்து நமது நடனங்கள் என மௌனகுரு கோடிகாட்டினார் 1990 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்.

மௌனகுரு அவர்களுடன் காரை. செ.சந்தரம்பிள்ளை, வேல் ஆனந்தன் ஆகியோரும் ஈழத்து தேசியநடனம் எனும் கருத்துரு வாக்கத்தை சிங்களவரின் கண்டிய நடனத்துக்கு ஈடாக ஏற்படுத்த விழைந்தனர். 2000 ஆண்டுகளில் மட்டக் களப்பில் மௌனகுரு அவர்கள் உருவாக்கிய "லயம்" பல்வேறு ஆட்டக்கோலங்களையும் அடையாளப்படுத்தி இருந்தது. கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர் பங்கு கொண்டு இருந்தார்கள். திருமறைக்கலா மன்றத்தின் கூத்துருவ நாடகங்களின் ஜோன்சன் ராஜ்குமார் கூத்துக் கோலங்களை இணைக்கும் கைங்காரியத்தை முயன்று பார்த்துள்ளார்.

இன்று 2014 இல் வடமாகாணத்தில் வடமாகாணக் கூத்தின் அடிப்படையில் உருவாக்கக்கூடிய நடனங்களுக்கான போட்டி ஒன்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல், மே மாதங்களில் மாவட்ட ரீதியிலும் மாகாண மட்டத்திலும் போட்டிகள் நடைபெற்று கூத்துவழி நடனங்கள் எனும் சிந்தனை ஈழத்துக் கூத்துக் கலைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. எமது விழாக்களிலும், சமூக நிகழ்வுகளிலும் ஒரு இன்னியக் குழுவாக உருவாக்கவும், அரங்குகளில் கூத்து வழி நடனங்களை அரங்கேற்றவும் இருந்திருக்கக் கூடிய மனத்தடைகளும், அவநம்பிக்கைகளும் தற்போது அகற்றப் பட்டிருக்கின்றன.

மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு ஆட்டங்களில் இருந்து உருவாக்கம் பெற்ற ஆட்டங்கள் இப்போட்டிகளில் முன்னணி பெற்றிருந்தன. இதனைவிட வவுனியாவில் இருந்து உருவாக்கப்பட்ட நடனம் மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாண வசந்தன் ஆட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருந்து பெற்ற தாளக்கட்டுகளுடன் ஈழத்து மட்டக்களப்பு வடமோடி அரசி ஆட்டத்தருக்களையும் அளவுடன் இணைத்து ஒரு நடனக்கோலத்தை உருவாக்கியிருந்தமை நாம் இத்திசையில் எப்படி செல்லலாம் என்பதைக் கோடி காட்டியது போல் இருந்தது. அத்துடன் முல்லைத்தீவில் இருந்து உருவாக்கப்பட்ட ஒரு நடனம் குடக்கூத்து கோலாட்டம் என்பவற்றின் அடியாக அமைக்கப்பட்டிருந்தமை பாராட்டத்தக்கது. யாழ்ப்பாணத்து கோண்டாவிலில் இருந்தும் ஒரு குழுவினர் நாட்டார் ஆட்டத்தருக்களை இணைத்தும் ஒரு நடனக்கோலம் உருவாக்கி இருந்தார்கள். இவ்வாறு எமது வேர்களின் அடிப்படையில் நடன அமைப்புக்களை மேற்கொள்வது சாலச் சிறந்தது. அப்படி இல்லாமல் ஏற்கனவே வேறு பிராந்திய கலைஞர்கள் உருவாக்கிய நடனங் களை இரவல் வாங்கி எமது நடனங்களாக காட்ட முயற்சிப்பது அபத்தம் ஆகும். சில குழுக்கள் அவ்வாறு முயன்றமை எம்மிடம் ஒன்றும் இல்லையே என ஆதங்கப்பட வைத்தது.

ஆக, எமது மாகாணத்துக்கென நாம் எமது பிரதேச ஆட்டங்களின் அடிப்படையில் உருவாக்கக் கூடிய நடனங்களை எமது விழாக்களில் அறிமுகம் செய்வோம். அதனை அடிப்படையாகக் கொண்டு எமக்கென ஒரு இன்னிய அணியை ஏற்படுத்த முயல்வோம். மேற்கத்தேய (band) இன்னிய அணியை ஆங்கில தினவிழா; விளையாட்டுப்போட்டிகளுக்கு பயன்படுத்திக் கொண்டு, தமிழ் விழாக்கள், கலை விழாக்கள் போன்றவற்றிற்கு தமிழ் இன்னிய அணியை கூத்தின் ஆட்டங்கள், இசைக் கருவிகள், உடையலங் காரம்கொண்டு உருவாக்குவோம்.

ஏற்கனவே கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய இன்னிய அணியின் சிந்தனையில் எமது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகமும் (Academy), கல்வியல் ஆசிரிய கல்லூரிகளும், பாடசாலைகளும் வடமாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். முன்பொரு முறை 90களில் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அது வெறுமனே திருமணத்துக்கு மணமகள் போடும் ஆடை அலங்காரம் மற்றும் நாதஸ்வரம், தவில் வாத்தியக்கருவிகளுடன் அதன் உருவாக்கம் மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. எமது இன்றைய முயற்சிகள் கூத்து பண்பாட்டுப் பின்னணியில் அந்தந்த பிரதேசத்து கூத்து களின் அடிப்படையில் பல் வகைத்தன்மையில் அமைக் கப்பட வாய்ப்புண்டு. அதுவே ஜனநாயகத் தன்மையிலும் பல்வகைப்பாட்டு சிந்தனைக்கும் செழுமைக்கும் வழி கோலும். எமது வாழ்வின் பண்பாட்டுக் கோலங்களை கூத்து வழிப் பண் பாட் டில் கட் டி எழுப் புவோமாக, எமது தனித்துவத்தை போணுவோமாக. ●

நூல் அறிமுகம்



ஆசிரியர் - சாரல் நாடன்
விலை - 200/-

ஆசிரியர் - ந.ரவீந்திரன்
விலை - 400/-



ஆசிரியர் - க.நாகேஸ்வரன்
விலை - 1000/-

ஆசிரியர் - நா.ஜெயபாலன்
விலை - 200/-


ஆசிரியர் - முல்லை வீரக்குட்டி
விலை - 300/-

ஆசிரியர் - கெகிறாவ ஸஹானா
விலை - 175/-

ஆசிரியர் - க.நாகேஸ்வரன்
விலை - 1000/-

ஆசிரியர் - இராசேந்திரம் எர்ரலின
விலை - 180/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்படம் - யாதிரிகன்

அ.பௌநந்தி

நூல் மதிப்பீடு



கனகசபாபதி நாகேஸ்வரனின்

"கலையும் இலக்கியமும்"

பக்கம் - 222
விலை - 900/-

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழித் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்கள் எழுதிய கட்டுரை களின் தொகுப்பாக "கலையும் இலக்கியமும்" என்ற நூல் வெளிவந்துள்ளது. அவரது மணிவிழாவை யொட்டி சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் எஸ்.வை.ஸ்ரீதர் அவர்கள் இதனைப் பதிப்பித்துள்ளார். இக்கட்டுரைத் தொகுதியில் 23 கட்டுரைகள் காணப்படுகின்றன. இவை கலை, இலக்கி யம், கல்வி, சுதேச மருத்துவம் என பல்வேறு துறை சார்ந்து எழுதப்பட்டுள்ளன என்பதோடு வேறுபட்ட காலப் பகுதியின் பிரசவங்கள் என்பது தெளிவாகின்றது.

மொழித்துறை விரிவுரையாளர் என்பது அவரது படைப்புக்களின் உட்பொருளாக உணர்ந்துள்ள விடயங் களிலிருந்தே உணரக்கூடியதாகவுள்ளது. மேலும் கட்டுரையாசிரியர் இந்துசமயம் சார்ந்து ஆழமான சிந் தனையையும் பற் றையும் கொண் டவர் என்பதனையும் நோக்க முடிகின்றது.

"கலை, இலக்கிய ஆக்கத்திறன் - ஒரு நோக்கு" என்ற கட்டுரை கலையில் அழகியல் அம்சம் ஆளுக் காள் வேறுபட்ட உணர்வோட்டத்தை ஏற்படுத்து கின்றது என்பதையும் அனைவரும் கலையுணர்வுக்கு ஆட்படுபவர் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. உலகி லுள்ள அனைத்துப் பொருட்களிலும் கலையுணர்வு பொதிந்துள்ளது என்பதை கட்டுரையாசிரியர் எடுத்துக் காட்டுக்களினூடாக வெளிப்படுத்தி செல்கின்றார்.

இலங்கை வானொலியில் பணியாற்றி அனுபவங்களினூடாக பெற்றுக் கொண்டவற்றை ஆவணப்படுத்துவதாக "மொழியும் வானொலியும்" என்ற கட்டுரை அமைந்துள்ளது. வெகுசன ஊடகமான வானொலியில் மொழியைப் பயனுடையதாகப் பயன் படுத்த வேண்டியதன் நோக்கம், அவசியம் பற்றி இது அலசுகிறது.

"சாதீயம் எழுப்பிய சிந்தனை" என்ற கட்டுரை சாதீயம் சார்ந்ததாகவோ அல்லது சாதியம் சமூகத்தில் ஏற்படுத்திய, தனிமனிதனிடத்தில் எழுப்பிய சிந்தனை சார்ந்ததாகவோ அமையவில்லை. சாதியம் சார்ந்து எழுதப்பட்ட, முற்போக்குக் கருத்துச் சார்ந்து எழுதப் பட்ட இரண்டு கட்டுரைத் தொகுப்புக்களின் வாசக அனுபவமாக எழுதப்பட்டுள்ளது.

"பெண்மையரசு", "பெண்ணின் மாண்பும் பெண்மை நலன்களும்" ஆகிய இரண்டு கட்டுரைகளும் கட்டுரையாசிரியரின் பெண்ணியச் சிந்தனையின் தேடலின் பேறாக எழுதப்பட்டவை. "பெண்மை அரசு" இந்திரா காந்தியின் பெருமைகளை பேசுகின்றது. மற்றையது சங்காலம் முதல் சமகாலம் வரையான பெண் களின் பெருந்தகைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ் பண்பாடும்", "பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து தருமம்" ஆகிய கட்டுரைகள் தமிழ் இந்துப் பாரம் பரியத்தைப் பேணுவதில் பல்கலைக்கழகங்கள் காட்டும் அக்கறை பற்றிப் பேசுகின்றது.

இக்கட்டுரைத் தொகுதியிலே ஐந்து கட்டுரைகள் கல்வியியல் பற்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று கட்டுரைகள் விழுமியக் கல்வி பற்றி விளம்புகின்றன. "தமிழர்களின் கல்வித்தரம்" என்னும் கட்டுரை, தமிழ் கல்விச்சிந்தனையில் நடைமுறை மாறுதல்களின்றேல் தமிழர்களின் கல்வித்தரம் சீரழிந்து பாழ்படும் என்னும் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. சமயம், விழுமியம், பண்பாடு, இலக்கியம் போன்றன தாய்மொழியினூடாகப் போதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவாவி நிற்கின்றது. விழுமியக்கல்விச் சிந்தனை, விழுமியக் கல்வியின் பயன்கள் பற்றியும் ஏனைய கட்டுரைகள் சிலாகிக் கின்றன. இவரது கல்வியியல் சார்ந்த கட்டுரைகள் இந்த சமயச்சிந்தனையில் முனைப்பில் எழுதப்பட்டுள்ளன என்றே கூறலாம்.

கட்டுரையாசிரியரின் கலாநிதிப்பட்டம் சுதேச மருத்துவம் தொடர்பானது. அதாவது இலங்கைத் தமிழ் இலக்கியங்களினூடாக வெளிப்படும் சுதேச மருத்துவம் தொடர்பானது. அது தொடர்பாக நான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பரராஜசேகரம் பற்றியதாக இரண்டு கட்டுரைகள் காணப்படுகின்றன. இன்று பயன்படுத்தப் படும் தமிழ் மருந்துகள் குறித்த இலக்கியச் சான்றுகள் பல இவற்றில் கூறப்பட்டுள்ளன.

கலையும் இலக்கியமும் என்ற கட்டுரைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் வெவ்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு நோக்கங்களுக்காக எழுதப் பட்டவை என்பது தெளிவாகின்றது சில கட்டுரைகளைத் தவிர ஏனையவை கனதியான விடயங்களை ஆய்வு நிலைநின்று நோக்குகின்றமை சிறப்பம்சமாகும். குறிப்பாக கல்வியியல், சுதேச மருத்துவம் சார்ந்த கட்டுரைகள் துறைசார்ந்தவர்களின் தேடலுக்கு உட்பட வேண்டியவை. கட்டுரைகளில் கையாளப்பட்டுள்ள மொழிநடை எழுத்தாளர் மொழித்துறை விரிவுரையாளர் என்பதற்கு சான்று பகருகின்றது. கட்டுரையாசிரியரின் பல்துறை ஆளுமையும் ஆற்றலும் அறிவும் வெளிப் படுவதை கட்டுரைகளை வாசிப்பவர்களால் உணர முடியும். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர் களின் "கலையும் இலக்கியமும்" பயன்தரு கட்டுரை களின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி வெளியீடுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீள் வாசிப்பில்

"காட்டில் ஒரு கிராமம்"

"தி வில்லேஜ் இன் தி ஜங்கில்" என்ற இலங்கையில் எழுதப்பட்ட நாவலுடன், இலங்கை ஆங்கில படைப்பிலக்கியத்தின் காலத்தை எல்லைப் படுத்தும் முயற்சியில் சில நூல்கள் வெளிவந்துள்ளன. எம்.வை.குணரட்ன எழுதிய "இங்கிலீஷ் லிட்ரேச்சர் இன் சிலோன்", "ஸ்ரீலங்கா இங்கிலிஷ் லிட்ரேச்சர்" என்பவை அவைகளுள் சிலவாகும். இந்த நாவலைச் சிலாகித்து அரசாங்க சபையிலே ஒரு பேச்சை நிகழ்த்தினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள். அவர் அப்படி பேசியது 24ந் திகதி மே மாதம் 1994ம் ஆண்டு. அப்பேச்சு "ஹன்சார்டி"ல் பதிவாகியுள்ளது. இவர்களின் புகழ் மொழிகளை உள்வாங்கிய "காட்டில் ஒரு கிராமம்" நாவல் முதலில் லண்டனில் 1917ல் அச்சாகியுள்ளது. அதுவே இலங்கையில் ஆங்கில இலக்கியம் ஆரம்பமான காலமாக கொள்ளப்படுகிறது. 1934ல் இலங்கை மலையகத்தில் "விஸ்மாஜினி" அச்சடிக்கப்பட்டது. இதை எழுதியவர் ஸி.வி.

பதினேழு ஆண்டு கால இடைவெளியில் ஆங்கில இலக்கியத்தில் மலையகத்தைச் சேர்ப்பித்த பெருமை ஸி.வி.வேலுப்பிள்ளைக்கு உரித்தானது.

லியனாட் ஃவுல்வ் எழுதிய டயறிக்குறிப்புகளும் இலங்கையைப் பற்றி அவரெழுதிய மூன்று சிறுகதைகளும் 1962ம் ஆண்டு இலங்கையில் புத்தகமாக வெளிவந்தது. கீழைத்தேயச் சிறுகதைகள் என்றறியப்பட்ட அவரது மூன்று சிறுகதைகளும் - சந்திரவெளிச்சத்தில் சொன்ன கதை, முத்துக்களும் பன்றியும், இரண்டு பிராமணர்கள், மிகவும் ஆடம்பர மில்லாது இலங்கையைப் பற்றி கூறப்பட்ட கதைகள்.

லியனாட் ஃவுல்வ் அம்பாந்தோட்டையில் மூன்றாண்டுகள் உதவி கவர்மெண்ட் ஏஜெண்டாக பணியாற்றினார். அப்போது அவர்பெற்ற பட்டறிவு அவரது நாவலை உருவாக்க உதவியது. அப்பகுதி யிலுள்ள பத்தேகம கிராமத்தை தான் தன் கதையின் பின்புலமாகக் கொண்டுள்ளார். அவர் இலங்கையி லிருந்தபோது இலங்கையில் மலேரியா நோயும், வரட்சியும் ஏற்பட்டது. நாவலில் ஒரு கிராமமே அழிவுறுகிறது என்பதை சித்திரமாக்கியுள்ளார்.

சிவில்சேர்விஸ் அறிமுகம் 1802ல் அறிமுக மானது. பிரட்ரிக் நோர்த், தான் அழைத்து வந்த எட்டு பேரைக் கொண்டு அதை ஆரம்பித்து வைத்தார். அவர்கள் சிங்களமும், போர்த்துக்கேயமும் தெரிந்தவர் களாயிருந்தனர். 1824ல் சிங்களமும், தமிழும் அவர்கள் அறிந்திருக்க வேண்டிய மொழியாகியிருந்தன. முதலாமவர் காசிசெட்டி, இரண்டாமவர் பொன்னம்பலம் அருணாசலம் என்று பார்க்கையில் சிவில் சேர்விஸ் தமிழர்களுக்கு அதிக பயன்தந்ததாகக் கொள்ள முடியாதிருக்கிறது. அது நியாயமான ஒன்றுதான். எல்லா வேலைகளும் ஆங்கிலத்தில்தான் செய்யப்பட்டன.

உப்புவிளையுமிடமாகவும் அம்பலாங்கொடை பெயர் பெற்றது. கண்டி கச்சேரியில் பழைய டயறிகளைத் தேடிக் கொண்டிருந்தபோது தான் யதேச்சையாக தன் கைக்கு அகப்பட்ட ஒரு பழைய டயறியைப்பற்றி கொட்றிங்டன் குறிப்பிடுகிறார். H.W.கொட்றிங்டன் இலங்கையின் புகழ்பூத்த சரித்திர

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுப சகுனம்

நான்
நேசித்தவை எல்லாம்
நசிந்து போய்க் கிடக்கின்றன.

தூரத்தில் கேட்கும்
பறவைகளின் ஒலி
எவையும்
இப்பொழுது இங்கு கேட்பதில்லை.

அருகில் உள்ள
சிற்றாறு கூட,
நீரற்று வரண்டு கிடக்கிறது.
பச்சைப்புல் முகையவிழ்ந்து,
தலைகாட்ட முடியாத,
வரட்சியும் வெம்மையும்
தகிக்கிறது.

பேச ஒரு துணையாக
நீ இருந்தாய்.
நீ மட்டும் தான்!

நீ என்னைக் காதலித்தாய்!
நானும் தான்.
ஆனாலும் –
நமது காதல் நீடிக்கவில்லை.
பிரிவு
சடுதியாய் வந்தது.

நீ
ஏதோ தூர தேசத்தில்
இருப்பதாகச்
சிலர் சொன்னார்கள்.
நான் அதை நம்பவில்லை.
நீ வருவாய்
எனக் காத்திருக்கிறேன்.
ஏன் எனில்,
பறவைகளின்
ஒலி எல்லாம் எனக்கு
இப்பொழுது கேட்கிறது.

அருகாய் உள்ள ஆற்றிலும்
நீர்;
கரை புரள்கிறது.

பனிதாங்கிச் சவளும்
பச்சைப் பசும் புற்களையும்
என்னால்
பார்க்க
முடிகிறது.

இவை
நீ என்னிடம் வருவதற்கான
சூசகமான சுபசகுனங்களா...?

வருவாயா...?
ம்...
வருவாய்.

இருப்பு

நான்
என்னைத் தேடுகிறேன்;
என்னில்
நான் எங்கே இருக்கிறேன்
என்று தேடுகிறேன்.

புலரியில்
உதயனின் செந்தளிரில்,
இழைந்து கரையும்
கருமையில்
நான் இருப்பது
தெரிகிறது.

இதழ் உடையாக்
கருகல் மலர் மொட்டின்
உள் இழைந்து,
வழிந்து,

க. சட்டநாதன் கவிதைகள்

வரத் துடிக்கும்
உலர் மணத்தில்
நான் இருப்பது தெரிகிறது.

உலர்ந்த புல் நுனியைத்
தடவித் தடவிப்
பார்த்துத் தவிக்கும்
பல் இழந்த
கிழட்டு வெள்ளாட்டின்
பரிதவிப்பில்
நான் இருப்பது தெரிகிறது.

எங்களூர்த் தெருவோரம்
குண்டு பட்டுச்
சரிந்து
சடலமாய்க் கிடக்கும்
தாயின்
முலைக்காம்பு சுவைக்க
நாத்(து)
துழாவும்
பச்சைப் பாலகனின்
பதை பதைப்பில்
நான் இருப்பது தெரிகிறது.

வீதி விஸ்தரிப்பால்
இடித்தெடுத்து
வீசப்பட்டுக்கிடக்கும்
துர்க்கையின்–
ஒடிந்த,
ஒற்றைக்கோரப்பல்லில்,
துளிர்த்துக் கிடக்கும்
வியர்வையில்,
நான் இருப்பது தெரிகிறது.

நான்
என்னைத் தேடுகிறேன்;
என்னில்
நான் எங்கே இருக்கிறேன்
என்று தேடுகிறேன்.

விசாரம்

இருத்தலின் அர்த்தம்
இழந்த நிலையில்,
புதிது புதிதான
அர்த்தங்களை
உள்ளூறிஞ்ச
மனம்
அவாவுகிறது.

அருகில் இருப்பவை
எல்லாமே
சருகாய்
உதிரும் வேளையில்,
மனம்
நிமிர்வு கொள்கிறது.

புதியவை
மனதுக்கு இதம் தருபவை
என்று
எதுவுமே இல்லையா...?
அருகாக வந்தவை
கூட
ஏன் ஒதுங்கித்
தூர விலகி ஓடுகின்றன.

தெரிவதைத் துரத்திப்
பிடிக்க முடியுமா..?
முடியுமென
மனம் ஒப்பிய போதும்
முயற்சி அனைத்துமே
களைப்பைத் தருகிறது.

எதிலுமே
ஏன்
அடர்ந்த வழுக்கலாய்
வியர்தம்
எஞ்சி உறைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி

இதழ்களில் வெளிவந்த பன்முகக் கட்டுரைகள்

(இதழ் 61 – இதழ் 69)

- வாசகநிலைப் பகிர்வு -

மு.அநாதரட்சகன்

ஈழத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் இலக்கியச் சிற்றிதழ் வரிசையில் "ஜீவநதி"க்கென தனியான கவனிப்பு எமது இலக்கியச் சூழலில் உள்ளது. அதற்கு வலுச்சேர்ப்பதாக இதழ்களில் எழுதிவரும் படைப்பாளிகளின் படைப்புகள் இருந்து வருகின்றன. மூத்த எழுத்தாளர்களிலிருந்து இளம் படைப்பாளிகள் வரை ஜீவநதியின் செழுமைக்கு வளம் சேர்த்து வருகிறார்கள் என்பது முக்கியமானது. ஒவ்வொரு இதழும் கவர்ச்சியான அட்டைப்பொலிவுடன், சிற்றி தழுக்குரிய வடிவ உள்ளடக்க நேர்த்தியுடன் தயாரிக்கப் பட்டு வெளிவருவது அவதானிப்புக்குரிய விடயமாகும். மௌனமாக இருந்து கொண்டு இச்சாதனையை சாத்தியமாக்கிக் கொண்டிருக்கும் "ஜீவநதி" ஆசிரியரின் உழைப்பு மதிக்கப்படவேண்டியது.

இக்கட்டுரையில் சென்ற ஆண்டுமலருக்கு பிற்பட்ட ஒன்பது இதழ்களிலும்(இதழ் 61 – இதழ் 69) பிரசுரமாகிய பல்வகை ஆக்கங்களில் கட்டுரைகளை மட்டுமே எனது அவதானத்துக்குட்படுத்தி அவை குறித்த மதிப்பீட்டினை வாசகர்களுக்குத் தர முயல்கிறேன்.

இந்த இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளில் பெரும்பாலானவற்றில் இழையோடும் மையப்புள்ளி சமகால இலக்கியப்போக்கினை குறிப்பிட்டுக் காட்டுவதாகவே உள்ளன.

அந்தவகையில் கவிதைகள், சிறுகதை கள், சினிமா. வரலாறு, அரசியல், உளவியல், சமூகச் சிந்தனை என்பவற்றுக்கு அழுத்தம் கொடுப்பனவாக கட்டுரைகளின் உள்ள டக்கங்கள் உள்ளன. இவை படைப்பாளி களின் தனித்துவமான கருத்துநிலை வெளிப்பாடு களையும்கொண்டுள்ளன.



ஜீவநதி - 61வது இதழ் (ஐப்பசி 2013)

இவ்விதழில் ஆறு கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. திக்குவல்லை கமாலின் "தென்பிரதேச தமிழ்ப் புனை கதைகள்" என்ற கட்டுரை அப்பிரதேச இலக்கிய வரலாற்றை கூற முயல்கிறது. இப்பிரதேசங் களில் வாழுகின்ற மலையகத் தழிழர்களிடமிருந்து இதுவரை புனைகதைகள் தோன்றவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துவதுடன், தென்பிரதேச இலக்கியம் என்பது முஸ்லிம்களின் இலக்கியத்தையே குறித்துரைக்கின்றது என்ற கருத்தினை முன் வைக்கின்றது.

தவிர முஸ்லிம் சமூகத்தினுள்ளும் கீழ் மத்திய தர(Lower Middle class) வர்க்கத்தின் மேலெழுச்சி எவ்வாறு தமிழ் இலக்கியத்தில் புனைவுகளுக்கு வித்திட்டது என்பதை சுருக்கமாக தருகிறது.

இந்த இதழில் பிரசுரமான இன்னொரு முக்கியமான கட்டுரை அ.யேசுராசாவின் "ரிதுபர்ணோ கோஷின் – றெயின் கோட்" என்பது. திரைப்படத்தின் முக்கியமான நிகழ்வுகளின் உரையாடல்களை உணர்வு பூர்வமாக தந்துள்ளதுடன், படத்தின் கதைச்சுருக்கமும் வாசகர்களுக்கு ஈர்ப்பினைத் தருகின்றது. நவீன சினிமா பற்றிய விமர்சனம் எமது சூழலில் பெரிதாக வளரவில்லை. சினிமாவை நாம் விமர்சனபூர்வமாகப் பார்த்தும் பழகவில்லை. அத்துறையில் தாடனம் உள்ள யேசுராசா இதனைப் பதிவு செய்திருப்பது இதழுக்கு கனம் சேர்க்கிறது.

அடுத்து, மா.செல்வதாசின் "தமிழ் திரைப்படப் பாடலாசிரியர்கள்" என்ற கட்டுரை. சினிமா பாடலா சிரியர்கள் வரிசையில் பாபநாசம் சிவம், உடுமலை நாராயணகவி, தஞ்சை ராமையாதாஸ் போன்றோரின் அர்த்த அடர்த்தி மிகுந்த பாடல்களை உதாரணம் காட்டி அவற்றின் சிறப்புகளை இன்றைய இளைய தலைமுறை யினரும் அறிய வேண்டிய பல தகவல்களைத் தருகின்றது.

இதழில் வெளிவந்த முக்கியமான கட்டுரை களில் ஒன்று, பேராசிரியர் சபா.ஜெயராசாவின் "தெணியானின் ஆக்கங் களும், மார்க்சிய அழகிய லும்" என்பது. தெணி யானின் படைப்பாளுமை யின் சமூகப் பொறுப்பு, கலை உணர்வு என்பவற்றின் முகிழ்ப்பின் வழி மேலேழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியலை மார்க்சிய நிலை நின்று விளக்குகின்றது. மார்க்சிய அழகியலின் சாராம்சங்கள் பற்றியும், சமூக உளவியல் பின்னணியில் அதன் இயங்குநிலை பற்றியும் முக்கியமான குறிப்புகளை முன்வைக்கிறது. தெணியானின் படைப்புலகின் அழகியல் பரிமாணங்களை காட்டிய வித்தியாசமான கட்டுரை இது.

அடுத்து, லெ.முருகபூபதியின் "சொல்ல வேண்டிய கதை" - தொடர் 9, என்பது சுவாரஸ்யமான பல தகவல்களைத் தருவது. அவரது எழுத்துலகின் அனுபவச் செறிவினை அக்கட்டுரையில் காண முடிகிறது. அவுஸ்திரேலிய தேர்தல் முறை பற்றிய பயனுள்ள தகவல்களை தந்தது.

அந்தனி ஜீவாவின் "அரை நூற்றாண்டு அனுபவங்கள்- ஒரு வானம்பாடியின் கதை" - 19 வது தொடர் கட்டுரை தனது அரசியல், சமூக, இலக்கிய-பொது வாழ்வில் மறக்க முடியாத பக்கங்களை கருத்துச் செறிவுடன் சுவாரஸ்யம் குன்றாமல் சுதந்திரமாகக் கூறும் கட்டுரை. பழைய நினைவுகளை இரைமீட்டி இவ்வளவு தகவல்களையும் திரட்டித் தந்த பாங்கு பாராட்டுக்குரியது.

ஜீவநதி - 62வது இதழ் (கார்த்திகை 2013)

இந்த இதழை பல்வேறு துறைசார்ந்த ஏழு கட்டுரைகள் அலங்கரிக்கின்றன.

இவற்றில், "குணசேனவிதானவின் "பாலம்" இனப்பிரச்சினைக்கான தீர்வின் வாழ்வியல் மார்க்கம்" என்ற கட்டுரையை மேமன்கவி எழுதியுள்ளார். சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மடுளுகரிய விஜேரத்ன வினால் மொழியாக்கம் செய்யப்பட்ட "பாலம்" சிறுகதைத்தொகுப்பு பற்றிய மதிப்பீடாக இதனை எழுதியுள்ளார்.

இலங்கை இனத்துவ அரசியலின் அதிகார மேலாண்மையின் வெறுக்கத்தக்க அனுபவங்களுக்கும் அப்பால், இனங்களுக்கிடையே புரிந்துணர்வும், நல்லிணக்கமும் ஏற்படுவது அவசியம் என்பது முற்போக்காகச் சிந்திப்பவர்களது கருத்தாக இருந்து வருகிறது. சிங்கள இலக்கியங்கள், நாடகங்களில் இன சௌஜன்யத்துக்கான ஒரே மார்க்கமாக கலப்புத் திருமணம் வலியுறுத்தப்படுவது வழமையான ஒரு விடயம். படித்தும் பார்த்தும் சலித்துப்போன விடயம் இது. சிங்கள முற்போக்கு படைப்பாளிகள் வேறு விதத்தில் சிந்திக்க முற்பட வேண்டும். ஒரு இனத்தின் அடையாளம் என்பது முக்கியமானதுதான். கலப்பு மணத்தினால் இது அழிந்து விடும் என்ற பயம் நியாயமானதே.

குணசேன விதான முற்போக்கானவர். இடது சாரிப்பாரம்பரியமிக்கவர். தமிழ்வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். அவர் மீதான படிமத்தை இத்தொகுப்பிலுள்ள கதைகளின் தேர்வு, மொழிபெயர்ப்பின் தவறு, நூலின் அமைப்பு என்பன பாதிக்கின்றன என்பதை மேமனின் இக்கட்டுரை உணர்த்துகின்றது.

எம்.எம்.மன்சூரின், "கொடகே தேசிய சாகித்திய விருது விழாவில் பிரபல எழுத்தாளர் திருமதி. அன்னலட்சுமி இராசதுரைக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது" என்ற கட்டுரை அவருக்கு இக்கௌரவம் வழங்கப்பட்டமை குறித்தும், அந்நிறுவனத்தின் 15வது தேசிய விருதுவிழா பற்றியும் பல தகவல்களைத் தருகின்றது.

இதழில் வந்த முக்கியமான கட்டுரை, அ.யேசுராசாவினால் மொழியாக்கம் செய்யப்பட்ட "ஒளிப்பதிவுத் துறை மாற்றமடைந்து விட்டது: திரைப்படங்களும்கூட அவ்வாறே மாற்றங்களுடன் உருவாக்கப்படுகின்றன" என்பது பிரபல ஒளிப்பதிவாளரான பாலுமகேந்திராவின் கருத்துக்களை தொகுத்து ஒளிப்பதிவாளர் S.R.அசோக்குமார் Frontline ஆங்கில இதழில் எழுதியதை தமிழில் அ.யேசுராசா தந்துள்ளார். சினிமாவில் ஒளிப்பதிவில் நுட்பங்களையும், மாற்றங்களையும் அறிமுகம் செய்த பிரான்சின் புதிய அலை இயக்கத்தின் எரிக் ரோமர், ட்ரூஃபோ, கோதார் போன்ற இயக்குநர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள் வரிசையில் தன்னைப் பாதித்த ஒளிப்பதிவாளர்களாக, நெஸ்ரர்.அல்மென் ட்றோஸ், மைக்கல் ஷப்மன் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் ஒளிப்பதிவின் நுட்பங்களை தேர்ந்த இரசனை மட்டத்தில் வைத்து பாலுமகேந்திரா கூறும் கருத்துக்கள் சினிமா பற்றிய உயர் சிந்தனைக்குரியவை. அத்துடன், அவர் இந்தியத்திரைப்படங்களில் பணியாற்றும் நம்பிக்கை தரக்கூடிய ஒளிப்பதிவாளர்களையும் இனங்காட்டிச் சென்றுள்ளார். யேசுராசாவின் மொழியாக்க முயற்சி பாராட்டுக்குரியது.

இ.சு.முரளிதரனின் "மகாத்மா காந்தியை நிராகரித்த மாமேதை அம்பேத்கர்" என்ற கட்டுரை சாதியப் பிரச்சினையில் காந்தியின் நிலைப்பாட்டிலிருந்த முரண்பாடு பற்றியும், அதன் இரட்டைத் தன்மை யினை இனங்காட்டிய சமூகப் போராளி அம்பேத் காரின் பங்களிப்பு பற்றியும் எடுத்துரைத்தது. இன்னும் விரிவும், ஈழமும் கண்டிருந்தால் பயனுள்ள கட்டுரை யாக இருந்திருக்கும்.

லெ.முருகபூபதியின் "சொல்ல வேண்டிய கதைகள்" பத்தாவது தொடராக இந்த இதழில் வந்துள்ளது. தனிமையிலே வாழ்ந்து மறைந்து போன இலக்கியவாதிகள் பற்றிய தகவல்களைத் சுவைபடத் தரும் கட்டுரையாக உள்ளது.

அந்தனிஜீவாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன் "ஒரு வானம்பாடியின் கதை" அவரது நீண்டகால அனுபவங்களை பல்வேறு தளங்களின் பின்னணியில் கூறிய கட்டுரை. இது இந்த இதழில் இருபதாவது தொடராக வந்து நிறைவுறுகிறது என்பதும் குறிப்பிடப் பட வேண்டியது.

மா.செல்வதாஸ் - "தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர்கள்" - என்ற தொடரில், மருதகாசி, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற ஆளுமைகளின் மறக்க முடியாத திரையிசைப்பாடல்களின் சிறப்புக் களை எடுத்தியம்புகிறது.

ஜீவநதி - 63வது இதழ் (மார்கழி 2013)

இந்த இதழ் மலையகச்சிறப்பிதழாக வெளி வந்து மலையகத்தையும், அம்மக்களையும், மலையக இலக்கியத்தின் தனித்துவத்தையும் கௌரவிக்கும் வகையில் வெளிவந்துள்ளது. கண்ணைக்கவரும் முன்அட்டையுடன் பொலிவாக வந்துள்ளது. முழுக்க முழுக்க மலையகப் படைப்பாளிகளின் ஆக்கங்களைத் தாங்கி உள்ளடக்கத் தகுதியையும், வடிவ நேர்த்தியை யும் கொண்டுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக சிறப்பிதழ் களை வெளியிட்ட சஞ்சிகை ஜீவநதி. சிறப்பிதழ் வரிசையில் இது பத்தாவது சிறப்பிதழாக வெளிவந்து மலையத்துக்கு பெருமை சேர்த்துள்ளது.

மலையக மண்ணின் வாசனையுடன், அந்த மண்ணுக்கு உரமாகிவரும் தொழிலாளர்கள் முகங் கொள்ளும் வாழ்வியல் சுமைகள், அவலங்கள், அவமதிப்புகள் பற்றிக் கூறுகின்ற பல யதார்த்தப் படைப்புகளை தந்தது இச்சிறப்பிதழின் மகத்துவமாகும்.

மலையகத்தின் நம்பிக்கை தரும் விமர்சகர் லெனின் மதிவானத்தின் "தோழர்.இளஞ்செழியன்" என்ற கட்டுரை அவர் பற்றிய பல தகவல்களுடன், விமர்சனப்பார்வையாகவும் விரிகிறது. தோழர் இளஞ் செழியனின் செயற்பாட்டுத்தளங்கள், இயக்கங்கள், அவற்றில் அவரது அர்ப்பணிப்புகள் - இவையெல்லாம் மலையக மக்களின் பண்பாட்டுத்தளத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் என பல தகவல்களை தந்த கட்டுரையாக உள்ளது. அவர் குறித்த முழுமையான பதிவு இதுவரை வரவில்லை என்ற ஆதங்கம் கட்டுரையில் வெளிப்படு கிறது. அது உண்மையும் கூட.

"காமன் கூத்து- பன் முக நோக்கில் ஓர் ஆய்வு" என்ற அ.லெட்சு மணனின் கட்டுரை மலையக மக்களுடைய அரங்க வரலாற்றைக் கூறுவது மலையகத்துக் கென தனித்துவமான கூத்துவடிவத்தின் சிறப் பினைக்கூறும் முக்கிய மான கட்டுரை. இதில் காமன் கூத்தின் பல பரிமாணங்களையும் ஆய்வுக்குட்படுத்தி, இறுதி யில் ஒடுக்கப்பட்ட சமூக மொன்றின் எழுச்சிக்கு பங்களிப்புச் செய்யும் கலை வடிவம் என்ற வகை யில் இக்கூத்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டி யது அவசியம் என்ற தனது கருத்தினையும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதழில் இடம் பிடித்துள்ள கட்டுரையான ஏஸ்.ராமையாவின் "நாட்டார் பாடல்கள் மூலம் அடை யாளம் காணப்படும் மலையக மக்கள்" என்பதில், நாட்டார் பாடல்கள் மலையகத்தின் வரலாறு, பண்பாடு, துன்ப துயரங்கள் என்பவற்றை படம் பிடித்துக் காட்டு வதாக உள்ளது. வாய்மொழி வழியாக இவைதொன்று தொட்டு பயிலப்பட்டு வருவதை இக்கட்டுரை அழுத்த மாகக் கூறுகிறது.

மலையகச் சிறப்பிதழுக்கு கனதி சேர்க்கும் இன்னொரு கட்டுரையாக அமைவது மல்லியப்பு சந்தி திலகரின் நீண்ட தலைப்புடனான கட்டுரை. யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற 41வது இலக்கியச்சந்திப்புக் கான பயணத்தை முன்னிறுத்திய நினைவுப்பதிவாக எழுதப்பட்டுள்ளது. வாசிக்கத்தூண்டும் வகையில் நேர்த்தியான சம்பவத் தொகுப்பாகவும் உள்ளமை அதன் சிறப்பாகும். மலையகம் - யாழ்ப்பாணம் - வன்னி பிரதேசங்களுடனான தனது உறவினை சுவாரஸ்யம் குன்றாத நடைச்சித்திரமாக எழுதியுள்ளார். நல்ல குறும் படமொன்றை பார்த்த அனுபவத்தைத் தந்த கட்டுரை.

இவற்றை விட, இதழில் வந்த "சாரல் நாடனின் "மலையக இலக்கியத்துக்கு ஒரு புதிய வரவு" மற்றும் அந்தனி ஜீவாவின் "கவிஞர் குறிஞ்சி தென்னவனின் வாழ்வும், பணியும்" என்பவனவும் பயனுள்ள தகவல்களைத் தந்த முக்கியமான கட்டுரைகளாகும்.

ஜீவநதி 64வது இதழ் (தை 2014)

இந்த இதழில் ஐந்து கட்டுரைகள் பிரசுரமாகி உள்ளன. இதில் முதலாவது கட்டுரை பேராசிரியை கலாநிதி அம்மன்கிளி முருகதாஸினுடையது. "1950 வரையான காலகட்டத்து நவீன கவிதை" பற்றியது. தமிழில் நவீன கவிதையின் அறிமுகம், வளர்ச்சி, பாடுபொருள் என்பன பற்றிக்கூறி, நவீன கவி தையின் உருவாக்கத்தில் பாரதியின் பவித்திரமான பங்களிப்பு பற்றி ஆய்வு நிலை நோக்கில் எழுதி யுள்ளார். தமிழில் கவிதை மொழியின் இறுக்கம், புரியாத்தன்மை பாரதியின் பிரவேசத்துடன் எளிமைப் படுத்தப்படுகிறது என்ற கருத்தை உள்ளடக்கிய நல்ல கட்டுரை இது.

அடுத்து, மா.செல்வதாஸ் தொடராக எழுதி வரும் "தமிழ்த்திரைப்பாடலாசிரியர்கள்.." என்ற வரிசை யில் இடம்பெற்றிருப்பவர் கண்ணதாசன். சினிமாப்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடல்களில் சிலேடை, பின்வருநிலை, மடக்கு போன்ற சொல்லணிகளை நுட்பமாக கையாள்வதில் கண்ணதாசன் கைதேர்ந்தவர். அத்துடன், அந்தாதிப் பாங்கிலான பாடல்களை திரையிசைக்கு கொண்டு வந்தவரும் அவரே என்பது கட்டுரையாசிரியர் முன்வைக்கும் கருத்தாகும். கவிஞரின் பாடல்களிலுள்ள இனிமை, எளிமை, வேகம் என்ப வற்றை பாடல்வரிகள் மூலம் எடுத்தியம்பியுள்ளது.

இதழில் வந்த கட்டுரைகளில் முக்கியமான இன்னொன்று அ.யேசுராசாவின் "ஐரோப்பியத் திரைப்பட விழா 2013" பற்றியது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இவ்விழாவில் காண்பிக்கப்பட்ட ஆறுதிரைப்படங்கள் பற்றிய குறிப்புக்களை தந்துள்ளது. அவற்றின் கதைச்சுருக்கம், நெறியாளர், தயாரிப்பாளர், குறித்த தகவல்களுடன் அவை உருவான நாடுகளையும் தந்துள்ளார்.

அசையும் பிம்பங்களுக்கிடையிலான உறவில் சினிமா எப்படி உருவாகின்றது என்பதற்கு நல்ல அறிமுகத்தையும் வழங்கியுள்ளது. நவீன சினிமாவுடன் எமக்கிருக்கும் உறவை புதிய திசையில் வழிப்படுத்துவ தாகவும், நல்ல சினிமாவின் பண்புகளை இனங்காண வும் உதவும் கட்டுரை. நவீன சினிமா பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தும் கட்டுரையும் கூட. அடுத்து, "இலங்கையின் உருவகக் கதைத்துறையில் படைப் பாளி முத்துமீரானின் பங்களிப்பு" என்ற பேராசிரியர் மு.நந்தர்சாவின் கட்டுரை. நூற்றுக்குமேல் உருவகக் கதைகளை எழுதிய முத்துமீரானின் படைப்புலக ஆளுமை குறித்து நல்ல பல தகவல்களைத் தரும் கட்டுரையாக உள்ளது.

இந்த இதழிலும் லெ.முருகபூபதியின் சொல்ல வேண்டியகதைகள் -11வது தொடராக நீள்கிறது. எதையும் சுவாரஸ்யம் குன்றாமல் கூறுவதில் கைதேர்ந்தவர் என்பதை கட்டுரை வெளிப்படுத்துகிறது.

ஜீவநதி 65வது இதழ் (மாசி -2014)

இந்த இதழிலும் காத்திரமான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முக்கியமான கட்டுரையாக, பேராசிரியர் சபா.ஜெயராசாவின் "தொடர்பாடலிலும், இலக்கியங்களிலும் தேய்வியம்பல்" என்பது வந்துள்ளது.

தொடர்பூடகங்களிலும், இலக்கியங்களிலும் "தேய்வியம்பல்" ஏற்படுத்தும் விளைவுகள் குறித்த புதிய தகவல்களைக் கொண்ட கட்டுரை. ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஓர் எழுபொருள் பற்றிய அருட்டுணர்வைத் தந்த கட்டுரை எனக் கூறலாம்.

அடுத்து, பேராசிரியை அம்மன்கிளி முருக தாஸின் நவீன கவிதை பற்றிய தொடரில் அக்கால கட்டத்தில் எழுச்சி பெற்ற பாரதியின் கவிதைகள் தேச விடுதலை, பெண்விடுதலை, தொழிலாளர் விடுதலை, சாதிய விடுதலை, மனித சமத்துவம் என பல பரிமாணங்களில் விகசித்துநின்று நவீன கவிதையின் போஷிப்புக்கு ஆற்றிய பங்களிப்பினை கூறும் கட்டுரையாக உள்ளது.

இதழில் இடம்பிடித்துள்ள கனதியான இன்னொரு கட்டுரை, கெகிறாவ ஸஹானா எழுதிய "பன்மைத்துவம் பற்றிய புரிதலை முதன்முதலாகத் தருகின்ற கவனிக்க வேண்டிய மூன்று புத்தகங்கள்" என்பது. தேசிய நல்லிணக்கம், ஒருமைப்பாடு, இனங்களிடையே புரிந்துணர்வு என உரத்துச் சிந்திக்கின்ற இக்காலகட்டத்தில் ரஸ்மியினதும், மேமன்கவியினதும் நூல்கள் அத்தகைய புரிதலுக்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன என்பதை நல்லமுறையில் எடுத்துக் கூறும் கட்டுரை எனலாம்.

ஜீவநதி 66வது இதழ் (பங்குனி -2014)

இந்த இதழ் ஜீவநதியின் பதினோராவது சிறப்பிதழ் என்ற பெருமைக்குரியது. மலையக சிறப்பிதழ் வெளிவந்து, மூன்ற மாத இடைவெளியில் திருகோண மலை மாவட்டச் சிறப்பிதழாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இவ்விதழின் கட்டுரை ஆக்கங்களை நோக்கின் திருகோணமலை மண்ணின் இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள், போக்குகள் பற்றிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளன.

இராஜ.தர்மராஜாவின் "திருகோணமலை சில இலக்கியக்குறிப்புகள்" என்ற கட்டுரை அப்பிரதேசத்தின் இலக்கிய ஆளுமைகள்" குறித்தும் அவர்களது படைப்புகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டிய பயனுள்ள தகவல்களை தந்தது.

திருமலைநவம் எழுதிய கட்டுரை "திருகோண மலையும், தேசிய இலக்கிய சம போக்கும்" என்பதில் இப்பிரதேசத்து புனை காவியம், நவீன தமிழ்க் கவிதை, சிறுகதை, நாவல், நாடக மரபு, மெல்லிசை என வகைப்படுத்தியும் காலவரையறைக்குட்படுத்தியும் பல தகவல்களைத் தருகின்றது.

அடுத்து இந்த இதழின் கவனத்துக்குரிய கட்டுரையாக வி.கௌரி பாலனின் "காலனித்துவ திருகோணமலை ஆக்கிரமிப்பார்களின் பதிவுகளுக் கூடாக வேர்களைத்தேடும் முயற்சி என்பது பிரசுரமாகி உள்ளது. கனகசபாபதி. சரவணபவனின் "காலனித்துவ திருகோணமலை" நூல் பற்றிய மதிப்பீடாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்கது. கூடவே அப்பிரதேசம் பற்றிய வரலாற்றுத் தகவல்களை தருகிறது.

இவ்விதழில் அரசியல் விமர்சகராக அறியப் பட்ட யதீந்திரா "நிலம் பிரிந்தவனின் சுஜந்தனின் கவிதைகள்" என்ற நூல்பற்றிய வாசகநிலைக் குறிப்பு களை எழுதியுள்ளார். நிலம் பிரிந்து வாழும் சுஜந்தனின் வலிகளை தொகுப்பிலுள்ள கவிதைகள் ஊடாக எமக்கு படம்பிடித்துக்காட்டியுள்ளார். யதீந்திராவிடமுள்ள இலக்கிய மனத்தினையும் தரிசிக்க வைத்த கட்டுரை யாக கனதி கொள்கிறது.

ஜீவநதி -67 வது இதழ் (சித்திரை 2014)

இந்த இதழில் ஆறுகட்டுரைகள் வெவ்வேறு துறை சார்ந்து விரிவு கண்டுள்ளன. ஈழக்கவியின் "சிக்மன்ட் பிராய்ட்டின் உளவியல் ஆய்வுகளும், போர் பற்றிய அவதானிப்புகளும்" என்ற கட்டுரை போரின் அவலங்களை ஆழமாகக் கூறும் கவிஞர் சோலைக் கிளியின் கவிதையை முன்னீடாகக் கொண்டு எழுதப் பட்ட முறைமை வாசிப்பினை தூண்டுவதாக உள்ளது. பிராய்ட்டின் அறிமுகத்துடன் ஆரம்பித்து, அவரது உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின் பின்னணியில் போரின் பரிமாணங்களை தரிசிக்க வைத்த காத்திரமான கட்டுரை ஆகும்.

அடுத்து வரும், இ.சு.முரளிதரனின் "கம்பனை நகலெடுத்த திரையிசைப்பாடலாசிரியர்கள்" என்ற கட்டுரை கண்ணதாசனிலிருந்து இன்றைய பா.விஜய் வரை தமது திரையிசைப்பாடல்களில், கம்பனை நகலெடுத்த பாங்கினை ஒப்பீடு செய்து இலக்கிய நயத்துடன் எழுதப்பட்டுள்ளது. அவரது இரசனைக் குரிய மொழிநடை வாசக மனதுக்கு இதமளிக்கிறது. இது பற்றி பலர் எழுதியிருந்தாலும், கம்பனிடம் கடன் படுவதை ஒரு கொடுப்பனையாகவே திரைப்படப் பாடலாசிரியர்கள் கருதினர் என்ற கூற்று சிந்திக்க வைத்தது.

இந்த இதழில் வந்த கட்டுரைகளில் முக்கிய மானது அ.யேசுராசாவி னுடைய "புத்தகத்திரு விழாவும், தமிழகப் பயண மும்" என்ற பயணக் கட்டுரை. இதில் தான் கலந்து கொண்ட புத்தகத் திருவிழா, நூல்வெளியீடு கள், கவிதை அரங்குகள், தமிழ் கருத்தரங்கு எனப் பலவிடயங்களை தகவல்



செறிவுடன் நல்ல மொழி யில் தந்துள்ளார். இவற்றை தனது அனுப வங்களுக்கு நேர்மையாக இருந்து எவ்வித மனத் தடைகளுமின்றி வாசகர் களுடன் பகிர்ந்துள்ளார் என்பது தான் முக்கிய மானது. கூடவே நிழற் படங்களும் கட்டுரைக்கு வலுச் சேர்த்துள்ளன. இலக்கியத் தரமிக்க பயணக்கட்டுரையை வாசித்த திருப்தியைத் தந்தது.

இவ்விதழில் வெளிவந்தவற்றுள் கவனிப்புக் குரிய இன்னொரு கட்டுரை, கெகிறாவ ஸுலைஹா எழுதிய "நினதான தியாகத்தையும் விட, அன்புள்ளத்தை மெச்சி" என்பது. கறுப்பின மக்களின் விடுதலைப் போராளி நெல்சன் மண்டேலாவின் ஆளுமைப்பண்புகள் பற்றி கூறுகிறது. நெல்சன் மண்டேலாவை அவரது ஆற்றல்கள் செயற்திறன்கள் மீதான பரிமாணங்களில் தரிசிக்க வைத்த கட்டுரை.

இவ்விதழிலும் லெ.முருகபூபதியின் "சொல்ல வேண்டிய கதைகள்" என்ற கட்டுரை 13வது தொடராக வெளிவந்துள்ளது. ஒரு மனிதாயவாதியின் அனுபவங் களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதாக உள்ளது. இலக்கிய நயம் குன்றாமல் பலவகை அனுபவங்களை வாசகனிடத்தில் தொற்ற வைத்த கட்டுரையாக தொடர்கிறது.

இதழின் இடம்பெற்ற பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸின் கட்டுரைத் தொடர் பாரதியின் கவிதை களிலுள்ள மானிடப் பண்புகளை வெளிக்கொணரும் வகையில் எழுதப்பட்ட தனித்துவமான கட்டுரை. ஒருவகையில் பாரதியின் கவிதை ஊற்றுக்கண்களை இனங்காட்டிய ஆய்வாகவும் உள்ளமை சிறப்புக்குரியது.

ஜீவநதி 68வது இதழ் (வைகாசி 2014)

இவ்விதழில் வெளிவந்த ஆறுகட்டுரைகளில் இரண்டு தொடர்கதைகளாக உள்ளன. முதல் கட்டுரை, பேராசிரியர் சபா.ஜெயராசாவின் "எதிர்க்கலைக் கோட்பாடு" என்பதாகும். கலை பற்றிய விளக்கத்தில் எதிர்க்கலைக்கோட்பாடு பிரதான கருத்தாக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளது. கலைகளிலே புதிய வடிவங்கள் தோன்றுவதற்கு எதிர்கலை முயற்சிகளே பெரிதும் பங்களித்தன எனவும், கலைகளின் வளர்ச்சிக்கு நேர்ச்சிந்தனைகள் மட்டுமல்ல, எதிர்ச்சிந்தனைகளும் முக்கியமான பங்காற்றின என்பதை வலியுறுத்துவதாக உள்ளது. சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் உயர் சிந்தனையைத் தூண்டும் கட்டுரை ஆகும்.

அடுத்து, அ.யேசுராசாவின் "நினைவுக் குறிப்புகள்" என்ற கட்டுரையில் அவர், இலக்கிய வாழ்வில் எதிர்கொண்ட சவால்கள் குறித்த அனுபவங் களை ஒளிவுமறைவின்றி பதிவு செய்து வாசகர்களுடன் பகிர்ந்துள்ளார். அவரது பழுத்த அனுபவங்கள் நினைவுக் குறிப்புக்களாக தொடரவேண்டும்.

இந்த இதழின் கவனத்துக்குரிய கட்டுரையாக, ம.பப்சி எழுதிய "ஓவிய ஆசிரியரும்", ஓவியருமான அ.மாற்கு" பற்றிய கட்டுரை உள்ளது. அவரது ஓவியங் களில் வெளிப்பட்ட வீச்சு, லாவண்யமும், ஒழுங்கமை வும், வெளிப்பாட்டுத்திறனும் அத்தகைய இரசனைக் குரியது என்பதை அழகாகக் கூறிய கட்டுரை இது. நவீன ஓவியத்தில் அவருடைய மேதைமையை எடுத்துக்கூறும் நல்ல கட்டுரை.

பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸின் நவீன தமிழ்க்கவிதை பற்றிய தொடரில், இவ்விதழில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதிதாசனின் கவிதைகளின் சிறப்புக்கள் குறித்து எழுதியுள்ளார். தான் எடுத்துக் கொண்ட பாடுபொருள்களில் உணர்ச்சியை ஏற்றிப் பாடிய முக்கியமான கவிஞர் என உதாரணங்களுடன் வலியுறுத்திய நல்ல கட்டுரையாக வெளிவந்துள்ளது. அத்துடன் இக்கட்டுரையில் பாரதியைப்போல, பாரதிதாசனும் நவீன கவிதைக்கு ஆற்றிய பங்கு பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முருகபூபதியின் 15 வது தொடர் வழமைபோல சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

ஜீவநதி 69வது இதழ் (ஆனி -2014)

இவ்விதழில் கட்டுரைகள் என்ற வகையில் ஐந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இ.சு.முரளிதரனின் "தமிழ் சிறுகதைகளில் கடவுளின் வருகை" என்பது, கடவுள் குறித்த மாமூலான விடயங்களைத் தவிர்த்து வித்தியாசமாக சிந்திக்க வைத்த கட்டுரை. சிறுகதை உலகின் ஜாம்பவான்களான, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் முதல் சமகாலத்தவர்களான அகில், யோ.கர்ணன் வரை கடவுளின் பூவலக வருகையினை தமது சிறுகதைகளில் பதிவு செய்த பாங்கினை எடுத்துக் கூறுகிறது. ஒப்பீட்டு முறையில் சுவைபட எழுதப்பட்ட இக்கட்டுரையில் இ.சு.முரளிதரனின் தேடல் முயற்சி வெளித்தெரிகிறது.

இதழில் கவனம் பெற்ற இன்னொரு கட்டுரை ஏ.எச்.எம்.நவாஸின் "மொழியாக்கமும், தமிழ்மொழி கற்பித்தலும்" என்பதாகும். இதில், மொழியின் பண்பு, இயங்கியல் தன்மை, மாற்றமுறும் நிலைமை, அதற்கான காரணங்கள் என்பன சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராயப்படுகிறது. தமிழ்மொழி இலக்கணம் கற்பித்தலில் நவீன கற்பித்தல் முறைமையைக் கவனத்தில் கொள்வது அவசியம் என்பதையும் வலியுறுத்தி நிற்கிறது.

இந்த இதழின் கட்டுரைகளில் முக்கிய கவனத்தைப் பெறும் கட்டுரைகளில் இன்னொன்று சி.கஜேந்திரன் எழுதிய "இலங்கையின் சமகாலக் கலையில் தேனுவரவும், அவரின் படைப்புக்களும்" என்பதாகும். தேனுவர என்ற சிங்களக் கலைஞனின் முற்போக்கான கலை வெளிப்பாட்டினை விரிவாகக் கூறும் கட்டுரை இது. போரின் வலிகளைத் தாங்கி நிற்கும் எமக்கு ஆறுதலையும் தருகிறது. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அதிகார வேட்கையை கேள்விக்குட் படுத்தி எதிர்வினையாற்றும் இக்கலைஞனின் பணி மதிக்கப்பட வேண்டியது. அவரது கலைப்படைப்புக்கள் பொன் வலிகளைச் சுமந்து நிற்கும் எமக்கு நெருக்க மானது. அவரது கலைப்பிரவேசம் நம்பிக்கை தருகிறது. அவரது கலைப்பணியினை அறிமுகம்செய்த கட்டுரையாசிரியர் பாராட்டுக்குரியவர்.

முன்னனைய இதழ்களில் பாரதி, பாரதிதாசன் ஆகியோரது கவிதா மேதமையை ஆய்வுக்குட்படுத்திய பேராசிரியை அம்மன்கிளி முருகதாஸ் இந்த இதழில், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கவித்துவ ஆற்றல்கள் மீது ஒளிபாய்ச்சும் நல்ல கட்டுரையைத் தந்துள்ளார். "சொல்ல வேண்டிய கதைகள்" 15வது தொடரில் முருகபூபதி சிறப்பாக, படகுகளில் பயணித்து அவுஸ்திரேலியாவில் அகதி உரிமை கோரும் எம்மவரின் சோகக் கதையினை மனம் நெகிழக் கூறியுள்ளார். முருகபூபதியின் தொடர் ஒரு மனிதாய வாதியின் அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்வு செய்யும் நல்ல முயற்சியாக உள்ளது.

ஜீவநதியின் மேற்குறித்த ஒன்பது இதழ்களையும் 61வது - 69வது வரையான இதழ்கள் ஒரு சேரப் பார்க்கும் போது, ஈழத்து இலக்கிய உலகின் மேம்பாட்டுக்கு அழுத்தம் தருகின்ற சிற்றிதழாக ஜீவநதி இருந்து வருகிறது என்பது உறுதிபடுகிறது. இக்கால வெளியில் பிரவகித்த இதழ்களில் கட்டுரைகள் - 51, சிறுகதைகள் - 40, கவிதைகள் - 80, நேர்காணல்கள் - 04, விவாதமேடை - 03, நூல் விமர்சனங்கள் - 09 என தொகையளவில் பிரமிக்க வைக்கும் ஆக்கங்கள் வெளி வந்துள்ளன. இந்த இதழ்களில் இலக்கியம் தவிர சமூக அறிவியல் சார்ந்த கட்டுரைகளுக்கும் இடமளிக்கப் பட்டதை அவதானிக்க முடிகிறது. கலை, இலக்கியம், சமூகச்சிந்தனை ஆகியவற்றில் உண்மையான அக்கறை கொண்ட எந்த சராசரி மனிதனும் புரிந்து கொண்டு ஜீரணிக்கக் கூடிய வகையில் கட்டுரைகளும் படைப்புகளும் அமைந்துள்ளன. சில கட்டுரைகளின் நீண்ட தலைப்புகள் மயக்கத்தை தருபவையாக உள்ளன. கட்டுரையின் கருப்பொருளிலிருந்து விலகி நிற்காத ஒருமைத் தன்மையினை தலைப்புகள் கொண்டிருப்பது சிறப்பு.

ஜீவநதியின் ஆசிரியத் தலையங்கங்கள் சமகாலப் பிரச்சினைகளை நோக்கியவையாக இரத்தினச் சுருக்கமானவை. நியாயமான ஆதங்கங்களை வெளிப்படுத்துபவை. சிலவேளைகளில் ஆசிரியரின் தார்மீகக் கோவங்கள் கூட மனதை தொடுபவையாக உள்ளன.

சிறுபத்திரிகைச்சூழலில் ஜீவநதி அதன் ஆரம்ப காலம் தொட்டு நிதாமாக எவ்வித பக்கச்சார்பு மின்றி ஆரோக்கியமாகச் செயற்பட்டுவரும் சிற்றிதழ். இக்கட்டுரையில் மதிப்பிடப்பட்ட இதழ் 61 முதல் 69 வரையான ஒன்பது இதழ்களும் அந்த நம்பிக்கையை உறதிப்படுத்தியுள்ளன. பல்வேறு படைப்பாளுமை கொண்டவர்களின் ஆக்கங்கள் இதழ்களுக்கு கனதி சேர்த்துள்ளது. "ஜீவநதி" பக்கம்சாராமை, சகிப்புத் தன்மை, விமர்சனங்களை கருத்துலக நாகரிகத்துடன் எதிர் கொள்ளும் சிறந்த பண்பினை இதுவரை கடைப் பிடித்து வருவது பாராட்டுக்குரியது. அது இன்றைய எமது இலக்கியச் சூழலில் தொடரப்பட வேண்டியது அவசியம். ஜீவநதியை மாதாந்தம் தவறாது கொண்டு வரும் இதழ் ஆசிரியர் பரணீதரனின் உழைப்பு வீண்போகாதது. ஈழத்து இலக்கியத்துக்கு உரம்பாய்ச்சும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மதுஷா மாதங்கியின் கவிதைகள்

அவள்

கோடுகளை எளிதில் அழித்து விட முடிவதில்லை
அவை புள்ளிகளில் தம்மை ஒளித்து வைத்துக் கொள்கின்றன
அப்படித் தான் அவளும்...!
சேற்று வயலில் வெறுங்காலுடன் நடக்கும் மனநிலைக்கு
ஒப்பானவள்
ஒரு பயணம் அவளை எனக்கு அறிமுகம் செய்தது
வலிகளை உளியாக்கும் கண்களுக்குரியவள் அவள்
ஒரு போதும் அவள் பேச்சில் துன்ப வாடை வீசியதில்லை
ரோஜா மாலைகளை விட மலர் வளையங்கள்
வணக்கத்துக்குரியவை என்றாள்
கர்ப்பத்தை காட்டிலும் கல்லறைகள் பெறுமதியானது என்றும்
சொன்னாள்
தாலாட்டுக்களை வெறுப்பதாக கூறியிருந்தாள்
இறுதியாக
நாயின் குரைப்புகளில் ஒளிந்து கொண்ட இசையை
கையளித்து சென்றாள்
கோடுகளை எளிதில் அழித்து விட முடிவதில்லை...?

தொண்டைக் குழிக்குள்ளும்...!

புதைக்கப்பட்ட தேசம் அது
தொலைக்கப்பட்டவனை தேடிக்கொண்டிருக்கிறேன்
நெளிந்த மண்டையோடு ஒன்று
ஊகம் கூறி உதிர்ந்து போனது அவனின்
அடையாளங்கள் எல்லாம் தேசத்துடன்
சேர்ந்து புதைந்திருக்க வேண்டும்
வார்த்தைகளை எல்லாம் சுவாசிக்க வைத்தவன் அவன்...!
சுவடுகள் ஏதும் இன்றிய அவன் தொலைதல் இறுக்குகின்றது
உங்களில் யாரேனும் புதையுண்ட தேசங்களில்
எதையேனும் அல்லது யாரையாவது தொலைத்திருக்கிறீர்களா?
நேற்றின் எச்சங்கள் நாளைகளை தீர்மானிக்கும்போது
முட்கிரீடம் தலைகளுடன் மட்டும் தங்குவதில்லை
தொண்டைக் குழிக்குள்ளும் தான்.

நீ வந்திருந்தாய்

நினைவுகள் நீக்கி தொலைவுபடுத்தப்பட்ட
ஒரு நெடிய இரவில்
வந்திருந்தாய்
நானோ காணாமல் போதலில் கரைந்து கொண்டிருந்தேன்
எங்கு தேடியும் விம்பத்தின் துகள்கள் கூட
பெற முடியாத ஓர் இடத்தில்...!
மன்னிப்புக்களால் சாவடிக்கப்பட்டிருக்கலாம்
அல்லது
நம்பிக்கைகளால் நசுக்கப்பட்டிருக்கலாம்
ஆனால்
நான் நிராகரிப்புக்களால் நிரம்பி வழிகிறேன்

ஒரு துளி கண்ணீரோ...
நீண்ட பெருமூச்சோ
என்னிடம் இல்லை
ஆனால்,
நான் காணாமல் போவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறேன்

வேர்களின் விசும்பல் விறகுவெட்டிகளுக்கு தெரிவதில்லை
என் காணாமல் போதலிலும் அறியப்படாத முடிச்சு ஒன்று
இருக்கத்தான் செய்தது

வேரில் தான் விஷம்

திடீர் என தேவன் சபை கூடியது
மானிடனும் ஓரத்தில் மறைந்து கொண்டான்
தேவன் எழுந்தான்
பூலோக பிரளங்களை பிரட்டிக் காட்டினான்
முடியாமைகளை விழுங்கிக் கொண்டு மௌனமானான்

மானிடன் எழுந்தான் மௌனம் கலைத்தான்
"கனியில் விஷமன்று
காம்பிலும் விஷமன்று
வேரில் தான் விஷம்" என்றான்
வியர்த்தது சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வேரில் விஷமா? "
நான்கு தலையாய் சிந்தித்துப் பார்த்தனர்

முடிச்சை மீண்டும் மானிடனே அவிழ்த்தான்
"குறத்தியை கொண்டான் குமரன்
குல விதியை மீறிவிட்டான்"
வேரில் தான் விஷம் உண்டு, விளங்கியது தேவனுக்கு
"அறிவிழந்தீரோ" அலறிவிட்டான் ஆறுமுகன்
அறிவு கொண்டேன் என்றான்; ஆனந்தமானான் தேவன்

"குறத்தியை புறம் தள்ளும்"
"அவள் என் மணமகள்"
"உம் குலமகளா அவள்"
"குல நெறி தரக்கவே கொண்டேன் அவளை"
"குலநெறி தகர்க்க நீர் யார்"
"தேவன் மகன்"
"நான் மானிடன், குறத்தியை புறம் தள்ளு"
"இல்லையேல்...?"
"உம்மை விலக்கி வைப்போம்..."
விதி வரைந்தான் மானிடன்
முயன்று தோற்றான் முருகன்
சாதி சட்டமானது
கனியில் விஷமன்று
காம்பிலும் விஷமன்று
வேரில் தான் விஷம் .

என்னிலை

எப்போதவாது தேடி வரமாட்டானா?
வாசல்களுக்கு வயதாகின்றது
பார்வைகள் எல்லாம் துரப்பிடித்து போகிறது
அவனை தேடி விழைகிறது மனம்

தேடும் போது தான்
பலமும் பலவீனமும் வெளிப்படும்
அது தேடலில் இருக்கும்
அல்லது
தேடப்படுவதில் இருக்கும்

எப்போதிருந்தே என் இரவுகள் எல்லாம்
அவனுள் புதைந்து விட்டன
பதிவு செய்த குரல்களிருந்து
அவனை நெய்து என் தனிமையை போர்த்திக் கொள்கிறேன்

புவியீர்ப்புக்கு எதிரான புகை போல
மனம் நிஜத்திற்கு எதிரானது
இல்லை என்றபோதும்
இருப்புநிலையை கற்பனையில் நிறுவிக் கொள்கிறது
இறுதியில் மனம் தோல்வியின் துகள்களில்
வேற்றியின் விம்பங்களை கண்டு
இறுகிக் கொள்கிறது

அது நானாய் இருந்தேன்

அவள் கனவுகளின் கடன்காரி
நீண்ட ஒரு பயணம் செய்வதாய் எண்ணி
நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கிறாள்.

பரிதாபத்திற்கான கண்ணீர் துளிகளையோ
தண்டணைக்கான சவுக்கடிகளையோ
நிரப்பிக் கொள்ளாதவள்

யாரும் அறியாத
இசையின் கருவினை சுமந்து கொண்டிருந்தாள்
எந்த ஓவியத்தாலும் அவளை வெளிப்படுத்த முடியாது.
ஒலியின் பிறப்புக்களில் அவள் தன்னை சிறை வைத்துக் கொண்டாள்.

மொழிபெயர்ப்பு போல அவளது மௌங்கள் முக்கியமாகின்றன
அவள் வார்த்தைகளும் கூட...!

இறந்து விட்ட கல்லறைகளில் நம்பிக்கை கொண்டிருந்தாள்
துளையற்ற புல்லாங் குழலில் தனக்கான இசை இருப்பதாய்
சொன்னாள்

இறுதியாய்
அவள் ஒரு முகமூடிக்காய் காத்திருந்தாள்
அது நானாய் இருந்தேன்

பிணமொழி

சில அர்த்தப்படுத்தலுக்கு அப்பால்
இன்று நான் அன்னியப்பட்டு போகிறேன்
காக்கை கூட்டில் குயில் முட்டை இருவது போல
காலம் நழுவி சில நேரங்களில்
நம் கால்களுக்கிடையே வருவதுண்டு
ஆனால் இது
எதிர்மறையானது.....!
நூலறுந்த பட்டம் போல்
ஆதியும் அந்தமும் இன்றி
அல்லாடிக் கொண்டிருக்கிறது
சேடம் இழுக்கும் ஆன்மாக்கு ஒப்பானது
பிணமொழி இன்றி இங்கு வேறு ஏதும் இல்லை.

2013 ஆம் ஆண்டுக்குரிய இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே நடாத்தப்பெற்ற கவிதா ரலன்ற் போட்டியில் முதற்பரிசு(ரூபா ஒரு இலட்சம்) பெற்ற கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்க்கனவு வளர்த்த நிலம்

நீரூற்றி நாம் வளர்த்த
பயிர் நிலம்
இன்று பாழ்பட்டு
பட்டுப்போய்
பாலைவனமாய்
துண்டு துண்டாய்
வரட்சியின்
கொடுமை முடியாத்
தொடர்கதையாய்
கொழுத்திடும்
வெக்கை ஆட்சியில்
எங்கள்
உயிர்கனவு வளர்த்த
எம்நிலம்
இன்று விதைப்பிழந்து
விளைச்சலும் இழந்து
அலைச்சலுக்குப் பின்
மீண்டும்
அந்த நிலத்தில்
பயிர் வளர்க்கும்
கனவுகளுடன்
இருப்போம் என்றால்
அடாத்தாய்
எம்நிலத்தை
ஆள்பவன்
சொல்வதைக்
கேட்கையிலே
உயிர் பதைக்கிறது
நிலத்தின்
உரிமைக்கான
விவாதங்களில்
புள்ளடியிட்டே
கரைகிறது காலம்
யுகங்கள் கடந்து

சிதறிய காலவிம்பம்

இறந்த காலத்தின்
பிரதி விம்பங்களையே
மீளவும் மீளவும்
காட்டிடும்
காலக் கண்ணாடியில்
ஒளியிழந்து
தவிக்கிறது
நிகழ்காலம்
கண்ணாடிச் சிதறல்களுள்
முழுமையின்
தரிசனம் தேடி
அலைகிறது விம்பம்
நொருக்கியவனே
கண்ணாடி தரும்
உலகொன்றில்
அதிகமாய்
விற்பனையாகின்றன
எங்கள்
சுயமிழந்த
பார்வைப் பிரதிகள்
இப்போது
கண்ணாடியில்
தலைகீழாய்
எனது பொம்மை விம்பம்
என்னைப்பார்த்து சிரிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேனைகளின் மகத்தியம்

PARKER

அண்மைக்காலங்களில் நான் வெளியே செல்லும்பொழுது கைவசம் இரண்டு அல்லது மூன்று பேனைகளை எடுத்துச்செல்வது வழக்கமாகிவிட்டது. கலை - இலக்கியம் - கல்வி சார்ந்த சில பொதுவேலைகளில் ஈடுபடுவதனால் மாத்திரமல்ல பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதனாலும் என்னுடன் மூன்று பேனைகளும் பயணிக்கும்.

ஒரு பேனையில் கறுப்பு நிற மை மற்றொரு பேனையில் நீல நிற மை. மூன்றாவது பேனையில் கறுப்பு - நீலம் - சிவப்பு - பச்சை நிற மையிருக்கும். அந்த நான்கு வர்ணப்பேனையில் விரைவில் தீர்ந்துவிடும் நிறங்கள் கறுப்பு - நீலம் ஆகியன மாத்திரமே. எமது ஈழத்து இலக்கிய நண்பர் பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன் சிறந்த குரல்வளம் மிக்கவர். அவர் இலங்கை வானொலியில் வர்த்தக விளம்பரங்களை அறிவிக்கும் பணியிலு மிருந்தவர்.

போல்பொய்ன்ட் பேனைக்கு அவர் வழங்கிய தமிழ் வடிவம் குமிழ் முனைப் பேனா. ஒரு காலத்தில் எமது தமிழ் மொழி மாத்திரமல்ல ஏனைய பல மொழி களும் வழக்கொழிந்துபோன பல மொழி களும் கல்லிலே பொழியப்பட்டன. கல்வெட்டுகள் அவற்றின் சரித் திரத்தைச் சொல்கின்றன.

காளிதாசர் - வள்ளுவர் - கம்பர் - இளங்கோ - கபிலர் - அவ்வையார் - தொல்காப்பியர் - புகழேந்தி - ஒட்டக் கூத்தர் -சீத்தளைச்சாத்தனார் உட்பட பல முன்னோர்கள் பனையோலை ஏட்டிலே எழுதிய காலத்தில் மின்சாரம் இல்லை.

தொட்டெழுதும் பேனை அறிமுக மான காலத்தில் மன்னர் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்து காலனி ஆதிக்கம் உருவாகிவிட்டது.

பிற்காலத்தில் தொட்டெழுதும் பேனை தனது ஆயுளை நிறைவுசெய்த பொழுது மை நிரப்பிய பவுண்டன் பேனைகள் - பாக்கர் பேனைகள் - பைலட் பேனைகள் வரவாகின. காலப்போக்கில் குமிழ்முனைப்பேனை பாவனைக்கு வந்துவிட்டது.

இலங்கைப்பேனைகளுக்கு இந்தியா வில் நல்ல மரியாதை. 1984 இல் தலை மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் ஊடாக தமிழகம் சென்றேன்.

என்னுடன் வந்த நண்பர் தனது பேக்கில் சுமார் 10 குமிழ் முனைப்பேனைகள் வைத்திருந்தார். தமிழ்நாட்டிலிருக்கும் அவரது நண்பர்களுக்கு கொடுப்பதற்காகவே அவற்றையும் எடுத்துவந்தார்.

சுங்கத்தில் நடந்த சோதனையின் பொழுது ஒரு அதிகாரி உமக்கு எழுதுவ தற்கு ஒரு பேனை மாத்திரம் போதும் எனச்சொல்லி அத்தனைபேனையையும் அள்ளி கபளீகரம் செய்துவிட்டதை அவதானித்தேன்.

சென்னையில் சட்டமன்ற உறுப் பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் அச்சமயம் இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் தமது குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்தார். 1983 இல் இலங்கையில் நடந்த இனச்சங்காரத்தையடுத்து அவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பி.க்களும் தமிழகத் திலேயே முகாமிட்டிருந்தனர்.

அமிர்தலிங்கத்தை சந்திக்க சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதிக்குச்சென்றபொழுது அங்கிருந்த வாயில்காப்போர் என்னை வேண்டு மென்றே உள்ளே விடாது தாமதித்தார். அடிக்கடி எனது சேர்ட் பொக்கட்டிலிருந்த குமிழ்முனைப் பேனையை அவர் கடைக்கண்ணால் பார்ப்பதை தெரிந்துகொண்டேன்.

பாதுகாப்பு காரணங்களினால் உள்ளே எவரையும் கண்டபடி அனுமதிக்கமுடியாது எனச்சொல்லிவிட்டு சார்.... நீங்க சிலோனிலிருந்து வர்ரீங்க. அந்தப்பேனையை உங்கள் ஞாபகமாக எனக்குத்தரமுடியுமா எனக்கேட்டார்.

பரவாயில்லை.... உள்ளே செல்லுவதற்கு ஒரு சாதாரண பேனையை கொடுப்பதினால் குடியொன்றும் முழுகிவிடப்போவதில்லை என நினைத்து அதனைக்கொடுத்துவிட்டேன். நான் அண்ணாநகரில் தங்கியிருந்த வீட்டிலிருந்த பேக்கில் மேலதிகமாக ஒரு பேனை இருக்கிறது என்ற எண்ணத்தில்தான் அதனை அன்று அந்த வாயில்காப்போருக்கு எடுத்துக்கொடுத்தேன்.

எஞ்சியிருந்த மற்றப்பேனையையும் தமிழகத்தை விட்டு விடைபெறும்பொழுது இழந்து விடுவேன் என்று அச்சமயம் நான் கனவிலும் நினைத்துப்பார்த்திருக்கமாட்டேன்.

தமிழகப்பயணங்களை முடிக்கும் வரையில் என்னிடமிருந்த மற்றப்பேனையை வெளியே தெரியாமலேயே காற்சட்டை பொக்கட்டுக்குள் மறைத்து வைத்திருந்தேன்.

மீண்டும் இலங்கை திரும்புவதற்கு இராமேஸ்வரம் துறைமுகத்திற்கு வந்தபொழுது அங்கு குடியகல்வு பிரிவில் வரிசையில் நின்றேன். சிலவேளை ஏதும் படிவங்களில் ஒப்பமிட நேரிடலாம் என நினைத்தமையினால் காற் சட்டைப்பொக்கட்டிலிருந்து அந்தப்பேனை சேர்ட் பொக்கட்டுக்குள் இடம்பெயர்ந்தது.

இப்போது குடியகல்வு அதிகாரியின் முன்னால் எனது கடவுச்சீட்டையும் கப்பல் பயண அனுமதிச்சீட்டையும் காண்பிக்கின்றேன்.

"சார் ....அந்தப்பேனையை கொஞ்சம் தாருங்கள் " - என்றார் அந்த அதிகாரி. எடுத்துக்கொடுத்தேன். எனது கடவுச்சீட்டில் சீல் அடித்து ஒரு படிவத்தில் ஏதோ எழுதிவிட்டு, என்னிடம் கடவுச்சீட்டையும் கப்பல் பயண அனுமதிச்சீட்டையும் நீட்டிவிட்டு, வரிசையில் எனக்குப்பின்னால் நின்றவரை அழைத்தார்.

நான் நகராமல் நின்றுகொண்டிருந்தேன்.

என்ன சார் நிக்கிறீங்க ? இனி நீங்கள் போகலாம். என்று சொல்லிவிட்டு எனக்குப் பின்னாலிருப்பவரை அழைத்தார்.

சார் எனது பேனை.... என்று இழுத்தேன்.

"என்ன சார் இந்தப்பேனைக்காக நிற்கி றீங்க. சிலோன்ல இப்படி எவ்வளவோ வாங்கலாம் சார். போங்க சார் " - என்று சொல்லிவிட்டு எனக்குப்பின்னாலிருப்பவரை அழைத்தார்.

அவர் எனது பேனையை இவ்வாறு எடுத்துக்கொண்டது எனக்கு கவலை இல்லை. குறைந்த பட்சம் அதற்கு நன்றி கூட அவர் தெரிவிக்காததுதான் வருத்தமாக இருந்தது.

அபகரிப்பு எதற்கு நன்றி சொல்லவேண்டும் ? என என்னை நானே தேற்றிக்கொண்டேன்.

எழுத்தாளனாகவும் பத்திரிகையாளனாகவும் பயணிக்கும் என்போன்றவர்களிடம் எப்பொழுதும் பேனை இருத்தல் அவசியம்தான். ஆனால் மடிக்கணினியும் கைத்தொலைபேசியும் ஐபேர்ட்டும் பாவனைக்கு வந்தபின்னர் பேனையின் பாவனையும் குறைந்துவருவதாகத்தான் தெரிகிறது.

அவுஸ்திரேலியாவில் மட்டுமல்ல உலகில் தொலைபேசி பாவனையுள்ள அனைத்து வீடுகளிலும் தொலைபேசிக்கு அருகில் ஒரு பேனை நிச்சயம் இருக்கும். ஆனால் சில சமயங்களில் அந்தப் பேனைகள் எழுதாமல் காலை வாரிவிட்டுவிடும்.

ஏனோ தெரியவில்லை தற்காலத்தில் பல வீடுகளில் பேனைகள் உரியவேளையில் இயங் காமல் அசௌகரியங்களை கொடுத்துவிடுகின்றன.

இந்த வீட்டில் அவசரத்திற்கு ஒரு பேனை கிடைக்காது. இருந்தாலும் சில வேளை எழுதாது. என்று மறுமுனையிலிருந்து புலம்பும் குடும்பத் தலைவர் தலைவிகளை பார்த்திருக்கின்றேன்.

அவுஸ்திரேலியாவில் சில வங்கிகள் தபால் நிலையங்களில் இலவசமாக குமுழ்முனைப்பேனை களை வழங்குகிறார்கள். தமது வாடிக்கையாளர் களை திருப்திப்படுத்துவதற்காகவும் விளம்பரத்திற் காகவும் மாத்திரமல்ல மக்கள் தொடர்ந்தும் பேனைகளை புழக்கத்தில் வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவுமே அவ்வாறு இலவசமாக வழங்குகிறார்களோ என்றும் யோசிக்கின்றேன்.

பெரும்பாலானவர்களிடம் தற்காலத்தில் பேனை இல்லை.

ஒரு நாள் எனது இரண்டாவது மகளின் வீட்டில் ஒரு காலை வேளையில் நின்றேன். எனது மகள் தனது கணவனின் (மருமகன்) கைத்தொலை பேசியில் என்னமோ தட்டிக்கொண்டிருந்தாள்.

எதுவும் பேசாமல் என்ன தட்டுகிறாய் எனக்கேட்டேன்.

அவர் வேலைக்குப்புறப்படுகிறார். வேலை முடிந்து திரும்பி வரும்பொழுது வீட்டுக்கு என்ன என்ன வாங்கிவரவேண்டும் என்ற லிஸ்டை அதில் பதிவுசெய்துகொண்டிருக்கிறேன். என்றாள் மகள்.

ஏன்.... ஒரு காகிதத்தில் எழுதிக்கொடுக்க முடியாதா? எனக்கேட்டேன்.

இனி அதற்கு பேனையைத்தேட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிக்கொடுத்தாலும் வேலை அவசரங்களில் அவர் தொலைத்துவிடுவார். கைத்தொலைபேசி எப்பொழுதும் அவருடன் இருக்கும்தானே. இப்பொழுது எல்லாமே கைத்தொலைபேசிக்குள் அடக்கம் அப்பா என்றாள்.

ஆமாம் .... கெமரா முதற்கொண்டு பலதும் அதற்குள் அடக்கம்தான்.

குவின்ஸ்லாந்து மாநிலத்தில் ஒரு இலக்கியச்சந்திப்புக்கு சென்றிருந்தேன். காலை கருத்தரங்கு அமர்வு எனது தலைமையில் நடந்தது.

அங்கு இயங்கும் தமிழ்ப்பாடசாலை ஆசிரியை ஒருவரின் தலைமையில் பிற்பகல் இரண்டாவது அமர்வு நடக்கவிருந்தது.

மதிய உணவுவேளையில் நான் அந்தச் சகோதரியை அவதானித்தேன். அவர் கைத் தொலைபேசியுடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரின் முன்னால் நின்றுகொண்டு தமது கைத்தொலை பேசியில் என்னவோ பதிவுசெய்து கொண்டிருந்தார்.

பிற்பகல் அமர்வு அந்தச்சகோதரியின் தலைமையில் ஆரம்பமாகியது. அவர் வசம் பேனையும் இல்லை. பேப்பரும் இல்லை.

கைத்தொலைபேசியை பார்த்தவாறே உரையாற்றினார். பேச்சாளர்களையும் அதனைப்பார்த்துவிட்டே பேசுவதற்கு அழைத்தார்.

இவ்வளவு காலமும் மேடைகளின் மேசைகளிலிருந்த பேனைகளுக்கும் காகிதங் களுக்கும் படிப்படியாக விடைகொடுக்கப்படுகிறது என்பது அவரது செயல் மூலம் புரிந்துவிட்டது.

இந்தப்பத்தியின் தொடக்கத்தில் நான் தற்காலத்தில் என்வசம் மூன்று பேனைகளுடன் அலைந்துகொண்டிருக்கின்றேன் எனச்சொன்னது எனக்காக மாத்திரமில்லை. எனது நண்பர் களுக்காகவும்தான்.

ஏதாவது ஒரு பொது நிகழ்வில் கலந்து கொள்ளும் நண்பர்களுக்கு எவரதும் தொலைபேசி இலக்கம் – மின்னஞ்சல் தேவைப்பட்டால் முதலில் அவர்கள் தேடுவது பேனையும் காகிதமும்தான். என்னிடமிருப்பதை கொடுத்தால் சில வேளை திரும்பிவரும். வராமலும் மறையலாம். நானும் பொது நிகழ்வு சந்திப்பு உசாரில் கொடுத்ததை மீளப்பெற மறந்துவிடலாம்.

அதனால்தான் என்வசம் மூன்று பேனை களை வைத்துக்கொண்டு நடமாடுகின்றேன்.

தற்காலத்தில் பல ஊடகவியலாளர்கள் தமது மடிக்கணினியிலேயே செய்தி – சந்திப்பு – நேர்காணலை எழுதிவிடுகின்றனர். பின்னர் செம்மைப்படுத்தி வெளியிடுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடந்த எமது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சி நடந்தது. அங்கு வருகைதந்திருந்த ஒரு ஊடகவியலாளர் தமது மடிக்கணினியிலேயே செய்தியை எழுதி

DREAMS CANNOT BE RUSHED.



125 YEARS OF INNOVATION
Since 1888

நிழ்ச்சியை படமும் எடுத்து மின்னல் வேகத்தில் கொழும்பு பத்திரிகைக்கு அனுப்பிவிட்டார். மறுநாள் யாழ்ப்பாணத்தில் அந்தச்செய்தியை படங்களுடன் குறிப்பிட்ட பத்திரிகையில் பார்த்தேன். அந்த ஊடகவியலாளரிடம் பேனை இருக்கவில்லை.

சிங்கப்பூரில் வெளியாகும் தமிழ்முரசு நாளிதழிலிருந்து ஒரு பெண் ஊடகவியலாளர் என்னைச்சந்தித்து நேர்காணலை பதிவுசெய்த பொழுதும் அவரிடம் பேனை இருக்கவில்லை. மடிக்கணினியில்தான் தட்டித்தட்டி எழுதினார்.

கல்லில் பொழியப்பட்ட தமிழ் இன்று வேறு வடிவம் கொண்டுவிட்டது.

நான் வசிக்கும் மெல்பனில் ஒரு தொலைக்காட்சியில் தினமும் மாலை மில்லியன் டொலர் பரிசுக்குரிய பொது அறிவுப்போட்டி நிகழ்ச்சி அரைமணிநேரம் ஒளிபரப்பாகும். அதனை பெரும்பாலும் பார்க்கத்தவறமாட்டேன்.

ஒரு நாள் நிகழ்ச்சியில் பார்க்கர் பேனை எங்கே யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்ற கேள்வியும் கேட்கப்பட்டது. பதிலுக்கு தயாரான ஒரு இளம் யுவதி (25 வயதிருக்கலாம்.) அந்தப்பெயரில் ஒரு பேனை இருக்கிறது என்பதே தனக்குத் தெரிய வில்லை எனச்சொல்லிக்கொண்டு போட்டியி லிருந்து பின்வாங்கினார்.

அமெரிக்காவில் 1888 இல் George Safford Parker என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட உலகப்பிரசித்தம் வாய்ந்த பாக்கர் பேனைபற்றி எதுவுமே தெரியாது என்று இன்றைய கணினியுகத்தில் ஒரு பெண் சொன்னதைக்கேட்டபொழுது ஆச்சரியமாக இருந்தது.

ஒரு காலத்தில் எங்கள் முன்னோர்கள் பனையோலையில் எழுதினார்கள் என்று எனது பேரக்குழந்தைகளுக்குச்சொன்னால் அவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

அவர்களுக்கு பனைமரத்தைக்காண்பிக்க அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு நாள் இலங்கையின் வடபகுதிக்கு வரத்தான் வேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

தொடர்

கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை (1876–1954)

பாரதியின் காலம் தொடங்கி சமூகப் பிரச்சினைகளை நெடும்பாடல்களாக எழுதும் மரபும் தோன்றியுள்ளது. அவ்வாறு எழுதப்பட்டவற்றை நவீன காவியங்கள் என அழைப்பர். பாஞ்சாலி சபதத்தை இந்திய விடுதலையை முன்னிறுத்தி பாரதி எழுதும் போது அதனை நவீன காவியம் என்றார். பாரதிதாசனும் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் போன்ற நெடும் பாடல்களை எழுதினார் என ஏலவே பார்த்தோம். தேசிக விநாயகம்பிள்ளை தான் வாழ்ந்த சமூகத்தில் காணப்பட்ட மூடநம்பிக்கைகளையும் தவறான நடவடிக்கைகளையும் **நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழிமான்மியம்** என்ற தனது நூலிலே அங்கதச் சுவை படப் பாடியுள்ளார்.

நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழிமான்மியம்

தேசிய விநாயகம்பிள்ளை வாழ்ந்த காலத்தில் நாஞ்சில் நாட்டிலே காணப்பட்ட மருமக்கட்டாய முறைமையால் ஏற்பட்ட சமூகச் சீர்கேடுகளை **நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழிமான்மியம்** எடுத்துக் காட்டுகிறது. நாஞ்சில் நாட்டில் வேளாளரிடையே காணப்பட்ட இம்மரபு காரணமாக ஆண் ஒருவரது சொத்து அவரது தமக்கை அல்லது தங்கை பிள்ளை களுக்குச் சேரவேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்ததனால் ஆண்கள் ஒவ்வொருவரும் தாம் நினைத்த படி வாழ்ந்து கொண்டிருந்தனர். அதன் காரணமாக மனைவியருக்கு சொத்து இல்லாத நிலையில் அவர்களின் மனைவிமார் மிகுந்த துன்பத்துக்குள்ளாக வேண்டியிருந்தது. இந்தத் துன்பத்தையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் அச்சமூகத்தின் மூட வழக்கங்களையும் **நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம்** எடுத்துக் கூறுகிறது. இந்நூல் ஐந்து பெண் களை மணந்து இறுதியில் ஒட்டாண்டியான ஒருவனைப் பற்றிய கதையாகும். இக்கதை அவனது ஐந்தாவது மனைவி கூறுவதாக அது அமைக்கப் பட்டுள்ளது. வினாயகர் வணக்கத்துடன் ஆரம்பிக்கிறது. அவையடக்கம் ஏழைப் பெண்ணொருத்தி கூறுவதாக அமைகிறது. அதில் அவள்

காசினி மீதென் கதைபோல் இல்லை
சீதையின் கதையும் சிறுகதையாகும்
பாஞ்சாலியின் கதை பழங்கதையாகும்
தமியேன் கதைக்கு சந்திரமதிகதை
உமியாம் தவிடாம் ஊதும் பொடியாம்

என புராணக்கதைகளில் துன்பப்பட்ட எல்லாப் பெண் களினதும் கதையை விடவும் தன் கதை துன்பமானது எனத் தொடங்குகிறாள். பாடறியேன் படிப்பறியேன் என நாட்டுப்பாடல்களில் கூறுவது போல பெண் தன் நிலையைக் கூறுவதாக அமைத்திருக்கிறார்.

.....

தானும் மக்களும் தமியராகி
பொறியும் கலங்கிப் போதமும் கெட்டுப்
புலம்பும் பொழுது புண்ணிய சீலரே
தொல்காப்பியம் முதல் பல்காப்பியமும்
கற்றுத் தெளிந்த கவிவல்லோரே
விகாரம் முற்றும் விரவி வருமலால்
பொருட்சுவை சொற்சுவை பொருந்தி வந்திடுமோ
எதுகை மோனை இசைந்து வந்திடுமோ
அணிகள் பற்பல அடுக்கி வந்திடுமோ
ஆதலின் இதனைப்
பதவியும் படிப்புமிலாதேன்
பஞ்சப்பாட்டெனப் பழித்திகழாதீர்
இலக்கண வழுக்கள் இருப்பினும் அவற்றை
வலித்தல் மெலித்தலால் மதித்துக் கொண்மின்
நீட்டல் குறுக்கலாய் நினைத்துக் கொண்மின்

என தொடர்கிறது. மிகவும் அங்கதச்சுவையுடன் பாடப்பட்டுள்ள இந் நெடும்பாடல் அச்சமூகத்தின் பிரச் சினைகளை விலாவாரியாகக் கூறுகிறது. 1.குலமுறை கிளத்து படலம், 2.மாமி அரசியற்படலம், 3.கேலிப் படலம், 4.கடலாடுபடலம், 5.பரிகலப்படலம், 6.நாகாஸ்திரப் படலம், 7.கருடாஸ்திரப்படலம், 8.வாழ்த்துப்படலம் 9.கோடேறிக் குடிமுடித்த படலம் 10. யாத்திரைப்படலம் 11.கும்பியெரிச்சல் படலம் என அங்கத முறையிலேயே படலங்களாக அமைத்து இந்தப்பாடல் எழுதப் பெற்றுள்ளது.

குலமுறை கிளத்து படலம் என்பது பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்களிலே வேந்தர்களின் வம்சப் பெருமையைக் கூறுவதாய் அமைய இதிலுள்ள குலமுறை கிளத்து படலத்தில் பலதார மணமும் மணம் செய்த பெண் களின் நிலையும் மிகுந்த சுவாரசியத்துடன் கூறப்படு கின்றன. இப்படலத்தில் ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப்பட்ட பெண் சொல்வதாக பின்வருமாறு சமூகத்தைக் கேலி செய்து குலமுறையின் சீர்கேடு களைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

என்னைப் பதினாறாண்டில்
ஐந்தாம் மனைவியாக மணந்தனர்
கணவர் வீட்டுக் கதையினைக் கேளும்
மனைவியர் வேலை வகையினைக் கேளும்
தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி
அண்டையில் அகலாதிருக்க ஒருத்தி
அத்தனை பேர்க்கும் அடிமையாளாய்
ஏழை பாவியானும் ஒருத்தி

இக்கூற்றுகள் அக்காலத்து பெண்ணடிமைத் தனத்தை மிகவும் தெளிவாகச் சுட்டுகின்றன. மேலும் மாமியின் கொடுமைகளும் விரிவாகக் குறிப்பிடப்படு கின்றன. எல்லாப் பொருளையும் பூட்டி வைத்திருக்கும் அவள் மருமக்களை கேவலமாக நடத்தினாள். ஒருகண் பார்வையை மட்டும் உடைய அவள் அங்கும் இங்கும் ஆக அவ்வீடு எங்கும் இருப்பாள். இவளுடைய கண் ஆயிரம் கண்களையுடைய இந்திரன் கண்களுக்கும் இணையாகாது. பின்னே நோக்கினும் முன்னுளதறியும் முன்னே நோக்கினும் பின்னுளதறியும். எறும்பும் காணா இடத்தில் இவள் கண் போம். கடலாடு படலத்தில் ஆடி அமாவாசையில் குமரித்துறையில் நீராடும்போது அவர்களின் கையைப் பிடித்து நீராடவேண்டும் என்பது அவர்களின் வழக்கம். கணவர் ஐந்து பெண்களையும் ஒவ்வொருவராகப் பற்றி ஐந்து முறை நீராடியதால் ஏற்பட்ட காய்ச்சலால் பட்ட பாடு கூறப்படும் முறை மிகவும் சுவாரசியமானது.

மேலும் வழக்குப் பேசிப் பொருளை இழத்தல், வட்டிக்குப் பணம் வாங்கி உள்ள பொருளும் இழந்து போதல் போன்ற பல விடயங்களை இம்மான்மியத்தில் எடுத்துக் கூறியுள்ளார். இந்நூல் அக்கால சமூகத்தைச் சீர்திருத்தும் நோக்குடன் எழுதப்பட்டதால் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

நாஞ்சில்நாட்டு வேளாளர்பாக வழக்கு

இப்பாடலும் நாஞ்சில்நாட்டு வேளாளரிடையே காணக்கூடிய மருமக்கட்டாய முறையில் காணப்பட்ட சொத்துப்பிரிவினை முறை காரணமாக சொத்தை இழந்தவர்கள் தம் குறை கூறுவதாக அமைக்கப்பட்ட தாகும். அதாவது காரணவர் எனப்படும் குடும்பத்தில் மூத்தவருக்கே சொத்துகள் செல்வதால் அதனை அனுபவிக்க முடியாத அவரின் இளையவர்கள் (அனந்திரவர் சொல்வதாக இது அமைக்கப்பட்டது. ஒருபாடல் உதாரணமாக வருமாறு.

பத்துத் தலையுள்ள ராவணரோ?-பெரும்
பங்கு நீர்கேட்ட முறையும் ஏதோ?
சொத்துக்குரியவரும் நீவிரேயோ-நாங்கள்
தோட்டப் புழுக்களோ சொல்லும் ஐயா?

என நீதிகேட்பதாக அவர் பாணியில் இயற்றப் பட்டுள்ளன.

இரட்சகர் என்ற கவிதை இயேசுநாதர்பற்றி 30 செய்யுள்களைக் கொண்டு இயற்றப்பட்டதாகும். தேசிக வினாயகம்பிள்ளை தான் வாழ்ந்த காலத்தில் காலமான பிரபலமாயிருந்த சமூக முக்கியஸ்தர் பலருக்கு இரங்கற் பாக்களையும் எழுதினார். மகாத்மா காந்தி, கஸ்தூரி பாய், அரவிந்தர், தாகூர், சரோஜினி தேவி, அண்ணா மலைச்செட்டியார். ஈழகேசரி பொன்னையா போன்றோ ருக்கான அவரது இரங்கற் பாடல்கள் குறிப்பிடற்குரியன.

மொழி பெயர்ப்புகள்

எட்வின் ஆர்னால்ட் எழுதிய ஆசிய ஜோதி (Light of Asia) மொழி பெயர்ப்பு தவிர வேறும் பல பாடல்களை மொழி பெயர்த்துள்ளார்.

மீராபாயின் பாடல்களைத் தழுவி அன்பின் வெற்றி என்ற கவிதையைப் பாடியுள்ளார். முப்பத்தி நான்கு செய்யுள்களைக் கொண்டமைந்த இப்பாடல் சரித்திர கவிதை என்ற வகைக்குள் அடக்கப்பட்டுள்ளது. இப்பாடல்களில் ஆண்டாள் பாடல்களின் தன்மை எதிரொலிக்கக் காணலாம்.

தேசிகவினாயகம் பிள்ளை மொழிபெயர்த்த உமர் கயாம் பாடல்களின் மொழி பெயர்ப்பு அறிஞர் களால் விதந்து பாராட்டப்படுவதாகும்.. உமர்கயாமின் பாடல் மொழிபெயர்ப்பில் ஒருசெய்யுள் வருமாறு.

வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசுந்தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
வெய்ய கீதம் பல உண்டு
தெரிந்து பாட நீ உண்டு
வையந் தருமிவ் வளமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ

இப்பாடல் தமிழ்மரபை உள்வாங்கி மொழி பெயர்த்து எழுதப்பட்டது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

அவற்றை விட இரவீந்திரநாத் தாகூர் குட்றிச், மக்டொனால்ட், பெலிசியா ஹிமன்ஸ், பிளேக், எமர்ஸன், போன்ற கவிஞர்களின் கவிதைகளைத் தழுவிப் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

அக்காலத்தில் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட இயற்கை பற்றிய கவிதைகளையும் விலங்குகள் பற்றிய கவிதைகளை மொழிபெயர்த்ததிலும் தேசிக வினாயகம் பிள்ளைக்கு மிகுந்த பங்குண்டு என்பதனை இம்மொழி பெயர்ப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

அவரது பாடல்கள் ஆவேசம் கொண்டனவல்ல. யாரை நோக்கிப் பாடுகிறாரோ அவர்களுக்கு புத்தி சொல்லுவன போன்று அமைந்தவை. நீதி கேட்கும் போதும் ஆதங்கம் தென்படுமே தவிர ஆவேசம் தென் படாது. அவரது பாடல்களில் அன்பைக் காணமுடியும். அவரது பாடல்கள் பற்றி எஸ் வையாபுரிப்பிள்ளை கூறுவது நோக்கத்தக்கது. கவிமணியினிடத்தில் அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை அடக்கம், இனிய மனப்பண்பு, இரக்கம், உபகாரசிந்தை, முறைமையிலே பிரியம், நினைவாற்றல் முதலியவற்றைக் காணலாம். நீண்ட காலமாகப் பெண்கள் கலாசாலையில் ஆசிரியராக இருந்தமை யினால் இக்குணங்கள் சிறந்து விளங்குவ தற்கும் இடமிருந்தது. ஆவேசம் பரபரப்பு முதலியன சிறிதளவும் கிடையாது என்று அவர் கூறினார்.

தேசிக வினாயகம்பிள்ளையின் பாடல்களின் மொழிநடை

அவர், தன்மை முன்னிலை ஆகிய நிலைகளில் பாடல்களை அமைத்து அதற்கேற்ப விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார் அம்மா, ஐயா, அப்பா அடா அடி ஆகிய விளிச் சொற்களையும் ஆர், ஓ வினாச்சொற் களையும் இடைச்சொற் களையும் பயன் படுத்தி வாசகனை உள்வாங்கும் தன்மையினைப் பாடல்களில் காணலாம். உதாரணம்:

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ்
செய்திட வேண்டும் **அம்மா**
பண்ணிடும் பூசையாலே-**தோழி**
பயனொன்றில்லை **அடி**
ஓய்ந்து சோம்பி உறங்காதேயடா
மந்திரமோதுவதால்-எங்கும் வயல்
விளைவதுண்டோ?
தந்திரப்பேச்சாலே அரிசி சாதமாயிடுமோ?
ஆர்
அல்லும் பகலும் உழைப்பர் ஆர்
உள்ளத்தன்பு ததும்பி எழுவபவர் ஆர்
என அமைகின்றன.

தொகுத்து நோக்கும்போது தேசிகவிநாயகம் பிள்ளை பாரதி பாடிய பொருள் மரபைக் கையாண்டு பாடல்களை இயற்றினாரெனினும் தான் வாழ்ந்த காலச் சூழலுக்கேற்பவும் தன் அனுபவங்களுக்கேற்பவும் கவிதைகளை இயற்றினார். பாரதி இயற்றியது போன்ற வசன கவிதையில் இவர் நாட்டம் கொள்ளவில்லை. அவரது கவிதைகளிற் குழந்தைப்பாடல்கள் பாட சாலைப் பாடப்புத்தகங்களில் எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியதாகும்.

தேசிகவினாயகம்பிள்ளை அவரது கவிதை களின் தண்மையான ஓட்டம் காரணமாக பிரதானமாக குழந்தைகளுக்கான கவிஞராக தென்பட்டார். ஆனால் அவரிடத்து ஆழமான சமூக நோக்கு இருந்ததென்பதை அவரது நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்ற நெடுங் கவிதை எடுத் துக் காட் டுகிறது. இவரது கவிதைகளை நோக்கும் பொழுது பாரதியின் நோக்கும் செல்வாக்கும் இவரிடத்துக் காணப்படுவதை மறுக்க முடியாது. (கா.சிவத்தம்பி :தமிழின் கவிதையியல் 2007)

என சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளமை அவரின் கவிதைகளின் முக்கியத்தை எடுத்துக்காட்டுகின்றன. வி.செல்வநாயகம் அவரின் கவிதைகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுவார்.

அவர் இயற்றிய கவிதைகள் அனைத்திலும் எளிமையும் இனிமையும் இருப்பதைக் காணலாம். கருணைக்கடல் பாரசிகக் கவியமுதம் ஆகிய பாடல் களில் அவருடைய உள்ளத்தெளிவையும் கவித் திறனையும் காணமுடிகிறது. குழந்தைகள் முதலாக பெரியோர்கள் ஈறாக மக்கள் அனைவரும் படித்து அனுபவிக்கக் கூடிய மொழிநடையிலும் ஓசை முறை யிலும் அவர் கவிதைகள் அமைந்திருத்தல் அவற்றுக்கு உரிய ஒரு தனிச் சிறப்பாகும் (தமிழ் இலக்கியவரலாறு 2005) •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜீவா வைத்தியசாலை

தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

Dr.ச.ஜெயலன் D.A.M. ,RIMP.,25 வது அனுராதபுர களத்தாவ (நாகர்-இராஜபரம்பரை)
முனைவர் விசேஷரோபாளர் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி

Dr. க.ஒ இராஜரத்னம் RIMP., 24 வது அனுராதபுர மகா களத்தாவ (நாகர்-இராஜ)
பரம்பரை. சிங்கள மொழியில் ஆயுள்வேத சாஸ்திர பரீட்சையிலும் விஷேட
பரீட்சையிலும் சித்தியடைந்தவர்

Dr .ஜே.ஜெயலன் D.A.M., RIMP., J.P.உலவளத்துணைவாளர், குடும்பத்திட்டவிவகாளர்,
பயிலுநர், சபரிமலை இலங்கை திருத்தல பக்தகளுக்குமான கௌரவ செயலாளர்,வடஇலங்கை
கதேச வைத்தியசாலை

அனுராதபுரம் களத்தாவ பாலிநகர் மற்றும் தாரைநகரில் முன்னர் தலைகளைக்
கொண்டிருந்த 24 வது அனுராதபுர பாரம்பரியத்திற்கியதும் பக்கவிளைவில்லாததும்
இந்திய இலங்கை சித்த ஆயுள்வேத தமிழரச பாரம்பரிய முறைகள் நன்கு
செயலாற்றுமென தெரிந்தெடுக்கப்பட்ட இலங்கை இந்திய மருந்துகள் மூலமாக
வாதம் குடற்புண் மூலம் தொழிவு மாதாசளி சிறுநீரக கல் உடற்பருமன் உட்பட
மேலும் ஏனைமான தீராத நோய்களை நீக்குவதிலும் விசேடமாக
குழந்தைஇன்மைக்கான சிகிச்சையில் பிரபலமானதுமான எமது வைத்தியசாலை
கலட்டி தும்மன் வீதி(தட்டாதெரு சந்திக்கும்,நாச்சிமார் கோவிலுக்கும் இடையில்)
கேக்கே எஸ் வீதி,யாழ்ப்பாணம்.எனும் முகவரியில் இயங்குகின்றது.

கோட்டடி கிராம
அபிவிருத்தி சங்கத்தின் பாராட்டு
விழாவில் வைத்தியரை
பாராட்டுகின்ற உறுப்பினர்
கௌரவ சி.அலஸனின் அவர்கள்
கௌரவித்த போது

வைத்தியரின் சேவையை
வியந்து சமூகதிலகம் என்ற
கௌரவத்தை
Dr.சி.யமுனாநந்தா
(MBBS-யாழ்மாவட்ட
மார்புநோய் சிகிச்சைப்பிரிவு
பொறுப்பதிகாரி)
வழங்கிய போது

எமது வைத்தியசாலை விஜயத்தின் போது அமைச்சர்கள் உட்பட விருந்தினர்கள் வரவேற்கப்படும் போது

எமது வைத்தியசாலையில்
சிகிச்சை பெற்றதன் மூலம்
பிறந்த குழந்தைகளில்
குலுக்கல் மூலம்
தெரிவு செய்யப்பட்ட
10 குழந்தைகளுக்கு எமது
வைத்தியசாலையிலேயே
பரிசுவழங்கிய போது

எமது சுஜீவா வைத்தியசாலையில்
ஆயுள்வேத அமைச்சர் கௌரவ சாலிந்த திசாநாயக்கா அவர்கள்

எமது சுஜீவா வைத்தியசாலையில்
பிரதியமைச்சர் கௌரவ பண்டுபண்டாரநாயக்க அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர். கண்டியிருந்த ஜோன் டொயிலி என்ற ஆங்கிலேயன், தான் 1815க்கு முன்புவரை இலங்கை அரசாங்கத்தில் மொழிபெயர்ப்பாளனாக இருந்த காலம் வரையான நம்பத்தகுந்த ஆதாரங்களை எழுதி வைத்திருந்தார். நூறு வருடங்களாக தூசிகளோடு தூசியாக கிடந்த அந்த ஆதாரங்கள் தான் கொட்றிங்டனுக்கு 1917ல் நூல் எழுதுவதற்கு ஆதாரமாக அமைந் திருந்தன. ஜோன் டொயிலி மேற் கொண்டிருந்த ஒற்றர் வேலைகளை அதில் காணலாம்.

சாரல்நாடன்

திருகோணமலை கச்சேரியில் இது போன்ற நடவடிக்கையின் போது, S.C.பெர்ணாந்து மேற்கொண்டிருந்த போது, கச்சேரியில் இடமில்லாத காரணத்தால் பழைய டயறிகள் அழிக்கப்பட்ட சங்கதி வெளியானது.

1960ல் லியனோர்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அதேசமயம் "சிலோன் ஒப்சேவர்" பத்திரிகையின் கலை விமர்சகராக பணியாற்றிக் கொண்டிருந்தவர் மேர்வின் டி சில்வா என்பவராவார். "காட்டில் ஒரு கிராமம்" நாவல் இலங்கை படைப்பிலக்கியத்தக்கு ஆற்றிய பங்களிப்பை மேர்வின் டி சில்வாவின் கட்டுரைகள் வெளிப்படுத்தின. காலனித்துவ டயறிகளுக்கு உரிய இடத்தையும் அவைகளில் சுட்டிக்காட்டியிருந்தார்.

லியனார்ட் ஃவுல்வ் இலங்கைக்கு வந்த போது அவருக்கென்று திட்டவட்டமான அரசியற்பார்வை எதுவும் இருந்ததாகக் கூற முடியாது. இங்கிலாந்துக்கு மீண்ட பின்பு லியனார்ட் ஃவுல்வ் தொழிற்கட்சியில், குறிப்பாக ஃபேபின் கழகம் என அழைக்கப்பட்டதான தொழிற்கட்சிக்கு மிகவும் இடதுசார்பான அமைப்பில் செயலூக்கத்துடன் பங்கு பற்றியதைக் காண்கிறோம்.

முதலாம் உலகப் போரை அடுத்தே இலங்கைக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவர்களில் அவரும் ஒருவர். அதன்பின்னர் காலனிய விவகாரங்களில் தொழில் கட்சியின் ஆலோசகராக இருந்த சுதந்திர இலங்கையின் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வருபவரானார்.

சுவிட்சலாந்தின் கன்ரோன் சமஷ்டிமுறையை இலங்கைக்குச் சிபார்சு செய்து, தேயிலைத் தோட்டத்தில் வாழுகின்ற இந்தியத் தமிழர்களின் நலனைப் பேணும் விதத்தில் அவர்கட்காகத் தனியொரு கண்ரோனை பரிந்துரைத்த ஒரேயொருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார் என்பதை கவனிக்கத்தக்கது.



அவரது காலத்தில் சேனை பயிர் செய்கையை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை. அரசாங்க ஊழியராக அவரும் அதையே தன் விருப்பத்துக்கு மாறாக செய்ய வேண்டி இருந்தது. 1960ல் இலங்கை வந்தபோது, இதன் நிமிர்த்தமே தான் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டி இருந்தது என்று கருத்து தெரிவித்தார்.

இலங்கையில் காணி சம்பந்தமாக ஆண்டாண்டு காலமாக கடைப்பிடிக்கப் பட்ட கொள்கைகளை- குறிப்பாக ஆங்கி லேய ஆட்சி காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களை அறிந்து கொள்ளும் ஆவணமாக இவரது எழுத்துக்கள் இருக்கின்றன. சிங்கள கிராமத்தவர், நாகரிகமில்லாத சமூகமாக வாழ்ந்ததை படிப்படியாக அவர்கள் பழக்க வழக்கங்கள் மாறி வந்ததையும் தம் வாழ்க்கை அனுபவத்துக்கூடாக அவதானித்து இந்நூலில் செம்மையாக ஆவணப் படுத்தியுள்ளார். அவர்களிடையே தம்மினத்தில் ஒருவரை இழிவுபடுத்த நினைக்கையில் "என்ன தமிழனைப்போல பேசுகிறாய்"(பக்.55) என்ற சொல்லுகிற பழக்கம் இருந்ததைக் கவனிக்கலாம். தமிழர்கள் கறுப்பு நிறத்தவர்கள்(பக்.88) என்று கூறுவதையும், கதிர்காம யாத்திரை மேற்கொள்கிற ஆண், பெண் இருபாலரும் தம்மேனியில் விபூதி அணிந்திருப்பதையும்(பக்.104) நூல் சித்திரிக்கிறது.

தமிழர்களின் கடவுளான கந்தன் மலை யுச்சியில் காட்டிலிருப்பவர். ஒருமுறை ஆற்றைக்கடந்த செல்லமுயன்ற தமிழர்களிடம் தன்னைத் தூக்கி சென்று ஆற்றின் மறுகரையில் விடச் சொன்னதாகவும், அவர்கள் அதைத்தட்டிக் கழித்துவிட்டதாகவும், அடுத்து வந்த சிங்களவர்களிடம் ஆற்றைக்கடக்க உதவிகேட்டு அவர்கள் அதைச் செய்ததாகவும், அன்றுமுதலே கந்தர் சிங்களவர் களின் கடவுள் ஆனார் என்றும், தமிழர் கடவுள் இந்து கோயிலில் புத்தமத சிங்கள கபுராலர்கள் இருப்பதற்கு இதுவே காரணம் என்றும் (பக்.106)ல் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகம் 1970 காலப்பகுதியில் பலாலி ஆசிரியப் பயிற்சிகலாசாலையில் மாணவர்களுக்கு துணைப்பாட நூலாக வைக்கப்பட்டிருந்தது.

இந்த நூலின் ஆசிரியரால் அரசியல், வரலாறு, சர்வதேச அரசியல் குறித்தெல்லாம் பத்துக்கு மேற்பட்ட நூல்கள் எழுதப்பட்டுள்ளன. விமர்சனம், கதை, நாடகம் என்றும் சில புத்தகங்களை இயற்றியுள்ளார். சுயசரிதை கூறும் ஐந்து புத்தகங்களை எழுதியுள்ளார். எனினும் அவருக்கு பேர் சொல்லும் அளவுக்கு அமைந்தது "காட்டில் ஒரு கிராமம்" தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தும் வாசிப்பும் வாழ்க்கையும்

கருணாகரன்



"எப்பொழுதும் எழுத்தைப்பற்றியும் வாசிப்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறீங்களே, இந்தக் காலத்தில் (2014 இல் அல்லது காட்சி ஊடகச் செல்வாக்கு பலமாகியிருக்கும் காலத்தில்) எழுத்துக்கும் வாசிப்புக்கும் என்ன மதிப்பிருக்கிறது? இப்பொழுது புத்தகம் வாசிப்பதை விட தொலைக் காட்சியில்தான் அநேகமானவர்கள் பொழுதைச் செலவழிக்கிறார்கள். இல்லையென்றால் இணையத் தில். வாசிப்பதை விட பார்ப்பது இலகுவானது. அடுத்த தாகக் கேட்பது. காட்சியில் மேலும் நெருக்கத்துக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. ஒரு கதையை வாசிக்கும்போது நமக்குக் கிடைக்கிற அனுபவத்தை விட, அதைக் காட்சியில் பார்க்கும்போது அந்தக் கதையின் களமும் காலமும் பாத்திரங்களும் அவர் களுடைய இயல்பும் இயக்கமும் நேரடியாக அனுப வமாகின்றன. மேலும் இசையும் ஒளியும் இந்த அனுப வத்தை அதிகமாக்கி வலுவூட்டுகின்றன. இதைப்போல அறிவியலாக இருந்தாலும் சரி, புனைவாக இருந்தாலும் காட்சியில் காணும்போது நேரடியாகப் பங்கு கொள்ளும் அனுபவம் நமக்குக் கிட்டுகிறது. கேட்பது கூட அப்படித்தான்.

இப்படியிருக்கும்போது வாசிப்பிற்கு என்ன சிறப்புண்டு? இன்னும் சொல்லவேண்டுமென்றால், வாசிப்புக்குப் பிந்திய கண்டுபிடிப்பாக பிந்திய ஊடகமாக காட்சிப் புலன் ஊடகமே இருக்கிறது. ஆகவே பிந்திய ஊடகத்தில் வசதிகள் அதிகமிருக்கு. நவீனத்தன்மை கூடியிருக்கு. இதெல்லாம் காட்சிக்கு கட்புலனுக்கே அதிக ஈர்ப்பைக் கொடுக்கின்றன. எனவே நாங்கள் இயல்பாக எப்படி முந்திய ஊடகத்தைப் பெரிதாகக் கொண்டாடலாம்" என்றவாறு கேட்டு ஒரு நண்பர் மின்கடிதம் எழுதியிருந்தார்.

அவருடைய கேள்வி ஒன்றும் புதியதல்ல. அவர் சொல்வதை நாம் மறுக்க முடியாது. இந்த விசயமெல்லாம் நாம் ஏற்கனவே அறிந்ததுதான். இது ஒரு சவாலாக வாசிப்பின் மீது ஏற்பட்ட நெருக்கடியாக இன்று மாறியிருப்பதும் உண்மை. ஆனால், என்ன தான் பிந்திய ஊடகமாக, காட்சியின் வழி அதிக அனுபவச் சாத்தியங்களைக் கொண்டதாக இருந்தாலும் வாசிப்பிற்கு இருக்கின்ற பிரத்தியேக அனுபவம் தனியானது. அதிக சிறப்புமுள்ளது. அதை எதனாலும் குறைத்து விட முடியாது. பிம்பம், சலனம் என்பவற்றில் கிட்டும் அனுபவம் வேறு. வாசிப்பில் கிட்டுகின்ற அனுபவம் வேறு. சலனத்தில் அதன் வேகத்தோடு நமது மூளை இயங்கிக் கொண்டேயிருக்க வேண்டும். காட்சிகளின் மாற்றங்களோடு அவற்றின் போக்கோடு அது பயணித்துக்கொண்டிருக்க வேணும். அப்படிப் பயணிக்கும்போது ஏற்கனவே பார்த்த காட்சியை அனுபவமாக்கிக்கொள்வதற்கு அறிதலாக்கிக் கொள்வ தற்கு எடுக்க வேண்டிய அவகாசத்தை அடுத்து வரும் காட்சி குறுக்கி விடுகிறது. அடுத்த காட்சியை உள்வாங்க வேண்டிய அவசியம் ஒரு நெருக்கடியாக மாறிவிடுகிறது. காட்சி ஊடகங்களுக்குள்ள பிரதான சவால் இது. காட்சி ஊடகம் நவீனமாக இருந்தாலும், அதிக சாத்தியங் களைக் கொண்டிருந்தாலும் இந்தச் சவாலை அதனால் புறந்தள்ள முடியவில்லை.

ஆனால், வாசிப்பில் இந்த நெருக்கடியோ இடறுப்படுதலோ கிடையாது. வாசிப்பில் தாராளமாகச் சுதந்திரம் உண்டு. வாசிப்பின் வெளி அத்தனை நெகிழ்ச்சி யுடையது. வாசகர் எந்த இடத்திலும் தம்மை நிறுத்திக் கொண்டு தமக்குள் பெற்றுக்கொண்ட அதுவரையான அனுபவங்களைச் செரித்துக் கொள்ளலாம். மீள்பயணம் செய்து கொள்ள இயலும். மேலும் கற்பனையைப் பெருக்கியும் கொள்ள முடியும். புதிய சிந்தனையை ஏதோ ஒரு புள்ளியிலிருந்தோ கண்ணியிலிருந்தோ உண்டாக்கிக் கொள்ளலாம். தேவைக்கேற்ப தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகப்படுத்திக்கொள்ளவும் மெதுநிலைப்படுத்திக் கொள்ளவும் முடியும். இதனால்தான் வாசிப்பின் முக்கியமும் முதன்மையும் இன்னும் பெரிதாக வளர்ச்சி யடைந்த சமூகங்களில் கொண்டாடப்படுகிறது.

அறிவின் வேட்கையைத் தீவிரமாகக் கொள் கின்ற சமூகங்கள் வாசிப்பை தங்களின் பிரதானமான செயற்பாடாகக் கொள்கின்றன. வாசிப்பிற்கான இயக்கங்களும் அமைப்புகளும் முறைகளும் மேலும் மேலும் உண்டாகின்றன. பாடத்திட்டங்களிலும் பாடசாலைக் கல்வியிலும் வாசிப்பு முக்கியமான ஒரு செயற்பாடாக, தேவையாக கொள்ளப்படுகிறது. இளமையிலேயே வாசிப்புப்பழக்கத்தையும் வாசிப்பின் ருசியையும் தேவையையும் அறிமுகமாக்க வேண்டும் என்பது இங்கே உணரப்பட்டுள்ளது. மாணவப் பருவத்திலிருந்து ஆரம்பமாகும் இந்த வாசிப்பு பின்னர் தொடர்ந்து விரிவடைகிறது. இது பன்முகச் சிந்தனையை வளர்த்துச் செல்கிறது. பன்முகச் சிந்தனை வளர, வளர அறிவு விருத்தியுறுகிறது; பண்படுதல் நிகழ்கிறது. எனவே, வாசிப்பு பன்முகம் கொண்டதாக அமைய அமைய அறிதற்பரப்பும் அனுபவச் செழுமையும் மேலும் விரிவடைகிறது. இந்த அறிவுதான் வாழ்வின் சவால்களை எதிர்கொள்வதற்கு நம்மைத் தயார்ப்படுத்துகிறது. அனுபவம் வாழ்வை ஒழுங்குபடுத்துகிறது. இந்த இடத்தில் எழுத்தாளர் சுந்தர ராமசாமி குறிப்பிட்ட ஒரு விடயத்தை நினைவு படுத்திக் கொள்ளலாம். "வாசகனுக்கும் புத்தகங் களுக்குமான உறவு வேறு எந்த ஊடகத்தாலும் முறிக்க இயலாத ஒன்று என்றே நம்புகிறேன். அறிவுடனும் கற்பனையுடனும் சிந்தனையுடனும் வாசகன் கொள்ளும் உறவு புத்தக வடிவத்தில்தான் மிக இயற்கையாக உருவாகிறது. புத்தகம் ஒன்றையே தன் முழுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சாதனமாக வாசகனால் கருத முடிகிறது. மேலும் புத்தகத்துடன் வாசகன் கொள்ளும் உறவு அந்தரங்கமானது. சுயமான காட்சிப் படிமங்களுடன் புத்தக வாசிப்பு சாத்திய மாவதால் - வாசகனுக்கும் ஒரு பங்கு, கற்பனை செய்துகொள்ளும் பங்கு உறுதியாவதில் - சுயதிருப்தி கூடுதலாக ஏற்படுகிறது. புத்தகங்களை வாசகர்கள் கைவிட்டுவிட மாட்டார்கள் என்ற நிலை நாகரிகத்தின் மீதும் எதிர்காலத்தின்மீதும் நாம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஆறுதல் அளிக்கிறது" என்று அவர் குறிப்பிடுவது மிகச் சரியானது.

நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். வாசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டின் வழியாகவும் நம்மையும் சமூகத்தையும் ஒழுங்கு படுத்தி முன்ன கர்த்திச் செல்கிறோம். எழுத்தும் வாசிப்பும் அறிவு சார்ந்த ஒரு செயல்பாடு. அறிவுசார்ந்த செயல்பாடுகள் தான் எப்பொழுதும் மனித சமூகத்தை ஈடேற்றிக் கொண்டிருக்கின்றன. மனித சமூகம் அறிவின் ஒளியில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது. அறிவு தான் ஏனைய விலங்கினங்களிலிருந்து மனித விலங்கை வேறுபடுத்தியது. எத்தனை வளர்ச்சியை எட்டினாலும் மனிதருடைய அறிவுப்பயணம் முடிந்து விடுவதில்லை. இது நியதி. பிரபஞ்ச விதி. அதாவது, காலந்தோறும் கணந்தோறும் பிரபஞ்சத்திலும் உலகிலும் சமூகத்திலும் நம் மனதிலும் வாழ்விலும் சவால்கள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. புதிய புதிய கோணங்களி லிருந்து இந்தச் சவால்கள் முளைத்துக் கொண்டிருக் கின்றன. ஒவ்வொரு சவாலையும் மனிதர்கள் முறியடிக்க முறியடிக்கப் புதுப் புதுச் சவால்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு சவாலும் நெருக்கடிகளை உண்டாக்கும் தீவிர சக்தி வாய்ந்தவை. புதிது புதிதாக முளைக்கும் சவால்களை முறியடித்தே போராடியே வாழவேண்டும். இது நியதி. பிரபஞ்ச விதி. எனவே, அறிவைப் பெருக்க வேண்டியது நியதி.

ஆகவே, "நாம் வாழும் காலத்தை மறுபரி சீலனை செய்வதும் சகல மனித வேற்றுமைகளுக்கும் எதிராகச் சிந்திப்பதும் நம் சிந்தனைகளையும் அறிவுகளையும் அனுபவங்களையும் சகமனிதனுடன் அவனது தேவையறிந்து ஆழமாகப் பரிமாறிக் கொள்வதும் மிக முக்கியமானவை" என்று சுந்தர ராமசாமி சொல்வதை இங்கே நாம் மேலும் கவனிக்கலாம்.

எனவே, தங்களைச் சுற்றிக் கயிற்றுப் பின்னலாக இறுக்கும் சவால்களை முறியடிக்க வேண்டும், விலக்கிக் கொள்ள வேண்டும் என்றால் அறிவை மேம்படுத்துவது அவசியமானது. அறிவை மேம்படுத்துவதன்மூலமே வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளலாம். மனித குலத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்ளலாம் என்று மனித மனம் கண்ட றிந்துள்ளது. என்பதால் அறிவு சதா தேவைப்படுகிறது. இதற்காக மனித மூளை இடையறாது தொழிற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்தப் பூமியில் மனித மூளை யின் உழைப்பே மிகப் பிரமாண்டமானது. இந்த உழைப் பின் விளைவுதான் அறிவு. அறிவுக்காக, அறிவைப் பெறுவதற் காகவே இந்த உழைப்பைச் செய்கிறது மூளை. இதற் கெல்லாம் தூண்டலை வழங்குகிறது வாசிப்பு.

வாசிப்பு என்பது பல வகையான அனுபவங் களையும் அறிவையும் திரட்டிப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பொறிமுறையாகும். இந்தப் பொறிமுறையின் மூலம் நமக்கு மட்டுமல்ல எதிர்காலச் சந்ததிக்கும் மனித குலத்துக்கும் நாம் அறிவைப் பரிசளிக்கிறோம். அறிவின் தொடர்ச்சியறுந்து படாமல் பாதுகாத்துக் கொள்கிறோம்.

எனவேதான் வாசிப்பை மேன்மையுடையது, அவசியமானது என்று சொல்கிறேன். இதனால்தான்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் வாசிப்புக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இனியும் கொடுக்கும். இதற்காகத்தான் பாட சாலைகளிலேயே நூலகங்களும் நூல்களும் நூலகர்களும் வாசிப்பு முறைமையும் உருவாக்கப்பட்டுள்ளது. சமூக நிலையிலும் வாசிப்பின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. வாசிப்பின் வழியாக அறிவுப் பெருக்கமும் மனப்பண்பும் உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று உலகம் தொடர்புறுதலின் வழியாக இணைக்கப்பட்டிருப்பதால் எதையும் எவரையும் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. இதற்கு வாசிப்பு உதவுகிறது. வாசிப்புத்தான் அவசியமானது.

ஆனால், இப்படியெல்லாம் இருந்தும் தமிழில் வாசிப்பின் நிலை மிகக் கீழிறங்கியே உள்ளது. நூலகங்கள் ஆட்களின்றி வெறிச்சோடிப்போயுள்ளன. வாசிக்கவும் அதைப்பற்றி உரையாடவும் கூடியதாக இருந்த சனசமூக நிலையங்களின் பக்கம் இப்பொழுது யாருமே போவதில்லை. ஒரு காலம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதற்காகக் கடுமையாகக் கோபமுற்ற மக்கள், அந்த நூலகத்தை இழந்ததை தங்கள் வாழ்வின் மீது நிகழ்த்தப்பட்ட பெரும் அநீதியென உணர்ந்து கொந்தளித்தவர்கள், இந்த எரிப்பு தங்களின் ஆன்மா மீது படிந்த ஆழமான வடு என்று கொண்டவர்கள் இப்பொழுது நூலகங்களைக் குறித்து கரிசனையற்று வருகிறார்கள். இது வெட்கத்துக்கும் துக்கத்துக்குமுரியது. மட்டுமல்ல, அடிப்படையில் முரணானதுமாகும். நூலக எரிப்பை கொடுமையாக உணர்ந்தவர்கள் இன்று நூலகங்களின் பக்கமே முகம் திருப்ப மறுப்பது என்பதன் அர்த்தம் என்ன?

இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

நூலக எரிப்பை அரசியலுக்காகப் பயன்படுத்திய அளவுக்கு அதை நம் பண்பாட்டோடு, இதயத்தோடு, ஆன்மாவோடு பிணைக்கவில்லை. இதன் விளைவே இன்று நம் நூலகங்களில் வௌவால்கள் பறக்கக் காரணம். நமது புத்தகங்கள் விற்க முடியாமல் பதிப்பாளர் வீடுகளில் தேங்குகின்றன. பதிப்பகங்கள் வளராமல் இருக்கின்றன. புத்தகப்பண்பாடும் வாசிப்புச் செயற்பாடும் உறைநிலைக்கு அல்லது போதாமை நிலைக்குப் போயிருக்கிறது. இந்த நிலைமை தமிழ்ச் சமூகத்தை மேலும் கீழ் நிலைக்கே கொண்டு சேர்க்கும். அறிவின் வேட்கையிலிருந்து விலகிச் செல்லும் சமூகங்கள் ஒரு போதும் மேல்நிலையைப் பெற முடியாது. மேல் நிலையைப் பெற முடியாத வாழ்க்கைக்கு என்றும் எங்கும் மதிப்பிருப்பதில்லை.

•

உதட்டு மொழிகள்

மொழிகள்கூட
இப்போது
நாடகமாடத்
தொடங்கிவிட்டன.
அவை
உதட்டில் உட்கார்ந்து
அழகிய வார்த்தைகளாய்
ஊர்வலம் போகின்றன..:.

உள்ளத்தில்
இருள் படிந்து
பொய்மைகள் குடியிருந்தாலும்
வார்த்தை ஜாலங்களில்
சுதந்திரப்பூங்காற்று
வசந்தமாய் வீசுகிறது.

எழுத்து உலகில்
அநாதை ஆகிவிட்ட
சொற்கள்
இப்போது
வல்லோனின் உதட்டில்
உறவாடி
அரசியல் அகராதிகளில்
அரங்கேற்றம் காண்கின்றன.



வட அல்வை சின்னராஜன்

இந்த உலகம்
குற்றவாளிகளின்
புகலிடம்.
ஒளிப்பதற்கு
வார்த்தைகள் கட்டிய
வைரக் கோட்டைகள்
இருக்கும் வரை
அவர்கள் என்றுமே
சுற்றவாளிகள் தான்.

துப்பாக்கிகளைச்
சுமந்து நிற்கும்
சர்வாதிகாரிகள் கூட
தோல்வியின் பின்னே
தம்மைப் பாதுகாக்க
உதட்டு மொழிகளையே
மந்திரங்களாக
உச்சாடனம்
பண்ணுகின்றார்கள்.

உலகில்
சமாதானம்
மலர வேண்டுமாயின்
உதட்டு மொழிகள் யாவும்
உள்ளத்து மொழிகளாய் மாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.சு.முரளிதரன்

பொதிந்ததாக "பந்தயம்" சிறுகதை அமைந்துள்ளது. சதுரங்க ஆட்டத்தின் நுட்பத்தோடு கதை வளர்த் தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. தொழிலதிபரின் விருந்தொன்றில் மரண தண்டனையா? ஆயுள் தண்டனையா? கொடூரமானதென்ற விவாதம் கிளம்ப, இளம் வழக்கறிஞர் ஒருவர் ஆயுள் தண்டனைக்கு ஆதரவாகக் கருத்துரைக்கிறார். இளம் வழக்கறிஞர் பதினைந்து வருடங்கள் ஆயுள் தண்டனையை அனுபவிக்க முடிந்தால் "இரண்டு மில்லியன் ரூபிள்" தருவதாக கோடீஸ்வரர் ஒருவர் பந்தயம் கட்டுகிறார். ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகிறது. கோடீஸ்வரரின் வீட்டின் ஒதுக்குப்புற அறை ஒன்றில் வழக்கறிஞர் சிறை வைக்கப்படுகிறார். அவருக்கு இசைக்கருவிகள், மதுவகைகள், நூல்கள் என்பன வழங்கப்படுகின்றன. காலம் சுழல்கிறது. கோடீஸ்வரர் வணிகத்தில் நட்டமடைந்து கடனாளியாகிறார்.. பந்தயத் தொகையை வழங்க நிதியற்ற சூழலில் வழக்கறிஞரைக் கொல்லத் திட்டமிட்டு சிறை வைக்கப்பட்டுள்ள அறைக்குள் நுழைகிறார். வழக்கறிஞர் உறங்கிக் கொண்டிருக்கிறார். மேசை மீது கோடீஸ்வரரின் முகவரியிடப்பட்ட கடிதமொன்று கிடக்கிறது. எடுத்து வாசிக்கிறார்.

"கடந்த பதினைந்து வருடங்களாக
நூல்களின் வழியே உலக வாழ்வின்
அற்புதங்களை உணர்ந்து கொண்டேன்.
காடுகளில் வேட்டையாடினேன். மலை
களைக் கடந்தேன். மின்னலோடும்
மேகங்களோடும் உரையாடினேன்.
வானம், கடல். வயல்,நதி அனைத்தையும்
தரிசித்தேன்.....
.....
நீங்கள் தவறான பாதையைத் தேர்ந்து
எடுத்துள்ளீர்கள். அழகை மறந்து
அசிங்கங்களையே ஆராதிக்கிறீர்கள்.
இத்தகைய அவல வாழ்வுக்கு எதிர்ப்புத்
தெரிவித்து, ஒரு காலத்தில் நான்
சொர்க்கமாகக் கருதிய இரண்டு மில்லியன்
ரூபிளை நிராகரித்து ஒப்பந்த நேரத்திற்கு
சற்று முன்னரே வெளியேறுகிறேன்"

என்று கடிதம் கட்டவிழ்க்கும் கலாதீதம் செக்கோவ் என்ற ஆளுமையின் இந்திரஜாலத் தொடுகையாக (magic Touch) வாசகனில் சுவறுகிறது.

அரச ஊழியர்களின் நடத்தையினை அங்கதத்துள்ளாக்குவதாக "பச்சோந்தி" சிறுகதை அமைந்துள்ளது. தெருவிலே ஒருவனை நாய் கடித்துவிட்டதாக அறிந்த பொலிஸ் கொன்ஸ்ரபிள் நாயின் உரிமையாளரைத் தண்டிக்க வேண்டுமெனக் குமுறுகிறார். அந்த நாய் உயரதிகாரியுடையதாகவோ, அவரின் சகோதரர் உடையதாகவோ? இருக்கலாம் என்று கூட்டத்திலிருந்து ஒருவர் ஐயம் தெரிவிக்க, கொன்ஸ்ரபிள் கடிபட்ட வனை கோபிக்கிறார். அதிகார மேலாண்மைக்கு ஏற்ப நிறந்திரியும் அற்பமான மனித மனநிலையை மேலோட்டமாகக் குறிப்பிட்டாலும் கதையின் அடி நீரோட்டம் பன்முக அதிர்வுகளை கொண்டமைந் துள்ளது.

இருபிள்ளைகளின் தந்தையான நடுத்தர வயது ஆணுக்கும், திருமண பெண்ணுக்கும் இடையிலான அநாம உறவினை "நாய்க்கார சீமாட்டி" சிறுகதை விபரிக்கின்றது. விடுமுறைக்காலத்தில் நாயோடு சுற்றித் திரியும் அன்னாவும், நகைச்சுவைப் பேச்சால் அவளைத் தன்வசப்படுத்தும் டிமிற்ரியும் காலங்கடந்தாலும் நினைவுள் மீளும் ஆற்றல் மிகு கதாபாத்திரங்களாகும். திருமண ஒப்பந்தத்தின் வழியே கட்டியெழுப்பப்படும் உறவின் சூன்யம், மாற்று மகிழ்நெறியை நோக்கி நகர்த் தும் யதார்த்தத்தை கதையிலே பதிவு செய்துள்ளார். "நாய்க்கார சீமாட்டி கதைதான் நான் படித்த மிகச் சிறப்பான காதல் கதை" என்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்!

உள்ளே உறைந்திருக்கும் விழிநீரை இமைகளின் ஓரத்திற்கு கொண்டுவரும் வீரியத்தோடு "வான்கா" சிறுகதை எழுதப்பட்டுள்ளது. குழந்தை ஊழியத்தின் கொடுமைகளை தாத்தாவுக்கு கடிதமாக எழுதுகின்ற "வான்கா" என்ற சிறுவனை நடுவணாகக் கொண்டு நகர்கிறது. தாத்தாவின் முகவரியை எழுதினால் தான் கடிதம் போய்ச் சேரும் என்ற புரிதல் இன்றி தபாற் பெட்டியில் போட்டு விட்டு "வான்கா" உறங்கும்போது, நாம் தூக்கத்தைத் தொலைத்து விடுகிறோம். கடிதத்தில் இடம் பெறுகின்ற வரிகளில் ஏக்கத்தின் வாசனை தேங்கியுள்ளது.

"நான் பெரியவனானதும் உன்னைக்
கருத்துடன் கவனித்துக் கொள்வேன்
யாரும் உன்னைத் துன்புறுத்த
விட மாட்டேன். நீ இறந்த பின்
உன்னுடைய ஆத்மாவுக்காகப்
பிரார்த்திப்பேன். என் அம்மாவுக்குப்
பிரார்த்திப்பதைப்போல..."

"வான்கா"வின் துயரத்தில் ஒவ்வொரு வாசகனும் பங்கெடுக்கிறான். உலகில் பொது மொழிகளில் துயரமும் ஒன்றல்லாவா...?

கூழைக்கும்பிடு போடுகின்ற அரச ஊழியர்களின் நடத்தையினை "எழுதுவினைஞரின் மரணம்" கதையானது எளிய முறையில் விளக்குகிறது. நாடகம் ஒன்றினைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற எழுது வினைஞர் திடீரென்று தும்முகிறார். போக்குவரத்து அமைச்சகத்தின் நிர்வாகி ஒருவர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதைக் கவனிக்கிறார். அவரிடம் எழுது வினைஞர் தொடர் மன்னிப்புக் கேட்கும் அற்பத்தனமான செயலடுக்காகவே கதை நகர்கிறது. இறுதியில் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் படிக்க – 8 இலட்சம்
உழைக்க

மூன்று வருட விசா
30 நாட்களில் பறக்கலாம்.

செங்கன் விசா
இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே
இரண்டு வருட விசா – மூன்று வருட விசா
வெறும் 15 இலட்சங்கள்

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில்
படிக்க கைநிறைய உழைக்க
இரண்டு வருட விசா

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016,
021 499 3502

PV82703

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி தி. லைனல் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
noolaham.org | aavanaham.org